317

அரசாங்கத்தின் வரலாறு



அரசாங்கத்தின் வரலாறு

மோ கிளாரன்சு,
டி டி பெலிக்ஸ்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை : 5

அரசாங்கத்தின் வரலாறு

(EVOLUTION OF GOVERNMENT)

★

ஆக்கியோர் :

மோ கிளாரன் சு,

எம் ஏ (வரலாறு), எம் ஏ (அரசியல்),
எம் ஏ (பொருளாதாரம்) விரிவுரையாளர்,
லொயோலாக் கல்லூரி, சென்னை

டி டி பெலிக்ஸ்,

எம் ஏ (அரசியல்), எம் ஏ (பொருளாதாரம்)
விரிவுரையாளர், லொயோலாக் கல்லூரி, சென்னை

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி - 6. சென்னை - 1.

1962

ஜோசப் மோத்தா கிளாரன்சு (1926)
தேவராஜன் பெலிக்ஸ் (1934)

© 1962 தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை-9.

பதிப்பாளர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை-1.

கழக வெளியீடு, ௪0கூச

Ed 1 June 1962

W
K2

ARASANGATHIN VARALARU
(EVOLUTION OF GOVERNMENT)

Appar Achakam, Madras-1.

அணிந்துரை

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி. ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம் "தமிழிலேயே கற்பிப்போம்" என முன் வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிறபல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற் கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன் வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத்திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில், அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர். இவற்றுள் ஒன்றான **'அரசாங்கத்தின் வரலாறு'** என்ற இந்நூலை அனைவரும் வரவேற்பார்கள் என நம்புகிறோம்.

கல்லூரித் தமிழ்க்குழுவின் சார்பில் இதுவரை வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறை களிலும் 37 நூல்கள் வெளி வந்துள்ளன.

இத்துறையை இன்னும் விரிவுபடுத்தச் சென்னை அரசினர், தமிழ் வெளியீட்டுக் கழகம் ஒன்றை நிறுவியுள்ளனர். அதன் மூலம் இன்னும் வேறு பல நூல்கள் தமிழில் வெளிவர இருக் கின்றன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே இவ்வன்னையை வாழ்த்துவோமாக. 'உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை ஆதலின் உழைத்து வெற்றி காண்போம்'.

தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக் கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவி களுக்கும், ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித் தாகுக.

சென்னை,
14—5—'62.

எம். பக்தவத்ஸலம்,
தமிழக நிதி, கல்வியமைச்சர்.

பதிப்புரை

இப் பூவுலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக அரசாங்கம் எவ்வாறு தோன்றி எவ் வகை மாறுதல்களுடன் வளர்ந்து இப்பொழுதுள்ள நன்னிலை எய்தியுள்ள தென்பதை உய்த்துணர்வானும், நூன்முறை யானும், முறையே வரலாற்றுக்கு முற்பட்டதும், வரலாற்றுக் குட்பட்டதுமாகிய கால முறைப்படி இந்நூல் மிகச் சிறப்பாக விளக்குகின்றது. அதனால் இதற்கு 'அரசாங்கத்தின் வரலாறு' என்னும் பெயர் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வொரு நூலைப் பெருமக்களும், மாணவர்களும், ஆசிரியன்மார்களும் கருத்தூன்றி ஆழ்ந்து கற்பார்களானால் உலகியல் வரலாறு முழுவதும் ஒரு வகையாக உணர்ந்தோராவர்.

கல்லூரிப் போதனை மொழி தமிழகத் தாய்மொழியாம் தமிழ்மொழியில் ஆக்கப்பெற்றமையாலும், ஆட்சிமொழியாக அஃது அரியணை அமர்ந்திருப்பதாலும் இத்தகைய சீரிய பெரு நூல் வெளிவரலாயிற்று. இதனால் தமிழகப் புலவர்கள் பலரும் பெருமக்களும் சிறப்பாக அரசாங்கத்தின் வரலாறுகளைத் தாய் மொழிவாயிலாக எளிதின் உணரும் நலம் பெற்றனர். இதன் ஆசிரியர்களும் தங்கள் நுண்மாண் நுழைபுலத் திறனைத் தமிழில் எளிய இனிய தூய நடையில் வடித்து வழங்கியுள்ளார்கள். பல அரிய ஆங்கிலச் சொற்கள் எளிய இனிய தமிழ்மொழியில் அமைந் துள்ளமையை நோக்கின் ஆசிரியர்களின் ஆற்றலும் ஆர்வமும் தமிழ்மொழியின் வளமும் வற்ரு மாண்பும் நன்குபுலனும்.

இந்நூலின்கண் பெரும்பகுதிகள் ஆருக அமைக்கப்பட் டுள்ளன. இவைகள் ஒவ்வொன்றும் பல இன்றியமையாத உட்பகுதிகளைக் கொண்டுள்ளன. அவைமுறையே 9, 7, 7, 5, 2, 3 என முப்பத்து மூன்ருகும். இவைகளும் தனித்தனியே பல விளக்கத் தலைப்புக்களைக் கொண்டுள்ளன.

இந்நூலின் சிறப்பினையும், இன்றியமையாமையினையும், இதனால் வளம்பெற்று வயங்கும் தமிழ்மொழியின் தனிமாண் பினையும், முன்னேற்றத்தினையும் விளங்க எடுத்துத் தமிழக நிதி கல்வியமைச்சர் **எம். பக்தவத்சலம் அவர்கள்** அழகிய அணிந்துரை யொன்று நல்கியுள்ளார்கள். அஃதின்னூற்கு அணியாகவே இகழ்கின்றது.

இதன் ஆசிரியர் இருவர்களும் சிறந்ததொரு முகவுரையும் சுருக்க விளக்க நயனமைய எழுதிச் சேர்த்துள்ளார்கள். தோற்ற முதல் கோளுட்சி இருந்து வந்ததும் அவ்வாட்சியின் கொடுமை யினல் குடியாட்சி முறை தோன்றிவளர்ந்து வருவதும், பொது வுடைமைப் புரட்சி நிலவுவதும் இதன்கண் நன்கு விளக்கப்பட் டுள்ளன. இறுதியாகக் 'கூட்டமைப்பு கூட்டாட்சி' என்னுந் தலைப்புக்களால் மாநிலம் பலவற்றைக் கொண்டுள்ள நடு அரசாங்க அமைவும் அதனேடிணைந்து நிகழும் பலமாநில ஆட்சி முறைகளும் இவற்றின் ஒற்றுமையால் உண்டாகும் பல்வகை நலங்களும் பகரப்பட்டுள்ளன.

இத்தகைய பெருங்கலைப் பாடநூல்களை உற்ற காலத்து வெளிப்படுத்த ஓவாமுயற்சிகொண்டு உழைத்துவரும் பாடக் குழுவினர்க்கும், அவர்கள் கருத்துக்கினையந்தவாறு சுருங்கிய காலத்துள் செவ்விய முறையில் இந்நூலினை ஆக்கிக்கொடுத்த ஆசிரியன்மார். மோ. கிளாரன்சு எம். ஏ. (வரலாறு) எம். ஏ. (அரசியல்) எம். ஏ. (பொருளாதாரம்) (வரலாறு அரசியல் விரிவுரையாளர் லொயோலாக் கல்லூரி சென்னை) அவர்களுக்கும், டி. டி. பெலிக்ஸ் எம். ஏ. (அரசியல்) எம். ஏ, (பொருளாதாரம்) (அரசியல் விரிவுரையாளர், லொயோலாக் கல்லூரி, சென்னை) அவர்கட்கும் கழகத்தார் வாழ்த்து என்றென்றும் உரித்தாகுக.

தமிழ் நூற்பதிப்புப் பணிமனை (Bureau of Tamil Publi cations) இப்பாடப் புத்தகத்தை அச்சிடும்பணியினைக் கழகத் தாருக்கு நல்கினர். பல்கலைக் கழகங் கற்பிக்கும் மொழித் தொண்டில் கழகத்தாருக்கும் பங்கு கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்கின்றேம். வாழ்க தமிழ்மொழி! வாழ்க மாநில ஆட்சி! வாழ்க அமைச்சர் முதலோர்!

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

முகவுரை

உலகிலே முதலில் தோன்றிய உயிரினங்களெல்லாம் படிப்படியாக உருமாற்றம் அடைந்து, நாளடைவில் இப்போதுள்ள உருவமும் உறுப்புக்களும் பெற்றன என்பது உயிர்நூல் வல்லுநரின் துணிபு. அதேபோல் மனித இயல்பிலே பிறந்த அரசினது உறுப்பாகிய அரசாங்கமும் கருவாகத் தோன்றி, காலப்போக்கிலே உருமலர்ச்சி யடைந்து, முழு வளர்ச்சி பெற்றுள்ளது. இந்தச் சுவையான கதையைத்தான் அரசாங்கத்தின் உருமலர்ச்சி (Evolution of Government) அல்லது அரசாங்கத்தின் வரலாறு எனக் கூறுகிறோம். அரசாங்கமானது பண்டைக்காலத்தில் குலம், நகர அரசு, பேரரசு ஆகிய நிலைகளைத் தளர் நடையுடன் தாண்டி, இடைக்காலத்தில் சமயச் சார்புள்ள அரசு, நிலமானிய அரசு முதலிய சிக்கலான முறைகளைக் கடந்து, தற்காலத்தில் தேசிய அரசு, சர்வாதிகார அரசு, மக்களாட்சி, பொதுநல அரசு போன்ற புதிய போக்குகளிலே சென்று, வருங்காலத்தில் உலக அரசாங்கம் என்ற திசை நோக்கிப் போகக்கூடிய வனப்புமிகு வரலாற்றையே இந்நூல் விரித்துக் கூறுகிறது. இது சிறப்பாக எழில்மொழியாம் தமிழ்மொழியில் பட்டப் படிப்பைப் பயிலும் மாணவர்களுக்கென்று எழுதப்பட்டபோதிலும், பொதுவாக அரசியல் அறிவைப் பெற விழையும் எவர்க்கும் பயன்தரக்கூடிய முறையில் விரிவாகவும், எளிதாகவும் எழுதப்பட்டுள்ளது. பீ. ஏ. பாடத்திட்டத்திற்கேற்ப வரையப்பட்ட இந் நூலில், மாணவரல்லாத பிறரும் படித்துப் பயன் துய்க்கும் வகையில், பாடத்திட்டத்திற்குப் புறம்பான "ரோமானியச் சட்டம்", "உலக அரசாங்கம்" போன்ற சில இயல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

பண்டைய நாள் முதல் இன்றைய நாள் வரை உலகின் பல பகுதிகளில் அரசாங்கம் அடைந்துவந்த உருமலர்ச்சியைப் பகுதியாகக் கொண்ட இப்பரந்த பாடத்திட்டத்திற்கென்று இதுவரை ஆங்கிலத்திலோ அல்லது தமிழ்மொழியிலோ நூல் எதுவும் எழுதப்பெறவில்லை. முதன் முதலாக அத்தகைய நூலொன்றை எழுதும் அரிய வாய்ப்பு எமக்குக் கிடைத்தமைக்குப் பெரிதும்

மகிழ்ச்சியடைகிறோம். அதிலும் நுண்கருத்துக்களையும் தெண்மை யுடன் விளக்கவல்ல வண்டமிழ் மொழியிலே எழுதும் பெரும்பேறு பெற்றதை எண்ணிப் பேருவகை அடைகிறோம். இவ் வரும் பொறுப்பை எமக்கு நல்கிய கல்லூரித் தமிழ்க் குழுவினருக்கும், தமிழ் வெளியீட்டுக் கழகத்தாருக்கும், சிறப்பாக மதிப்பிற்குரிய திரு. கோ. அ. தாமோதரன், திரு. வெ. கன்னையன், திரு. அ. ச. ஞானசம்பந்தன் ஆகிய பெருந்தகையோருக்கும் எம் இதயம் கனிந்த நன்றி. இந் நூலை எழுதுமாறு எம்மைத் தூண்டி, ஆர்வ முடன் ஊக்குவித்த அருள்தந்தை சே. அடைக்கலம் அடிகளாருக் கும் எமது அன்பு ததும்பிய நன்றியை இவண் தெரிவித்துக் கொள்கிறோம். செந்தமிழ் நாட்டிலே பன்னெடுங் காலமாகத் தம் வெளியீட்டுக்களின் வாயிலாக அருந்தமிழ்ப் பணி ஆற்றிவரும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் இந் நூலைக் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சிட்டு வெளியிட்டதற்காக அவர்களுக்கு எம் உள்ளம் நிறைந்த நன்றி உரித்தாகும்.

இறுதியாக, அரசியலுக்கு இலக்கணம் கூறும் 'குறள்' மாலையணிந்த தமிழன்னையை வழுத்தி, அவளது கவின்மிகு கழல்களிலே இச் சிறுநூல் மலரை எம் அன்புக் காணிக்கை யாக அர்ப்பணிக்கின்றோம்.

அறிவைப் போற்றுதும்! தாய்மொழி போற்றுதும்!

மோ. கிளாரன்சு,
டி. டி. பெலிக்ஸ்.

உள்ளுறை

பக்கம்

முதற் பகுதி: பழங்கால உலகம்

1. அரசின் தோற்றம் 2
2. மனிதன் அமைத்த மிகப் பழமையான அரசாங்கம் 6
3. முற்காலப் பேரரசுகள் 13
4. குலத்தின் ஆட்சியமைப்பு 28
5. கிரேக்க, ரோமானிய நகர அரசுகள் 33
6. ரோமானியக் குடியரசு 59
7. நகர அரசுகளின் நலிவு 71
8. ரோமானியப் பேரரசு 75
9. ரோமானியச் சட்டம் 88

இரண்டாம் பகுதி: பண்டைய இந்தியா

1. பண்டைய இந்திய ஆட்சி முறை 92
2. அரச பதவி 97
3. தர்மம் 99
4. மௌரிய ஆட்சி முறை 101
5. குப்த ஆட்சி முறை 109
6. தென்னாட்டு அரசுகள் 115
7. சோழ ஆட்சி முறை 117

மூன்றும் பகுதி: இடைக்கால ஐரோப்பா

1. மிலேச்ச முடியரசுகள் 126
2. மெரோ விஞ்சிய, கரோலிஞ்சிய முடியரசுகள் 131
3. ஆங்கிலோ - நார்மானிய ஆட்சி முறை 136
4. திருச்சபையும் இடைக்கால ஆட்சியமைப்பும் 143
5. நிலமானிய முறை 147
6. இடைக்கால நகரங்கள் 157
7. இடைக்காலப் பிரதிநிதித்துவ மன்றங்கள் 175

நான்காம் பகுதி: தற்கால ஐரோப்பா

1. ஐரோப்பாவில் தேசிய அரசுகளின் எழுச்சி 190
2. வரம்பில்லா முடியாட்சிகள் 215
3. பிரெஞ்சுப் புரட்சியும் அதன் விளைவுகளும் 229
4. 19 ஆம் நூற்றாண்டில் மக்களாட்சியின் வளர்ச்சி 246
5. உலகப் போர்களுக்கிடையே எழுந்த சர்வாதிகார அரசுகள் 264

ஐந்தாம் பகுதி: கூட்டாட்சியும் சர்வதேச நிறுவனங்களும்

1. கூட்டாட்சி முறை 292
2. சர்வதேச நிறுவனங்கள் 320

ஆரும் பகுதி: நமது கால அரசு

1. ரஷ்யாவில் மக்களாட்சியின் அதிகாரக் குவிப்பு 357
2. மக்களின் ஜனநாயகம் 362
3. பொதுநல அரசு 368

கலைச்சொல் அகராதி

தமிழ் - ஆங்கிலம் 373
ஆங்கிலம் - தமிழ் 378

பொருளகரவரிசை 383

துணை நூல் பட்டியல்

பொது நூல்கள்

1. Henry Sidgwick : *The Development of European Polity.*
2. Sir Charles Petrie : *The History of Government.*
3. H. A. L. Fisher : *History of Europe.*

தனிப் பகுதிகளுக்குரிய நூல்கள்

முதற் பகுதி

1. E. Jenks : *A History of Politics.*
2. M. Ruthnaswamy : *The Making of the State.*
3. M. Rostovtzeff : *A History of the Ancient World. Vol. I & II.*
4. G. Glotz : *The Greek City and Its Institutions.*
5. A. H. Walker : *A Primer of Greek Constitutional History.*
6. A. H. J. Greenidge : *Handbook of Greek Constitutional History.*
7. A. H. J. Greenidge : *Roman Public Life.*
8. F. F. Abbott : *The History and Description of Roman Political Institutions.*
9. T. M. Taylor : *A Constitutional and Political History of Rome.*
10. W. W. Fowler : *The City States of the Greeks and the Romans.*
11. Kenneth Scott Latourette : *The Chinese ; Their History and Culture.*
12. Will Durant : *Story of Civilization ; Our Oriental Heritage. Vol. I.*
13. Cambridge Ancient History : *Vol. II.*

இரண்டாம் பகுதி

1. Ram Sharan Sharma : *Political Ideas and Institutions in Ancient India.*
2. U. N. Ghoshal : *A History of Indian Political Ideas.*
3. A. S. Altekar : *State and Government in Ancient India.*

4. C. P. Bhambhri : *Substance of Hindu Polity.*
5. K. A. Nilakanta Sastri : *The Colas.*
6. K. A. Nilakanta Sastri : *A History of South India.*
7. V. R. Ramachandra Dikshitar : *The Mauryan Polity.*
8. V. R. Ramachandra Dikshitar : *The Gupta Polity.*
9. T. V. Mahalingam : *South Indian Polity.*

மூன்றும் பகுதி

1. H. W. C. Davis : *Medieval Europe.*
2. E. Emerton : *Medieval Europe (814—1300).*
3. C. Oman : *The Dark Ages.*
4. E. Barker : *Church, State and Study.*
5. H. W. C. Davis : *England under the Normans and Angevins (1066—1272).*
6. Wakeman & Hassal : *Essays Introductory to the Study of English Constitutional History.*

நான்காம் பகுதி

1. Ramsay Muir : *Nationalism and Internationalism.*
2. A. J. Grant : *A History of Europe.*
3. A. H. Johnson : *Europe in the Sixteenth Century (1494—1598).*
4. P. V. N. Myers : *Medieval and Modern History.*
5. F. J. C. Hearnshaw : *Main Currents of European History (1815—1915).*
6. B. Russell : *Freedom and Organisation (1814—1914).*
7. G. W. Southgate : *Europe (1870—1945).*
8. C. D. Hazon : *Modern Europe upto 1945.*
9. G. B. Adams : *Constitutional History of England.*
10. G. P. Gooch : *Dictatorship in Theory and Practice.*
11. R. H. S. Crossman : *Government and the Governed.*
12. H. Finer : *Mussolini's Italy.*
13. H. Laski : *Communism.*
14. S. H. Roberts : *The House that Hitler Built.*
15. Sabine : *A History of Political Thought.*
16. V. I. Lenin : *Socialism and Religion.*
17. R. N. C. Hunt : *The Theory and Practice of Communism.*

ஐந்தாம் பகுதி

1. K. C. Wheare : *Federal Government.*
2. D. W. Brogan : *The American Political System.*
3. W. B. Munro : *The Constitution of the United States.*
4. W. P. M. Kennedy : *The Constitution of Canada.*
5. W. E. Rappard : *The Government of Switzerland.*
6. A. Brady : *Democracy in the Dominions.*
7. A. Gledhill : *The Republic of India.*
8. Ramsay Muir : *Nationalism and Internationalism.*
9. F. L. Schuman : *International Politics.*
10. B. Russell : *Which Way to Peace.*
11. Norman Hill : *International Organisation.*
12. C. Eagleton : *International Government.*
13. H. V. Evatt : *The United Nations.*
14. United Nations : *Handbook of the United Nations and Specialised Agencies.*
15. United Nations : *Yearbook of the United Nations.*

ஆரும் பகுதி

1. Zleignien, K. Brzezinski : *The Soviet Bloc: Unity and Conflict.*
2. S. V. Utechin : *Everyman's Concise Encyclopaedia of Russia.*
3. Constitution of the U. S. S. R.
4. J. Towster : *Political power in the U. S. S. R.*
5. Merle Faisod : *How Russia is Ruled.*
6. K. L. Kamal : *The Government of China.*
7. Richard L. Walker : *China Under Communism.*
8. Dr. A. N. Agarwala : *The Government and Politics of China.*
9. Constitution of the People's Republic of China.
10. T. W. Kent : *The Welfare State (Eastern Economist Pamphlet).*
11. Paul H. Appleby : *Public Administration for a Welfare State.*

அரசாங்கத்தின் வரலாறு

முதற் பகுதி : பழங்கால உலகம்

1. அரசின் தோற்றம்
2. மனிதன் அமைத்த மிகப் பழமையான அரசாங்கம்
3. முற்காலப் பேரரசுகள்
4. குலத்தின் ஆட்சியமைப்பு
5. கிரேக்க, ரோமானிய நகர அரசுகள்
6. ரோமானியக் குடியரசு
7. நகர அரசுகளின் நலிவு
8. ரோமானியப் பேரரசு
9. ரோமானியச் சட்டம்

1. அரசின் தோற்றம்

வரலாற்று வல்லுநர்களும், புதைபொருள் ஆராய்ச்சியாளர்களும், மொழிவல்லாரும், மற்றும் பல அறிஞர்களும் மனிதனின் மறைந்துகிடந்த பழங்கால வாழ்க்கையை மூடியிருந்த திரையைத் தம் ஆராய்ச்சித் திறனால் இப்போது விரைவாக விலக்கி வருகின்றனர். மதம், சட்டம், சமூக நிறுவனங்கள் ஆகியவை எவ்வாறு தோன்றின என்று ஆய்ந்து பார்த்துச் சீரிய முடிவிற்கு வர முயல்கின்றனர். ஆயினும் ஆழ்ந்த ஆராய்ச்சியின் பிறகும் அரசு (State) எவ்வாறு தோன்றியதென்றும், முறையான அரசியல் வாழ்க்கை எப்போது உருவானதென்றும் வரலாற்றுச் சான்றுகளோடு முடிந்த முடிவாகக் கூறுவது எளிதன்று.

மனிதன் ஓர் அரசியல் விலங்கு என்று அரிஸ்டாட்டில் கூறுகிறார். அவரது கூற்று, அரசியல் வாழ்க்கை மனிதனின் இயற்கையோடு இயைந்தது என்று விளக்கிய போதிலும், எப்போது அரசு தோன்றியது, நாடோடியான பண்டைக்கால மனிதன் எப்போது அந்நிலைமாறி அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினான் என்ற கேள்விகளுக்கு விடையளிப்பதில்லை. அரசியல் நூலிலே காணப்படும் சிந்தனையைக் கிளறும் இக்கேள்விகளுக்கு முடிவான பதிலளிக்க முடியாது. ஏனெனில் அவற்றைப்பற்றிய ஏடுகளோ, பிறசான்றுகளோ நமக்குக் கிடைத்தில. வரலாற்று ஏடுகளின் வாயிலாக மிகப் பழமையான காலத்திற்குச் சென்று பார்த்தாலும் அங்கேயும் ஏற்கெனவே அரசு நிறுவப்பட்டிருப்பதையே காண்கிறோம். தொன்மை மிக்க சுமேரியா, எகிப்து, சீனா, இந்தியா போன்ற நாடுகளில் வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்திலே அரசின் அடையாளங்களையும், நிறுவனங்களையும் காணலாம். அரசாங்கம் (Government), சட்டம், அரசியல் பணிவு (Political obedience), அரசியல் ஒற்றுமை (Political unity) முதலியவை அங்குத் தென்படுகின்றன. ஆகவே அரசின் வரலாற்றில் முக்கிய பகுதியாகிய தொடக்கக் காலத்தைப்பற்றித் திட்டமாக ஒன்றும் தீட்ட இயலவில்லை. மனிதன் தோன்றிய வரலாற்றைப் பற்றியாவது நியாண்டர்தல் பள்ளத்தாக்கில் கிடைக்கப்பெற்ற மனித எலும்புக் கூட்டின் துணைகொண்டு சில கொள்கைகளை அமைக்கலாம். ஆனால் அரசின் வரலாற்றிலே அவ்வாறு செய்ய முடியாது. ஏனெனில் மண்ணிலே மறைந்துகிடந்த தொன்னகரங்களிலும், சிதைந்த நாகரிகங்களின் சின்னங்களிலும் நிலையான அரசின் அறிகுறிகள் புலப்படுகின்றன. ஆகவே வரலாற்றுக் காலத்திற்கு முன்பே மனிதன் அரசியல் வாழ்க்கையை ஓரளவு தொடங்கிவிட்டான்

எனத் துணிந்து கூறலாம். ஏனைய சமுதாய நிறுவனங்களைப் போல அரசும் பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு காரணங்களினால் தோன்றிப் படிப்படியாக வளர்ந்திருக்கவேண்டும். ஆயினும் புதைபொருட்களிலிருந்தும், பண்டைய இலக்கிய ஏடுகளிலிருந்தும் நாகரீக ஏணியின் அடிப்படியிலே இன்றுமிருக்கும் மக்களின் பழக்க வழக்கங்களிலிருந்தும் அரசின் பிறப்பைப் பற்றி ஒரு சில முடிவுகளுக்கு வரமுடியும்.

மனித வாழ்க்கையிலே நிலையாகக் காணப்படும் சில போக்குகள் உள்ளன. அவற்றுள் ஒன்று சமூகச் சார்பு. அஃதாவது, தனியாக வாழாது பலர் தொழமை பூண்டு ஒன்றுகக் கூடி வாழும் இயல்பு. மற்றொன்று பொதுவான அடிப்படையில் எழக்கூடிய இனப்பிரிவு. இப்பிரிவுகள் உறவு, உறைவிடம், உடைமை, பாலினம், தொழில் ஆகிய பல வேறுபாடுகளின் விளைவாகத் தோன்றலாம். இப்பிரிவியல்பு தவிரப் பொதுநலத்திற்காக ஒன்று சேரும் தன்மையும் மனித வாழ்விலே காணப்படுகின்றது. இதன் காரணமாகத் தனியாட்களும், மக்கள் தொகுதிகளும், தம் பொது நன்மைக்காக அல்லது பிற கூட்டங்களிலிருந்து தம்மைக் காப்பதற்காக ஒரு பொது அதிகாரத்திற்குப் பணிவதுண்டு. இவ்வியல்பின் பயனாகவே அரசு தோன்றியது.

இவை தவிர அரசு பிறப்பதற்கு ஏதுவான வேறு சில முக்கிய காரணங்களும் உண்டு. அவையாவன: உறவு, மதம், தொழில், போர். இவை நான்கும் மனித வாழ்வின் நிலையான அடிப்படைப் போக்குகள்; மனிதனின் இயற்கையிலிருந்தும், தேவைகளிலிருந்தும் எழுந்தவை; இவை ஒவ்வொன்றும் அரசு தோன்றுவதற்கு இன்றியமையாத ஒற்றுமையையும், அமைப்பு முறையையும் உருவாக்கின. அரசுக்குப் பணியவேண்டுமானால் மக்கள் தமது பொது நலத்தையும், தேவைகளையும் உணரும் தன்மை பெறவேண்டும். இதற்கு இந்நான்கும் பெருந்துணை செய்தன. இவையனைத்தும் பழங்கால சமூகக் கூட்டங்களில் இருந்தமையே அரசு தோன்ற ஏதுவாயிருந்தது.

உறவு

பண்டைய நாளிலிருந்த சமூக அமைப்புமுறைகள் எல்லாம் பெரும்பாலும் உறவினால் ஏற்பட்டவை. இரத்த உறவினால் பிணைக்கப்பட்ட கூட்டங்களே சமூகத்தின் அடிப்படையாக விளங்கின. பழங்காலக் குடும்பங்கள் பலவித உருக்களில் காணப்பட்டபோதிலும், தந்தைவழி முறையில் அமைக்கப்பட்ட குடும்பங்களே (Patriarchal family) பொதுவாகப் பரவியிருந்தன. குடும்பத்தின் தலைவராகிய தந்தை, அவரது மனைவியர்,

மணமாகாத மகளிர், மணவி மக்களுடன் வாழும் ஆண்மக்கள் ஆகிய அனைவரும் தம் அடிமைகளுடனும், பிற சொத்துக்களுடனும் சேர்ந்து வாழும் குடும்பமே தந்தைவழி முறைக் குடும்பமாகும். இக்குடும்பத்தின்மேல் தந்தைக்கு யாதொரு வரையறையுமில்லாத முழு அதிகாரம் இருந்தது. ஆண்மகனை ஒரு மூன்னோரின் வழிவந்த பல தந்தைவழி முறைக் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுக் குடும்பத்தை (Clan) அமைத்தன. இக்கூட்டுக் குடும்பத்தின்மேல் ஆணை செலுத்தும் உரிமை ஒரு முக்கிய உறவினனுக்குக் கொடுக்கப்பட்டது. இவ்வாருகப் பெரும்பாலும் தந்தைவழி முறையின் அடிப்படையிலே சமூக அமைப்பு நிறுவப்பட்டது. அரசானது தந்தைவழிக் குடும்பத்திலிருந்து நேராகத் தோன்றிவிட்டாலும், அதன் கோட்பாடுகளும், அமைப்புமுறைகளும் பல பழங்கால அரசுகளில் காணக்கிடக்கின்றன.

மதம்

அரசு வளர்ச்சியடைவதற்கு உறவைப் போல் மதமும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது. முற்காலத்தில் மனிதன் இயற்கையையும், இறந்துபோன முன்னோர்களையும் வழிபட்டு வந்தான். இவ்விரண்டு வழிபாடுகளும் உறவினால் இணைக்கப்பட்ட கூட்டத்தினர் அனைவருக்கும் பொதுவானதாக இருந்ததால் மதம் அவர்களைப் பிரியவிடாது ஒன்று சேர்க்கும் பெரும் பிணைப்பாக இருந்தது. மேலும் அவர்களின் பழக்க வழக்கங்களும், கட்டுப்பாடுகளும் மதத்தின் ஒழுங்குகளைத் தழுவியே எழுந்தன. கூட்டத்தின் தந்தையே மதத்தின் மேலான குருவாகவும் இருந்தார். ஆகவே மதம் கூட்டுக் குடும்பத்தைச் சிதைவுறுமல் காத்து வந்ததுமல்லாமல், அதன் ஒற்றுமையையும், ஒழுங்கையும் கட்டுப்படுத்தி வந்தது. கூட்டத்தைக் குலைக்கும் குழப்பங்களைத் தவிர்த்துக் கீழ்ப்படிதலையும் மதிப்புணர்ச்சியையும் கற்பித்தது மதம். இதுவே மதம் மனிதருக்காற்றிய அரும் பணியாகும். அது கற்பித்த கட்டுப்பாடும், பணிவும்தான் இன்றும் அரசாங்கங்கள் அமைக்கப்படும் அடிப்படைக் கற்களாக விளங்குகின்றன.

தொழில்

உறவு, மதம் இவை தவிர வேறு பல போக்குகளும் அரசின் தோற்றத்திற்கு அடிகோலின. மக்கள்தொகை பெருகியதாலும், பொருளாதார வினைகள் அதிகரித்ததாலும், மனிதன் ஓர் அதிகாரத்திற்குப் பணிந்து ஒற்றுமையுடன் வாழவேண்டிய தேவை ஏற்பட்டது. அவன் உணவைத் தேடியலைந்த முற்காலத்தில் வேட்டையாடுவதற்கெனக் கூட்டமாகச் சேர்ந்து, கிடைத்த பொருளைக் கூறுபோடுவதில் ஒற்றுமை கண்டான். பிறகு மந்தைகளை

மேய்த்து நாடோடியாகத் திரிந்த காலத்தில் செய்தொழிலைத் தமக்குள் வகுத்துக்கொள்ள ஒற்றுமையும், கட்டுப்பாடும் தேவைப்பட்டன. உணவைத் தேடிய காலம் நீங்கி உணவை உற்பத்தி செய்யும் உழவுநிலை அவன் மாறியபின் ஒரே இடத்தில் நிலையாகத் தங்கி வாழ நேர்ந்தபோது தன் சொத்துக்களைக் காக்கவும், வேளாண்மையை வளப்படுத்தவும், கூடி வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தவும் ஓர் அதிகாரமுள்ள நிறுவனம் வேண்டியிருந்தது. இவ்வாறுகப் பழங்காலத்தில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியும், பொருளாதார வினைப்பெருக்கமும் பல விதங்களில் அரசு தோன்றத் துணையாயிருந்தன.

போர்

குடும்பம், மதம், பொருளாதாரம் ஆகிய காரணங்களைத் தவிரக் குடிப்பெயர்ச்சி (Migration), போர் இவற்றின் விளைவால் எழுந்த அரசியல் நிறுவனங்கள் மிகப்பல. போர்ச் சார்பினால் எழுந்த இந்த நிறுவனங்கள் பல சமூகப் பிரிவுகளைச் சார்ந்த மக்களை அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழ்ந்த காரணத்தினால் ஒன்றுசேர்ப்பித்தன. இவ்வாறுக உறவு முதலான பிணைப்புகளுக்குப் பதிலாக உறைவிடமும் மக்களிடம் அரசியல் ஒற்றுமையை வளர்த்தது. ஓர் இடத்தில் வாழ்ந்தவர்கள் தம்மைப் பாதுகாப்பதற்காக அல்லது பிற கூட்டங்களைத் தாக்குவதற்காக ஒன்று சேர்ந்ததால் அவர்களிடையே ஒற்றுமையுணர்ச்சி வளர்ந்தது. அவர்கள் நிறுவனங்களும் வலுப்பெற்றன. போரில் பகைவரைப் புறங்கண்டபின் அவருடைய பொருட்களைத் தமக்குள் பங்கிட்டுக் கொள்ளவும், வெற்றி பெற்றவருக்கும், தோல்வியடைந்தவருக்கும் இடையே நிலவ வேண்டிய தொடர்புகளை முடிவு செய்யவும் ஒழுங்குகள் தேவைப்பட்டன. போர்ப் படைகளை வீறுடன் நடத்தி வெற்றியுடன் திரும்பிய படைத் தலைவன் நாளடைவில் அவர்களை ஆளும் அரசியல் தலைவனுகவும் மாறினான். தந்தைவழி முறைக் குடும்பங்களின் தலைவன் பிறப்பின் காரணமாகக் குடும்பத்தினர் அனைவர் மேலும் அளவிறந்த ஆணை செலுத்தி வந்தான். ஆனால் போர்த்திறமையினால் ஆளும் பொறுப்பேற்ற தலைவன் மக்களின் இசைவுபெற்று ஆட்சி செய்தான். அவனது தகுதியும் திறமையுமே அவனைப் பதவிக்கு உயர்த்தின. போர்க்காலங்களில் போரை நடத்துவதும், அமைதியான நாட்களில் பிணக்குகளைத் தீர்த்துவைத்தலும் அவன் கடமைகள். இவ்வாறு போரின் காரணமாக எழுந்த நிறுவனம்தான் குலம் (tribe) எனப்படும். இனம் அல்லது மதத்தின் அடிப்படையில் தோன்றிய கூட்டங்களைப் போலல்லாமல் குலம் ஓர் அரசியல் நிறுவனமாகத் திகழ்ந்தது. நாடோடியாகத் திரிந்த மனிதன்

இப்போது வேளாண்மைக்காக ஓர் இடத்தில் நிலையாகத் தங்கி விட்டதால் அவனது சமூக வாழ்வை ஒழுங்குபடுத்தவும், சொத்துக்களைக் காப்பாற்றவும் பலம் பொருந்திய நிறுவனம் தேவைப்பட்டது. இவை அனைத்தையும் செய்யத் தொடங்கியதும் அதன் வேலைகள் பெருகியதோடு, அரசியல் தன்மையும் வெளிப்பட்டது. ஓரேயிடத்தில் வாழ்ந்து வந்ததால் மக்களிடையே ஒற்றுமை யுணர்ச்சியும் வளர்ந்தது. இவ்வுணர்ச்சியின் அடிப்படையிலே செழித்தோங்கிய நிறுவனம்தான் அரசை உருவாக்கியது.

இவ்வாருக அரசானது இயற்கையாகப் படிப்படியாக வளர்ச்சி யுற்றது. அது இறைவனால் மனிதனுக்கு நேராகக் கொடுக்கப் பட்ட நன்கொடையன்று. மனிதன் முயற்சி செய்து வேண்டு மென்று எழுப்பிய நிறுவனமும் அன்று. அதன் பிறப்பின் வரலாறு பண்டைய சமூக நிறுவனங்கள் தோன்றிக்கொண்டிருந்த பழங் காலத்தில் புதைந்து மறைந்துபோய்விட்டது. ஏனைய உயிரினங்களைப்போல் அரசும் கருவிலே தோன்றி உருப்பெற்று முழு வளர்ச்சி பெற்ற ஓர் அமைப்பாகும்.

---

2. மனிதன் அமைத்த மிகப் பழமையான அரசாங்கம்

தந்தைவழி முறைச் சமூகம்

வரலாற்றில் காணப்படும் அரசுகள் எல்லாம் பெரும்பாலும் தந்தைவழி முறைக் குடும்பக் கூட்டங்களிலிருந்து பிறந்தவை யாகும். ஆகவே மனிதன் அமைத்த முதல் அரசியல் நிறுவனம் தந்தைவழி முறைச் சமூகம் எனலாம். அதுவே சர். ஹென்றி மெயின் (Sir Henry Maine) கூறுவது போல, மானிடச் சமுதாய வளர்ச்சியில் மிகப் பழமையான நிலை. அது மிகப் பழங்காலத்தில் தோன்றிய நிறுவனமாக இருந்தபோதிலும் மிக ஒழுங்கான அமைப்பு முறையை அதில் காணலாம். எல்லாத் தந்தைவழி முறைச் சமூகங்களிலும் ஏழு சிறப்பியல்புகள் காணப்படுகின்றன. அவை ஆண்வழி உறவு, நிலையான திருமணம், தந்தையின் அதி காரம், ஆணைச்சார்ந்த உறவு, பிரிவுணர்ச்சி, வகுப்புத் தன்மை, போட்டியின்மை எனப்படும்.

ஆண்வழி உறவு

ஆண்வழி உறவின் அடிப்படையிலே தந்தைவழி முறைக் குடும்பங்கள் அமைக்கப்பட்டன. குடும்பத் தலைவன் (குடும்பத்தில்

உயிருடன் இருக்கும் வயதில் மூத்த ஆண்) குடும்பத்திலுள்ள அனைவர் மேலும் அதிகாரம் செலுத்தி வந்தான். அவர்கள் எல்லோரும் தம் முன்னோரான ஓர் ஆண்மகனின் வழிவந்தவர்கள் ஆதலால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். சில வேளை இது உண்மையான உறவாக இல்லாமல் அயலார் குழந்தைகளை எடுத்து வளர்த்ததால் ஏற்பட்ட உறவாகவும் இருந்தது. ஆயினும் ஆண்வழி முறையாக உறவு ஏற்படுத்தப் பட்டதால் குடும்பம் ஒற்றுமையாக இணைந்து நின்றது.

நிலையான திருமணம்

ஆண்வழி முறை வளர்ச்சியடைய நிலையான திருமணம் தேவையாக இருந்தது. ஏனெனில் ஒரு பெண் ஒரேயொரு ஆணின் மனைவியாக இருந்தால்மட்டும்தான் அவளுக்குப் பிறக்கும் மக்கள் அவனுடைய பிள்ளைகளென உறுதியாகக் கூறமுடியும். அப்போதுதான் தந்தைவழி முறையும், உடைமையும் நிலைபெறும். நிலையான திருமணம் என்றால் ஒருத்தி ஒரேயொருவனை மண முடிப்பதென்று பொருளாகுமே தவிர ஒருவன் ஒருத்தியைத் திருமணம் செய்வதென்று பொருளாகாது. அதற்கு மாறுகத் தந்தைவழி முறைச் சமூகத்தில் பல மனைவியரை மணப்பது வழக்க மாக இருந்தது. ஏனெனில் ஒருவன் பல பெண்களை மணமுடிப் பதால் சமூகத்தில மணமாகாத மகளிரின் எண்ணிக்கை குறைவ தோடு, ஆண்வழி உறவும் வலுப்பெறுகிறது.

தந்தையின் அதிகாரம்

குடும்பத்திலுள்ள அனைவர் மேலும் குடும்பத் தலைவன் செலுத்திவந்த அளவிறந்த அதிகாரம் தந்தைவழி முறை நிறுவனத்தின் நிலையான இயல்புகளில் ஒன்று. குடும்பத்தின் தொழில் முறைகள் மட்டுமல்ல, அதன் மதத்தையும், ஒழுக்கத்தையும் கூடக்கட்டுப்படுத்தும் உரிமை தலைவனுக்கு இருந்தது. குடும்பம் சார்ந்திருந்த பெரிய கூட்டத்திற்குக் குடும்பத்தின் பெயரால் பொறுப்பேற்க வேண்டிய கடமையும் குடும்பத் தலைவனுடையது. அவனது அதிகாரத்தின் எல்லைகள் பல இடங்களில் பலவிதமாக இருந்தன. பழங்கால ரோமானிய நாட்டில் குடும்பத்தினரின் உயிரை வாங்கும் அதிகாரம்கூடத் தலைவனுக்கு இருந்தது.

ஆணைச் சார்ந்த உறவு

தற்கால அரசின் கூறுகளில் முக்கியமானது நிலப்பரப்பு. அஃதாவது குறிப்பிட்ட நிலப்பரப்பிலே வாழும் மக்கள் ஓர் அரசை அமைத்துக் கொள்கின்றனர். ஆனால் தந்தைவழி முறைச் சமூகத் தில் நிலப்பரப்பு முக்கியமானதாகக் கருதப்படவில்லை. கூட்டம்

முழுவதும் இடம்பெயர்ந்து வேறிடம் சென்றாலும் அவர்களின் அரசியல் அமைப்பு மாறுபடவில்லை. கூட்டத்தின் உறுப்பினராக ஒருவன் இருக்கவேண்டுமென்றால் அவன் கூட்டத்தின் தலைவனுக்கு உறவினராக இருக்கவேண்டும். ஆகவே இரத்த உறவுதான் அவர்களை ஒன்றாகச் சேர்த்துச் சமூகமாக உருவாக்கியது.

பிரிவுணர்ச்சி

தந்தைவழி முறைச் சமூகத்தில், குடும்பத்தில் பிறந்தவர்கள் அல்லது குடும்பத்தினரால் எடுத்து வளர்க்கப்பட்டவர்கள் மட்டும்தான் உறுப்பினராக இருக்க முடியும். மற்றவர்கள் வந்து சேர முயன்றால் அவர்களை நிலத்தைப் பறிக்கும் கள்வராகவும், புது வழக்கங்களையும் வழிபாடுகளையும் புகுத்த முயலும் பிற மதத்தினராகவும் கருதி வந்தனர். உறவினரல்லாத பிறரைச் சமூகத்தில் சேர்த்தாலுங்கூட அவர்களை அடிமைகளாகவே சேர்த்தனர். பிறரிடமிருந்து பிரிந்து வாழும் இப்பிரிவுணர்ச்சி தந்தைவழி முறைக் கூட்டத்தின் சிறப்பான குணமாகும்.

வகுப்புணர்ச்சி

இக்காலத்தில் அரசாங்கம் தனி மனிதர்கள்மேல் நேராக ஆணை செலுத்துகிறது. ஆனால் தந்தைவழி முறைச் சமூகத்தில் ஒவ்வொருவனும் ஒருசிறு கூட்டத்தின் உறுப்பினராக இருந்தான். அக்கூட்டம் மற்றொரு பெரிய கூட்டத்தின் உறுப்பாக இருந்தது. இவ்வாறே சமூகம் முழுவதும் அமைப்புற்றிருந்தது. ஒவ்வொருவனும் தான் சேர்ந்திருக்கும் கூட்டத்தின் தலைவனுக்குத்தான் பணிந்து நடந்து வந்தான். மகன், மனைவி, அடிமை எல்லோரும் குடும்பத் தந்தைக்கும், குடும்பத் தந்தை கூட்டுக் குடும்பத்தின் தலைவனுக்கும், கூட்டுக் குடும்பத் தலைவன் குலத்தலைவனுக்கும் பணிந்து வாழ்ந்தனர்.

போட்டியின்மை

குறிப்பிட்ட பழக்க வழக்கங்கள் தந்தைவழி முறைச் சமூகத்தைக் கட்டுப்படுத்தி வந்தன. அவற்றை மீறி நடப்பது குற்றமாகக் கருதப்பட்டது. ஒவ்வொருவனும் செய்யவேண்டிய வேலைகளும், கடமைகளும் தெளிவாக வகுக்கப்பட்டிருந்தன. அன்றியும் அவை இன்ன இன்னவாறு செய்யவேண்டுமென்றும் வரையறுக்கப்பட்டிருந்தன. ஆகவே சமூக உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் போட்டியின்றித் தத்தம் கடமைகளைத் தவறாது செய்து வந்தனர்.

இந்த ஏழு தன்மைகளும் தந்தைவழி முறைச் சமூகத்தின் தனிக் குணங்களாக இருந்தன. உலகின் பல பகுதிகளில் இச்

சமூகம் பலவிதமான அமைப்புகளோடு வளர்ந்திருக்கலாம். ஆனால் பொதுவான இவ்வியல்புகளை எல்லாம் அவற்றில் காண முடியும்.

தந்தைவழி முறைக் குலத்தின் அமைப்புமுறை

தந்தைவழி முறைச் சமூகத்தில் முக்கியமான தொகுதி குலம். ஒரு முன்னோரின் ஆண்வழி வந்த சந்ததியாரின் கூட்டமே குலமாகும். குலத்தோன் ஒருவனின் பிள்ளைகட்குமட்டும் குலத்தின் முழு உறுப்பினராக இருக்கும் உரிமையுண்டு. அவர்கள்தாம் குலத்தின் உடைமைகளில் உரிமையுடன் பங்குபெறமுடியும். அவர்களே குலத்தின் மத வழிபாடுகளில் கலந்துகொள்ளலாம். ஆனால் எல்லாத் தந்தைவழி முறைக் குலங்களிலும் பல அயலார்கள் குலத்தின் நடுவில் வாழ்ந்து வந்ததாகக் காண்கிறோம். அவர்கள் குலத்தவரால் சில முக்கிய காரணங்களுக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள். இவர்களைத் தவிர பலதிறப்பட்ட அடிமைகளும் குலத்தில் வாழ்ந்தனர். அனேகமாக அவர்கள் போரில் சிறைப்பட்டவர்களாக அல்லது தண்டனைபெற்ற குற்றவாளிகளாக இருக்கலாம். இத்தகைய அடிமைகள் மந்தை மேய்ப்பவர்களாகவோ அல்லது பண்ணை ஊழியர்களாகவோ அமர்த்தப் பட்டனர்.

குலத்தில் பாகுபாடு

குலத்தோர் எல்லோரும் ஒன்று சேர்ந்து வாழ்ந்தபோதிலும் அவர்களிடையே சமத்துவம் நிலைபெறவில்லை. அவர்களுக்குள்ளே பல பாகுபாடுகள் இருந்தன. குலத்தின் முக்கிய சொத்தாகிய ஆடுமாடுகள், ஓட்டகங்கள் முதலிய கால்நடைகள் தனி மனிதனின் சொத்தாகவே கருதப்பட்டன. இத்தகைய உடைமைகளைக் குடும்பச் சொத்தாகப் பெருமளவு அல்லது பிறரிடமிருந்து கைப்பற்றுமளவு இருந்தவனைக் கீழ்த்தர நிலையிலே வைத்திருந்தார்கள். சொத்தில்லாத ஒருவனை அயர்லாந்து நாட்டில் "ஃபெர்மிட்பா" (Fer Midba) கீழ்த்தர மனிதன் என்றும், சொத்துடையவனை "போயர்" (Boaire) அல்லது கால்நடைத் தலைவனென்றும் அழைத்தனர். சொத்துடையவன் தன் கால்நடையின் சிறு பகுதியைச் சொத்தில்லாத 'ஃபெர்மிட்பா'வுக்குக் கடனுகக் கொடுத்துதவினன். அதற்குக் கூலியாக ஃபெர்மிட்பா போயருக்கு ஆண்டுதோறும் விளைச்சலில் ஒரு பகுதியைக் கொடுத்ததோடு ஆண்டில் பலமுறை போயருக்கும் அவன் நண்பர்களுக்கும் விருந்தளித்தும் வந்தான். ஃபெர்மிட்பாக்களிடையேயும் கொஞ்சம் கால்நடை வைத்திருந்து மற்றதைக் கடன் வாங்கியவனை 'ஸாயர் சீல்' (Saer Ceile) என்றும், கால்நடைச் சொத்தே இல்லாமல் முழு

வதையும் கடன் வாங்கியவனை 'டாயர்ஸில்' (Daer Ceile) என்றும் பகுத்து வைத்திருந்தனர். இப்பிரிவுகள் தவிரச் செல்வர்களிலும் அவரவர் உடைமைக்குத்தக்க பல சமூகப் பாகுபாடுகள் இருந்தன.

குலத்தில் அலுவலாளர்கள்

குலத்தை நிறுவியவரின் வழியில் தோன்றிய மூத்த ஆண் மகனே பொதுவாகக் குலத்தலைவனாக விளங்கினன். குலத்தலைவன் அயர்லாந்தில் "ரி" (Ri) என்றும், வேல்ஸில் "பென்" (Pen) என்றும், ஸ்காட்லாந்தில் "மார்மேர்" (Mormaer) என்றும், ட்யூட்டானியர்களால் "ஸைனிங்" (Cyning) என்றும், பட்டாணியர்களால் "கான்" (Khan) என்றும் அழைக்கப்பட்டான். தலைவனாகும் தகுதிபெற்ற இம்மரபில் தோன்றிய மூத்த ஆணுக்குப் பதவியேற்கும் உரிமையிருந்த போதிலும் அவன் நோயாளியாக அல்லது வலுக்குறைந்தவனாக இருந்தால் அவன் தலைவனாக முடியாது. வேல்ஸ் நாட்டுச் சட்டம் அவன் கடமைகளைக் கீழ்க்கண்டவாறு எடுத்துக் கூறுகிறது. அவன் தன் குலத்தின் சார்பாகப் பேசும்போது அனைவரும் அவனது பேச்சைக் கேட்க வேண்டும். குலத்திற்காகப் போர் செய்யும்போது எல்லோரும் அவனுக்கு அஞ்ச வேண்டும். குலத்திற்குப் பாதுகாப்பளிக்கும்போது அதை அவர்கள் ஏற்கவேண்டும். அவன் சொல்வன்மையுடையவனாகவும், வீரனாகவும், உண்மையுள்ளவனாகவும் இருத்தல் வேண்டும். தலைமைப் பதவியை ஏற்கும் உரிமையுடையவனிடம் இக்குண நலன்கள் காணப்படவில்லையென்றால் அவன் தலைவனாகும் தகுதியை இழந்து விடுவான்.

தலைவன் இறந்த பிறகு அவன் வழிவந்த மூத்த ஆண் தலைமைப் பதவி ஏற்பான். தலைவன் உயிருடன் இருக்கும்போது அவனுக்குப் பிறகு தலைவனாகும் உரிமையுடையவன் தலைவனின் பிரதிநிதியாகப் பணியாற்றித் தலைமைப் பதவிக்குத் தன்னைப் பயிற்சி செய்து கொள்வான். அயர்லாந்தில் இவனை "டானிஸ்ட்" (Tanist) என அழைத்தனர்.

தொடக்கத்தில் குலத்தலைவனே போர்த் தலைவனாகவும் விளங்கினன். ஆனால் தலைமைப் பதவி பரம்பரையாக வந்தமையால் தலைவன் கண்ணியமும் அறிவும் உடையவனாக இருந்தபோதிலும் போர் செய்யும் ஆற்றல் இல்லாதவனாக இருத்தல் கூடும். அத்தகைய தலைவனுடைய பதவிக் காலத்தில் போர் எழுமேல் சிறந்த படைவிரன் ஒருவனைப் போர்த்தலைவனாகத் தெரிந்தெடுப்பது வழக்கம். இவனுக்கு அயர்லாந்தில் "டாய்ஸெஷ்" (Toisech) எனவும் வேல்ஸ் நாட்டில் "டயால்வெர்" (Dialwar) எனவும் பெயர்.

குல அவை

குலத்திற்கு உட்பட்ட பல சிறு பிரிவுகளின் தலைவர்களைக் கொண்டு நாளடைவில் அமைக்கப்பட்ட நிறுவனமே அவை யாகும். இது அயர்லாந்து மக்களால் "ப்ரெஹான்ஸ்" (Brehons) எனவும், முகமதியரால் "ஜிர்கா" (Jirgah) என்றும், இந்தியர் களால் "பஞ்சாயத்து" எனவும் அழைக்கப்பட்டது. குலத்தின் வழக்கங்களைக் குறித்து வைப்பதும் மதவழிபாடுகளையும், சடங்கு களையும் ஒழுங்குபடுத்துவதும் அவையின் வேலைகளாம். குலத் தில் உறுப்பினர்கள் பெருகியதாலும், வழக்கங்களை எழுதிவைக்க ஆட்களில்லாததாலும் அவை மிகத் தேவையான நிறுவனமாக இருந்தன. அதை அரசியல் அமைப்பிற்கு உட்பட்ட அரசாங்கத் தின் கரு எனலாம். ஏனெனில் சட்டம், நீதிமன்றம், அமைச் சரவை, பாராளுமன்றம் ஆகியவை எல்லாம் பழங்காலக் குல அவையினின்றே உருவாகி வளர்ச்சி பெற்றன.

தந்தைவழி முறைச் சமூகத்தில் மதம்

தந்தைவழி முறைக் குலத்தில் மதம் மிகச் சிறப்பான இடத் தைப் பெற்றிருந்தது. குலத்தின் ஒற்றுமைக்கும், பிறகு அரசு வளர்ச்சியடைவதற்கும் அது பெருந்துணையாக இருந்தது. மதத்தின் கோட்பாடுகள் எல்லாம் முன்னோர் வழிபாட்டைப் பற்றியே இருந்தன. இறந்துபோன தந்தையின் ஆவி அடிக்கடி உலகில் தம் சந்ததியாருக்குத் தோன்றி வந்ததாகவும், அவரது விருப்பப்படியே அவர்கள் வாழவேண்டுமென்றும் நம்பி வந் தனர். அவர் வாழ்ந்த முறையிலே வாழ்ந்து குல ஒழுக்கங்களி லிருந்து சிறிதும் வழுவாமல் நடக்க முயற்சி செய்தனர். மேலும் இறந்தவரின் ஆவியின் பசி, தாகம் முதலியவற்றைத் தீர்க்க அதற்குப் பலி கொடுத்து வந்தனர். சில சமயம் பகைவர் மேல் அவர் கொண்ட பழியையும் தீர்த்துவைக்க வேண்டியிருந்தது.

முன்னோர்களே அவர்களுடைய கடவுளர்களாதலால் ஒவ் வொரு நாளும், ஒவ்வொரு மணியும் அன்னோரின் வாழ்க்கைத் திட்டங்களை அப்படியே பின்பற்றி வந்தனர். அவர்களின் பாது காப்பிலே வளர்ந்து, துயர்களில் எல்லாம் அவர்களின் துணை யைப் பெற முயன்றனர். மேலும் முன்னோர்கள் அதே குலத்தைச் சேர்ந்தவர்களாதலால் அவர்களை வழிபடும் முறை பிற குலங் களுக்குத் தெரியாத பெரிய இரகசியமாக மறைத்துவைக்கப் பட்டிருந்தது. குலம் நிலைத்து நிற்பதே அந்த இரகசியங்களைக் காப்பதில் அடங்கி யுள்ளதென நம்பினர்கள். இவ்வாறாக இறந்துபோன முன்னோரின் நினைவு குலத்தில் என்றும் நிலவி வந் தது. இது குலத்தோரிடையே ஒரு நெருங்கிய தொடர்பை ஏற்

படுத்தியது மல்லாமல் அவர்கள் சமூக வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தது.

தந்தைவழி முறைச் சட்டம்

தந்தைவழி முறைச் சமூகத்தில் மதத்திற்கும் சட்டத்திற்கும் மிகவும் நெருங்கிய தொடர்பிருந்தது. அச்சமூகத்தினர் முன்னோர்களை வழிபட்டு வந்ததால் அன்னோர் தம் வாழ்க்கையில் பின்பற்றிய வழக்கங்களை எல்லோரும் பணிவுடன் ஏற்றுக் கொண்டனர். இவ்வாறு ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட வழக்கங்களே தந்தைவழிமுறைச் சமூகத்தின் சட்டங்களாக விளங்கின. சட்டம் என்பது ஓர் ஆள் அல்லது ஒரு குழுவினால் ஏற்படுத்தப்பட்ட ஆணை என்ற கருத்து பிற்காலத்தில் தோன்றியது. தந்தைவழி முறைச் சமூகத்தில் சட்டம் என்பது புதிதாக இயற்றப்படுவது அன்று. ஏற்கெனவே நிலவி வரும் வழக்கங்கள்தாம் அங்கே சட்டங்களாகக் கருதப்பட்டன- எது வழக்கத்திற்கு உட்பட்டதோ அதைச் சரியென்றும், வழக்கத்திற்கு உட்படாததைத் தவறென்றும் நினைத்தனர். வழக்கத்துக்கு முரணான எல்லாவற்றையும் குற்றமாகவே எண்ணினர்கள்.

பொதுவாகத் தந்தைவழி முறைச் சமூகத்தில் வழக்கத்தை எவரும் மீறுவதில்லை. தலைவன் வழக்கங்கள் என்று கூறியவற்றை வேண்டுமென்று மீறுபவர்கள் அரிதாகையால் அதற்கென்று குறிப்பிட்ட தண்டனை கிடையாது. ஆனால் யாராவது ஒருவன் திரும்பத் திரும்ப வழக்கங்களை மீறினால் அவனை நாடு கடத்துவார்கள். கொலை முதலிய பெருங்குற்றம் செய்தவனைத் தீங்கிழைக்கப்பட்டவனின் உறவினர்கள் பழிவாங்குவார்கள். ஒருவன் கொலைக் குற்றம் செய்ததாகத் தக்க சான்றுகள் கிடைக்கவில்லையென்றால் அவனைச் சில சோதனைகளுக்கு உட்படுத்துவது வழக்கம். குற்றம் சாற்றப்பட்டவன் தான் குற்றவாளியல்லன் என்று நிரூபிக்க அவனது உறவினர் சிலரைக் கொண்டுவந்து ஆணையிடுமாறு செய்யலாம். அல்லது அவன் நீர், தீ முதலிய கடுஞ் சோதனைகளுக்கு உட்படவேண்டும். அவற்றில் அவன் தோல்வியடைந்தால் கொலை செய்யப்பட்டவனின் உறவினர் அவன்மேல் பழிதீர்க்கும் பகையைத் (Blood Feud) தொடங்குவார்கள்.

பிற்காலத்தில் பழிக்குப் பதிலாக நஷ்ட ஈடு செய்யும் முறை ஏற்பட்டது. தீங்கிழைக்கப்பட்டவரின் தன்மைக்கும் தீங்கின் அளவிற்கும் தக்கபடி அபராதம் விதிக்கப்பட்டது. குற்றவாளியைக் கண்டுபிடித்துப் பழிவாங்கப் போகிறார்கள் என்று தெரிந்தால் உடனே குலத்தின் முதியோர்கள் தலையிட்டுப் பழிக்குப் பதிலாக அபராதத்தை ஏற்றுக்கொள்ளுமாறு தூண்டுவார்கள்.

இவ்வாருகத் தந்தைவழி முறைச் சட்டங்களின் பொது இயல்புகளைச் சொல்ல முடியுமேயன்றி அவற்றை எண்ணிக்கை எடுத்துக் கூற முடியாது. ஒவ்வொரு குலத்திலும் அக்குலத் தோருக்கென்று சட்டம் இருந்தது. ஆண்வழி முறை போன்ற சில கோட்பாடுகள் எல்லாக் குலங்களுக்கும் பொதுவானதாக இருந்தபோதிலும் குலத்திற்குக் குலம் கொள்கைகள் வேறு பட்டன.

---

3. முற்காலப் பேரரசுகள்

பேரரசுகளின் அமைப்பு

வரலாற்றின் தொடக்கக் காலத்திலே உலகின் பல பகுதிகளில் பேரரசுகள் தோன்றித் தமது ஆட்சியை நிறுவி யிருந்ததைக் காண்கிறோம். இவை எவ்வாறு தோன்றின என ஆராய்ந்தால் பெரும் பாலும் பிற நிலப்பகுதிகளைப் போரில் வென்று அவற்றின் மேல் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியதால் உருவாகின எனத் தெரி கின்றது. ஏனெனில் உறவு வழிமுறையில் அமைக்கப்பட்ட பழங் காலக் கூட்டங்கள் பிற அந்நியக் கூட்டங்களுடன் இணைந்து பேரர சுகளை ஏற்படுத்தியிருக்க முடியாது. பழங்கால அரசுகளில் பெரிய தாகிய அக்காடியா போரின் விளைவாக எழுந்ததை வரலாற்றி லிருந்து அறிகிறோம். பொதுவாகப் போர் என்ற பெரும் உலை யில்தான் பண்டையப் பேரரசுகள் உருப்பெற்றன.

முற்காலத்தில் மனிதன் தனது தேவைக்கு மிகுதியாகப் பொரு ளைச் சேர்த்து வைக்கவில்லை. ஆனால் காலம் போகப் போகப் பல காரணங்களால் செல்வத்தைச் சேர்த்து வைக்கத் தொடங்கினன். ஆடுமாடுகளை வளர்க்கத் துவங்கியதாலும், பிறகு பயிர்த்தொழி லைக் கற்றுக் கொண்டதாலும் செழிப்பான ஆற்றுப் பள்ளத்தாக்கு களிலே நிலையாக வாழ்ந்து செல்வத்தைப் பெருக்கினன். ஆகவே தான் நைல், யூப்ரட்டீஸ், டைக்ரிஸ், யாங்க்ட்ஸிகியாங் போன்ற ஆறுகளின் பள்ளத்தாக்குகளில் செழிப்பான நாகரிகங்கள் தோன்றி, ஊன்றி வளர்ந்தன. இவ்வாறு மனிதன் ஓரிடத்தில் தங் கித் திரவியம் திரட்டியதால் பல நகரங்கள் தோன்றின. நகரங் களில் செல்வம் பெருகியதால் அவற்றின் அதிகாரமும் வளர்ச்சி யடைந்தது. இந்நகரங்களே பேரரசுகள் தோன்ற முதற்படியாக இருந்தன. பழங்காலப் பேரரசுகளான சுமேரியா, பாபிலோனி யா, அஸீரியா, எகிப்து, பாரசீகம், சீனா போன்றவை நகரங்களில் வாழ்ந்த மக்களாலே நிறுவப்பட்டன. இவை சமூக நிறுவனங்

கூட விரிவுபடுத்தி அவற்றின் அதிகாரங்கூட வளர்த்ததுடன் ஆற்றங்கரையை அடுத்துள்ள நாட்டுப்புறங்களிலும் தமது செல்வாக்கைப் பரப்பின. மேலும் உடன்படிக்கையினாலும், பண்பாட்டு ஒற்றுமையினாலும் பல நகரங்கள் ஒன்று சேர்ந்தன. இவற்றுள் அதிகாரத்திலும் ஆற்றலிலும் தலைசிறந்த நகரம் மற்ற நகரங்கூட்டத் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்து பேரரசு தோன்ற அடிகோலியது. நகரத்தில் ஆட்சி நிறுவனங்கள் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தன. பழங்காலக் குலங்களில் உறவின் அடிப்படையில் எழுந்த நிறுவனங்களுக்குப் பதிலாக இப்போது நகரங்களில் வகுப்பின் அடிப்படையில் நிறுவனங்கள் அமைந்தன. முன்னாள் குடும்ப வழிபாட்டு முறைக்குப் பதிலாக மக்கள் கோவிலுக்குச் சென்று வழிபடத் தொடங்கினார்கள். கோவிலில் மதச் சடங்குகூட நடத்திய குருக்களின் நிறுவனம் சமூகக் கட்டுப்பாட்டை அதிகரித்தது. ஆட்சிப் பொறுப்பிலே அரசனுக்குத் துணை செய்த பல அலுவலர்கள் அரசவையிலே தங்கியிருந்து தனி வகுப்பினராக விளங்கினர். நகரத்தின் நாகரிகம் வளர்ச்சியடையவே கைத்தொழில் வளர்ச்சியடைந்தது. தொழில் வளத்தைப் பெருக்கத் தொழில்முறைப் பகுப்புப் (division of labour) பயன்படுத்தப்பட்டது. பண்டமாற்றுமுறை மாறி ஒருவித நாணய மாற்று முறை வழக்கில் வந்தது. இதனால் செல்வத்தைச் சேர்த்து வைப்பது எளிதானதோடு, அதன் மூலம் அதிகாரத்தை வளர்த்துக் கொள்ளவும் வழியேற்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக மக்கூட்டக் கட்டுப்படுத்தி ஆட்சிக்குப் பணியவைக்கும் ஆற்றலையுடைய நிலையான போர்ப்படை நிறுவப்பட்டது.

இவ்வாறாக நகரங்களிலே அதிகார நிறுவனங்கூட்டக் கட்டுப்படுத்தி வந்த வகுப்புக்களுக்கு மக்கள் பணிந்தனர். இதுதான் பேரரசுகள் எழக் காரணமாயிருந்தது. தனது நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வந்த மன்னன் பிற நாடுகளிலும் தனது அதிகாரத்தைத் திணித்து அவற்றையும் பணியச் செய்தான். இவ்வாறுதான் பழங்காலப் பேரரசுகளாகிய எகிப்து, சுமேரியா, பாபிலோனியா, பாரசீகம், சீனா போன்றவை தோன்றின.

அ. எகிப்துப் பேரரசு

முற்கால வரலாறு

செழிப்பான நைல் நதிப் பள்ளத்தாக்கில் புதிய கற்காலத்திலிருந்தே மக்கள் குடியேறி வந்தனர். ஆண்டு முழுவதும் ஆற்றில் நீர் மிகுதியாகப் பாய்ந்ததாலும், நல்ல வண்டல் மண் மிகுந்த நிலப்பகுதியாக இருந்ததாலும் அது பயிர்த்தொழிலுக்கேற்ற மிகச் செழிப்பான இடமாக விளங்கியது. ஆகவே எகிப்தை

"நைல் நதியின் நன்கொடை" என அழைத்தனர். நிலவளத்தின் காரணமாக இப்பகுதியில் விரைவில் மக்கள் நெருக்கம் அதிகரித்தது. இதனால் அவர்களின் சமூக வாழ்க்கையும் வளர்ச்சியடைந்தது. நைல்நதிப் பள்ளத்தாக்கிலே வாழ்ந்தவர்கள் அந்நியர் படையெடுப்புக்களைப்பற்றி அதிகமாக அஞ்சவில்லை. ஏனெனில் எகிப்தின் கிழக்கிலும், மேற்கிலும் பாலைநிலங்களும், வடக்கே கடலும், தெற்கே பரந்த வறண்ட நிலப்பகுதியும் இருந்தன. படையெடுப்புக்கள் எல்லாம் சூயஸ் நில இணைப்பின் (Isthmus) வழியாகவே நிகழ்ந்தன.

நைல் நதிப் பள்ளத்தாக்கிலே வாழ்ந்த மக்களிடையே அரசாங்கம் படிப்படியாக வளர்ச்சியுற்றது. அவர்கள் தம்மை அந்நியரிடமிருந்து காக்க ஒரு தலைவனைத் தேடினார்கள். ஆகவே முதலில் ஒரு போர்த் தலைவனை அவர்கள் அரசனாக ஏற்றிருத்தல் கூடும். ஆனால் ஆற்றின் கழிமுகத்தில் வாழ்ந்த மக்களுக்குப் போர்த் தலைவனை விட முக்கியமான வேறொருவனின் தலைமை தேவைப்பட்டது. அவர்களுடைய வயல்களுக்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகளைக் கண்காணிக்கக் கூடிய ஒருவனே அவர்களின் வாழ்வை வளப்படுத்தி நல்ல ஆட்சியை நிறுவக் கூடியவனாக இருந்தான். இத்தகைய தகுதியுடையவனையே அவர்கள் நாளடைவில் தலைவனாக ஏற்றுக் கொண்டார்கள். அப்பகுதியிலுள்ள மக்கள் ஒவ்வொரு அறுவடையின் போதும் விளைச்சலில் ஒரு பகுதியை அவனுக்களித்து வந்தனர். இவ்வாறு அவர்கள் கொடுத்த தானியங்களே மனிதன் கொடுத்த முதல் வரியாகவும், தலைவனின் கட்டுப்பாடே முதல் அரசாங்கமாகவும் விளங்கின.

நாளடைவில் இந்தக் கழிமுகத் தலைவர்களில் படைத்திறமிக்க ஒருவன் மற்றத் தலைவர்களை வென்று கழிமுகப் பகுதி முழுவதையும் தன்னாட்சியின் கீழ்க்கொண்டு வந்தான். அவனது ஆட்சிப் பகுதி கீழ்எகிப்து என அழைக்கப்பட்டது. இதைப்போலவே ஆற்றின் தென்பகுதியிலும் வேறோர் அரசு தோன்றியது. இது மேல்எகிப்து என வழங்கப்பட்டது. இவ்விரண்டு பகுதிகளுக்கும் இடையே பல போர்கள் நிகழ்ந்தன. அநேகமாக கி.மு. 4300 இல் கீழ் எகிப்தை ஆண்ட அரசன் மேல்எகிப்தின் மீது படையெடுத்து அதைத் தோற்கடித்து இரண்டையும் ஒன்றுக இணைத்து ஒரு கூட்டரசை ஏற்படுத்தினான். இவனது பெயர் என்னவென்று இன்னும் தெரியவில்லை. ஆனால் இந்த இணைப்புச் சில காலத்தில் முறிந்து திரும்பவும் எகிப்து இரு பிரிவுகளாகப் பிளவுபட்டது. ஏறக்குறைய கி. மு. 3360 இல் மேல்எகிப்தை ஆண்ட மீனீஸ் (Menes) என்ற மன்னன் கீழ்எகிப்தை வென்று ஒரு நிலையான கூட்டரசை ஏற்படுத்தினான். இவனது வழி வந்த

வர்கள்தாம் எகிப்தைப் பன்னெடுங்காலம் ஆண்டுவந்த பாரவோன் மன்னர்கள். இவன் காலமுதல் எகிப்து நாட்டை 31 வம்சங்கள் ஆண்டன. அவைகளின் வரலாறு பழைய அரசு, நடு அரசு, புதிய அரசு என மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

முதற் பகுதியாகிய பழைய அரசு கி. மு. 3360 முதல் 2160 வரை நிலைத்திருந்தது. இக்காலத்தில்தான் மாபெரும் பிரமிட்கள் கட்டப்பட்டன. இப்பகுதியின் முடிவில் அரசு வலுவிழந்ததாலும், வெளிப் படையெடுப்புக்களாலும் பேரரசு பல பிரிவுகளாகச் சிதைந்தது. இரண்டாவது பகுதியாகிய நடு அரசு கி. மு. 2160 முதல் 1580 வரை நீடித்திருந்தது. இக்காலத்தில் எகிப்து வாணிகத்தில் தலைசிறந்து விளங்கியது. இப்பகுதியின் இறுதியில் ஹிக்ஸாஸ் என்ற இனத்தவர் எகிப்தின்மேல் படையெடுத்து ஒரு பகுதியைக் கைப்பற்றி ஆட்சி செலுத்தி வந்தனர். மூன்றாவது பகுதியாகிய புதிய அரசின் காலத்தைக் கி. மு. 1580 முதல் 650 வரை எனக் கூறலாம். இப்பகுதியில்தான் எகிப்து பல நாடுகளை வென்று மிகப்பரந்த பேரரசாக இலங்கியது. மூன்றாவது டுட்மாஸ் என்ற பாரவோன் காலத்தில் எகிப்துப் பேரரசு நைல் நதிப் பள்ளத்தாக்கிலிருந்து யூப்ரட்டீஸ் பள்ளத்தாக்கு வரை பரவியிருந்தது. புதிய அரசின் இறுதிக் காலத்தில் அவைகளின் போராற்றல் குறைந்துவிட்டதாலும் அந்நியர்களின் படையெடுப்பு அதிகரித்ததாலும் எகிப்துப் பேரரசு விரைவில் சரிந்து சிதைந்து விட்டது. பல நூற்றாண்டுகளாகப் பொலிவுடன் திகழ்ந்த அப்பேரரசு கி. மு. 6ஆம் நூற்றாண்டில் பாரசீகப் பேரரசின் ஒரு பகுதியாகி விட்டது.

எகிப்தின் அரசாங்கம்

எகிப்தில் அரசாங்கம் பொதுவாக மதத்தோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. அரசாங்கத்தின் தலைவனாகிய மன்னனை மக்கள் கடவுளாகக் கருதினர்கள். அவனை எவ்வளவு பணிவுடன் வணங்கி வந்தார்களென்றால் அவனது பெயரைச் சொல்ல அஞ்சி, எகிப்து மொழியில் "பெரிய மனையில் வாழ்பவன்" எனப் பொருள்படும் "பாரவோன்" என்ற சொல்லைப் பயன் படுத்தினர்கள். அவன் உயிருடனிருக்கும்போது அவனை ஹோரஸ் என்ற பருந்துக் கடவுளின் திருப்பிறவியாகவும், அவன் இறந்த பிறகு ஆஸிரிஸ் என்ற நதிக் கடவுளாகவும் வணங்கி வந்தனர். அரசனுக்கென்று கோவில்களை எழுப்பி அங்கே அவனுக்கென வழிபாடுகள் நடத்திவந்தனர். சுருங்கக் கூற வேண்டுமானால் எகிப்து மன்னன் இந்நில உலகிலே ஆண்ட

வனின் பிரதிநிதியாக நாட்டை ஆண்டு வந்தான் என்று கூறலாம்.

பாரவோனின் அதிகாரம் வரையிறந்தது. போர்க்காலங்களில் படைத் தலைவனாக விளங்கியதுடன், உயர் நீதிபதியாகவும், தலைமைக் குருவாகவும் ஆணை செலுத்தினான். மக்களின் நல் வாழ்வுக்கான நீர்ப்பாசன வசதிகளையும் கண்காணித்து வந்தான். மதத்தின் தலைமைக் குருவாக இருந்ததால் அவனே வழிபாடுகளையும், பலிகளையும், ஊர்வலங்களையும் நடத்த வேண்டுமென்றாலும், அவன் பல இடங்களுக்குச் செல்ல முடியாத காரணத்தினால் அவனுக்குத் துணையாகப் பல குருக்கள் பணியாற்றி வந்தனர். அவர்கள் கோவில்களில் வாழ்ந்து, கடவுளர்களுக்குப் பலி கொடுக்கவும், மதச் சடங்குகளை நிறைவேற்றவும் மன்னனுக்கு உதவினார்கள். இறந்தபிறகு மறு உலக வாழ்வில் இன்புற்று வாழும் வகையை மக்களுக்குக் காட்டுவதும் அவர்கள் கடமையாக இருந்தது.

மதத்துறையில் இருந்ததுபோலவே உலகியல் துறையிலும் அரசனுக்குக் கீழ்ப் பல அலுவலர்கள் இருந்தனர். தீப்ஸ் (Thebes) நகர அரசப் பிரதிநிதி முதல் தூர எல்லைப்புற ஊரின் அதிகாரி வரை பல நூற்றுக்கணக்கான அலுவலர்கள் அரசனின் ஆணையின்படி பணியாற்றி வந்தனர். இவர்களில் ஒரு பகுதியினர் தலை நகரிலும், மறு பகுதியினர் நாட்டின் பல பகுதிகளிலும் செயலாற்றி வந்தனர். அரசனுக்கு அறிவுரை கூற ஒரு குழு இருந்தது. அதன் உறுப்பினர்கள் வரி வசூல், நீர்ப்பாசனம், பொதுக் கட்டிடங்கள் முதலியவற்றை மேற்பார்வையிட்டு வந்தனர். அரசாங்க அலுவலர்கள் எல்லோரும் அரசனது கட்டளையின்படி மக்கள் தம் தொழில்களைச் செய்துவர அவர்களை இயக்கினார்கள். சில அலுவலர் போர்க் காலங்களில் தரைப்படையையும். கடற்படையையும் பகைவருக்கு எதிராக நடத்திச் சென்றனர். சிலர் வரிப் பணத்தை மக்களிடமிருந்து வசூலித்தனர். வேறு சிலர் நீர்ப்பாசனம் போன்ற பொதுப் பணிகளை (Public Works) மேற்பார்வையிட்டனர். இன்னும் சிலர் நீதி வழங்கி நாட்டில் ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்டினர். மற்றும் சிலர் அரசனுக்கும் அவன் குடும்பத்தினருக்கும் பணிசெய்து வந்தனர். ஆனால் அரசாங்கச் செயலில் தம் விருப்பப்படி ஒன்றும் செய்ய அவர்களுக்கு அதிகாரம் கிடையாது. அவர்கள் மன்னனது ஆணைப்படிதான் செயலாற்ற வேண்டும். இந்த உயர்தர அலுவலர்கள் தவிரக் கணக்கெழுதுவோர், மேற்பார்வையாளர், காவலர் ஆகியவர்களும் அரசாங்க அலுவலில் இருந்தனர். இவர்கள் அனைவரும் அரசனால் நியமிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டாலும் உண்மையில் முக்கிய

அலுவலர்களே மட்டும் அரசன் நியமித்தான். மற்றவர்களே அம் முக்கிய அலுவலர்கள் நியமித்தார்கள். ஆனால் அனைவரும் அரசனுக்கே கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அவன் அவர்களையும் அவர்களுடைய சொத்துக்களையும் தன் விருப்பப்படியே நடத்தி வந்தான்.

எகிப்துப் பேரரசு மிகப் பரந்திருந்ததால் ஆட்சியை நடத்துவதற்குப் பல வட்டார அரசாங்கங்கள் (Local Governments) தேவைப்பட்டன. இதற்காக நாடு பல "நோம்" (Nome) என்ற பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நோமிற்கும் "நோமார்க்" (Nomarch) என்ற தலைவர் அரசனால் ஏற்படுத்தப் பட்டார். அவர் ஆட்சித் துறையைக் கவனித்ததுடன், நீதிபதியாகவும், வட்டாரத் தலைமைக் குருவாகவும் பணியாற்றினர். ஆனால் அவர் நடு அரசாங்கத்தின் கட்டளைப்படியே ஆட்சி செலுத்த வேண்டும். நோமார்க் அரசனால் நியமிக்கப்பட்ட போதிலும், நாளடைவில் அப்பதவி மரபு வழியாகப் பெறும் பதவியாக மாறியது. ஆனால் அப்போதும்கூட அதைப் பெற அரசனின் இசைவு தேவை.

ஆட்சித்துறை அலுவலர்களே நீதிபதிகளாகவும் பணியாற்றினர்கள். வட்டார நீதிமன்றங்களும், உயர்நீதி மன்றங்களும் வகைப்படுத்தப்பட்டிருந்தன. குற்றவியல் சட்டங்கள் (Criminal laws) கொடுமையாக இருந்தன. ஒருவன் குற்றவாளியா எனக் கண்டுபிடிக்கச் சித்திரவதையும், மாயவித்தைகளும் பயன்படுத்தப் பட்டன. ஆனால் தண்டனைகள் மிகக் கடுமையாக இல்லை. கொலை, கோவில்களில் திருட்டு முதலிய ஒருசில குற்றங்களுக்கே மரண, தண்டனை வழங்கப்பட்டது. சீரியல் சட்டங்கள் (Civil laws) சிறந்தவையாக இருந்தன. ஒப்பந்தம், கடன், குத்தகை, அடைமானம், திருமணம், குடும்பம் முதலியவைபற்றித் திட்டமான விதிகள் இருந்தன. பெண்களுக்குச் சமூகத்தில் சட்டபூர்வமாக உயர்ந்த இடம் அளிக்கப்பட்டது. அவர்களுக்கு உடைமை உரிமையும், மரபுரிமையும் வழங்கப்பட்டிருந்தன. பொதுவாக நீதிமன்றங்களில் குருக்களின் செல்வாக்கு அதிகமாக இருந்தது. பொதுமக்கள் நீதிமன்றங்களுக்கு அதிக மதிப்புக் கொடுப்பதில்லை. ஏனெனில், ஜே. எச். ப்ரெஸ்டெட் (J. H. Breasted) கூறுவதுபோல, "ஏழைகளுக்கு வழங்கப்பட்ட நீதியைவிடச் செல்வர்களின் கைக்கூலி அதிக ஆற்றல் பெற்றிருந்தது".

பொதுமக்கள் அரசனுடைய ஆணைக்கு முற்றிலும் பணிந்து வாழ்ந்தார்கள். நாட்டின் அரசியல் வாழ்க்கையில் அவர்களுக்கு யாதொரு பங்கும் கிடையாது. நிலம் முழுவதும் அரசனுக்கே உரியது என்று கருதப்பட்டதால் மக்களுக்குத் தனிச்சொத்துரிமை,

முக்கியமாக நிலச் சொத்துரிமை வழங்கப்படவில்லை. அவர்களுடைய உடைமைகள், தொழில், உயிர் முதலாயவை அரசனது கைகளிலே இருந்தன. ஆகவே அவற்றை அவன் விருப்பப்படியே நடத்த அவனுக்கு அதிகாரம் இருந்தது. பயிர்த்தொழிலை அவன் பாதுகாத்து வந்ததால், அறுவடையில் எவ்வளவு பகுதியை உழவர்கள் அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று அவனே முடிவு செய்தான். கால்வாய்கள் வெட்டுதல், அணைக்கட்டு, கல்லறை முதலியவை கட்டுதல் ஆகிய குறிப்பிட்ட தொழில்களைச் செய்வதற்கான ஆட்களை அரசனே நியமித்தான். கைத்தொழில் செய்பவர்கள் தம் ஊழியத்தில் எவ்வளவு பகுதியை அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டுமென்றும், அவர்களில் யார் யார் அரண்மனையிலும், கோவில்களிலும் வேலைசெய்ய வேண்டுமென்றும் அவன்தான் தீர்மானித்தான். வணிகர்களும் தம் வருவாயில் அரசனுல் குறிக்கப்பட்ட ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு அளித்து வந்தனர். இவ்வாருக அரசாங்கம் மன்னரின் தன்னரசுக்கு (Autocracy) உட்பட்டிருந்தது.

எகிப்தின் நடு அரசாங்கம் பலமிழந்து, நாடு பல பகுதிகளாகப் பிரிந்து ஒவ்வொரு பகுதியிலும் பிரபுக்களின் நிலமானிய ஆட்சி வளர்ந்த காலத்திலுங்கூட மன்னனின் தன்னரசு முறை மாறவில்லை. எகிப்தின் பண்டைய வரலாற்றின் சில பகுதிகளில் நாடு அநேகமாக தன்னுட்சி (Autonomy) பெற்ற பல பகுதிகளாகப் பிரிந்தது. ஆயினும் அப்போதும் மன்னனுக்கும் அவனது குடிகளுக்கும் இருந்த தொடர்பு ஒன்றுபட்ட எகிப்தில் இருந்தது போலவே இருந்தது.

ஆ. மெசபொடேமியா

முற்கால வரலாறு

யூப்ரட்டீஸ், டைக்ரிஸ் என்ற இரு ஆறுகளுக்கு இடையேயுள்ள செழிப்பான நிலப்பகுதி தொல்பெரு நூலாகிய விவிலியத்தில் (The Bible) ஸிநார் (Sennaar) எனக் கூறப்படுகிறது. கிரேக்கர்கள் அப்பகுதியை "இரு ஆறுகளுக்கிடையே உள்ள நாடு" எனப் பொருள்படும்படி தம் மொழியில் 'மெசபொடேமியா' என அழைத்தனர். முற்காலத்தில் இது இயற்கை வளம் கொழிக்கும் எழில்மிக்க நாடாக மிளிர்ந்தது. ஆகவே ப்ரெஸ்டெட் என்ற வரலாற்று அறிஞர் பிறைச் சந்திரன் வடிவிலுள்ள இந்நிலத்தை "வளமான பிறை" (The Fertile Crescent) என அழைக்கிறார். ஆண்டுதோறும் இரு ஆறுகளும் கொண்டுவந்து குவித்த வண்டல் மண் இப்பகுதியை உலகின் தானியக் களஞ்சியங்களில் ஒன்றுகத் திகழச் செய்தது. இதன் செழிப்பின் காரணமாக வட.

பகுதியிலுள்ள மலைநாட்டவரும் தென்பாகத்திலுள்ள பாலைநில நாடோடிகளும் இதன்மேல் அடிக்கடி படையெடுத்து, அதைத் தமது நாடாக்கப் பெரிதும் முயன்று வந்தனர். இவர்களிடையே எழுந்த இடைவிடாப் போட்டிதான் மெசபொடேமியாவில் முடிவிலாப் போரை ஏற்படுத்தியது. பெரும் பூசல்களும், படையெடுப்புக்களுமே அதன் வரலாற்றில் மலிந்து காணப்படுகின்றன.

ஏறக்குறைய கி. மு. 5000இல் சுமேரியர்களென அழைக்கப்படும் ஓர் இனத்தவர் மெசபொடேமியாவின் தென் சமவெளியில் குடியேறினர். அவர்களது நாகரிகம் பல நூற்றாண்டுகளாகத் தலைசிறந்து விளங்கியது. பிறகு கி. மு. 2750இல் அரேபியாவிலிருந்து வந்த அக்காடியர்கள் (Akkadians) மெசபொடேமியா மீது படையெடுத்துச் சுமேரியர்களைத் தோற்கடித்துத் தமது ஆட்சியை நிறுவினர்கள். இவர்களின் ஆட்சியை ஏற்படுத்தியவன் முதலாம் ஸார்கன் (Sargon I) என்ற மன்னன். இன்னும் ஓராயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு அமோரைட்டுகள் (Amorites) என்ற வேறொரு பாலைநிலக் கூட்டம் படைதிரண்டு எழுந்து வந்து அக்காடியர்களைப் பணியவைத்தது. இவர்களின் மாண்புமிக்க மன்னன் ஹமுராபி (Hammurabi) என்பவனின் தலைநகரான பாபிலோனின் புகழ் யாங்கணும் பரவவே ஸிநார் சமவெளி முழுவதும் பாபிலோனியா எனப் பெயர் பெற்றது. ஹமுராபி அப்பகுதிகளில் வழங்கிவந்த வழக்கங்களையும், சட்டங்களையும் திரட்டி, ஒழுங்குபடுத்தி வரலாற்றிலே காணப்படும் முதல் சட்டத் தொகுதியை வெளியிட்டான். பாபிலோனிய நாகரிகம் பல நூற்றாண்டுகளாகச் செழித்தோங்கியபின் ஹிட்டைட்டுகள் (Hittites) என்ற கூட்டத்தவரால் அழிக்கப்பட்டது. ஏறக்குறைய கி. மு. 1250இல் அஸீரியர்கள் (Assyrians) படையெடுத்து வந்து ஹிட்டைட்டுகளை முறியடித்தனர். அவர்கள் நினிவே என்ற அழகிய தலைநகரை எழுப்பி மேற்கு ஆசியா முழுவதையும் வென்று ஆட்சி செய்தனர். கி.மு. 606இல் அஸீரியப் பேரரசின் பல பகுதிகள் புரட்சி செய்து நினிவே பட்டணத்தைத் தாக்கி அழித்தன. அஸீரியரின் வீழ்ச்சிக்குப் பிறகு கால்டியர்கள் (Chaldians) என்ற கூட்டத்தார்கள் இச்சமவெளியில் தமதாட்சியை நிறுவினர்கள். அவர்கள் பாபிலோனியா நகரைத் திரும்பவும் எழுப்பி அதை அக்காலத்தில் சிறந்த தலைநகராக விளங்கச் செய்தனர். கி. மு. 538இல் பாரசீகக் கூட்டமொன்று படையெடுத்துவந்து கால்டியர்களின் பேரரசை அழித்தது. இவ்வாறுக உலக நாகரிகத்தின் இரண்டாவது நிலைக்களனாகத் திகழ்ந்த மெசபொடேமியா தனது பழங்காலப் பொலிவெலாம் இழந்தது.

அரசாங்கம்

யூப்ரட்டீஸ், டைக்ரிஸ் ஆறுகளின் சமவெளியில் வாழ்ந்த மக்களின் முக்கியத் தொழில் வேளாண்மையாக இருந்ததால் அவர்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுக்கவும், செழிப்பின் காரணமாக அப்பகுதிகளில் பகைவரின் படையெடுப்புக்கள் அதிகமாக இருந்ததால் அவர்களை அவற்றினின்று காக்கவும் ஒரு வலிமையுள்ள நிறுவனம் தேவைப்பட்டது. அதன் தலைவன் அறிவும் அனுபவமும் உள்ளவனாக இருப்பதுடன் அரசியல் முதிர்ச்சி பெறாத அம்மக்களைத் தனதாட்சியின்கீழ் அடக்கி வைக்கும் திறமையுள்ளவனாகவும் இருக்கவேண்டும். அரசனிடம் குடிகளுக்கு அச்சமும் பணிவும் ஏற்படுவதற்கு அவன் கடவுளாக அல்லது கடவுளோடு நெருங்கிய தொடர்புள்ளவனைக் கருதப்படவேண்டும். அவனியற்றும் சட்டங்களை இறைவனின் ஆணைகளாக மக்கள் அனைவரும் ஏற்கவேண்டும். அவன் மன்னனாகவும், குருவாகவும், நீதிபதியாகவும் விளங்கவேண்டும். இத்தகைய தகுதியுடைய தலைவனே போரும், படையெடுப்பும் அடிக்கடி நிகழ்ந்த அந்நாட்டில் அமைதியை நிலைநாட்டமுடியும். ஆகவே தான் இச்சமவெளியில் ஆட்சி செய்த அரசர்கள் எல்லோரும் தங்களைக் கடவுளென அல்லது கடவுளின் பிரதிநிதிகளெனக் கூறிக்கொண்டார்கள். தான் முதன் முதலாகத் தொகுத்த சட்டங்களை மக்கள் எதிர்ப்பின்றி ஏற்கவேண்டும் என்பதற்காக ஹமுராபி என்ற பாபிலோனிய அரசன் தான் அவற்றைக் கதிரவனாகிய கடவுளிடமிருந்து பெற்றதாக அறிவித்து, அதைக் கற்றூணில் செதுக்கி, மார்டுக் (Marduk) என்ற பெரிய கடவுளின் ஆலயத்தில் நட்டுவித்தான். இவ்வாறாக இம்மன்னர்கள் தமதாட்சியைப் பலப்படுத்தி ஒழுங்கான அமைப்புக்கு உட்பட்ட அரசாங்கத்தை நிறுவினார்கள். இத்தகைய ஓர் அரசாங்கத்தை இச் சமவெளியில் முதன் முதலில் நிலைநாட்டியவர்கள் சுமேரியர்கள்.

சுமேரியர்களுக்குப் பிறகு வந்த அமோரைட்டுகள் நிறுவிய பாபிலோனிய அரசிலும் மதத்திற்கும் அரசாங்கத்திற்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. சுமேரிய, அக்காடிய மன்னர்கள் கடவுளாகவே கருதப்பட்டனர். ஆனால் பாபிலோனிய மன்னன் தான் கடவுளின் பிரதிநிதி அல்லது அவரின் அன்பிற்குரியவன் என்றும், அவரிடமிருந்தே நேராக அதிகாரத்தைப் பெற்றதாகவும் கூறினான். அவனும், சுமேரிய அரசனைப்போலவே தன்னரசு செலுத்தினான். மதம், படை, நிதி ஆகிய துறைகளில் முழு அதிகாரம் பெற்றிருந்தான். ஆயினும் எழுதப்பட்ட சட்டங்கள் அவனது அதிகாரத்தை ஓரளவு கட்டுப்படுத்தியன.

• •

பாபிலோனியாவில் அடிக்கடி படையெழுச்சிகள் நிகழ்ந்தாலும், பிறநாட்டு வாணிகம் விரைவில் வளர்ச்சியுற்றதாலும் அரசாங்கத்திற்கும், தனி மனிதர்களுக்கும் உள்ள தொடர்பு எகிப்தில் இருந்ததைப் போலல்லாமல் வேறுவிதமாக இருந்தது. பாபிலோனிய மன்னன் எல்லா நிலங்களுக்கும், நாட்டு மக்களின் சொத்துக்களுக்கும் உரியவனாகக் கருதப்படவில்லை. நிலம், கால்நடை போன்ற தனிச்சொத்துக்களை மக்கள், முக்கியமாக உயர் வகுப்பினர் வைத்திருக்கலாம். அவர்களும் அரசனைப் போலவே தங்களுக்கு அடியிலுள்ளவர்களின் உயிரையும், சொத்துக்களையும் தமது விருப்பப்படி கையாளலாம். அவர்களுக்குள்ள தொடர்புகளை ஒழுங்குபடுத்த எழுதப்பட்ட சட்டம் தேவையாக இருந்தது. ஆகவேதான் அரசன் சட்டங்களை இயற்றி வெளியிடத் தொடங்கினன். இதற்குச் சிறந்த சான்று ஹமுராபியின் சட்டத் தொகுதியாகும். அது சொத்து, ஒப்பந்தம், வேளாண்மை, வாணிகம், திருமணம், வழக்குகள் போன்ற எல்லாவற்றையும் நுட்பமாக ஒழுங்குபடுத்தியது. இவ்வாருகப் பாபிலோனியா சீரியல் சட்டங்களின் (Civil Law) பிறப்பிடமாகத் துலங்கியது.

தனிச்சொத்துரிமை சமூகத்தில் பல வகுப்புக்களை உண்டாக்கியது. எகிப்தில் எல்லாக் குடிமக்களும் அரசனுக்கும், ஆண்டவனுக்கும் முன் சமமானவர்களாக எண்ணப்பட்டார்கள். ஏனெனில் அங்கே எவருக்கும் தம் சொத்தின்மேல், முக்கியமாக நிலச்சொத்தின்மேல் முழு உரிமை கிடையாது. ஆனால் பாபிலோனியாவில் சொத்துரிமையால் ஏற்பட்ட பாகுபாடுகள் சட்டபூர்வமானவை. சில வகுப்புக்களுக்கு அரசாங்கம் வாரிசுரிமை வழங்கியதோடு அதைக் காக்கவும் முன்வந்தது. ஆனால் இந்தச் சட்டபூர்வமான சமூக வேறுபாடுகளால் உண்டான தீமைகளைத் தடுத்து, தீங்கிழைக்கப்பட்டோரைக் காக்க அரசாங்கம் முயற்சி எடுத்தது. இவ்வேறுபாடுகளின் காரணமாக உயர்ந்த வகுப்பினர் நாளடைவில் சில அரசியல் உரிமைகளைப் பெறலாயினர். முக்கியமாகப் பெரிய நகரங்கள் தன்னுட்சி பெற்றன. ஆயினும் இம்மாறுதல் அதிக வளர்ச்சியடையவில்லை.

எகிப்தில் இருந்ததுபோலப் பாபிலோனியாவிலும் நீதி மன்றங்களில் மதக்குருக்களின் செல்வாக்கு உயர்ந்தோங்கி இருந்தது. ஆனால் ஹமுராபியின் காலத்தில் சமய நீதி மன்றங்களின் அதிகாரம் குறைக்கப்பட்டது. ஹமுராபியின் சட்டத் தொகுதியிலிருந்து அக்காலத்தில் பாபிலோனியாவில் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன என்று தெரிகிறது. ஒருவன் குற்றவாளியா எனக் கண்டுபிடிக்கக் கடுந்தேர்வு முறை (Trial by Ordeal) பயன்படுத்தப்பட்டது.

பாபிலோனிய அரசின் வீழ்ச்சிக்குப் பிறகு தோன்றிய அஸீரிய, கால்டியப் பேரரசுகளிலும், ஏறக்குறைய பாபிலோனியாவில் இருந்ததுபோலவே அரசாங்கம் முழு அதிகாரத்தோடு ஆட்சி செய்து வந்தது. மதமும் அரசாங்கமும் ஒருங்கே இணைந்து நின்றன.

இ. சீனா

முற்கால வரலாறு

பழங்கால சீன நாகரிகம் ஹ்வாங்ஹோ (Hwang Ho) என்றழைக்கப்படும் மஞ்சள் நதிச் (Yellow River) சமவெளியிலும் அதையடுத்துள்ள சிறு ஆறுகளின் பள்ளத்தாக்குகளிலும் செழித்தோங்கியது. எகிப்து, மெசபொடேமியா முதலிய நாடுகளில் இருந்ததைப்போலவே இங்கும் ஆற்று நீரும், வண்டல் மண்ணும் நிலத்தை நன்கு வளப்படுத்தின. எனவே பயிர்த்தொழில் இப்பகுதிகளில் மிகுதியாக நடைபெற்றது.

சீனாவின் பண்டைய வரலாற்றைப்பற்றிக் கி.மு. 1000 ஆண்டிலிருந்தே பல நூற்கள் எழுதப்பட்டிருந்தபோதிலும் அவற்றில் காணப்படும் எல்லாக் குறிப்புகளையும் வரலாற்று நிகழ்ச்சிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது. தற்கால ஆராய்ச்சியின்படி ஏறக்குறைய கி.மு. 1500 இலிருந்து 1100 வரை ஷாங் (Shang) என்ற வம்சத்தரசர்கள் ஆண்டு வந்தனர் எனத் தெரிகிறது. அதன் பிறகு சூ (Chou) என்ற கூட்டத்தினர் படையெடுத்து வந்து ஷாங் இனத்தவரை வென்று தமதாட்சியை நிலைநாட்டினர்கள். சூ வம்ச முதல் அரசனாகிய வூ (Wu) நிறுவிய பேரரசு ஏறக்குறைய வட சீனச் சமவெளி முழுவதும் பரந்திருந்தது. ஆயினும் போக்குவரவு வசதிகள் இல்லாமையால் கிழக்குப் பகுதிகளை அரசன் தனது அதிகாரத்திற்குப் பணிந்த சிறு தலைவர்களிடம் ஒப்புவித்தான். ஆனால் நாளடைவில் இப்பகுதிகளில் நடு அரசாங்கத்தின் கட்டுப்பாடு தளர்ந்தது. அவைகளும் தன்னாட்சி பெற்றன. இவ்வாறு சிதறிய சிறு நாடுகள் ஒன்றோடொன்று போரிட்டு அழிந்தன. இறுதியில் கி. மு. 230 முதல் 221 வரை நிகழ்ந்த பல போர்களின் விளைவாக சின் (Chin) என்ற நாடு மற்றெல்லாப் பகுதிகளையும் வென்று சீன வரலாற்றிலே முதன் முதலாக ஒன்றுபட்ட ஒரு பேரரசை ஏற்படுத்தியது. இதன் முதல் அரசன் காலத்தில் புகழ்பெற்ற சீனப் பெருஞ்சுவர் (The Great Wall) கட்டப்பட்டது. இவ்வரசனுக்குப் பிறகு வந்தவர்கள் பலம் குன்றியவர்களாக இருந்ததால் கி. மு. 206க்குள் சின் வம்சம் அழிந்துபோயிற்று. அதன் பிறகு ஹான் (Han) வம்ச ஆட்சி தொடங்கியது. இவ்வம்சம் முற்கால ஹான் வம்சம்,

பிற்கால ஹான் வம்சம் என இரு பிரிவுகளாக கி. மு. 206 இலிருந்து கி. பி. 220 வரை ஏறக்குறைய 400 ஆண்டுகளாக ஆண்டு வந்தது. பிற்கால ஹான் வம்சத்தின் வீழ்ச்சியுடன் சீனவின் முதல் பேரரசும் குலைந்தது. பிறகு ஏறக்குறைய 350 ஆண்டுகள் கழித்தே ஒன்றுபட்ட பேரரசு மற்றொன்று எழும்ப முடிந்தது.

அரசாங்கம்

சீனவின் பேரரசுக் காலம் முழுவதும் அரசு ஒரு பரந்த குடும்பமாகக் கருதப்பட்டு வந்தது. தந்தைவழி முறைத் தோற்றமே சமூகம் முழுவதும் பரவியிருந்தது. அரசின் தலைவனை பேரரசனை மக்கள் தந்தையாகக் கருதினர்கள். அவன் இறைவனின் ஆணையால் அரியணையில் அமர்ந்திருப்பதாக எண்ணினர்கள். அவன் நெடுங்காலம் கொடுங்கோல் செலுத்தினால் கடவுள் அவனது அதிகாரத்தை மற்றொருவனுக்கு மாற்றிவிடுவார் என்றும், வெள்ளம், பஞ்சம் போன்ற இயற்கை அழிவுகள் எல்லாம் இறைவனின் சினத்தின் அடையாளங்கள் எனவும் நினைத்தார்கள். பொதுவாக ஒரு வம்ச மன்னர்கள் ஒரே குடும்பத்திலிருந்து வந்தார்கள். சிங் வம்சத்தில் ஆண்வழி முறையாகவே பதவிக்கு வந்தனர்.

பேரரசன் மனித சமூகத்தின் பெருந்தலைவனாக எண்ணப்பட்டான். அரசின் ஆட்சித்துறையை இயக்கும் உரிமை அவனுடையது. அலுவலர்கள் எல்லோரும் அவர்களது அதிகாரத்தை அவனிடமிருந்தே பெற்றனர். சட்டமியற்றும் அதிகாரமும் நீதி வழங்கும் உரிமையும் அவனுக்குண்டு. மக்களின் மதத் தலைவன் என்ற முறையில் பல மதச் சடங்குகளைச் செய்ததோடு பல்வேறு வழிபாட்டு முறைகளின் தலைவர்களையும் ஏற்படுத்தினன். அறிவுத் துறை உலகிலும் அவன் தான் முதல்வன். ஆட்சித்துறை அலுவலர் தேர்வுகளில் முக்கியமானவற்றைப் பேரரசனே நேரில் நடத்துவதாகக் கருதப்பட்டது.

பேரரசனுக்கு மிகுதியான அதிகாரங்கள் இருந்தபோதிலும், நடைமுறையில் அவைகள் குறைக்கப்பட்டிருந்தன. அவற்றில் பெரும் பகுதி வெவ்வேறு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. மேலும் பொதுமக்கள் கருத்து (Public opinion), வழக்கங்கள், போக்குவரவு, வசதியின்மை, அரசவையின் ஒழுங்கு முறைகள், கன்பூசியஸின் கோட்பாடுகளைத் தழுவிய ஒழுக்க விதிகள் முதலியவை பேரரசனின் அதிகாரங்களைக் குறைத்தன. பேராற்றலும் திறமையும் மிக்க அரசன் ஒருவனால் மட்டும் அரசாட்சியை முழுவதும் தனது அதிகாரத்துக்குள் கொண்டுவர முடிந்தது.

அரசாட்சியை மேற்பார்வையிடத் தலைநகரில் பேரரசனுக்குக் கீழ்ப் பல நிறுவனங்கள் இருந்தன. அவற்றுள் மிக முக்கியமானது சுன்-சி-சு (Chun-Chi-Chu) என்ற மேலான அவை (Grand Council) அது பொதுவாக நாள்தோறும் கூடும். அதில் மிக முக்கியமான பொருள்கள் வாதிக்கப்படும். அது தவிர நாய்-கோ (Nai-Ko). என்ற உள் அவை ஒன்றிருந்தது.

அரசாங்க அலுவல்கள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுப் பல குழுக்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவைகளில் ஆட்சித் துறை அலுவல் குழு (Board of Civil Office), வரி வருமானக்குழு (Board of Revenue), மதச் சடங்குகளின் குழு, போர்க் குழு, தண்டனைக் குழு, வேலைகளின் குழு என்ற ஆறு குழுக்கள் முக்கியமானவை. ஒவ்வொரு குழுவுக்கும் இரு தலைவர்களும், நான்கு துணைத்தலைவர்களும், பல அலுவலர்களும், செயலகமும் இருந்தன. ஒவ்வொன்றும் பல துறைகளாகப் (Departments) பிரிக்கப் பட்டிருந்தன.

ஆறு குழுக்கள் தவிர மூன்று முக்கிய நிறுவனங்களும் இருந்தன. முதலாவது தணிக்கை நிறுவனம் (Censorate). பொதுவாக இதன் அலுவல் அரசாங்கத்தில் குற்றங்காணல். அலுவலர்களை மேற்பார்வையிட்டு அவர்களின் குறைகளைப் பேரரசனுக்கு அறிவித்தல், முக்கியமான அரசாங்கப் பத்திரங்களைச் சரிபார்த்தல், அலுவலர் தேர்வைக் கவனித்தல், அரசாங்கக் கணக்கை மேற்பார்வையிடல், அரசாங்கச் சொத்துக்களையும் கட்டிடங்களையும் கண்காணித்தல், சடங்குகளை ஒழுங்கு முறைப்படி நடத்துமாறு பார்த்தல் முதலியவை இந்த நிறுவனத்தின் வேலைகள். இரண்டாவது அனுப்பும் நிறுவனம் (Office of Transmission). இதன் வேலை வழக்கமாக நடக்கும் அரசாங்கக் குறிப்புகளை எழுதி அனுப்புவது. மூன்றாவது சரிபார்க்கும் மேலான மன்றம் (Grand Court of Revision). இது குற்றவியல் சட்டத்துறையைப் பொதுவாகக் கண்காணிக்கும். தண்டனைக் குழு, தணிக்கை நிறுவனம், சரிபார்க்கும் மேலான மன்றம் இம் மூன்றும் ஒன்றாகக் கூடி மரண தண்டனை சம்பந்தமான மேல்வழக்குகளை விசாரிக்கும்.

சீனப் பேரரசில் அயல்நாட்டுச் செய்திகளைக் கவனிக்க ஒரு குழுவோ, அல்லது அவையோ ஏற்படுத்தப்படவில்லை. ஏனெனில் சீனர்கள் கருத்துப்படி மனுக்குலம் முழுவதும் ஓர் அரசியல் தொகுதி; சீனப் பேரரசரே அதன் தலைவராவர்.

நாடு பல மாநிலங்களாகவும், மாநிலங்கள் பல உட்பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. மாநில அதிகாரி கவர்னர்-ஜெனரல். அவருக்குக் கீழ் கவர்னர், பொருளாளர், நீதிபதி

ஆகியோர் பணியாற்றினர்கள். மாநில உட்பிரிவுகளிலும் பல அலுவலர்கள் இருந்தனர்.

சீன அரசாங்கத்தில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது வட்டார ஆட்சி. கிராமம், கூட்டுக் குடும்பம் போன்றவை தன்னாட்சி பெற்றிருந்தன. ஒழுங்காக ஆட்சி நடைபெறுவிட்டால் அல்லது குற்றங்கள் காணப்பட்டால் மட்டும் அரசாங்க அலுவலர்கள் இவற்றில் தலையிடுவார்கள். பொதுப்பணி, வெளிநாட்டுப் படையெடுப்பு, உள்நாட்டுக் குழப்பம் முதலிய காரணங்களுக்காக மட்டும் நடு அரசாங்கம் மாநிலங்களையும், வட்டாரங்களையும் கட்டுப்படுத்தி வந்தது. ஒவ்வொரு கிராமத்திலும் முதியோர் அவையும், கிராமத் தலைவனும் இருந்தனர். முக்கியமான குடும்பங்களைச் சேர்ந்தவர்களும், கிராமத்தில் செல்வாக்கு மிகுந்தவர்களும் முதியோர் அவையின் உறுப்பினர்களாக இருந்தனர். கிராமத் தலைவன் மூலமாகவே கிராமத்திற்கும் அரசாங்க அலுவலர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டது. தெருக்களில் விளக்குகள் அமைத்தல், காவற்காரரை ஏற்படுத்துதல், அணைகள் கட்டுதல் அல்லது பழுதுபார்த்தல், சந்தைகளை மேற்பார்த்தல், கிணறுகள் தோண்டுதல், பொதுக்கிணறுகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல், வரி திரட்டுதல், கிராமப் பூசல்களைத் தீர்த்தல் முதலியவை முதியோர் அவை, கிராமத் தலைவன் ஆகியோரின் கடமைகள். கிராமத்திலிருந்ததுபோலவே நகரங்களிலும் இத்தகைய நிறுவனங்கள் இருந்தன.

ஈ. முற்காலப் பேரரசுகளின் வீழ்ச்சி

அரசாங்கத்தின் வரலாற்றில் முற்காலப் பேரரசுகள் சிறப்பிடம் பெறுவதில்லை. ஏனெனில் இவை எழுந்த அடிப்படையானது குறைகள் நிறைந்து காணப்படுகிறது. மேலும் இப்பேரரசுகள் தமது குறுகிய காலத்தில் பல இன்னல்களுக்கு உட்பட்டு ஒற்றுமைக்கும் சிதைவுக்குமிடையே சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்தன. நிலையான அரசியல் கொள்கைகள் எதையும் ஆதாரமாகக் கொண்டிராத இவை அரசாங்கத்தின் வளர்ச்சிக்கோ, அரசியல் அமைப்புக்கோ துணையளிக்கவில்லை. சிதைவின் வித்துக்கள் இவற்றின் அமைப்பினுள்ளேயே இருந்தன எனக் கூறலாம். இவற்றின் அழிவிலிருந்து மனிதனுடைய அரசியலுணர்வின் (Political consciousness) அடிப்படையில் நிறுவப்படாத எந்த அரசாங்க அமைப்பும் நிலைத்து நிற்காது என்ற உண்மை புலப்படுகிறது.

முற்காலப் பேரரசுகளின் நலிவுக்குச் சில காரணங்கள் இருந்தன. மிகப்பரந்த இப்பேரரசுகளை நடுவிடத்திலிருந்து ஆள்வது எளிதன்று. அதுவும் போக்குவரவு வசதிகள் இல்லாத அக்

காலத்தில் ஒரு பரந்த பேரரசை ஒருவன் நேராக ஆட்சி செய்வது மிகவும் கடினம். மாநிலத் தலைவர்களும், படைத் தலைவர்களும் பேரரசனின் ஆணைப்படியே நடந்து வந்தபோதிலும் அவர்களை எப்போதும் கட்டுப்படுத்தி வருவதும் கடினமே. ஆகவே நடைமுறையில் தம் விருப்பப்படி அதிகாரம் செலுத்திவந்த மாநிலத் தலைவர்கள் படைத் தலைவனின் துணைகொண்டு பேரரசனுக்கு எதிராக எழுந்து கிளர்ச்சி செய்தனர். மேலும் அரசவையிலிருந்த பிரபுக்களும் பெருமக்களும் கூட அரியணையைக் கவரும் வாய்ப்பை எதிர்நோக்கி இருந்தனர். அரசன் பலமற்றவனாகக் காணப்பட்டால் இக்கிளர்ச்சிகள் விரைவில் தோன்றும். பேரரசனின் செங்கோல் மரபுவிட்டு மரபு மாறியதைப் போலவே அதன் இருப்பிடமும் நகரத்திலிருந்து நகரம் மாறியது. இந்நிலைமை எகிப்து, மெசபொடேமியா போன்ற பேரரசுகளின் வரலாற்றில் காணலாம். ஆகவே முற்காலப் பேரரசுகளை நிலைபெற்ற அரசுகள் என அழைப்பதைவிடக் குறைவான தன்னாட்சி பெற்ற சிற்ற ரசுகளைக் கொண்ட ஓரு நெகிழ்ந்த கூட்டமைப்பு எனக் கூறலாம்.

சிறிது காலம் தழைத்தோங்கிப் பிறகு வீழ்ச்சியடைந்த பண்டையப் பேரரசுகள் எல்லாம் அரசியலில் நிலையான ஓர் இடத்தைப் பெறவில்லை. சுமேரியா, பாபிலோனியா, அஸிரியா போன்ற பேரரசுகள் நலிவுற்ற காலத்தில் அயலார் படையெடுப்பினால் சரிந்தன. எகிப்து உள்நாட்டுக் குழப்பங்களாலும், வெளிநாட்டுத் தாக்குதலாலும் வீழ்ந்தது. முக்கியமாக நோமார்க்குகள் அரசனை விட வலுப்பெற்றுத் தன்னாட்சி பெற்றதே எகிப்தின் அழிவிற்குக் காரணமாயிற்று. சீனப் பேரரசு ஏனைய பேரரசுகளைப் போலல்லாமல் தடையின்றி வளர்ந்து வந்தது என்றாலும் அதற்குக் காரணம் நிலையான அரசாங்கமோ அல்லது அரசியல் கொள்கைகளோ அல்ல. குடும்பத்தை அடிப்படையாகக்கொண்ட நிலையான சமூகத்தில் நிறுவப்பட்டிருந்ததே அதன் நிலையான வளர்ச்சிக்குக் காரணம். சீனப் பேரரசும் ஏனைய பழங்காலப் பேரரசுகளைப்போன்ற தெனக் கூறலாம். ஆகவே முற்காலப் பேரரசுகளின் வரலாற்றினால் அரசாங்கத்தின் வரலாற்றிற்கு யாதொரு பயனும் இல்லை. ஆனால் அவற்றின் அழிவை ஆயுங்கால் ஒரு பயன் கிடைக்கிறது. அஃதாவது பழங்காலப் பேரரசுகளிலே அரசன் நாட்டைத் தன் சொந்தச் சொத்தாகக் கருதினன். இறைமை (Sovereignty) ஒரு தனி மனிதனின் உடைமையாக எண்ணப்பட்டது. இந்த உடைமைக்குப் பலர் போட்டியிட்டனர். ஓரு நாட்டில் இறைமை அதிகாரத்தைச் செலுத்துவோரைக் கட்டுப்படுத்தக் கூடியது ஒன்றேயொன்று தான். அதுவே பொது மக்களின் விருப்பாற்றல் (Common Will). அது அரசியலுணர்வு பெற்ற மக்களினிடையே தான் காணப்படும். முற்காலப் பேரரசு

களில் வாழ்ந்த மக்களிடம் அத்தன்மையில்லை. ஆகவே வலிமையிலே நிறுவப்பட்ட அவ்வரசுகள் வலிமையை இழந்ததும் நலிவுற்றுத் தேய்ந்து போயின.

---

4. குலத்தின் ஆட்சியமைப்பு

விரைவாகப் பாய்ந்தோடும் மனித முன்னேற்றமெனும் ஆறுகளில் ஒருசில மட்டும் தற்கால நாகரிகம் என்ற கடலிலே வந்து கலக்கின்றன. ஏனையவை ஆங்காங்கே வறண்டு மறைந்துவிடுகின்றன. நாகரிக வளர்ச்சியின் வரலாற்றை விவிலியத்தில் கூறப்பட்ட விதை விதைப்பவன் உவமைக்கு இணையாகக் கூறலாம். சில விதைகள் பாறைகளில் விழுந்து முளைத்துச் சிறிது காலத்தில் காய்ந்து கருகிப்போயின. ஆனல் நல்ல நிலத்தில் விழுந்த விதைகளோ முளைத்துத் தழைத்துச் செழித்தோங்கின. அதைப் போல எகிப்து, பாபிலோனியா முதலிய நாடுகளின் நாகரிகங்கள் தொடக்கத்தில் வலுவுடன் வளர்ந்தபோதிலும் நாளடைவில் சிதைந்து போயின. ஆனல் பொதுவாக இந்திய-ஜெர்மானியக் குலங்களின், சிறப்பாகக் கிரேக்க, ரோமானிய நாடுகளின் நாகரிகங்கள் மெதுவாக வளர்ச்சியுற்ற போதிலும் தமது அழியாத அடிச்சுவடுகளைக் காலமெனும் நிலத்திலே பதித்துவிட்டன. இக் காரணத்திற்காகத்தான் அரசாங்கம் வளர்ந்த வரலாற்றைப் பயிலுங்கால் பழங்காலத்தில் தோன்றிய அரசியல் முறைகளில் கிரேக்க, ரோமானிய முறைகளை முக்கியமாக ஆராய்ந்து பார்க்கிறோம்.

இந்திய – ஐரோப்பியக் குலத்தின் நிறுவன அமைப்பு

வரலாற்றிலே முதன்முதலாகக் காணப்படும் ஆட்சி அமைப்புகளை நிறுவியவர்கள் ஜெர்மானியர்களும், கிரேக்கர்களும், ரோமானியர்களுமே எனக் கூறலாம். அவற்றின் வளர்ச்சியில் பெரும் வேற்றுமைகள் இருந்தபோதிலும், வியப்பிற்குரிய பல ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. இவைகளில் மூன்று முக்கியமான ஒற்றுமைகளை ஃப்ரீமென் (Freeman) விரிவாக எடுத்துக் காட்டுகிறார். இவைகள் டேஸிட்டஸ் (Tacitus) காட்டும் ஜெர்மனியிலும், ஹோமர் (Homer) தீட்டும் கிரீஸிலும், புராணங்கள் விளக்கும் ரோமையிலும் தெளிவாகத் தெரிகின்றன. ஆரிய இனத்தைச் சேர்ந்த எல்லா ஐரோப்பியக் குலங்களிலும் பழங்காலத்தில் இம் மூன்று இயல்புகளைக்கொண்ட ஒரேவிதமான அரசாங்க அமைப்பு இருந்துவந்ததெனப் புலப்படுகின்றது. முதலாவது, இவற்றை

ஓர் அரசன் அல்லது தலைவன் ஆட்சி செய்து வந்தான். அவன் போர்க்காலத்தில் படைத் தலைவனுகவும், அமைதியான காலத்தில் ஆள்பவனுகவும் விளங்கினன். இரண்டாவதாக, அவன் முழுவதும் தன் விருப்பப்படியே ஆட்சி செய்யாது, வயது, குடிப்பிறப்பு அல்லது தீரச்செயல்களில் சிறந்து விளங்கிய பெரியோர்களைக் கொண்ட ஓர் அவையின் அறிவுரை கேட்டு ஆண்டு வந்தான். மூன்றுவதாக அவன் வெகு முக்கியமான காரியங்களை எல்லா மக்களும் அடங்கிய பேரவையின் முன் விளக்கி அவர்களின் சம்மதத்தைப் பெற்ற பிறகே செயலாற்றி வந்தான்.

ஜெர்மானியக் குலங்கள்

ஜெர்மானியக் குலங்களின் அரசியல் நிறுவனங்களில் இந்தோ-ஜெர்மானியக் குலங்களில் காணப்படும் மூன்று இயல்புகளும் இருப்பதாக டேஸிட்டஸ் விளக்குகிறார். அங்கே படைக்கலம் தாங்கிய மக்களின் பேரவை குறிப்பிட்ட காலங்களில் கூடியது. வட்டாரத் தலைவர்களைக்கொண்ட பேரவையும் இருந்தது. அவர்கள் தம் வட்டாரங்களில் நீதி வழங்கி வந்தனர். வழக்கமாக அவர்களுக்குப் போரில் துணை செய்ய வீரர்கள் இருந்தார்கள். நாட்டின் மக்கள் பேரவையின் சம்மதத்தைப் பெறவேண்டிய காரியங்களை அத் தலைவர்களே தயார் செய்தனர். சில குலங்களில் மேலான தலைவன் அல்லது அரசன் ஆண்டு வந்தான். அவனது பதவி தந்தையிடமிருந்து மகனுக்கு மரபுரிமையாக வரும் பதவியன்று. ஆயினும் எப்போதும் அது உயர்குடி மகனுக்கே வழங்கப்பட்டது.

டேஸிட்டஸ் கொடுக்கும் மேற்சொல்லிய விவரங்களுக்கும், ஜூலியஸ் ஸீஸர், கால் (Gaul) நாட்டைப் பற்றி எழுதியுள்ள குறிப்புக்களில் ஜெர்மானியர்களைப் பற்றிக் கூறும் விவரங்களுக்கும் முரண்பாடுகள் பல இருக்கின்றன. ஜெர்மானிய நிறுவனங்களைப் பற்றி ஸீஸர் மிகச் சுருக்கமாக எழுதிய குறிப்புக்களில் குலத்தில் அரசன் இருந்ததாகக் கூறப்படவில்லை. அமைதியான காலங்களில் குலத்திற்கென்று பொதுவான நீதிபதிகள் கிடையாதென்று அவர் கூறுகிறார். வட்டாரங்களில் அவற்றின் தலைவர்கள் நீதி வழங்கி வந்தார்கள். போர்க் காலங்களில் மட்டும்தான் குலத்திற்கென்று பொதுவான நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். ஒன்றரை நூற்றாண்டுகளுக்குப் பிறகு டேஸிட்டஸ் வாழ்ந்த காலத்திலும்கூடக் குலம் முழுவதையும் நிலையாக ஆட்சி செய்து வந்த அரசன் சில பகுதிகளில்தான் காணப்படுகிறான். ஆகவே ஜெர்மானிய ஆட்சி அமைப்பில் ஏற்பட்ட முதல் மாறுதல் ஒரு நிலையான அரசனை ஏற்படுத்தும் மாற்றமே. இதைப் பிற்கால வரலாற்றின் வாயிலாக அறியலாம். எங்கெங்கு அரசன் இல்லையோ அங்கெல்லாம் பிறகு அப்பதவி ஏற்படுத்தப்பட்டது. ரோமானியப் பேரரசைக் கைப்

பற்றிய ஜெர்மானியக் குலங்களில் அரசன் நிலையான இடத்தைப் பெற்றிருத்தலைக் காண்கிறோம்.

ஆயினும் டேஸிட்டஸ் கூறும் விவரங்களின்படி படைக்கலந் தாங்கிய மக்களின் பேரவைக்கே மேலான அதிகாரம் இருந்ததெனத் தெரிகிறது. நாடு முழுமைக்கும் உரிய இப் பேரவையின் கூட்டங் களைப் பற்றி டாக்டர் ஸ்டப்ஸ் (Dr. Stubbs) விரிவாக எடுத்துரைக் கிறார். இக் கூட்டங்கள் குறிப்பிட்ட நாட்களில், பொதுவாக பௌர்ணமி அல்லது அமாவாசை நாட்களில் கூட்டப்பெறும். எல் லோரும் இட வேறுபாடின்றி ஒன்றுகப் படைக்கலந் தாங்கி அமர்ந் திருப்பார்கள். அப்போது மதக் குருக்கள் எல்லோரையும் அமைதி யாக இருக்கும்படி கட்டளையிடுவார்கள். பிறகு வாதிக்கப்படும் பொருளோடு தொடர்புடையவர் வாதத்தைத் தொடங்குவார். அரசன், வட்டாரத் தலைவன், அல்லது வயது, குடிப்பிறப்பு, தீரச் செயல், சொல்வன்மை இவற்றில் ஒன்றில் சிறந்த ஒருவர் வாதத் தைத் தொடங்கலாம். வாதத்தின்போது எதிர்ப்பைத் தெரிவிப்ப வர்கள் கூச்சலிட வேண்டும். உடன்பாட்டைத் தெரிவிப்பவர்கள் தம்முடைய ஈட்டிகளை அசைப்பார்கள். ஆர்வமிகு பாராட்டுக்களை ஈட்டியையும் கேடயத்தையும் மோதுவதால் தெரிவிப்பார்கள். இச் சபைதான் முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றும். ஆனால் அதன்முன் கொண்டுவரப்படும் தீர்மானங்களையும் மற்றும் பல நிகழ்ச்சித் திட்டங்களையும் வட்டாரத் தலைவர்களே தயாரிப்பார் கள். இச்சபை உயர்நீதிமன்றமாகவும் செயலாற்றியது. குற்றங் கூறல்களைக் கேட்டு நீதி வழங்கியது. கொலைத் தண்டனை கொடுக் கவும் இச் சபைக்கு உரிமையிருந்தது. டேஸிட்டஸ் காலத்தில் மாவட்டங்களிலும், கிராமங்களிலும் நீதி வழங்கவேண்டிய நடு வர்கள் இச் சபையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

கிரீஸ்

ஹோமர் தீட்டும் குல ஆட்சியமைப்பில் அரசனின் ஆளுகை யைக் காண்கிறோம். ஒவ்வொரு குலத்திற்கும் தனிப் பெருந் தலைவனொருவன் இருந்தான். பொதுவாகத் தலைவன் இறந்த பிறகு அவனுடைய பதவியை அவனது மக்களில் ஒருவனே பெற்றான். இதற்குச் சான்றாக ஹோமரின் காவியத்திலிருந்து ஓர் எடுத்துக்காட்டுக் கூறலாம். அதில் ஓடீஸியஸ் இறந்த பிறகு அவன் மகன் டெலமாகஸ் என்பவன் இத்தாக்காத் தீவின் மன்னனா வதற்கு உரிமை பெற்றவன் எனக் கூறப்படுகிறது. ஆனால் இவ் வுரிமை மரபாக வழங்கப்படாமலும் இருக்கலாம். ஹோமர் காட்டும் கிரேக்க குலத் தலைவன் ஜெர்மானியக் குலத் தலைவனைப் போல அமைதியான காலத்தில் குலத்தோரிடையே எழும் உரிமைப் பூசல்களைத் தீர்த்துவைத்து, அவர்களைப் பெருந் தீமைகளி

லிருந்து காத்து வந்தான். வெளிநாட்டு உறவுகளில் அவனே குலத்தின் பிரதிநிதியாக விளங்கினன். அவன்தான் வெளிநாட்டு அரச தூதுவர்களை வரவேற்றான். போர்க் காலங்களில் பொதுவாக அவனே படைத் தலைவனுகத் திகழ்ந்தான். ஜெர்மானியக் குலத்தில் இருந்தது போன்ற வட்டாரத் தலைவர்கள் அல்லது முதியோர்கள் அவனுடன் சேர்ந்து ஓர் அவையை அமைத்தனர்.

நாட்டின் முக்கியமான செய்திகளைப்பற்றி வாதம் செய்ய மக்களின் பேரவை கூட்டப்பட்டது. ஆனல் இப் பேரவையின் வேலைகளைப்பற்றி அறிஞர்கள் பலவிதமாகக் கருதுகிறார்கள். க்ரோட் (Grote) என்பார் மக்களின் பேரவையும், வட்டாரத் தலைவர்களைக் கொண்ட அவையும் மன்னனுக்கு அறிவுரை கூறி அவன் விருப்பத்தை மக்களுக்கு அறிக்கையிடும் வாயில்களாக இருந்தன என்றும், அவனது அதிகாரத்தைக் கட்டுப்படுத்த வில்லை என்றும் கூறுகிறார். ஆனல் ஃப்ரீமென் கருத்துப்படி மக்களின் பேரவை அரசனின் கருத்துக்களை அறிக்கையிடும் வெறுங் கருவியாக மட்டும் இருக்கவில்லை. மக்கள் தம் கருத்துக்களை வெளியிடும் அரங்கமாகவும் இருந்தது. ஆகவே கிரேக்க நாட்டுக் குலத்தின் அவை ஜெர்மானிய அவையைப் பலவிதத்தில் ஒத்திருந்தது. ஆனல் ஜெர்மனியில் இருந்ததைவிட கிரீஸில் அரசன் அதிக அதிகாரமுடையவனுக இருந்தான். மக்களின் அவை குறைந்த அதிகாரமுடையதாக இருந்தது. அரசனுக்கும் அவைக்கும் இருந்த அதிகாரங்கள் கிரேக்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் பலவிதமாக இருந்தன. பழங்காலச் சமூக அமைப்புடைய மலைப் பகுதிகளில் அவையின் அதிகாரம் மற்ற நாகரிகமடைந்த பகுதிகளில் இருந்ததைவிட அதிகமாக இருந்தது.

ஜெர்மானியக் குலத்திலிருந்த மக்களின் அவைக்கும் கிரேக்க அவைக்கும் ஒற்றுமை இருந்ததாக ஹோமரின் காலத்திற்குப் பிற்பட்ட வரலாற்றிலிருந்து காண்கிறோம். மாஸிடோனிய மன்னர்களின் அதிகாரம் அரசியல் அமைப்பினல் வரையறுக்கப் பட்டிருந்ததையும், கொலைத் தண்டனை கொடுப்பதற்குப் போர்க் காலத்தில் படையின் சம்மதமும், அமைதியான காலத்தில் அவையின் சம்மதமும் தேவை என்பதையும் அறிகிறோம். லக்கர்கஸ் தீட்டிய ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பின்படி அரசன் மாதத்திற்கு ஒரு முறையாவது அமாவாசை நாளன்று மக்களை அழைத்து அவையைக் கூட்டவேண்டும். சமாதானம், போர், உடன்படிக்கை முதலான அரசின் முக்கிய காரியங்களைச் சபையின்முன் கொண்டு வரவேண்டும் என்றும் தெரிகிறது. சாதாரணக் குடிமக்கள் வாதத்தில் கலந்து கொள்ளாவிடினும் அதன்முன் கொண்டு வரப்பட்ட திட்டங்களை ஏற்கவோ மறுக்கவோ அவைக்கு உரிமையிருந்தது.

நீதித்துறை அலுவல்கள்

ஜெர்மானியக் குலங்களில் பொதுவாக உரிமைகள் சம்பந்தமான சிக்கல்கள் தனிப்பட்டவர்களின் சண்டை மூலமாகவும், சமரசம் அல்லது நடுவர் தீர்ப்பு (Arbitration) வாயிலாகவும் தீர்த்துவைக்கப்பட்டன. இவ்வாறு தீர்க்கப்படாத வழக்குகளை வட்டாரத்திலுள்ள அல்லது குலம் முழுவதற்கும் பொதுவான மக்களின் அவை விசாரித்து நீதி வழங்கியது. இவ்விசாரணையின் போது அரசன் அல்லது வட்டாரத் தலைவன் தலைமை தாங்கி அவையின் முடிவை நிறைவேற்றி வைப்பான். ஹோமர் காலத்துக் கிரீஸில் வழக்கின் முடிவுகள் 'அகோரா' (Agora) என்ற மக்கள் அவையிலே தீர்மானிக்கப்பட்ட போதிலும், சாதாரண வழக்குகளை விசாரிப்பதில் மக்கள் பங்கெடுத்ததாகத் தெரியவில்லை. ஆனால் கொலை வழக்குகளில் அவையில் கூடியிருந்த மக்களே இறுதித் தீர்ப்பை வழங்கினர் எனத் திட்டமாகக் கூறலாம். பொதுவாகப் படைக்கலம் தாங்கிய மக்களின் இந்த அவை முற்காலத்தில் முக்கியமான குற்றவியல் (Criminal) வழக்குகளில் தீர்ப்பளிக்கும் நீதி நிறுவனமாகவும் விளங்கியது.

ரோமானியக் குலங்கள்

ரோமானியக் குலங்களிலும் ஃப்ரீமென் விவரிக்கும் முற்கால ஆட்சியமைப்பில் இருப்பதுபோல அரசன், அவை (Council), பேரவை (Assembly) என்ற மூன்று முக்கிய இயல்புகள் காணப்படுகின்றன. முதலாவதாகக் குலத்தை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். ஆனால் ரோமானிய அரசனுக்கும் கிரேக்க அரசனுக்கும் பெரிய வேறுபாடுகள் இருந்தன. ரோமானிய மன்னன் இறைவனிடமிருந்து ஆட்சியுரிமையைப் பெற்றதாகக் கூறப்படவில்லை. அவனுக்கு முன் பதவியிலிருந்தவர் அல்லது 'செனட்' என்ற மூப்பரவையால் ஏற்படுத்தப்பட்ட இடைக்கால மன்னன் (Inter Rex) அவனை நியமித்தான். ஆனால் அவனுடைய அதிகாரம் கிரேக்க மன்னனின் அதிகாரத்தைவிட மிக அதிகமாக இருந்தது. அவ்வதிகாரத்தில் ரோமானியக் குணவியல்பின் கடுமையையும், ஒழுங்கையும் காணலாம். அது ரோமானியத் தந்தையின் அளவிறந்த அதிகாரத்தையும் எதிரொலிக்கிறது.

இரண்டாவதாக, ரோமானியக் குலத்தில் "தந்தையரின்" அவை ஒன்றிருந்தது. இது அரசனுக்கு அறிவுரை கூற உரிமை பெற்றிருந்ததுடன் அரசன் இறந்தபிறகு அரச அதிகாரத்தின் களஞ்சியமாகவும் திகழ்ந்தது.

மூன்றாவதாகக் குலத்தில் பேரவை ஒன்றிருந்தது. அது ஜெர்மானிய, கிரேக்க மக்கள் அவைகளை மூன்று விதங்களில்

ஓத்திருந்தது. குறிப்பிட்ட நாட்களில் அது கூடியது. நாட்டின் நலனுக்கடுத்த முக்கியமான காரியங்களைச் செய்ய அதன் சம்மதம் தேவையாக இருந்தது. உதாரணமாகப் போர் தொடங்குதல், பொது நீதியை (Common Law) மாற்றுதல் முதலியவற்றைப் பேரவையின் சம்மதமின்றிச் செய்யமுடியாது. மேலும் 'ஆம்' அல்லது 'இல்லை' என்று சொல்வதற்கு மட்டும் பேரவைக்கு உரிமை யிருந்ததே தவிர அதன் முன் கொண்டுவரப்பட்ட திட்டங்களைப்பற்றி வாதிக்கத் தனிக் குடிமக்களுக்கு உரிமை கிடையாது. பொதுவாக ரோமானியக் குலத்தில் கொலைத் தண்டனை கொடுக்கப்பட்டவர்கள் பேரவைக்கு மனுச் செய்யும் வழக்கம் இருந்தது.

இந்திய - ஜெர்மானியக் குலங்களில் காணப்படும் மேற் சொல்லிய குணவியல்புகள் அவைகளுக்கு மட்டும் உரிய தனிப் பண்புகள் என எண்ணக்கூடாது. ஏனெனில் அதைப்போன்ற ஆட்சி நிறுவனம் மலேயோ-போலினீஸியர், வடஅமெரிக்காவின் செவ்விந்தியர், இந்திய மலைப்பகுதிகளில் வாழ்ந்த திராவிடக் குலங்கள், ஆஸ்திரேலியாவின் பழங்குடிகள் ஆகியவர்களிடையே காணப்படுகிறதென ஸ்பென்ஸர் எடுத்துக் காட்டுகிறார். அவர் கூறுகிறார்: "அரசாங்க நிறுவன அமைப்புகள் அநேகமாக வேறு விதமாகத் தொடங்கமுடியாது. ஏனெனில் கூடிய படைக்கூட்டங்களில் வெளிப்பட்ட மொத்தமான விருப்பத்தைத் தவிரக் கட்டுப் படுத்தும் ஆற்றல் வேறொன்றும் முற்காலத்தில் இருந்ததில்லை."

---

5. கிரேக்க, ரோமானிய நகர அரசுகள்

பண்டைய காலத்தில் ஈஜியன் கடற்பகுதிகளில் தோன்றிய நாகரிகங்கள் கிரீட், ட்ராய், மைஸீனி, டிரைன்ஸ் போன்ற இடங்களில் செழிப்புற்று வளர்ந்தன. ஆனால் அவைகள் எல்லாம் வட பகுதியிலிருந்து புடைத்தெழுந்து வந்த கூட்டங்களின் தாக்குதல்களால் சரிந்து சிதைந்து போயின. படையெடுத்து வந்த கூட்டத்தவரிடம் பல ஒற்றுமைகள் காணப்பட்டன. பேச்சு வகைகள் வேறுபட்டபோதிலும் அவர்கள் ஒரு பொதுமொழி பேசினார்கள். அவர்களிடையே பொதுவான வழக்கங்கள் நிலவின. அவர்கள் வணங்கிவந்த கடவுளர் ஒரே தெய்வத் தொகுதியைச் சேர்ந்தவராக இருந்தனர். பிற்காலத்தில் அவர்கள் தாங்கள் புராணத்தில் கூறப்பட்ட 'ஹெல்லன்' என்ற ஒரு முன்னோரின் வழிவந்தவர்களெனக் கூறிக்கொண்டார்கள். இவ்வளவு ஒற்றுமைகள் இருந்தபோதிலும் அவர்களிடையே பொதுவான

அரசியல் உணர்ச்சியோ (political consciousness) அல்லது ஒரு நாட்டினத்தைச் (Nation) சேர்ந்த உணர்வோ இருந்ததில்லை.

இவர்களும் ரோமையில் குடியேறியவர்களும் வரலாற்றில் குறிப்பிடத்தக்கவர்கள். ஏனெனில் அவர்களுக்கே உரியதொரு சிறப்பான ஆட்சியமைப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள். கிரேக்கர்கள் தாம் அமைத்த தனி இயல்புகளுள்ள அரசைப் 'போலிஸ்' (Polis) என்றும், ரோமையர்கள் தம்முடையதை 'அர்ப்ஸ்' (Urbs) என்றும் அழைத்தனர். முதன்முதலில் 'போலிஸ்' என்ற சொல் அநேகமாக மலைமேலுள்ள அரண் சூழ்ந்த இடத்தைக் குறித்தது. அதைச் சுற்றி வாழ்ந்த மக்கள் பகைவரின் படையெடுப்புக் காலங்களில் அவ்விடத்திற்குப் பாதுகாப்புக் காகச் சென்றனர். ஆனால் நாகரிக வளர்ச்சியடைந்த பிற்காலத்தில் இச்சொல் ஆழமான கருத்தைத் தெரிவிக்கும் வேறு சொல்லாக மாறியது. மனிதனின் முழு வாழ்க்கையையும், எல்லாக் கடமைகளையும் இது தெரிவித்தது. பொது நலனுக்காக மக்கள் அனைவரும் ஒன்று சேர்வதையும், அதனால் உரிமை பெற்ற தனி மனிதன் ஒவ்வொருவனும் தனது இயற்கை அறிவையும் திறமைகளையும் சிறந்த முறையில் பயன்படுத்துவதையும் இச் சொல் குறிப்பிட்டது. இப்'போலிஸின்' மூலமாகவே கிரேக்கர்களும், ரோமானியர்களும் ஐரோப்பிய நாகரிக வளர்ச்சிக்கு வழி வகுத்தனர்.

தற்காலத்தில் வழங்கிவரும் அரசு (State) என்ற சொல்லுக்கும் முற்காலத்தில் கிரேக்க, இலத்தீன் இனத்தவர் பயன்படுத்திய 'போலிஸ்' என்ற சொல்லுக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. 'அரசு' என்று சொல்லும்போது நடு அரசாங்கமும், தலைநகரமும் உள்ள ஒரு நாட்டை அல்லது நிலப்பகுதியைக் குறிப்பிடுகிறோம். இந்தியா, அமெரிக்கா, ஸ்விட்ஸர்லாந்து போன்று தனி அரசாங்கமும் தனித் தலைநகருமுள்ள பல நிலப்பகுதிகள் ஒன்று சேர்ந்து கூட்டாட்சி அமைத்துள்ள இணைவையும் 'அரசு' என்கிறோம். இத்தகைய அரசில் தலைநகரானது நடு அரசாங்கத்தை நடத்துவதற்கேற்ற வசதியான இடத்தில் அமைந்துள்ளபோதிலும் அது தன்னிலே நாட்டின் முக்கிய பகுதியாகத் திகழ்வதில்லை. ஆனால் கிரேக்க, ரோமானிய அரசுகள் (போலிஸ்) தற்கால அரசுகளைப் போல் இருந்ததில்லை. ஏதன்ஸ், ஸ்பார்ட்டா, ஸைரக்யூஸ், ரோம் ஆகிய அரசுகள் நகரங்களாக விளங்கின. சுற்றிலும் அவற்றை விட அதிகமாக அல்லது குறைந்த நிலப்பகுதிகள் இருந்தன. அவற்றிலிருந்தே நகரங்கள் தம் வாழ்வுக்கு வேண்டிய வருவாயைப் பெற்றன. இந்நிலப் பகுதி அரசுக்குத் தேவையாக இருந்தபோதிலும் அதன் முக்கியப் பகுதியாகக் கருதப்படவில்லை.

நகரம்தான் நாட்டின் நடுவிடமாகத் திகழ்ந்ததே யொழிய நிலப் பகுதி ஒருபுற ஓட்டாகவே இருந்தது. ஏதென்ஸ் நகரிலும், அதைச் சூழ்ந்த அட்டிக்கா நிலப் பகுதியிலும் வாழ்ந்த உரிமைபெற்ற மக்களே ஏதன்ஸ் அரசின் குடிகளாக இருந்தனர். அட்டிக்காவில் உள்ளவர்கள் அங்கு வாழ்ந்ததால் அன்று, ஏதென்ஸ் அரசிலிருந்ததால்தான் அரசியல் வாழ்க்கை பெற்றனர். அதைப்போல்தான் ரோமானிய அரசும் இருந்தது. அதன் ஆட்சிப் பரப்பு இத்தாலியத் தீபகற்பம் முழுவதும் பரவியிருந்த காலத்திலும் கூட ரோமை நகர்தான் அதன் வாழ்வின் நடுவிடமாகக் கருதப்பட்டது. கிரேக்க, ரோமானிய அரசு நகர அரசாக விளங்கியது. நகரம் தான் மக்களுடைய அரசியல், அறிவு, மதம் முதலான வாழ்க்கையின் எல்லாத் துறைகளுக்கும், ஆற்றல்களுக்கும் நடுவிடமாக இலங்கியது. இதுதான் இரண்டு நாடுகளின் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்தது. இதுவே நாகரிக வளர்ச்சிக்கு அந்நாடுகள் உதவ ஏதுவாக இருந்தது.

நகர வாழ்க்கையே வேறெதையும்விட மக்களை ஒன்று சேர்க்கும் வலுவான இணைப்பாக இருந்தது. உறவுக்குப் பதிலாகக் குடிமை முக்கிய இடம் பெற்றது. பழங்காலத்தில் அரசன் அல்லது தலைவனுக்கு மக்கள் காட்டிய பணிவு அவர்களை ஒன்றுகப் பிணைத்துவைத்தது. ஆனால் நகரத்தில் அது மறைந்து போனது. அங்குத் தலைவர்கள் ஹோமர் காலத்திலிருந்த மன்னர்களைப் போலல்லாமல் தமது கடமையைச் செய்யும் பொறுப்பாளர்களாகவே கருதப்பட்டனர். கீழ்நாட்டுப் பேரரசுகளில் மதத்தின் பேரால் பல குருட்டு நம்பிக்கைகள் எழுந்து மக்களை அமுக்கி வந்தன. ஆனால் நகரத்தில் மதம் அவ்வளவு முக்கிய இடம் பெறவில்லை. மதக்குருக்களும் மக்களைத் தம் அதிகாரத்தின் கீழ் அடக்கிவைக்கவில்லை. மறுக்கமுடியாத கோட்பாடுகள், ஒழுக்க விதிகள் இவற்றிற்குப் பதிலாக அழகுணர்ச்சி, இயற்கை முதலியவை மதத்தின் அடிப்படைகளாக அமைந்தன. இத்தகைய கருத்துக்களையுடைய மக்கள் பெரும் சமூக,அரசியல் மாற்றங்களைச் செய்ததில் வியப்பொன்றுமில்லை. அவர்கள் வாழ்ந்த ஈஜியன் கடற்கரைப் பகுதிகளும் அவற்றிற்குத் தக்க சூழ்நிலையாக இருந்தன.

சூழ்நிலையின் காரணமாகக் கிரேக்க நாட்டு மக்கள் தமக்கே இயல்பான தனி அரசியல் முறையைப் படைத்தார்கள். அவர்களுடைய நாட்டில் சிறு சிறு சமவெளிகளும் மலையடைப்புகளும் உள்ளன. கடற்கரைகள் உடைபட்டிருப்பதோடு, கடல்களிலே சிதறிக்கிடக்கும் தீவுக் கூட்டங்கள் கீழ்நாட்டு நாகரிகங்களோடு தொடர்பை ஏற்படுத்தின. பயிர்த் தொழிலுக்கு அதிகமாக வசதி

கள் இல்லாததால் அங்குக் குடியேறிய மக்கள் வாணிகத்திலே மிகுதியாக ஈடுபட்டனர். அங்குள்ள தட்பவெப்பநிலை மக்களைத் திறந்த வெளிகளிலே வாழத் தூண்டியது. இக் காரணங்களினால் தான் கிரீஸில் தன்னாட்சி பெற்ற நகர அரசுகள் தோன்றி வளர்ந்தன.

நகரத்தில் வாழ்ந்த மக்கள் ஒருவரோடொருவர் நெருங்கிய தொடர்பு கொண்டனர். அவர்கள் நாட்டுப்புற மக்களைப்போல இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தவில்லை. நுண்ணறிவோடு போட்டி மனப்பான்மையும் அவர்களிடம் காணப்பட்டது. நகர மக்கள் பல்வேறு தொழில், கலைகளிலே ஈடுபட்டிருந்த போதிலும் ஒன்றுகூடும் தன்மையும் அவர்களிடம் இருந்தது. ஆகவே வாணிக நிலையங்கள், சங்கங்கள், உணவு விடுதிகள், நாடக சாலைகள், கோவில்கள் ஆகிய இடங்களெல்லாம் மக்கள் கூடும் இடங்களாகத் திகழ்ந்தன. முன்னர் வீடுகளிலே நிகழ்ந்த கூட்டங்கள் இப்போது நகரப் பொதுவிடங்களிலே நிகழ்ந்தன. குடும்பத்திற்குப் பதிலாக நகரமே இப்போது சமூக உறவைப் பலப்படுத்தியது. மக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்ற எண்ணம் மாறி நகரத்தைச் சேர்ந்தவர்களென்ற கருத்து நிலவியது. சுருங்கச் சொல்ல வேண்டுமானால் மக்கள் நகரக் குடிகளாக மாறினர். நகரத்தோடு ஒன்றுகச் சேர்வதே நாகரிகம் எனவும் எண்ணினர்கள்.

நகர வாழ்க்கைக்கொப்ப அதிகார முறையும் மாற்றம் அடைந்தது. சட்டத்தின் தேவையை மக்கள் உணர்ந்தனர். நகரத்திலே ஒருவரொருவரைச் சார்ந்து வாழ்ந்ததால் சட்டத்திற்கும் பொது நலத்திற்கும் நெருங்கிய தொடர்பு வேண்டியிருந்தது. ஆகவே நகரத்தில் நிறுவன அமைப்புக்குட்பட்ட மக்களாட்சி ஏற்பட்டது. அது அரசாங்கத்தின் வேலைகளை அதிகரித்தபோதிலும், அரசியல் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தியது. ஆகவே அது மக்களின் உரிமை யுணர்ச்சியை வளர்த்தது. கிரேக்க நாட்டில்தான் வரலாற்றிலே முதல் தடவையாக இவ்வுணர்ச்சி பழங்கால அமைப்பை உடைத்தெறிந்து அழியாத சான்றாக ஓர் அரிய அமைப்பை ஏற்படுத்தியது.

அ. கிரீஸில் அரசாங்க வளர்ச்சியும், சுழற்சி மாற்றக் கொள்கையும்

முற்கால ஆட்சியமைப்பில் அரசன், அவனுக்குக் கீழுள்ள சிறு தலைவர்கள், மக்கள் பேரவை என்ற முப்பிரிவுகள் இருந்ததைப் பார்த்தோம். அதைப்போல கிரேக்க நாட்டில் கி. மு. 5 ஆம், 4ஆம் நூற்றாண்டுகளில் குடியரசு (Monarchy), சிறுகுழுவாட்சி (Oligarchy), அல்லது உயர்குடியாட்சி (Aristocracy) மக்களாட்சி

(democracy) என்ற மூன்று வகை அரசாங்கங்கள் வெவ்வேறு காலங்களில் உயர்ந்தோங்கின. அவை முறையே ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றியதெனக் கூறலாம். முடியரசு கொடுங்கோலாட்சியாக மாறவே, அது வீழ்த்தப்பட்டு அதற்குப் பதிலாகச் சிறு தலைவர்கள் அல்லது பிரபுக்களுடைய ஆட்சி ஏற்பட்டது. இந்த உயர்குடியாட்சி நாளடைவில் கொடுங்கோன்மையாக மாறி அதற்குப் பதில் சிறுகுழுவாட்சி நிறுவப்பட்டது. அதுவும் கொடுமையான ஆட்சியாக மாற மக்களின் எதிர்ப்புத் தோன்றி அதை வீழ்த்தியது. இவ்வாறாக மக்களாட்சி ஏற்பட வழி தோன்றலாயிற்று.

கிரேக்க முடியரசு

கிரேக்க அரசு முதன்முதலில் மன்னனுடைய ஆட்சியின்கீழ் இருந்தது. அரசனைக் கிரேக்க மொழியில் 'பஸிலியஸ்' (Basileus) என அழைத்தார்கள். கிரேக்க முடியரசு ஒரு காலத்தில் தந்தைவழி முறையாக வந்ததென அரிஸ்டாட்டில் கருதுகிறார். ஆனால் இக் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று. அவரே வேறோர் இடத்தில் இதற்கு விளக்கம் தருகிறார். முதல் மன்னர்கள் கலை அல்லது போரில் தாம் பெற்ற திறமையினால் மக்களுக்கு நன்மை செய்ததால் மன்னராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் கருதுகிறார். புதிய நிலப்பகுதிகளை வென்ற காரணத்தினாலும், ஓரிடத்தில் மக்கள் தங்கிக் கட்டுப்பாட்டிற்கு அடங்கி வாழத் தொடங்கியதாலும் முடியரசு தோன்றியிருக்க வேண்டும் என்று அவரே ஏற்றுக் கொள்கிறார். வெற்றியின் காரணமாக முடியரசு தோன்றியதால் அது தந்தைவழி மரபாக வந்திருக்க முடியாது. ஏனெனில் அம்முறையில் வந்த அரசர்கள் எல்லோரும் வீரர்களாகத் திகழ்ந்திருக்க மாட்டார்கள். ஆகவே போர்க்காலங்களில் மக்கள் தங்களைக் காத்துப் பகைவரின் நிலங்களைப் பறிக்கவல்ல ஆற்றலுடைய ஒருவனைத் தேர்ந்தெடுத்திருப்பார்கள். 'பஸிலியஸ்' என்ற பெயரே சொல்லிலக்கணப்படி படைத்துறை அதிகாரத்தைக் குறிக்கிறதெனக் கூறப்படுகிறது. கிரேக்க வரலாற்றிலே காணப்படும் அரசர்களின் பட்டங்களும் அத்தகைய அதிகாரத்தையே குறிக்கின்றன. எல்லாச் சான்றுகளும் அரசன் போரின் தலைவனாகவே தேர்ந்தெடுக்கப்பட்டான் என்றும், மக்களைக் காப்பது அவனது முக்கிய வேலை எனவும் காட்டுகின்றன. பிறப்புரிமையினால் மட்டும் ஒருவன் அரசனானான் என்பதற்குச் சான்றுகள் இல்லை. சிலவேளை ஜெர்மானிய அரசுகளில் இருந்ததுபோலப் போர்த்திறமையும், பிறப்புரிமையும் தகுதிகளாகக் கருதப்பட்டன. அல்லது அதிக நாள் நிலைபெற்றிருந்த காரணமாகப் படைத்துறை அதிகாரம் ஓரு கூட்டுக்

குடும்பத்துக்குள்ளே நிலவி வந்திருக்கலாம். எப்படி இருந்த போதிலும் இத்தலைமைப் பதவியே காப்பியச் செய்யுளில் கூறப் பட்டுள்ள முடியரசாக முதிர்ச்சியுற்றது. இதைத் தான் அரிஸ் டாட்டில் மரபாக வந்ததென்றும், சட்டபூர்வமானதென்றும் கூறு கிறார். காப்பியச் செய்யுளில் அரச இனம்தான் போற்றப்படு கிறது. அந்த இனத்தில் உள்ளவர்கள்தாம் செங்கோலோச்ச முடியும்.

ஹோமர் காலத்தில் கிரேக்க மன்னன் இறைவழி உரிமை (Divine right) கொண்டாடினான். அவனது உரிமை எவராலும் எதிர்க்க முடியாதபடி அவ்வளவு உறுதியாக நிலைநாட்டப்பட்டிருந் தது. எடுத்துக்காட்டாக அகமெம்னன் (Agamemnon), மெனலாஸ் (Menelaus), ஆகியோர் கிரேக்கப் பெருங் கடவுளாகிய ஸீயஸ் (Zeus) என்பவனிடமிருந்து அதிகாரம் பெற்றதாக நம்பப்பட்டது. சில பகுதிகளில் அரசன் இறைவனிடமிருந்து பெற்ற அதி காரத்தை நாளடைவில் இழந்து விடுவதாகவும், அதைத் திரும்ப வும் பெறவேண்டுமென்றும் கருதினார்கள். கிரீட் தீவின் மன்னன் மினஸ் (Minos) தனது அதிகாரத்தை இவ்வாறே புதுப்பித்துக் கொள்வது வழக்கம்.

பொதுவாக அரசன் தன் வாழ்நாள் முழுவதும் அதிகாரம் செலுத்தி வந்தான். அதன்பிறகு அவன் மூத்த மகன் பட்டத் திற்கு வந்தான். மகனில்லையென்றால் மகளின் மூலமாக அவனது வழி மரபு நீடிக்கப்பட்டது. எப்போதும் அரசனே நகரத்தின் பிரதிநிதியாக விளங்கினான். இவ்வுரிமை அவன் ஸீயஸிட மிருந்து பெற்றதாக எண்ணப்பட்டது. உண்மையில் அரசனே நகரமெனத் திகழ்ந்தான். அவனுக்கு இறைமையும், அதிகார மும், செயலுரிமையும், பேச்சுரிமையும் இருந்தன.

முதன்முதலாக அரசன் மதத் தலைவனாக, தலைமைக் குருவாக விளங்கினான். தன் கைகளாலே பலிகளை நிறைவேற்றினான். வழிபாடுகளை அவனே நிகழ்த்தி மத விழாக்களில் தலைமை தாங்கி னான். அவனது அரண்மனைதான் தூதுவர்கள், முதியோர் முதலிய பெரியோர்கள் கூடும் பொதுமன்றமாக (Pretaneum) இலங்கியது. சமூகத்திலுள்ள முக்கியமான பெரியோர்கள் கூடி அரசியல் செய்திகளைப் பேசுமுன் அல்லது புகழ்பெற்ற விருந் தினரை உபசரிக்குமுன் நிகழ்த்தும் வழிபாடுகள் எல்லாம் அரண் மனையிலே நடந்தன. அரசன்தான் கடவுளர்களுக்கும் மனிதனுக் கும் இடையே நடுவராக நின்று அவனுக்குத் தேவையான நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டியவன். மனிதரிடையே கடவுளின் பிரதிநிதியும் மன்னனே. துன்பம் களைந்து, நீதியின் மூலமாக அமைதியை நிலைநாட்ட உதவும் உண்மைகளை அறிந்த

வனும் அவனே. இவ்வாருக அரசன் மக்களின் இன்பத்திற்கும், துன்பத்திற்கும் காரணமாக இருந்தான். ஆடிஸ்ஸி (Odyssey) என்ற கிரேக்க காப்பியம் இக்கருத்தைக் கீழ்க்கண்டவாறு அழகு படச் சித்தரிக்கிறது: "இறைவனுக்குப் பணிந்த களங்கமில்லாத மன்னன் நீதியுடன் ஆளுங்கால், நிலத்தில் பயிர்கள் செழித்து வளர்கின்றன. மரங்கள் கனிகளை மிகுதியாகத் தருகின்றன. பெண் ஆடுகள் அடிக்கடி குட்டிகளை ஈனுகின்றன; கடலிலே மீனினங்கள் பெருகுகின்றன."

அமைதியான காலத்தில் இருந்ததைவிடப் போர்க் காலத்தில் அரசன் எல்லா அதிகாரங்களும் பெற்றுத் திகழ்ந்தான். போர்க் களத்திற்குப் படைகளை நடத்திச் செல்லும் ஆற்றலை முதுமைக் காலத்தில் அவன் இழந்தபோதிலும், அந்த அதிகாரத்தை அவனுக்குப் பிறகு பதவியேற்கும் உரிமையுள்ளவனுக்கு வழங்கினான். அவனுக்கு அடியிலிருந்த சிறு தலைவர்களிடம் போர்முயற்சிகள் பற்றிக் கலந்து ஆய்ந்தபோதிலும் இறுதி முடிவை அவனே செய்தான். படையெழுச்சியின் திட்டங்கள், படைப்பிரிவுகள் போர் முகத்தே நிற்கும் இடங்கள், போர்த் தலைவர்களைத் தெரிந்தெடுத்தல் ஆகிய எல்லாம் அவனாலே தீர்மானிக்கப்பட்டன. எல்லோர் மேலும் எல்லாவித அதிகாரங்களும் அவனுக்கிருந்தன. அவனைத் தவிர வேறு எவரும் பகைவருடன் ஒப்பந்தம் செய்ய முடியாது.

நகரத்தின் நலன்களைக் காக்கும் பெரும் பொறுப்புடையவனாக மன்னன் இருந்ததால் அவனுக்கென்று தனி உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. கடவுளுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததைப்போல அரசனுக்கும் பொது நிலங்களிலிருந்து தனியாக நிலம் பிரித்து வைக்கப்பட்டிருந்தது. பயிர் நிலத்தில் பாதியும், திராட்சைத் தோட்டத்தில் பாதியும் மன்னனுக்கு உரியனவாக இருந்தன. அவனுக்கு நன்கொடையாகவும், வரியாகவும் வீட்டில் வளரும் விலங்குகள் கொடுக்கப்பட்டன. இறக்கு மதிப் பொருள்கள் மேலும் வாணிகவரி விதிக்கப்பட்டது. போரில் கிடைத்த கொள்ளைப் பொருள்களில் அரசனுக்கு அதிகமான பகுதி கொடுக்கப்பட்டது.

போர்த் தலைவனாக இருந்த அரசன் நீதிபதியாகவும் விளங்கினான். அவன் சட்டத்தின் உறைவிடமாக இருந்ததோடு சமூகத்தின் எழுதப்படாத சட்டத்தை விளக்கிப் பொருள் கூறுபவனாகவும் இருந்தான். செங்கோலும் சட்டமும் ஒருங்கே இணைந்து நின்றன. தன் முன்னோர்களின் முறைகளையும், மரபு வழக்கங்களையும் பின்பற்றி வந்தபோதிலும், அவை அவனது அதிகாரத்தைக் கட்டுப்படுத்தின எனக் கூறமுடியாது. அவையின் அறிவுரையை அடிக்கடி கேட்டு வந்தாலும், தனது அதிகாரத்தின் ஒரு

பகுதியைச் சிலவேளை பிறருக்கு வழங்கியபோதிலும் அரசாங்கத்தின் மூன்று முக்கிய செயல்களாகிய போர், நீதி, மதம் ஆகியவற்றில் அரசனுக்கு முழு அதிகாரம் இருந்தது.

பழங்காலத்தில் அரசன் பெற்றிருந்த அவ்வளவு அதிகாரத்திற்கும் காரணம் அவனுடைய தன்மையும், திறமையும்தான். நகரத்திலிருந்த அனைவரையும் விட ஆற்றலிலும், அறிவிலும், பொறுப்பிலும், நாவன்மையிலும் சிறந்தவன் அவனே. இவ்வாறு பல துறைகளிலும் மாண்புடன் விளங்கிய ஒருவன் எல்லையற்ற அதிகாரம் பெற்றிருந்ததில் வியப்பொன்றுமில்லை.

முடியரசின் நலிவு

காப்பியச் செய்யுளில் வலிமையுடன் தோன்றும் முடியரசு கி. மு. 8ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கிரேக்க நாடு முழுவதிலும் சரிந்தது. ஏதன்ஸ் நகரிலே கி. மு. 752இல் மன்னனின் ஆட்சிக்காலம் பத்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. ஆசியா மைனரிலும் அதே போக்குத் தென்பட்டது. கி. பி. 750 இல் கொரிந்து நாட்டில் இருநூறு டோரியக் குடும்பங்கள் ஆட்சியைக் கைப்பற்றிச் சிறு குழுவாட்சியை ஏற்படுத்தின. எபேசஸ், ஸைஸ்பாஸ் ஆகிய இடங்களில் முடியரசு வீழ்ந்து உயர்குடியாட்சி நிறுவப்பட்டது. பிலப்பொனீசிலும் இதே மாற்றங்கள் தோன்றின. முடியரசு நிலைத்து நின்ற இடங்களில் அது மரபாக வந்த முறை முறிக்கப்பட்டது.

இம்மாபெரும் மாற்றத்தின் முழு விவரங்கள் கிடைத்தில. அது மாறிய விதமும், அதன் விளைவுகளும் இடத்திற்கிடம் வேறுபட்டிருக்கவேண்டும். ஆனால் அநேகமாக எல்லா இடங்களிலும் முடியரசு மறைந்து போயிற்று. அதன் வீழ்ச்சி எல்லாப் பகுதிகளிலும் பரவியிருந்ததால் அம்மாற்றத்திற்குப் பொதுவான காரணங்கள் சில இருக்கவேண்டும் எனத் துணிந்து கூறலாம்.

முடியரசின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்

இப்பெரும் மாறுதல் நிகழ முதல் காரணம் பிரபுக்களின் அதிகாரப் பெருக்கமே. கிரேக்க நகர அரசுகளில் இருந்த பிரபுக்கள் எப்போதும் அரசனது அதிகாரத்திற்கு அடங்கி நடக்கவில்லை. அவர்கள் உண்மையில் ஆளும் இளவரசர்களாகத் திகழ்ந்தார்கள். தங்களுக்குள்ளே ஒருவரைத் தலைவராகவும் ஏற்றுக் கொண்டார்கள். இத் தலைவர்கள் அவர்களின் அறிவுரையைக் கேளாது ஆட்சி செய்ய ஒருபோதும் துணிந்தது கிடையாது. ஆகவே அரசன் இல்லாமலே ஆட்சி செய்யப் பிரபுக்களால் முடியும்; ஆனால் பிரபுக்கள் இல்லாமல் அரசனால் அரசாள முடியாது என்ற நிலை ஏற்பட்டது.

பழங்காலத்தில் மக்கள் நாடோடிகளாகத் திரிந்தபோது தம்மைப் போரிலும், படையெழுச்சியிலுமிருந்து காக்க ஆற்றல் மிகுந்த அரசனொருவனைத் தேடினர்கள். ஆனல் ஒரு நிலப்பகுதியில் தங்கி வாழத் தொடங்கியபிறகு அத்தேவை நீங்கியது. பிரபுக்களின் அதிகாரம் வளரத் தொடங்கியது. அரசன் முன்னல் செய்து வந்த அலுவல்களை எல்லாம் இப்போது அவர்கள் செய்ய முன்வந்தனர். மேலும் போரில் பெற்ற வெற்றியினல் அவர்களது அதிகாரம் இன்னும் வளர்ந்தது. தோல்வியுற்ற நாடுகளின் பெரும் பகுதிகளை அவர்கள் பெற்றனர். செல்வமும் அதிகாரமும் அதிகரித்ததால் அவர்கள் அரசனது ஆட்சிக்கு அடங்க விரும்பவில்லை. இதன் விளைவாக அரசன் இறந்ததும், அவனது பதவியை உரியவனுக்குக் கொடுப்பதற்குப் பதிலாகத் தாங்களே எடுத்துக்கொண்டனர். சிலவேளை தங்கள் நலனுக்காக அரசனுடைய அதிகாரங்களை வேண்டுமென்றே குறைத்தனர். இவ்வாருக உயர்குடியாட்சி தோன்ற வழி வகுத்தனர்.

முடியரசு வீழ்ச்சியுற இரண்டாவது காரணம் நகர அரசுகளின் சிறிய அளவேயாகும். எல்லா அதிகாரங்களிலும் அரசனது அதிகாரமே தலையாயது என்று மக்கள் நினைக்கவேண்டுமென்றுல் அவன் காட்சிக்கெளியனுக இருக்கக்கூடாது. அப்படியிருந்தால் அவனைச் சூழ்ந்துள்ள தெய்வத் தன்மையை மக்கள் மறந்துவிடுவார்கள். மற்ற மனிதர்களைப் போலவே அவனையும் கருதுவார்கள். அவன் குறைகளையும், தவறுகளையும் எளிதில் காண்பார்கள். அவன் செயல்களைக் குறைகூறவும் தலைப்படுவார்கள். இதனல் ஏற்படும் வெறுப்பு வளர்ச்சியுற்றுக் கிளர்ச்சியாக முதிர்ச்சி பெறும். கிரேக்க நகர அரசு சிறியதாக இருந்ததால் மக்கள் மன்னனை அடிக்கடி கண்டு வந்தார்கள். அதனல் அவன் மீதுள்ள மதிப்பச்சம் குறைந்து வந்தது.

உயர்குடியாட்சி

முடியரசு வீழ்ச்சி அடைந்ததின் விளைவாக கிரீஸிலும், ஆசியா மைனரிலும் பிரபுக்கள் ஆட்சியுரிமை பெற்றனர். இவ்வாருக முடியரசுக்குப் பதிலாக உயர்குடியாட்சி ஏற்பட்டது. இந்த அதிகார மாற்றம் இருவகைப்படும். முதலாவது அரசகூட்டுக் குடும்பத்திலிருந்த ஆட்சியுரிமை பிரபுக்களின் பல கூட்டுக் குடும்பங்களுக்கு மாறியது. இரண்டாவதாக, அவ்வுரிமை ஆட்சி செலுத்தும் கூட்டுக் குடும்பத்திலே இருந்தபோதிலும் ஒரு தனி மனிதனுக்கு வழங்கப்படாமல் அதன் உறுப்பினர் எல்லோருக்கும் பொதுவாகக் கொடுக்கப்பட்டது. முதல் வகைக்கு ஏதன்ஸ் நகரின் யூப்பாட்டிரிடே (Eupatridae) அரசாங்

கத்தையும், இரண்டாவது வகைக்கு தெஸலியின் (Thessaly) கூட்டுக் குடும்பங்களையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இக்கூட்டுக் குடும்பங்களின் தலைவர்களே அரசாங்க அதிகாரத்தைப் பெற்றனர். இவற்றின் உறுப்பினர்கள் ஒரு பொதுவான முன்னோரின் வழிவந்தவர்கள். அநேகமாக இம்முன்னோர் கடவுளாகக் கருதப்பட்டார். ஒவ்வொரு கூட்டுக்குடும்பத்திற்கும் தனி மதச் சடங்குகளும், மரபாக வந்த மதக் குருக்களும் உண்டு. உறுப்பினர்கள் மரபு வழக்கான சட்டத்தைத் (Traditional Law) தலைமுறை தலைமுறையாகப் பயின்று வந்தனர். இரத்த உறவைப் போல மதப்பிணைப்பும் அவர்களை ஒன்றுக இணைத்து வைத்தது. நாட்டின் செல்வம் பெரும்பாலும் அவர்கள் கைகளிலே இருந்தது. அவர்கள் பெரிய நிலக்கிழார்களாக இருந்தனர். ஆகவே அவர்கள் பண்பாடு, செல்வம் இவ்விரண்டின் பிரதிநிதிகளாகத் திகழ்ந்தார்கள். உயர்குடி மக்களாகத் தனித்து இலங்கினர்கள். அவர்களே நாட்டின் தலைசிறந்த மக்களாகவும் விளங்கினர்கள்.

படை முறையிலும் அவர்களே தலையாயவர்களாக இருந்தனர். அரிஸ்டாட்டில் கூறுவதுபோல முடியரசின் வீழ்ச்சிக்குப் பிறகு வீரர்கள் அல்லது தேர்ப்படை வீரர்கள் சிறப்புரிமை பெற்ற வகுப்பினர்களாக இருந்தார்கள். வீரருக்குரிய படைக் கலங்களை வாங்கத் தக்க செல்வமுடையவர்கள்தாம் போரில் வெற்றி பெறமுடியும். ஆகவே அரசாங்கம் தகுதியையும், செல்வத்தையும் சார்ந்து நின்றது.

கிரேக்க நாட்டில் தோன்றிய முற்கால உயர்குடியாட்சிகள் எத்தகைய உருப்பெற்றிருந்தன என்று உறுதியாகச் சொல்ல முடியாது. அது குடிப்பிறப்பின் உயர்வை அல்லது குடிப்பிறப்பு, வகுப்பு ஆகிய இரண்டின் முதன்மையைப் பொறுத்திருந்தது. மரபு வழக்கான சட்டம் இந்த அரசாங்கங்களின் அதிகாரத்தைக் குறைத்ததெனக் கருதப்படுகிறது. அவைகளின் ஆட்சித் துறையைப்பற்றி ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை.

உயர்குடியாட்சியின் வீழ்வு

முடியரசு வீழ்ச்சியடைந்து பிறகு உயர்குடியாட்சியும், சிறு குழுவாட்சியும் ஏற்பட்டதால் கிரேக்க நகர அரசின் வாழ்வில் நிலையான ஒரு மாற்றம் ஏற்பட்டது. முதன்முதலாகக் கிரேக்கக் குடிகளுக்கு ஒரு சமூகப் பொது உணர்ச்சி ஏற்பட்டது. மேலும் குடிகள் தம் கடமையை அரசனுக்கல்லாது நகரத்திற்கே செலுத்த வேண்டுமென்றும் தெளிவானது. அரசியல் அதிகாரமானது தெய்வீகத்தன்மை பெற்றதன்று; சட்டபூர்வமானது என்றும் புலப்பட்டது. இப்போது கிரேக்கர்கள் பொது உணர்ச்சியால்

கட்டப்பட்டு ஒரு சமூகத்தையே தம் குறிக்கோளாகக் கொண்டு அரசியல் அமைப்புக்குட்பட்ட அதிகாரத்தை நிறுவினர்கள். உயர்குடியாட்சிதான் முதன் முதலில் குடிகளின் பொதுக் கடமைகளை, அஃதாவது அரசிற்குச் செலுத்தவேண்டிய கடமைகளை உருவாக்கியது. இவ்வாறுக நகர மக்களின் குடிமை வாழ்வு தோன்றியது.

உயர்குடியாட்சியின் நலிவு

நாளடைவில் உயர்குடியாட்சி தன் பண்புகளை இழந்து நலிவுறத் தொடங்கியது. உயர்குடிமக்கள் அரசின் அதிகாரம் அனைத்தையும் தம் கைக்குள் அடக்கிக் கொண்டனர். திருவிழாக்கள், திருமணம், மதச்சடங்குகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவனைத்தும் அவர்களுடைய தனியுடைமை ஆகியது. நிலவுரிமை, சொத்து மாற்றம், குற்றத் தண்டனை முதலியவை பற்றிய சட்டங்களுக்கெல்லாம் அவர்களே காவலர்களாக இருந்தனர். ஆனால் தமது சட்ட அறிவை மக்களின் நிலங்களைப் பறித்து அவர்களை அடக்கியாளப் பயன்படுத்தினர்கள். போர்த்துறையிலும் அவர்களது அதிகாரம் வளர்ச்சி யடைந்தது. சிறந்த போர்க் கருவிகளைப் பெற்றுத் திறமை மிக்க போர்வீரர்களாகத் திகழ்ந்தார்கள். இவ்வாறுக அவர்களுடைய செல்வாக்கும் அதிகாரமும் ஓங்கவே, அவர்களது செருக்கும் பாமர மக்களின்மேல் வெறுப்பும் வளர்ந்தன. இக்காரணங்களினால் படிப்படியாக உயர்குடியாட்சி நலிவுற்றுச் சிறு குழுவாட்சியாக மாறியது.

சிறுகுழுவாட்சி

கி. மு. 7 ஆவது நூற்றாண்டில் ஏற்பட்ட பொருளாதாரப் புரட்சியின் விளைவாகக் கிரேக்க நாட்டின் சமூகப் பொருளாதாரத் துறைகளில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. புதிய நாடுகளில் கிரேக்கர்கள் குடியேறியதன் விளைவாக வாணிகப் பெருக்கமும் தொழில் வளமும் மிகுந்தன. எனவே பழைய பண்டமாற்று முறை மாறி நாணய முறை வழக்கில் வந்தது. வயல், காடு, திராட்சைத் தோட்டம், ஒலிவத் தோட்டம், அரங்கம் முதலிய சொத்துக்களையுடைய பிரபுக்கள் பல கப்பல்களைச் செய்து திரை கடலோடித் திரவியம் திரட்டி வந்தனர். பிரபுக்களின் அதிகாரம் நிலச் சொத்துடைமையினால் மட்டுமல்லாது பணப் பெருக்கத்தினாலும் வளர்ந்தது. இவ்வாறுக உயர்குடியாட்சியின் தன்மை மாறத் தொடங்கியது.

இப்புதிய பணப் புழக்கம் பிரபுக்களிடம் மட்டும் நிலவியதென எண்ணுவது தவறு. ஏனெனில் ஏனைய வணிகர்களும், கலைத் தொழிலாளர்களும் தம் முயற்சியினால் ஏராளமான பணம் திரட்டி

னர்கள். இதன் விளைவாகவே ஒரு புதிய செல்வர் இனமே உருவாகியது. இவர்களில் சிலர் தமது திறமையினாலும், ஆற்றலினாலும், மிகுதியான பொருளை ஈட்டிச் சமூகத்தில் மற்றவர்களை விஞ்சிச் செல்வாக்கும் மதிப்பும் பெற்றார்கள். இவர்களுடைய நிலை எவ்வளவு உயர்ந்திருந்ததென்றால், தம் நிலைக்கேற்ற செல்வமில்லாத பழைய பிரபுக்களில் பலர் புதிய செல்வர்களாகிய இவர்களை மாமனாராகவும், மருமக்களாகவும் கொள்ளத் தயங்கவில்லை. இவ்வாறுகச் செல்வம் குறைந்த பிரபுக்களும், செல்வமிகுந்த வணிகர்களும் இணைந்ததினால் ஒரு தனிப் பிரபுக்களின் இனமே உருவாகியது. செல்வம்தான் இவ்வினத்தின் அடிப்படையாக இருந்தது. இதனால் செல்வமே அரசியல் அதிகாரத்திற்கும் அடிப்படையானது. இவ்வாறுக அரசாங்கம் நாளடைவில் உயர்குடியாட்சியிலிருந்து செல்வரின் சிறுகுழுவாட்சியாக மாறியது.

விளைவு

சிறுகுழுவாட்சியின் காரணமாக சில நன்மைகள் விளைந்தன. அவற்றுள் சிறப்பாக 7 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட ஏராளமான குடியேற்றங்களைக் கூறலாம். செல்வர்களினால் நசுக்கப்பட்ட பலர் வேறு நாடு தேடிக் குடியேறினார்கள். செல்வராட்சியிலே பணம்தான் அரசியல் அதிகாரத்தின் அடிப்படையாக இருந்ததால் பணமிழந்த பிரபுக்கள் வேறு நாடுகளுக்குச் சென்று குடியேறினர். பணம் பெற்றும் தம் கீழ்க் குடிப் பிறப்பினால் அரசியல் அதிகாரம் பெறுதவர்களும் பிற நாடுகளில் குடியேறத் தொடங்கினார்கள். மேலும் ஆளும் வகுப்புக்குள்ளே ஏற்பட்ட பிணக்குகளினால் வெளிநாடு போனவரும் உண்டு. புரட்சி அல்லது குற்றத்தின் காரணமாக நாடு கடத்தப்பட்டவர்களும் தங்கள் நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு வேறு நாட்டில் குடியேறினார்கள். இதற்குச் சான்றாக கி. மு. 734இல் நிறுவப்பட்ட சைரக்கியூஸ் நாட்டைக் கூறலாம். இவ்வாறுகச் சிறுகுழுவாட்சிக் காலத்தில் குடியேற்றம் வளர்ச்சியுற்றது.

நலிவு

கி. மு. 7ஆம் நூற்றாண்டிலே சிறுகுழுவாட்சி நலிவுறத் தொடங்கியது. உரிமை பெற்ற செல்வர்களுக்கும் உரிமையற்ற வறியவர்களுக்கும் இடையேயிருந்த பிளவு பெருகிக்கொண்டே சென்றது. வாணிக வளர்ச்சியினால் செல்வம் பெற்ற புதிய வகுப்பினர்கள் குடிமை உரிமைகள் பெறக் கிளர்ச்சி செய்தனர். செல்வர்களின் இன்ப வாழ்வையும், வெறுப்பூட்டும் செருக்கையும் கண்ட வறியவர்கள் அவர்கள்மேல் சீறிப் பாய்ந்தனர். இதன் விளைவாகச் சிறுகுழுவாட்சி வீழ்ச்சியுற்றுப் புதிய ஆட்சிமுறை ஏற்பட்டது.

ஸிட்ஜ்விக் (Sidgwick) என்ற நூலாசிரியர் செல்வரின் சிறு குழுவாட்சியின் வீழ்ச்சிக்கு நான்கு காரணங்கள் தருகின்றார். முதலாவது செல்வர்கள் சிறுதரக் குடியானவர்களை நசுக்கி அவர்களின் பொது உரிமைகளைக் கவர்ந்தனர். இரண்டாவதாக, நகரங்களில் வாணிகப் பெருக்கத்தின் விளைவாகத் தோன்றிய புதிய செல்வர்கள் குடிமை உரிமைபெறக் கிளர்ச்சி செய்தனர். மூன்றாவதாக வாணிகம், போக்குவரவு இவற்றினால் அறிவு விழிப்புக்கொண்ட மக்கள் செல்வர்களின் அகந்தையையும் அதிகாரத்தையும் வெறுத்தனர். நான்காவதாக, எழுதப்படாத சட்டத்தின் மேல் மக்களுக்கு நம்பிக்கை குறைந்தது. ஏனெனில் செல்வர்கள் அதைத் தம் நலத்திற்காகவும், பிறரை வருத்துவதற்காகவும் பயன்படுத்தினர். இக் காரணங்களால் செல்வரின் சிறுகுழுவாட்சி விரைவில் சிதைந்து போயிற்று.

கொடுங்கோன்மை

கி. மு. 8ஆம் நூற்றாண்டில் கிரேக்க நாடு முழுவதும் முடியரசு சரிந்து உயர்குடியாட்சி அல்லது சிறுகுழுவாட்சி ஏற்பட்டது போல 7ஆம் நூற்றாண்டில் கிரீஸின் முக்கிய நகரங்களிலெல்லாம் கொடுங்கோன்மை ஆட்சிபெற்றது. குடியேற்றத்திற்குக் காரணமான உள்ளக் குமுறலே கொடுங்கோன்மை ஏற்படவும் காரணமாயிற்று. கிரேக்க நாட்டின் நகரங்கள் எல்லாம் ஒரு தனி மனிதனின் ஆட்சியை விருப்புடன் ஏற்றுக்கொண்டன. ஏனெனில் எல்லோரும் அவனுக்குப் பணிவதால் மக்களிடையே ஒருவித சமத்துவம் நிலவ வழியேற்படும். ஆகவே கொடுங்கோன்மையை இயற்கையாகவே தோன்றிய ஒரு மாற்றம் எனலாம். ஆனால் இது நிரந்தரமாக இல்லாமல் வேறொரு புதிய பாதையை வகுக்கும் வழியாகவே விளங்கிப் பிறகு மறைந்து போனது.

கிரேக்க நாட்டில் தோன்றிய கொடுங்கோன்மைகளில் பெரும்பான்மையானவை வாணிக வளர்ச்சியின் காரணமாகவே எழுந்தன. அவற்றில் நிலையான வலிமை மிக்க கொடுங்கோன்மைகள் செல்வர்களும், உரிமையற்ற வகுப்பினரும் தங்களுடைய உரிமைகளை வற்புறுத்தியதாலே முளைத்தன. இந்த வாணிக வகுப்பினர் அரசாங்கத்தில் பங்கு பெறுததும் தவிர, நகரத்தை ஆண்டு வந்தவர்கள் தம் சொத்துக்களைப் பறிக்க முயன்று வந்ததையும் கண்டனர். இதன் காரணமாகக் கொரிந்து, ஸிஸியோன், மெகாரா, ஸைரக்கியூஸ் முதலிய இடங்களில் கொடுங்கோன்மை பிறந்தது. வாணிக வளர்ச்சி பெறுது இன்னும் பயிர்த்தொழில் நிலையிலே இருந்த மற்ற நகரங்களில் ஏழைகளின் உரிமைகளைக் காக்கவே கொடுங்கோன்மை தோன்றியது. இந்நோக்குடனே ஏதன்ஸிலிருந்த பைஸிஸ்டிரேட்டஸ் என்பான் ஆட்டிக்காவின் மேட்டு

நிலங்களில் வாழ்ந்த ஏழை மக்கள் நாட்டவரைச் சமவெளியிலுள்ள செல்வருக்கு எதிராக நடத்திச் சென்றான்.

கிரேக்க வரலாற்றிலே கொடுங்கோன்மை என்ற சொல் கொடுமையையோ அல்லது தவறாக வழங்கும் அதிகாரத்தையோ குறிப்பதில்லை. "டிரான்னஸ்" (Tyrannus) என்று அழைக்கப்பட்ட கிரேக்கக் கொடுங்கோலன் வரையிறந்த அதிகாரமுடைய பொறுப்பற்ற மன்னனாக மட்டும் இருந்தான். கிரேக்க அரசியலில் அப்பெயர் அரசியல் அமைப்புக்குட்படாத முறையில், அஃதாவது புரட்சியின் மூலமாக அதிகாரம் பெற்றவனையே குறிக்கும். அவன் அரசியல் அமைப்புக்குப் புறம்பானவன். சட்ட எல்லைக்கு வெளியிலிருந்தபோதிலும் அதற்கு மேலானவன் என்று அவனைக் கூற முடியாது. அவன் நன்மை செய்யும் யதேச்சாதிகாரியாக இருக்கலாம்; அல்லது மக்களை வருத்தும் வல்லாளனாகவும் இருக்கலாம். ஆனால் இவற்றை உணர்த்தும் பொருள் கொடுங்கோலன் அஃதாவது 'டிரான்னஸ்' என்ற சொல்லில் கிடையாது. கொடுங்கோன்மை என்றால் கிரேக்க அரசியலில் அரசியல் அமைப்புக்குட்படாத முடியரசு எனப் பொருள்படும்.

கொடுங்கோலனது அதிகாரம் மக்களின் விருப்பத்தையே சார்ந்திருந்தது. அது மாறியபோது அவனது ஆணையும் முடிவுற்றது. சட்டமோ, பிரபுக்களோ அல்லது மதமோ அவனது அதிகாரத்திற்குத் துணை செய்யவில்லை. கொடுங்கோன்மை தற்காலிகமாகவே மக்களால் ஏற்படுத்தப்பட்டது. அது பெரும் சமூக, பொருளாதார மாற்றங்களின்போது பாதுகாப்பை அளித்ததால் அதை மக்கள் ஏற்றுக்கொண்டனர்.

கொடுங்கோன்மையின் விளைவு

கொடுங்கோன்மை நிறுவப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள் மிகப் பல. முதலாவது, கொடுங்கோலர்கள் தாழ்ந்த மக்களை உயர்த்தி, உயர்ந்த வகுப்பினரைப் பணிய வைத்துச் சமநிலையை உண்டாக்கினர்கள். இரண்டாவதாகக் கொடுங்கோலனது அதிகாரத்தை வகுப்புப் பகைகள் அச்சுறுத்தி வந்தமையால் அவன் நாட்டின் ஒற்றுமையை வளர்க்க முயன்று வந்தான். இதற்கெனப் பொதுவான திருவிழாக்களை ஏற்படுத்தினன். இவைகளில் மக்கள் அனைவரும் பாகுபாடில்லாமல் வழிபாடு செய்ய வசதிகளைச்செய்து வைத்தான். இதனால் சமூகத்தில் சமத்துவம் நிலவியதோடு ஒற்றுமையும் உயர்ந்தோங்கியது. மூன்றாவதாக, கொடுங்கோலன் பேரவாக் கொண்டு கடற்படைகளை அமைத்துப் பிற நாடுகளோடு நட்பு உடன்படிக்கைகளும் செய்தான். நான்காவதாக, கொடுங்கோலர்கள் காலத்தில் கலையும், இலக்கியமும் செழித்தோங்கின.

ஐந்தாவதாக, சிறுகுழுவாட்சிக்கும் மக்களாட்சிக்கும் இடையே நிற்கும் படிக்கல்லாகக் கொடுங்கோன்மை விளங்கியது. அது பிரபுக்களின் அதிகாரத்தை நசுக்கியதோடு, அவர்கள் ஏனைய குடிகளோடு எவ்விதம் இணைந்து வாழவேண்டுமென்றும் வழிகாட்டியது. எல்லோரும் கொடுங்கோலனது ஆட்சிக்குப் பணிந்ததால் மக்களிடையே ஒருவித சமத்துவம் வளர ஏதுவாயிற்று. கொடுங்கோன்மையை வன்மையாகக் குறைகூறும் ஹெரோடோட்டஸே கூறுகிறார் : "நகரங்களில் ஒற்றுமையை வளர்த்த காரணத்தால், கூட்டான விருப்பம் தேவையான மக்களின் அரசாங்கத்திற்குக் கொடுங்கோன்மை முன்னோடியாக இருந்தது."

நலிவு

கொடுங்கோன்மை எங்குமே நிலைத்து நிற்கவில்லை. ஒரு தனிப்பட்ட வேலையைச் செய்வதற்காகக் கொடுங்கோலர்களை மக்கள் நியமித்தனர். அவ்வேலை முடிந்ததும் அவர்கள் ஆட்சியின் தேவையும் மறைந்தது. ஆகவே அவர்கள் வீழ்ச்சி அடைந்தனர். நாட்டில் செழிப்பை உண்டாக்கி, மக்களாட்சிக்கு வழிவகுத்து விட்டு விரைவிலே மறைந்து விட்டார்கள். சில நகரங்களில் பின் வந்தவர்களின் ஆட்சி சீர்கேடான நிலையில் இருந்ததால் கொடுங்கோன்மை நலிந்தது. வேறு சில நகரங்களில் சதித்திட்டங்களின் காரணமாகவும், அல்லது படையெடுப்பின் காரணமாகவும் அது வீழ்ந்தது. சுருங்கக் கூற வேண்டுமெனில் மக்களின் ஆதரவு இருக்கும் வரை கொடுங்கோன்மை நீடித்தது. ஆனால் அவர்களின் ஆதரவு தற்காலிகமாகவே இருந்தது. ஏனெனில் அவர்கள் அதை சமயச் சூழலுக்கேற்ற நிறுவனமாகவே கருதினார்கள். குளோட்ஸ் (Glotz) கூறுவது போலச் "செல்வர்களின் கோட்டையைத் தகர்க்கும் கருவியாக அவர்கள் அதைப் பயன்படுத்தினர்கள். அவர்களின் நோக்கம் நிறைவேறியதும் தம் கைகளைப் புண் படுத்திய அக்கருவியை விரைவில் கைவிட்டார்கள்." முதலில் அரசைக் கைப்பற்றிய கொடுங்கோலன் மக்களால் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தப்பட்டதால் அவர்களுக்காகவே உழைத்தான். ஆனால் பின்வந்தவர்கள் பொதுவாகத் திறமையற்றவர்களாகவும், கொடுமையானவர்களாகவும் இருந்தனர். ஆகவே கொடுங்கோன்மை விரைவில் வீழ்ந்தது.

மக்களாட்சி

கி. மு. 4ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கொடுங்கோன்மை முற்றிலும் மறைந்து மக்களாட்சி நிறுவப்பட்டது. கிரேக்க மொழியிலே 'டீமாஸ்' (Demos) என்ற சொல் மக்களைக் குறிக்கும். பழங்காலக் கிரேக்க நகரங்களிலே அரசன், அவை, பேரவை என்ற மூன்று அதிகாரப் பிரிவுகள் இருந்தன. முதல்

இரண்டும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிப் பிறகு மறைந்தன. இப்போது பேரவை அந்த அதிகாரங்களைப் பெற்று, நாட்டின் முழு ஆட்சியையும் இயக்கத் தலைப்பட்டது. அதைத் திறமையுடன் செய்ய மக்களின் பேரவை முழு வளர்ச்சி பெற வேண்டியிருந்தது. பேரவை, நீதிமன்றம் ஆகியவை மூலமாகக் குடிமக்கள் செலுத்திய ஆட்சியே மக்களாட்சி என்று கிரேக்க நாட்டில் அழைக்கப்பட்டது. மக்களாட்சி உச்ச நிலையை அடைந்தபோது குடிமகன் ஒவ்வொருவனும் எல்லாப் பதவிகளையும் ஏற்கத் தகுதியுடையவன் என்ற கொள்கை நிலவியது. இவ்வாறு முழு மலர்ச்சி பெற்ற மக்களாட்சிக்கு ஏதன்ஸ் நகரம் ஓர் எடுத்துக்காட்டாக இலங்கியது. அது கிரேக்க நாட்டின் தலையாய மக்களாட்சியாக மிளிர்ந்ததால் மற்றவை எல்லாம் அம் முறையைப் பின்பற்றின.

சுழற்சி மாற்றங்கள்: (Cyclical Changes)

ஹெரோடோட்டஸைப் போல அரிஸ்டாட்டிலும் அரசாங்க முறைகளை முடியரசு, உயர்குடியாட்சி, மக்களாட்சி என வகைப்படுத்தியபோதிலும் அவைகளை ஒழுங்கான அரசென்றும் தவறான அரசென்றும் பிரிக்கின்றார். சமூகத்தின் பொது நன்மையைக் குறிக்கோளாகக் கொள்ளும் அரசை ஒழுங்கான அரசென்றும், அரசனின் அல்லது அரசாளும் வகுப்பின் நலனுக்காகவே இருக்கும் அரசைத் தவறான அரசென்றும் கூறுகிறார். இதன்படி மக்களின் பொது நன்மைக்காக அரசன் ஆட்சிசெய்வது முடியரசு என்றும், அந்நோக்குடனே ஒரு சில அறிவுடையோர் ஆள்வது உயர்குடியாட்சி என்றும், அதே காரணத்திற்காகக் குடிகளால் நடத்தப்படும் ஆட்சி மக்களாட்சி எனவும் வழங்கப்படும். தவறான அரசுகளில் கொடுங்கோலன் ஒருவன் தன்னலனுக்காக ஆள்வது கொடுங்கோன்மை எனவும், சிறுபான்மையினர் தமது நலனுக்காக ஆட்சி செய்வது சிறுகுழுவாட்சி எனவும், கும்பலின் தன்னல ஆட்சி பாமரர் ஆட்சி எனவும் கூறப்படும். அரிஸ்டாட்டில் மக்களாட்சியை 'பாலிட்டி' (Polity) எனவும், பாமரர் ஆட்சியை மக்களாட்சி எனவும் அழைக்கிறார்.

இப்பகுப்புக்களில் குறிப்பிடத்தக்கவை என்னவென்றால் இவை அரசாங்கங்களை வகைப்படுத்தியதோடு, அரசாங்கம் தோன்றிவளர்ந்த இயற்கை முறையையும் எடுத்துக்காட்டுகின்றன. முடியரசு உயர்குடியாட்சியாகவும் பிறகு முறையே சிறுகுழுவாட்சி, கொடுங்கோன்மை, மக்களாட்சி என்று மாறுவதாகவும் எண்ணப்பட்டது. அரிஸ்டாட்டிலின் இப்பகுப்பை நுணுகி ஆராய்ந்த நூலாசிரியர்கள் சிலர் முடியரசு, கொடுங்கோன்மை, உயர்குடியாட்சி, சிறுகுழுவாட்சி, மக்களாட்சி, பாமரர் ஆட்சி என்று மாறும் முறை இயற்கையான முறை எனக் கூறுகின்றனர். முடியரசின்

இயல்பும், நோக்கமும் சீர்கெட்டு அது மக்களின் பொதுநலத்தைக் கருதாது போகும்போது அது கொடுங்கோன்மையாக மாறுகிறது. அப்போது சமூகத்தின் வலிமைமிக்க பெருமக்கள் முடியரசைக் கவிழ்த்தி உயர்குடியாட்சியை நிறுவுகின்றனர். இவ்வாட்சி நாளடைவில் சீர்கெட்டுச் சிறுகுழுவாட்சியாக மாறுகிறது. குடிமக்கள் திரண்டெழுந்து இவ்வாட்சியை வீழ்த்தி மக்களாட்சியை ஏற்படுத்துகின்றனர். நாள் செல்லச் செல்ல இவ்வாட்சியில் பாமரர்கள் செல்வர்களை வருத்தத் தொடங்குகின்றனர். ஆகவே இது பாமரர் ஆட்சியாக மாறுகிறது. இதன் விளைவாக முளைக்கும் குழப்பத்தில் வலிமைமிக்க போர் வீரனும் அரசியல் வல்லுநருமாகிய ஒருவன் எழும்பித் தனது ஆட்சியை நிறுவி அரசாளுகின்றான். இவ்வாறாக ஒரு சுழற்சி முடிந்து மற்றொன்று தொடங்குகிறது.

அரிஸ்டாட்டில் கூறும் இந்த அரசியல் மாற்றக் கொள்கையை பிலப்பொனீசியப் போருக்கு முன்னுள்ள கிரேக்க நகர அரசுகளின் வரலாறு உறுதிப்படுத்துகிறது. உண்மையில் அவைகளில் கண்ட அரசியல் மாற்றங்களுக்கு விளக்கம் தரும் முறையிலே அரிஸ்டாட்டில் இக்கொள்கையை உருவாக்கினர். அவர் விளக்கும் இச்சுழற்சியை அரசியல் மாற்றத்தின் இன்றியமையாத இயல்பு எனக் கருத முடியாது. அரிஸ்டாட்டிலே புரட்சிகளை எவ்வாறு தடுப்பதென்று ஆராய்வதிலிருந்து இச்சுழற்சி மாற்றம் உறுதியாக நிகழும் என்று அவரே நம்பவில்லை எனப் புலனாகிறது. இச்சுழற்சியைத் தவிர்க்கக் கூடிய ஒரு நிலையான அரசாங்க முறையைக் கண்டுபிடிக்க அவர் முயன்றார். நடுத்தர வகுப்பினரின் அரசாங்கமே அதற்குகந்த இடைநிலை என எண்ணினர்.

ஆ. ஏதன்ஸில் மக்களாட்சி

கி. மு. 7 ஆம் நூற்றாண்டிலே தொடங்கிய மக்களின் கிளர்ச்சி, காலம் செல்லச் செல்ல வலுப்பெற்று, 4 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் மக்களாட்சியாக மலர்ச்சியுற்றது. அது கிரேக்க அரசியல் வாழ்விலே ஒரு சிறப்பான இயல்பாக அமைந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக ஏதன்ஸ் துலங்குகிறது. அது கிரேக்க நாட்டிலே மாண்புடன் இலங்கியதுமல்லாமல் மற்றைய நகர அரசுகளுக்கு மாதிரியாகவும் இருந்தது.

ஏதன்ஸில் ஏழைக் குடியானவர்கள் செல்வர்களால் நசுக்கப்பட்டு வந்த காலத்தில் டிரேக்கோ (Draco), ஸோலன் (Solon), கிளீஸ்தனீஸ் (Cleisthenes) ஆகிய பெரியார்கள் தோன்றி மக்களாட்சியை நிறுவ வழி வகுத்தனர். இதுவரை, எழுதப்படாத

வழக்கங்களையே நீதிபதிகள் விளக்கி வந்தனர். அதுவும் பிரபுக்களின் நலன்களைக் காக்கும் நோக்குடனே விளக்கம் தந்தனர். இக்குறையை நீக்க டிரேக்கோ என்பார் ஒரு சட்டத் தொகுதியை எழுதிக் கொடுத்தார். ஆனால் அது மிகவும் கடுமையானதாக இருந்தது. திருட்டுப்போன்ற சாதாரண குற்றங்களுக்குக் கூடக் கொலைத்தண்டனை வழங்கியது. ஆகவே ஏதன்ஸ் மக்கள் அச்சட்டத் தொகுதி "மையினால் அல்ல இரத்தத்தால் எழுதப்பட்டது" எனக் கூறி வந்தார்கள். டிரேக்கோவிற்குப் பிறகு ஸோலன் என்பார் ஓர் அரசியல் அமைப்பை எழுத முன்வந்தார். ஏதன்ஸ் குடிகள் அனைவரையும் நான்கு பகுதிகளாகப் பிரித்தார். இப்பிரிவுகள் முன்னால் இருந்ததைப் போலப் பிறப்பின் காரணமாக ஏற்படுத்தப்படாமல் நிலச் சொத்துடைமையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டன. முதல் இரு வகுப்புகளுக்கும் உயர்ந்த அரசாங்க அலுவல்களும், மூன்றாவது வகுப்புக்குச் சாதாரண அலுவல்களும் ஒதுக்கி வைக்கப்பட்டன. நான்காவது வகுப்பினருக்கு அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் பேரவையில் பங்கு பெறும் உரிமையும் வழங்கப்பட்டன. ஸோலனுடைய சீர்திருத்தங்கள் ஏதன்ஸை மக்களாட்சியின் திசை நோக்கி இழுத்துச் சென்ற போதிலும் வகுப்பின் அடிப்படையாக எழுந்த பிரிவுகளையும் அவற்றின் விளைவாகத் தோன்றிய பூசல்களையும் தீர்க்கவில்லை. ஆகவே கிளைஸ்தனீஸ் காலத்தில் இப்பிரிவுகள் முற்றிலும் அழிக்கப்பட்டன. அவற்றிற்குப் பதிலாக அட்டிக்காவின் புராணங்களில் காணப்பட்ட வீரர்களின் பெயரால் பத்துப் புதிய வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறாக கிளைஸ்தனிஸ் பழைய குலப் பகைகளை ஒழித்து நாட்டுணர்ச்சியை உண்டு பண்ணினார். அதைவிட முக்கியமானது என்னவென்றால் கொடுங்கோன்மை திரும்பவும் வேரூன்றாமல் இருக்க நாட்டுக்குக் கேட்டை விளைவிக்கக் கூடிய அரசியல் வாதியை நாட்டைவிட்டுப் பத்து ஆண்டுகளுக்கு வெளியேற்றக் கூடிய 'ஆஸ்ட்ரஸிஸம்' என்ற முறையொன்றை (Ostracism) ஏற்படுத்தினார். இவ்வாறாக மக்களாட்சியை நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்த ஏதன்ஸ் கி. மு. 5ஆம் நூற்றாண்டில் வரலாற்றிலே மிகப் பழமையான மக்களாட்சியை நிறுவியது. இவ்வாறு வளர்ச்சியுற்ற ஏதன்ஸ் அரசு பெரிக்கிளீஸின் காலத்திலே அரசியலிலும் அறிவுத் துறையிலும் முதிர்ச்சியுற்றது.

ஏதன்ஸின் அரசியல் அமைப்பு

ஐந்நூறு பேரின் அவை

இந்த அவை ஏதன்ஸ் அரசியல் அமைப்பின் முகடாகத் திகழ்ந்தது. இதன் உறுப்பினர்கள் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும்

பத்துப்பேராகச் சீட்டுக் குலுக்கல் மூலம் தெரிந்தெடுக்கப்பட்டனர். இந்த அவை ஐம்பது பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இதுதான் எக்லேசியா என்ற பேரவையின் நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும். மேலும் இது ஆட்சி அலுவல்களையும் மேற்கொண்டது. பொதுவாக அயல் நாட்டுக் கொள்கையை இந்த அவை தீர்மானித்தது. மிக முக்கியமான செய்திகள் மட்டும் பேரவையின் முன் கொண்டு வரப்படும். பொது நீதி சம்பந்தமான செயல்களில் எல்லாம் அதன் தீர்ப்பே முடிவானது. போரில் நம்பிக்கைத் துரோகம், மக்களாட்சிக்கு எதிராகச் சதி, அரசத் துரோகம் போன்ற குற்றச்சாட்டுகளை எல்லாம் விசாரித்துத் தீர்ப்பளிக்கும்.

எக்லேசியா என்ற பேரவை

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட எல்லா ஏதன்ஸ் குடிகளும் பேரவையின் உறுப்பினர்களாக இருக்கும் உரிமை பெற்றிருந்தனர். பொதுவாகக் கூட்டங்களில் குடிகளின் எண்ணிக்கை ஐயாயிரத்துக்கு அதிகமாகச் செல்வதில்லை. ஆனால் நாடுகடத்துதல், குடியுரிமை வழங்குதல் முதலிய முக்கியமான வினைகளை நிறைவேற்றக் குறைந்தது ஆறாயிரம் உறுப்பினர்களாவது கூடியிருக்க வேண்டும். கூட்டங்கள் சாதாரண கூட்டங்கள் என்றும், சிறப்புக் கூட்டங்கள் என்றும் இருவகைப்படும். சாதாரண கூட்டங்கள் ஆண்டுக்கு நாற்பது நிகழும். அவற்றில் ஆட்சித் துறை அலுவல் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். இக் கூட்டங்கள் 'நிக்ஸ்' (Pnyx) என்ற மலைச்சரிவில் நடைபெறும். சிறப்புக் கூட்டங்கள் முக்கியமான நிகழ்ச்சிகளை வாதிக்கக் கூட்டப்படும். இரண்டுவிதக் கூட்டங்களுக்கும் ஐந்நூறு பேரின் அவைக் குழுதான் நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும். பொதுவாகத் தீர்மானங்கள் அவையில் வாதிக்கப்பட்ட பிறகே பேரவை முன் கொண்டு வரப்பட்டபோதிலும், தீர்மானங்களைத் தொடங்கி வைக்கவோ அல்லது திருத்தவோ பேரவைக்கு முழு உரிமையுண்டு.

எக்லேசியாவுக்கு முழு ஆட்சித்துறை அதிகாரம் இருந்த போதிலும், அது உண்மையில் ஒரு சட்டசபையன்று. அது ஆட்சித்துறை சம்பந்தமான கட்டளைகளை இயற்ற முடியுமே தவிரச் சட்டம் இயற்றும் உரிமை பெறவில்லை. அக் கட்டளைகளும் சட்டத்தை மீற அனுமதிக்கப்படவில்லை. ஆகவே சட்டம் இயற்றும் அதிகாரமுள்ள ஒரு குழு ஏதன்ஸில் இருந்ததில்லை. ஏதன்ஸில் அரசியல் அமைப்பே தலையாயது. அதை நீதிமன்றங்கள் காத்து வந்தன. நீதி மன்றங்களின் தீர்ப்பை எக்லேசியா குற்றங்கூற முடியுமே தவிர மறுக்கமுடியாது.

சட்டம் இயற்றும் அதிகாரம் இல்லையெனினும், சட்டங்களைத் திருத்தும் உரிமை பேரவைக்கு இருந்தது. இதற்கு இரு முறைகள் பயன்படுத்தப்பட்டன. முதலாவது, இருக்கும் சட்டங்களை அப்படியே ஏற்றுக்கொள்வதா அல்லது திருத்துவதா என்று வாதிப்பதற்காக ஆண்டுதோறும் அவைகள் பகுதி பகுதியாக எக்லேசியாமுன் கொண்டு வரப்படும். ஒன்று அல்லது அதிகமான பகுதிகளை மாற்ற மக்கள் விரும்பினால் அதற்கென ஹெலியியா என்ற நீதிக்குழுவிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட "நோமோதீட்டே" என்றவர்கள் நியமிக்கப்படுவார்கள். இரண்டாவது, "தெஸ்மோதீட்டே" என்ற அலுவலர்கள் ஆண்டுதோறும் சட்டத்தொகுதியை அலசிப் பார்த்து அதில் முரணான சட்டங்கள் இருந்தால் அவற்றையும், அவற்றைத் திருத்தும் முறையையும் எக்லேசியாவால் நியமிக்கப்பட்ட நோமோதீட்டே முன்னால் கொண்டு வருவார்கள். ஆகவே, சட்டமியற்றுதல் எக்லேசியா, ஹெலியியா என்ற இரு மக்கள் நிறுவனங்களின் ஒத்துழைப்பின் மூலமாகவே நடைபெற்றது.

ஆனால் ஆட்சித் துறையில் பேரவை அதிக அதிகாரங்களைப் பெற்றிருந்தது. போர் தொடுத்தல், சமாதானம் செய்தல், தூதர்களை நியமித்தல், அயல் நாடுகளுடன் வணிகத் தொடர்புகளை ஏற்படுத்துதல் போன்ற அதிகாரங்கள் பேரவைக்கு இருந்தன. நிதி சம்பந்தமான செய்கைகளில் அதற்கு முழு அதிகாரமுண்டு. மதத்துறையும் அதன் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. அயல்நாட்டவருக்குக் குடிமை உரிமையும், திருமண உரிமையும் பேரவை வழங்கியது. ஆட்சித் துறையின் எல்லா அம்சங்களையும் மிக நுணுக்கமாகக் கவனித்து வந்தது. எக்லேசியா தவறென்று கூறியவற்றை எல்லாம் நீதி மன்றங்கள் எப்போதும் தண்டித்து வந்தன.

ஆட்சி

ஆட்சித் துறைப் பணியில் ஏராளமான அலுவலர்கள் வேலை செய்து வந்தனர். ஒன்பது ஆர்க்கன்களும் (Archons) பத்துத் தளபதிகளும் தவிர, நிதி, கல்வி, மதம், கப்பல் கட்டும் துறை போன்ற ஒவ்வொன்றிற்கும் தனிச் சபைகள் (Boards) இருந்தன. தலைமைக் கணக்கர்கள் மட்டும் முப்பதுபேர் பணியாற்றினர். ஒவ்வோர் ஆண்டும் அலுவலர்கள் சீட்டுமூலம் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். பெரிக்கிலீஸின் காலத்தில் ஏறக்குறைய ஆண்டுதோறும் 1900 பேர் ஆட்சி அலுவலில் அமர்த்தப்பட்டனர். அப்போது ஏதன்ஸில் வயதுவந்த ஆண்களின் தொகை 30,000. ஆகவே ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் அநேகமாக ஒரு தடவை ஆட்சித்துறையில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

உரிமை, சமத்துவம் என்ற அடிப்படையில் இம்முறை ஏற்படுத்தப் பட்டிருந்தபோதிலும் அது பயன் தரத்தக்க முறையில் நடைபெற வில்லை. ஆட்சி அலுவலுக்குத் திறமை அல்லது பயிற்சி தேவை யில்லை என்ற கொள்கையினால் இறுதியில் நாட்டுக்குத் தீமைதான் விளைந்தது.

சீட்டு முறைத் தேர்தல்

ஏதன்ஸின் அலுவலர்கள் சீட்டுக் குலுக்கும் முறையில் தெரிந் தெடுக்கப்பட்டனர். ஒவ்வொருவனும் தன் வாழ்நாளில் ஒரு தடவையாவது ஆட்சியில் பங்கு பெறவேண்டும் என்ற நோக் குடனே இம்முறை பயன்படுத்தப்பட்டது. இம் முறையினால் குணம், அறிவு முதலிய தகுதிகள் இல்லாமல் எல்லோரும் அரசி யல் அலுவலைப் பெறச் சமமான வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆகவே ஏதன்ஸ் மக்கள் தம் அரசியல் முறையை 'மக்களாட்சி' என அழைத்தபோது மக்கள் உண்மையிலே அரசாங்க அலுவ லில் பங்கு பெறுவதையே கூறினர்கள். இறைமையானது எக்லேசியாவிலும் நீதிமன்றங்களிலும் கூடியிருந்த மக்களிடமே இருந்தது. ஆனால் இம்முறையின்படி ஒவ்வொரு பதவிக்கும் ஏற்ற தகுதியுடையவர்களைத் தெரிந்தெடுக்க முடியாமற் போயிற்று.

பேரவையிலும், அரசாங்க அலுவலிலும் மக்கள் பணியாற்றிய போது தமது முழு நேரத்தையும், கவனத்தையும் அதற்கே செல வழிக்க வேண்டியிருந்ததால் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஏனெனில் ஏழைக் குடிகள் ஊதியமின்றி அந்த அலுவல்களில் ஈடுபட முடியாது. ஆகவே சம்பளம் வழங்கும் முறை ஏற்படுத்தப்பட்டது. ஐந்நூறு பேரின் அவை மட்டுமல்லாமல் மக்களது நீதி மன்றங்கள், பேரவை முதலியவற்றில் பணி செய்த அனைவருக்கும் சம்பளம் கொடுக்கப் பட்டது. இதன் விளைவாக இந்தக் கூட்டங்களுக்கு அதிகமான வர்கள் வந்து பங்கு பெற்றனர். பெரிக்கிலீஸின் அரசியல் சீர் திருத்தங்களில் தலையாயது அரசாங்க அலுவலர்களுக்கு ஊதியம் அளித்ததுதான்.

நீதித்துறை ஆட்சி

ஏதன்ஸ் அரசியலின் இன்னொரு முக்கிய குணம் என்ன வென்றால் மக்களே நீதித்துறை ஆட்சியை நடத்தி வந்தார்கள். ஹெலியியா என்ற நீதி நிறுவனத்தில் ஏதன்ஸின் மக்களாட்சிக் கருத்துக்கேற்ப முப்பது வயதுக்கு மேற்பட்ட எல்லோரும் உறுப்பினர்களாக முடியும். ஆனால் பெரிக்கிலீஸ் காலம் வரை யில் நீதிபதிகள் சம்பளமின்றித் தொண்டாற்றி வந்ததால், ஹெலியியாவின் ஆணையேற்று அப்பதவிக்குத் தகுதியுள்ளவர்கள்

என்று தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டும் நீதி நிறுவன உறுப்பினரானர்கள். ஹெலியியாவின் ஆணை யேற்கும்போது நடுவர்கள் நாட்டின் சட்டங்களுக்கேற்ப நீதி வழங்குவதாக உறுதி மொழி அளிப்பார்கள். வழக்குகளில் நீதிபதிகளின் தீர்ப்பே முடிவானது.

நாளடைவில் நீதித்துறையின் வேலைகள் அதிகரித்ததால் நாள்தோறும் நீதி மன்றங்களுக்கு வரக்கூடிய நீதிபதிகள் தேவையாயிருந்தனர். அதற்காக பெரிக்கிலீஸ் அவர்களுக்குச் சம்பளம் வழங்கும் முறையை ஏற்படுத்தினர். ஆனால் எளிதாகக் கிடைக்கக்கூடிய சம்பளத்தைப் பெறுவதற்காக ஏழைகளும், சோம்பேறிகளும் நீதித்துறையில் நுழையத் தலைப்பட்டனர். ஏனெனில் நீதிமன்றத்தில் அமர்ந்து வழக்குகளில் தீர்ப்பளிக்கும் போது நடுவர்கள் மகிழ்ச்சியடைந்ததுடன் வழக்குரைஞர்களின் முகப் புகழ்ச்சியுரைகளைக் கேட்டுப் பெருமையு மடைந்தார்கள். நீதித்துறையில் பணியாற்ற விரும்பிய முப்பது வயதுக்கு மேற்பட்ட எவரும் தனது பெயரைப் பதிவு செய்துகொள்ளலாம். இப்பெயர் வரிசையிலிருந்து சீட்டுக் குலுக்கும் முறைப்படி நீதிபதிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர். நீதிபதிகள் கைக்கூலி வாங்குவதைத் தடுப்பதற்காக ஒருமுறை கையாளப்பட்டது. அஃதாவது ஒரு நீதிபதி எந்த நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுவாரென முன்னர்த் தெரிவிக்காமல் விசாரணை நடக்கும் நாளன்றுதான் அறிவிக்கப்படும்.

அரசியல் சம்பந்தமான வழக்குகளில் நீதிபதிகள் சிலவேளைகளில் தமது அரசியல் கருத்திற்கேற்ப ஒருதலையான தீர்ப்பளித்ததாகத் தெரிகிறது. மற்ற வழக்குகளில் அவர்கள் அறியாமையின் காரணமாக நடுநிலையான தீர்ப்பளிக்க முடியாமலும் இருந்திருக்கலாம். ஏனெனில் விசாரணையின்போது இரு கட்சிகளின் வழக்குகளையும் கேட்டுச் சட்ட அறிவு இல்லாத காரணத்தினால் வழக்குரைஞர்களின் சொல்வன்மையில் ஈடுபட்டுத் தீர்ப்பளிப்பதும் உண்டு. ஆனால் அவர்களின் தீர்ப்புக்கு எதிராக மேல் வழக்குத் தொடரமுடியாது.

ஏதன்ஸ் அரசியல் அமைப்பில் காணப்பட்ட குறைகள்

ஏதன்ஸ் மக்களாட்சியின் களங்கமாக இரு பெருங் குறைகள் காணப்பட்டன. முதலாவதாக அடிமைத்தனம் ஏதன்ஸில் நிலை பெற்றிருந்தது. 1,35,000 குடிகளிருந்த அந்நகரில் 1,00,000 அடிமைகள் இருந்தார்கள். அடிமைகளுக்குக் குடிமை உரிமை கிடையாது. கீழ்த்தர வேலைகளையும், குற்றேவல்களையும் அவர்களே செய்துவந்தார்கள். அதனால்தான் அரசாங்க அலு

வல்களில் ஈடுபட ஏதன்ஸ் குடிகளுக்குப் போதுமான நேரம் இருந்தது. ஆகவே அரிஸ்டாட்டில் மக்கள் ''நல்வாழ்வு'' வாழ அடிமைகள் தேவை எனக் கூறுகிறார். ஏதன்ஸ் நகர மக்கள் அடிமைகளைப் பெருந்தன்மையுடன் நடத்தினர். மேலும் கிரேக்க நாட்டின் எல்லா நகரங்களிலும் அடிமை நிறுவனம் நிலைபெற்றிருந்தது. ஆனால் தற்காலக் கொள்கையின்படி பார்த்தால் ஏதன்ஸ் ஒரு மக்களாட்சி அரசாகத் திகழ்ந்தபோதிலும் அது அடிமைத்தனம் என்ற புற்றுப் புரையோடிய ஓர் அரசாகவே இருந்தது. இரண்டாவதாக, ஏதன்ஸ் தனது மக்களாட்சிக் காலத்தில் ஒருபெரிய ஏகாதிபத்திய நாடாக விளங்கியது. ஈஜியன் கடலிலும், அதைச் சுற்றியுமுள்ள பல நகரங்கள் அதன் ஆட்சிக்கு அடங்கியிருந்த காலத்தில் அவைகள் ஏதன்ஸைப் பின்பற்றவும், அதன் ஆணைகளுக்குப் பணியவும், அதன் பெருமைக்காகக் கருவூலத்தை நிரப்பவும் வற்புறுத்தப்பட்டன. இதுவே இறுதியில் ஏதன்ஸின் அழிவுக்கு ஒரு காரணமாயிற்று.

இவ்விரண்டு குறைகளோடு இன்னொரு குறையும் ஏதன்ஸ் மக்களாட்சியில் காணப்பட்டது. ஏதன்ஸ் மக்களாட்சியானது சில வேளை பாமரக் கும்பலாட்சியாகவும் மாறியது. ஆகவேதான் பிளேட்டோ என்ற கிரேக்க அறிஞர் அரசியல் அதிகாரம் அறிவுடையோரிடம் ஒப்புவிக்கப்பட வேண்டும் எனக் கருதினர்.

ஏதன்ஸ் மக்கள் மிகச் சிறந்த முறையில் ஆட்சி நடத்தவில்லையெனினும் மக்களாட்சிக் காலமாகிய அப்பொற்காலத்தில் பல அருஞ் செயல்களைச் செய்தனர். அழகியதொரு நகரை அமைத்ததுடன் சட்டத்திற்கு அமைந்த குடிகளாகவும் திகழ்ந்தார்கள். கிரேக்க உலகின் பெரும் பகுதியை ஒன்றுக இணைத்தார்கள். புகழ்மிக்க பாரசீகப் பேரரசை முறியடித்துக் கடலிலிருந்து விரட்டியடித்தனர். அறிவு வளர்ச்சி பெறக்கூடிய சிறந்ததொரு சூழ்நிலையை அமைத்தனர். அது மலர்ச்சியுற்று, உலகை வளப்படுத்தக் கூடிய பல பயன்தரும் கனிகளைக் கொடுத்தது. தத்துவம், சிற்பம், இலக்கியம் முதலியவை இக் காலத்தில்தான் செழித்தோங்கின. ஃப்ரீமென் எடுத்துக் காட்டுவதுபோல உலகிலே முதன் முதலாக ஏதன்ஸில்தான் வன்முறைக்குப் பதிலாகச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. அவர் கூறுகிறார்: ''செயல்துறை வேலைகளில் ஈடுபட்ட இக்கும்பல் உலகம் காணுத சிறந்ததோர் அரசாங்கத்தை அமைத்தது. முடியாத செயல்களை அது செய்யவில்லை. நில உலகை விண்ணுலகாகவும், மக்களை வான தூதர்களாகவும் அது மாற்றவில்லை...அதற்கு முன்னிருந்த ஒவ்வொரு அரசாங்கத்தையும் விட மேம்பட்டவிதமாக விளங்கிய அதைச் சிறந்த அரசாங்கமெனக் கூறவேண்டும்.''

இ. ஸ்பார்ட்டா : அரசியல் அமைப்பு

லக்கோனியாவின் மீது படையெடுத்துவந்த டோரியர்கள் அதன் பழங்குடிகளை வென்று அங்குத் தமதாட்சியை நிறுவினர்கள். அதன் விளைவாக எழுந்ததே ஸ்பார்ட்டா என்ற அரசு. ஸ்பார்ட்டாவின் ஆட்சி முறையை முதன்முதலில் உருவாக்கியவர் லக்கர்கஸ் என்பார். அவரது காலத்தில் அந்நகர அரசில் ஸ்பார்ட்டர்கள் என்ற உரிமை பெற்ற குடிகளும், அவர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பெரியோஸி என்ற இனத்தவரும், ஹீலட்டுகள் என்ற அடிமைகளும் இருந்தனர். லக்கர்கஸின் அரசியல் அமைப்பு எந்த ஆண்டு எழுதப்பட்டதெனத் திட்டமாகத் தெரியவில்லை. கி.மு. 1000 முதல் 820 வரை பல ஆண்டுகள் கூறப்படுகின்றன. நாளடைவில் இந்த அரசியல் அமைப்பில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. ஸ்பார்ட்டா அரசாங்கத்தின் முக்கியப் பிரிவுகள் இரு மன்னர்கள், ஜெரௌசியா (Gerousia) என்ற அவை, எஃபர்கள் (Ephors) என்ற அதிகாரிகளின் குழு, அப்பெல்லா (Apella) என்ற மக்களின் பேரவை முதலியவையாகும்.

இரு மன்னர்கள்

ஸ்பார்ட்டா மன்னர்களின் அதிகாரம் படைத்துறை, மதத்துறை, ஆட்சித்துறை என்று மூன்று வகைப்படும். போர் தொடுப்பதும், உடன்படிக்கை செய்வதும் அப்பெல்லாவின் உரிமைகளாக இருந்தாலும், படையெடுப்புத் தொடங்கியவுடன் அரசர்கள் முழு இராணுவ அதிகாரம் பெற்றனர். வருங்காலத்தைப் பற்றிக் குறியுரைக்கும் தெய்வமொழி (Oracle) அவர்களின் பாதுகாப்பில் இருந்ததால் குருட்டு நம்பிக்கையுள்ள ஸ்பார்ட்டர்கள் அரசர்களைப் பெருமதிப்புடன் நடத்தி வந்தார்கள். இஃது அரசர்களுக்கு மதத்துறையில் மிகுந்த அதிகாரத்தை அளித்தது. ஆட்சித் துறையில் அரசர்களுக்கு இருந்த முக்கிய அதிகாரங்கள் இளவரசிகளை மணமுடித்து வைத்தல், பிறபிள்ளைகளை வளர்க்கும் உரிமை, பொதுச்சாலைகளை மேற்பார்வையிடல் முதலியனவாகும்.

ஜெரௌசியா

இது குலத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பது உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அவை. இரு அரச குலங்களின் பிரதிநிதிகளாக இரு அரசர்களும் இந்த அவையில் அமர்ந்தனர். உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறையைப் புளூட்டார்க் (Plutarch) மிக அழகாக விளக்குகிறார். அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள்தாம் இவ்வவையின் உறுப்பினர்க

ளாக முடியும். அவர்கள் ஒவ்வொருவராக அப்பெல்லா என்ற பேரவையின்முன் கூட்டிக்கொண்டு போகப்படுவார்கள். ஒவ் வொருவர் வரும்போதும் பேரவை ஆரவாரம் செய்யும். இதை அடுத்த அறையின் உள்ளே வைத்துப் பூட்டப்பட்டிருக்கும் நடுவர்கள் கேட்டுக்கொண்டிருப்பார்கள். யார் யார் வரும்போது மக்களின் மகிழ்ச்சிக்குரல் உரமாக இருக்கிறதோ அந்த உறுப் பினர்களை நடுவர்கள் தேர்ந்தெடுப்பார்கள். மற்றவர்கள் தள்ளப் படுவார்கள்.

சட்டமியற்றும் வேலையிலும், நீதித்துறை அலுவல்களிலும் ஜெரௌசியாவுக்குச் சில அதிகாரங்கள் இருந்தன. மக்களின் பேரவையின் முன் கொண்டு வரப்படும் நடவடிக்கைகளை ஜெரௌசியா தயாரிக்கும். அது விரும்பாதவற்றைப் பேரவை யின் முன் சமர்ப்பிக்க மறுப்பதற்கும் அதற்கு உரிமையுண்டு. ஜெரௌசியா ஸ்பார்ட்டாவின் குற்றவியல் நீதிமன்றமாகவும் பணியாற்றியது. அது தன் நீதித்துறை அதிகாரத்தை நாட்டு மக்கள் எல்லோர் மேலும் அல்லாமல் அரசர்கள், எஃபர்கள் மேலும் கூடச் செலுத்திவந்தது. எவ்விதத் தண்டனையும் அது வழங்கலாம். குடிமை உரிமையையும் உயிரையும்கூட எடுப்ப தற்கு அதற்கு உரிமையுண்டு.

எஃபர்கள்

எஃபர்களின் குழு ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டது. முடியாட்சியின் தன்மை யையும், மக்களாட்சியின் கூறுகளையும் ஒருங்கே கொண்ட ஸ்பார்ட்டாவின் கலப்பு அரசியல் அமைப்பில் (Mixed constitution) எஃபர்களின் குழு மக்களாட்சியின் இயல்புகளைக் காட்டுகிறது.

தொடக்கத்தில் எஃபர்கள் அரசர்களால் ஏற்படுத்தப்பட்ட சிறு நீதிபதிகளாகவே இருந்தனர். பிறகு மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டனர். இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையைப் பற்றிக் கூறும்போது அரிஸ்டாட்டில் அது "சிறு பிள்ளைத்தன மானது" என்று சொல்கிறார். ஆனால் ஜெரௌசியா தேர்ந் தெடுக்கும் முறைக்கும் இந்தச் சொல்லையே அவர் பயன்படுத்து கிறார். ஆகவே இரு முறைகளும் ஏறக்குறைய ஒரேவிதமானது என்று ஊகிக்கலாம். எஃபராகத் தேர்ந்தெடுக்கப்படக் குடியுரி மையைத் தவிர வேறு எவ்விதமான தகுதியும் தேவையில்லை.

தொடக்கத்தில் எஃபர்களின் அதிகாரங்கள் மிகக் குறைவாக இருந்தபோதிலும் நாளடைவில் அவை வளர்ந்து பெருகி இறுதி யில் அரசர்களின் அதிகாரங்களையும் கவர்ந்தன. எஃபர்கள் ஜெரௌசியாவைக் கூட்டி அதற்குத் தலைமை தாங்கும் உரிமை

பெற்றனர். அவர்கள் ஜெரௌசியாவின் கட்டளைகளை நிறை வேற்றி வைத்ததோடு அதன் நீதித்துறை அதிகாரங்களிலும் பங்கு பெற்றனர்.

அரச துரோகத்திற்காக எவரையும் சிறைப்படுத்த எஃபர் களுக்கு உரிமை இருந்தது. அவ்வழக்குகளின்போது எஃபர் களே நீதிமன்றத்தில் தலைமை தாங்குவார்கள். எஃபர்களும் ஜெரௌசியாவின் 28 உறுப்பினர்களும், அரசர்களும் அந்நீதி மன்றத்தின் உறுப்பினர்களாக இருப்பார்கள். குற்றவியலச் சாராத ஏனைய வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்க எஃபர்க களுக்கு முழு அதிகாரம் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அயல்நாட்டுச் செயல்களில் அவர்களுக்கு மேலான அதிகாரம் இருந்தது. போர் தொடுப்பதும், ஒப்பந்தம் செய்வதும் அப் பெல்லாவின் அலுவலாக இருந்தபோதிலும், அச்செயல்களில் அதன் கட்டளைகளை நிறைவேற்றி வைத்தல் எஃபர்களின் கடமை. அந்நிய நாட்டுச் செய்திகளை எல்லாம் முதலில் அவர் களே தீர்மானிப்பார்கள். பிறகு அவை ஜெரௌசியாவின் முன் கொண்டு வரப்படும். அதன்பின் அப்பெல்லாவின் முன் சமர்ப்பிக்கப்படும்.

பதவியில் இருக்கும்போது எஃபர்கள் யாருக்கும் பொறுப் புள்ளவர்களாக இல்லாதபோதிலும், பதவி துறக்கும்போது தமது பதவிக் காலத்தில் ஆற்றிய செயல்களைப் பற்றி அவர்களுக் குப் பிறகு பதவிக்கு வருபவர்களிடம் விளக்கம் கொடுக்க வேண்டும்.

அப்பெல்லா

எஃபர்களின்றி அப்பெல்லா செயல்பட முடியாது. மக்களின் பேரவையாக இருந்தபோதிலும் அதற்குச் சட்டம் இயற்றுவதில் தொடக்க உரிமையோ, வாதம் செய்யும் உரிமையோ கிடையாது. எஃபர்களால் அதன்முன் கொண்டுவந்த பொருள் பற்றி "வேண் டும்", "வேண்டாம்" என்று சொல்வதற்கு மட்டும் அதிகார முண்டு. எஃபர்கள்தாம் அப்பெல்லாவைக் கூட்டி அதற்குத் தலைமை தாங்குவார்கள். அவர்களின் இசைவின்பேரில்தான் அப்பெல்லாவின் உறுப்பினர்கள் பேரவையில் பேச முடியும். ஆனல் போர் தொடுப்பதிலும், சமாதான உடன்படிக்கை செய்வ திலும் அப்பெல்லாவிற்கு மட்டும் உரிமையுண்டு. நாளடைவில் அப்பெல்லாவின் கூட்டங்களுக்கு வரும் மக்களின் தொகை குறைந்துவிட்டது.

ஸ்பார்ட்டாவின் அரசியல் அமைப்பில் அரசர், பிரபுக்கள், மக்கள் என்ற மூன்று கூறுகளையும் காணலாம். மூன்றும் சம

நிலையில் இருந்தன. ஆனால் நுணுகி ஆய்ந்து பார்த்தால் இரண்டு இயல்புகளையே காண முடியும். குலத்தின் அடிப்படையில் எழுந்த மென்மையான சிறுகுழுவாட்சியையும், அதைக் கட்டுப்படுத்தும் திண்மையான மக்களாட்சியையும் காணலாம். இவை இரண்டும் கலந்த ஒரு கலவையே ஸ்பார்ட்டாவின் அரசாங்கம். குல இயல்புகளே ஜெரௌசியாவின் அதிகாரத்தில் பார்க்கிறோம். ஆனால் அதன் உறுப்பினர்கள் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டனர் என்பதால் அதன் மென்மை தெரிகிறது. அரசாங்கத்தில் காணப்படும் மக்களாட்சிப் பண்புகள் மூன்று வகைப்படும். முதலாவது, சமூக சமத்துவம் ஓரளவு நிலைநாட்டப்பட்டது. இரண்டாவது, ஜெரௌசியாவின் உறுப்பினர்களும், எஃபர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதுமல்லாமல் அவையின் முடிவுகளை ஏற்கவோ, மறுக்கவோ மக்களுக்கு உரிமை இருந்தது. மூன்றாவது, நகரத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் ஏராளமான அதிகாரம் செலுத்தி வந்தனர்.

மக்களாட்சிப் பாதையில் ஏறுநடைபோட்டு வீறுடன் நடந்த ஸ்பார்ட்டா ஏன் இன்னும் முன்னேறி மக்களாட்சியாக மலரவில்லை? இந்தக் கேள்விக்கு விடை தேடினால் அதைப் பிலப்பனீசிய நாட்டுக் கூட்டத்தில் (Peloponnesian confederacy) காண வேண்டும். இந்தக் கூட்டுக் குழுவை இணைத்து வைப்பதற்காக ஸ்பார்ட்டா அக்குழுவிலிருந்த பல்வேறு சிறுகுழுவாட்சிகளை ஆதரித்தது. ஆகவே ஸ்பார்ட்டாவும் புதுமை விரும்பாது பழைமையை நாடி மக்களாட்சியை நோக்கி நகராது நின்ற நிலையிலே நின்றது. அந்நாட்டுக் கூட்டத்திற்கு ஸ்பார்ட்டா தொடர்ந்து தலைமைப் பதவி வகித்ததால் அதன் பழைய அரசியல் முறை நிலையாக நிற்கத் தொடங்கியது. எஃபர்களும் அரசியல் அமைப்பை மாற்ற விரும்பவில்லை. ஏனெனில் அவர்கள் கிரேக்க உலகிலே ஆற்றல்மிக்க அரசின் தலைவர்களாக விளங்கினர்கள். அவ்வுயர் நிலையிலிருந்து குறைந்த நிலைக்கு மாற விரும்பவில்லை. ஆகவே பல தலைமுறைகளாக விரிந்து கொண்டே சென்ற ஸ்பார்ட்டாவின் அரசாங்கம் திடீரென இறுகி, நிலையாகிப் பல நூற்றாண்டுகளாக மாறாமல் நின்று விட்டது.

---

6. ரோமானியக் குடியரசு

பழங்கால ரோமானிய நூலாசிரியர்களின் கருத்துப்படி ரோம் நகரம் கி. மு. 753 இல் ரோமுலஸ், ரீமுஸ் என்ற இரு சகோதரர்களால் நிறுவப்பட்டது. அவ்வாண்டிலிருந்து கி. மு. 509 வரை ஏழு அரசர்கள் ரோமை ஆண்டு வந்தனர். முதல் அரசன்

ஸெனட் (Senate) என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி, மக்களை "க்யூரியா" (Curia) என்ற பிரிவுகளாகப் பகுத்ததாக மரபு வழக்கி லிருந்து அறிகிறோம். அவன் பல போர்களில் வெற்றி பெற்று ரோம் ஆட்சியை வலுப்படுத்தினன்.

முடியரசு

அரசன்

வரலாற்றிலே ரோம் முதல் முதலாகத் தோன்றும் போது முடியரசு நிறுவப்பட்ட ஒரு நகர அரசாக விளங்கியது. ஆனால் அரச பதவி தலைமுறை தலைமுறையாக வரும் பதவியாக இல்லா மல் தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனமாக இருந்தது. அர சன் இறந்ததும் அப்பதவிக்கேற்ற தகுதியுடைய ஸெனட் அவை யின் உறுப்பினரொருவர் "இடைக்கால மன்னராக (Inter rex) ஐந்து நாட்களுக்கு மட்டும் ஏற்படுத்தப்படுவார். அவர் இன் னும் ஓர் இடைக்கால மன்னரை நியமிப்பார். நிலையான அரசன் தெரிந்தெடுக்கப்படும் வரை இம்முறை பின்பற்றப்படும். இடைக் கால மன்னர் அரசனைத் தேர்ந்தெடுக்கும் போது ஸெனட்டின் விருப்பப்படியே நடப்பார். பிறகு "க்யூரியா" (Curia) பிரிவின் படி குழுமியுள்ள மக்களின் விருப்பத்தையும் கேட்டு அதன் பிறகே அரசனை ஒழுங்கு முறைப்படி நியமிப்பார்.

இலத்தீன் மொழியில் "ரெக்ஸ்" (Rex), அதாவது ஒழுங்கு படுத்துபவர் என்று பொருள்படும் சொல் ரோமானிய மன்னனைக் குறிப்பிட்டது. அரசன் மக்களின் இவ்வுலக, மறுவுலகக் காரியங் களை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு வாய்ந்தவன். எல்லா மக்களுக் கும் அவனே மதக்குரு. போர்க்காலங்களில் படைகளை நடத்து வதும், நாட்டில் நீதி வழங்குதலும் அவனது முக்கிய அலுவல் கள். கடவுளர்களோடும், பிற நாட்டினரோடும் தொடர்பு கொள் ளும் போது அரசனே மக்களின் பிரதிநிதியாக இருப்பான். இவ் வளவு அதிகாரங்களையும் ஒருங்கே குறிப்பதற்கு ஆழ்ந்த கருத் தடங்கிய "இம்பீரியம்" (Imperium) என்ற சொல்லை ரோமானி யர்கள் பயன்படுத்தினர்கள். அச்சொல் அரசனின் அதிகாரத் தைக் குடும்பத் தலைவன் அல்லது கிராமத் தலைவனின் அதிகாரத் திலிருந்து வேறுபடுத்திக் காட்டியது. அரசனின் அதிகாரம் வரையற்றது என்றும் மற்றவர்கள் செலுத்தும் அதிகாரம் அரச னிடமிருந்து பெறப்பட்டது என்றும் இச்சொல் குறிப்பிடுகிறது.

அரசனுக்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட்டபோதிலும் அதற் கும் சில வரம்புகளை ரோமானியர்கள் வகுத்தனர். முக்கியமான காரியங்களில் எல்லாம் மன்னன் ஸெனட் அவையைக் கலந்து

பேசவேண்டும். மேலும் அவன் முன்னோர்களின் பழக்க வழக்கங்களை மீற முடியாது.

இவ்வாருக ரோமானிய அரசியல் அமைப்பில் அரசனின் அதிகாரங்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருந்ததுமல்லாமல், அவற்றின் வரம்புகளும் எடுத்துக்காட்டப்பட்டிருந்தன. அரசின் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒழுங்கும், கட்டுப்பாடும், அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதலும், பணிவும் மக்களிடையே காணப்பட்டன.

ஸெனட்

ஒவ்வொரு கூட்டுக் குடும்பத்திலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட சபைதான் ஸெனட். அதன் உறுப்பினர்களைத் தெரிந்தெடுப்பது அரசனது வேலை. அவ்வாறு தெரிந்தெடுக்கும்போது அவன் மரபு வழக்காகப் பின்பற்றப்பட்ட முறைகளின்படி அவர்களைத் தெரிந்தெடுப்பான். ஸெனட்டின் அதிகாரங்கள் மிகப் பல. அரசன் இறந்ததும் அவனது அதிகாரம் முழுவதும் ஸெனட்டையே சாரும். மக்களின் பேரவை ஆற்றும் செயல்கள் எல்லாம் ஸெனட்டின் முன் கொண்டுவரப்படும். அவற்றை ஏற்கவோ அல்லது மறுக்கவோ ஸெனட்டிற்கு அதிகாரமுண்டு. அரசன் ஸெனட்டைக் கலந்து பேசும்போது அவனுக்கு அறிவுரை கூறவும் ஸெனட்டிற்கு உரிமையுண்டு.

கொமிஷியா க்யூரியாட்டா (Comitia curiata)

ரோமானிய மக்கள் "க்யூரியா" என்ற பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். இந்தப் பகுதிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட நிறுவனமே கொமிஷியா க்யூரியாட்டா என்றழைக்கப்பட்டது. அரசன் அல்லது இடைக்கால மன்னன் மட்டும் மக்களை அழைத்து அவர்களிடம் முக்கியமான செய்திகளைக் கலந்து பேச உரிமை பெற்றிருந்தான். அரசனைத் தேர்ந்தெடுக்கவோ, மேல்வழக்கை விசாரிக்கவோ அல்லது முக்கிய அறிவிப்புகளைக் கேட்கவோ மக்களைக் கூட்டலாம். போர், குடியுரிமை போன்ற சிறந்த செயல்களை முடிவு செய்ய அரசன் கொமிஷியாவில் கூடிய மக்களின் சம்மதத்தைப் பெறுவது வழக்கம்.

ரோமின் இறுதி மூன்று அரசர்களாகிய டார்க்வின் (Tarquins) மன்னர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறைப்படி அரியணை ஏறுமல், வாரிசு முறைப்படி ஆட்சியேற்றனர். மேலும் பழைய மரபுகளின்படி நடக்காமல் தம் விருப்பப்படி ஆண்டனர். இதனால் வெகுண்டெழுந்த மக்கள் கி. மு. 509 இல் செருக்குடைய டார்க்வின் (Tarquin the Proud) என்ற அரசனை வெளியேற்றி முடியரசைக் கவிழ்த்துக் குடியரசை நிலை நாட்டினர்.

முடியாட்சி சரிந்த போதிலும் அதனால் அரசியல் அமைப்பின் முறைகளில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. இதுவரை அரசன் மட்டும் அவன் வாழ்நாள் முழுவதும் பெற்றிருந்த "இம்பீரியம்" என்ற எல்லையற்ற அதிகாரம் இப்போது இரண்டு சமமான அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது. இவ்விருவரும் ஸெனட்டின் இசைவின் பேரில் மக்களால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். முதலில் இவர்கள் "ப்ரீட்டர்கள்" (Praetors) என அழைக்கப்பட்டபோதிலும் பிறகு "கான்சல்கள்" (Consuls) எனக் கூறப்பட்டனர். இந்த இரட்டை அதிகாரம் இம்பீரியத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு கட்டாக இருந்தது. இரு கான்சல்களும் இவ்வதிகாரத்தை முழுவதும் பெற்றிருந்த போதிலும் ஒருவர் மற்றொருவரின் செயல்களை எதிர்த்து அவற்றைத் தம் மறுப்பாணையால் (Veto) தடை செய்யமுடியும். ரோமானிய அரசில் மறுப் பாணைக்கு மதிப்பு இருந்தது. மேலும் தனது தேர்தலை ஏற்றுக் கொண்ட ஸெனட்டின் விருப்பத்திற்கெதிராக எந்தக் கான்சலும் செயல்பட விரும்பமாட்டான். ஏனெனில் தனது பதவிக் காலம் முடிந்ததும் திரும்பவும் அவன் ஸெனட்டின் உறுப்பினனாகி விடுவான்.

ஸெனட் அனுபவமிக்க பெட்ரீஷியர்களைக் கொண்ட நிலை யான நிறுவனமாக இருந்தது. உறுப்பினர்கள் வாழ்நாள் முழு வதும் பதவியிலிருந்தனர். கான்ஸல்களுக்கு அறிவுரை சொல் வதுதான் ஸெனட்டின் முக்கிய வேலையாக இருந்தபோதிலும், அதன் உறுப்பினர்கள் அரசியல் அனுபவம் மிகுந்தவர்களாக இருந்ததாலும், வாழ்நாள் முழுவதும் பதவியிலிருந்ததாலும், கான் சல்கள் இடைவிடாது மாறிக்கொண்டிருந்ததாலும் ரோமானிய அரசை ஆளும் உண்மையான அதிகாரம் ஸெனட்டிற்கு மாறியது. இவ்வாறாக முடியாட்சி மறைந்து குடியாட்சி தோன்றும் இடைக் காலத்தில் ரோமானிய அரசாங்கம் பெட்ரீஷியர்கள் (Patricians) என்ற உயர்குலத்தோரின் கைக்கு மாறியது. ஸெனட் தவிர கொமிஷியாக்யூரியாட்டா, கொமிஷியா செஞ்சுரியாட்டா (Comitia Centuriata) என்ற மக்களின் பேரவைகளுமிருந்தன. கொமி ஷியா க்யூரியாட்டாவில் மக்கள் குலப்பிரிவின்படி வாக்களித்தனர். கொமிஷியா செஞ்சுரியாட்டாவில் நூறுபேர் கொண்ட குழுப் பிரிவின்படி வாக்களித்தனர். கான்சல்களைத் தேர்ந்தெடுத்தலும், அவர்களின் தீர்ப்புக்கெதிராக மேல் வழக்குகளை விசாரித்தலும், சட்டமியற்றுவதும் அவைகளின் வேலைகள்.

பின் வந்த இருநூறுண்டுகளிலும் (கி.மு.509-287) ரோமானி யக் குடியரசு அரசியல் பூசல்களால் அலைக்கழிக்கப்பட்டது. அவற் றில் உயர்குலத்தோரான பெட்ரீஷியர்களுக்கும், பொதுமக்களான

ப்ளெபியர்களுக்கும் (Plebians) சமூக, அரசியல், மத சம்பந்தமான உரிமைகளுக்காக ஏற்பட்ட போர் முக்கியமானது.

வகுப்புகளிடையே போராட்டம்
(Struggle between the Orders)

ரோமில் பெட்ரீஷியர்கள் என்ற சிறப்புரிமை பெற்ற வகுப்பினர் இருந்தனர். இவர்கள் செல்வமிக்க நிலச்சுவான்கள். உரிமை பெறுத ப்ளெபியர்கள் (Plebs) என்ற வகுப்பினரை அவர்கள் நசுக்கித் தமது செல்வாக்கை வளர்த்துக் கொண்டனர். ப்ளெபியர்கள் அநேகமாக சிறுதர நிலச்சுவான்களாகவும், குத்தகைக் காரர்களாகவும் இருந்தனர். ப்ளெபியர் எவரும் கான்சல்களாகவோ, ஸெனட்டில் உறுப்பினராகவோ பதவி பெறமுடியாது. எழுதப்படாத சட்டத்தை விளக்கிக் கூறவேண்டிய நீதித் துறையிலும் அவர்களுக்கு இடம் கிடையாது. பெட்ரீஷியர்களே நீதிபதிகளாக இருந்தனர். ஆகவே நீதி வழங்கும்போது பெட்ரீஷியர்களுக்குச் சார்பாகவே ஒருதலையான தீர்ப்பளித்தனர். ப்ளெபியர்கள் ஏழைகளாக இருந்ததால், மக்களின் அவையிலும் கூட பெட்ரீஷியர்களின் செல்வாக்கே அதிகமாக இருந்தது. இந்த அரசியல் குறைகள் போகச் சமூக, பொருளாதாரக் குறைகளும் மலிந்திருந்தன. இரு வகுப்பாருக்குமிடையே திருமண உறவு கிடையாது. ப்ளெபியர்கள் போர்க்காலங்களில் போர்முனைக்கு அனுப்பப்பட்ட போதிலும் கொள்ளைப்பொருளில் அவர்களுக்குப் பங்கு கிடையாது. அவர்கள் பலவான வரிகளைச் செலுத்தி வந்தனர். கடன் சட்டம் (Law of Debt) அவர்களை அமுக்கி வந்தது. பெட்ரீஷியர்கள் பொது நிலங்களில் தமது மந்தைகளை மேயவிடலாம். ஆனல் ப்ளெபியர்கள் அவ்வாறு செய்ய முடியாது. இவ்வாறுக ரோம் மக்களாட்சியாக மாறியபோதிலும் உயர் குடியாட்சியாகவே இருந்தது. இதன் விளைவாக இரு வகுப்புகளுக்குமிடையே போராட்டம் தொடங்கியது.

ப்ளெபியர்கள் ஒன்று சேர்ந்து ரோமை விட்டு விலகித் தூய மலைக்குப் (Sacred Mount) பிரிந்து சென்றார்கள். ப்ளெபியர்கள் சென்றதும் அவர்கள் செய்துவந்த வேலைகளெல்லாம் பெட்ரீஷியர்களால் செய்யமுடியவில்லை. மேலும் ப்ளெபியர்கள் போர்ச் சூழ்நிலையில் தவித்துக் கொண்டிருந்த ரோமைக் காப்பாற்ற மறுத்தனர். இதன் விளைவாகப் பெட்ரீஷியர்கள் பயந்து ப்ளெபியர்களுக்கு அவர்கள் விரும்பிய உரிமைகளை வழங்க இசைந்தனர். ப்ளெபியர்களின் உரிமைகளைக் காக்க 'ட்ரிப்யூன்ஸ்' (Tribunes) என்ற ப்ளெபிய அதிகாரிகள் கி.மு. 494 இல் ஏற்படுத்தப்பட்டனர். இரண்டு ட்ரிப்யூன்கள் ப்ளெபியர்களால் அவர்

கள் வகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிறகு அவர்களின் எண்ணிக்கை இரண்டிலிருந்து பத்தாக அதிகரிக்கப்பட்டது. அவர்கள் ப்ளெபியர்களைக் கூட்டி முக்கியமான செய்திகளை அவர்களிடம் கலந்துபேசலாம். அவர்கள் அதிகாரிகளாக இல்லாவிட்டாலும் அதிகாரிகளின் கட்டளைகளை எதிர்த்து மறுப்பாணையைப் பயன்படுத்த அவர்களுக்கு உரிமையுண்டு. நாளடைவில் ட்ரிப்யூன்களின் அதிகாரங்கள் பெருகின.

சட்டங்கள் எழுதப்பட வேண்டுமென்பது ப்ளெபியர்களின் இன்னொரு முக்கிய உரிமைக் கோரிக்கையாகும். இதுவும் பெட்ரீஷியர்களால் கி. மு. 451இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கெனப் பத்துப் பேர் கொண்ட குழுவொன்று நிறுவப்பட்டது. அது சட்டங்களைத் தொகுத்து வெளியிட்டது. அவைகள் பத்துப் பலகைகளில் எழுதி வெளியிடப்பட்டமையால் அத்தொகுதிக்குப் பத்துப் பலகைகள் (Ten Tables) எனப் பெயர் வழங்கப்பட்டது. இதுவரை பெட்ரீஷியரின் தனி உரிமையாக இருந்து வந்த சட்டம் இப்போது எல்லோருக்கும் பொதுவாகி இரு வகுப்பினருக்கும் சட்டத்துறையில் சமத்துவத்தை அளித்தது.

அடுத்தபடியாக ப்ளெபியர்களுக்குச் சட்டமியற்றும் உரிமையும் வழங்கப்பட்டது. கி. மு. 449இல் நிறைவேற்றப்பட்ட வலேரியன்-ஹொரேஷியன் சட்டத்தின்படி (Lex Velaria Horatia) ட்ரிப்யூன்கள் தலைமை தாங்கும் ப்ளெபியரின் அவைக்குச் சட்டமியற்றும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. அந்த அவையின் தீர்மானங்கள் சட்டங்களாகக் கருதப்பட்டன. ஆனால் இச்சட்டங்கள் ப்ளெபியர்களை மட்டும் கட்டுப்படுத்தின.

அரசியல் துறையில் வழங்கப்பட்ட சமநிலை விரைவில் சமூகத் துறையிலும் அளிக்கப்பட்டது. கி. மு. 445இல் கனூலியன் சட்டம் (Lex Canulius) இயற்றப்பட்டது. அதன்படி பெட்ரீஷியர்களுக்கும் ப்ளெபியர்களுக்குமிடையே திருமண உறவு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அடுத்த நூற்றாண்டில் கி. மு. 367இல் இன்னொரு சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி ஒரு கான்சல் ப்ளெபியராக இருக்க வேண்டும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. விரைவில் மற்றெல்லா உயர் பணியிடங்களும் ப்ளெபியர்களுக்கு விரியத் திறந்து விடப்பட்டன. கி. மு. 300இல் மதக்குருக்களின் குழுவே ப்ளெபியரின் கைக்கு வந்தது. கி. மு. 287இல் இயற்றப்பட்ட ஹோர்ட்டன்ஸியா (Lex Hortensia) சட்டத்தின்படி ப்ளெபியர்களின் அவைகள் ஆக்கும் சட்டங்கள் ப்ளெபியர்களை மட்டுமல்லாமல், நாட்டை முழுவதுமே கட்டுப்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டது.

இவ்வாறுக, இரு வகுப்பினரிடையே தோன்றிய பிணக்கு நீங்கி, அனைவரும் ஒன்றுக இணைந்து நாட்டை ஆளத் தலைப்பட்டனர். இப்போராட்டத்தின் விளைவாக உயர்குடியின் செல்வாக்கு அழிந்து குடியரசு ஏற்படுத்தப்பட்டதுபோல் தோன்றியது. ஆனால், அரசாங்கம் மக்களாட்சியின் தோற்றத்தைப் பெற்றதே தவிர, உண்மையில் உயர்குடியாட்சியின் தன்மைதான் அதில் காணப்பட்டது. செல்வமிக்க ப்ளெபியர்கள் பெட்ரீஷியர்களுடன் சேர்ந்து கொண்டு உயர் பதவிகளைத் தமது தனி உரிமையாக்கிக் கொண்டனர். இதனால் நாளடைவில் இந்த நிறுவனங்கள் குலைந்து, குடியரசு மறைந்து, திரும்பவும் தன்னரசு தோன்ற வழியேற்பட்டது.

கி. மு. மூன்றும் நூற்றாண்டில் ரோமானியக் குடியரசின் அமைப்பு

கி. மு. 287 இல் ஹோர்ட்டன்ஸியா சட்டம் இயற்றப்பட்டதும் ரோமானியக் குடியரசின் வளர்ச்சி முற்றுப்பெற்றது. அதன் மூன்று சிறப்புக் கூறுகள் செயல்துறை அதிகாரிகள் (Magistrates), மக்களின் அவைகள், ஸெனட் என்பவை.

I. செயல்துறை அதிகாரிகள்

இவர்களின் அதிகாரங்கள் நான்கு வகைப்படும். அஃதாவது (1) ஆட்சித்துறை அதிகாரம், (2) மக்கள் அவைகளுடன் தொடர்புள்ள அதிகாரம், (3) ஸெனட்டைச் சார்ந்த அதிகாரம், (4) பொது அதிகாரம். ஆட்சித்துறை அதிகாரமானது உள்நாட்டு ஆட்சிச் செயல்கள், வெளிநாட்டு ஆட்சிச் செயல்கள் என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மக்கள் அவைகளுடன் தொடர்புள்ள அதிகாரமானது தகவல்களைத் தெரிவிப்பதற்காகவோ அல்லது சட்டங்களை இயற்றுவதற்காகவோ அவைகளைக் கூட்டும் அதிகாரமாகும். ஸெனட்டைச் சார்ந்த அதிகாரம் அதன்முன் பொருள்களைக் கொண்டு வருவது. பொது அதிகாரம் என்றால் கடவுளர்களின் விருப்பங்களை நற்குறிகளைக் கொண்டு விளக்கிக் கூறுதல், சட்டங்களை நிறைவேற்றல் முதலியவையாகும். ரோமானிய மக்கள் செயல்துறை அதிகாரிகளைப் பெருமதிப் புணர்ச்சியுடன் நடத்தி வந்தனர். அதிகாரி யொருவர் வழியில் செல்வதைக் கண்டால் எழுந்திருந்து நின்று வெறுந்தலையுடன் அவருக்கு வணக்கம் தெரிவிப்பார்கள். அவரது உயிர் அரசின் உயிர் போன்று புனிதமானது. ஆகவே, அதிகாரியின் உயிரைக் கொல்லச் செய்யும் முயற்சியை அரச துரோகமாகவே கருதினர்கள்

தன்னுட்சியாளர் (Dictator)

போர் அல்லது புரட்சி போன்ற நெருக்கடியான காலங்களில் தன்னுட்சியாளர் ஒருவர் ஏற்படுத்தப்படுவார். அமைதியான காலத்திலும் சில முக்கியமான செயல்களை யாற்றத் தன்னுட்சியாளர் ஏற்படுத்தப்படலாம். ஆனல் அந்நெருக்கடி நீங்கியதும் அவர் பதவியிலிருந்து விலகவேண்டும். நெருக்கடிக் காலத்தில் ஏனைய செயல்துறை அதிகாரிகள் அவரது ஆணைக்குப் பணிந்து செயலாற்றுவர். ஆனல் அவர் வரம்பு மீறித் தன்னுட்சி செய்தால் அதற்காக விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்படலாம். முற்காலத்தில் தன்னுட்சியாளரைக் கான்சல் ஒருவர் ஏற்படுத்துவார். பிறகு இவ்வுரிமையை ஸெனட் கைப்பற்றியது. கி. மு. நான்காம் நூற்ருண்டிற்கு முன்னல், கான்சலாக இருந்த ஒருவரே இப்பதவிக்கு நியமிக்கப்படவேண்டும் என வழக்கம் ஏற்பட்டுவிட்டது.

தன்னுட்சியாளர் தமது வேலையைச் செய்யத் தமக்குத் துணையாகக் குதிரைப்படைத் தலைவரொருவரை (Magister Equitum) ஏற்படுத்துவார். தன்னுட்சியாளர் இல்லாதபோது அவர் படை முழுவதற்கும் தலைவராகப் பணியாற்றுவார். அவரது பதவிக் காலம் தன்னுட்சியாளரின் விருப்பத்தைப் பொறுத்தது.

கான்சல்கள் (Consuls)

ரோமானியக் குடியரசில் கான்சல்களின் பதவி நாட்டின் மிக உயர்ந்த பதவியாகக் கருதப்பட்டு வந்தது. அவர்களின் பெயரைக் கொண்டே ஆண்டுகள் கணக்கிடப்பட்டன. ஒவ்வோர் ஆண்டிலும் இரு கான்சல்கள் கொமிஷியா செஞ்சுரியாட்டாவினல் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்கள் தமது ஆட்சிச் செயல்களில் ஈடுபடும்போது தனித்தோ அல்லது இணைந்தோ செயல்படுவார்கள். அவர்கள் இருவரும் நாள் மாறிமாறி ஸெனட்டின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார்கள். ஸெனட்டின் கட்டளைகளை அவர்களே வெளியிடுவார்கள். ஸெனட்டின் இசைவுபெற்ற சட்ட நடவடிக்கைகளைக் கொமிஷியா செஞ்சுரியாட்டாவின்முன் கொண்டு வருவார்கள். அயல் நாட்டுடன் தொடர்பு கொள்ளும்போது அவர்களே நாட்டின் பிரதிநிதிகளாக இருப்பார்கள்.

சட்ட சம்பந்தமான அதிகாரங்கள் தவிர நீதித்துறையைச் சார்ந்த அதிகாரங்களும் கான்சல்களுக்குண்டு. அரசாங்கத்திற்கும் குடிகளுக்கும், அல்லது இரு நகரங்களுக்கும் இடையே ஏற்படும் பணம் அல்லது சொத்துச் சம்பந்தமான வழக்குகளைத் தீர்த்து வைப்பார்கள். இது தவிரக் குற்றவியல் (Criminal) வழக்குகளையும், அரசதுரோகக் குற்றங்களையும் விசாரிப்பார்கள்.

போர்க்காலங்களில் கான்சல்கள் படைத்துறை அதிகாரங்கள் பெற்றிருந்தனர். இருவரும் ஒன்று சேர்ந்து அவ்வதிகாரங்களைச் செலுத்தினர்கள். ஆனல் பிற்காலத்தில் செயலாற்றும் பகுதிகள இருபிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியில் செயல் புரிந்தனர்.

ப்ரீட்டர்கள் (Praetors)

ஆண்டுதோறும் ஆறு ப்ரீட்டர்கள் கொமிஷியா செஞ்சுரியாட்டாவினல் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் இருவர் ரோம் நகரிலும், நால்வர் மாநிலங்களிலும் பணியாற்றினர். மாநிலங்களில் இருந்தவர்களைவிட ரோமில் இருந்தவர்களுக்கு மதிப்பு அதிகமாக இருந்தது. ரோம் நகரிலுள்ள ப்ரீட்டர்கள் ஆட்சித்துறை அலுவல்களில் சிலவற்றைச் செய்துவந்தனர். கான்சல்கள் நகரிலில்லாத காலத்தில் ப்ரீட்டர்கள் ஸெனட்டைக் கூட்டித் தலைமை தாங்கும் உரிமை பெற்றிருந்தனர். தேவை யேற்பட்டபோது அவர்கள் படைத் துணைத்தலைவர்களாகப் பணியாற்றினர்கள். மாநிலங்களில் அலுவலேற்ற நான்கு ப்ரீட்டர்கள் மாநிலத் தலைவர்களாகவும் (Governors), மாநிலப் படைத்தலைவர்களாகவும், கீழ்த்தர நீதி மன்றங்களிலிருந்து தொடரப்பட்ட மேல் வழக்குகளில் நீதிபதிகளாகவும் செயலாற்றினர்கள்.

ஈடில்கள் (Aediles)

நான்கு ஈடில்கள் ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ப்ளெபியர் வகுப்பைச் சேர்ந்த ஈடில்கள் ப்ளெபியர்களாலும், ஏனைய ஈடில்கள் கொமிஷியா ட்ரிப்யூட்டா (Comitia Tributa) என்ற மக்கள் அவையாலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் நகரத்தை ஆட்சி செய்வதில் கான்சல்களுக்குத் துணை செய்து வந்தார்கள். தெருக்கள், பொதுக்கட்டிடங்கள், பூங்காக்கள் முதலியவற்றை மேற்பார்வையிட்டனர். மக்களுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுப்பதும் அவர்கள் பொறுப்பு. பொது விளையாட்டுகள், திருவிழாக்கள் போன்ற கூட்டங்களில் ஒழுங்கை நிலைநாட்டி வந்தனர். சந்தைகள ஒழுங்குபடுத்தித் தேவையான தானியத்தைத் தருவித்து, விலைகளைக் கட்டுப்படுத்தி வந்தார்கள். எடைகளையும், அளவைகளையும் பார்வையிட்டு வந்தனர்.

க்வேஸ்டர்கள் (Quaestors)

குடியரசின் தொடக்கக் காலத்தில் க்வேஸ்டர்கள் கான்சல்களினல் நியமிக்கப்பட்டனர். பிறகு குலங்களால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மொத்தம் எட்டு க்வேஸ்டர்கள்

இருந்தார்கள். கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை க்வேஸ்டர்கள் அரசியல் தொடர்பற்ற குற்றவியல் வழக்குகளைத் தீர்த்து வந்தார்கள். ஆனால் பிறகு நிதித் துறையில் மட்டும் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. ரோம் நகரிலிருந்து க்வேஸ்டர்கள் கருவூல அதிகாரிகளாகப் (Treasurers) பணியாற்றியதோடு போர்க்காலங்களில் கான்சல்களுக்குத் துணை செய்தும் வந்தார்கள். மாகாணங்களிலுள்ள க்வேஸ்டர்கள் மாகாண வரி வருமானத்தைத் திரட்டிக் கணக்குகளைக் கவனித்து வந்தார்கள்.

சென்ஸர்கள் (Censors)

இரு சென்ஸர்கள் கொமிஷியா செஞ்சுரியாட்டாவினால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களின் பதவிக்காலம் பதினெட்டு மாதங்கள். இருவரும் கூட்டாகவே பணியாற்ற வேண்டும். ஒருவர் பதவியைத் துறந்தால் அல்லது இறந்துவிட்டால், மற்றவரும் விலக வேண்டும். மக்களின் எண்ணிக்கையை அவர்கள் வாழும் இடத்திற்கேற்பப் பதிவு செய்தல், அவர்களின் சொத்துக்களின் மதிப்பைக் கணக்கிடுதல், ஸெனட்டின் உறுப்பினராகத் தக்கவரின் பெயர்ப் பட்டியல் எழுதுதல் முதலியவை சென்ஸர்களின் அலுவல்கள்.

ட்ரிப்யூன்கள் (Tribunes)

ப்ளெபியர்கள் தமது நலன்களைக் காக்க ஆண்டுதோறும் பத்து ட்ரிப்யூன்களைத் தேர்ந்தெடுத்தனர். இவர்கள் ப்ளெபியர்களின் உரிமைகளைக் காக்க எந்த அதிகாரியின் கட்டளையையும் எதிர்த்துத் தமது மறுப்பாணையைப் பயன்படுத்தலாம். கி. மு. 287 ஆம் ஆண்டுக்குப் பிறகு இவர்கள் ஸெனட்டில் இடம் பெறவும், பேசவும், அதைக் கூட்டவும் உரிமை பெற்றனர்.

II. பேரவைகள்

மக்கள் தனித்தனி அவைகளாக அல்லது கொமிஷியாக்களாக அமைக்கப்பட்டிருந்தனர். கொமிஷியா க்யூரியாட்டா, கொமிஷியா செஞ்சுரியாட்டா, கொமிஷியா ட்ரிப்யூட்டா ஆகியவை மக்களின் பேரவைகள். வெவ்வேறு காலங்களில் இவைகள் தோன்றியபோதிலும், இவை எல்லாம் ஒரே சமூகத்தின் பிரதிநிதிகளையே கொண்டிருந்தன. ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்ய ஒருவிதமாகவும், இன்னொரு செயலைச் செய்ய மற்றொரு விதமாகவும் மக்களை அமைக்க வேண்டியிருந்தது. ஆகவேதான் வெவ்வேறு அவைகள் நிறுவப்பட்டன. ஆனால் அவையனைத்தும் ஒரு சமூகத்தின பிரதிநிதிகளாகவே இருந்தன. ப்ளெபியர்களின் அவையான கொன்சீலியம் ப்ளெபிஸ் (Concilium Plebis)

மட்டும் இதற்கு விதி விலக்காக இருந்தது. ஏனெனில் அதில் ப்ளெபியர்கள்மட்டும் தாம் உறுப்பினர்களாக முடியும்.

கொமிஷியா க்யூரியாட்டா

ரோமானியப் பேரவைகளில் மிகப் பழமையானது கொமிஷியா க்யூரியாட்டா. இதன் முக்கிய வேலை செயல்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை உறுதிப்படுத்துதல். சில மதச்சடங்குகளைத் தொடங்கும்போது இந்தப் பேரவை கூடும்.

கொமிஷியா செஞ்சுரியாட்டா

இந்தப் பேரவை கொமிஷியா க்யூரியாட்டாவைவிடப் பெரியது. ரோம் நகரின் அருகிலுள்ள எல்லாக் குடிகளையும் சேர்த்துக் கொண்டு அவர்களின் சொத்துக்களுக்குத் தக்க விதமாக அவர்களைப் பிரித்தது. வாக்கெடுப்பது எளிதாக இருப்பதற்காகப் பேரவை ஏறக்குறைய நூறுபேர்களைக் கொண்ட பகுதிகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பகுதியும் ஒரு வாக்குத்தான் அளிக்க முடியும். இந்தப் பேரவை கான்சல்கள், ப்ரீட்டர்கள், சென்ஸர்கள் ஆகியவர்களைத் தேர்ந்தெடுக்கும். போர் தொடுப்பது இந்தப் பேரவையின் தனியுரிமை. கான்சல்களால் கொண்டு வரப்பட்ட பொருள்களை வாதித்து முடிவு கூறவும், மரண தண்டனை கொடுக்கும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கவும் அதிகாரம்பெற்ற மேல் நீதி மன்றமாகவும் பணியாற்றியது.

கொமிஷியா ட்ரிப்யூட்டா

இந்தப் பேரவையில் மக்கள் குலப் பிரிவிற்குத் தக்கபடி வாக்களித்தனர். இதன் கூட்டங்களுக்குக் கான்சல்கள் அல்லது ப்ரீட்டர்கள் தலைமை தாங்கினர்கள். இது க்வேஸ்டர்களையும், ஈடில்களையும் தேர்ந்தெடுத்தது. சட்டமியற்றும் அதிகாரத்தில் இதற்கும் கொமிஷியா செஞ்சுரியாட்டாவைப் போல் பங்குண்டு.

கொன்ஸீலியம் ப்ளெபிஸ்

ப்ளெபியர்களும், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ட்ரிப்யூன்களும் இந்தப் பேரவையின் உறுப்பினர்கள். ப்ளெபிய அதிகாரிகள் மட்டும் இதைக் கூட்ட முடியும். இது கி. மு. 287க்குப் பிறகு நாடு முழுவதற்கும் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றது. இதில் குலப் பிரிவுகளுக்கேற்ப வாக்களிப்பு நடக்கும்.

பொதுவாக இந்தப் பேரவைகள் சட்டமியற்றும் உரிமையும் நீதி சம்பந்தமான அதிகாரமும் பெற்றிருந்தபோதிலும், இவற்றிலெல்லாம் துவக்க உரிமை செயல்துறை அதிகாரிகளிடமே இருந்

தது. மேலும் இவைகளில் ஒன்றுவது எல்லாக் குடிகளுக்கும் சம உரிமை வழங்கும் அளவுக்கு மக்களாட்சித்தன்மை பெற வில்லை.

III. ஸெனட்

இது முந்நூறு சிறந்த குடிகளைக் கொண்ட ஒரு நிறுவனம். இதன் உறுப்பினர்கள் ஆயுட்காலம் வரை பதவியி லிருப்பார்கள். கி. மு. நான்காம் நூற்றாண்டின் இறுதிவரை அவர்கள் கான்சல் களால் நியமிக்கப்பட்டார்கள். பிறகு அவர்களைச் சென்ஸார்கள் தெரிந்தெடுத்தனர். முதலில் பெட்ரீஷியர்கள் மட்டும் உறுப் பினர்களாக இருந்தார்கள். பிறகு ப்ளெபியர்கள் உறுப்பின ராகும் உரிமை பெற்றனர். அதன் பிறகு செயல்துறை அதிகாரி களாக இருந்தவர்கள் உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார் கள். கி. மு. 362 க்குப் பிறகு உயர் பதவிகள் ப்ளெபியர்களுக்குக் கொடுக்கப்பட்டதால் ஸெனட்டில் அவர்களின் தொகை அதி கரித்தது.

குற்றத் தீர்ப்புப் பெற்ற உறுப்பினர்கள் மட்டும் இடையில் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். ஏனையோர் இறக்குமட்டும் பதவியிலிருக்கலாம். ஆகவே ஸெனட்டோரின் பெரும்பகுதி யினர் நிலையாகப் பதவியில் அமர்ந்திருந்தனர். ஆனல் தேர்ந் தெடுக்கப்பட்ட செயல்துறை அதிகாரிகளோ ஆண்டுதோறும் மாறிக்கொண்டிருந்தார்கள். தொடர்ந்து பதவியிலிருந்ததாலும், ஏற்கெனவே அதிகாரிகளாகப் பணியாற்றியிருந்ததாலும் ஸெனட் டின் உறுப்பினர்கள் அனுபவ முதிர்ச்சி பெற்றிருந்தனர். மேலும் அரசாங்கத்தின் கோட்பாடுகளும் அவர்களது கண்காணிப்பால் மாருமல் நிலைத்து நின்றன.

ஸெனட்டின் அதிகாரங்கள்

மக்களின் பேரவையின் முன்னல் கொண்டுவரப்படும் எல்லாப் பொருள்களும் முதலாவது ஸெனட்டில் ஆராய்ந்து தீர்மானிக்கப் படும். மேலும் செயல்துறை அதிகாரிகள் தம் அலுவல்களைச் செய்வதற்கான கட்டளைகளை ஸெனட்டிடமிருந்தே பெறுவார்கள். இவ்விரண்டும் ஸெனட்டின் அதிகாரத்தை வளர்த்து அதைப் பேராற்றல் மிக்க நிறுவனமாக்கின.

சட்டமியற்றும் நேரான அதிகாரம் ஸெனட்டிற்கு இல்லை யென்ருலும், தனிப்பட்டவர்களுக்குச் சட்டத்தினின்று விதிவிலக் களிக்க அதற்கு உரிமையிருந்தது. மேலும் சட்டத்தில் ஏதாவது குறையைக் காட்டி அதைத் தள்ளிப் போடவும் முடியும். நீதித் துறையில் ஸெனட்டிற்கு நேரான அதிகாரம் கிடையாது. ஆனல் பரந்த அளவில் கொள்ளை, கொலை முதலியன நடக்கும்போது

அதிகாரிகள் எவ்வாறு தமது அதிகாரத்தைச் செலுத்த வேண்டுமென்று ஸெனட் அறிவிக்கும். நெருக்கடியான நிலையில் ஒரு கட்சியை அல்லது அதன் தலைவர்களை நாட்டின் பகைவர்களெனப் பறைசாற்றி, அவர்களைத் தண்டிக்க அதிகாரிகளுக்குக் கட்டளையிடலாம். அயல் நாட்டுக் காரியங்களிலும் ஸெனட்டிற்கு அதிக அதிகாரம் இருந்தது. அது பிற நாடுகளுடன் உடன்படிக்கை செய்யும் உரிமை பெற்றிருந்தது. மாநிலங்களை ஆளும் உரிமையை மாநில அதிகாரிகள் ஸெனட்டிடமிருந்து பெற்றனர். மாநிலத் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் துணை செய்ய ஒரு குழுவையும் ஸெனட் ஏற்படுத்தியது. நிதித் துறையிலும் ஸெனட்டிற்கு நிறைய அதிகாரமிருந்தது. ஒவ்வொரு மாநிலமும் ரோமுக்கு எவ்வளவு வரி கொடுக்க வேண்டுமென்று ஸெனட் தீர்மானிக்கும். அரசாங்கத்திற்கு வரி வருமானம் கிடைக்கும் ஏனைய வழிகளும் ஸெனட்டினுல் கட்டுப்படுத்தப்பட்டன. சென்ஸார்கள், க்வேஸ்டர்கள் ஆகியோரின் அதிகாரங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் ஸெனட் நாட்டின் நிதித் துறையைத் தனது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவந்தது. இவ்வாருக கி. மு. 200 இல் ஸெனட் மிகுந்த அதிகாரமுள்ள நிறுவனமாகத் திகழ்ந்தது.

குடியரசின் வீழ்ச்சி

நாளடைவில் குடியரசு நலிந்து முடியரசு தோன்றியது. பழைய நகர அரசு பல வெற்றிகளின் விளைவாக விரிவடைந்தது. எளிதில் ஆளமுடியாத அளவுக்கு அகன்றுவிட்டதால் பழைய நிறுவனங்கள் வலுவிழந்து பயனற்றுப்போயின. இறுதியாகக் கி. மு. 48 இல் ஜூலியஸ் ஸீஸர் (Julius Caesar) தனது எதிரியாகிய பாம்பே (Pompey) என்ற வீரனை நசுக்கியதும், ஸெனட் தனது பலமின்மையை உணர்ந்து, ஸீஸரை வாழ்நாள் முடியும் வரை தன்னுட்சியாளராக இருக்குமாறு கேட்டுக்கொண்டது. இவ்வாருக ரோமில் தன்னரசு தோன்றியது. இதைப்பற்றி மேலும் விரிவாக இன்னோர் இயலில் பார்ப்போம்.

---

7. நகர அரசுகளின் நலிவு

கிரேக்க, ரோமானிய நகர அரசுகளின் பொதுவான வரலாற்றைப் பார்த்தோம். குறிப்பாக ஏதன்ஸ், ரோம் ஆகிய இவ்விரு நகர அரசுகளின் வளர்ச்சியையும், சிறப்பையும் கவனித்தோம். ஆனுல் மற்ற எல்லா நகர அரசுகளும் இவ்விரு நகர அரசுகளைப் போல உயர்ந்த நிலையை அடைந்தன என்று கூற முடியாது.

அவற்றுள் பல முழு வளர்ச்சி பெறவில்லை. இடையில் ஏற்பட்ட இடையூறுகளின் காரணமாகப் பல நகர அரசுகள் மக்களாட்சியைப் பெறுவதற்கு முன்னர் நலிவுற்றன. உறவு முறையை அடிப்படையாகக் கொண்டிருந்த முடியாட்சி மறைந்து, நிலப்பரப்பு மக்களின் அரசியல் வாழ்க்கையை நிர்ணயித்தபோது, முதலில் உயர் குடியாட்சியும், பிறகு செல்வரின் சிறுகுழுவாட்சியும் தோன்றின. இவை நகரத்தின் சமூகத்தில் பிரிவுகளை ஏற்படுத்தின. இப்பிரிவுகள் பொருளாதாரப் பிரிவுகளாக இருந்தமையால் அவற்றினிடையே நாளடைவில் பூசல்கள் ஏற்பட்டன. கி. மு. 5 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே கிரேக்க நகரங்கள் பலவற்றில் இவ்விதப் பிளவுகள் தோன்றிவிட்டன. சமூக, பொருளாதாரப் பிரிவுகளினால் தோன்றிய போராட்டங்களிலிருந்து பெரும்பான்மையான நகரங்கள் மீட்சிபெறவேயில்லை. ஏதன்ஸிலும் ரோமிலும் இத்தகைய பிளவுகள் இல்லாமலில்லை. ஆனால் ஏதன்ஸில் உயர்குடி மக்களும், செல்வர்களும் ஸோலன் போன்றவர்கள் கொண்டுவந்த சீர்திருத்தங்களை ஏற்றுக்கொண்டனர். இது போலவே ரோமிலும் பெட்ரீஷியர்கள் பிளெபியர்களைச் சமானப்படுத்தும் பொருட்டு அவர்களுக்குச் சில உரிமைகளை வழங்கி, அவர்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்தனர், ஆனால் இத்தகைய ஒற்றுமை உணர்ச்சி மற்ற நகர மக்களிடையே காணப்படாததால், சமூகப் பிரிவுகள் பிளவுகளாக மாறி, நகரங்களை நலிவுறச் செய்தன. இந்நகரங்கள் எல்லாவற்றிலும் சிறுபான்மையோர், பெரும்பான்மையோர் என்றும், செல்வர்கள், எளியவர்கள் என்றும், உயர்குடிப் பிறந்தோர், தாழ்ந்த குடிப்பிறந்தோர் என்றும் பல பிரிவுகள் ஏற்பட்டன. அரசாங்கம் இவ்விரு பிரிவுகளில் ஏதாவது ஒன்றின் கையிலிருந்தது. ஆகவே கி. மு. 5 ஆம் நூற்றாண்டில் இந்நகரங்களின் அரசாங்கங்கள் செல்வர்களின் சிறுகுழுவாட்சியாகவோ அல்லது மக்களாட்சியாகவோ இருந்தன. எப்பிரிவு ஆட்சி செலுத்திய போதிலும், அப்பிரிவு எதிர்ப் பிரிவை முறியடிப்பதில் முனைந்து நின்றது. ஆகவே, ஒவ்வொரு நகரமும் உள்நாட்டுக் குழப்பம் நிறைந்த போர்க்களமாக இருந்ததேயன்றி அமைதி நிலவிய அரசாகத் திகழவில்லை.

ஓர் அரசின் முன்னேற்றத்தின் அடையாளம் பொது நலத்திற்கான மக்களின் விருப்பாற்றல் (Common will for common good) ஆகும். இது இல்லாவிட்டாலும் எதிர்ப்பிரிவுகளுடன் ஒத்துழைக்கும் மனப்பான்மையாகிலும் சமூகப் பிரிவுகளுக்கு இருக்க வேண்டும். இவ்விரு சிறப்பியல்புகளும் 5 ஆம் நூற்றாண்டில் பெரும்பான்மையான நகர அரசுகளில் காணப்படவில்லை. மேலும் ஒரே வகையான ஆட்சி பெற்றிருந்த நகரங்களிடையே கூட

டமைப்புகளும் தோன்றின. எடுத்துக்காட்டாக, சிறுகுழுவாட்சி பெற்றிருந்த நகரங்கள் ஸ்பார்ட்டாவின் தலைமையில் பிலப்பனீசிய நாட்டுக் கூட்டத்தை ஏற்படுத்திக்கொண்டன. மக்களாட்சி பெற்றிருந்த நகரங்கள் ஏதன்ஸின் தலைமையில் ஓர் எதிர்க் கூட்டமைப்பை அமைத்துக்கொண்டன. இவ்விரு அமைப்புகளுக்கிடையே பிலப்பனீசியப் போர் என்ற பெரும்போர் நிகழ்ந்தது. இப்போரில் ஸ்பார்ட்டாவும் அதன் நட்பு நகரங்களும் வெற்றி பெற்ற போதிலும், போரில் ஈடுபட்டிருந்த எல்லா நகரங்களும் வலிமையிழந்தன. ஆகவே, உள்நாட்டுப் பூசல்கள் நாளடைவில் நகரங்களிடையே பெரும்போரைத் தூண்டிவிட்டு அவற்றின் வளர்ச்சியைத் தடைப்படுத்தியதுமல்லாமல் அவற்றின் சிதைவுக்கும் காரணமாயிருந்தன. இந்தச் சமூகப் பிளவுகளைக் கிரேக்கர்கள் "ஸ்டாஸிஸ்" (Stassis) எனக் குறிப்பிட்டனர்.

பண்டைய நகர அரசுகள் அழிந்ததற்கு வேறு சில காரணங்களும் இருந்தன. நகர அரசில் வாழ்ந்த மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, மத வாழ்க்கைக்கு நடுவிடமாக நகரம் திகழ்ந்ததெனப் பார்த்தோம். நகர அரசின் மக்கள் தொகையும், நிலப் பரப்பும் சிறியதாக இருக்கவேண்டும். ஏனெனில், நகரத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் நிலப்பரப்புப் பரந்ததாக இருந்தால், நகருக்கும் மக்கள் வாழும் இடங்களுக்குமிடையே உள்ள தூரம் அதிகரிப்பதோடு, அவர்கள் தம் அலுவல்களைக் கவனிக்க நகருக்கு அடிக்கடி வந்து போவதும் இயலாமற் போய்விடும். ஆகவேதான் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகிய கிரேக்க அறிஞர்கள் அரசின் மக்கள் தொகைக்கு ஒரு வரம்பு விதித்தனர். நாட்டில் வாழும் ஒவ்வொரு குடியும் மற்றெல்லோரையும் அறிந்திருத்தல் வேண்டும். ஓர் அரசின் மக்கள் தொகை, அவர்கள் எல்லோரும் ஓரிடத்தில் கூடியிருக்கும்போது, ஒரு மனிதன் உயர்ந்ததோர் இடத்தில் நின்று பார்த்தால், அவன் கண்பார்வைக்குள் அடங்கக் கூடியதாக இருக்கவேண்டுமென அரிஸ்டாட்டில் கூறுகின்றார். அப்போது தான் "போலிஸ்" எனப்படும் நகர அரசின் இலட்சிய வாழ்க்கை பொலிவுற முடியும். அதற்கு நகரின் மக்கள் தொகையும் நிலப்பரப்பும் ஒரு வரம்பிற்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். ஆனால் பண்டைய நகர அரசுகள் இவ்விரு வரம்புகளையும் மீறியதால், தம் பண்புகள் இழந்து சீர் குலைந்தன.

இயற்கையாக அதிகரித்த மக்கள் தொகையின் காரணமாகப் பல நகர அரசுகள் நிலப் பரப்பையும் அதிகரிக்க வேண்டியிருந்தது. இதற்காகச் சில அரசுகள் மற்ற அரசுகளைத் தம் ஆணைக்குள் அடக்கி, ஏகாதிபத்திய அரசுகளாக மாறின. இதனால் அவை "போலிஸ்" வாழ்க்கை அமைப்பின் பண்புகள் இழந்தன. பொது

வான பகைவரை எதிர்க்கும்பொருட்டுக் கிரேக்க நகர அரசுகளிடையே கூட்டமைப்புகள் ஏற்பட்டதும் அவற்றின் நலிவுக்கு ஒரு காரணமாகும். ஏனெனில் இக்கூட்டமைப்பில் உறுப்பினர்களாக இருந்த அரசுகள் எல்லாம் ஒரு வலிமை மிக்க அரசுக்குப் பணிந்திருக்க வேண்டியதிருந்ததால், நகர அரசுகள் மறைந்து நாட்டரசுகள் (Country States) தோன்ற வழியேற்பட்டது.

கிரேக்க நகரங்களிடையே இம்மாற்றம் எவ்வாறு நிகழ்ந்தது எனப் பார்ப்போம். கி. மு. ஆரும் நூற்றாண்டின் இடையில் ஸ்பார்ட்டா பிலப்பனீசியக் கூட்டமைப்பை ஏற்படுத்தியது. இவ் வமைப்பில் உறுப்பினராக இருந்த அரசுகள் எல்லாம் ஸ்பார்ட்டாவின் ஆணைக்குப் பணிந்திருந்தன. கிரீஸின்மீது பாரசீகர்கள் படையெடுத்து வந்தபோது கிரேக்க நகரங்களிடையே ஒரு வலிமை மிக்க கூட்டமைப்புத் தோன்றியது. இதன் விளைவாக ஸலாமிஸ் என்ற இடத்தில் பாரசீகர்கள் முற்றிலும் தோற்கடிக்கப் பட்டார்கள். இவ்வெற்றிக்குப் பிறகு ஏதன்ஸின் தலைமையில் டீலாஸ் கூட்டமைப்பு (Confederacy of Delos) உருவானது. இவ் வமைப்பு மக்களாட்சிக்கும், குறிப்பாகப் பெரிக்கிலீஸ் (Pericles) என்பவருடைய உயர்ந்த குறிக்கோள்களுக்கும் அடிப்படையான கொள்கைகளுக்கு உறைவிடமாகத் திகழ்ந்ததால், ஸ்பார்ட்டா இதற்கு எதிராகச் செல்வர்களின் சிறுகுழுவாட்சியின் கோட்பாடு களைப் பரப்பும் நோக்குடனே பிலப்பனீசியக் கூட்டமைப்பை மேலும் பலப்படுத்தியது. இவ்விரு கூட்டமைப்புகளுக்குமிடையே பிலப்பனீசியப் போர் மூண்டு அதில் ஸ்பார்ட்டா வெற்றி பெற்றது. பிறகு ஸ்பார்ட்டா தனது அரசியல் அமைப்பை மற்ற எல்லா நகர அரசுகளின் மேலும் திணிக்க முயன்றது. அப்போது கிரேக்க நகரங்களுக்கிடையே வெறுப்புணர்ச்சி தோன்றி ஸ்பார்ட்டாவுக்கு எதிராகப் பல கூட்டமைப்புகள் நிறுவப்பட்டன. இவற்றுள் சில பாரசீகத் துணையை நாடவும் தொடங்கின. இக்கூட்டமைப்புகளில் ஆற்றல் மிக்கது தீப்ஸைத் (Thebes) தலைநகராகக் கொண்ட போஷியக் கூட்டமைப்பாகும். ஒன்றன்பின் ஒன்றாக விரைந்து தோன்றிய இம்மாற்றங்களின் காரணமாகப் பண்டைய நகர அரசுகளுக்கும், அவற்றின் வாழ்க்கை அமைப்புக்கும் இன்றியமையாத சூழ்நிலைகள் முற்றிலும் நீங்கின.

இவ்வாறாகப் பகையின் விளைவாகச் சிதைந்துகொண்டிருந்த நகர அரசுகள்மீது முடிவில் பிலிப் என்பவர் தலைமையில் மாசிடோனியர்கள் படையெடுத்து வந்தனர். தம் வாழ்க்கை முறைகளுக்கும், அரச அமைப்புகளுக்கும் நேர்ந்த இப்பெருங்கேட்டிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள நகர அரசுகள் வலிமையற்றிருந்தபோது, டெமாஸ்தனிஸ் என்ற புகழ்பெற்ற பேச்சாளர் மட்

டுமே மக்களின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்ப முயன்றார். ஆனால் "பிலிப்பிக்ஸ்" (Philipics) என்று அழைக்கப்படும் அவரின் நாவன்மை செறிந்த வாதங்கள் கிரேக்க மக்களின் கட்செவிகளைத் துளைத்துச் செல்லவில்லை. அவருடைய தர்க்கங்கள் கிரேக்க நகர அரசுகளுக்காக எழுப்பப்பட்ட இறுதி அழுகுரலாக இருந்தனவேயன்றி, அவற்றினிடையே மறுமலர்ச்சியை உண்டாக்க முடியவில்லை. ஏனெனில், அவை அழிவுப் பாதை நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தன. ஆகவே, டெமாஸ்தனிஸால் அவற்றை மாசிடோனியத் தாக்குதல்களிலிருந்து காக்க இயலவில்லை. கி. மு. 338 இல் பிலிப் மன்னன் கிரேக்க அரசுகள் எல்லாவற்றையும் தனது ஆட்சிக்குக் கீழ்க் கொண்டுவந்தான். அவனுக்குப் பிறகு அவனுடைய மகன் மாவீரன் அலெக்ஸாண்டர் ஹெல்லனிய உலகை ஒன்றுபடுத்தி, மாசிடோனியாவின் ஆட்சிக்குட்படுத்தினன். அவனது காலத்தில் கிரேக்கப் பண்பாடு கிழக்கே சிந்து நதி வரை பரவிய போதிலும், கிரேக்க நகர அரசுகள் தமக்கே இயல்பான அரசியல் அமைப்பை முற்றிலும் இழந்தன. இதன் பிறகு சிறிது காலம் வரை கிரேக்க நாடு மாசிடோனியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. அலெக்ஸாண்டருக்குப் பிறகு மாசிடோனியப் பேரரசு பல சிற்றரசுகளாகச் சிதைந்தபோது, கிரேக்க நாடு இவைகளுக்கிடையே மூண்ட போர்களின் களமாக மாறிச் சின்னபின்னமாக்கப்பட்டது. இந்நிலை ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டளவாக நீடித்திருந்தது. அதன் பிறகு ரோமானியப் படைகள் கிரேக்க நாட்டின் மேல் படையெடுத்துவந்து, புகழ் வாய்ந்த அந்த ஹெல்லனிய உலகை ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாக்கின. இதன் விளைவாக நகர அரசுகள் முற்றிலும் மறைந்து போயின. வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்தில் மனிதனுடைய அரசியல் தொடர்புகளைச் சீர்படுத்திய இவ்வமைப்புகள் இறுதியில் மேற்கூறிய காரணங்களினால் மடிந்து, புதியதொரு அமைப்பிற்கு வழி வகுத்தன. இப்புதிய அமைப்பின் குணங்களை நாம் அடுத்த இயலில் பார்ப்போம்:

---

8. ரோமானியப் பேரரசு

"தன் இளமை முதற்கொண்டு வெல்லவும் ஆளவும் பேறு பெற்றது ரோம்," எனப் பாடினன் கவிஞன் வெர்ஜில் (Virgil). இதே கருத்தை வேறொரு கோணத்தில் பின்மொழிந்து எழுதினன் தான்தே (Dante). பெட்ரீஷியர்களுக்கும் ப்ளெபியர்களுக்குமிடையே அரசியல் சமத்துவம் நிறைவெய்துகின்ற நிலையில்

ரோம் தனது ஆட்சியை இத்தாலியில் நிலையாக நிறுவியிருந்தது. இதையொத்த ஒரு சாதனையை ஸ்பார்ட்டா அல்லது ஏதன்ஸ் போன்ற எந்தக் கிரேக்க நகர அரசும் செய்யமுடியவில்லை. முதலில் கம்பேனியா நாட்டு இலத்தீனர்கள் ரோமுடன் கொண்டிருந்த தமது பண்டைய சமத்துவத்தை இழந்து ரோமானியக் குடிகளாயினர். உரிமைகளிலும் சலுகைகளிலும் பெரும்பாலும் இவர்கள் தாழ்நிலையை அடைந்து விட்டனர். லேஷியத்தைச் (Latium) சுற்றிலும் குன்றுகளில் வாழ்ந்த மக்கள் கி. மு. 290 ஆம் ஆண்டுக்குள் ரோமுக்குப் பணிந்தனர். நடு இத்தாலியில் வாழ்ந்த வீரக் குடிகளாகிய சேபைன் (Sabines) மக்களும் அடக்கப்பட்டனர். வடக்கே வாழ்ந்த இட்ரஸ்கர்களை (Etruscans) வெல்லுவது எளிதாக இருந்தது. எனவே, கி. மு. 281க்குள் ரோம் இத்தாலிய தீபகற்பத்தில் தனது ஆட்சியை நிலைநாட்டியிருந்தது. இதன் பிறகு கார்தேஜ் (Carthage) சிசிலியுடன் (Sicily) நீண்ட போராட்டம் தொடரவே, ரோம் கடல் கடந்த நாடுகளில் தனதாட்சியை நிலைநாட்டத் தொடங்கியது. பின்னர் வடக்கில் போ (Po) ஆற்றுப் பெருவெளியில் வாழ்ந்த கால் (Gaul) மக்களை வென்று அடக்கியது. மாசிடோனியா அரசர்களின் துணை கொண்டு ஹனிபால் (Hannibal) செய்த சூழ்ச்சிகள் ரோமின் கவனத்தைக் கிழக்கே திருப்பின. ஐம்பதாண்டுகளுக்குள் கிரேக்க நாட்டிலும் மாசிடோனியாவிலும் ரோமானியச் செயல்துறை அதிகாரிகளின் ஆட்சி நிறுவப்பட்டது. கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் முடிவுக்குள் எகிப்து நீங்கலாக மத்தியதரைக்கடல் பிரதேசத்திலுள்ள வள நாடுகள் அத்தனையும் ரோமானியப் பேரரசில் அடங்கியிருந்தன. இன்னொரு நூற்றாண்டில் ரோமானியப் பேரரசு கிழக்கே யூப்ரட்டீஸ்நதி முதல் மேற்கே அட்லாண்டிக் பெருங்கடல் வரை பரவிவிட்டது.

இக்காலத்தில் ரோம் ஓரளவு நகர அரசாகவே இயங்கி வந்தது. ஆட்சி முறையில் அடுத்தடுத்து ஏற்பட்ட புதிய தேவைகளை நிறைவேற்ற ரோமானிய ஸெனட் புதிய திட்டம் எதையும் வகுக்கவில்லை. வென்ற பகுதிகளைக் கண்காணிப்பதற்கு இரண்டு முறைகள் கையாளப்பட்டன. முதலாவது, அப்பகுதிகள் மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு, நகரச் செயல்துறை அதிகாரிகளின் ஆட்சி முறை அங்கே புகுத்தப்பட்டது. அஃதாவது இம்பீரியம் என்ற அதிகாரம் மாநிலங்களில் முற்றிலும் செலுத்தப்பட்டது. இரண்டாவதாக, எந்தப் பகுதிகளிலெல்லாம் நகர வாழ்வும் அதன் முறைகளும் நிலையாக இருந்தனவோ, அங்கெல்லாம் அவைகள் வட்டார ஆட்சி வசதியை முன்னிட்டு, ரோமானியச் செயல்துறை அதிகாரிகளின் மேற்பார்வையின்கீழ் இயங்கும்படி விடப்பட்டன.

மாநிலங்களின் ஆட்சி

ரோமானியக் குடியரசு நலிவுற்றிருந்த காலத்திலேயே மாநிலங்களின் எண்ணிக்கை பதினேந்தாக இருந்தது. ரோமானியப் பேரரசால் வெல்லப்பட்ட அரசுகளின் தொகுப்புகளே மாநிலங்களாகும். கிரேக்க அல்லது ஃபினிசிய (Phoenician) நாகரிகம் பரவி இருந்த இடங்களிலெல்லாம் இவ்வரசுகள் நகர அரசுகளாக இருந்தன. ஆனால் கால் (Gaul) நாட்டிலும், ஸ்பெயினிலும் இவ்வரசுகள் கோட்டங்கள் (Cantons) என்றும், குலங்கள் (Tribes) என்றும் அழைக்கப்பட்டன. இவற்றில் காணப்பட்ட இயற்கையான அரசிய லமைப்புகளை ரோம் ஏற்றுக்கொண்டு, வலிமையான அமைப்புகளைத் தகர்த்தெறிந்தது.

மாநிலங்களின் ஆட்சித் தலைவர் கவர்னர் (Governor) என அழைக்கப்பட்டார். அவருடைய ஆட்சிக் காலம் பொதுவாக ஓராண்டு எனினும், பலர் மூன்றாண்டுகள் கூடப் பதவியிலிருந்திருக்கின்றனர். கவர்னரின் உதவி அலுவலர்களில் க்வேஸ்டர் (Quaestor) எனப்பட்ட உதவி செயல்துறை அதிகாரியும், லெகாத்தி (Legati) எனப்பட்ட ஸெனட் குழுவின் உறுப்பினர்களும் முக்கியமானவர்கள். க்வேஸ்டர் பெரும்பாலும் ஒரு நிதித் துறை அதிகாரியே. அவர் கவர்னரின் மேற்பார்வையின்கீழ்ப் பணியாற்றினர். தொடக்கத்தில் ஸெனட் குழுவின் உறுப்பினர்கள் ரோமானிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகவே இருந்தனர். ஆனால் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக அக்குழுவின் உறுப்பினரைக் கவர்னரே நியமிக்கும் வழக்கம் நாளடைவில் எழுந்தது. எனினும் குடியரசுக் கால இறுதிவரையிலும் ஸெனட் குழுவின் உறுப்பினர்களின் பெயர்கள் ஸெனட்டிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அவர்களும் அரசாங்கத்தின் துணை அலுவலர்களாகக் கருதப்பட்டனர். லெகாத்தி, க்வேஸ்டர் ஆகிய இவர்கள் தவிரப் பணித் துறையைச் சாராத காமிடெஸ் (Comites) என்ற ஒரு குழுவும் கவர்னருக்கு உதவி செய்துவந்தது. இக்குழுவின் உறுப்பினர்களைக் கவர்னரே தெரிந்தெடுத்தார். இதுபோல் கவர்னருக்கு உதவியாக எத்தனை துணைக் கருவிகள் இருந்தபோதிலும், மாநில ஆட்சிக்கு வேண்டிய அதிகாரங்கள் அனைத்தும் கவர்னர் ஒருவர் கைகளிலேதாம் கொடுக்கப்பட்டிருந்தன. ஆகவே, மாநிலத்தின் நிர்வாகம் தனிமனிதன் ஒருவனின் பொறுப்பிலேதான் இருந்ததென்று துணிந்து கூறலாம்.

கவர்னரின் அதிகாரங்கள் போர்ப்படை, நிர்வாகம், நீதி ஆகிய இம்முப்பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தன. போர் நிலவி இருந்த மாநிலத்தில் கோடைக்காலங்களில் பாசறைகள் அமைக்கப்பட்டிருக்கும். மாரிக் காலம் சமாதானப் பணிகளில்

செலவிடப்படும். அண்டை நாடுகளுடனும், பாதுகாப்புக்குட்பட்ட நாட்டுத் தலைவர்களுடனும் தேவையான அரசியல் தொடர்பு கொள்வது கவர்னரின் முக்கிய அலுவலாகும். தனது அதிகார அலுவல்களைப் பெருக்கவோ அல்லது குறுக்கவோ அவருக்கு உரிமையுண்டு. சமாதானக் காலத்தில் சீரியல் (Civil), குற்றவியல் (Criminal) நிர்வாகத்தில் கவர்னர் தம் முழுக் கவனத்தையும் செலுத்திவந்தார். நிர்வாக சம்பந்தமான விதிகள் மாநிலச் சாசனங்களில் குறிக்கப்பட்டிருந்தனவென்றாலும், இவை நாட்டுக்கு நாடு வேறுபட்டிருந்தன. ஏனெனில், சில நாடுகளின் நீதித் துறை அமைப்பு பிறவற்றை விட அதிக முழுமை எய்தி இருந்தன. எனவே, மாநிலங்களின் தேவைகளுக்கேற்ப, மேற்சொன்ன பொது விதிகளைக் கையாளும் அதிகாரம் கவர்னருக்கு இருந்தது. ஆனால் கிளர்ச்சி செய்தல் போன்ற பெருங் குற்றங்கள் ரோமில்தான் விசாரிக்கப்பட்டன. கவர்னரின் நிர்வாக அதிகாரம் ஒரே வகையில் தான் கட்டுப்படுத்தப்பட்டது. அஃதாவது, அவர் வழக்காற்றுப் படி அறிவுரைக் குழுவினரைக் கண்டிப்பாகக் கலந்தாலோசிக்க வேண்டும். ஆனால் கொன்ஸீலியம் (Concilium) என்ற அறிவுரைக் குழுவில் மாநிலத் தலைநகரில் வாழ்ந்துவந்த ரோமானியக் குடிகளும், கவர்னரைச் சூழ்ந்திருந்தவர்களும் மட்டுமே உறுப்பினர்களாக இருந்தனர். மாநிலத்தில் உள்ள ரோமானியக் குடிமக்கள் அனைவரும் மற்றக் குடிகளைப் போலவே கவர்னரின் தனியதிகாரத்திற்குப் பணிந்திருந்தனர். ஆனால் கொலைக் குற்றம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் ரோமானியக் குடிகள் விசாரிக்கப்பட விருந்தால், அத்தகைய வழக்குகள் ரோமுக்கு அறிவிக்கப்பட வேண்டும். கவர்னரே நீதி செலுத்துகின்றகாலை ரோமானியக் குடிகளுக்கு இழிவான தண்டனைகள் வழங்கக்கூடாது. இது பிறழாமல் பின்பற்றப்பட்டுவந்த ஒரு மரபாகும்.

மாநில அரசின் தன்மையைச் சுருங்கக் கூறவேண்டுமானால், அதைக் கவர்னரின் எல்லையற்ற அதிகாரம் என்று சொல்லி விடலாம். மாநில ஆட்சியைப்பற்றிக் குறிப்பிடும்போது கிரீனிட்ஜ் (Greenidge) என்பவர், அது "படை ஆட்சிச் சட்டத்தையும் (Martial law), வட்டார சுய ஆட்சியையும் இணைக்க எண்ணிய முடியாத முயற்சி" என்று கூறுகிறார்.

மாநிலங்களின் ஆட்சிக்கு வரம்பற்ற "இம்பீரியம்" தேவையாக இருந்தது. ஏனெனில் பலதரப்பட்ட கூட்டங்களையும், குலங்களையும், அரசுகளையும் கொண்டு அமைக்கப்பட்டிருந்த மாநிலங்கள் கட்டுக்கோப்புக் குலையாமல் ஆளப்பட வேண்டுமானால், ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு வரம்பில்லா அதிகாரி ஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால் இம்முறையில் அமைக்கப்பட்டிருந்த ரோமா

னியப் பேரரசின் மாநில அரசாங்கத்தில் பெருங்குறைகள் காணப்பட்டன. உதாரணமாக, கவர்னர் பொறுப்பின்றி நடப் பாராகில் அவருக்குத் தம் பொறுப்பை உணர்த்தக்கூடிய திறமை யுள்ள நிறுவனம் ரோமானிய அரசாங்கத்தில் இல்லை. கவர் னர்கள் தமது ஓராண்டுப் பதவிக் காலத்தைக் கொள்ளையடிக்கும் ஒரு வாய்ப்பாகவே கருதினர்கள். மேலும் இயந்திரம் போன்று தானே இயங்கக் கூடியதும், தன் விதிகளால் சீர்படுத்தப்படுவது மான பொதுத்துறை அலுவலமைப்பு (Civil Service) மாநிலங் களில் இல்லாதது ஒரு பெருங்குறையாக இருந்தது. ஏனெனில் கவர்னர்கள் ஆண்டுக்கொரு முறை மாற்றப்பட்டதால், மாநில நிர்வாகத்தில் ஏற்பட்ட தடைகளையும், தேக்கங்களையும், திடீர் மாற்றங்களையும் நிலையாக இருக்கும் இப்பொதுத்துறை அலுவ லமைப்புத் தடுத்துச் சீரான முன்னேற்றத்திற்கு அடிகோலியிருக் கும். ஆகவே, கவர்னர் அடிக்கடி மாற்றப்பட்டது, அவருடைய அதிகார வெறியைக் கண்டிக்கக்கூடிய நிறுவனம் ரோமில் இல்லா மலிருந்தது, அவர் அடிக்கடி மாற்றப்பட்டதால் ஏற்பட்ட தீய பயன்களை ஈடுசெய்யக்கூடிய பொதுத்துறை அலுவலமைப்பு மாநி லத்தில் இல்லாமலிருந்தது முதலியவை மாநில ஆட்சியின் பெருங்குறைகளாகும்.

ரோமானியக் குடியாட்சி முதல்வராட்சியாக மாறுதல்

ரோமானிய நகர அரசு பேரரசாக மாறிய பிறகும், வெகு காலம் வரை ஸெனட், செயல்துறை அதிகாரிகள், பேரவைகள் போன்ற குடியரசுக்கேற்ற நிறுவனங்களாலேயே ஆளப்பட்டு வந்ததென்று பார்த்தோம். ஆனால் கி. மு. முதலாம் நூற்றாண் டின் இறுதியில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அஃதாவது குடியரசாக இருந்த ரோம் மீண்டும் முதல்வராட்சி (Principate) எனப்பட்ட முடியாட்சியைப் பெற்றது. இம்மாற்றத்திற்கான காரணங்களை இப்போது ஆராய்வோம்.

நகரக் குடியரசாட்சிக்குச் சிறந்த முறையில் பயன்பட்ட குடி யரசு நிறுவனங்கள் ஓர் உலகப் பேரரசுக்குப் பொருத்தமற்றவைக ளாக இருந்ததே இந்த மாற்றத்திற்கு முக்கிய காரணமாகும். பேரரசு பரவப் பரவ, ரோமானிய நடு அரசாங்கத்தின் திறமை படிப்படியாகக் குறைந்தது. "ஆட்சியில் இருந்த பிரபுக்களின் ஊழல்களும், மாநிலங்களின் கொள்ளையடிப்பும் ஒன்றையொன்று அடுத்துச் சங்கிலித்தொடர் போலப் பொதுமக்கள் மன்றத்தில் சீர்கேட்டைத் தோற்றுவித்தன. மேலும், ரோமானியக் குடி யுரிமையானது உண்மையான பொதுநல உணர்ச்சி, பிரதி நிதித்துவம் ஆகிய இவை ஏற்படக் கூடிய வரம்புக்கு மேலும் அதிகமாக வழங்கப்பட்டதால், மக்கள் மன்றங்களின் சீர்குலைவு

அதிகரித்தது" என்று சிட்ஜ்விக் (Sidgwick) என்பவர் கூறுகிறார்.

வலிமையில் தளர்ந்துவிட்ட நடு அரசாங்கம் மாநிலக் கவர்னர்களைக் கட்டுப்படுத்த இயலாமல் இருந்தது. மாநிலக் கவர்னர்கள் முடியாட்சிக்குரிய அதிகாரங்களைச் செலுத்தி வந்ததுடன், தம் அரசியல் அதிகாரங்களைத் தன்னலத்திற்காகவும் பயன்படுத்தி வந்தனர். போர் நுட்பங்களையும், அரசியல் சூழ்ச்சித் திறத்தையும் மிகத் திறமையுடன் நிர்வகித்த ஸெனட், கவர்னர்களின் பொறுப்பற்ற ஆட்சியைக் கட்டுப்படுத்த எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. விரைவில் அதைத் தடுத்து நிறுத்தும் விருப்பங்கூட ஸெனட்டுக்கு இல்லாமல் போய்விட்டது. வட்டார சுய ஆட்சி நிறுவனங்களும் மாநிலங்களில் வாழ்ந்த ரோமானியக் குடிகளின் உயிரையும் உடைமைகளையும் மாநிலக் கவர்னர்களிடமிருந்து காப்பதாக உறுதிமொழி யளிக்கவில்லை. ஃபௌலர் (Fowler) என்பவர் ரோமானியப் பேரரசு இக்காலத்தில் அடைந்திருந்த நிலையைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "இப்பெரிய அரசில் ஒற்றுமைக் கோட்பாடுகள் ஒன்றும் இல்லாமல் இருந்தது. ஒற்றுமைக்கு அடிப்படையான வலிமைமிக்க நடு அரசாங்கமும், அதற்குத் துணை செய்ய நாட்டில் ஆங்காங்கே பொறுப்புணர்ச்சி பெற்ற கீழ் அரசாங்க நிறுவனங்களும் இல்லாமலிருந்ததே இதற்குக் காரணமாகும்".

பரந்த ரோமானியப் பேரரசு உண்மையான அரசியல் ஒற்றுமையில் முன்னேற முடியாமல் இருந்ததற்கு வேறு பல காரணங்களும் இருந்தன. கிழக்கில் வாழ்ந்த மக்களுக்கும், மேற்கில் வாழ்ந்த மக்களுக்குமிடையே நிறைய வேறுபாடுகள் இருந்தன. கிரேக்க நாகரிகத்தைச் சுவைத்த கிரேக்க மக்களுக்கும், இலக்கியம், கலை, சட்டம், அரசு முதலியவற்றை இன்னும் கண்டறியாதுஸ்பெயினிலும், காலிலும் (Gaul) வாழ்ந்த மக்களுக்குமிடையே வேற்றுமைகள் காணப்பட்டன. உயிரையும் உடைமைகளையும் புனிதமாகக் கருதிய ரோமானியக் குடிகளின் சமூக நிலைக்கும், ரோமானிய கவர்னரைத் தம் பாதுகாப்புக்காக வீணிலே எதிர்பார்த்து நின்ற ரோமானிய அடிமை நாட்டின் குடிமக்கட்கும் இடையே குறிப்பிடத்தக்க ஏற்றத் தாழ்வுகள் இருந்தன. தவிரவும், ரோமானியக் குடியரசின் இறுதிக் காலத்தில் அதன் எல்லைகளில் ஜுகுர்த்தா (Jugurtha), மித்ரிடேடெஸ் (Mithridates), அரியோவிஸ்டஸ் (Ariovistus) போன்ற வலிமைமிக்க அரசர்களிடமிருந்து இடைவிடாது பேராபத்துக்கள் ஏற்பட்டன. யாவற்றிற்கும் மேலாக நாம் மேலே குறிப்பிட்டபடி நாட்டுக்குள்ளே ஸ்டாஸிஸ் எனப்பட்ட சமூகப் பிளவுகள் ஏற்பட்டிருந்தன. இவை

மக்களின் சக்திகளைக் குறைத்து நாட்டின் பாதுகாப்புக்கும், ஒற்றுமைக்கும் செலுத்தப்படவேண்டிய அவர்களுடைய கவனத்தை வேறுபக்கம் திருப்பி, நாட்டில் பகையை வளர்த்தன. மேலும் அவை மக்கட் பேரவைகளில் எவ்வித நேர்மையான வாதங்களும் நடக்கவிடாமல் தடுத்தன. சுருங்கக் கூறினால், விரிந்து பரந்திருந்த ரோமானியப் பேரரசு இன ஒற்றுமை, சமய ஒற்றுமை, வரலாற்று ஒற்றுமை போன்ற இயற்கையான பிணைப்புகளையும், வன்மையான நடு அரசாங்கத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்கைப் பிணைப்பையும் இழந்து, சிதையும் தறுவாயில் இருந்தது.

இறுதியாக, சிட்ஜ்விக் குறிப்பிடுவது போல, ரோமானியப் பேரரசு முடியாட்சியாக மாறுவதற்குப் போர்ப்படையில் ஏற்பட்ட அடிப்படையான மாறுதல் முக்கிய காரணமாகும். கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் முடிவுவரை சொத்தின் அடிப்படையில் ரோமானியக் குடிகள் போர்ச் சேவை செய்யவேண்டும் என்ற பழைய விதி நடைமுறையில் இருந்தது. இந்தக் குடிமக்களின் படை ரோமானிய மக்களே திரண்டு எழுந்த தேசியப் படை போல் இருந்ததால், அவர்களை இணைத்த பிணைப்புகள் திண்மையாகவும், உண்மையாகவும் இருந்ததுடன், அவர்களிடம் கூட்டுறவு உணர்ச்சியையும் வளர்த்தன. மேலும் ரோமானிய அரசியல் அமைப்புக்கு உட்பட்டிருக்கிறோம் என்ற எண்ணம், ஒரு தனிப் படைத் தலைவனின் படையில் இருக்கிறோம் என்ற எண்ணத்தை விட அதிக நாட்டுணர்ச்சியை அவர்களுக்குக் கொடுத்தது. ஆனால் கி. மு. முதலாம் நூற்றாண்டிற்குள் இந்த நிலை மாறிவிட்டது. குடியுரிமை எல்லோருக்கும் வழங்கப்பட்டபோது பொது உணர்ச்சி குறைந்தது. போர்ப்படையில் குடியுரிமையற்றவர்களின் தொகையும், கொள்ளைப் பொருள்களில் பங்கு பெறலாம் என்ற ஆசையினால் இழுக்கப்பட்டுப் படையில் சேர்ந்தோரின் எண்ணிக்கையும் அதிகரித்தது. பொது உணர்ச்சி மறைந்து, படைத்தலைவன்பால் கொண்ட பற்றுறுதியே போர்ப்படையில் நிலவியது. இதனால் போர்ப்படையானது நாட்டில் படையாட்சியை ஏற்படுத்தத் தக்க ஒரு கருவியாகக் கருதப்பட்டது. மேரியஸ் (Marius), ஸல்லா (Sulla), பாம்பேயஸ் (Pompeius), ஸீஸர் (Caesar) ஆகியவர்கள் இந்த உண்மையை நிரூபித்தனர்.

இத்தகைய படையாட்சியே ரோமானியப் பேரரசில் முதல்வராட்சியின் தொடக்கமாகும். பூசல்களாலும், குழப்பங்களாலும் சிதைக்கப்பட்டிருந்த நாட்டை அது ஒன்றுபடுத்தியது. ஆகவே அதன்பால் ரோமானிய மக்கள் பற்றுக்கொண்டனர். ரோமானிய

அரசாங்கத்தின் மாட்சிமையை அவர்கள் அதனிடம் காணமுடிந்தது. எனவே, பண்டைய நாகரிகத்தின் இடிகரைகளிலிருந்து வன்மை வாய்ந்ததொரு புதிய அரசு மலர்ந்தது; ஒற்றுமையும் பிறந்தது. கி. மு. 48ஆம் ஆண்டில் பாம்பேயை முறியடித்த ஜூலியஸ் ஸீஸரை ஸெனட் ஆயுள் முழுவதற்கும் தன்னுட்சியாளராக ஏற்படுத்திய நிகழ்ச்சியே இப்புதிய திருப்பத்தின் முதல் கட்டமாகும்.

இத்தகைய தன்னரசின் முதல் கூறு, மாநிலக் கவர்னர்கள் செலுத்தி வந்த "ப்ரோக்கான்சலர்" (Proconsular) அதிகாரத்தை ஓரு நிலைப்படுத்தி நிரந்தரமாக்கியதாகும். இதற்கு முன் மாநிலங்களில் ப்ரோக்கான்சல்கள், ப்ரோப்ரீட்டர்கள் (Propraetors) என்ற முறையில் கவர்னர்கள் தன்னுட்சி செலுத்தி வந்தனர். இந்தக் கவர்னர்கள் அடிக்கடி மாற்றப்பட்டனர். ஆனால் ஜூலியஸ் ஸீஸர் தன்னுட்சியாளராக நியமிக்கப்பட்ட பிறகு, மாநிலங்கள் எல்லாவற்றிற்கும் சேர்ந்து ஓரே ஓரு 'ப்ரோக்கான்சல்' தோன்றினர். அவரே தன்னுட்சியாளராவார். ஸீஸருக்குப் பிறகு பதவியேற்ற அகஸ்டஸ் (Augustus), மூவாட்சியின் (Triumvirate) உறுப்பினராகத் தாம் பெற்றிருந்த சிறப்பதிகாரங்களைக் கி. மு. 27 இல் மக்களிடமும், ஸெனட் சபையிடமும் ஒப்படைத்தார். ஆனால் அதற்குப் பதிலாக அவருக்குப் பத்து ஆண்டுகளுக்கு "இம்பீரிய"மும், குறிப்பிட்ட சில மாநிலங்களை ஆளும் அதிகாரமும், ஆயுள் முழுவதும் ரோமானியப் படைகளின் தலைவராக இருக்கவும், படை திரட்டவும், போர் தொடுக்கவும், சமாதானம் செய்யவும் தனி உரிமைகளும் அளிக்கப்பட்டன. இதுவே முதல்வராட்சியின் பிறப்பாகும். இம்பீரியம் என்ற அதிகாரம் வெளிநாட்டுச் செயல்கள், போர், சமாதானம், உடன்படிக்கை ஆகிய துறைகளில் அகஸ்டஸுக்கு எல்லையற்ற அதிகாரத்தைக் கொடுத்தது. இந்த உரிமைகளெல்லாம் முன்னுளில் பேரவைகளைச் சார்ந்தவை. ஆனால் ரோமுக்குள் அகஸ்டஸின் அதிகார வரம்பு தெளிவில்லாமல் இருந்தது. இன்னும் ரோம் ஸெனட், கான்சல்கள், ப்ரீட்டர்கள் ஆகியோரால் பெயரளவில் ஆளப்பட்டு வந்தது. ஆனால் ரோமானியக் குடிகள் சம்பந்தப்பட்ட வரையில் முதல்வர் (Princep) பொதுவாகச் செலுத்திய அதிகாரத்தின் முக்கிய அம்சம் "ட்ரிப்யூனிசிய" (Tribunician) அதிகாரமாகும். அதாவது, முற்காலத்தில் ப்ளெபியர்களின் அதிகாரிகளான ட்ரிப்யூன்கள் பெற்றிருந்த அதே அதிகாரமாகும். ஆனால் இந்த அதிகாரம் தொன்றுதொட்டே புனிதமானதெனக் கருதப்பட்டதாலும், வரம் பற்றதாயிருந்தமையாலும், அது முதல்வரின் அதிகாரப் பெருக்கிற்கு நல்லதோர் ஆதாரமாக இருந்தது. மேலும், முதல்வர் நாட்டின் பெருமையையும், மக்களின் நலத்தையும் காக்கத் தேவை

யான எல்லா விதமான சிறப்பதிகாரங்களையும் பெற்றிருந்தார். எனவே, ஆரம்பத்திலிருந்தே அவருடைய ஆணைகள் மறுக்க முடியாதவையாக இருந்தன. நாளடைவில் குடியரசைச் சார்ந்த நிறுவனங்கள் ஒவ்வொன்றாக மறைந்தன. வரம்பற்ற அதிகார முள்ள முதல்வர் அல்லது மன்னன் இப்போது சட்டமியற்றுவதிலும், நிர்வாகத்திலும், நீதித்துறையிலும் ரோமானிய மக்களின் சட்டப்படியான வாரிசாகக் காட்சியளித்தார். எனவே, கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குள் ரோமானியப் பேரரசானது இது வரை உலகம் கண்டிராததும், எதிர்பார்த்திராததுமான அளவில் புதியதோர் அரசாக மாறியது. இந்த முடியாட்சி மேற்கில் ஐந்து நூற்றாண்டுகளும் கிழக்கே பதினைந்து நூற்றாண்டுகளும் நிலவி நின்றது.

ரோமானியப் பேரரசின் அரசாங்கம்

ரோமானியக் குடியரசு மடிந்து, முதல்வராட்சி எனப்பட்ட முடியாட்சி தோன்றிய வகையைப் பார்த்தோம். இப்போது இம் முடியாட்சியின் கீழ் நிலவிய அரசாங்கத்தைக் கவனிப்போம். இந்த அரசாங்கம் முதலில் ஸெனட்டும் பேரரசனும் (Emperor) சேர்ந்து நடத்திய இரட்டை யாட்சியாகவும் (Dyarchy), பிறகு பேரரசனும் போர்ப்படையும் (Army) சேர்ந்து நடத்திய இரட்டை யாட்சியாகவும் இருந்தது. ரோமானியப் பேரரசின் வரலாற்றின் இவ்விரு காலங்களின் முதற் காலத்தைப்பற்றி இப்போது கூறுவோம்.

இக்காலத்தில் அகஸ்டஸ் என்பவர் மேரியஸ், ஸீஸர் போன்றவர்களைப் போலல்லாமல், முதல் முதலாக ஸெனட்டின் ஒத்துழைப்புடன் ஆளும் வழக்கத்தை ஏற்படுத்தினர். ஸெனட்டின் பழமையான புகழைத் துணையாகக்கொண்டே அகஸ்டஸும், அவருக்குப் பின் வந்தவர்களும் ரோமானியப் பேரரசை நிறுவினர். தாம் பெற்றிருந்த அதிகாரங்களை இப்பேரரசர்கள் ஸெனட்டின் இசைவுடனே பயன்படுத்தினர். மேலும் அவர்கள் ரோம், இத்தாலி, சில உள்நாட்டு மாநிலங்கள் ஆகியவற்றை ஸெனட்டின் அதிகாரத்தில் விட்டிருந்தனர். சீரியல் தொடர்பு சார்ந்த வழக்குகளில் ஸெனட் இறுதி நீதி மன்றமாகத் திகழ்ந்தது. குற்றவியல் வழக்குகள் எல்லாவற்றையும் ஸெனட்டே கேட்டுத் தீர்ப்புக் கூறிற்று. ரோமானிய மக்களின் மாட்சிமைக்கும், அமைதிக்கும் தீங்கிழைத்தோரையும் ஸெனட்டே தண்டித்து வந்தது. நாட்டின் அறிவுரை அவையாகவும், நீதி மன்றமாகவும் இருந்த ஸெனட் சட்ட மன்றமாகவும் திகழ்ந்தது. நாட்டில் எல்லா அதிகாரங்களும் ஸெனட்டினின்று பிறந்ததாகவே கருதப்பட்டன. பேரரசர்களும் கூட ஸெனட்டின் கூட்டங்களில் பங்கெடுத்து வந்தனர். ஆனால்

இது ரோமானியப் பேரரசின் புறத்தோற்றமேயாகும். நடை முறையில் பேரரசனே அரசின் நடுவிடமாக இலங்கினன். அதன் அரசாங்கம் ஒரு வரம்பில்லா முடியாட்சியாக இருந்தது. இக் காலத்தில் வலிமைமிக்க முடியாட்சியால்தான் ரோமானியப் பேரரசைக் கட்டியாள முடிந்தது. ஆகவே, ஸெனட் என்ற நிறுவனம் நிலைத்திருந்த போதிலும், அது பெயரளவில்தான் ஆட்சி செலுத்தியது. ஸெனட்டெனும் திரைக்குப் பின் வரம்பில்லா முடியாட்சி மறைந்து நின்றது. டைபீரியஸ் (Tiberius) மன்னர் காலத்திலும், அவருக்குப் பிறகு வந்த பேரரசர்கள் காலத்திலும் இது நன்கு புலப்பட்டது. ஆகவே, அகஸ்டஸ் முதல் டயக்ளேஷியன் (Diocletian) வரை ரோமானியப் பேரரசு புறத்தோற்றத்தில் ஸெனட்டையும் பேரரசனையும் கொண்ட இரட்டையாட்சியாகத் தோன்றிய போதிலும், நடைமுறையில் பேரரசனின் வரம்பில்லா முடியாட்சியாகவே இருந்தது.

டயக்ளேஷியன் காலத்தில் இந்த உண்மை வெளிப்படையாகத் தோன்றலாயிற்று. ஏனெனில், அவ்வரசன் காலத்தில் ஸெனட்டும் மக்கட் பேரவைகளும் முற்றிலும் சிதைந்துபோயிருந்தன. ஆகவே, டயக்ளேஷியன் தன்னையே நடு நாயகமாகக் கொண்ட ஓர் அரசியல் அமைப்பையும், நிர்வாக முறையையும் ஏற்படுத்தினன். ஆனால், குழப்பங்களும் ஆபத்துகளும் நிறைந்திருந்த இக்காலத்தில் நிலையான நிறுவனம் எதுவும் ஏற்படுவது கடினமாயிருந்தது. பேரரசனுடைய அதிகாரத்திற்கு இக்காலத்தில் ஓர் ஆதாரம்தான் இருந்தது. அதுவே போர்ப் படையாகும். ஆகவேதான் டயக்ளேஷியனுக்குப் பிறகு ரோமானியப் பேரரசின் அரசாங்கம் பேரரசனையும் போர்ப்படையையும் கொண்டமைந்த இரட்டையாட்சியாக மாறியது. முந்திய இரட்டையாட்சியில் ஸெனட்டின் வலிமை குன்றிப் பேரரசனின் அதிகாரம் ஓங்கியதுபோல, இப்புதிய இரட்டையாட்சியில் பேரரசனின் ஆற்றல் குறைந்து, போர்ப்படையின் பலம் அதிகரித்தது. நாளடைவில் பேரரசன் படையின் கைப்பொம்மையாக மாறினன். இதற்கு முன்னுல் கான்ஸ்டன்டைன் (Constantine) எனும் பேரரசன் காலத்தில் ரோமானியப் பேரரசு இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மேற்கு ரோமானியப் பேரரசில் தியொடோஸியஸ் (Theodosius) எனும் பேரரசனுக்குப் பிறகு பெரும் படைத் தலைவர்களே பேரரசனின் பெயரால் நாட்டை ஆண்டு வந்தனர். முடிவில் ஓடோசர் (Odoacer) எனும் போர்த்தலைவன் ரோமுலஸ் அகஸ்டலஸ் (Romulus Augustulus) எனும் பொம்மைப் பேரரசனை அரியணையிலிருந்து விலக்கிவிட்டு, தானே முடிசூட்டிக் கொண்டான் (478 கி.பி.). ஆனால் ஓடோசரின் வல்லாட்சி வெகு நாட்கள் நீடிக்கவில்லை. ஏனெனில் ஆஸ்ட்ரகாத்துக்கள் (Ostrogoths)

எனப்பட்ட மிலேச்சர்கள் ரோமானியப் பேரரசின் மீது படை யெடுத்து வந்து ஓடோசரைத் தோற்கடித்துத் தியொடோரிக் (Theodoric) என்பவனே மன்னனுக்கினர். ஆகவே, ஓடோசர் காலத்தோடு ரோமானியப் பேரரசு முற்றிலும் மறைந்துவிட்டது. இந்த மறைவிற்கு முக்கிய காரணங்களை அடுத்த இயலில் பார்ப் போம்.

ரோமானியப் பேரரசின் வீழ்ச்சி

மேற்கு ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்கு மிலேச்சர்களின் (Barbarians) படையெடுப்புகளே முக்கிய காரணமாகும். கி. பி. 401 முதல் 568 வரை இவர்கள் மூன்று முறை பேரரசைத் தாக்கி, வலிமை வாய்ந்த அவ்வரசைச் சிதைத்தனர். கி. பி. 401 முதல் 410 வரை விசிகாத்துக்கள் (Visigoths) எனப்பட்ட மேற்கு காத்துக் கள் அலாரிக் (Alaric) என்பவன் தலைமையில் படையெடுத்து வந்து, ஓனோரியஸ்(Honorius) எனும் வலிமையற்ற அரசனின் பெய ரால் நடந்துவந்த அரசாங்கத்தைச் சின்னபின்னமாக்கினர்கள். பிறகு கி. பி. 489 இல் தியொடோரிக் என்பவனின் தலைமையில் ஆஸ்ட்ரகாத்துக்கள் எனப்பட்ட கிழக்குக் காத்துக்கள் இத்தாலி யைத்தாக்கினர். இக்காலத்தில் மேற்கு ரோமானியப் பேரரசை ஓடோசர் எனும் போர்த்தலைவன் ஆண்டு வந்தான். தியொடோரிக் கின் வெற்றிக்குப் பிறகு ராவென்னாவை (Ravenna)த் தலைநகராகக் கொண்டிருந்த பேரரசு முற்றிலும் சிதைந்ததென்று கூறலாம். இதன் பிறகு கி. பி. 568 இல் லம்பார்டியர்கள் (Lombards) ஆல்ப்ஸ் (Alps) மலையைக் கடந்து, போ (Po) பள்ளத்தாக்கைக் கைப்பற்றினர். இந்த மூன்று படையெடுப்புகளுக்குப் பிறகு மேற்கு ரோமானியப் பேரரசு பல சிறு மிலேச்ச முடியரசுகளாகப் (Barbarian Kingdoms) பிரிக்கப்பட்டது.

புகழும் வலிமையும் பெற்றிருந்த ரோமானியப் பேரரசு சிறு கூட்டங்களாக வந்த இம்மிலேச்சர்களை ஏன் எதிர்த்து நிற்க முடியவில்லை? இதற்குச் சில அரசியல் காரணங்களும், சில போரியல் சார்புள்ள காரணங்களும் இருந்தன. இவற்றை இப் போது பார்ப்போம். மேலே கூறிய மூன்று மிலேச்சர்களின் படைகளும் கிழக்கே டான்யூப் (Danube) நதியைக் கடந்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணம் அந்தப் பெரிய நதியின் மேற்குக் கரை, அஃதாவது ரோமானியப் பேரரசைச் சார்ந்திருந்த கரை சரியாகப் பாதுகாக்கப்படாமல் இருந்ததுதான். மேலும், இந்தக் கரையோரங்களில் ட்யூட்டானியர்கள் (Teutons) பாசறைகள் அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இந்த ட்யூட்டானியர்கள், விசிகாத்துக்களும் மற்ற மிலேச் சர்களும் டான்யூபைக் கடந்து பேரரசின்மீது படையெடுத்து வந்த

போது அவர்களை எதிர்த்து நிற்காமல், அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். இவ்வாறு வெகு எளிதில் எல்லையைக் கடந்து வந்த மிலேச்சர்களை எதிர்த்து நிற்க இத்தாலியில் வலிமை மிக்க அரசாங்கமோ, போர்ப்படையோ இல்லாமலிருந்ததால் அவர்கள் எளிதில் பேரரசை முறியடிக்க முடிந்தது.

பேரரசின் டான்யூப் எல்லை ஏன் நன்முகப் பாதுகாக்கப்பட வில்லை? அவ்வெல்லையைக் கடந்து வந்த மிலேச்சர்களை எதிர்த்து நிற்கத் திறமையுள்ள போர்ப்படை இத்தாலியில் ஏன் இல்லை? மேற்கு ரோமானியப் பேரரசின் அரசாங்கம் இக்காலத்தில் ஏன் வலிமை குன்றியிருந்தது? இந்த வினுக்களுக்கு இங்கு விடை கூற முயலுவோம்.

ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்கான அரசியல் காரணங்களை இப்போது ஆராய்வோம். கி. பி. 5 ஆம் நூற்றுண்டில் ரோமானியப் பேரரசு அளவுக்கு மேலாகப் பரந்து விரிந்திருந்தது. மத்தியதரைக் கடலைச் சூழ்ந்திருந்த நிலப் பரப்புகளின் பெரும் பகுதி அதன் ஆணைக்குட்பட்டிருந்தது. ஆனல் இவ்வளவு பெரிய அரசைக் கட்டியாளும் திறன்வாய்ந்த அரசாங்கம் அதற்கில்லை. குறிப்பாகப் பேரரசைச் சூழ்ந்திருந்த மூன்று பெரு நில எல்லைகளைக் காப்பது மிகக் கடினமாக இருந்தது. இம்மூன்று எல்லைகளில் ஐரோப்பிய எல்லையிலும், ஆசிய எல்லையிலும் அடிக்கடி ஏற்பட்ட ஆபத்துகளைத் தடுக்க இவ்விரு எல்லைகளிலும் தனித்தனியே இரு படை நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டியிருந்தது. டயக்ளேஷியன் எனும் பேரரசன் காலத்தில் (கி. பி. 284-305) இவ்விரு நிறுவனங்களும் தனித்தனியே இரு போர்த்தலைவர்களின் அதிகாரங்களுக்கு உட்பட்டிருந்தன. கி. பி. 395 இல் தியொடோஸியஸ் எனும் பேரரசன் இறந்த பிறகு, பேரரசு இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, இறந்த அரசனின் இரு மக்களுக்கும் அளிக்கப்பட்டது. இதன்படி மேற்குப் பகுதி ஓனேரியஸ் என்பவனுக்கும், கிழக்குப் பகுதி ஆர்கேடியஸ் (Arcadius) என்பவனுக்கும் கிடைத்தது. இந்தப் பிரிவானது ஆட்சியை எளிதாக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டபோதிலும், இரு பகுதிகளுக்குமிடையே வெகு காலமாக நிலவி வந்த இனவேற்றுமைகளை மிகுத்தது. ஆகவே, இவ்விரு பகுதிகளின் அரசாங்கங்களுக்குமிடையே ஒற்றுமை நிலவ இயலாமலிருந்தது. எனவே, இவ்விரு அரசாங்கங்களும், தம் போட்டி மனப்பான்மையின் காரணமாக டான்யூப் எல்லையைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கைவிட்டன. இதனல்தான் மிலேச்சர்கள் டான்யூபைக் கடந்து இத்தாலியின் மீது படையெடுத்தபோது, கிழக்கு அரசாங்கம் அதைத் தடுக்க முயலவில்லை. மிலேச்சர்கள் மேற்கு ரோமா

னியப் பேரரசைத் தாக்கியபோது, அவ்வரசு தனக்கிருந்த ஒரே நட்பரசையும் இழந்து நின்றதே அது எளிதில் முறியடிக்கப்பட்டதற்கு முக்கியமான காரணமாகும்.

இரண்டாவதாக, ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குச் சில போரியல் சார்புள்ள காரணங்களும் இருந்தன. கி. பி. 5 ஆம் நூற்றாண்டில் ரோமானியப் படையில் பாதிக்கு மேலாக மிலேச்சர்கள் நிறைந்திருந்தனர். கூலிக்காகப் போரிட்ட இவர்கள் ரோமானிய அரசாங்கத்தின் மீது வெறுப்புற்றிருந்தனர். மேலும், இவர்கள் ரோமானியப் பேரரசின் பகைவர்களான மிலேச்சர்களுடன் நட்புக் கொள்ளத் தயங்கவில்லை. படைத் தலைவர்களின் ஆணையைத் தவிர வேறு எந்த அதிகாரத்திற்கும் ரோமானியப் படைகள் உட்பட மறுத்தன. மேலும் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டபோதெல்லாம், படைகள் அவற்றைச் சந்தர்ப்பங்களாகக்கொண்டு நாட்டின் அரசாங்கத்தைக் கைப்பற்ற முயன்றன. இவ்வித முயற்சிகள் பேரரசு முழுவதும் அவ்வப்போது நடந்தன. உதாரணமாகப் பிரிட்டனிலும் ரைன் (Rhine) நதியின் அருகிலும் போர்த் தலைவர்கள் கிளர்ச்சிகள் செய்து, தமது அதிகாரத்தை நிலைநாட்ட முயன்றனர். படைகளின் இந்த அடங்காத் தன்மையினால் பேரரசின் மேற்குப் பகுதியில் உள் நாட்டுக் கலகங்கள் தோன்றி அரசைச் சீரழித்தன.

மேலும், இக்காலத்தில் ரோமானியப் பேரரசைக் காப்பதற்கு வேண்டிய அளவு பெரிய போர்ப்படை இல்லை. பேரரசு தன் படைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாமல் இருந்ததற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவதாக, இக்காலத்தில் படைகள் கூலிக்குப் போரிட்டதால், புதுப் படைகளுக்கான கூலியைக் கொடுக்கப் பேரரசினால் இயலாமலிருந்தது. ஏனெனில், ஏற்கெனவே ஏராளமான வரிகள் விதிக்கப்பட்டிருந்ததால், மக்களிடமிருந்து புதிய வரிகளைத் திரட்ட முடியவில்லை. இரண்டாவதாக, மாநிலங்களில் நாட்டுப் பற்றுப் பெரிதும் குன்றியிருந்ததால், படையில் சேர்ந்து நாட்டுக்காகப் போரிடுவதற்காகப் பலர் முன்வரவில்லை. இவ்விரு காரணங்களினால் ரோமானியப் படை வலிமை இழந்திருந்ததோடு, வீரரின் எண்ணிக்கையும் குறைந்திருந்தது. இது ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குரிய காரணங்களில் ஒன்றாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, ரோமானியப் பேரரசின் நலிவுக்குச் சமூகச் சீர்குலைவு தலையான காரணமாகும். மேற்கு ரோமானியப் பேரரசு, அதன் வீழ்ச்சியின்போது ஒரு மிலேச்ச அரசையொத்திருந்ததேயன்றிப் பயன்பட்ட அரசாகத் திகழவில்லை. சீரியல் தொடர்புகளெல்லாம் போரியல் சட்டத்திற்கும், படை அதி

காரத்திற்கும் உட்பட்டிருந்தன. பிரபுக்களும் தனிமனிதர்களும் சுயேச்சையான அதிகாரம் செலுத்திவந்தமையால் அரசின் ஆணை பெரிதும் ஆற்றல் குறைந்திருந்தது. பெட்ரீஷியர்களுக்கும் ப்ளெபியர்களுக்கும் நடந்த பெரும் போராட்டத்தின் விளைவாக நிலைநாட்டப்பட்டிருந்த சமத்துவம் குலைக்கப்பட்டுச் சமூகத்தில் பாகுபாடுகள் தோன்றியிருந்தன. சட்டம் எல்லோருக்கும் பொருந்தக்கூடிய பொதுக் கோட்பாடுகளைக் கொண்டதாயில்லாமல், பெரும்பாலும் தனி அதிகாரிகளின் ஆணைகளால் (Edicts) ஆக்கப்பட்டிருந்தது. சுருங்கக் கூறினால், இக்காலத்தில் ரோமானியப் பேரரசு தான் உலகிற்களித்த சட்டம் போன்ற அழியாச் சொத்துக்கள் அனைத்தையும் இழந்து நின்றது. இவ்வாறு சீர் குலைந்திருந்த ரோமானியப் பேரரசு மிலேச்சர்களால் தாக்கப் பட்டபோது, வீழ்ச்சியடைந்ததில் வியப்பேதுமில்லை அல்லவா?

---

9. ரோமானியச் சட்டம் (Roman Law)

சட்டமும், ஒழுங்கும் ரோமானியர்கள் உலகுக் களித்த செல்வங்களாகும். வகுப்புகளுக்கிடையே ஏற்பட்ட போராட்டங்களின் போதே ரோமானியச் சட்டம் உருப்பெறத் தொடங்கிவிட்டது. பிற்காலத்தில் ஐரோப்பாவில் பரவியிருந்த சட்டக் கோட்பாடுகளனைத்தும் ரோமானியக் குடியரசின் காலத்தில் தொடங்கிய சட்டத் தொகுப்பு முயற்சிகளின் விளைவுகளெனக் கூறலாம். "சிவிஸ் ரோமானி" (Civis Romani) என்ற ரோமானியச் சீரியல் சட்டம் முதல் முதலில் கி. மு. 451இலும், அதற்கடுத்த ஆண்டிலும் "டெசெம்வர்கள்" (Decemvirs) என்ற குழுவினால் தொகுக்கப்பட்டது. இவ்வாறு தொகுக்கப்பட்ட சட்டங்கள் "பன்னிரு பலகைகள்" (The Twelve Tables) என்றழைக்கப்பட்டன. அவைகள் ரோமானியரின் அரசியல் முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. இதுவரை மக்களின் உறவுகளையும், உரிமைபெற்றோர் உரிமையற்றோர்களுக்கிடையே உள்ள தொடர்புகளையும், உயிரையும் உடைமைகளையும் சார்ந்த விதிகளையும் செயல்துறை அதிகாரிகளே குடும்பம் அல்லது குல மரபின்படி ஒழுங்குபடுத்தி வந்தனர். ஆனால் பன்னிரு பலகைகள் வெளியிடப்பட்ட பிறகு, நாடு திட்டவட்டமாகத் தொகுக்கப்பட்ட சட்டக் கோட்பாடுகளைப் பெற்றது. இவற்றுடன் பண்டைய நாடுகளின் சட்டத் தொகுப்புகளிலிருந்து தழுவிக் கொள்ளப்பட்ட புதுச் சட்டங்களும், சிறப்பாக ஸோலனின் (Solon) சட்டங்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. ஆனால், பெரும்பாலும் பன்னிரு பலகைகள் ரோமானிய

மரபு வழிவந்த வழக்கங்களின் தொகுப்பேயாகும். அவை நகர வாழ்வின் இன்றியமையாத அடிப்படைக் கருத்துக்களின் தொகுப்பாகும். ஆகவே, அவை நகர மக்களின் வாழ்க்கைக்கும், அவர்களின் சமூக உறவுகளுக்கும் சிறந்த பாதுகாப்பாக விளங்கின. தம் நகர வாழ்வின் விழுமியான இச்சட்டத்தை ரோமானிய மக்கள் தமக்கே இயல்பான நுட்பத்தோடும், தக்க முறையோடும் வளர்த்துக் கொண்டனர்.

பன்னிரு பலகைகள் பல நூற்றாண்டுகளாக வணக்கத்துடன் போற்றப்பட்டு வந்ததுடன், 'யுஸ் சிவிலே' (Jus civile) என்ற ரோமானிய சீரியற் சட்டத்தின் அடிப்படையாகவும் இருந்தன. சட்டங்களுக்கு விளக்கம் கூறுவதாலும், தேவைகளுக்கேற்ப அவற்றை மாற்றியமைப்பதாலும் இச்சட்டத்தொகுதி விரிவாக்கப்பட்டது. சட்டத்திற்கும் ஒழுங்கு முறைக்கும் ரோமானியர் காட்டிய பற்றும், நன்மதிப்பும் அவர்களுடைய சிறந்த இயல்புகளில் ஒன்றாகும். இதுவே ரோமானியர் அமைத்த சட்ட நிறுவனத்தின் திண்மைக்குக் காரணமாகும்.

ஆனால் ரோம் அடுத்த முந்நூறு ஆண்டுகளில் பேரரசாக மாறியபோது, பன்னிரு பலகைகளில் அடங்கிய சீரியற் சட்டம் பேரரசின் ஆட்சிக்குத் தக்க அளவு விரிவடையவில்லை. இக் காலத்தில் ரோம், கிரேக்கர்கள், கார்தேஜினியர்கள், ஸ்பானியர்கள் போன்ற பலதரப்பட்ட மக்களை வென்று தன்னாணைக்குள் அடக்கியிருந்தது. மேலும், அதன் வாணிகத் தொடர்புகள் அளவுக்கு மீறிப் பெருகியிருந்தன. மத்தியதரைக் கடல் பகுதி முழுவதிலும் ரோமின் வாணிகச் செல்வாக்குப் பரவியிருந்தது. இப் பெரும் வர்த்தக வளர்ச்சியின் காரணமாக சட்ட முறையிலே ஒரு சிக்கல் ஏற்பட்டது. அஃதாவது, வர்த்தகத்தை முன்னிட்டு ரோமுக்கு வரும் அந்நிய நாட்டவர் தம் சொந்த நாட்டுச் சட்டத்தை மட்டும் நன்கு அறிந்திருந்தனர். ஆனால் ரோமானிய நகரில் அச்சட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேலும், ஏதாவது உடன்படிக்கையின் காரணமாக ரோமானிய சீரியல் சட்டம் அவர்களைப் பாதுகாத்தால் மட்டும், அவர்கள் ரோமில் சீரான தொடர்புக்களைப் பெற முடியும். ஆனால் இது போன்ற உடன்படிக்கைகள் அரிதாக இருந்தன. எனவே, வேற்று நாட்டார் வர்த்தகத்தை முன்னிட்டு ரோமுக்கு வந்தபோது, அங்கு அவர்களைக் காக்க யாதொரு சட்டமும் கிடையாது.

யுஸ் சிவிலே என்ற ரோமானியச் சீரியற் சட்டத்தைக் கொண்டே இந்த வர்த்தகத் தொடர்புகளைச் செம்மையாக்க ரோமானியர் விரும்பவில்லை. ஏனெனில், ரோம் மிகப் பரந்த பேரரசாக வளர்ந்திருந்தபோதிலும், பழைய நகர அரசின் குடிகளி

டையே காணப்பட்ட அதே மனப்பான்மையே ரோமானிய மக்களிடையே நிலவியது. தமது சட்டத்தை அவர்கள் வேற்று நாட்டாருக்கு அளித்துதவ முன்வரவில்லை. இருந்தபோதிலும் ரோம் தனது மிகப் பெரிய வாணிக எதிரியான கார்த்தேஜ் நாட்டுடன் போட்டியிட்டு, அதனைத் தோற்கடிப்பதற்காகத் தன்னுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்த அன்னியர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு வழங்க ஒரு வழி வகுக்க வேண்டியிருந்தது.

ரோமானியர் இந்தச் சிக்கலைத் தீர்க்க ஒரு நடைமுறை வழியைக் கண்டுபிடித்தனர். இதனால் அவர்களின் சட்டமுறையில் புதியதொரு சகாப்தம் தோன்றியது. அவர்கள் தமது இணையற்ற கோட்பாடாகிய செயல்துறை அதிகாரத்தின் மூலம் இச்சிக்கலை நீக்கமுயன்றனர். ஏற்கெனவே கான்சல்களின் சீரியல் நிர்வாகத்தைக் கவனிக்க அவர்களுக்குத் துணையாக இம்பீரியம் என்ற மேலான அதிகாரம் பெற்ற ப்ரீட்டர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். வேற்று நாட்டானெருவன் சம்பந்தப்பட்டிருந்த சீரியல் தொடர்புகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு இந்தப் ப்ரீட்டர்களில் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டது. இவர் ப்ரீட்டர் பெரெக்ரினஸ் (Praetor Peregrinus) என அழைக்கப்பட்டார். இவர் அளித்த தீர்ப்புகளே நாளடைவில் சட்டமாக வளர்ந்து, யுஸ் ஜென்சியம் (Jus Gentium) என வழங்கப்பட்டது. இதுவும் ரோமானியச் சட்டத்தின் முக்கியமான பகுதியாகத் திகழ்ந்தது. வழக்கறிஞர்கள் நாளடைவில் யுஸ் ஜென்சியம் என்ற இப்புதுச் சட்டத்தை ஆராயவும், அறிவியல் முறையில் அதற்கு விளக்கங் கொடுக்கவும் முற்பட்டபோது, இது பிற்கால அனைத்து நாட்டுச் சட்டத்திற்கு அடிப்படையாக மாறியது.

இரண்டாம் பகுதி : பண்டைய இந்தியா

1. பண்டைய இந்திய ஆட்சி முறை
2. அரச பதவி
3. தர்மம்
4. மௌரிய ஆட்சிமுறை
5. குப்த ஆட்சிமுறை
6. தென்னாட்டு அரசுகள்
7. சோழ ஆட்சிமுறை

1. பண்டைய இந்திய ஆட்சிமுறை

தோற்றம்

பழங்கால இந்திய நூலாசிரியர்கள் அரசானது ஆட்சி குலைந்த நிலையை அழிக்கவே ஏற்பட்டது என்றும், ஆகவே அது சட்டம், ஒழுங்கு, நீதி, பாதுகாப்பு, பொதுநலன் ஆகிய வற்றின் அடையாளம் என்றும் கருதினர்கள். எடுத்துக்காட்டாக, மகாபாரதத்தில் இயற்கைநிலை (State of Nature) பற்றிய கருத்துக் காணப்படுகின்றது. இதற்கும், இதைப்பற்றி ரூஸோ கூறும் விளக்கத்திற்கும் அதிக வேறுபாடு இல்லை. இந்த இயற்கை நிலை யில் மக்கள் முழு இன்பத்துடன் வாழ்ந்தனர். அவர்களுக்கு அர சனை அல்லது அரசாங்கமோ தேவைப்படவில்லை. ஆனால் இந்நிலை நெடுங்காலம் நீடிக்கவில்லை. ஒழுக்கக் கேடு விரைவில் தோன்றவே, அவர்கள் அறவழி பிறழ்ந்து இன்ப நிலையை இழந் தனர். அப்போது அவர்களிடையே வனவிலங்குகளின் வன் முறைச் சட்டமே நிலவத் தொடங்கியது. எனவே ஒழுங்கையும், இன்பத்தையும் திரும்ப நிலைநாட்டக் கடவுள் பால்வேறுபாடற்ற ஒரு மகனை உருவாக்கி, அவனை அவர்களின் அரசனுக்கினர். மக் களும் அவன் கட்டளைகளுக்குப் பணிய இசைந்தனர். இவ்வாறு கப் பண்டைய இந்தியக் கருத்தின்படி அரசானது இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாக இருந்ததுடன், மக்களின் இசைவில் எழுந்த ஒப்பந்தமாகவும் விளங்கியது.

இக்கருத்து வெறும் ஊகத்தில் தோன்றியதாகையால், தற் காலக் கொள்கைகள் இதை நம்பத் தகாததெனத் தள்ளிவிடுகின் றன. அவை அறிவியல் முறையையும், உள்ளது சிறத்தல் (Evolution) கொள்கையையும் ஏற்றுக்கொள்வதால், அரசானது குடும்பத்திலிருந்து தோன்றிய ஒரு கிளை எனக் கூறுகின்றன. இதற்கு ஒப்பு மொழிநூலிலும் (Comparative philology), வேதங் களிலும் சான்றுகள் உள்ளன. ஆரியர்கள் தொடக்கத்தில் வாழ்ந்த இடங்களில்கூட இணை குடும்பங்களாகவே (Joint Families) வாழ்ந்தனர் என்று ஒப்பு மொழிநூலிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இவ்விணை குடும்பங்களில் பாட்டன், தந்தை, மாமன், மருமக்கள் எல்லோரும் சேர்ந்து இருந்தனர். இணை குடும்பத்தின் தலைவருக்கு அதன் உறுப்பினர்கள் மேல் ஏராள மான அதிகாரங்கள் இருந்தன. இதுவே அரசியல் அதிகாரத் திற்கு வித்தாக இருந்தது. ரிக் வேதத்தில் குறிக்கப்பட்டிருப்பது போல், முற்கால ஆரிய சமூகமானது குடும்பம், கிராமம், குலம் எனப் பிரிக்கப்பட்டிருந்தது. உறவினால் பிணைக்கப்பட்ட குடும்

பங்கள் சேர்ந்து கிராம சமூகமாக விளங்கின. இத்தகைய பல கிராம சமூகங்கள் உறவின் காரணமாக ஒன்று சேர்ந்து ஒரு 'விஸ்' என்ற தொகுதியாக இருந்தன. அதன் தலைவன் 'விஸ்பதி' என்று அழைக்கப்பட்டான். இந்தத் தொகுதிகள் பல சேர்ந்து 'ஜனம்' அல்லது குலம் ஒன்றை அமைத்தன. அதன் தலைவனின் பெயர் 'ஜனபதி'. குலம் பெருகிச் சமூக வாழ்வின் சிக்கல்களும் அதிகரிக்கவே, ஜனபதி என்ற நிறுவனமும் காலப்போக்கில் மாறி, அரச பதவியாக மலர்ந்திருக்க வேண்டும். இந்திய-ஆரிய சமூகத்தில் காணப்பட்டது போலவே இந்தியாவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் இனக் குடும்பத்திலிருந்து அரசு உருமலர்ச்சி அடைந்திருக்க வேண்டுமென நமக்குக் கிடைத்துள்ள சான்றுகள் காட்டுகின்றன.

வகைகள்

பழங்கால இந்தியாவில் பொதுவாக முடியரசுதான் நிலவியிருந்தது. ஆனால், வடகிழக்குப் பகுதிகளில் செல்வரின் சிறு குழுவாட்சியும் காணப்பட்டது. அரசர்கள் பேரவைகளில் ஒன்றுக் கூடுவதாக வேதத்தில் கூறப்பட்டிருப்பதிலிருந்து இது புலனாகிறது. இதிலிருந்தும் பிற சான்றுகளிலிருந்தும் சில ஆட்சி முறைகளிலே அதிகாரமுள்ள பிரபுக்களின் அவை இருந்தது என்றும், அது அரசின் தலைவனை மன்னனைத் தேர்ந்தெடுத்தது என்றும் தெரிகிறது. வேத காலத்து இந்தியாவில் முடியாட்சியையும் சிறு குழுவாட்சியையும் கொண்ட அரசுகள் இருந்தன போலப் பல குடியரசுகளும் இருந்தன. முக்கியமாக இமயமலையின் அருகிலுள்ள பகுதிகளில் முடியாட்சி இல்லாத அரசுகள் இருந்தன. அப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் 'விராத்துகள்' அஃதாவது மன்னனில்லாத மக்கள் என அழைக்கப்பட்டனர். வட்டார அவைகள், நகர அவைகள் ஏறக்குறைய முழு அதிகாரம் பெற்ற கிராமப் பேரவைகள், வாணிக, சாதிக் குழுக்கள் ஆகியவை பண்டைய இந்திய ஆட்சி முறையின் சிறப்பியல்புகளாம். தன்னாட்சி பெற்ற இந்நிறுவனங்கள் இந்திய வரலாற்றின் முந்திய காலத்திலே நல்ல வளர்ச்சி பெற்றிருந்தன. ஆனால், அரசுகளும் பேரரசுகளும் எழுந்ததாலும், இந்தியா முழுவதும் பரவிய பேரரசை நிறுவ வேண்டுமென்ற கருத்துத் தோன்றியதாலும் இவற்றின் வளர்ச்சி தடைபட்டது. குப்தர்களின் காலத்திற்குப் (கி. பி. 320-455) பிறகு இந்த மக்களின் நிறுவனங்கள் மறையத் தொடங்கின. அதற்குப் பிறகு வந்த நூற்றாண்டுகளில் அவை இருந்ததாகச் சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் பின் நிகழ்ந்த எல்லா அரசியல் குழப்பங்களிலும் கூடத் தன்னாட்சி பெற்றிருந்த கிராம சமூகமானது நிலைத்து நின்றது.

தன்மை

கௌடில்யர், மனு ஆகிய இருவரின் கருத்துப்படி அரசானது அரசன், அமைச்சு, நிலப்பகுதி, வளம், அரண், படைகள், நட்பு என்ற ஏழு உறுப்புக்களைக் கொண்ட ஓர் உடலாகும். இவ்வேழு உறுப்புக்களில் அரசனும், அமைச்சர்களும் நடு அரசாங்கமாகக் கருதப்பட்டனர். அவர்கள் இறைமை அதிகாரத்தைச் செலுத்தியதுடன், நாட்டில் ஒற்றுமையையும் ஏற்படுத்தினர். நிலப்பகுதி, அரண், படை, கருவூலம் ஆகியவை அரசிற்கு வளத்தைத் தந்தன நிலப்பகுதி குறிப்பிடப்பட்டிருப்பதால், குல அரசின் காலம் கடந்துவிட்டதெனத் தெரிகிறது. அரசைக் காப்பதற்கு அரணும் படைகளும் இன்றியமையாதனவாக இருந்ததால், அவை மிக முக்கியமானவையாக எண்ணப்பட்டன. நாட்டின் பாதுகாப்பிற்கும் அரசின் பல அலுவல்களுக்கும் பொருள் தேவைப்பட்டதால் கருவூலமும் அரசின் வாழ்விற்கு இன்றியமையாததாகக் கருதப்பட்டது. நட்பை அரசின் உறுப்புகளில் ஒன்றாகச் சேர்த்திருப்பது நமக்கு வியப்பைத் தருகிறது. ஆனால், இந்தியத் துணைக் கண்டத்திலே இருந்த ஏராளமான சிறு அரசுகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, நட்பு தேவையாக இருந்ததெனத் தெரிகிறது. ஏனெனில், ஓர் அரசு நிலைத்து நிற்க வேண்டுமென்றால் அது தக்க நட்பரசுகளின் துணையை நாடவேண்டியிருந்தது.

நோக்கங்கள்

வேதகால இலக்கியத்தில் அமைதி, ஒழுங்கு, பாதுகாப்பு, நீதி ஆகியவை அரசின் அடிப்படை நோக்கங்களெனக் கூறப்பட்டுள்ளன. வேதகாலத்திற்குப் பிறகு தோன்றிய இலக்கியத்திலே இதைவிட ஒழுங்கு முறையான பாகுபாடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதன்படி 'தர்மம்' (Dharma), 'அர்த்தம்' (Artha), காமம், (Kama) இவற்றை வளர்ப்பதே அரசின் நோக்கமாகும். தனி மனிதர்களிடையேயும், சமூகத்திலும் நற்குணங்களையும் அறநெறியையும் ஊக்குவிப்பதின் மூலம் அரசு தர்மத்தை வளர்க்க முடியும். வாணிகம், தொழில், பயிர்த்தொழில் முதலியவற்றை முன்னேற்றுவதாலும், நாட்டு வளத்தைப் பெருக்குவதாலும், புதிய நிலங்களைப் பண்படுத்திப் பயிர் செய்வதாலும், பயிர்கள் என்றும் மழையை நம்பி இருக்காதவாறு அணைகளையும், கால்வாய்களையும் கட்டுவதாலும், சுரங்கங்களைத் தக்க முறையில் பயன்படுத்துவதாலும் அரசின் 'அர்த்த' மெனும் நோக்கம் நிறைவுறும். எனவே, 'அர்த்தம்' என்றால் பொருளாதார வளம் எனப் பொருள்படும். அரசானது அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டி அதனால் தனிமனிதன் ஒவ்வொருவனும் உலைவின்றி வாழ்வின் இன்பம் பெற வழி வகுப்பதாலும், நுண்கலைகளை ஆதரிப்பதாலும் காமத்தை முன்

னேற்ற முடியும். ஆகவே அமைதியையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துவதுடன், சமூகத்தின் ஒழுக்கம், பொருள்நலம், கலைச் சுவை ஆகியவற்றை முன்னேற்றுவதும் அரசின் கடமைகளாகக் கொள்ளப்பட்டன. இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அரசு பெற்றிருந்த ஆற்றலே 'தண்டம்' என அழைக்கப்பட்டது. ஆகவேதான், அரசியல் பழங்கால இந்தியாவில் 'தண்டநீதி' எனக் கூறப்பட்டது.

அலுவல்கள்

மகாபாரதத்திலும், அர்த்த சாத்திரத்திலும் கூறியுள்ளபடி, மனித வாழ்வின் சமூக, பொருளாதார, மறைத் துறைகள் எல்லாவற்றிலும் அரசு செயலாற்றி வந்தது. அரசு தேவையான தீமை என்று கருதப்படவில்லை. அதன் அதிகாரச் செயல்கள் மிகக் குறைந்த அளவிற்குக் குறைக்கப்பட வேண்டுமென்றும் எண்ணப்படவில்லை. மதங்களும், சமய வகுப்புகளும் தம் வழியிலே வளர்ந்து, கடவுட் பற்று, ஒழுக்கம், நேர்மை முதலியவை முன்னேறத்தக்க வாய்ப்புகளை அரசு அளிக்க வேண்டும். சமூக ஒழுங்கை வளர்த்துக் கல்வியையும், கலையையும் முன்னேற்றி, அறிஞர், கலைஞர்களின் சங்கங்களை ஆதரிப்பதும் அரசின் அலுவல்கள். ஓய்வகங்கள் (Rest-houses), அறஉதவி நிலையங்கள், மருத்துவ மனைகள் முதலியவற்றை நிறுவிப் பேணி, வெள்ளம், வெட்டுக்கிளிகள், பஞ்சம், கொள்ளை நோய், நில நடுக்கம் இவற்றினால் ஏற்படும் துயர்களைத் துடைப்பதும் அரசின் வேலைகளாகும். மேலும், அது மக்கள் தொகை நாட்டின் பல பகுதிகளிலும் சமமாகப் பரவியுள்ளதா என்று பார்த்துப் புதிய பகுதிகளில் குடியேற மக்களைத் தூண்ட வேண்டும். காடுகளைப் பெருக்கிச் சுரங்கங்களைக் கவனித்துப் பயிர்கள் வாழ அணைகளையும் கால்வாய்களையும் கட்டி, நாட்டின் நிலவளத்தை வளர்க்க வேண்டும். வாணிகத்தையும், தொழிலையும் பெருக்கி, மக்களை முதலாளிகளின் தன்னலத்திலிருந்து காத்து, வாணிகப் பெருமக்கள் விற்பனைக் களத்தைக் கட்டுப்படுத்தி விலைகளை உயர்த்தாதவாறு தடுக்கவும் வேண்டும். சமூகத்தில் தீச்செயல்களைத் தடுப்பதற்காக மதுக்கடைகள், சூதாடும் இடங்கள், விலைமாதர் இல்லங்கள் இவற்றை மேற்பார்வையிடுவதும் அரசின் கடமைகளாம்.

அரசாங்க நிறுவனம்

பழங்கால இந்தியாவில் அதிகாரப் பிரிவினை (Sepation ofar Powers) ஒழுங்கு முறைப்படி செய்யப்படவில்லை. கொள்கைப்படி பார்த்தால் செயல்துறை, சட்ட ஆக்கத்துறை, நீதித்துறை ஆகிய மூன்று அதிகாரங்களுக்கும் அரசனே உறைவிடமாக இருந்தான்.

ஆனால் நடைமுறையில் அந்நிலை காலத்திற்குக் காலம் வேறுபட்டது. வேத காலத்தில் 'சமிதி' என்ற சட்டமன்றம் செயல்துறை அதிகாரத்தை அரசனுடன் பகிர்ந்துகொண்டது. ஆனால் வேத காலத்திற்குப் பிந்திய காலத்தில் 'சமிதி' பயனுறுதியுள்ள நிறுவனமாக விளங்கவில்லை. இதன் விளைவாக அரசனது அதிகாரமும், செல்வாக்கும் வளர்ந்தன. பண்டைய இந்தியாவில் சட்ட மியற்றல் தற்காலத்தில் இருப்பதுபோல் இருந்ததில்லை. உலகியல் சட்டங்களுக்கு வழக்கமும், மதச் சட்டங்களுக்கு மறை நூற்களும் ஆதாரமாக இருந்தன. ஆனால் விரைவில் அரசர்கள், சட்டங்களை ஆக்கவில்லையெனினும், அவசரச் சட்டங்கள் (Ordinances) இயற்றும் உரிமையைப் பெற விரும்பினர் என்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன. இதிலிருந்து வேத காலத்திற்குப் பிந்திய காலத்தில் இறைமையானது அரசனிடமே இருந்ததெனத் திட்டமாகக் கூறலாம்.

அரசும் தனிமனிதனும்

அரசுக்கும் குடிக்கும் பண்டைய இந்தியாவில் இருந்த தொடர்பினை ஆராயும்போது, அக்காலத்திலிருந்த சமூக அமைப்பையும், அரசியல் முறையையும் உற்றுநோக்க வேண்டும். அப்போது தனிமனிதனின் உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை. ஏனெனில் சமூக அமைப்பானது தனிச் சலுகைகள், சாதிப் பிரிவுகள் என்ற அடிப்படைகளின்மேல் நிறுவப்பட்டிருந்ததுமல்லாமல் தனிமனிதனின் வாழ்க்கை முழுவதும் அரசின் வினைகளிலே அடங்கியிருந்தது. பணித்துறை ஆட்சியும் (Bureaucracy) வலுப்பெற்றிருந்ததால், அதன் அதிகாரத்தைக் குறைக்கும் தடைகள் வலுவிழந்து காணப்பட்டன. மேலும், அரசனது அதிகாரத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய அரசியலமைப்புத் தடைகளும் அவனைப் பொறுப்புடன் செயலாற்றச் செய்யும் அளவுக்கு வலுப்பெறவில்லை. அக்காலத்து அரசியல் கோட்பாடு (Political Thought) அரசனைச் சுழ்ந்தே எழுந்தது. இதுதான் காப்பியங்களையும், அர்த்த சாத்திரத்தையும் எழுதிய ஆசிரியர்களால் ஆயப்பட்டுள்ளது. அவர்கள் கொடுங்கோன்மையின் தீமைகளை உணர்ந்ததால் அரசனின் அதிகாரத்தை வரையறுக்க முயன்றனர். ஆனால் அவர்களால் பயனுறுதியுள்ள தடைகளை ஏற்படுத்த முடியவில்லை. கொடுங்கோலனைக் கொல்ல மக்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அதற்கு மேல் இந்தியரின் கோட்பாட்டு ஆராய்ச்சி செல்லவில்லை. முற்கால இந்தியாவில் அரசியல் கடமையானது (Political Obligation), அரசு தனிமனிதனுக்களித்த உரிமைகளின் மேல் நிறுவப்படாமல், ஆட்சி குலைந்த நிலையை அரசால் மட்டும் தடுக்க முடியும் என்ற உண்மையையே ஆதாரமாகக்

கொண்டிருந்தது. ஆகவே வரம்பில்லா அரசு (Absolute State) தனிமனிதனின் நலத்திற்குத் தேவையாக இருந்தது. அரசன் கடவுள் தன்மை பெற்றவன் என்ற கருத்தும், சட்டங்கள் இறைவனின் ஆணைகளிலிருந்து பிறந்தவை என்ற கொள்கையும் தனிமனிதனின் உரிமைக் கோட்பாட்டிற்கு முரணாகவே இருந்தன.

---

2. அரச பதவி

தோற்றம்

முற்கால இந்தியாவில் அரச பதவியானது போரின் காரணமாகத் தோன்றியது. பழங்கால அரசர்கள் சிறந்த படைத் தலைவர்களாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில், அப்போது தான் அவர்களின் தலைமையை எல்லோரும் ஏற்றிருப்பார்கள். ஆகவே நெருக்கடியான ஒரு நிலையில் மக்களை வழி நடத்திச் செல்வதற்கு அவர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு போர்த் தலைவனே அரசனாக இருந்திருக்கவேண்டும். பல வெற்றிகளைப் பெற்ற பிறகு அவனது நிலை உறுதியாகி இருக்கும். நாளடைவில் அவன் அரசனது பதவியைப் பெற்றிருப்பான். அவனுக்குத் திறமையுள்ள ஆண்மக்கள் இருந்திருந்தால் அவர்களுக்கு அப்பதவி மரபுரிமையாக வழங்கப்பட்டிருக்கும். ஒருவேளை முதன் முதலில் மக்கள் தெரிந்தெடுத்த போர்த் தலைவன் வீரமிக்க 'விஸ்பதி'களில் ஒருவனாக இருக்கலாம். அவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்டதால் அவன் 'ஜனபதி'யாக மாறிப் பிறகு அரசனாக விளங்கியிருக்கலாம். இவ்வாறுகப் பண்டைய இந்தியாவில் மேல்நாட்டிலிருந்தது போலவே அரச பதவியானது 'ஜனம்' என்றழைக்கப்பட்ட தந்தை வழி முறைக் குலத்தின் தலைமைப் பதவியிலிருந்து பிறந்தது.

நிலையும் அதிகாரங்களும்

அரசனது நிலையும், அதிகாரங்களும் காலத்துக்கேற்ப மாறிக் கொண்டே வந்தன. வேத காலத்திற்கு முற்பட்ட காலத்திலும், வேதகாலத் தொடக்கத்திலும் அரசனின் அதிகாரங்கள் 'சமிதிகள்' என்ற சட்ட மன்றங்களாலும், 'விஸ்பதி'களின் கட்டுப்பாடுகளாலும் குறைக்கப்பட்டிருந்தன. ஆனால் அரசு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டபோதும், விஸ்பதிகள், சமிதிகளின் செல்வாக்குக் குறைந்த போதும் அரசனின் அதிகாரங்கள் ஓங்கி வளர்ந்தன. அவன் செல்வத்துடனும், செழிப்புடனும் வாழ்ந்தான். அவனுடைய அதிகாரம் நான்கு சாதிகள் மேலும் செலுத்தப்பட்டது. அவனே மக்களை உள்நாட்டுக் குழப்பங்களிலிருந்தும், வெளி

நாட்டுத் தாக்குதல்களிலிருந்தும் காத்து வந்தான். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, வழக்கங்களையும் மரபுகளையும் ஆதரித்து வந்தான். சாதாரண வழக்குகள் பொதுமக்களின் அவைகளில் தீர்க்கப்பட்டபோதிலும், பெருங்குற்றம் சம்பந்தமான வழக்குகளை அரசனே நேரில் தனது தலைநகரிலுள்ள நீதி மன்றத்தில் விசாரித்தான். ஆட்சி செலுத்துவதில் அவனுக்குத் துணையாக 'ஸேனானிகள்' என்ற படைத் தளபதிகளும், 'கிராமணிகள்' என்ற கிராமத் தலைவர்களும் இருந்தனர்.

கடவுள் தன்மை

வேதகாலத்தில் அரசன் கடவுள் தன்மை பெற்றவனாகக் கருதப்படவில்லை. அரச பதவியானது அக்காலத்தில் முற்றிலும் உலகியல் சார்ந்த நிறுவனமாகவே எண்ணப்பட்டது. நாட்டிற்கு அல்லது குலத்திற்கு ஏற்படக்கூடிய இடர்களைத் தவிர்க்கவோ, அல்லது மக்களின் பொதுநலத்தைக் காக்கவோ அரசன் பலிகளைப் பலரறிய நிறைவேற்றவேண்டும் என்ற கருத்து அக்காலத்தில் நிலவவில்லை. வேதகாலத்திற்குப் பிந்திய காலத்தில் தான் மதக் கருத்துக்களும், கோட்பாடுகளும் வளர்ந்ததால் அரசன் இறைவனின் தன்மை பெற்றவனென மக்கள் நினைத்தனர்.

கட்டுப்பாடுகள்

பழங்கால இந்தியாவில் அரசன் சட்டத்தை ஆதரித்துக் காக்கக் கடமைப்பட்டிருந்தான். அரசன் தெய்வத் தன்மையுடையவனாக இருந்தபோதிலும், சட்டமும் இறைவனிடமிருந்து பெறப்பட்டதாக எண்ணப்பட்டதால் அரசன் சட்டத்தை மீற முடியாது. அவன் தர்மத்திற்குப் பணிந்து நடக்க வேண்டும். அரசன் முதற் குடிமகனாகக் (First citizen) கருதப்பட்டதால் அவனது முன்மாதிரியை எல்லோரும் பின்பற்றினர்கள். ஆகவே அவனுடைய நடத்தை பிறர் பின்பற்றக்கூடிய முறையில் சிறந்ததாக இருக்க வேண்டும். மக்களிடையே இடர், இடுக்கண், கொள்ளை நோய் பரவுமாயின் அது அரசன் தனது கடமையிலிருந்து தவறியதன் விளைவென எண்ணினர்கள்.

அரசன் மக்களின் பணியாள் எனக் கருதப்பட்டான். குடிகளைக் காக்கும் பணியை அரசன் செய்து வந்ததால் அதற்கு ஈடாக மக்கள் அவனுக்கு வரி செலுத்தி வந்தனர். மக்களின் நலன்களுக்கு அரசனே பொறுப்பாளன் என்ற கொள்கையும் முற்கால இந்தியாவில் உலவி வந்தது. ஆகவே, அவன் தனது உள்ளத்தில் பொங்கியெழும் உணர்ச்சிகளை அடக்கி, தன்னைக் கட்டுப்படுத்தி, நிறைந்த கல்வியும் பெற்றிருக்க வேண்டும்.

பண்டைக்கால இந்திய அரசனின் அதிகாரத்தைக் குறைக்கத் தற்காலத்தில் இருப்பதுபோல அரசியலமைப்புத் தடைகள் (Constitutional checks) இருக்கவில்லை. ஆனால் பயன்தரத்தக்க வேறு தடைகள் இருந்தன. சமய, ஆன்மிகத் தடைகள் பழங்கால இந்தியாவில் அதிக அச்சத்தைத் தந்தன. அவைகள் கொடுங்கோன்மைப் போக்கைத் தடுத்தன. பெரும்பான்மையான சட்டங்களின் ஊற்றுருகத் திகழ்ந்த வழக்கம் அரசனின் அதிகாரத்தைக் குறுக்கும் மற்றொரு தடையாக இருந்தது. மேலும் வெளிப்படையான ஒழுங்கையும், சட்டத்தையும் எதிரொளித்த உண்மையும், நேர்மையும் தர்மமாக எண்ணப்பட்டதால், அதன் மேலான அதிகாரத்தை அரசன் மீறத் துணியவில்லை. தர்மத்தைப் பற்றிய இக்கருத்து மக்களின் உள்ளங்களில் ஆழ வேரூன்றியிருந்ததால் அரசன் தர்மத்தை அடிக்கடி மீறினால் மக்கள் அவனுக்கெதிராகக் கொதித்தெழுந்திருப்பார்கள். இத்தடைகளைத் தவிர மன்னனின் அதிகாரத்தைக் குறைத்த வேறு கட்டுப்பாடுகளும் இருந்தன. கால இடச் சூழலுக்கேற்றவண்ணம் நடக்க வேண்டுமென்ற எண்ணமும், அதில் தோன்றிய தன்னலமும் அரசை மக்களின் நலத்திற்கேற்றவாறு ஆளுமாறு கட்டுப்படுத்தின. இத்தகைய கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும் சூது, மது, மாது முதலிய தீயொழுக்கங்களிலே மூழ்கித் தமது பதவிக்கே இழுக்கைத் தேடிக்கொண்ட அரசர்களையும் பழங்கால இந்திய வரலாற்றில் காணலாம். இத்தடைகளிருந்த போதிலும் அரசன் அவைகளையும் மீறிக் கொடுங்கோலனாக மாறப் பல வாய்ப்புகள் இருந்தன. ஆனால் இம்மாற்றம் எப்போதும் குடிநலன் பேணுதல் என்ற பொய்த்திரைக்குப் பின்னாலே நிகழ்ந்தது.

---

3. தர்மம்

தர்மம் என்பதன் பொருள்பற்றி ஏற்கெனவே கூறிவிட்டோம். அது பழங்கால இந்திய ஆட்சி முறையை உருவாக்கிய அடிப்படைக் கருத்துக்களில் ஒன்றாகும், ஆனால் அதன் பொருள் தெளிவாக இல்லை. அதன் உண்மையான பொருளைப்பற்றிப் பலவித விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

'தர்மம்' என்ற சொல்லின் நேரான பொருள் 'சட்டம்' என்பது. ஆனால், இந்திய அரசியல் கோட்பாட்டில் அதற்குப் பல சொற்பண்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆல்டெக்கர் (Altekar) கூறுவது போல, "அது மதம், மதச் சடங்கு சம்பந்தமான சட்டத்தையும், நல்லொழுக்கம், மதியூகம் ஆகியவற்றைப்பற்றிய

விதிகளையும் கூறுகிறது.'' எடுத்துக்காட்டாக, ரிக்வேதத்தில் தர்மத்தைப்பற்றிக் கூறும்போது, சட்டம் அல்லது விதிகள் என்ற பொருளிலே சொல்லப்படுகிறது. உபநிஷத்துக்களிலும் தர்மம் என்ற சொல் மேலான சட்டத்தையே (Supreme Law) குறிக்கிறது. அஃதாவது ''தர்மம் என்பது ஆற்றல்களின் ஆற்றல்; அதிகாரத்தின் அதிகாரம்; அதைவிட உயர்ந்தது வேறொன்றும் இல்லை. இதுவே உண்மையில் தர்மம்'' என்று பிரஹத் ஆரண்யக உபநிஷத் கூறுகிறது. மரபுகளிலும் வழக்கங்களிலும் காணப்படும் தர்மத்தின் சிலவிதிகள் 'சமயாச்சாரிக தர்மம்' அஃதாவது வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்ட விதிகள் என அழைக்கப்படுகின்றன. குடும்பம் அல்லது சமூக வாழ்க்கை சம்பந்தமான விதிகள் சீரியல், குற்றவியல் உரிமைகளைத் தந்ததோடு, சட்ட மன்றங்களிலும் நிறைவேற்றப்பட்டன. 'தர்ம சாஸ்திரம்' என்ற இந்தச் சட்ட இயல் (Jurisprudence) விதிகள் தவிர, வேறு விதிகளும் இருந்தன. அவைகள் சாதி விதிகள், வட்டார விதிகள், வாணிகக் குழு விதிகள், குடும்ப மரபுகள் ஆகியவை. இவை சீரியல், குற்றவியல் உரிமைகளைத் தோற்றுவித்தமையால், நீதிமன்றங்களில் நிறைவேற்றப்பட்டன.

பண்டைய இந்தியாவில் தர்மம் என்பது இறைவனால் அளிக்கப்பட்ட சட்டம் எனக் கருதப்பட்டது. ஆனால், உண்மையில் அது வழக்கத்தின் அடிப்படையிலே எழுந்ததெனலாம். சட்டம் இயற்றுபவர்களோ அல்லது சட்டமன்றமோ அதை ஆக்கவில்லை. பொதுவாக அது மக்களின் இசைவினால் அல்லது நரகத்தைப் பற்றிய அச்சத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதே தவிர, அரசின் அதிகாரத்தினால் நிறைவேற்றப்படவில்லை. தர்மம் மாறுமல் நிலையாக இருக்கவில்லை. ஆனால், அதன் மாற்றம் சமூக வழக்கங்களிலும் பழக்கங்களிலும் ஏற்பட்டமெதுவான நீண்டகால மாற்றங்களால் ஏற்பட்டது; அரசனது விருப்பத்தின்படியோ அல்லது சட்ட ஆக்க முறைப்படியோ ஏற்படவில்லை.

'தர்மம்' என்ற சொல் கடமையையும் குறிக்கிறது. கௌடில்யர் இந்தப் பொருளிலே தர்மம் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். அவர் கடமையை மூன்று வகைகளில் விளக்குகிறார். அவையாவன: சமூகக் கடமை, உண்மையின் அடிப்படையில் எழுந்த ஒழுக்கம் சார்ந்த கடமை, சீரியல் சட்டத்தை ஆதாரமாகக் கொண்ட குடிகளின் கடமை. இக்கருத்தின்படி தர்மத்தை அறிக்கையிட்டுப் பரப்பும் அரசனுட்பட எல்லோரும் தர்மத்துக்குக் கட்டுப்பட்டவர்களாவார்கள். வழக்குகள் அல்லது பூசல்களைத் தீர்த்து வைப்பதில் சான்றுகள், வரலாறு, மதிப்புக்குரிய பெருமக்களின் நடத்தை, அரசனின் கட்டளைகள் ஆகியவை தோல்வியுற்

W
N62

ரூல், தர்மம்தான் அவற்றைத் தீர்க்கவல்ல தக்க முறையென கௌடில்யர் குறிப்பிடுகின்றார்.

தர்மம்தான் இறைமையின் முடிவான இருப்பிடமாக இருந்ததா என்பது பற்றிக் கருத்து வேற்றுமைகள் உள்ளன. ஆர். கே. முக்கர்ஜி கூறுகின்றார்: "இந்துக் கோட்பாட்டின்படி தர்மமானது அரசின் உண்மையான இறைமையின் உறைவிடமாக இருந்தது. அரசன் ஆன்மிகத் தலைவன் என்ற முறையிலே தர்மத்தின் சட்டத்தை ஆதரித்து நிறைவேற்றிவைக்கும் 'தண்டம்' என்ற செயல்துறையாளனாக இருந்தான்". பெனி பிரசாத் (Beni Prasad) என்ற ஆசிரியரும் இக்கருத்தை ஏற்கும் முறையில், "இறைமை என்பது சமூகம் முழுவதும் பரவியிருந்தது. அஃது இறைவனின் விருப்பத்தை முடிவான உறைவிடமாகக் கொண்ட சட்டத்தின் (தர்மத்தின்) உருவிலே இருந்தது" எனக் கூறுகிறார். ஆனால் டாக்டர் வர்மா (Dr. Varma) இக்கருத்தை ஏற்க மறுக்கிறார். பழங்கால இலக்கியங்கள் அரசின் கூறுகளை முறைப்படுத்திக் கூறும்போது, தர்மத்தின் இறைமையைப்பற்றி எங்கும் குறிப்பிடவேயில்லை என எடுத்துக் காட்டுகிறார். தர்மம் என்பது நன்னெறி வகையைச் சேர்ந்ததென்றும், அரசியல் வாழ்விலே அஃது அதிக செல்வாக்குப் பெற்றிருந்ததென்றும் அவர் கருதுகிறார். அதன் கோட்பாடுகளை மீறுவதைத் தடுக்கத் தெளிவான தடைகள் எதுவும் இல்லை என எண்ணுகிறார். டாக்டர் வர்மா கூறுகின்றார்: "அஃது எப்போதும் செயலின் பொது மேல்வரிச்சட்டமாக இருந்தது. ஆனால், அஃது ஒருபோதும் மேலான அரசியல் அதிகாரமாகக் கருதப்படவே இல்லை." பழங்கால ஆசிரியர்கள் அரசின் ஏழு இயல்புகளையும் கூறும்போது, அவற்றுள் தர்மத்தையும் சேர்க்காததிலிருந்து டாக்டர் வர்மாவின் கூற்றிலுள்ள உண்மை புலனாகிறது.

4. மௌரிய ஆட்சி முறை

கி. மு. 323 இல் மகா அலெக்ஸாண்டர் (Alexander the Great) இறந்த பிறகு பஞ்சாபில் பெருங்குழப்பம் ஏற்பட்டது. அப்போது சந்திரகுப்த மௌரியர் கிரேக்கப் படைகளை அங்கிருந்து வெளியேற்றி, கி. மு. 317 இல் அப்பகுதியைத் தனது ஆட்சிக்குக் கீழ்க் கொண்டுவந்தார். பிறகு சாணக்கியரின் துணை கொண்டு பாடலிபுரத்தில் புரட்சியை உண்டுபண்ணி, நந்தர்களைக் கொன்று, மகத நாட்டின் அரசனானார். தனதாட்சியை உறுதியாக நிலைநாட்டிய பிறகு அங்கம், காசி, கோசலம் முதலியவற்றை

வென்று, வட இந்தியா முழுவதையும் தனது ஆளுகையின் கீழ்க் கொண்டுவந்தார். டாக்டர் ஸின்ஹா கூறுவது போல, சந்திரகுப்த மௌரியர் "இந்தியாவின் பேரரசர் என்று வரலாற்றில் குறிப்பிடத்தக்க முதல் ஆள்." அவர் ஏற்படுத்திய அரச மரபு மௌரிய மரபு என அழைக்கப்பட்டது. அதன் ஆட்சி ஒரு நூற்றாண்டுக்கு மேல் நீடித்தது.

சந்திரகுப்த மௌரியர் சிறந்த வெற்றி வீரனாகத் திகழ்ந்ததுடன், அரியதொரு ஆட்சி முறையையும் அமைத்தார். அக்பரது காலம் வரை அதற்கு இணையான ஆட்சி முறை ஏற்பட்டதில்லை. அதைப்பற்றிய விரிவான குறிப்புகள் மெகஸ்தனிஸ் என்ற கிரேக்கத் தூதர் எழுதிய "இண்டிகா" என்ற நூலிலும், கௌடில்யர் எழுதிய "அர்த்தசாஸ்திரம்" என்ற நூலிலும் மலிந்து காணப்படுகின்றன. ஸெலூக்கஸ் நிகடார் அனுப்பிய தூதராகிய மெகஸ்தனிஸ் மௌரியப் பேரரசின் தலைநகராகிய பாடலிபுரத்தில் ஏழு ஆண்டுகள் தங்கியிருந்து, ஆட்சிமுறையைப் பற்றி சிறந்ததொரு விளக்கமான நூல் எழுதினர். ஆனால், அதன் துண்டுப் பகுதிகள்தாம் நமக்குக் கிடைத்திருக்கின்றன. மௌரிய ஆட்சியைப் பற்றிய மற்றும் ஓர் ஆதார நூல், சந்திரகுப்தரின் அமைச்சராகிய கௌடில்யர் எழுதிய "அர்த்தசாஸ்திரம்". அது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதற் பகுதி அரசன், அவனது அவை, அரசாங்கத் துறைகள் முதலியவை பற்றியும், இரண்டாவது பகுதி சீரியல், குற்றவியல் சட்டங்களைப் பற்றியும், மூன்றாவது பகுதி நாடுகளுக்கிடையே நிலவவேண்டிய சட்டங்கள், அரசியல் தந்திரம் (Diplomacy), போர் முதலியவை பற்றியும் விளக்குகின்றன. மௌரிய ஆட்சியைப் பற்றிக் கூறும் இன்னொரு நூல் விசாகதத்தர் எழுதிய "முத்ரா ராக்ஷசம்" என்ற நாடக நூல். இது மௌரியப் புரட்சியைச் சுருங்கக் கூறுகிறது.

அரசன்

மௌரிய ஆட்சியில் நடு அரசாங்கம் மிகவும் பலம்பொருந்தியதாக இருந்தது. அரசன், அரசியல் அமைப்பின் மையக் கல்லாக விளங்கினான். அவன் படைத்துறை, நீதித்துறை, சட்ட ஆக்கத் துறை, செயல்துறை எல்லாவற்றின் அதிகாரங்களுக்கும் உறைவிடமாகத் திகழ்ந்தான். மெகஸ்தனிஸ் அவனின் அதிகாரங்களைக் குறிப்பிடும்போது அவன் போரிலும் ஆட்சியிலும் பங்கு பெற்றான் என்றும், அரசாங்க அதிகாரிகளை நியமித்து, அவர்களுக்கான ஒழுக்க விதிகளை ஏற்படுத்தினான் என்றும் கூறுகிறார். சட்டம் அவனைக் கட்டுப்படுத்தாவிட்டாலும், அவன் வல்லாட்சியாளனாக இல்லை. சில அரசியல், ஒழுக்க முறைகள் அவனது அதிகாரத்திற்கு வரம்பாக நின்றன. அவற்றுள்

முக்கியமானவை ஏழு. முதலாவதாக, அவன் தர்ம சாத்திரங்களின்படி நடக்கக் கடமைப்பட்டவன். இதில் "புரோகிதர்" என்ற தலைமைக் குரு அவனுக்கு வழி காட்டுவார். அவர் சொற்படி அரசன் நடக்கவேண்டுமென்பதைத் தெளிவாக அர்த்தசாத்திரம் கூறுகிறது. அதன்படி "மாணவன் ஆசிரியரையும், மகன் தந்தையையும், ஊழியன் தலைவனையும் எவ்வாறு பின்பற்றுவார்களோ, அவ்வாறே அரசன் புரோகிதரைப் பின்பற்றவேண்டும்." இரண்டாவது, தான் செங்கோல் செலுத்தாது கொடுங்கோல் ஆட்சி செய்தால் மக்கள் திரண்டு புரட்சி செய்யக் கூடும் என்ற அச்சம் அரசனின் அதிகாரத்திற்கு எல்லைக் கல்லாக இருந்தது. மூன்றாவது, கிராமங்கள் தன்னாட்சி உரிமை பெற்றிருந்ததால், அரசன் அவற்றில் தலையிட முடியவில்லை. நான்காவது, மன்னன் தன் குடிகளின் நலனைக் காப்பது அவனது தலையான கடமை என்ற கருத்து நிலவி வந்தது. அரசன் அரியணை ஏறும்போது மக்களின் நலனுக்காகவே ஆட்சி செய்வதாக வாக்களிப்பான். அர்த்தசாத்திரம் கூறுவது போல "அவர்களது இன்பத்தில் அவனது இன்பமும், அவர்களது நலனில் அவனது நலனும் அடங்கியிருந்தது. அவனுக்கு விருப்பமானதை நல்லதெனக் கருதாது, அவர்கள் விரும்பியதையே நல்லதென எண்ணவேண்டும்." ஐந்தாவது, சமுதாய ஒப்பந்தக் கொள்கையின்படி (Social Contract Theory) மக்கள் அரசனுக்குக் கொடுத்த வரியை அவனது பணிகளுக்குப் பதிலாகக் கொடுக்கும் கூலியாகவே கருதினர்கள். ஆகவே, அவன் குடிகளை நசுக்கினால், அவர்கள் வரி கொடுக்க மறுக்கலாம் என்ற கொள்கை மன்னனின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தியது. ஆறாவது, அரசகாரியங்களில் அவனுக்கு அறிவுரை கூற "மந்திரி பரிஷத்" என்ற அமைச்சரவை இருந்தது. இது அரசனது அதிகாரம் எல்லை கடந்து செல்லாதவாறு தடுத்து வந்தது. கௌடில்யர் கருத்துப்படி "அரசு என்ற தேர் ஒரு சக்கரத்தில் ஓடாது". ஆகவே, அரசனுக்குத் துணையாக ஓர் அமைச்சரவை அமைக்கப் பட்டிருந்தது. இறுதியாக, "பூர்வா", "ஜனபடா" என்ற மக்களின் பேரவைகள் இரண்டு அரசனின் அதிகாரத்தைக் குறைத்தன. இவ்வேழு காரணங்களினால் அரசன் வரையிறந்த அதிகாரம் செலுத்த முடியவில்லை.

மௌரிய மன்னனின் அலுவல்கள் மிகப் பலவானவை. இப் பலவைத் தாங்க முடியாமலே பல மன்னர்கள் ஆட்சியைத் துறந்தனர் என டாக்டர் ஃப்ளீட் (Dr. Fleet) கருதுகிறார். நிதி, பொதுப் பணி, வாணிகம், பயிர்த்தொழில், சுங்கம், நகர ஆட்சி முதலிய பொறுப்புகள் தவிர ஏழைகள், அனாதைகள், கைம்பெண்கள், உறுப்பிழந்த அரசாங்க அலுவலர்கள் போன்றவர்களின் துயர்

துடைக்கும் சமதர்ம வேலைகளிலும் அரசாங்கம் ஈடுபட்டிருந்தது. இவ்வேலைகளையெல்லாம் மேற்பார்வையிடுவதற்காக ஒவ்வொரு நாளும் அரசன் அதிகாலையில் மூன்று மணிக்கு எழுந்திருந்து இரவு ஒன்பது மணிக்குப் படுக்கச் செல்வது வழக்கம். உணவருந்தினலும், இளைப்பாறினலும், உடற்பயிற்சி அல்லது வழிபாடு செய்து கொண்டிருந்தாலும், பூங்காவில் அல்லது தோட்டத்தில் இன்பமாகப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தாலும் அவசரமான விஷயங்களை உடனே அவனுக்குத் தெரிவிக்கவேண்டும். இதிலிருந்து அவன் நாட்டின் நலனில் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தானென்று தெரிகிறது.

அரசனது உயிரைக் கவரப் பகைவர்கள் முயற்சி செய்யக் கூடுமாதலால், அவனுக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. ஒவ்வோர் இரவிலும் அரசன் படுக்கை அறையை மாற்றிக் கொள்வான். அந்த அறைகளுக்கெல்லாம் மறைவான நிலவறைப் பாதைகள் உண்டு. மன்னன் ஊர்வலம் செல்லும்போது படையாளர் பாதுகாப்போடுதான் செல்வான். ஆகவே, அரசனது உயிரைக் காக்கும் பணியிலே நம்பத்தக்க அலுவலர்கள் அமர்த்தப் பட்டிருந்தனர்.

அமைச்சரவை

அரசனது அமைச்சர்களில் மிக முக்கியமானவர்கள் நால்வர். "திவான்" என்ற முதலமைச்சர், "புரோகிதர்" என்ற மத அறிவுரையாளர், "சேனபதி" என்ற படைத்தளபதி", "யுவராஜா" என்ற வாரிசுரிமையாளர். இந்த முக்கிய அமைச்சர்களின் பதவிகள் அநேகமாக மரபுரிமையாக வந்தன. பொதுவாகப் புரோகிதரைத் தவிர மற்றவர்கள் க்ஷத்திரியர்களாகவே இருந்தனர். அரசனுடு நெருங்கியிருந்து அவனுக்கு அறிவுரை கூறி வந்த இந்நால்வர்கள் தவிர. "மந்திரி பரிஷத்" என்ற வேருேர் அமைச்சரவையும் இருந்தது. ஒவ்வோர் அமைச்சரும் ஒவ்வொரு துறையை மேற்பார்வையிட்டு வந்தனர். அனைவரும் சேர்ந்து அயல்நாட்டுக் கொள்கை, நிதி முதலிய முக்கியமான பொருள்களைக் குறித்து வாதிப்பார்கள். சிலவேளை அரசனது தலைமையிலும், சிலவேளை அவனில்லாமலும் அவை கூடும். கூட்டத்திற்கு வரவியலாதவர்கள் தங்கள் கருத்துக்களை எழுத்து மூலம் அறிவிக்கலாம். இந்த அவை மாநிலத் தலைவர்களையும், ஆட்சித்துறைத் தலைவர்களையும், அரசாங்கத்தின் உயர்ந்த அலுவலர்களையும் நியமிக்கும். சந்திரகுப்த மௌரியரின் அமைச்சர்கள் அறிவாற்றல் மிக்கவர்களாக இருந்ததாகவும், அதிக அதிகாரம் செலுத்தி வந்ததாகவும் மெகஸ்தனிஸ் கூறுகிறர்.

இவ்வமைச்சர்கள் தவிர, நிதி, பொதுப்பணி, அரசரின் கடிதப் போக்குவரத்துக்கள் முதலியவற்றைக் கவனிக்கப் பெரிய அலுவலர்கள் இருந்தனர். மேலும் வாணிகம், எடைகள், அளவுகள், நெய்தல், பயிர்த்தொழில், சுங்கம், விலைமகளிரின் தொழில், நகர ஆட்சி முதலியவற்றைப் பார்வையிடக் கண்காணிகள் பலர் இருந்தனர். ஒழுக்கத்தை வளர்க்கத் தர்ம மகாமாத்திரர்கள் என்ற அலுவலர்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள். அவர்கள் அசோக மன்னர் காலத்தில் மிகச் சிறப்பான இடம் பெற்றிருந்தனர். பொது மக்களுக்கு ஒழுக்கத்தின் பயனையும் சிறப்பையும் விளக்கிக் கூறுதல் அவர்களுடைய வேலையாகும்.

பேரவைகள்

மௌரியப் பேரரசில் இரு பேரவைகள் இருந்தன. ஒன்று "பூர்வா" என்ற அவை. இது தலைநகரின் பிரதிநிதிகளைக் கொண்டது. மற்றொன்று "ஜனபடா" என்பது. இதில் நாட்டுப் புறத்தின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருந்தனர். பொதுவான காரியங்களைச் சிலவேளை இரண்டு அவைகளும் ஒன்று சேர்ந்து கூட்டு அமர்வில் (Joint session) வாதிப்பதுண்டு. அரசனது அமைச்சரவையின் செயல்களைக் குறை கூற இவற்றிற்கு உரிமை இருந்தது. இவை அரசாங்க அலுவலர்களைத் தண்டிக்கவும் முடியும். கிர்நார் கல்வெட்டுகளின்படி முக்கியமான விஷயங்களிலெல்லாம் அரசன் இவற்றைக் கலந்தாய்வதுண்டு.

ஒற்றர்கள்

மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்ட ஒற்றர்கள் நிறுவனம் திறமையுடன் உழைத்து வந்தது. மாறுவேடத்தில் ஒற்றர்கள் சென்று, நாட்டின் நாலா பக்கமும் பரவி, மக்களின் நடவடிக்கைகளை நுணுகிப் பார்த்து அரசனுக்குச் செய்தியனுப்புவார்கள். இவர்கள் மூலமாக அரசன் நாட்டில் நடக்கும் எல்லாவற்றையும் விரைவில் அறிந்துகொள்ளுவான்.

வருவாய்

அரசாங்கத்தின் வருமானத்தில் பெரும் பகுதி பயிர் நிலத்திலிருந்து வந்தது. பொதுவாக விளைச்சலில் ஆறில் ஒரு பகுதியை அரசாங்கம் எடுத்துக் கொண்டது. இது தவிர மேய்ச்சல் நிலம், காடுகள், சுரங்கங்கள் முதலியவற்றிலிருந்தும் வருமானம் கிடைத்தது. மேலும், எல்லைப்புறங்களில் சுங்கம், படகுத் துறைகளில் போக்குவரவு வரி, சாலைவரி, நகரத்துள் கொண்டுவரப்படும் பொருட்களின் மேல் வரி, நாணயத்திலிருந்து வரும் இலாபம், நீதி மன்றங்கள் விதிக்கும் அபராதம் போன்ற வருமானங்களும் உண்டு.

அரசனுக்கும் அவனது அவைக்கும் ஏற்படும் செலவு, அரசாங்க அலுவலர், படை வீரர், பொதுப்பணி, ஏழை துயருதவி (Poor relief), மதச்சடங்குகள் போன்றவற்றிற்கு ஏற்படும் செலவுகள் முக்கிய அரசாங்கச் செல்வுகளாகும். வரி திரட்டும் வேலை வரி முதல்வராலும் (Collector General), அரசாங்கச் செலவுகள் பொருள் முதல்வராலும் (Treasurer General) செய்யப்பட்டு வந்தன. வரவு செலவைக் கணக்கிட்டு மேற்பார்வையிடப் பல அலுவலர்களுள்ள சிறந்த நிறுவனமிருந்தது. பொதுவாகப் பேரரசில் மக்கள் செழிப்புடன் வாழ்ந்து வந்ததால், அவர்களுக்கு வரி செலுத்தும் ஆற்றல் அதிகமாக இருந்திருக்கவேண்டும் எனத் தெரிகிறது.

குடிக்கணக்கு (Census)

மௌரியர் காலத்தில் எடுக்கப்பட்ட குடிக்கணக்கு அரசியல், பொருளாதார நோக்கங்களோடு எடுக்கப்பட்டது. மக்கள் இடம் பெயர்ந்து செல்வதைக் கட்டுப்படுத்தவும், நாட்டின் நிலையை உறுதிப்படுத்தவும், படைத்திறத்தை அறியவும், வரிவிதிப்பதற்காக நாட்டின் பொருள் வளத்தைக் கணிக்கவும் குடிக்கணக்கு எடுக்கப்பட்டது. கிராம அதிகாரிகள் நாட்டுமக்களை அவரவர் சாதி, தொழில்களுக்கேற்பவும், குடிகள், அடிமைகள் எனவும், இளைஞர், முதியோர் எனவும், ஆண்கள் பெண்கள் எனவும் பிரித்துக் கணக்கெடுத்தார்கள். அவர்களுடைய குணங்கள், வருமானம், செலவு முதலிய விவரங்களும் கணிக்கப்பட்டன. ஒவ்வொரு வீட்டிலுள்ள விலங்குகளும் எண்ணப்பட்டன. கிராமங்களிலிருந்ததுபோல நகரங்களிலும் இதே முறைப்படி குடிக்கணக்கு நகரவை அதிகாரிகளால் எடுக்கப்பட்டது. நகரங்களில் தங்கி இருந்த அயல்நாட்டார் செல்லுமிடங்கள் எல்லாம் குறித்து வைக்கப்பட்டன. இவ்வாறு திரட்டப்பட்ட விவரங்களை எல்லாம் மேலதிகாரிகள் பார்வையிட்டு, அவைகள் ஒற்றர்கள் கொடுத்த விவரங்களோடு ஒத்திருக்கின்றனவா என்று பார்த்து வந்தார்கள். குடிக்கணக்கெடுப்பதற்கு ஒரு நிலையான நிறுவனம் இருந்தது. அதற்கென்றே தனித் துறையொன்று இருந்தது. தற்காலத்தில் இருப்பதுபோலப் பத்து ஆண்டுகளுக்கொரு முறை குடிக்கணக்கு எடுக்கப்படவில்லை. குடிக்கணக்கு அலுவலர்கள் வரிமுதல் வருக்குக் கீழ்ப் பணியாற்றினர்.

படை அமைப்பு

மௌரியப் பேரரசில் நிலையான படை (Standing army) நிறுவப்பட்டிருந்தது. அரசனே போர்க்காலத்தில் படைகளை நடத்திச் செல்வது வழக்கம். அரசனின் மெய்க்காவலராக படைக்கலந் தாங்கிய வீரமாதுகள் (Amazons) பணியாற்றினர்.

படையமைப்பைப் பற்றிய விவரங்கள் மெகஸ்தனிஸ் தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார். யானை, குதிரை, தேர், காலாள் என்ற நால்வகைப் படை தவிர, கப்பற் படையும், போக்குவரவு, படைக்கு வேண்டிய பொருட்களைத் தருவித்து வழங்குதல் முதலிய வேலைகளைக் கவனிக்கும் துறையும் ஆக ஆறு பிரிவுகள் இருந்தன. படைத்துறையை ஆள்வதற்கு ஐந்து பேர்களடங்கிய ஆறு குழுக்கள் இருந்தன. முதற்குழு கப்பற் படையையும், இரண்டாவது குழு போக்குவரவையும், படைக்கு வேண்டிய பொருட்களைத் தருவித்து வழங்கும் வேலையையும், மூன்றாவது குழு காலாட்படையையும், நான்காவது குழு குதிரைப் படையையும், ஐந்தாவது குழு தேர்ப்படையையும், ஆறாவது குழு யானைப் படையையும் மேற் பார்வையிட்டன. காலாட் படையில் 6,000 வீரர்களும், குதிரைப் படையில் 20,000 வீரர்களும், 9,000 யானைகளும், 8,000 தேர்களும் நிலையான படையில் இருந்தன.

சாணக்கியர் கூற்றின்படி, போரில் காயப்பட்டவர்களை மருந்துகள் போட்டுக் கட்டிக் குணப்படுத்த அறுவை மருத்துவர்களும், மருத்துவப் பணி மகளிரும் (Nurses) கொண்ட ஒரு குழு இருந்ததெனத் தெரிகிறது. படை அணிவகுப்பில் முன்னணி, நடு அணி, பின்னணி, சிறகணி என்ற பல பிரிவுகள் இருந்தன. போரில் பல விதமான படைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. நிலையான பொறிகளும், நகரும் பொறிகளும் இருந்தன. கோட்டைகளும், சுரங்கங்களும் பல அமைக்கப்பட்டிருந்தன. படைக்களத்திலே காயப்பட்டவர்களையும், படைக் கருவிகளை இழந்தவர்களையும் கொல்வது இல்லை. பொதுமக்களும், வேளாளரும் ஒருபோதும் படைகளால் தாக்கப்படுவதில்லை. ஆனால், பகைவர்களை அழிப்பதில் பலவிதமான சூழ்ச்சிகளும் பயன்படுத்தப்பட்டன.

நீதித்துறை

நாட்டில் பலவிதமான நீதிமன்றங்களிருந்தன. பொதுவாக வழக்குகள் வட்டாரங்களிலுள்ள நடுவர்களால் தீர்க்கப்பட்டன. மேல் வழக்குகளைத் தீர்க்கப் பலதரமான நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக அரசனது மன்றம் இருந்தது. சாதி, மதம் இவற்றிற்கெதிராகத் தொடரப்படும் வழக்குகளை விசாரிக்க "பரிஷத்" என்ற தனி நீதிக் குழுக்கள் இருந்தன. தண்டனைகள் பலமுறைப்படுத்தப்பட்டிருந்தன. அபராதம், கசையடி, மூடமாக்குதல், சாவு முதலிய தண்டனைகள் குற்றங்களுக்குத் தக்கபடி வழங்கப்பட்டன. ஒருவன் குற்றவாளியா என்று அறிவதற்கு அவனைச் சித்திரவதை செய்வது வழக்கம். அர்த்தசாத்திரத்தில் பதினெட்டு விதமான சித்திரவதைகள் கூறப்பட்டிருக்கின்றன. நாட்டில் குற்றங்களைக் கண்டுபிடிக்கவும்,

பொதுமக்கள் கருத்தை அறியவும், கண்காணிக்கும் அலுவலர், காவல் துறையினர் (Police), துப்பறிபவர், படைத்துறை ஒற்றர் என்ற நால்வகை இரகசியச் செயல் தலைவர்கள் இருந்தனர்.

மாநில அரசாங்கம்

சந்திரகுப்தரின் பேரரசு நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. தலைநகர் இருந்த மாநிலத்தைப் பேரரசனே நேரில் ஆண்டு வந்தான். மற்ற மாநிலங்கள் அரச குடும் பத்தைச் சேர்ந்த அரசப் பிரதிநிதிகளின் கீழ் இருந்தன. மாநில அரசாங்கத்திற்குத் துணை செய்ய பல மாவட்ட அதிகாரிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தனர். "ராஜுக்கா" (Rajuka) என்ற வருமான வரி அதிகாரியும், "யுக்தா" என்ற செயலாளர் களும், "புருஷா" என்ற மாவட்ட வரி திரட்டும் அதிகாரிகளும் மாநில அரசாங்கத்திற்கும் வட்டார அரசாங்கத்திற்குமிடையே தொடர்பை உண்டாக்கினர்.

கிராம ஆட்சி முறை

கிராமங்கள் அளவுக்குத் தக்கபடி வகைப்படுத்தப்பட் டிருந்தன. அவற்றின் ஆட்சி "கிராமணி" என்றழைக்கப்பட்ட கிராமத் தலைவனிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. அவனே கிரா மத்திற்கும் மாவட்ட அதிகாரிக்கும் இடையே இணைப்பாக இருந்தான். ஆட்சி முறைக் காரியத்தில் அவனுக்கு அறிவுரை கூற முதியோர்களைக் கொண்ட பஞ்சாயத்து அவை இருந்தது. கிராமணிக்கு மேலே ஐந்து அல்லது ஆறு கிராமங்களுக்கு "கோப்பா" (Gopa) என்ற அதிகாரியும், அவருக்கு மேலே ஏறக் குறைய நாட்டின் கால் பகுதிக்கு "ஸ்தானிக்கா" (Sthanika) என்ற அதிகாரியும் இருந்தனர்.

நகர ஆட்சி

நகரத் தலைவருக்கு "நகரக்கா" என்று பெயர். அவருக்குக் கீழே நாட்டுப்புறங்களில் இருந்ததைப் போல "கோபா", "ஸ்தானிக்கா" என்ற அதிகாரிகள் இருந்தனர். எல்லாச் சத்திரங்களும், விடுதிகளும், நகரத் தலைவரின் மேற்பார்வையில் இருந்தன. அங்கே தங்கும் அயல் நாட்டவரைப் பற்றிய தகவல் அவருக்கு அடிக்கடி வந்துகொண்டே யிருக்கும். எடைகள், அளவுகள், கிடங்குகள், விற்பனை முதலியவற்றைக் கவனிக்கப் பல கண்காணிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தனர்.

கௌடில்யர் குறிப்பின்படி நகரம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் ஓர் அதிகாரியின் கீழ் இருந்தது. நகர முழுவதும் அதன் தலைவரின் ஆட்சிக்குட்பட்

டிருந்தது. தலைநகராகிய பாடலிபுரத்தின் ஆட்சிமுறை பற்றி மெகஸ்தனிஸ் அழகாகத் தீட்டியிருக்கிறார். முப்பது உறுப்பினர் கொண்ட மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு நிறுவனம் தலைநகர ஆட்சியை நடத்தி வந்தது. இது ஐந்து உறுப்பினர் கொண்ட ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதற் குழு தொழில்களையும், இரண்டாவது குழு அயல் நாட்டவரையும், மூன்றாவது குழு குடிக்கணக்கையும், நான்காவது குழு வணிகத்தையும், ஐந்தாவது குழு கைத்தொழிற் பொருட்களையும் அவற்றின் விற்பனைகளையும், ஆறாவது குழு விற்பனை வரி திரட்டுவதையும் பார்வையிட்டு வந்தன. நகரத்திலுள்ள அயல் நாட்டவர்கள் நன்கு கவனிக்கப்பட்டனர்.

இவ்வாறாகக் கி. மு. நான்காம் நூற்றாண்டிலே மௌரியப் பேரரசு சிறந்த முறையில் ஆளப்பட்டு வந்தது. அதன் ஆட்சியமைப்பு முறை திறமையுள்ளதாக இருந்தது. சிரியல் ஆட்சியும், படைத்துறை ஆட்சியும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருந்தன. மேலும், நிலையான படை இருந்ததால், பரந்து விரிந்த அப்பேரரசைப் பாதுகாக்க முடிந்தது. நாட்டில் அமைதியும் ஒழுங்கும் நிலையாக இருந்ததே அதன் ஆட்சித் திறனை எடுத்துக் காட்டுகிறது. ஆயினும், மௌரிய ஆட்சி முறையில் குறைகள் இல்லாமலில்லை. குற்றவியல் சட்டம் மிகக் கடுமையானதாக இருந்தது. அதனால் தனிமனிதனின் உரிமை குறைக்கப்பட்டது. ஒற்றர்கள் எப்போதும் மக்களைக் கூர்ந்து கவனித்து வந்ததால், மக்களின் வாழ்விலே அச்சம் நிறைந்திருந்தது. மேலும், எவ்வழியிலும் வெற்றிபெறவேண்டும் என்ற சாணக்கியக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதால், ஆட்சியின் ஒழுக்கம் மிக உயர்ந்ததாக இருந்திருக்க முடியாது எனக் கூறலாம். இறுதியாக, மௌரிய மன்னர் அளவுக்கு மிஞ்சிய அரசியல் அலுவல்களில் ஈடுபட்டிருந்ததால் திறமையற்ற மன்னர்கள் அரியணைக்கு வந்தபோது, அவர்களால் ஆட்சியைச் சரிவர நடத்த முடியவில்லை. மௌரியப் பேரரசு சரிவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது.

---

5. குப்த ஆட்சி முறை

குப்த மரபின் முதல் பெரிய அரசர் முதலாவது சந்திரகுப்தர். இவரது காலத்தில்தான் குப்த அரசு பேரரசாக வளர்ந்தது. இவருக்கு முன் ஆண்ட இரு மன்னர்களும் "மகா இராஜா" என்ற பெயராலேயே அழைக்கப்பட்டனர். ஆனால் சந்திரகுப்தர் "மகா இராஜாதிராஜா" என்ற பட்டம் பெற்றார். இவர்

மகன் சமுத்திரகுப்தர் காலத்தில் பேரரசு இன்னும் விரிவடைந்த துடன், கலையும் இலக்கியமும் செழித்தோங்கின. அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்த அவருடைய மகன் இரண்டாம் சந்திர குப்தர், விக்கிரமாதித்தர் என்ற பட்டத்தை ஏற்றார். அவருடைய காலத்தில் அரசவையில் கவிமணிகள் ஒளிர்ந்தனர். அவருடைய காலத்திற்குப் பிறகு படிப்படியாகக் குப்தப் பேரரசு நலிவுறத் தொடங்கியது. பலவிதத்திலும் புகழுடன் மிளிர்ந்த குப்தர்களின் காலத்தை இந்திய வரலாற்றின் பொற்காலம் என அழைக்கிறோம்.

குப்தர்களின் ஆட்சி முறையைப்பற்றி விவரமான செய்திகள் அதிகம் கிடைத்தில. சமுத்திர குப்தரின் அலகபாத் தூண் கல் வெட்டிலிருந்தும், இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் இந்தியா வுக்கு வந்து ஆறு ஆண்டுகள் குப்தப் பேரரசில் தங்கி வாழ்ந்த ஃபாஹியன் (Fahien) என்ற சீன யாத்திரிகர் எழுதிய குறிப்புகளி லிருந்தும் குப்த ஆட்சி முறையைப்பற்றிப் பெரிதும் அறிய முடிகிறது.

அரசர்

அநேகமாகக் குப்த மன்னர்கள் மரபுரிமையாகவே பட்டத் திற்கு வந்தனர். சில வேளைகளில் மக்களால் அல்லது பிரபுக் களால் தேர்ந்தெடுக்கப்படுவதும் உண்டு. நெருக்கடியான காலங்களில் குறிப்பிட்ட ஒருசில பிரபுக்களால் அல்லது பிராமணர்களால் தெரிந்தெடுக்கப்படுவர். முந்திய அரசர் தமக்குப் பின் அரியணை ஏறுபவரின் பெயரைக் குறிப்பிடும் வழக்கமும் இருந்தது. அவ்வேளையில் அரசரின் அவையோரும், அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்களும் அங்குக் கூடியிருக்க வேண்டும். முதலாம் சந்திரகுப்தர் தமக்குப் பிறகு தம் மகன் சமுத்திரகுப்தர் ஆட்சியை ஏற்கவேண்டுமென்று குறிப்பிட்டிருந் தாரென அலகபாத் தூண் கல்வெட்டிலிருந்து தெரிகிறது.

குப்த அரசனை மக்கள் கடவுளாகப் பாவித்தனர் என அலகபாத் கல்வெட்டுக் கூறுகிறது. சமுத்திரகுப்தரை நாலு திக்குகளின் கடவுளர்களோடு இணையாகக் குறிப்பிடுவதுடன், ஆக்கல், அழித்தல் தொழில்களைச் செய்யும் புலன்களுக்கெட்டாத முதற் கடவுளாகவும் கூறுகிறது. அக்கால இலக்கியமும் அரசனை நீதியின் திருப்பிறவியாகவும், விஷ்ணுவின் திரு உருவாகவும் தீட்டுகிறது. அவனைத் திருமகள், நிலமகள் ஆகியோரின் அன்புக்குரியவனாகவும் காட்டுகிறது. ஆனால் அரசன் கடவுளாகக் கருதப்பட்டாலும், வல்லாட்சியாளனாக விளங்காது நல்லாட்சி யாளனாகவே திகழ்ந்தான். தன்னுடைய குடிகளின் நலன் காத்து, அவர்களுக்குப் பணிசெய்வதே கடனாகக் கொண்டான். இவ்வுயர்

கொள்கையைக் குப்த மன்னன் நடைமுறையில் பின்பற்றி வந்தானென ஃபாஹியன் கூற்றிலிருந்து அறியலாம்.

மன்னன் அரசாங்கப் பொறியின் எல்லா உருளைகளையும் இயக்கி வந்தான். அரசின் சட்டங்களையெல்லாம் அவனே நிறை வேற்றி வந்தான். போர்க்காலங்களில் படைகளைக் களத்திற்கு நடத்திச் சென்றான். மக்களுக்கு நீதியும் வழங்கி வந்தான். வெளித் தாக்குதலிலிருந்து குடிகளைக் காப்பதும் அவனது பொறுப்பாகும்.

அமைச்சரவை

அரசன் பெரும் பளுவான பொறுப்புக்களை ஏற்று ஆட்சி செய்யவேண்டி யிருந்ததால் அவனுக்குத் துணையாகப் பணி யாற்ற அமைச்சரவை ஒன்றிருந்தது. சீரியல் துறையிலே "மந்திரிகள்" என்ற நம்பிக்கைக்குரிய அறிவுரையாளரும், போர், அமைதி ஆகியவற்றை மேற்பார்வையிடும் அமைச்சரும், பதிவேடுகளின் (Records) அமைச்சரும் இருந்தனர். படைத் துறையிலே பல முக்கியமான அலுவலர்கள் இருந்தனர். ஆனால் பொதுவாகச் சீரியல், போரியல் என்ற தெளிவான பாகுபாடு குப்த ஆட்சி முறையிலே இருந்ததாகத் தெரியவில்லை. குமார மத்யா (Kumara Matya) என்ற அமைச்சர்களும் இருந்தார்கள். அநேகமாக இவர்கள் மாவட்டங்களின் மேற்பார்வையாளராக இருந்திருக்க வேண்டும். ஆயினும் அவர்களைப்பற்றி உறுதி யாக ஒன்றும் கூறுவதற்கில்லை. இவர்களில் சிலர் மன்னனுக்கும், சிலர் இளவரசர்களுக்கும், மற்றும் சிலர் மாநிலத் தலைவர் களுக்கும் அடியில் அலுவலாற்றினர். அரசனது குடும்பக் குருவாக "புரோகிதர்" அல்லது "இராஜகுரு" என்றழைக்கப் பட்டவர் பணியாற்றி வந்தார். நாட்டில் ஒழுக்கத்தையும் மதக் கோட்பாடுகளையும் காக்கச் சமய அமைச்சர் (Ecclesiastical Minister) ஒருவர் இருந்தார். அவருக்கடியில் மாநிலங்களிலும், மாவட்டங்களிலும் பல அலுவலர்கள் வேலை செய்தனர். இவர்கள் கோயில்களைப் பேணிப் பிராமணர்களுக்கும், புத்த, சமண மடங்களுக்கும் அரசாங்கம் அளித்த பொருள் உதவியை மேற்பார்வையிட்டு வந்தனர். அயல்நாட்டுச் செயல்களில் அரசனுக்கும் படைத்துறைக்கும் துணை செய்ய அயல்நாட்டு அமைச்சர் ஒருவரிருந்தார். சமுத்திரகுப்தர் தமது புகழ்பெற்ற படையெடுப்புக்களுக்குத் திட்டமிட்டுக்கொண்டிருந்த காலத்தில் இவ்வமைச்சர் அதிகமான வேலையில் ஈடுபட்டிருந்தார். இவர் அரசியல் தந்திரத்தில் (Diplomacy) சிறந்தவராக இருக்க வேண்டும். போரினால்தான் பெற முடியும் என்று தோன்று

வதை உடன்படிக்கையினால் பெறக் கூடிய திறமை இவருக்குத் தேவை.

அரசாங்க அலுவலைக் கவனிக்க நடுச் செயலகம் (Central Secretariat) ஒன்றிருந்தது. பொதுக் கண்காணி ஒருவர் அதன் தலைமை அதிகாரியாக இருந்தார். நடு அரசாங்கத்தின் ஆணைகளை அவர் மாநில, மாவட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிப்பார். செயலகத்தில் எல்லா அமைச்சர்களுடைய அலுவலகங்களும், துறைத்தலைவர்களுடைய அலுவலகங்களும் இடம் பெற்றிருந்தன. வழக்கமாக நடைபெறும் வேலைகளை ஒவ்வோர் அமைச்சரும் மேற்பார்வையிட்டு வந்தனர். முக்கியமான பொருள்கள் முழு அவையில் கலந்தாயப்பட்டன.

மொத்தம் எத்தனை அமைச்சர்கள் இருக்கவேண்டுமெனத் திட்டமாகக் குறிக்கப்படவில்லை. மௌரிய ஆட்சியிலிருந்தது போல் ஒரு "மந்திரி பரிஷத்" இருந்ததாக உறுதியாகக் கூற முடியாது.

நீதித்துறை

தலைநகரில் அரசரே நேரில் நீதி வழங்கி வந்தார். சில வேளைகளில் தலைமை நீதிபதி தீர்ப்பளித்தார். மாநிலங்களில் நீதித்துறையின் உயர் அலுவலர்கள் வழக்குகளை விசாரித்தனர். மாவட்டங்களில் நீதிபதிகள் வணிக, அரசாங்க அலுவலர் வகுப்புகளின் பிரதிநிதிகளின் துணை கொண்டு நீதி வழங்கி வந்தனர். கிராமங்களில் அரசரால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரிகள் நீதிபதிகளாகப் பணியாற்றினர். அவர்களுக்குக் கிராம அவை உறுப்பினர்கள் உதவி செய்தனர். சில வழக்குகளில் அவையே நீதிமன்றமாகவும் அலுவலாற்றித் தண்டனைகள் வழங்கியது. பல நீதி மன்றங்களில் தீர்ப்புச் சான்றாளர் குழு (Jury) அமைக்கப்பட்டிருந்ததாக அறிகிறோம். இச் சான்று நடுவர்கள் (Jury men) வழக்குகளை நன்கு ஆய்ந்து பார்த்து, நடுநிலையான தீர்ப்பளிக்கவேண்டும். ஒருவன் குற்றவாளியா எனக் கண்டுபிடிக்கக் கடுந் தேர்வு முறை (Trial by Ordeal) கையாளப்பட்டது.

படைத்துறை

படைகள் யானை, காலாள், குதிரை என்ற மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. தேர்ப்படை நாளடைவில் நலிவுற்றது. இராஜபுதனத்தின் பாலைப் பகுதிகளில் செல்வதற்குத் தனி ஒட்டகப் படை இருந்தது. கடற்கரைப் பகுதிகளில் கடற் படையும் நிறுவப்பட்டிருந்தது. இதன் உதவியால் இந்தியப் பெருங்கடலில் (Indian Ocean) சிதறிக் கிடக்கும் தீவுகள் பல கைப்பற்றப்பட்

டன. குதிரைப் படைக்காக அரேபியாவிலிருந்து குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

படைத்துறை அதிகாரிகளில் "மகா சேனபதிகள்" என்றழைக்கப்பட்ட பெருந் தளபதிகள் முக்கியமானவர்கள். அரசனால் ஏற்படுத்தப்பட்ட இவர்கள் நாட்டை வெளித் தாக்குதல்களிலிருந்தும், உட்குழப்பங்களிலிருந்தும் காப்பதற்காகப் பல மாநிலங்களில் தம் படைகளுடன் பணியாற்றி வந்தனர். இவர்களுக்கடியில் "மகா தண்ட நாயக்கர்கள்" என்ற அதிகாரிகள் இருந்தனர்.

வருவாய்

விளைச்சலில் ஆறில் ஒரு பகுதி அரசனைச் சேர்ந்தது. கடற்றுறை, படகுத்துறை, அரண் அமைக்கப்பட்ட இடங்கள் முதலியவை மீது வரி விதிக்கப்பட்டது. அரசனுக்குச் சொந்தமான நிலங்கள், சுரங்கங்கள் ஆகியவற்றிலிருந்தும் வருவாய் கிடைத்தது. பண்ணையாள் தலைவர்களும் (Vassal chiefs) திறை செலுத்தி வந்தனர். மேலும், குறிப்பிட்ட சில வேளைகளில் தனி வரிகள் விதிக்கப்பட்டன. சான்றாக, நடு அரசாங்க அதிகாரிகள் மேற்பார்வையிட வரும்போது, அவர்களுக்குச் சோறு, தயிர், பால் கொடுப்பதோடு அவர்களின் போக்குவரத்துக்காக வண்டிகளும், காளைகளும் கொடுக்கவேண்டும். இவ்வரிகள் தவிர, நெருக்கடியான காலங்களில் வேறு வரிகளும் விதிக்கப்பட்டன. அவ்வரிகளிலிருந்து கோயில்களுக்குக் கூட விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. அநேகமாக வரிகள் பொருளாகவே கொடுக்கப்பட்டன. ஆனால் பணமாகவும் கொடுக்கப்படலாம்.

மாநில ஆட்சிமுறை

நாடு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை பக்தி (Bhukthi), தேசா (Desa), ராஷ்டிரா (Rashtra), மண்டலம் (Mandala) என அழைக்கப்பட்டன. மாநிலம் உபரிக்கா (Uparika) என்ற அதிகாரியின் மேற்பார்வையில் இருந்தது. இவர்கள் அரசனால் நியமிக்கப்பட்டவர்கள். வெளித் தாக்குதலிலிருந்தும் உட்குழப்பங்களிலிருந்தும் நாட்டைப் பாதுகாத்தலும், நீர்ப்பாசனம், வணிகம் இவற்றைக் கண்காணிப்பதும் இவர்களின் முக்கிய அலுவல்கள். பேரரசின் தலைநகரிலிருந்த எல்லா அரசாங்கத் துறைகளும் மாநிலத் தலைநகரிலும் இருந்தன.

மாவட்ட ஆட்சிமுறை

மாநிலங்கள் "விஷயா" (Vishaya) என்ற மாவட்டப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவற்றின் தலைமை அதிகாரிகள் "விஷயப்பதி" என்றழைக்கப்பட்டனர். ஓழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுவதும், வரிகள் வசூலிப்பதும் அவர்களின் முக்கிய

பொறுப்புகள். காட்டு அதிகாரிகளும் (Forest Officers) அவர்களின்கீழ் வேலை செய்தனர். மாவட்ட அதிகாரிகளுக்கு உதவி செய்ய அனுபவத்திலும், ஒழுக்கத்திலும் முதிர்ந்த சிலர் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

கிராம ஆட்சிமுறை

மாவட்டங்கள் கிராமங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தலைவனிருந்தான். ஆட்சியில் அவனுக்குத் துணை செய்ய ஓர் அவையிருந்தது. பாதுகாப்பு, பொதுப் பணி (Public Works), வரி திரட்டல் முதலிய அலுவல்களை இது செய்து வந்தது.

குப்தப் பேரரசில் மன்னனின் மேலுரிமையை ஏற்றுக் கொண்ட பல பகுதிகளும் (Feudatories) இருந்தன. இவற்றின் தலைவர்களின் திட்டங்களையெல்லாம் அயல்நாட்டு அமைச்சர் (Foreign Minister) மேற்பார்வையிட்டு வந்தார். இவற்றில் பல குப்த அரசரின் மேலதிகாரத்தை உதறித்தள்ளி, விடுதலை பெறத் தக்க வாய்ப்பைத் தேடிக்கொண்டிருந்தன. இவைகளில் பேரரசின் தலைநகருக்கு அண்மையிலுள்ள பகுதிகளுக்குத் தன்னுரிமை ஒருபோதும் வழங்கப்பட்டதில்லை. தொலைவிலுள்ள சில பகுதிகளுக்குச் சிறிது உரிமை கொடுக்கப்பட்டது. பெரிய பகுதிகளுக்கு அதிக உரிமை அளிக்கப்பட்டது. அவைகள் தங்களுக்கடியில் சில பகுதிகளை வைத்து ஆள்வதற்கும் உரிமையிருந்தது. குப்த அரசனின் மேலுரிமையை ஏற்றுக்கொண்ட எல்லாப் பகுதிகளும் பேரரசரின் ஆணைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும். அவருக்குக் கப்பமும் ஒழுங்காகக் கட்டவேண்டும். அவரது அவையில் வெளிப்படையாக அவருக்கு வணக்கமும் பணிவும் காட்டவேண்டும். பேரரசருக்குத் தங்கள் மகளிரை மணம் செய்துவைக்கவேண்டும். தங்களது சொந்த நாணய முறை வைத்துக்கொள்ள அவர்களுக்கு உரிமை கிடையாது.

இவ்வளவு சிறந்த முறையில் அமைக்கப்பட்ட குப்தப் பேரரசு நாளடைவில் நலிவுற்றது. இரண்டாம் சந்திரகுப்தருக்குப் பின் வந்த அரசர்கள் திறமையற்றவர்களாயிருந்தனர். மேலும், மன்னர்கள் பல மனைவியரை மணம் செய்துகொண்டதால், அரியணையைக் கவர அரண்மனையில் எப்போதும் சூழ்ச்சிகள் நிகழ்ந்து கொண்டே இருந்தன. திறமையற்ற மன்னர்களின் காலத்தில் அவர்களது மேலுரிமையை ஏற்கப் பல பகுதிகள் மறுத்ததோடு, பேரரசினின்றும் பிரிந்து போயின. இவ்வாறு ஆற்றல் இழந்த பேரரசைப் பகைவரின் கூட்டங்கள் வந்து தாக்கவும், அது விரைவில் சரிந்து, சிதைந்து போயிற்று.

---

6. தென்னாட்டு அரசுகள்

தென்னிந்தியாவில் தமிழகப் பகுதியில் சேர, சோழ, பாண்டிய என்ற மூன்று பெரு முடியரசுகள் இருந்தன. இவை மிகத் தொன்மையானவை. வரலாற்றுக் காலத்தில் முதல் முதலாக மெகஸ்தனிஸ் எழுதிய "இண்டிகா" என்ற நூலிலும், அசோக மன்னனின் கல்வெட்டுக்களிலும் இவற்றைப் பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம். சேர அரச மரபினைப்பற்றித் தொடர்ச்சியான வரலாற்றுக் குறிப்புகள் நமக்குக் கிடைத்தில. சேர அரசும் மற்றத் தமிழ் அரசுகளைப் போலப் பேரரசை நிறுவ முயன்றது. செங்குட்டுவன் என்ற சேர மன்னன் வட நாட்டின்மீது படையெடுத்ததாக அறிகிறோம். கல்வெட்டுக்களிலிருந்து சேரர்கள் பாண்டியர்களைப் போல அயல் நாடுகளுடன் நெருங்கிய வாணிகத் தொடர்புகள் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் சேரர்கள் ஆற்றல் மிகுந்து விளங்கினர்கள்.

சேரர்களைப் போலவே சோழர்களும் அசோகன் காலத்திலே சீருடன் வாழ்ந்தார்கள். கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் நடுவில் ஆட்சி செய்த கரிகாலச்சோழன் காலத்தில் முற்காலச் சோழர்கள் உயர்ந்த நிலையில் விளங்கினர்கள். அவனுக்குப் பிறகு சோழ ஆட்சி நலிவுற்றுப் பல்லவ ஆட்சி வளர்ச்சியுற்றது. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆதித்திய சோழன் பல்லவ ஆட்சி நிலத்தைக் கைப்பற்றிச் சோழர் வரலாற்றிற்கு ஒரு தனித் திருப்பம் கொடுத்தான். பத்தாம் நூற்றாண்டில் ஆண்ட மகா இராஜராஜ சோழன் காலத்தில் பிற்காலச் சோழர்கள் தென்னிந்தியாவில் தமது மேலாண்மையை நிறுவினர்கள். அவருடைய மகன் இராஜேந்திரன் பெகு, அந்தமான், நிகோபார் தீவுகளைக் கைப்பற்றிக் கங்கையாறு வரை படையெடுத்துச் சென்றான். அவன் வெற்றி வீரனாகத் திகழ்ந்ததுடன், சிறந்த ஆட்சியாளனாகவும் விளங்கினான். அவனுக்குப் பின் வந்தவர்களில் குலோத்துங்கன் சிறப்பு வாய்ந்தவன். அவனுக்குப் பிறகு சோழ அரசு தேயத் தொடங்கியது. இறுதியில், பதின்மூன்றும் நூற்றாண்டில் அது வீழ்ச்சியுற்றுப் பாண்டியரின் மேலாட்சி உயர்ந்தோங்கியது.

பாண்டியர்கள் கி. பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் ரோமானியப் பேரரசுடன் வாணிகம் செய்துவந்தனர். பத்தாம் நூற்றாண்டில் இராஜராஜ சோழன் பாண்டியர்களை வென்று, தனது மேலாட்சியை அவர்கள்மீது நிறுவினான். அதிலிருந்து ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளாகப் பாண்டியர்கள் சோழர்களுக்குப் பணிந்து வாழ்ந்தனர். ஆனால், பதின்மூன்றும் நூற்றாண்டில் அவர்கள் தமது அதிகாரத்தைச் சுந்தரபாண்டி

யனின் முயற்சியால் திரும்பப் பெற்றனர். அதே நூற்றாண்டின் இறுதியில் இரு சகோதரர்கள் பாண்டிய அரியணைக்காகச் செய்த போரினால் கி. பி. 1310இல் மாலிக்காபூர் தமிழகத்தின் மேல் படையெடுத்து வர வழியுண்டானது.

ஏறக்குறைய கி. பி. 700இல் காஞ்சியில் பல்லவ அரசு நிறுவப்பட்டது. ஆனால், ஆறும் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலேதான் அது உயர் சிறப்புப் பெற்றது. கி. பி. 575இல் ஆட்சியேற்ற சிம்மவிஷ்ணு என்ற பல்லவ மன்னன் பாண்டியர்களையும் சோழர்களையும் வென்று புகழ் பெற்றான். இவனுக்குப் பின் வந்த இவன் மகன் முதலாம் மகேந்திரவர்மன் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியினால் தோற்கடிக்கப்பட்டான். அதனால் பல்லவ அரசின் வட பகுதியை இவன் இழக்க நேர்ந்தது. காஞ்சியும் புலிகேசியால் கொள்ளையடிக்கப்பட்டது. அடுத்த மன்னன் நரசிம்மவர்மன் தம் தந்தையின் காலத்தில் ஏற்பட்டிருந்த இழுக்கைத் துடைக்கச் சாளுக்கிய வேந்தரான இரண்டாம் புலிகேசியுடன் கி. பி. 642இல் போரிட்டு அவனைக் கொன்று, அவனது தலைநகரான வாதாபியைப் பதின்மூன்று ஆண்டுகள் தன் கையில் வைத்திருந்தான். பல்லவர்கள் சாளுக்கியர்களோடு மட்டுமல்ல, மைசூர்ப் பகுதியிலிருந்த மேலைய கங்கையர்களோடும், வடக்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த பாண்டியர்களோடும் பொருத வேண்டியிருந்தது. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர்களும் சோழர்களும் ஒன்று சேர்ந்து பல்லவர்களை முறியடித்தார்கள். இவ்வாறுகத் தமது ஆதிக்கத்தைத் தென்னாட்டிலே நிறுவ வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்த பல்லவரின் ஆட்சி முற்றுப் பெற்றது.

பல்லவ ஆட்சி முறை

கி. பி. நான்காம் நூற்றாண்டிலே சீரிய முறையில் அமைக்கப்பட்ட ஆட்சியைப் பல்லவர்கள் நிறுவியிருந்தனரென்பது நன்கு புலனாகிறது. சிவஸ்கந்தவர்மன் காலத்தில் பல அந்தணர்களுக்கு வழங்கப்பட்ட இறையிலி நில (Tax free Land) உரிமை புதுப்பிக்கப்பட்டதென அவன் கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விலக்குரிமைகள் அக்காலத்தில் விதிக்கப்பட்ட வரிகளில் ஒரு சிலவற்றைக் காட்டுகின்றன. சிவஸ்கந்தவர்மனின் கல்வெட்டில் மோர், கட்டாய ஊழியம், எருதுகள், புல், விறகு, காய்கறிகள், பூக்கள் முதலிய பதினெட்டு விதமான வரிகளுக்கு இறையிலி நிலங்களில் விலக்கு அளிக்கப்பட்டிருந்ததெனக் குறிப்பிட்டுள்ளது. உப்பு, சர்க்கரை உற்பத்தி அரசாங்கத்தின் தனி உரிமையாக இருந்த

தெனத் தெரிகிறது. மேலும், மாநிலத் தலைவர்கள், இளவரசர்கள், படைத் தளபதிகள், மாவட்ட அதிகாரிகள், ஆயத்துறை (Custom House) அலுவலர்கள் போன்ற அரசாங்க அதிகாரிகளுக்கு அரசன் அறிவித்த ஆணையொன்றும் கல்வெட்டில் காணப்படுகிறது. முற்காலப் பல்லவர்களின் ஆட்சிமுறை ஏறக்குறைய மௌரிய ஆட்சி முறை போன்றிருந்தது. பல்லவரின் கல்வெட்டுக்களிலிருந்து, அவர்களது அரசில் கிராம அவைகளும் அவற்றின் குழுக்களும் ஏறக்குறையப் பிற்காலச் சோழரது ஆட்சியில் காணப்பட்டதுபோலச் செயலாற்றி வந்தன என அறிகிறோம். பார்ப்பனர்கள் வாழ்ந்த கிராமங்களில் "சபா" என்ற அவை இருந்தது. அதன் குழுக்களின் உறுப்பினர்களுக்குக் குறிப்பிட்டிருக்கும் தகுதிகளைப் பார்த்தால், "சபா" பார்ப்பனரின் அவையாகத்தான் இருக்கவேண்டுமென நம்ப வேண்டியிருக்கிறது. அது கோவில்களின் காரியங்களை நடத்தி, நடு அரசாங்கப் பண உதவியால் அமைக்கப்பட்ட ஏரிகள், கால்வாய்கள், பாதைகள் முதலியவற்றை மேற்பார்த்து வந்தது. இவ்வாருகப் பல்லவர் காலத்தில் முடியரசிலே குடியரசின் தன்மையும் கலந்திருந்தது அவர்களது ஆட்சி முறையின் பெருமையைக் காட்டுகிறது.

---

7. சோழ ஆட்சி முறை

கி. பி. 850 இல் விஜயாலயன் பட்டத்திற்கு வந்தது முதல் பதின்மூன்றும் நூற்றாண்டில் சோழப் பேரரசு அழிந்தது வரையில் சோழநாட்டில் நிலவிய அரசியல், சமூக நிலைபற்றித் தொடர்ச்சியான செய்திகள் கிடைத்தில. கல்வெட்டுக்கள், நாணயங்கள், இலக்கியம், சின்னங்கள் முதலியவற்றிலிருந்து கிடைக்கும் சிதறிய விவரங்களைச் சேர்த்து இணைக்க வேண்டியிருக்கிறது. இலக்கியத்திற் காணும் செய்திகளை எல்லாம் வரலாற்றுக் குறிப்பாகக் கொள்ள முடியாது. சோழ ஆட்சியின் பெரும் பரப்பையும், நீண்ட காலத்தையும் பார்க்கும்போது நமக்குக் கிடைத்திருக்கும் நாணயங்கள் அதிகமில்லை. சோழ ஆட்சி முறையைப் பற்றி அறியப் பெரும்பாலும் கல்வெட்டுக்கள் தரும் செய்திகளையும், இலக்கியத்திற் காணப்படும் விவரங்களில் சிலவற்றையும் ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.

அரசன்

சங்க காலத்திலிருந்தது போலவே இப்போதும் சோழ நாட்டில் முடியாட்சி நிலவியது. ஆனால், பழங்கால அரசனைப்

போலல்லாமல் இராஜராஜ சோழனும் அவனுக்குப் பின் அரசாண்டவர்களும் பைசன்டைன் (Byzantine) பேரரசைப் போலச் சீர்மிகு தலைநகர்களில் பேர்அரண்மனைகளில் அலுவலர்கள் சூழச் சிறப்புடன் பகட்டான வாழ்க்கை நடத்தினர். சிறியதாக இருந்த சோழ அரசு வளர்ந்து பெருகித் தென்னிந்தியாவின் பெரும் பகுதியில் பரவி நின்றது. அரசன் பேரரசனாக மாறி "சக்கரவர்த்தி" என்ற பட்டத்தைப் பெற்றான். கோவில்களிலே அரசன், அரசியரின் சிலைகளும் வைத்து வணங்கப் பட்டன.

சோழ மன்னன் மரபுரிமையாகவே பட்டத்திற்கு வந்தான். சில வேளைகளில் ஆளும் மன்னன் தன் இளைய மகனைப் பட்டத்திற்குத் தெரிந்தெடுப்பதும் உண்டு. அரசனுக்கு எல்லாத் துறைகளிலும் அதிகாரமிருந்தது. ஆட்சித்துறையில் அரசனுக்கு உதவி செய்ய அலுவலர்களின் நிறுவனமொன்று இருந்தது. அதன் முக்கிய அலுவலர்களை அரசன் கலந்தாய்வது வழக்கம். ஆனால் அமைச்சரவை இருந்ததாகத் தெரியவில்லை. அரச அலுவலில் அமர்ந்திருந்த பணித்துறையினருக்குப் பட்டங்களும் தனிச் சிறப்புக்களும் வழங்கப்பட்டன. அவர்களுக்குச் சமூகத்தில் பெருமதிப்பும் இருந்தது. அவர்களுக்குச் சம்பளத்திற்குப் பதிலாக நிலங்கள் அளிக்கப்பட்டிருந்தன. அரசர் அடிக்கடி சுற்றுப் பயணம் செய்து வந்ததால், ஆட்சி செவ்வனே நடந்தது.

வருவாய்

அரசாங்கத்திற்கு முக்கிய வருவாய் நிலத்தின் விளைச்சலிலிருந்து கிடைத்தது. அது தானியமாகவோ, பணமாகவோ அல்லது இரண்டும் கலந்தோ கிராம அவைகளால் வசூலிக்கப் பட்டது. முதலாம் இராஜராஜர் காலத்தில் மொத்த விளைச்சலில் மூன்றில் ஒரு பகுதியை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. நிலங்களை நன்றாக அளந்து, அதன் பிறகே இந்த விகிதம் குறிக்கப்பட்டது. வரி விதிப்பதற்காக நிலங்களை வகைப்படுத்துவதும், நில வரியை மதிப்பிடுவதும் குறிப்பிட்ட காலங்களில் நடைபெற்றன. சுங்கவரி, வாணிக வரி, தொழில் வரி, சுரங்கங்கள், காடுகள், உப்பளங்கள் முதலியவற்றின்மீது விதிக்கப் பட்ட வரிகள் ஆகியவை அரசாங்கத்தின் ஏனைய வருவாய்கள். பஞ்ச காலத்தில் நிலவரி குறைக்கப்பட்டதால், அதை நிரப்ப மற்ற வரிகளை விதிக்க வேண்டியிருந்தது. பொதுவாக வரி முறை கடுமையானதாக இல்லாவிட்டாலும், சில வேளைகளில் வரிப் பளு அதிகரித்ததாக அறிகிறோம். வரி கொடுக்கத் தவறியவர்களின் நிலம் விற்கப்பட்டது. அரசாங்கத்தின் செலவு வகைகளில் அரசவை, படை, கடற்படை, சீரியல் ஆட்சி அலுவலர்.

பாதைகள், நீர்ப்பாசனம், குளங்கள், கால்வாய்கள் முதலியவற்றிற்காகச் செய்யப்பட்டவை முக்கியமானவை.

போர்ப்படை

படைகள் யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை என மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருந்தன. ஏறக்குறைய எழுபது படைப் பகுதிகளின் பெயர்கள் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இராஜராஜனின் கல்வெட்டுக்களில் மட்டும் முப்பது படைப் பகுதிகளின் பெயர்களைக் காணலாம். படையின் சிறப்பியல்பு என்னவென்றால், ஒவ்வொரு படைப் பகுதியும் தனிக் கூட்டு வாழ்க்கை (Corporate Life) நடத்தியதேயாம். அரசரின் படைகள் சீரியல் துறையிலும் பங்கெடுத்தன. பயிற்சி, கட்டுப்பாடு இவற்றிற்காகப் படையினருக்குப் பாளையங்கள் (Cantonments) அமைக்கப்பட்டிருந்தன.

சோழர்களின் போர்முறை மிகக் கொடுமையானதாக இருந்தது. அவர்கள் மேலையச் சாளுக்கியர்கள், பாண்டியர்களின் நாடுகளின் மேல் படையெடுத்த நிகழ்ச்சிகளைப்பற்றிய விவரங்களிலிருந்து இதை நன்கு அறியலாம். படையெடுப்புகளின்போது போர்வீரர்கள் பொதுமக்களைப் பெரிதும் துன்புறுத்தினர்கள். பெண்களை அவமதித்தனர். மூக்கை அறுத்தல் போன்ற கொடுஞ் செயல்களைச் செய்ததாக ஏடுகள் சான்று பகர்கின்றன.

தமிழர்களின் கடற்படை வெற்றிகள் சோழர்கள் காலத்தில் உச்ச நிலையை அடைந்தன. சோழ மண்டலக் கரையும், மேற்குக் கடற்கரையும் சோழர்களின் ஆதிக்கத்தில் இருந்ததுமல்லாமல், வங்காள விரிகுடா முழுவதும் சோழ ஏரியாக மாறியது.

கிராமங்களில் தன்னுட்சி (Village Autonomy)

முதலாம் இராஜராஜரின் காலத்தில் பேரரசு ஏறக்குறைய எட்டு மண்டலங்கள் அல்லது மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மண்டலங்கள் வள நாடுகளாகவும், நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன; அவைகள் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கோட்டத்திலும் தன்னுட்சி உரிமை பெற்ற பல கிராமங்கள் இருந்தன. கி. பி. எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் பல்லவர், பாண்டியர் ஆட்சிகளில் கிராமங்களின் அவை தன்னுட்சிக் கருவாக இருந்தது. அதன் முழு வளர்ச்சியைப் பத்தாம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட சோழக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. நாடு, நகரம் போன்ற பிரிவுகளில் பொருளாதார, மதத் துறைகளில் கூட்டு முயற்சிகள் நடை

பெற்றபோதிலும், கிராம அவைகளில் பலவகையான கூட்டுச் செயல்கள் காணப்பட்டன. கிராமத்தில் "ஊர்", "சபா" என்ற இரண்டு அவைகள் இருந்தன. கிராமத்திலுள்ள வயது வந்தவர்கள் அனைவரும் இந்த அவைகளின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வார்கள். "ஊர்" என்பது பொது அவை. "சபா" என்பது "அக்ராஹரம்" எனுமிடத்தில் வாழும் பார்ப்பனர்களின் அவை. ஒவ்வொன்றும் குறிப்பிட்ட இடங்களில் வாழும் மக்களின் நலன்களைக் காத்து வந்தது. பொது நன்மைக்காகச் சில வேலைகளில் "ஊரும்", 'சபாவும்" ஒருங்கே இணைந்து செயல்படுவதும் உண்டு.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள உத்தரமேரூர் கல்வெட்டுக்கள் முதலாம் பராந்தகரின் ஆட்சியின் பன்னிரண்டாம், பதினான்காம் ஆண்டுகளில் அவ்வூர் சபா நிறைவேற்றிய தீர்மானங்களைக் காட்டுகின்றன. அவற்றின்படி "சபா"வின் குழுக்களாகிய பல "வாரியங்களில்" பணியாற்றக் கிராமத்திலுள்ள மூப்பது தொகுதிகளும் கீழ்க்கண்ட தகுதிகளையுடைய ஆட்களின் பெயர்களைக் குறிப்பிடவேண்டும். அவர்கள் கால் வேலி நிலம் உடையவர்களாக இருக்கவேண்டும்; தமது சொந்த நிலத்தில் கட்டப்பட்ட வீட்டில் வாழவேண்டும்; முப்பத்தைந்து வயதுக்கு மேலும் எழுபது வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும்; வேதமந்திரங்கள் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். இவ்வளவு தகுதியுடையவர்களிலும் கீழ்க்கண்டவர்கள் தள்ளப்படுவார்கள். கடந்த மூன்றாண்டுகளாக ஏதாவது குழுக்களில் உறுப்பினராக இருந்தவர்கள்; குழுவில் இருந்து கணக்கு விவரம் கொடுக்கத் தவறியவர்கள்; தீயொழுக்கமுடையவர்களும் அவர்களுக்கு உறவினர்களும்; பிறருடைய பொருள்களைக் கவர்ந்து கொண்டவர்கள்; இழிகுலத்தவர்களுடன் உறவாடிக் கழுவாய் (Expiation) செய்யாதவர்கள்; விலக்கப்பட்ட உணவுகளை அருந்தி, அந்தப் பழியைப் போக்கியவர்கள்; இவர்கள் எல்லோரும் "வாரியம்" என்ற குழுக்களில் உறுப்பினராக இருக்கமுடியாது. இவ்வாறு பெயர் குறிப்பிடப்பட்ட ஆட்களிலிருந்து ஒவ்வொரு தொகுதிக்கும் ஒருவர் ஓர் ஆண்டுக்குக் குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார். தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பது பேரில், வயதிலும் கல்வியிலும் முதிர்ந்தவர்களும், தோட்ட, ஏரிக் குழுக்களில் பணியாற்றியவர்களுமாகிய பன்னிரண்டு பேர் ஆண்டுக் குழு (Annual Committee) விற்கும், பன்னிரண்டு பேர் தோட்டக் குழுவிற்கும் (Garden Committee), அறுவர் ஏரிக் குழுவிற்கும் நியமிக்கப்படுவார்கள். பொன்குழு, நீதிக்குழு முதலிய பெயர்களும் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

குழு உறுப்பினர்கள் குடவோலை முறை, அஃதாவது சீட்டுக் குலுக்கும் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தொகுதிகளால்

முதலில் குறிக்கப்பட்டவர்களின் பெயர்களைப் பனையோலைச் சீட்டுகளில் எழுதி, அவற்றை ஒரு குடத்தில் போட்டுக் குலுக்குவார்கள். எத்தனை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டுமோ, அத்தனை ஓலைச் சீட்டுகளை ஓர் இளைஞன் குடத்திலிருந்து எடுப்பான். குழுக்களின் எண்ணிக்கையும், அவற்றின் உறுப்பினரின் தொகையும் இடத்திற்கிடம் வேறுபட்டன. உறுப்பினர்களின் அலுவலர்களுக்குச் சம்பளம் கிடையாது.

"சபாவின்" உறுப்பினர்கள் "பெருமக்கள்" எனவும், குழுவின் உறுப்பினர்கள் 'வாரியப் பெருமக்கள்' எனவும் அழைக்கப்பட்டனர். பொதுவாக "சபா" கிராமக் கோவிலில் கூடியது. அங்குப் பொதுக்காரியங்கள் வாதிக்கப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவைகளைச் சில வேளைகளில் அரசாங்க அலுவலர்கள் மேற்பார்வையிடுவதும் உண்டு. அவற்றின் பணசம்பந்தமான நடவடிக்கைகளைக் குறிப்பிட்ட காலத்தில் அரசரின் அலுவலர்கள் சரிபார்ப்பார்கள். "சபா" தனது அரசியலமைப்பின் செயல் முறையை மாற்றுவதற்கோ, அல்லது அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரிகளைப் பாதிக்கக் கூடிய நில உரிமை மாற்றங்களைச் செய்யவோ கூடும்போது, நடு அரசாங்க அதிகாரிகள் அதில் கலந்து கொள்வார்கள். சிலவேளைகளில் மிக முக்கியமான செய்திகள் அரசனுடைய தீர்மானத்திற்கு விடப்படும்.

"ஊர்", "சபா" என்ற இரண்டு அவைகள் தவிர, "நகரம்" என்றதோர் அவையும் இருந்ததாகத் தெரிகிறது. அநேமாக இது வணிகர்களின் அவையாக இருக்கும். முக்கியமான வாணிக நகர்களில் உள்ள ஓர் அவையாக இருக்கலாம். வணிகர்கள் ஏனையவர்களை விட அதிகமாக இருந்த ஊர்களில் நகரம் என்ற இந்த அவை மட்டும்தான் இருந்திருக்கும்.

கிராம அவைகளின் அலுவல்கள்

சோழ ஆட்சி முறையின் சிறப்பியல்பு என்னவென்றால், நடு அரசாங்கம் நாட்டை அந்நியர் படையெடுப்பிலிருந்து காத்து, உள்நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, மக்களின் பொதுநலத்தையும் கலைவளர்ச்சியையும் மட்டும் கவனித்து வந்தது. மற்றெல்லா வேலைகளும் கிராம அவைகளுக்கு விடப்பட்டன. பொதுவாக நடு அரசாங்கம் கிராம அவைகளின் அலுவல்களில் தலையிடுவதில்லை. அவற்றின் அதிகாரங்களைப் பார்த்தால், சோழப் பேரரசில் கிராமங்கள் எவ்வளவு தன்னுட்சியுரிமை பெற்றிருந்தன எனத் தெரியும்.

வரி

"சபா"விற்குக் கிராமத்திலுள்ள பொது நிலங்களின் மேல் சொத்துரிமை இருந்தது. தனிமனிதரின் நிலங்களின் மேல் முழு அதிகாரம் இருந்தது. காடுகளையும், தரிசு நிலங்களையும் (Waste lands) சீர்படுத்தும் பொறுப்பு "சபா" வினுடையது. அது பயிர் நிலங்களின் விளைச்சலைக் கணக்கிட்டு, அவை செலுத்தவேண்டிய நிலவரியைக் குறிப்பிட்டது. வரிகளை வசூலித்ததல்லாமல், வரி கொடாதவர்களின் நிலங்களை ஏலத்தில் விற்கவும் அதற்கு அதி காரமிருந்தது. நிலவரி சம்பந்தமான வழக்குகளைத் தீர்க்கும்உரிமை யும் அது பெற்றிருந்தது. சில வேளைகளில் ஒரு முடிவுக்கு வருவ தற்காக அண்மையிலுள்ள கிராமங்களின் "சபா"க்களின் உத வியை நாடுவதும் உண்டு. நிலத்தை அளவிடல் நடு அரசாங் கத்தின் வேலை. ஆனால் கிராமத்திலுள்ள நிலங்களை வகைப் படுத்துவதில் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமென்றால், அதற் குச் "சபா"வின் இசைவு தேவை. கிராமக் காரியங்களுக்காக வரி விதிப்பதற்கு "சபா"விற்கு உரிமையுண்டு. முக்கிய காரணங்களுக் காக அவ்வரிகளை நீக்கவும் அதிகாரமுண்டு. ஆண்டுதோறும் நிலவரி செலுத்துவதற்குப் பதிலாக நிலச் சொந்தக்காரர் அவைக்கு ஒரு குறிப்பிட்ட பெருந்தொகையைச் செலுத்திவிட்டால், அவை எப்போதும் ஓழுங்காக நடு அரசாங்கத்திற்கு அவர் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்திவிடும். அறநிலையங்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் இவ்வாறே வரி செலுத்தின.

நீதி

சட்டமியற்றுவதைப்போல் நீதி வழங்குதலும் அந்தந்த வட் டாரங்களின் பொறுப்பாக இருந்தது. நீதித்துறையில் கிராம அவைகளுக்கு அதிக அதிகாரமிருந்தது. அவைகள் குழுக்களின் மூலமாக நீதி வழங்கி வந்தன. இக்குழுக்கள் "நியாயத்தார்" என அழைக்கப்பட்டன. இவைகள் வழக்குகளை விசாரித்துத் தீர்ப் பளிக்கும். ஆனால், தண்டனையை அரசனின் அலுவலர்கள் அல் லது வேறு தனி நீதிபதிகள் வழங்குவார்கள். அக்காலத்தில் எவ்வாறு வழக்குகள் விசாரிக்கப்பட்டன என அறியவேண்டு மானால், இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் சேக்கிழார் இயற் றிய "தடுத்தாட்கொண்ட புராணத்தில்" சுந்தரமூர்த்திக்கும் சிவபெருமானுக்கும் திருவெண்ணெய் நல்லூர் "சபா"வில் நடக் கும் வழக்கு விசாரணையைப் பார்த்தால் நன்கு விளங்கும். பொதுவாக விசாரணை முறை எளிதாகவே இருந்தது. வழக்கில் இரு கட்சியினரும் தமது வாதத்தை எடுத்துக் கூறுவார்கள். வழக் கறிஞர்கள் (Advocates) அமர்த்தப்பட்டதாகத் தெரியவில்லை. விசாரணை முடிந்ததும் நீதிபதிகள் தீர்ப்பளிப்பார்கள்.

வழக்குகளில் சீரியல், குற்றவியல் எனப் பாகுபாடு கிடையாது. பொதுவாக எல்லாக் குற்றங்களும் முதலாவது கிராம நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும். தீர்ப்பில் குறைபாடுகள் இருப்பதாகக் கருதினால், "நாடு" என்ற பகுதியின் ஆட்சியை மேற்பார்வையிடும் அரசாங்க அலுவலாளரிடம் வழக்குக் கொண்டுவரப்படும். அதற்கு மேல் வழக்குகள் செல்வது மிக அரிது.

திருட்டு, பிறர் மனைவியைக் கவர்தல், கள்ளக் கையொப்பமிடுதல் முதலியவை பெருங்குற்றங்களாகக் கருதப்பட்டன. ஏனெனில், அக்குற்றம் செய்தவர்கள் கிராம "வாரியங்"களுக்குத் தெரிந்தெடுக்கப்படுவதில்லையென்று உத்தரமேரூர்க் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கொலைக்குற்றம் பலவிதமாகப் பகுக்கப்பட்டிருந்தது. தற்செயலாக நடந்த கொலை, கொலை செய்யவேண்டுமென்ற எண்ணமில்லாமல் தாக்கியதால் விளைந்த கொலை, முழுமனதுடன் செய்த கொலை என வகைப்படுத்தப்பட்டிருந்தன. எல்லாக் கொலைகளுக்கும் மரண தண்டனை விதிக்கப்படவில்லை. பகைமை எண்ணமின்றிச் செய்யப்பட்ட கொலைகளுக்குத் தண்டனையாகக் குற்றவாளி பதினறு பசுக்கள் கொடுக்கவேண்டும். மேலும் கிராமக் கோவிலில் நாள்தோறும் நந்தா விளக்கு ஏற்றி வைக்கவேண்டும். கோவிலில் விளக்கு வைக்கும் தண்டனை அதிகமாக வழங்கப்பட்டது. இரண்டாம் இராஜேந்திரன் காலத்தில் ஒரு "நாடாள்வான்" படைப் பகுதியின் தலைவனொருவனைக் குத்திக் கொன்றுவிட்டான். அவன் கோவிலில் விளக்கேற்றி வைப்பதற்காகத் தொண்ணூற்றாறு ஆடுகளை அளிக்க வேண்டுமென்று அரசர் அவ்வட்டாரக் கிராம அவைக்குக் கட்டளையிட்டார். ஆகவே, கொலைக் குற்றத்திற்குக் கூட மரண தண்டனை வெகு அரிதாகவே வழங்கப்பட்டது. பொதுவாகச் சோழ நீதிமுறை கடுமையானதாக இல்லை. உத்தரமேரூர்க் கல்வெட்டில் கழுதைமேல் ஏறிச் செல்வதைப்பற்றி ஒரு குறிப்பு காணப்படுகிறது. அநேகமாக இது பெருங் குற்றங்களுக்கு வழங்கப்படும் ஒருவகைத் தண்டனையாக இருக்கலாம். அரசன் அல்லது அவனது நெருங்கிய உறவினருக் கெதிராகச் செய்யப்படும் குற்றங்கள் தனிக் குற்றங்களாகக் கருதப்பட்டன. அவற்றிற்கு அரசனே நேரில் தண்டனை அளித்தான். சோழ நீதிமுறையைப்பற்றிப் பதின்மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்த சௌ-ஜூ-குவா (Chau-Ju-Kua) என்ற சீன ஆசிரியர் கூறுகிறார்: "மக்களில் யாராவதொருவன் குற்றம் செய்தால், அரச அவையின் அமைச்சர் ஒருவரால் தண்டிக்கப்படுவான்; குற்றம் சிறியதானால், குற்றவாளி மரச்சட்டத்தில் கட்டப்பட்டு, ஐம்பது, எழுபது, சிலவேளை நூறு அடிகள் ஓர் கம்பினால் கொடுக்கப்படுவான். பெருங்குற்றங்களுக்குத் தலைவெட்டுதல், அல்லது யானையினால் மிதிக்கப்படும் தண்டனை கொடுக்கப்படும்."

வேறு அலுவல்கள்

கிராம அவை பாதைகள் போடுதல், நீர்ப்பாசன வசதிகள் அமைத்தல், ஏரிகள் வெட்டுதல் போன்ற வேறு அலுவல்களையும் செய்து வந்தது. ஆனல், பெரிய பொதுப்பணிகள் நடு அரசாங்கத்தால் செய்யப்பட்டன. ஏனெனில், அவற்றைச் செய்யக் கிராம அவையிடம் போதுமான பணம் கிடையாது. அறக்கொடைகளை (Endowments) "சபா"வின் "தர்மவாரியம்" என்ற குழு மேற் பார்வையிட்டு வந்தது. மதம், மருத்துவம், கல்வி, ஏழைகளுக் குதவி முதலியவற்றையும் அவை கவனித்து வந்தது.

சுருங்கக் கூறவேண்டுமானல், கிராம ஆட்சியில் மக்கள் பெரும் பங்கெடுத்துக்கொண்டார்கள். பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி கூறுவதுபோல, "திறமைமிக்க பணித்துறை ஆட்சிக் கும், (Bureaucracy) உயிருள்ள குடிமையுணர்ச்சியைப் பலவகைகளில் வளர்த்த செயல்மிக்க வட்டார அவைகளுக்குமிடையே ஆட்சித்திறமையும், தூய்மையும் உயர்ந்த நிலையை-ஒருவேளை இந்து அரசுகள் அடைந்த நிலைகளிலெல்லாம் மிக மேலான நிலையை-அடைந்தன."

மூன்றும் பகுதி : இடைக்கால ஐரோப்பா

1. மிலேச்ச முடியரசுகள்
2. மெரோலிஞ்சிய, கரோலிஞ்சிய முடியரசுகள்
3. ஆங்கிலோ—நார்மானிய ஆட்சிமுறை
4. திருச்சபையும் இடைக்கால அரசியலமைப்பும்
5. நிலமானிய முறை
6. இடைக்கால நகரங்கள்
7. இடைக்கால பிரதிநிதித்துவ மன்றங்கள்

1. மிலேச்ச முடியரசுகள்

ரோமானியப் பேரரசின் அழிவிற்குப் பிறகு எழுந்த மிலேச்ச அரசுகள் ஜெர்மனியின் பல பகுதிகளிலிருந்து வந்த குலங்களால் ஏற்படுத்தப்பட்டன. அவைகளின் சட்டங்கள், சமூகப் பிரிவுகள், அரசாங்க முறைகள் எல்லாவற்றிலும் பல வேறுபாடுகளைக் காண்கிறோம். H. W. C. டேவிஸ் என்ற ஆசிரியர் அவைகள் ரோமானியப் பேரரசோடு கொண்டிருந்த தொடர்பை அடிப்படையாக வைத்து, அவற்றை இரு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றார். அஃதாவது, ரோமானியப் பேரரசின் இசைவின் பேரில் அங்கே குடியேறி நண்பர்களாகக் கருதப்பட்டவர்களும், எல்லைக்கு வெளியேயுள்ள மாநிலங்களில் குடியேறி அரசுகளை நிறுவியவர்களும் ஆகிய இரு பிரிவினர்கள்.

விஸிகாத்துக்கள் (Visigoths) என்றழைக்கப்பட்ட மேல்காத்துக்கள் (West goths), ஆஸ்ட்ரோகாத்துக்கள் (Ostrogoths) என்றழைக்கப்பட்ட கீழ்காத்துக்கள் (East goths), பர்கண்டியர்கள் (Burgandians) ஆகியோர் ரோமானியப் பேரரசின் நண்பர்களாக இருந்தனர். அவர்கள் கான்ஸ்டான்டிநோபிளின் இணக்கத்தின் பேரில் குடியேறினர்கள். தம் ஆட்சிக்குக் கீழிருந்த பகுதிகளைத் தமது அரசியல் முறைப்படியும் சட்டங்களின்படியும் ஆண்டனர். அரசன் தனது பிரதிநிதிகளின் மூலமாக அவற்றை ஆட்சி செய்தான். படைத்துறை அதிகாரிகள் தமக்குக் கீழுள்ள பகுதிகளைத் தமது விருப்பப்படி ஆண்டனர். அவர்கள் கொள்ளையிட்டுத் தம் படைகளுக்கு உணவு அளித்து வந்தனர். ஆனால் பல விதங்களில் ரோமானியச் சட்டங்களையும் பின்பற்றினர். ரோமானியச் சட்ட இயலிலிருந்து (Jurisprudence) புதிய குற்றவியல் சட்டத் தொகுப்பை இயற்றினர்கள். இந்த மிலேச்சர்கள் கூட்டத்தின் தலைவர்கள் ரோமானிய அமைப்பை அருகிலிருந்து கவனித்து வந்தனர். சிலர் ரோமானியப் படைகளின் தளபதிகளாகவும் பணியாற்றினர். ஆகவே, இவர்கள் ரோமானியக் குடியரசின் அமைப்பைப் பெரிதும் மதித்து வந்தனர். ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்தி, அதில் ரோமானியச் சட்டத்திற்கும், பண்பாட்டிற்கும் சிறந்த இடமளிக்க வேண்டுமென இவர்கள் விரும்பினர்கள். விஸிகாத்துக்கள் கி. பி. 415 முதல் 711 வரை தெற்குக் காலிலும் (Gaul), ஸ்பெயினின் பெரும் பகுதியிலும் தமது அரசை நிலைநாட்டியிருந்தனர். இறுதியில் இவர்கள் சாரஸர்களால் (Saracens) முறியடிக்கப்பட்டனர். ஆஸ்ட்ரோகாத்துக்கள் கி. பி. 493 முதல் 554 வரை இத்தாலியில் தமது அதிகாரத்தை நிலைநாட்டியிருந்தனர். இவர்கள் முடிவில் கிழக்கு ரோமானியப்

பேரரசனை ஜஸ்டினியனின் (Justinian) போர்த் தலைவர்களால் தோற்கடிக்கப்பட்டனர். பர்கண்டியர்கள் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் இத்தாலியின் வடமேற்குப் பகுதியில் தமது ஆட்சியை ஏற்படுத்தியிருந்தனர்.

பேரரசின் எல்லைக்குப் புறம்பாக உள்ள மாநிலங்களில் குடியேறி முடியரசுகளை நிறுவிய மிலேச்சர்கள் இரண்டாவது பிரிவினராவர். இங்கிலாந்தில் குடியேறிய ஸாக்ஸானியர்கள் (Saxons), வட காலில் (North Gaul) குடியேறிய ஃபிராங்குகள் (Franks), இத்தாலியில் குடியேறிய லம்பார்டியர்கள் (Lombards), ஆப்பிரிக்காவில் குடியேறிய வான்டல்கள் (Vandals) இப்பிரிவினைச் சேர்ந்தவர்கள். இவை கடந்த காலத் தொடர்பின்றிப் புதிதாகத் தொடங்கப்பட்ட அரசுகள். வெகு விரைவில் இவை புதியதொரு சமூக, அரசியல் அமைப்பை ஏற்படுத்தின. ரோமானியச் சட்டத்தை இவைகள் முழுவதும் ஏற்க மறுத்தன. ஆனால் இது ஒரு விதத்தில் நன்மை பயத்தது. ஏனெனில், ரோமானியப் பேரரசின் தீய முறைகளை இவைகள் பின்பற்றவில்லை. ஐரோப்பாவின் எதிர்காலம் இவர்கள் கையிலிருந்தது; சிறப்பாக ஃபிராங்குகள், ஸாக்ஸானியர்களின் கையிலிருந்தது. இவ்விரு கூட்டங்களும் ரோமானியப் பேரரசுக்கும் இடைக் காலத்திற்கும் (Middle Ages) இடையேயிருந்த பெரும் பிளவை இணைத்துப் பதினொரும் நூற்றாண்டில் தற்காலம் மலர வழிவகுத்தன.

எல்லா மிலேச்ச முடியரசுகளைப்பற்றியும் பார்க்க இந்நூல் இடந்தராதாகையால், தென்காலில் விஸிகாத்துக்களும், ஆப்பிரிக்காவில் வான்டல்களும், காலில் ஃபிராங்குகளும் நிறுவிய ஆட்சி முறைகளை மட்டும் பார்ப்போம். இம்மூன்றிலும் இறுதியாகக் கூறப்பட்டது மிக முக்கியமானது. ஏனெனில், பழைய ஃபிராங்கு முடியரசிலிருந்தே கரோலிஞ்சிய (Carolingian) முடியரசு உருவாகியது. மேலும், எல்லா மிலேச்சர்களையும் விட ஃபிராங்குகளே தற்கால ஐரோப்பாவின் அரசியல் வளர்ச்சிக்கு மிக அதிகமாக அடிகோலியவர்கள்.

விஸிகாத்துக்கள்

விஸிகாத்துக்கள் தம் குடியேற்றத்திற்குமுன் நிலத்தைத் தனிச் சொத்தாகக் கருதியதில்லை. ஆனால், குடியேற்றத்திற்குப் பிறகு ரோமானிய நிலச் சொந்தக்காரர்கள் தமது நிலத்தில் ஒரு பகுதியையும், அதைச் சேர்ந்த அடிமைகள், கால்நடை முதலியவற்றையும் காத்துக்களுக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. இந்நிலங்களின் மீது வரி விதிக்கப்படவில்லை. படையெடுத்து வந்த காத்துக்களின் தொகை மிக அதிகமாக இருந்ததால், பெரிய நிலங்கள்

மட்டுமல்ல, நடுத்தர நிலங்களையும் கூடத் துண்டுபோட வேண்டியிருந்தது.

காத்துக்களின் முக்கிய தொழில் போர் செய்தலும், வேட்டையாடுதலும். நிலத்திலிருந்து கிடைத்த வருமானம் ஏராளமாக இருந்ததால், அவர்கள் கவலையற்ற சோம்பலான வாழ்க்கை நடத்தத் தலைப்பட்டனர். ரோமானிய நிலமுறைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டதால் அதற்கான பல சட்ட ஒழுங்குகளையும் ஏற்க வேண்டியிருந்தது. இவை அவர்களுடைய சட்டங்களுக்கு முரணாக இருந்ததால், அவற்றை அவர்கள் மாற்றவேண்டியிருந்தது. ஆயினும், அவர்கள் தம் சட்டங்களையும், முறைகளையும் ரோமானிய முறைகளோடு முழுவதும் கலந்து மறைந்து போக விடவில்லை.

அரசாங்கம்

அரசாங்கத்தின் முழு அதிகாரமும் மன்னன் கையிலிருந்தது. ஆனால், பல அரசர்கள் தமது முழு அதிகாரத்தையும் செலுத்த இயலவில்லை. பழைய ஜெர்மானிய அரசியல் முறைப்படியே இவர்களும் அரியணை ஏறினார்கள். அதன்படி தேர்தலும் மரபுரிமையும் கலந்த முறை பின்பற்றப்பட்டது. அரசாட்சியை மக்களும் கட்டுப்படுத்தி வந்தார்கள். ஆனால் காலில் (Gaul) குடியேறிய பிறகு, எல்லாக் குடிகளும் ஒன்றுகூட முடியவில்லை. பொது மக்கள் இழந்த செல்வாக்கைப் பிரபுக்கள் பெற்றனர். அரசனுக்கு நேராகப் பணியாற்றியவர்கள் உயர் குடிகளாகக் கருதப்பட்டனர். படையில்தான் மக்கள் தமது கருத்தை வெளியிட முடிந்தது. ஃபிராங்குகள் செய்தது போல விஸிகாத்துக்களும் படைக் கூட்டங்களை ஒழுங்காகக் கூட்டினார்கள். இக் கூட்டங்களில் முக்கியமான அரசியல் காரியங்கள் வாதிக்கப்பட்டன. ஆனால், இவ்வாதாட்டங்களால் சிலவேளை நாட்டுக்குத் தீங்கே விளைந்தது.

ரோமானியப் பேரரசைப் போலவே விஸிகாத்துக்களின் அரசும் பல மாநிலங்களாகவும், மாநிலங்கள் உட்பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. மாநிலங்களுக்குத் தலைவராக இருந்த அதிகாரி தமது வட்டாரத்திற்குப் படைத்தளபதியாகவும் இருந்தார். நகராண்மையுடைய நகரங்கள் மிகவும் முக்கியமானவையாகக் கருதப்பட்டன. அவற்றின் அதிகாரிகள் நீதி வழங்கியது தவிர, வரியும் திரட்டினார்கள். ரோமானிய நிறுவன அமைப்புகளுடன் தங்களது நாட்டினத்தைச் சார்ந்த பல நிறுவனங்களையும் காத்துக்கள் அமைத்திருந்தார்கள். அவர்களது சமூகம், ஆயிரம், ஐந்நூறு, நூறு, பத்து முதலிய எண்ணிக்கை

யுள்ள குடும்பங்களைக் கொண்ட பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது.

வான்டல்கள்

வான்டல்களின் அரசுக்குத் தலைவன் மன்னன். காலப் போக்கில் அவனது அதிகாரம் வளர்ந்து வரம்பற்றதாகி, ஏறக் குறைய பைசன்டைன் (Byzantine) ரோமானியப் பேரரசரின் அதிகாரத்திற்கு இணையாகியது. அரசுரிமையானது மரபுரிமையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அரசகுடும்பத்தின் இவ்வுரிமையை மக்களால் மாற்ற முடியாது. மூத்த மகனுக்கு இவ்வுரிமை வழங்கப்பட்டது. முதல் முறையாக வான்டல்களின் அரசில்தான் நிலையான அரசுரிமை நிலைநாட்டப் பட்டது.

அரசன் தனது அதிகாரத்தை இறைவனிடமிருந்து பெற்றதாக வான்டல்கள் எண்ணினர்கள். படை, நிதி, சட்ட மியற்றல், நீதி, மதம் போன்ற துறைகளில் எல்லாம் அரசனுக்கு அதிகாரமிருந்தது. போரில் அரசனே எல்லாப் படைகளுக்கும் தளபதியாக இருந்தான். படைக்கலம் தாங்கிய குடிகளைக் கூட்டுவதற்கு அவனே அழைப்பனுப்புவான். சமூகத்தைப் போலவே படையும் ஆயிரம், நூறு ஆகிய பேர்களைக் கொண்ட பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. படைப் பிரிவுகள் அரசனால் ஏற்படுத்தப்பட்ட தளபதிகளிடம் ஒப்படைக்கப்படும். வான்டல்கள் சிறந்த குதிரைப்படை வீரர்களாகத் திகழ்ந்தார்கள். அவர்களிடம் ஆற்றல் மிக்க கப்பற்படையும் இருந்தது. விரைவில் ஓரிடமிருந்து மற்றோரிடம் செல்லக் கூடிய குதிரைப் படையும், கப்பற்படையும் இருந்ததால் வான்டல்கள் வியக்கத் தக்க வெற்றிகளைப் பெற்று வந்தனர். அயல்நாட்டுச் செய்திகளில் அரசனுக்கு முழு அதிகாரம் இருந்தது. அரச தூதர்களை நியமிப்பதும், உடன்படிக்கைகள் செய்வதும், போர் தொடுப்பதும் அரசனின் தனி உரிமைகள். வான்டல்கள் தமது நீதி முறையின்படி, நூறு குடும்பங்களடங்கிய மாவட்டங்களில் ஆயிரம் குடும்பங்கள் கொண்ட தொகுதித் தலைவர்களால் விசாரிக்கப்படுவார்கள். அரசியல் குற்றங்களில் தீர்ப்பளிக்கும் உரிமை அரசனுடையது. ரோமானியர்களுக்கு அவர்களின் சட்டப்படி தீர்ப்பளிக்கப்பட்டபோதிலும், அரசன் அடிக்கடி அவ் வழக்குகளில் தலையிடுவதுண்டு. பொதுவாக அரசன் ரோமானியருக்கும், கத்தோலிக்க மதத்தினருக்கும் எதிராகச் சட்டமியற்றி வந்தான்.

அரசாங்க அலுவலர்களெல்லாம் அரசனால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்களை எப்பொழுதும் அரசன் பதவியினின்று

நீக்க முடியும். அரசவையின் மேலான அலுவலர் தற்கால முதலமைச்சர் போன்று அவ்வளவு அதிகாரத்தைச் செலுத்தி வந்தார். அமைச்சரவையின் தலைவர் அரசனின் கட்டளைகளை எல்லாம் எழுதிவைக்கும் பொறுப்பும் பெற்றிருந்தார். இவ்வலுவலர்கள் தவிர, அரசவையில் ஒரு பணியும் செய்யாது அரசனது ஆதரவிலே பலர் இருந்தனர். தன்னருகில் இருந்த உயர்ந்த நிலையிலுள்ளவர்களுடன் மன்னன் முக்கியமான அரச காரியங்களைப்பற்றிக் கலந்தாய்வதுண்டு. இவர்களிலிருந்துதான் பெரும்பாலும் மாநில அதிகாரிகளை அரசன் தெரிந்தெடுப்பான். ஆயிரம் குடும்பங்களின் தலைவர்கள்தாம் வான்டல்களின் முக்கிய அதிகாரிகள். இவர்கள் தமக்கடியிலுள்ள மக்களின்மேல் நீதி, படை, ஆட்சி சம்பந்தமான அதிகாரங்கள் செலுத்தி வந்தார்கள்.

மதத்துறையில் அரசனுக்கு முழு அதிகாரமிருந்தது. கத்தோலிக்க சபையும், ஏரியன் (Arian) சபையும் அவனுடைய கட்டுப்பாட்டிற்கு அடங்கியிருந்தன. மேற்றிராணியார்கள் (Bishops) அரசனின் இசைவின் பேரில்தான் நியமிக்கப்பட்டார்கள். திருக்கூட்டங்கள் (Synods) அரசனல் கூட்டப்பட்டன. அவை அரசனது இணக்கத்தின்மேல் மட்டும் கூட முடியும்.

ஃபிராங்குகள்

ஸாலிக் சட்டத் (Salic Law) திலிருந்து ஃபிராங்குகளின் அரசியல் நிறுவன அமைப்பு நமக்கு நன்றாகத் தெரிகிறது. அரசனுக்கு மிகுதியான அதிகாரம் இருந்தது. அவனது நீதி மன்றத்தின் முன் வர மறுத்தவர்கள் சமூகத்திலிருந்து விலக்கப் பட்டார்கள். அவர்களுடைய சொத்துக்கள் பறிக்கப்பட்டன. யாரும் அவர்களைக் கொல்லலாம். அவர்களுக்கு நெருங்கிய உறவினர்கள் கூட, ஏன் மனைவியரும், அவர்களுக்கு உணவு கொடுக்கக் கூடாது. கொடுத்தால் அவர்கள் பெருந்தண்டனை பெறுவார்கள்.

நாடு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரிவிற்கும் அரசன் ஒரு பிரதிநிதியை ஏற்படுத்தி ஆண்டு வந்தான். இப்பிரதிநிதி தன்னுட்சிக்குட்பட்ட பகுதியில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டி, அரசனுக்குச் சேர வேண்டிய பணத்தைத் திரட்டி, நீதி மன்றங்களின் தீர்ப்புகளை நிறைவேற்றி வந்தார். நாட்டின் பிரிவுகள் நூறு குடும்பங்கள் கொண்ட உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு "நூற்றி"லும் ஒரு நீதி மன்றமுண்டு. அந்நீதி மன்றத்திற்கு வர எல்லாக் குடிகளுக்கும் உரிமையுண்டு. ஆனல், சிலர்தாம் அதன் நடவடிக்கைகளில் கலந்துகொண்டனர். ஒவ்வொரு

வனது உயிருக்கும் ஒரு விலையுண்டு. ஃபிராங்கு ஒருவனின் விலை 200 நாணயங்கள். ரோமானியனின் விலை 100 நாணயங்கள். கொலையாளி கொலைசெய்யப்பட்டவரின் விலையைக் கொடுத்துவிட்டு விடுதலை பெறலாம். இத்தொகையில் 2/3 பகுதியைக் கொலைசெய்யப்பட்டவனின் உறவினருக்கும், மீதி 1/3 ஐ அரசாங்கத்திற்கும் செலுத்தவேண்டும். இவ்வாறாக அரசாங்கம் தனிப்பட்டவர்கள் பழி தீர்த்துக்கொள்வதைத் தடுக்க முயன்றது. ஆனால், இதில் முற்றிலும் வெற்றிபெற இயலவில்லை.

---

2. மெரோவிஞ்சிய, கரோலிஞ்சிய முடியரசுகள்

எல்லா மிலேச்ச முடியரசுகளையும் விட, வட காலில் (Northern Gaul) வளர்ச்சியுற்ற ஃபிராங்கு முடியரசு மிக முக்கியமானது. ஏனெனில் ஃபிராங்குகள்தாம், H. W. C. டேவிஸ் கூறுவது போல, "மிலேச்சர்களின் படையெடுப்பு, குடியேற்றம் ஆகியவற்றின் முழுப் பலன்களையும் அறுவடை செய்தவர்கள்." மேற்கு ரோமானியப் பேரரசு வீழ்ச்சியடைந்ததும், பல சிறு மிலேச்ச முடியரசுகள் தோன்றின. அப்போது ஐரோப்பாவில் பலவிதமான அரசாங்கங்களும், சமூகங்களும் அமைந்த ஒரு குழப்பமான நிலை காணப்பட்டது. அதை மாற்றித் திரும்பவும் ஒழுங்கை நிலைநாட்டிப் பிற்காலச் சீரமைப்புக்கு அடிகோலியவர்கள் ஃபிராங்குகள். ரோமானியப் பேரரசுக்கும் இடைக்காலத்திற்கும் நடுவே இருந்த பிளவை இணைத்தவர்களும் அவர்களே.

மிலேச்சர்கள் வென்ற இடங்களின் ஆட்சியை முதலில் மெரோவிஞ்சியர்களும், பிறகு கரோலிஞ்சியர்களும் வலுப்படுத்தினர்கள். ஃபிராங்குகளின் அரசு தொடங்கிய காலத்தில் அவர்களில் மூன்று பிரிவுகள் இருந்தன. முதல் பிரிவினர் ரைன் நதிக் கரையிலும், இரண்டாம் பிரிவினர் பாட்வியா (Batvia)விலும், மூன்றாவது பிரிவினர் ரைன், மீயூஸ் நதிகளுக்குமிடையேயுள்ள நிலங்களிலும் குடியேறினர்கள். நெடுங்காலமாக ஃபிராங்குகளிடையே ஒற்றுமையில்லாமல் அவர்கள் பல சிறு அரசர்களால் ஆளப்பட்டு வந்தனர். கி. பி. 481 இல் டூர்நாயில் (Tournai) அரியணையேறிய குளோவிஸ் (Clovis) என்ற அரசன் அவர்களை ஒன்றுபடுத்தித் தனதாட்சிப் பரப்பைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டான். ஆனால், அவனுக்குப் பிறகு சில காலத்திற்குள் அவனது அரசு மூன்று துண்டுகளாகச் சிதறியது. அவையாவன, நியூஸ்டிரியா (Neustria), ஆஸ்டிரேஸியா (Austrasia), பர்கண்டி (Burgandy) கி. பி. 638 இலிருந்து 719 வரை, நியூஸ்

டிரியாக் குடும்பங்களுக்கும் ஆஸ்டிரேஸியாக் குடும்பங்களுக்கும் இடையே மேலாண்மைக்காகச் சண்டைகள் நிகழ்ந்துகொண்டே யிருந்தன. இறுதியில் ஆஸ்டிரேஸியரான சார்ல்ஸ் மார்ட்டல் (Charles Martel) என்பவர் தமது வெற்றியினால் அவர்களை இணைத்துக் கரோலிஞ்சிய அரச மரபை நிறுவினர். அவரது ஆட்சி நிலம் அட்லாண்டிக் பெருங்கடல் முதல் பொஹிமியாவின் எல்லைவரையும், வடகடல், ஆங்கிலக் கால்வாய் முதல் ஆல்ப்ஸ், பிரனீஸ் வரையும் பரவிக் கிடந்தது. மேலும் 711 இல் அரியணை யேறிய சார்ல்ஸ் மார்ட்டலின் பேரன் சார்ல்ஸ் கத்தோலிக்கத் திருச்சபையைப் பாதுகாத்து வந்ததால், அவருக்குத் திருச் சபையின் ஆதரவு இருந்தது. அவரது குடிகள் பொதுவான மதப் பிணைப்பினால் இணைக்கப்பட்டிருந்தனர். கி. பி. 800 இல் கிறிஸ்து பிறந்த நாள் விழாவன்று மூன்றாவது லியோ (Leo III.) என்ற போப்பாண்டவர் புனித பீட்டர் பேராலயத்தில் சார்ல்ஸ் மன்னனை ரோமானியப் பேரரசனாக முடிசூட்டினர். சிறந்த கரோ லிஞ்சிய ஆட்சி முறையை ஏற்படுத்தி, அதை வலுப்படுத்தியவர் இந்தச் சார்ல்ஸ் மன்னர்தாம். இவரே மகா சார்ல்ஸ் என்று அழைக்கப்படுகிறார். அவர் பழைய முறைகளைப் பின்பற்றினாலும் அவற்றைக் காலத்துக்குத் தக்கபடி மாற்றியமைத்தார். டேவிஸ் கூறுவது போல், " அவர் பழைய மிலேச்ச முடியரசின் மரபினரா கவும், புதிய ஒரு பேரரசை நிறுவியவராகவும் விளங்கினார்". அவர் மிலேச்சர்களின் காலத்தை முடித்துப் புதியதொரு சீர்திருத்த காலத்தைத் தொடங்கினர்.

மகா சார்ல்ஸின் ஆட்சி முறை

கரோலிஞ்சிய ஆட்சி முறை சார்ல்ஸின் காலத்தில் உச்ச நிலையிலிருந்தது. அவர் மிலேச்சர்களின் அரசு முறையைச் சீர்ப் படுத்தி, ஐரோப்பாவிலிருந்த கத்தோலிக்க முடியரசுகளையெல் லாம் ஒரு பொதுநலக்கூட்டாக (Commonwealth) இணைக்க முயன்றார்.

1. நடு அரசாங்கம்

கரோலிஞ்சிய ஆட்சி முறையில் நடு அரசாங்கம் பெயரளவில் பணித்துறையாட்சி (Bureaucracy) யாக இருந்தபோதிலும், உண் மையில் தன்னரசாகவே (Autocracy) இருந்தது. அரசனது அதி காரம் மூன்று வகைகளாகப் பிரிந்திருந்தது. அவையாவன: பொதுவாக மக்களுக்கு அரசன்மீதுள்ள பற்று; அவனது கீழாட் கள் அவனுக்குச் செலுத்தவேண்டிய கடமைகள்; அரசனது தனியுரிமை நிலத்தில் (Demesne) வாழ்ந்த குத்தகைக் குடி களின் பணிகளும், வழக்கங்களும். மூன்றாவது கூறப்பட்டவைகளி லிருந்தே அரசன் தனது வருவாயில் பெரும்பகுதியைப் பெற்றான்

அரசன் நீதியின் பிறப்பிடமாகவும் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுபவனுகவும், கைத்தொழிலையும், வாணிகத்தையும் காப்பவனுகவும் விளங்கினன். அவனின் தனிச் சிறப்புரிமைகளைப் (Prerogatives) பயன்படுத்துவதில் அவனுக்குத் துணை செய்யப் பல அலுவலர்கள் இருந்தார்கள். அவர்களில் பலர் அரண்மனை அலுவலர்கள். உதாரணமாக, அரண்மனைப் பொருட்குவையைக் கண்காணித்த முதல்வர் (Chamberlain), படைகளை அணிவகுத்த காவலர் (Constable), அரசனின் தனியுரிமை நிலங்களின் உயர் மேற்பார்வையாளர் (Seneschal), அரசனின் கடிதங்கள், அரசாங்கப் பத்திரங்கள் முதலியவற்றை எழுதுபவர்களின் துறைத்தலைவர் (Protonotary), மத சம்பந்தமான விண்ணப்பங்கள், முறையீடுகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கும் உயர்குரு (Arch-Chaplain) முதலியோர். இவர்கள் தவிர அரண்மனைப் பெருமக்களும் (Counts of the Palace) இருந்தனர். அவர்கள் நாட்டின் முக்கிய இனங்களிலிருந்து நியமிக்கப்பட்டவர்கள். உலகியல் சார்ந்த மேல் வழக்குகளில் நீதி தீர்ப்பளிக்கும் அரசனது உரிமையை இவர்கள் செலுத்தினர்கள்.

அரசன் தன் பெரியோர்களின் அறிவுரை கேட்டு, அவர்களின் இசைவின்பேரில் ஆட்சிசெய்ய வேண்டும் என்பது வழக்கம். இது பழைய ஜெர்மானிய வழக்கு. இதை வரம்பற்ற ரோமானிய முடியரசாலும் அழிக்க முடியவில்லை. நாட்டின் நலனுக்காக முக்கியச் செய்திகளைத் தீர்மானிக்கும்போது, அரசன் செல்வாக்கு மிக்க பிரபுக்களடங்கிய ஒரு குழுவைக் கலந்து ஆராய்ந்து வந்தான். அவர்களின் தீர்மானங்கள் ஒரு பொது அவை (General Assembly) யின் முன் கொண்டுவரப்படும். இது பழைய ட்யூட்டானிய மக்கள் மன்றத்தின் சின்னமாகும். ஆனல் இது சட்டமியற்றும் ஒரு நிறுவனமன்று; அறிவுரை கூறும் நிறுவனம்தான். இந்தப் பொது அவையின் முன்னல் அரசனின் கட்டளைகள் அறிக்கையிடப்படும். சில கட்டளைகள் பொது அவையின் இணக்கத்துடன் எழுதப்பட்டவை. சில சார்ல்ஸ் மன்னனின் சொந்தக் கருத்துக்கள்.

II. மாநில ஆட்சி

இத்தாலியையும், அக்குயிட்டைனையும் (Aquitaine) சார்லஸ் தம் இளைய மக்கட்கு அளித்தார். அவர்கள் தங்கள் முழு விருப்பப்படி ஆட்சிசெய்யும் உரிமை பெற்றிருந்தனர். ஆனல், அவர்கள் பேரரசரின் பொதுக் கட்டுப்பாட்டிற்கு அடங்கியிருக்க வேண்டும். மற்ற மாநிலங்களில் கோமக்கள் (Dukes), பெருமக்கள் ஆகியோரிடமிருந்து அதிகாரம் பறிக்கப்பட்டு அரசரின் நேர் அதிகாரம் நிலைநாட்டப்பட்டது. எல்லைப்புறங்களில் தனிப்

படைத்துறைத் தலைவர்கள் ஏற்படுத்தப்பட்டனர். பேரரசை நார்வே கூட்டத்தாரின் (Norsemen) தாக்குதலிலிருந்து காக்க ஆங்கிலக் கால்வாயில் ஒரு கப்பற்படை நிறுத்தப்பட்டது.

III. லட்டார ஆட்சி (Local Administration)

மாவட்டங்களின் ஆட்சி பெருமக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பழைய மாநிலங்களின் பிரிவுகளே மாவட்டங்கள். பெருமகன் (Count) அநேகமாக மரபுரிமையாக வந்த அலுவலர்; சீரியல், படைத்துறை எல்லாவற்றிலும் அவரே அரசரின் பிரதிநிதி. வரி வசூலித்தலும், படை நடத்தலும், அமைதியை நிலை நாட்டுவதும் அவரின் பொறுப்புகள். அவரது தீர்ப்பு மன்றம் பழைய ஜெர்மானிய நீதிமன்றம் போன்றது. அதன் உறுப்பினர்கள் பெருமகனால் நியமிக்கப்பட்டார்கள்.

IV. சுற்றுப்பயணம் செய்யும் ஆணையாளர்கள் (Itinerant Commissioners)

இவர்கள் இரண்டு அல்லது மூன்று பேர்களாக நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் அனுப்பப்பட்டார்கள். வட்டார அதிகாரிகளுக்கு அரசனின் கட்டளைகளைத் தெரிவிக்கவும், புதிய சட்டங்களை அறிவிக்கவும், எல்லாவற்றிற்கும் மேலாகக் கொடுமையாக நடத்தப்படுவதாகக் குறை கூறுபவர்களின் முறையீடுகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கவும் இவர்கள் சுற்றுப்பயணம் செய்தார்கள். மேலும், வட்டார நீதிபதிகள் எவ்வாறு நீதி வழங்கினரெனப் பார்வையிட்டு, அரசனுக்கு அறிவிக்கவேண்டிய எல்லாச் செய்திகளையும் அறிவித்து வந்தனர். அவர்கள் மாநில அதிகாரிகளிடம் செல்லும்போது அரசனின் தூதர்களாகவும், அங்கிருந்து திரும்பி அரசனிடம் வரும்போது மக்களின் பிரதிநிதிகளாகவும் செயலாற்றினர்கள். நடு அரசாங்கத்தையும், மாநில, வட்டார அரசாங்கங்களையும் இணைக்கும் பொற் சங்கிலிகளாக அவர்கள் விளங்கினர்கள். ஆனால், இவர்களது வேலை செவ்வனே நடைபெறுவதற்குப் பல தடைகள் இருந்தன. சுற்றுப் பயணம் செய்ய வேண்டிய பகுதிகள் மிக அதிகமாக இருந்தன. அந்த ஆணையாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் மிகக் குறுகிய காலத்திற்கு மட்டும் பதவியிலிருந்தனர். இதன் விளைவாகப் பல பகுதிகள் அவர்களுடைய கட்டுப்பாட்டிலிருந்து தப்பின. கரோலிஞ்சிய ஆட்சி முறையில் பிற்காலத்தில் தோன்றிய இந்த நிறுவனம் அதிலிருந்து முதல் முதலில் மறைந்தது. இதன் மறைவுக்குப் பிறகு மாவட்டங்களில் பிரபுக்கள் மக்களைத் தமது நலனுக்காகச் சுரண்டி வந்தனர்.

இறுதியாக, இன்னொரு விதமான அலுவலர்கள் இருந்தனர். அவர்கள் "ஸ்காபினி" (Scabini) என்றழைக்கப்பட்டனர். அவர்கள் சில வேளை அமைதிக் காவலராகவும் (Justices of Peace), சில வேளை தீர்ப்புச் சான்றாளராகவும் (Jurors) பணியாற்றினர்கள். மேலும், அவர்கள் வட்டாரக் கூட்டங்களிலும், நாட்டு அவைகளிலும் கலந்துகொண்டார்கள். அவர்கள் பேரரசரின் கட்டளைகளுக்குத் தமது இசைவைத் தெரிவித்த பிறகுதான் அவைகள் நிறைவேற்றப்பட்டன.

இவ்வாறு சார்ல்ஸ் மன்னர் தமது ஆட்சி முறையில் அரசனின் அதிகாரத்தையும், மக்களின் உடன்பாட்டையும் ஒன்று சேர்க்க முயன்றார். அவரது ஆட்சி வெற்றி பெறப் பல காரணங்கள் உள்ளன. அரசாங்க அலுவலர்கள் எல்லாம் கடமையுணர்ச்சியோடு பணியாற்றுமாறு செய்தார். எப்போதும் விழிப்பாயிருந்து ஆட்சித்துறை முழுவதையும் கண்காணித்து வந்தார். மதச் சார்புள்ள ஒழுக்க விதிகளை அறிவித்து, திருச்சபையின் பணியுடன் அரசின் வேலையையும் இணையாகச் செல்லுமாறு செய்து, சமயச் சார்புள்ள அரசை (Theocratic State) நிறுவினர். கரோலிஞ்சிய அரசு அக்காலத்தில் ஐரோப்பாவிலிருந்த அரசுகளிலெல்லாம் ஆற்றல் மிக்க அரசாகத் திகழ்ந்தபோதிலும், அதன் பலமெல்லாம் ஒருவரின், அஃதாவது சார்ல்ஸ் மன்னரின் திறமையைப் பொறுத்திருந்தது. அவரது அலுவலர்களில் பெரும்பாலோர் பயிற்சியற்றவர்களாகவும், குறைந்த சம்பளம் பெற்றவர்களாகவும் இருந்தனர். இதன் விளைவாகச் சார்ல்ஸ் இறந்த பிறகு ஆட்சிமுறை திடீரென நலிவுற்று விரைவில் அழிவுறத் தொடங்கியது. சார்ல்ஸின் ஆட்சி முறையின் வீழ்ச்சியே நிலமானிய முறை (Feudalism) தோன்றுவதற்கு அறிகுறியாக இருந்தது. இதைப்பற்றிப் பிறகு இன்னோர் இயலில் கூறுவோம். அதற்கு முன் இங்கிலாந்து இதே காலத்தில் அடைந்திருந்த அரசியல் நிலையைச் சற்றுக் கவனிப்போம். ஏனெனில், சார்ல்ஸ் மார்ட்டல், மகா சார்ல்ஸ் போன்ற கரோலிஞ்சிய மன்னர்கள் நடத்திய போர்களினால் ஐரோப்பாவின் பெரும் பகுதி பாதிக்கப்பட்ட போதிலும், இங்கிலாந்து மட்டும் தனித்து நின்று, கரோலிஞ்சியரின் தாக்குதல்களினால் தடைபடாமல் வளர்ந்து வந்தது. இந்த வளர்ச்சியையும், நார்மானியர் காலத்தில் இங்கிலாந்து அடைந்திருந்த நிலையையும் இப்போது பார்ப்போம்.

---

3. ஆங்கிலோ - நார்மானிய ஆட்சி முறை

நார்மானியப் படையெடுப்பு

இதுவரை மேற்கு ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு ஐரோப்பாவில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தோம். மிலேச்சர்களின் படையெடுப்பிற்குப் பிறகு அமைதி குலைந்த போதிலும், மகா சார்ல்ஸின் காலத்தில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒற்றுமை நிறுவப்பட்டதெனக் கூறினோம். அக்காலம் முழுவதிலும் ட்யூட்டானிய இங்கிலாந்து ஐரோப்பிய வரலாற்றில் இடம் பெறவே இல்லை. கி. பி. 800 க்குப் பிறகு தான் அது திரைமறைவிலிருந்து வெளிக்கிளம்பியது. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் ரோமானிய பிரிட்டனில், ஆங்கில்கள் (Angles), ஸாக்ஸன்கள் (Saxons), ஜூட்டுகள், (Jutes) என்ற குலத்தவர்கள் பல சிறு குடியேற்றங்களை நிறுவினர்கள். இச் சிறு அரசுகள் ஒரு விதமான ஆட்சியமைப்புடன் விளங்கின. போரின் காரணமாக இவைகளின் எல்லைகள் விரிவடையவும், ஒன்றோடொன்று நெருங்கித் தொடர்புகொள்ளவும் தொடங்கின. இதன் விளைவாக ஏழு அல்லது எட்டுப் பெரிய முடியரசுகள் பிறந்தன. இவற்றிற்கு "ஏழரசு" (Heptarchy) எனப் பெயர். கென்ட் (Kent), ஸஸெக்ஸ் (Sussex), வெஸெக்ஸ் (Wessex), மெர்ஸியா (Mercia), கிழக்கு ஆங்கிலியா (East Anglia), நார்தம்பிரியா (Northumbria) முதலியவை முக்கியமானவை. இவைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலத்தில் மற்ற அரசுகளின் மேல் உறுதியற்ற மேலாட்சியை நிறுவின. வெஸெக்ஸ் அரசர்கள் இத்தகைய மேலாட்சியை உறுதியுள்ளதாகவும், நிலையானதாகவும் செய்தனர் இவ்வாருக வெஸெக்ஸின் அரசனை எக்பர்ட் (Egbert) (802-829) ஆங்கில நாட்டு முதல் அரசரானார்.

இந்நிலையில் ஐரோப்பாவிலிருந்தது போல இங்கிலாந்திலும் நிலமானிய முறை நிறுவப்படத் தொடங்கியது. இதன் விளைவாக அரசனது அதிகாரம், நாடு முழுவதும் பரவியிருந்தபோதிலும், குறையத் தலைப்பட்டது. ஏனெனில், பலம் பொருந்திய நிலச் சொந்தக்காரர்கள் தம் வட்டாரங்களில் அரச அதிகாரம் செலுத்தத் தொடங்கினர். இந்தப் போக்கு கன்யூட் (Canute) மன்னர் காலத்தில் (1016—1035) ஆரம்பமானது. அவர் ஆங்கில நாட்டை வெஸெக்ஸ், மெர்ஸியா, கிழக்கு ஆங்கிலியா, நார்தம்பிரியா என நான்கு கோமானுட்சிப் பகுதிகளாகப் (Earldoms) பிரித்தார். இதனால் எட்வர்டு தி கன்ஃபெஸர் (Edward the Confessor) என்ற மன்னர் காலத்தில் கோமான்களின் ஆட்சிப் பகுதிகள் மிகப் பலம் பெற்று, நாட்டில் குழப்பத்தை உண்டு

பண்ணின. இந்நிலையில்தான் நார்மானியப் படையெழுச்சி நிகழ்ந்தது.

எட்வர்டு இறந்தபிறகு அரசமரபுடன் தூரத் தொடர்புள்ள ஹெரால்டு பதவியேற்றார். அப்போது நார்மண்டியின் (Normandy) கோமான் வில்லியம் இங்கிலாந்தின்மீது படையெடுத்து வந்து ஆட்சியைக் கைப்பற்றினார். அதன் முக்கிய விளைவாக நாட்டில் நிலமானிய முறை நிலையாக நிறுவப்பட்டது. அரசன் மேலான நில உரிமையாளராகவும், மற்றெல்லோரும் அவனது குத்தகைக் குடிகளாகவும் (Tenants) கருதப்பட்டனர். அரசனுக்குக் கீழ் படிமரபாக (Hierarchy) சமூகம் அமைக்கப்பட்டது. தலைமைக் குத்தகைக் குடிகள் (Tenants-in-Chief) மேற்படியிலும், பண்ணையாட்கள் (Villeins) கீழ்ப்படியிலும் இருந்தனர். இவ்வாறாக, முதலாம் வில்லியம் நில உரிமை முறையைச் செப்பனிட்டார். மேலும், நிலமானியப் பிரபுக்கள் செல்வாக்கும் ஆற்றலும் மிகுந்த அரசனின் அதிகாரத்தைக் குறைக்கா வண்ணம் முயற்சிகள் எடுத்து அரசாட்சியைப் பலப்படுத்தினர். இதனால் இங்கிலாந்து குழப்பங்களிலிருந்து காப்பாற்றப்பட்ட தோடு, ஏனைய ஐரோப்பிய நாடுகளைவிட மிகு விரைவில் அரசியல் வளர்ச்சியை நோக்கிப் பீடு நடையுடன் சென்றது.

பொருளியல் தொடர்புகளில் (Economic Relations) நிலமானிய முறையைச் செப்பனிட்ட வில்லியமும் அவருக்குப் பின் வந்த நார்மானிய அரசர்களும் அம்முறை அரசாங்கத்தைப் பாதிக்காத வண்ணம் பாதுகாத்தனர். இதுவே அவர்கள் ஆங்கில அரசியல் வளர்ச்சிக்குச் செய்த பெரும் பணியாகும். ஐரோப்பாவில் இதே காலத்தில் இறைமையானது நிலப்பிரபுக்களின் சொத்துரிமையாக மாறிக்கொண்டிருந்தது. அரசன் நிலமானியப் படிமரபின் தலைவனாக இருந்தானே தவிர, இறைமையின் இருப்பிடமாகத் திகழவில்லை. இந்த நிலை இங்கிலாந்திலும் ஏற்படாதபடி தடுத்து, இறைமையை அரசனின் உடைமையாகவே இருக்கச் செய்த பெருமை நார்மானிய மன்னர்களைச் சாரும். நிலமானியப் பிரபுக்களின் அதிகாரத்தை நொறுக்க வில்லியம் பல வழிகளைக் கையாண்டார். அவர்களின் நிலங்களை ஒரே இடத்தில் கொடுக்காமல் நாட்டின் பல பகுதிகளிலுமாகப் பிரித்துக் கொடுத்தார். அவர்கள் தமக்குள் போரிடவோ, நாணயம் அச்சடிக்கவோ அனுமதிக்கப்படவில்லை. எட்வர்டு திகன்ஃபெஸர் ஏற்படுத்திய கோமானாட்சிப் பகுதிகளை வில்லியம் சிதைத்தார். ஆனால் எல்லைப் புறங்களில் பாலட்டைன் கோமானாட்சிப் பகுதிகளை (Palatine Earldoms) ஏற்படுத்தி, அவற்றில் நம்பத்தக்க கோமான்களை நியமித்தார். நாட்டிலுள்ள எல்லாத்

குத்தகைக் குடிகளும் அரசியல் துறையில் அரசனது ஆணைக் கடங்கியிருக்க வேண்டுமென்ற கோட்பாட்டை ஸாலிஸ்பரி உறுதி மொழியின் (Oath of Salisbury) மூலம் நிலைநாட்டினர்.

மேலும், வில்லியம் மன்னர் தமது படைப் பலத்தை அதிகரித்துக்கொண்டார். நாட்டின் பல்வேறு இடங்களில் பலத்த கோட்டைகளைக் கட்டி நிலப் பிரபுக்கள் சச்சரவுகள் செய்யமுடியாதபடி தடுத்தார். ஆங்கிலோ ஸாக்ஸானியர்களைக்கொண்டு நாட்டுப்படை (National Militia) யொன்றும் நிறுவினர். மேலும், பிரபுக்கள் தர வேண்டிய பணத்தை ஒழுங்காக வசூலித்து, அவர்களுடைய சொத்துக்களின் அளவையறிய நில உடைமைக் கணிப்பேடு (Domesday Book) ஒன்றைத் தயாரித்தார். நீதித் துறையிலும் நிலமானியப் பிரபுக்களின் அதிகாரம் குறைக்கப்பட்டது. வில்லியம் பழைய ஆங்கிலோ ஸாக்ஸன் முறையைப் பின்பற்றி அரச அலுவலரான "ஷெரிப்" (Sheriff) கள் தலைமை தாங்கும் மக்கள் நீதிமன்றங்களை நிறுவினர். பெரிய அவை (Magnum Concilium) நிதி, நீதி ஆகிய காரியங்களில் அரசனது விருப்பப்படியே பணியாற்றியது. மேலும், பிரபுக்களுக்கு அரசர் தம் கட்டளைகளை "ஷெரிப்" மூலமாக அனுப்பித் தக்க முறையில் நீதி வழங்குமாறு செய்தார். முதலாம் ஹென்றி மன்னர் காலத்தில் சீரியல், குற்றவியல் வழக்குகளை விசாரிக்கச் சுற்றுப் பயணம் செய்யும் நீதிபதிகள் நியமிக்கப் பட்டார்கள். இவ்வாருக நார்மானியப் படையெடுப்பின் பிறகு இங்கிலாந்தில் நிலமானிய முறை நிலைநாட்டப்பட்டபோதிலும், பிரபுக்களின் அதிகாரம் சிதைக்கப்பட்டு, ஆற்றல் மிகு அரசு வளர்ச்சியுற வழிகோலப் பட்டது.

அரசன்

ஆங்கிலோ—நார்மானிய ஆட்சி முறையில் அரசன் மேலான அதிகாரம் பெற்றிருந்தான். ஆட்சித்துறையின் எல்லாப் பகுதிகளும் அவனது அதிகாரத்திற்குட்பட்டிருந்தன. அவனது குடிகள் எல்லோர்மீதும் நேராக அதிகாரம் செலுத்தினன். நிலமானிய முறைப்படி அரசனுக்குச் செலுத்த வேண்டிய எல்லாப் பணமும் அவனது கருவூலத்திற்கே வந்து சேர்ந்தது. அரசன் நிலமானிய வருவாயை மட்டும் நம்பியிருக்கக் கூடாது என்பதற்காக வேறொரு வரி முறையும் நாடு முழுவதிலும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. போர்க் காலத்தில் நிலமானிய முறைப்படி தான் பெற வேண்டிய படைவீரர்களைத் திரட்ட அரசனுக்கு அதிகாரமிருந்தது. இது தவிர அவனிடம் நாட்டுப் படையும் இருந்தது. இவ்வாருக ஆங்கிலோ-நார்மானிய மன்னர்கள் பிரபுக்களைச் சார்ந்திராமல், உண்மையிலேயே நாட்டை ஆள்பவர்களாகத் திகழ்ந்தனர்.

பெரிய அவை (Great Council)

அரசனது பெரிய அவை நாட்டின் மேலான சட்டசபையாகவும், நீதி நிறுவனமாகவும் இருந்தது. நாளடைவில் பெரிய அவையானது தலைமைக் குத்தகைக் குடிகளைக் கொண்ட நிலமானிய நிறுவனமாக மாறியது. கீழான தலைமைக் குத்தகைக் குடிகள் (Lesser Tenants-in-Chief) அவ்வவைக்கு அழைக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் பொதுவாக அங்குச் செல்வதில்லை. திருச்சபையின் பெருந் திருவிழாக்களாகிய கிறிஸ்து பிறந்த நாள், கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள், தூய ஆவி இறங்கிவந்த நாள் இம்மூன்றிலும், அரசன் தனது பெரிய அவையைக் கூட்டுதல் வழக்கம். அப்போது அரசன் தன் திட்டங்களை அவையின் முன் கொண்டுவருவான். அதன் அறிவுரையும் இசைவும் பெற்று அத் திட்டங்கள் நிறைவேறும். மேலும் முக்கியமான மேல் வழக்குகளில் நாட்டின் மேலான நீதிமன்றம் என்ற முறையில் பெரிய அவை தீர்ப்பளிக்கும். இந்த அவைதான் அரசனைத் தெரிந்தெடுக்கும். நான்கு ஆங்கிலோ-நார்மானிய மன்னர்களும் போட்டியின் மேல் பட்டத்திற்கு வந்தார்கள். அவர்கள் பெரிய அவையினால் தெரிந்தெடுக்கப்பட்டதால்தான் பதவியிலிருக்க முடிந்தது.

அரச அவை

பெரிய அவை எப்போதும் கூடியிருக்க முடியாதாகையால் ஆட்சியைக் கவனித்து, அரசனது பளுவைக் குறைக்க ஒரு நிறுவனம் தேவையாக இருந்தது. இந்த அலுவலை அரசனைச் சூழ்ந்திருந்த அலுவலர்களும், அறிவுரையாளர்களும் செய்து வந்தனர். இவர்களது அவை அரச அவை, அல்லது "கியூரியா ரேஜிஸ்" (Curia Regis) என அழைக்கப்பட்டது. இதில் இரு வகையான உறுப்பினர் இருந்தனர். முதலில் அரண்மனையில் பணியாற்றிய காவலர் (Constable), அரண்மனை முதல்வர் (Chamberlain), மேற்பார்வையாளர் (Steward), படைத்துறைத் தலைவர் (Marshall) முதலிய அலுவலர்கள். முறைவர் (Justiciar), நிதித்தலைவர் (Chancellor), பொருளாளர் (Treasurer) ஆகியவர்கள் இரண்டாம் வகையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அரச அவையின் முக்கியமான உறுப்பினர்கள். அரசனால் நியமிக்கப்பட்டு, நீக்கப்படக் கூடியவர்கள்.

முறைவர் மேலான நீதி மன்றத்தின் தலைவர். அவரே நிலையான முதல் அமைச்சர். அவர் அரசனுக்குப் பதிலாக அவனில்லாத காலத்தில் அரச அதிகாரத்தைச் செலுத்தினர். பொதுவாக ஆங்கிலோ-நார்மானிய மன்னர்கள் மதக் குருக்களை இப்பதவிக்கு

நியமித்தனர். ஏனெனில், அவர்கள்தாம் பிரபுக்களின் அதிகாரத்திற்குக் கட்டுப்படாதவர்கள். முதலாம் எட்வர்டு காலத்திற்குள் முறை நடத்துபவர்கள் நீதித்துறை அதிகாரம் தவிர, மற்ற அரசியல் அதிகாரங்களை எல்லாம் இழந்துவிட்டனர். அவ்வதிகாரங்கள் நிதித் தலைவர் கைக்கு மாறின.

நிதித் தலைவர் (Chancellor) :—தொடக்கத்தில் இவர் அரசனின் தனிச் செயலாளராகப் பணியாற்றினர். அரச கட்டளை எழுதுவது, குறிப்புகள் (Minutes) எழுதுதல், எல்லாப் பத்திரங்களிலும் அரச முத்திரையிடுதல் முதலியவை அவரின் அலுவல்கள். அநேகமாக மதக் குருக்களே இப்பதவிக்கு நியமிக்கப் பட்டனர். நாளடைவில் நிதித் தலைவர் மிக முக்கியமான அதிகாரியாக மாறினர். அரசனது கடிதப் போக்கு வரவு அவரது பொறுப்பிலிருந்ததால், அரசனிடம் அவருக்குச் செல்வாக்கு அதிகமாக இருந்தது. பதின்மூன்றும் நூற்றாண்டில் அவர் முறை நடத்துபவர் வகித்துவந்த முதல் அமைச்சரின் பதவியைப் பெற்றார்.

பொருளாளர் அரசனின் கருவூலக் காப்பாளராக விளங்கினர். அதை மேற்பார்வையிட நியமிக்கப்பட்டிருந்த அலுவலர்களுக்கு அவரே தலைவராக இருந்தார்.

அரச அவையானது அறிவுரையாற்றல், நிதி, நீதி ஆகிய மூன்று அலுவல்களை ஆற்றி வந்தது. அரசன் நாட்டில் சுற்றுப் பயணம் செய்யும்போது அவையும் அவனுடனே சென்றது. நிதி அலுவலர்கள் சம்பந்தப்பட்ட வரையில் அதன் தலைமையகம் வெஸ்ட்மின்ஸ்டரில் இருந்தது.

நீதி முறை

"கியூரியா ரேஜிஸ்", மேல் வழக்குகளுக்கெல்லாம் மேலான நீதிமன்றமாக இருந்தது. அரசனுக்கும் அவனது தலைமைக் குத்தகைக் குடிகளுக்கும் இடையே ஏற்படும் தகராறுகள், மக்களது நீதிமன்றங்களிலிருந்து தொடரப்பட்ட மேல் வழக்குகள், கீழ் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படாமல் அரசனது ஆணையினால் கொண்டுவரப்பட்ட சிறந்த வழக்குகள், இதுவரை நிகழாத புதிய வழக்குகள் முதலியவை அரச அவையின் முன் விசாரிக்கப் பட்டன. நாளடைவில் அது தனது உறுப்பினர்களைக் கொண்ட சிறு குழுக்களை அமைத்து நீதி வழங்கியது. இவை பிறகு புதிய நீதிமன்றங்களாக மாறின. அவற்றுள் முதலாவது சுற்றுப்பயண நீதிபதிகளின் மன்றங்கள். இம்முறை முதலாவது ஹென்றி மன்னனால் தொடங்கப்பெற்று இரண்டாம் ஹென்றியினால் நிலையாக நிறுவப்பட்டது. இம்முறையின்படி "கியூரியா ரேஜிஸ்"ன் உறுப்

பினர்கள் சிலர் மாவட்டங்களுக்குச் சென்று அங்கு வழக்குகளை விசாரித்து நீதி வழங்கினர்கள்.

இரண்டாம் ஹென்றியின் காலத்தில் அரசவையின் நீதி மன்றம் (Court of the King's Bench) ஏற்படுத்தப்பட்டது. இதில் அரசனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து கியூரியா ரேஜினின் உறுப் பினர்கள் இருந்தனர். இக்குழு அரசன் சம்பந்தப்பட்ட வழக்கு களை விசாரித்தது. நிதித்துறையைச் சார்ந்த வழக்குகளை, அதா வது வருவாய், வரி முதலியவற்றைப்பற்றிய வழக்குகளை விசாரிக் கும்போது, அது கருவூல நீதி மன்றம் (Court of the Exchequer) என அழைக்கப்பட்டது. இறுதியாக, பெரிய சாசனத்தின்படி (Magna Carta), சுற்றுப்பயண கியூரியாவின் மற்ற நீதி அதிகாரங் கள் எல்லாம் அதனின்று எடுக்கப்பட்டுப் பொது வழக்கு நீதி மன்றம் (Court of Common Pleas) என்ற நிறுவனத்திடம் ஒப் படைக்கப்பட்டன. இதன் அலுவல் குடிகள் சம்பந்தப்பட்ட சாதாரண வழக்குகளை விசாரித்தல்.

இவ்வாருகப் பல துறைகளில் அதிகாரம் செலுத்திய அரசவை முழுவதும் அரசனால் தெரிந்தெடுக்கப்பட்டு அவனது முழு அதிகாரத்துக்குட்பட்டிருந்ததால், சாதாரண காலத்தில் ஆட்சி முழுவதும் அரசனின் கட்டுக்கடங்கி இருந்தது. நெருக் கடியான நிலையில் அரசன் பெரிய அவையைக் கலந்தாய்வான். அரச பதவிப் போட்டி, போர், பளுவான வரி விதித்தல் முதலிய வற்றில் பொது அவைக்கு அதிகாரம் இருந்ததால், இங்கிலாந்தில் வரம்பில்லா முடியாட்சி ஏற்பட வழியில்லாமல் போயிற்று.

வட்டார ஆட்சி

வட்டார ஆட்சியில் நடுவிடம் பெற்றவர் "ஷெரிப்" (Sheriff) என்ற வட்டாரத் தலைவர். அவர் அரசனையும் நாட்டையும் இணைக்கும் தொடர்பாக விளங்கினர். அவர் மூலமாகவே அரச ரின் ஆணை வட்டாரங்களுக்கு எட்டியது. அரசரின் பண்ணைகளை மேற்பார்வையிட்டு, அவற்றினின்று அரசனுக்குச் சேரவேண்டிய வருவாய்களை வசூலிப்பதே ஷெரிப்பின் முக்கியப் பொறுப்பு. அரச ரின் கோட்டைகளைக் கண்காணித்து வருவதும் அவரது வேலை. நிலவரி, நீதி மன்ற ஆதாயம், நிலமானிய வரிகள் முதலியவற்றை ஷெரிப் திரட்டவேண்டும். ஆண்டிற்கு இருமுறை அவர் கரு வூல நீதி மன்றத்தின் முன் சென்று தம் கணக்குகளின் விவ ரங்களைக் காட்டவேண்டும். நிதித்துறை அலுவல்கள் தவிர படைத்துறைப் பணிகளும் ஷெரிப் ஆற்றவேண்டும். குறுகிய காலத்திற்கு அல்லது அண்மையிலுள்ள இடங்களுக்குச் செலுத் தப்படும் நாட்டுப் படைகளை நடத்தும் பொறுப்பு ஷெரிப்பு களுக்கு வழங்கப்பட்டது. பதினன்காம் நூற்றாண்டில் இவ்வதி

காரம் நடைமுறையில் ஷெரிப்களிடமிருந்து எடுக்கப்பட்டு விட்டது. மேலே கூறப்பட்ட ஆட்சித் துறையின் எல்லா உயர் அதிகாரிகளும் அரசனால் நியமிக்கப்பட்டவர்கள்; மக்களின் பிரதிநிதிகள் அல்லர். ஆனால், கீழே செல்லச்செல்ல பழைய பிரதி நித்துவ முறை பயன்படுத்தப்பட்டதைக் காணலாம். சான்றாக, நூற்றுவர் நீதிமன்றம் (The Hundred Court), ஷயர் நீதி மன்றம் (Shire Court) ஆகியவற்றைக் கூறலாம். ஷெரிப் ஆண்டுக்கு இருமுறை கூட்டிய நூற்றுவர் நீதி மன்றத்திற்கு நூற்றுவர் கூட்டத்தின் எல்லோரும் வரவேண்டும். அது மக்களிடையே அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் ஒரு காவலர் நிறுவனம் போன்றிருந்தது. ஷயர் நீதிமன்றம் உண்மையிலேயே மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாக விளங்கியது. எல்லா நிலச் சொந்தக்காரர்களும், அவர்களின் கண்காணிகளும், ஒவ்வொரு நகரத்திலிருந்தும் அனுப்பப்பட்ட நான்கு பிரதிநிதிகளும் ஷயர் நீதிமன்றத்தில் பங்கு பெற்றனர். நாளடைவில் ஷயர் நீதிமன்றங் களிலிருந்து பெரிய அவைக்குப் பிரதிநிதிகள் அனுப்பும் வழக்கம் ஏற்பட்டது. பன்னிரண்டாம் நூற்றாண்டிலும், பதின்மூன்றும் நூற்றாண்டிலும் ஷயர் நீதிமன்றங்களின் நீதித்துறை அலுவல்கள் சுற்றுப்பயண நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டன. ஆனால் இதனால் ஷயர் நீதி மன்றங்கள் கலைக்கப்படவில்லை. அதற்கு மாறாக, ஷயர் நீதிமன்றங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சான்றாளர் குழு தான் குற்றஞ் சாட்டப்பட்டவர்களைச் சுற்றுப்பயண நீதிபதி களின் முன் கொண்டுவந்தது. மேலும், அதன் இன்னொரு குழு வழக்கின் உண்மையைத் தீர்மானிக்கும் பொறுப்பிலும் பங்கு பெற்றது. இவ்வாறாக, ஷயர் நீதிமன்றம் அரசாங்க நீதிபதிகள் தவறான முறையில் நீதி வழங்காதவாறு தடுத்து வந்தது. இறுதி யாக, நகரங்களைப்பற்றிச் சிறிது கூற வேண்டும். நார்மானியப் படையெழுச்சிக்குப் பிறகு நகரங்கள் ஒரு குறிப்பிட்ட வரியை அரசனுக்குச் செலுத்தின. அதை ஷெரிப்பின் மூலமாகச் செலுத்தவேண்டும். நீதி வழங்குவதற்காக நூற்றுவர் நீதி மன்றம் போன்று ஒரு நீதி மன்றம் நகரத்திலுமிருந்தது. நாளடை வில் நகரங்கள் ஷெரிப்பின் அதிகாரத்தை வெறுக்கத் தலைப் பட்டன. ஆகவே, பன்னிரண்டாம் நூற்றாண்டில் அவைகளே வரி வசூலிக்கும் பொறுப்பை அரசனிடமிருந்து சாசனம் மூலம் பெற்றன. மேலும், அரசனுடன் ஏற்பட்ட தகராறுகளை ஆய்ந்து முடிவுக்கு வர அவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட நிறுவனங் களை ஏற்படுத்திக்கொண்டன. இந்த நிறுவனங்கள் "கம்யூன்" (Communa) என்றழைக்கப்பட்டன. பதின்மூன்றும் நூற்றாண் டில் இந்நகரங்கள் மற்ற நிலமானியத் தொகுதிகளுக்கு இணை யாகப் பாராளுமன்றத்திற்குப் பிரதிநிதிகள் அனுப்பும் உரிமை

யைப் பெற்று வளர்ந்தன. இந்த வளர்ச்சியைப்பற்றி பின்னேர் இயலில் பார்ப்போம்.

---

4. திருச்சபையும் இடைக்கால ஆட்சியமைப்பும்

இடைக்கால ஐரோப்பாவை உருவாக்கிய சக்திகளிலே கத் தோலிக்கத் திருச்சபை (Catholic Church) முதன்மையானது. கி.பி. மூன்றும் நூற்றாண்டில் ரோமானியப் பேரரசு கிழக்கு, மேற்கு என்று இரு கூறுகளாகப் பிளக்கப்பட்டபோது, அரசின் பிடி தளர்ந்து, மதமே வாழ்க்கையின் அடித்தளமாக மாறியது. அடுத்த ஆயிரம் ஆண்டுகளாக, கி.பி. 1300 வரை, அ·தாவது எட்டாவது போனி·பாஸ் (Boniface VIII) என்ற போப்பாண்டவரின் காலத் தில் இடைக்காலத் திருச்சபை தள்ளாடத் தொடங்கியது வரை, மதம் என்ற அடிப்படையிலே மனித நிறுவனங்கள் எழுப்பப் பட்டன. மனித சமூகமே சமயக் கொள்கைகளால் உந்தப்பட்டு வந்தது. அப்போது ஐரோப்பாவில் மிலேச்சர்களின் அரசுகள் இருந்தன; பேரரசின் அடையாளமும் இருந்தது; ஆயினும் திருச்சபையே முக்கியமானதாகக் கருதப்பட்டது. அது மட்டும் எல்லாவற்றிற்கும் பொதுவானதாக விளங்கியது. இறைவனின் அருளால் அரசர்களாகப் பதவியேற்றவர்கள் உண்மையில் திருச்சபையின் அருளாலே அரியணையமர்ந்தனர். ஐரோப்பா வினிலே அரசியல் குலவின் அடையாளங்கள் தோன்றியபோது, அதை ஒன்றுக இணைத்து வைத்த பெருமை திருச்சபையைச் சாரும். சிதைந்துகொண்டிருந்த பேரரசை, உலகச் சமயமாகிக் கொண்டிருந்த திருச்சபை மத ஒற்றுமையினால் பிணைத்து வைத்தது. அரசியல் ஒற்றுமையினால் இணைந்து நிற்கப் பேரரசு முயன்றிருக்குமானால், அது விரைவில் கரைந்து போயிருக்கும். இதையுணர்ந்த பேரரசர்கள் தாங்கள் கிறித்துவ சமூகம் என்ற புதிய பேரரசிலே உலகக் காரியங்களைக் கவனிக்கக் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என ஒத்துக்கொண்டனர். கி.பி. 312 இல் கான்ஸ்டன்டைன் (Constantine) என்ற மன்னர் கிறித்துவராக மாறிய நாள் முதல் ஆயிரமாண்டளவாக இதுவே ஐரோப்பிய வரலாற்றின் அடிப்படையாக இருந்தது.

இவ்வாருகச் சமூக, அரசியல் துறைகளிலே செல்வாக்குப் பெற்றிருந்த திருச்சபை நாளடைவில் பேரரசுக்குரிய நிறுவன அமைப்பைப் பெற்றது. தொலைவிலுள்ள கான்ஸ்டான்டிநோப் பிளில் பேரரசர் இருந்ததால், ரோம் நகரிலிருந்து போப்பாண்ட வரே ஐரோப்பாவின் அரசியல் செயல்களில் பெருஞ்செல்வாக்குப்

பெற்றார். அவர் மதக் கொள்கைகளில் தலைவராக இருந்தது போல, அரசியல் செயல்களிலும் வழிகாட்டியாக விளங்கினர்.

துவக்கத்தில் மிலேச்சர்களின் அரசுகள் நிலவிய காலத்தில் திருச்சபை சமயத்துறையில் மட்டும் அக்கறை செலுத்தியது. இக்காலத்தில் இணையதிகாரக் கொள்கை (Theory of Parallelism) கடைப்பிடிக்கப்பட்டது. அதன்படி சமூகம் ஒன்றாக இருந்த போதிலும், ஆன்மிக, உலகியல் என்ற தனித்தனி அதிகாரங்களுடைய இரு அரசாங்கங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று காண்ஸ்டான்டிநோப்பிளிலுள்ள பேரரசருடையது; மற்றொன்று ரோம் நகரிலுள்ள போப்பாண்டவருடையது. கி. பி. 800-இல் சார்லமேன் (Charlemagne) அல்லது மகா சார்ல்ஸ் மன்னர் முடிசூட்டப்பட்டதும், அரசரது உறைவிடம் ஐ-லா-ஷப்பெல் (Aix-La-Chapelle) என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது. ஆனால், இரு அதிகாரங்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு ஏழாம் கிரகோரி (Gregory VII) என்ற போப்பாண்டவர் காலம் வரை மாறவேயில்லை. ஏழாம் கிரகோரியின் காலமுதல் திருச்சபை தனது அதிகாரத்தை அரசியல் காரியங்களிலும் செலுத்தத் தொடங்கியது. எங்கும் பரவியிருந்த திருச்சபை மனித வாழ்க்கை முழுவதையும் கட்டுப்படுத்த முயன்றது. தன் செயல்களினால் எல்லாவற்றையும் தன்னுள் அடக்க முயன்றது. மிலேச்சர்கள் காலத்தில் சிதறிக் காணப்பட்ட சமூகம் இப்போது ஒன்றுகி நின்றது. வாணிகம் மேற்கு ஐரோப்பாவை முழுதும் ஒன்றுகச் சேர்த்துக்கொண்டிருந்தது. சிலுவைப் போர்கள் ஒற்றுமையை உருவாக்கிக்கொண்டிருந்தன. இதைப் பயன்படுத்திக்கொண்டு திருச்சபையானது கிறித்துவ மதக் கோட்பாடுகளின் அடிப்படையில் கிறித்துவப் பொது நலக் கூட்டு (Christian Commonwealth) ஒன்றை ஏற்படுத்த முயன்றது. அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வி முதலிய எல்லாத் துறைகளிலும் திருச்சபையின் செல்வாக்கு வளர்ந்தது. அரசர்களையும் அவர்களின் அரசாங்கங்களையும் அது கட்டுப்படுத்தியது. திருமணம் சம்பந்தமான திருச்சபை விதிகள் (Canon Law), அதன் கழுவாய் முறை (Penitentiary System) முதலியவை தனிமனிதனுடையவும் குடும்பங்களுடையவும் சமூக வாழ்வை ஒழுங்குபடுத்தின. திருச்சபை விலையுயர்வையும், கடும் வட்டியையும் (Usury) தடுத்துப் பல பல்கலைக் கழகங்களை நிறுவி, உயர் கல்வியை மக்களுக்களித்து வந்தது. இவ்வாறாக, ஏழாம் கிரகோரிப் போப்பாண்டவரின் காலத்திலும், அவருக்குப் பிறகு வந்தவர்களின் காலத்திலும் திருச்சபையின் செல்வாக்கு உச்சநிலையை அடைந்தது. இச் செல்வாக்குப் பல நூற்றாண்டுகள் கழித்து எட்டாம் போனிபாஸ் என்ற போப்பாண்டவர் காலத்தில்தான் குறையத்

தொடங்கியது. இதன் காரணங்களை மற்றோர் இடத்தில் கூறுவோம்.

ஆயிரம் ஆண்டுகளாக உலக காரியங்களில் திருச்சபைக்கு அதிகாரம் இருந்ததின் முக்கிய காரணங்கள் போப்பின் ஆட்சியும், மடாலய முறையும் (Monastic System) எனக் கூறலாம். ஆன்மிகத் துறையிலும் போப்பாண்டவருக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. திருச்சபையின் அதிகாரம் எங்கும் ஏற்றுக்கொள்ளப் பட்டதால், கிறித்துவ மதக் கோட்பாடுகளைப்பற்றிய கருத்து வேற்றுமைகள் எல்லாம் போப்பாண்டவராலே தீர்த்துவைக்கப் பட்டன. அவர் ரோம் நகரைப் பாதுகாப்பவராகவும், அரசர்கள், பேரரசர்கள் வழங்கிய நிலப்பகுதிகளை ஆளும் அரசராகவும் திகழ்ந்தார். நகரங்கள், நாடுகள், அரசர்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளில் அவரே நடுவராக இருந்தார். சமயப் பிளவுக்குப் (Schism) பிறகு கிழக்கு ஐரோப்பாவில் அவரது செல்வாக்குத் தேய்ந்தபோதிலும், மேற்கில் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போயிற்று. ஏனெனில், அங்குள்ள மடாலயங்கள் அவரிடம் உண்மையான பற்றுடன் இருந்தன.

பல எதிர்ப்புகளிடையே திருச்சபை விரைவாகப் பரவி வரும் போது, மிலேச்சர்களின் தீச்செயல்களைத் தடுப்பதற்கும். அவற்றின் விளைவாக ஏற்படும் சமூக அரிப்பைத் தடை செய்வதற்கும், நற்செயல்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கக்கூடிய நன்மக்கள் தேவையாக இருந்தனர். இக்காரியத்தில் மடாலயங்கள் பெருந்துணை செய்தன. தன்னடக்கத்தினால் நன்னெறி பிறழாது தன்னலந் துறந்த பல தூய துறவிகளை மடாலயங்கள் தோற்றுவித்தன. மிலேச்சர்கள் படையெடுத்த இடங்களிலெல்லாம் இத்துறவிகள் சென்று படையெடுப்பின் காரணமாக விளைந்த துயர்களை எல்லாம் களைந்தனர். கட்டு மீறிய ஒழுங்கீனம் எங்கும் பரவியிருந்தபோதிலும், உயர் குறிக்கோள்களைத் தேடி ஏங்கிக் கொண்டிருந்த நன்மக்களுக்கு இத் துறவிகள் கற்பு, தூய்மை இவற்றின் பெருமையையும், உயர் நிலைமையையும் எடுத்துரைத்தனர். பொருளாசை மிகுந்திருந்த அந்நாளில் இவர்கள் உலக உடைமைகளின் பயனற்ற தன்மையையும், எளிமையின் மேன்மையையும் போதித்தார்கள். கி. பி. 480 முதல் 543 வரை வாழ்ந்த புனித பெனடிக்ட் என்பார் மடாலய முறைக்கு ஒரு புதிய உருவளித்தார். இதுதான் பிறகு ஐரோப்பிய வரலாற்றில் பெரும் சக்தியாக விளங்கியது. இவரது முறையின்படி மடாலயங்களில் வாழ்ந்த துறவிகள் கற்பு, கீழ்ப்படிதல், எளிமை என்ற மூன்று வாக்குறுதிகள் அளித்தனர். முற்காலத் துறவிகளைப்போல நாள் முழுவதும் ஆன்மிகச் சிந்தனையில் ஆழ்ந்திராமல், தமது காலத்தைக் கடின உழைப்பு,

படிப்பு, வழிபாடு முதலியவற்றில் செலவழித்தனர். மடத்திலுள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து, தனிமனிதர்கள் போலல்லாமல், ஒரு சமூகமாக இணைந்து உழைத்து வந்தனர். இவர்களது முறையைப் பின்பற்றி "குளுனியாக்" (Cluniac), ஸிஸ்டர்ஸியன் (Cistercian) என்ற முறைகள் முறையே பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிலும், பிரான்ஸிஸ்கன் (Franciscan), டொமினிக்கன் (Dominican) என்ற இரந்து வாழும் துறவுக் குழுக்கள் (Mendicant Orders) பதின்மூன்றும் நூற்றாண்டிலும் ஏற்படுத்தப் பட்டன.

இந்த மடாலய முறைகள் சமூகத்திற்கு ஆற்றிய அருந்தொண்டுகள் மிகப் பல. அவை மக்களின் மதப்பற்றை வளர்த்து, அவர்களுக்குப் புத்துயிரளித்துச் சமூகப் பிணைப்புகளைப் பலப் படுத்தின. அவர்களுடைய மடங்களிலே மதிப்புத்தரம், செல்வம், இனம் முதலிய வேறுபாடின்றித் துறவிகள் அனைவரும் இணையாகக் கருதப்பட்டனர். பெண்களுக்கும் உயர் பதவிகள் கொடுக்கப் பட்டதால், அவர்களது மதிப்பு உயர்ந்தது. அவர்களது முயற்சியினால் பயிர்த்தொழிலும், கைத்தொழிலும் வளர்ச்சியடைந்ததுடன், கடின உழைப்பை மக்கள் மதிக்கத் தொடங்கினர். மிலேச்சர்களைக் கிறித்துவ மறையில் சேர்த்த புனித அகஸ்டின், புனித போனிஃபாஸ் போன்ற பெரும் சமயப் போதகர்களுக்கு இம் மடங்கள் பயிற்சிக் கூடமாகவும் திகழ்ந்தன. துறவிகளது நிலையங்களிலே சிறந்த கையெழுத்து நூற்கள் சேர்த்துவைக்கப்பட்டிருந்தன. மடத்துறவிகள் பலர் நூற்களைப் பார்த்து எழுதிப் பல புதிய படிகளைத் தயாரித்தனர். அவர்கள் பல பழங்கால நூற்களை மொழி பெயர்த்துத் தற்கால உலகிற்கு வழங்கியதுடன், தமது காலத்திய நிகழ்ச்சிகளை முறையாக எழுதியும் வைத்தனர். ஆகவே, மடாலயங்கள் பல நூற்றாண்டுகளாக ஐரோப்பாவின் அறிவுக் கூடங்களாக மிளிர்ந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக, மடத்துறவிகள் போப்பாண்டவரிடம் அழியாத பற்றுக்கொண்டு அவருக்குப் பணிந்து அவரது ஆட்சியை நிலைநிறுத்தி வந்தார்கள்.

இவ்வாறுகப் பதின்மூன்றும் நூற்றாண்டிற்குள் இடைக்கால ஆட்சியில் திருச்சபையின் செல்வாக்கு வளர்ந்தோங்கி நின்றது. சமூகத்தில் ஒரே விதமான ஆட்சி முறை காணப்பட்டதுடன், போப்பாண்டவரின் மேலதிகாரமும் உச்ச நிலையிலிருந்தது. இத்தகைய அமைப்பின் திட்டத்தை உருவாக்கிய பெருமை ஏழாம் கிரகோரிப் போப்பாண்டவரைச் சாரும். அதைக் கண்ணயராது வளர்த்த மேன்மை மடாலயங்களைச் சாரும்.

---

5. நிலமானிய முறை

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் முடிவில் (476) நிகழ்ந்த மேற்கு ரோமானியப் பேரரசின் வீழ்ச்சியையும் அதன் காரணங்களையும்பற்றி முன்பு கூறினேம். அதன் பிறகு சுமார் பதினெரு நூற்றாண்டுகள் வரை, அஃதாவது பதினெரும் நூற்றாண்டின் தொடக்கத்தில் தேசீய அடிப்படையில் வரம்பில்லா முடியாட்சிகள் (Absolute Monarchies) தோன்றிய காலம் வரை, மேற்கு ஐரோப்பா சிதைந்த நிலையில் இருந்தது. வன்மை மிக்க ரோமானியப் பேரரசு அழிந்த பிறகு அது இருந்த இடத்தை நிரப்பத் தகுதியுள்ள ஓர் அரசோ, அல்லது ஒரு திட்டமோ ஏற்பட வழியில்லாமல் இருந்தது. அவ்வாறான நடுநாயகமான அரசை ஏற்படுத்தச் சில முயற்சிகள் செய்யப்பட்டன என்பது உண்மை. முக்கியமாக மெரோவிஞ்சிய, கரோலிஞ்சிய மரபுகளைச் சேர்ந்த சில அரசர்கள் மேற்கு ஐரோப்பாவை ஒன்றுபடுத்த முயன்றனர். குளோவிஸ் (Clovis), சார்லமேன் (Charlemagne) போன்ற சில அரசர்கள் தம் முயற்சியில் சிறிது வெற்றியும் கண்டனர். ஆனால் அவர்கள் கண்ட வெற்றி நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை. ஏனெனில், மெரோவிஞ்சியர்கள் வழக்கப்படி, ஓர் அரசனின் ஆட்சி நிலம் அவன் வாழ்நாளுக்குப் பிறகு அவன் மக்களுக்குச் சமமாகப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. கரோலிஞ்சியர்களுக்குள் இந்த வழக்கம் இல்லாவிட்டாலும், சார்லமேன் ஏற்படுத்திய பேரரசு நீடிக்கவில்லை. ஏனெனில், அவருக்குப் பின் வந்த அரசர்கள் வன்மையற்றவர்களாக இருந்தனர். ஒரு பேரரசைக் கட்டியாளும் திறன் அவர்களிடம் இல்லை. மேலும், ஃபிராங்கு மரபினர் அமைத்த அரசியல், அரசனை மையமாகக் கொண்டிருந்தது. தன்னால் இயங்கக் கூடிய ஓர் அரசியல் அமைப்பை அவர்கள் நிறுவவில்லை. நாட்டின் வலிமையும் ஒற்றுமையும் அரசனுடைய வலிமையையும் திறனையும் சார்ந்திருந்தன. ஆகவே, அவ்வப்போது சில கரோலிஞ்சியர்களின் முயற்சியின் பயனாக ஐரோப்பாவில் ஒற்றுமை ஏற்படுத்தப்பட்டபோதிலும், இந்த நீண்ட காலத்தை முழுவதும் பார்க்கும்போது ஐரோப்பாவில் யாங்கணும் ஓர் உறுதியற்ற நிலையையே காண்கிறோம். இந்நிலையில், ஐரோப்பிய வரலாற்றில் இரண்டாவது முறையாக மேற்கு ஐரோப்பாவை மிலேச்சர்கள், முக்கியமாக வடக்கு நாட்டாரும் (Northmen), ஹங்கேரியர்களும் (Hungarians) தாக்கினர். சார்லமேனுக்குப் பிறகு வந்த அரசர்களால் இந்தத் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியவில்லை. ஆகவே கி. பி. பதினென்று, பன்னிரண்டு, பதின்மூன்றும் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவின் அரசி

யல் நிலை முற்றிலும் குலைந்தது. பெயரளவில் இருந்த அரசர்களும், அவர்களுடைய அலுவலர்களும் மக்களின் மதிப்பையும் கீழ்ப்படிதலையும் பெற முடியவில்லை. திருச்சபையும் இக்காலத்தில் மக்களை ஒன்றுபடுத்தும் முயற்சியில் தோல்வியடைந்தது. மனித வாழ்க்கையே இடர்களுக்குள்ளாயிருந்த காலத்தில் திருச்சபையின் போதனைகள் மக்கள் செவிகளுக்கு எட்டவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இந்தக் காலத்தில் ஒரு பொதுவான குடிமையுணர்ச்சியோ, அல்லது அதன் அடிப்படையில் ஒன்றிய வாழ்க்கை நடத்தவேண்டும் என்ற ஒரு விழைவோ மக்களிடையே அறவே இல்லாமல் போயிற்று. இவ்வாறான சூழ்நிலையிலும் சமுதாயம் சீர்குலையாமல் இருக்கக் காரணமாக இருந்தது நிலமானிய முறை (Feudalism) தான். அதுவே அரசியலில் சீர்குலைவு ஏற்பட்டிருந்த இந்த நீண்ட காலத்தில் ஆட்சி குலைந்த நிலை (Anarchy) ஏற்படாமல் தடுத்தது. அக்காலத்தில் சமூகத்தைச் சிதைவுறாமல் காத்து, அதில் ஒன்றுபட்ட தொடர்புகளை ஒழுங்குபடுத்திய பெருமை நிலமானிய முறையைச் சாரும். நில உரிமை அடிப்படையில் ஏற்பட்ட இந்த நிலமானிய முறையே, புகழ் வாய்ந்த கிரேக்க - ரோமானிய காலத்திற்கும் தற்காலத்திற்கும் இடையே ஓர் இணைப்பாக அமைந்துள்ளது. ஆகவேதான் அரசாங்கத்தின் வரலாற்றில் நிலமானிய முறை ஒரு முக்கிய இடம் பெறுகிறது.

தோற்றம்

நில உரிமை முறையை (Land Tenure) அடிப்படையாகக் கொண்ட ஒன்றித்த ஒப்பந்தங்களினால் சீரமைக்கப்பட்ட சமுதாயமே நிலமானியச் சமுதாயம் எனப்படுகிறது. அத்தகைய சமுதாயத்தில் அரசன் முதல் சாதாரண நில உரிமையாளன் வரை எல்லோரும் ஒருவருக்கொருவர் ஒப்பந்தங்களினால் பிணைக்கப்படுகிறார்கள். இந்த ஒப்பந்தங்களின்படி ஒவ்வொரு நிலப் பெருமகனும் தனக்குக் கீழுள்ள கீழாட்களுக்குப் (Vassals) பாதுகாப்பு அளிப்பதாக வாக்களிக்கிறான். இதற்குப் பதிலாக அந்தக் கீழாட்கள் தங்கள் நில உரிமையாளர்களுக்குச் சில பணிகள் புரிவதாக வாக்களிக்கின்றனர். இவ்வாறுச் சமூகம் சீரமைக்கப்பட்டதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம். முதலாவதாக, இடைக்காலத்தில் (Middle Ages) அரசியல் சீர்குலைவு ஏற்படவே, மக்கள் தங்கள் உயிரையும் உடைமைகளையும் பாதுகாப்பதற்காக, நில உரிமையினால் உயர்ந்த பெருமக்களிடம் சரண் புகுந்தனர். ஆகவே, ஒரு பொதுவான குடிமைப் பிணைப்பு இல்லாவிடத்தும், தனிப்பட்ட மனிதர்களுக்கிடையே ஒன்றித்த பிணைப்புகள் பல ஏற்பட்டன. இரண்டாவதாக, இடைக்காலத்தில் ஐரோப்பா முழுவதும் பரவியிருந்த ட்யூட்டானிய சமுதாயத்தில் நில உரிமை

தான் குடிமையின் அடிப்படையாக இருந்தது. நிலமில்லாத ஒருவன் குடிமையும், சமூகத்தில் நல்ல நிலையும் பெறவேண்டுமானால் அவன் ஒரு நிலப் பெருமகனுக்குக் கீழாளாகி அவனுடைய பாதுகாப்பைப் பெறவேண்டும். சுருங்கக் கூறினால், ஒரு மனிதனுக்கு நிலத்துடன் இருந்த தொடர்புதான் அவனுடைய சமூக, அரசியல் தொடர்புகளையும் நிர்ணயித்தது. மேற்கூறிய இரண்டு வழக்கங்களும் ஒன்றித்தபோது, நிலமானிய முறை முழுமை பெற்றது. அரசியல் குழப்பத்தினால் உந்தப்பட்ட ஒன்றுபட்ட ஒப்பந்தங்கள் நில உரிமை முறையை அடிப்படையாகப் பெற்று, நிரந்தரமாக்கப் பட்டபோது நிலமானிய முறை பிறந்தது. இதற்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றின் வரலாற்றிலிருந்தும் ஆதாரங்கள் காட்டலாம். உதாரணமாக, ஃபிராங்கு மக்களிடையே எளியோர் வலியோரைச் சார்ந்து, தங்களையும் தங்கள் நிலங்களையும் அவர்களிடம் ஒப்படைத்து அதற்குப் பதிலாகக் காவல் துணையைப் பெறும் வழக்கம் (Commendation) இருந்தது. அதே போல் ஜெர்மானியர்களுக்குள்ளும் நிலத்தினடிப்படையில் ஒன்றித்த பிணைப்புகள் (Comitatus or Companionship) ஏற்பட்டன. இது போன்ற வழக்கங்களே நிலமானிய முறை தோன்றி வளர அடிகோலின.

இவ்வாருகத் தோன்றிய நிலமானிய முறை நாளடைவில் ஓர் அரசியல் முறையாகவும் மாறிற்று. அஃதாவது, நிலப் பிரபுக்கள் தங்கள் கீழாட்களின்மேல் நிலச் சம்பந்தமான அதிகாரங்களுடன் அரசியல் அதிகாரங்களையும் செலுத்தலாயினர். இந்த வழக்கத்தை முதலில் மத அதிகாரிகள் ஃபிராங்கு மக்களிடையே தொடங்கினர். ஏனைய பிரபுக்கள் படிப்படியாக அவர்களைப் பின் பற்றினர். இந்த வழக்கம் வேரூன்றிய பிறகு, அரசனுக்கும் குடிமக்களுக்கும் நேரிடையான தொடர்பு ஒன்றும் இல்லாமல் போயிற்று. நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய நிலமானியப் பிரபுவே அரசியல் அதிகாரியுமாக இருந்தார். அஃதாவது, நிலவுரிமையுடன் அரசுரிமையும் ஒன்றித்து விட்டது. நிலவுரிமைக் கடமைகளும் தனியுரிமைக் கடமைகளும் ஒன்றுயின. தனியுரிமைகளும், கடமைகளும், பொது உரிமைகளுடனும் கடமைகளுடனும் ஒன்றுபட்ட இந்த நிலையே நிலமானிய முறையின் உச்ச நிலையாகும்.

நிலமானிய முறையின் தன்மை

நிலமானிய முறைப்படி, சமூகம் ஒன்றின் கீழ் ஒன்றுக அமைந்த பல பிரிவுகளைக் கொண்டதாயிருந்தது. சமூகத்தில் வாழ்ந்த ஒவ்வொரு மனிதனும் இப்பிரிவுகளுள் ஒன்றில்

நிலையான ஓரிடம் பெற்றான். அவன் பெற்ற இடம் அவனுக்கும் நிலத்திற்கும் இருந்த தொடர்பைப் பொறுத்திருந்தது. நிலமானிய சமூகத்தின் மதிப்புத் தரத்தில் (Feudal ranks) தலைமை இடத்தைப் பெற்றவன் அரசனுவான். நாட்டின் நிலப் பரப்பு முழுவதும் அரசனுக்கே சொந்தமென்று கருதப்பட்டது. அவனே நாட்டின் தலையான நிலப்பிரபு. அரசனை அடுத்துப் பல தலைமைக் குத்தகைக் குடிகள் (Tenants-in-chief) இருந்தனர். இவர்களில் சிலர் மேற்றிராணியார்களும் (Bishops) மடத் தலைவர் களும் (Abbots) ஆவார். மற்றவர்கள் கோமக்கள் (Dukes) எனவும், நிலப் பிரபுக்கள் (Barons) எனவும் அழைக்கப்பட்டனர். இந்தத் தலைமைக் குத்தகைக் குடிகள் அரசனுக்குச் சொந்தமான நிலத்தைக் குத்தகையாகப் பெற்றிருந்தனர். அதற்குப் பதிலாக இவர்கள் அரசனுக்குச் சில குறிப்பிட்ட பணிகள் புரியக் கடமைப் பட்டிருந்தனர். இப்பணிகளில் முதன்மையானது போர்ப்பணி. போர்க் காலத்தில் ஒவ்வொரு தலைமைக் குத்தகையாளனும் வீரர்கள் (Knights) கொண்ட ஓரு சிறு போர்ப்படையை அரச னுக்கு அளிக்கவேண்டும். இந்தப் படையின் எண்ணிக்கை நிலப் பிரபுவின் நிலைக்கேற்பக் குறிப்பிடப்பட்டிருந்தது. படையின் செலவுகளை நிலப்பிரபுவே ஏற்கவேண்டும். போர்ப் பணியைத் தவிரக் குத்தகைக் குடிகள் அரசனுக்கு வேறு வழிகளிலும் கடமைப் பட்டிருந்தனர். அரசனின் கீழாட்கள் பொதுவான நிலமானிய அலுவல்கள் அனைத்தையும் செய்ய வேண்டும். இவற்றுள் குறிப் பிடத் தக்கவை, அரசனின் அறிவுரை அவைக்குக் குறிப்பிட்ட காலங்களில் சென்று பணிபுரிதல், அரசனின் நீதிமன்றத்தில் வேண்டிய போதெல்லாம் கணிப்பாளர்களாகவோ (Assessors), நீதி வழங்குபவர்களாகவோ செயலாற்றுதல் முதலியவை. இவை தவிரச் சில வரிகளையும் அரசனின் கீழாட்கள் அவனுக்குச் செலுத்தக் கடமைப்பட்டிருந்தனர். உதாரணமாக, மானியமானது மரபு முறைப்படி கைமாறும் போது, மரபுரிமையாளராக (Heir) மானியத்தை அடைபவர் அரசனுக்கு "விடுதலைப் பணம்" (Relief) கட்டுதல் வேண்டும். விடுதலைப் பணத்தைத் தவிர, உதவித் தொகைகளும் (Aids) கீழாள் அரசனுக்குக் கொடுக்கவேண்டும். இத்தொகைகள், அரசன் சில நிகழ்ச்சிகளை யொட்டித் தனிப்பட்ட செலவுகளை ஏற்க நேர்ந்தபோது கொடுக்கப்பட்டன. இங்கி லாந்தில் இத்தொகைகள் அரசனின் மூத்த மகன் வீரப்பட்டம் பெறுதல், மூத்த மகளின் முதல் திருமணம், அரசன் போரில் சிறை பிடிக்கப்பட்டு மீட்சி பெறுதல் போன்ற காலங்களில் கொடுக்கப் பட்டன. மரபு வழிவராத ஒருவன் மானியம் பெறும்போது, அவன் அரசனுக்குத் தண்டனைத் தொகை (Fine) அளிக்க வேண்டும்.

தலைமைக் குத்தகைக் குடிகளுக்கு அடுத்தபடியாகப் பல கீழ்க் குத்தகைக்குடிகள் (Sub Tenants) அவர்களிடமிருந்து நிலமானியம் பெற்று வாழ்ந்தனர். அதற்கு ஈடாக அவர்கள் தம் நிலப் பிரபுக்களுக்கு, மேலே கூறப்பட்ட படைமானிய அலுவல்களைச் செய்வதாகவும், தொகைகளைச் செலுத்துவதாகவும் ஏற்றுக்கொண்டு, நிலப் பிரபுக்களுக்குக் கீழடக்கம் (Homage) காட்டிப் பற்றுறுதிமொழி (Oath of Fealty) அளித்து வாழ்ந்தனர். அஃதாவது, அரசனுக்கும் தலைமைக் குத்தகையாளருக்கும் என்ன தொடர்பு இருந்ததோ அதே தொடர்புதான் தலைமைக் குத்தகையாளருக்கும் அவர்களுடைய கீழாட்களுக்கும் இருந்தது. சமுதாயம் முழுவதும் இது போன்ற பல தரங்களாகப் பிரிக்கப்பட்டு ஒன்றோடொன்று மேற் கூறிய அடிப்படையில் பிணைக்கப்பட்டிருந்தது. இத்தரங்களில் கீழ்த்தரத்தைச் சற்றுக் கவனிப்போம். இத்தரத்தைச் சேர்ந்தவர்கள் இருவகைப்பட்டனர். முதல் வகையைச் சேர்ந்தவர்கள் நில ஊழியர் (Serfs) என அழைக்கப்பட்டனர். இவர்கள் முதலில் அடிமை நிலையிலிருந்து நாளடைவில் வழக்கத்தின் (Custom) அடிப்படையில் ஊழியர் என்ற நிலையை அடைந்தனர். இந்த மாற்றம் ஏற்பட முக்கிய காரணமாக இருந்தது திருச்சபையாகும். நிலமானியச் சட்டப்படி இவ்வூழியர்கள் அடிமை நிலையில் இருந்த போதிலும், நடைமுறையில் அவர்கள் அடிமைகளல்லர். அவர்களுக்குச் சில உடைமைகள் கொடுப்பதால் ஏற்படும் பொருளாதார நற்பயன்களை (Economic Benefits) உணர்ந்த நிலப்பிரபுக்கள் தங்களின் கீழுள்ள ஊழியரைச் சட்டப்படி நடத்தாமல், அவர்களுக்குச் சில உரிமைகளை வழங்கி வந்தனர். ஆடம்ஸ் (Adams) என்பவர் ஆங்கிலேய நில ஊழியரைப்பற்றிக் கூறுவது போல, "இடைக்காலத்திய இவ்வூழிய நிலையே, பண்டைக் காலத்திய அடிமைத் தொழிலாளியானவன் இக்காலத்திய உரிமையுடைய தனித் தொழிலாளியாக மாறுவதற்கேற்ற ஓர் இடைப்பட்ட நிலையாகும்." நிலமானிய சமூகத்தின் அடித்தளத்திலிருந்த இரண்டாவது வகையினர் உரிமையுள்ளோர் (Freemen) எனப்பட்டனர். இவர்கள் முதலில் முழு உரிமையுள்ளோராயிருந்து போர்க் காலத்தில் பாதுகாப்புக்காக நிலமானியப் பிரபுக்களிடம் தங்கள் நிலங்களுடன் சரணடைந்தவர்கள். நிலப் பிரபுக்கள் அளித்த பாதுகாப்பிற்கு ஈடாக இந்த உரிமையுள்ளோர் அவர்களுக்குச் சில பணிவிடைகள் புரிவதாக வாக்களித்தனர். நாளடைவில் இவர்கள் தம் உரிமைகள் பலவற்றை இழந்து, நிலத்தோடு பிணைக்கப்பட்டுத் தங்கள் நிலப் பிரபுவையே நம்பி வாழும் நிலையை அடைந்தனர்.

ஆகவே, நிலமானிய முறையின் முக்கிய இயல்பு சமூகம் பல தரங்களாக அல்லது தளங்களாகப் பிரிக்கப்பட்டிருத்தலே. முதல்

தளத்தில் அரசன் இருந்தான். அவன் யாருக்கும் கீழாளல்லன். அடித்தளத்தில் நில ஊழியரும், உரிமையுள்ளோரும் இருந்தனர். இவர்கள் யாருக்கும் நிலப் பிரபுக்களல்லர். இந்த இரண்டு தளங்களுக்கும் இடையே இருந்த பல தரத்தாரும் தமக்கு மேற்பட்டவர்களுக்குக் கீழாட்களாகவும், தமக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு நிலப் பிரபுக்களாகவும் இருந்தனர். இதுவே நிலமானியச் சமூகத்தின் பொருளாதாரத் தொடர்புகளின் நிலையாகும். நிலவுரிமையே (Land Tenure) இந்நிலையின் அடிப்படையாகும். நிலமானிய முறையின் இன்னொரு முக்கிய குணம் என்னவென்றால், நிலவுரிமையானது சமூகத்தில் பொருளாதாரத் தொடர்புகளுக்கு மட்டுமல்லாமல் அரசியல் தொடர்புகளுக்கும் அடிப்படையாக இருந்தது. அரசாங்கத்தின் வரலாற்றைப் படிக்கும்போது நிலமானிய முறையின் இந்த இயல்பை நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

முன் கூறப்பட்டது போல ஒரு மனிதனுக்கு நிலத்துடன் இருந்த தொடர்பு அவனுடைய அரசியல் தொடர்புகளையும் நிர்ணயித்தது. ஒருவனுடைய அரசியல் உரிமைகளும் கடமைகளும் அவன் நிலத்துடன் கொண்டிருந்த தொடர்பை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆகவே, நிலமில்லாத ஒருவன் சமூகத்திலும் அரசியலிலும் உயர்நிலையைப் பெறவேண்டுமானால், ஒரு நிலப் பிரபுவுக்குக் கீழாளாகவேண்டும். பண்டைய காலத்தில் அரசியல் சமுதாயங்களெல்லாம் ஒரு பொதுவான குடிமையின் மேலெழுந்தனவாயிருந்தன. ஆனால், இடைக்காலத்தில் பொதுக் குடிமையுணர்ச்சிக்குப் பதிலாக ஒன்றுபட்ட பிணைப்புக்களை ஆதாரமாகக்கொண்டு சமுதாயம் நிலைபெற்றிருந்தது.

நிலமானிய முறையில் நிலப் பிரபுக்கள் தம் நிலத்தில் வாழும் கீழாட்களின்மீது அரசாங்க அதிகாரங்கள் செலுத்தி வந்தனர். நிலப் பிரபுக்கள் தம் கீழாட்களைப் பொறுத்தவரை சட்டம் இயற்றுதல், சட்டங்களை நிறைவேற்றுதல், நீதி வழங்குதல் முதலிய எல்லா அரசாங்க அதிகாரங்களையும் பெற்றிருந்தனர். கி. பி. 10 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இங்கிலாந்தைத் தவிர ஐரோப்பா முழுவதும் இந்த நிலை பரவியிருந்ததைக் காணலாம். நிலப் பிரபுக்கள் பொருளாதார நிலையிலும் அரசாங்க வகையிலும் உயரிடம் பெற்றிருந்தனர். அஃதாவது, நிலமானிய முறையில் நில உரிமையோடு அரசாங்க உரிமைகளும் பிணைந்துவிட்டன என்று கூறலாம். ஆகவேதான், நிலமானிய முறையை, "நிலச் சொத்துரிமையுடன் இறைமையும் ஒன்றித்த ஓர் அமைப்பு" என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த முறைப்படி இறைமையானது மரபு வழி வரும் ஒரு குடும்பச் சொத்தாக மாறியது கவனித்தற்குரியது.

இத்தகைய அமைப்பினால் அரசியலிலும் அரசாங்கத்திலும் ஏற்பட்ட விளைவுகள் எளிதில் புலப்படும். நிலமானிய முறையின் காரணமாக ஐரோப்பாவில் ஒவ்வோர் அரசும் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்தக் கூறுகள் ஒவ்வொன்றும் ஓரளவு சுதந்திரம் பெற்றிருந்தன. ஒரு நடுநாயகமான ஒன்றுபட்ட அரசோ அல்லது வலுப்பெற்ற நடு அரசாங்கமோ ஏற்பட வழி யில்லாமல் இருந்தது. நாடு முழுவதும் ஒரே சட்டமோ, அந்தச் சட்டத்திற்கு அடிபணிதலோ இல்லாமலிருந்தது. பெயரளவில் ஒரு நடு அரசாங்கம் இருந்தபோதிலும், தனிமனிதனுக்கும் அவ் வரசாங்கத்திற்கும் நேரான தொடர்பு ஒன்றும் கிடையாது. அதற்குப் பதிலாக ஒவ்வொரு தனிமனிதனும் தன் நிலப் பிரபு விடம் பற்றுறுதி பூண்டு, அவன் அரசியல் அதிகாரத்திற்கு அடி பணிந்து வாழ்ந்த வழக்கமே சமூகத்தை ஒன்றுகூட்டி நிலைபெறச் செய்தது.

நிலமானிய முறையின் நற்பயன்கள்

கி. பி. 10, 11 ஆம் நூற்றாண்டுகளில் சார்லமேன் கண்ட பேரரசு சரிந்த பிறகு, ஐரோப்பா முழுவதும் ஆட்சி குலைந்த நிலை ஏற்பட்டிருந்தது. பெயரளவிலிருந்த அரசாங்கங்கள் திறமை யற்றனவாகவும், கொடுங்கோலோச்சுபவையாகவும் இருந்தமை யால் மக்கள் பல இன்னல்களுக்குட்பட்டனர். இப்போது வடக்கு நாட்டவரும் ஹங்கேரியரும் படையெடுத்து வரவே, சாதாரண மக்கள் திக்கற்று நின்றனர். இந்த நிலையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து உதவியவர்கள் நிலமானியப் பிரபுக்களே. சார்லமேன் நிலைநாட்டிய பேரரசு சிதைந்த பிறகு ஐரோப்பாவில் பரவியிருந்த சூழ்நிலையில் சமூக வாழ்க்கை முற்றிலும் சீர்குலைந்த தில் வியப்பில்லை. ஆனால், நிலமானிய முறைதான் இச்சீர்குலை வைத் தடுத்து நிறுத்திப் பிற்காலத்தில் தேசிய அடிப்படையில் ஐரோப்பிய சமுதாயம் வளர ஏதுவாயிருந்தது. ஆகவே, நில மானிய முறையை முற்கால அரசாங்க வரலாற்றிற்கும் தற்கால அரசாங்க வரலாற்றிற்கும் இடையே அமைந்த இடைப்பட்ட நிலை யென்று கூறலாம்.

மேலும், நிலையற்றிருந்த மக்கள் நிலவுரிமையின் அடிப்படை யில் நிலைப்படுத்தப்பட்டபோது, இதுவரை உறவு முறையை ஆதாரமாகக் கொண்டிருந்த இறைமைக்கு நிலப்பரப்பு (Territory) ஆதாரமாக்கப்பட்டது. இந்த மாற்றம் பிற்காலத்தில் தோன்றிய தேசிய அரசுகளுக்கு (Nation States) வித்தாக அமைந்தது.

நிலமானியப் பிரபுக்கள் நடு அரசாங்கத்தின் வலுக்குறைவிற் குக் காரணமாயிருந்தனர் என்று முன்பு பார்த்தோம். இது ஒரு

வகையில் விரும்பத் தக்கதாக இல்லாதபோதிலும், மற்றொரு வகையில் நன்மை பயப்பதாகயிருந்தது. ஏனெனில், அரசனை எதிர்த்து நிற்கும் வலுப்பெற்றிருந்த இப்பெருமக்களே மன்னன் கொடுங்கோலனை மாறுமல் தடுத்தனர். அரசனின் அதிகாரங்கள் ஒரு வரம்பிற்குட்பட்டதாக இருக்கச் செய்த பெருமை இந்நிலப் பெருமக்களையே சாரும். ஆங்கிலேய அரசன் ஜான் (John) என்பவனிடமிருந்து "மாக்ன கார்ட்டா" (Magna Carta) என்ற பெரும் சாசனம் வழியாக நிலப் பிரபுக்கள் தங்கள் உரிமைகளை நிலை நாட்டிக்கொண்டது இதற்கு ஒரு நல்ல சான்றாகும். கிரேக்கர்களும் ரோமர்களும் ஏற்றிவைத்த உரிமையுணர்ச்சி எனும் சுடர் இடைக்கால அரசியல் புயல்களில் அணைந்துவிடாமல் பாதுகாத்தவர்கள் நிலமானியப் பெருமக்களே. இதுவே நிலமானிய முறை, அரசியலமைப்பிற்குட்பட்ட அரசாங்கத்தின் வளர்ச்சிக்குச் செய்த பெரும் தொண்டாகும். நிலமானிய முறையில் அரசனுக்கு அறிவுரை கூறவும், அரசன் சார்பில் நீதி வழங்கும் பொருட்டும் தலைமைக் குத்தகைக்காரர்களும் அவர்களின் கீழாட்களும் அரசவைக்குக் குறிப்பிட்ட காலங்களில் சென்று வந்தனரென்று பார்த்தோம். இந்த வழக்கமே நாளடைவில் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றம் (Representative Parliament) தோன்றக் காரணமாயிருந்தது. முதலில் மன்னனின் ஆணையின்படி கூடிவந்த நிலமானிய மன்றம் (Feudal Assembly) இடைக்கால நகரங்களின் எழுச்சிக்குப் பிறகு பாராளுமன்றமாக மாறி, நாட்டின் அரசாங்கத்திற்கு இன்றியமையாததாயிற்று. இவ்வாறுக நிலமானிய முறையில் இருந்து வந்த ஒரு வழக்கம் பிற்கால அரசாங்க அமைப்பின் சிறப்பியல்பாக மாறியது. ஆகவே, நிலமானிய முறையில் அரசியல் அமைப்பிற்குட்பட்ட அரசாங்கம் தோன்றி வளர்வதற்கு வேண்டிய எல்லா வித்துக்களும் இருந்தன என்று கூறலாம்.

நிலமானிய முறையின் தீமைகள்

நிலமானிய முறையினால் மேற்கூறிய சில நற்பயன்கள் ஏற்பட்டபோதிலும், சில தீமைகளும் விளைந்தன. அம்முறையின்படி ஏற்பட்ட சமூக அரசியல் அமைப்பு வலிமைமிக்க நடுநாயகமான அரசு தோன்றுவதற்கு மிகவும் இடையூறாக இருந்ததென்பது சொல்லாமலே விளங்கும். ஐரோப்பிய சமூகமும், அரசுகளும் அம்முறையினால் கூறுபடுத்தப்பட்டனவேயன்றி ஒன்றுக்கப்படவில்லை. இதுவே நிலமானிய முறையினால் நேர்ந்த பெருந் தீங்காகும். இதனை மேலும் சற்றுக் கவனிப்போம்.

பொது உரிமைகளும், தனி உரிமைகளும் ஒன்றித்துவிட்ட காரணத்தினால் பொதுக்கடமைகளின் முக்கியத்துவம் பெருமளவில் குறைந்து போயிருந்தது. உதாரணமாக ஆஷ்லி (Ashley)

என்பவர் கூறுவதுபோல "அரசனுடைய இறைமை அவன் நிலப் பிரபுவென்ற முறையில் பெற்றிருந்த மேலாண்மையின்முன் மறைய ஏதுவாயிற்று" (The king's sovereignty tended to disappear in suzereinty). அரசன் நாட்டின் முதன்மையான நிலப் பிரபு வென்று கருதப்பட்டான். அவனுடைய கடமைகளும் உரிமைகளும் இதன் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்பட்டன. அரசனென்ற முறையில் அவன் மக்களுக்குச் செய்யவேண்டிய பணிகளும், அவனுடைய உரிமைகளும் மறைந்து போயின. இவ்வுரிமைகள் யாவும் நிலப் பிரபுக்களின் மரபுவழி வரும் குடும்பச் சொத்தாக மாறிவிட்டன. அதுபோல் அரசனுடைய பொதுப் பணிகளையும் இப்பிரபுக்களே தங்கள் விருப்பப்படி செய்து வந்தனர். ஆஷ்லி என்பவர் கூறுவதுபோல் "நிலப் பிரபுக்களின் மேலாண்மையானது இறைமையாக மாற ஏதுவாக இருந்தது" (The barons' suzereinty tended to become sovereignty). இதன் காரணமாக அரசன் நிலப் பிரபுக்களை அடக்கியாள முடியாமலிருந்தது. அதுவுமன்றி நிலப் பிரபுக்கள் அரசனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வதும் வழக்கமாக இருந்தது. இதற்கு அவர்களிடமிருந்த நிலமானியப் படைகள் பெரிதும் காரணமாயிருந்தன. அரசனோடு மட்டுமல்லாமல் தமக்குள்ளும் நிலமானியப் பிரபுக்கள் சண்டையிட்டுக்கொண்டனர். இச்சண்டைகளை அரசன் தடுக்க இயலாமல் இருந்தான். இப்போர்களின் காரணமாக நிலப் பிரபுக்கள் நாட்டின் பல பாகங்களிலும் கற்கோட்டைகள் பல எழுப்பினர். இக்கோட்டைகள் கிளர்ச்சிகளின் நடுவிடங்களாக இருந்தன. நிலப் பிரபுக்கள் நாணயம் அச்சடிக்கும் உரிமையும் பெற்றிருந்ததால், அரசனின் ஆணைக்கு முற்றிலும் பணியவில்லை. இவையெல்லாம் நடுநாயகமான அரசாங்கத்திற்கு முற்றிலும் புறம்பாயிருந்தன. இவற்றையெல்லாம் பார்க்கும்போது நிலமானிய முறையை ஓர் ஆட்சி குலைந்த நிலை (Anarchy) என்று கூறலாம்.

நிலமானிய முறை தேசிய உணர்ச்சிக்கும் நாட்டுப்பற்றுக்கும் பெருந்தடையாக இருந்தது. நிலத்தின் அடிப்படையில் ஏற்பட்ட ஒன்றிய இணைப்புகள் நிறைந்த சமுதாயத்தில் பிரிவுணர்ச்சிக்குத் தான் வழியுண்டே தவிர, தேசிய உணர்ச்சிக்கோ நாட்டுப் பற்றுக்கோ இடமில்லை. சமூகம் பல கூறுகளாக்கப்பட்டிருந்ததால், இக்கூறுகளை மறுபடியும் ஒன்றுக்கப் பதினைந்தாம் நூற்றாண்டில் எழுந்த வரம்பில்லா முடியரசுகளால்தான் (Absolute Monarchies) முடிந்தது.

நிலமானிய முறையின் சிதைவு

நிலமானிய முறையின் சிதைவுக்குக் காரணமாயிருந்தவற்றில் அரசபதவி (Kingship) முக்கியமானது. இம்முறை உச்சநிலையில்

இருந்தபோதுகூட, நாட்டில் அரசன் என்ற ஒருவன் இருந்தான். இவ்வரசன் நாட்டின் முதல் நிலப்பிரபு என்று கருதப்பட்ட போதிலும், அவனுடைய இறைமை பெயரளவிலாகிலும் இருந்து வந்தது. மக்களுக்கும் அவனுக்கும் இடையே நேரிடையான தொடர்பும் இருந்து வந்தது. ஆகவே, நிலமானிய முறைக்கு என்றுமே முரணான அரச பதவி சில காரணங்களினால் வலுப்பெற்றபோது அம்முறையில் சிதைவு ஏற்பட்டது. அரசன் வலுவடைந்ததற்கு முக்கிய காரணமாயிருந்தது இடைக்கால நகரங்கள். இதைப் பற்றிப் பின்னர் ஓர் இயலில் பார்ப்போம்.

அடுத்தபடியாக, திருச்சபையும் அதன் அமைப்பும் சமூகம் ஒன்றுபட அயராது உழைத்து வந்ததால், அதுவே நிலமானிய முறையின் அழிவிற்கு ஒரு காரணமாகக் கூறலாம். ஆட்சி குலைந்த இடைக் காலத்திலும்கூட திருச்சபை பிளவுபடாமல் ஒன்றுபட்டு திகழ்ந்தது. அஃது எப்போதும் சுதந்திரமான ஒரு தலைவனின்கீழ் ஒன்றுபட்டு விளங்கியது. சமய சம்பந்தப்பட்ட வழக்குகளில் அஃது இறுதித் தீர்ப்பளிக்கும் நீதிமன்றமாக இருந்தது. மேலும் அஃது அமைதி, சீரமைப்பு, ஒழுங்கு போன்ற குறிக்கோள்களைக் கடைப்பிடித்து வந்தமையால், ஆட்சியைக் குலைக்கும் சக்திகளுக்குப் பெரும் பகையாக இருந்தது. நிலமானிய முறைக்கு முற்றிலும் முரணான அதிகாரக் குவிப்பு (Centralisation) ஏற்படப் போப்பாண்டவர்கள் பெரிதும் துணை புரிந்தனர். மேலும், திருச்சபையின் சிறப்பியல்பான மடங்கள் (Monasteries) இடைக்கால மக்களிடையே சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் வளர்த்தன. திருச்சபையின் ஆதரவில் வளர்ந்த இடைக்காலப் பல்கலைக் கழகங்கள் மக்களின் எண்ணங்களை மாற்றி, அவர்களைப் பரந்த நோக்குடையவர்களாக்கின. இதனால் அவர்களிடையே தேசிய உணர்ச்சி ஏற்பட்டது. இவையெல்லாம் நிலமானிய முறையின் சரிவிற்கு அடிகோலின.

இடைக்காலத்தில் எழுந்த நகரங்கள் நிலமானிய முறையின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். இந்த நகரங்களில் வாழ்ந்த மக்கள் நிலத்தை நம்பி வாழவில்லை. அவர்களில் பெரும் பாலோர் வாணிகம் அல்லது தொழில் துறையைச் சேர்ந்தவர்கள். ஆகவே, இவர்கள் நிலமானியப் பிணைப்புகளுக்குட்படாமல் உரிமையுடன் வாழ்ந்து வந்தனர். இடைக்கால நகரங்களெல்லாம் மன்னனிடமிருந்து சாசனம் (Charter) பெற்றுச் சுதந்திரத்துடனிருந்தன. நாளடைவில் மன்னனுக்கும் நிலப் பிரபுக்களுக்கும் ஏற்பட்ட பூசல்களில் இந்நகரங்கள் மன்னனின் பக்கம் சேர்ந்துகொண்டன. இவ்வாறு நகரங்கள் மன்னனின் அதிகாரத்தை வளர்த்து நிலமானிய முறையைத் தகர்த்தன.

அரசியல் குழப்பங்களினால் சமுதாயம் சீரழியாமல் நிலமானிய முறை தடுத்ததென்று பார்த்தோம். ஆனால், இவ்வெற்றியே அம் முறையின் அழிவிற்குக் காரணமாயிருந்தது. ஏனெனில், அம் முறையினால் சீரமைக்கப்பட்ட சமூகத்தின் அடிப்படையில்தான் பதினாறும் நூற்றாண்டில் பெரும் தேசிய அரசுகள் (Nation States) தோன்றின. ஆகவேதான், G. B. ஆடம்ஸ் என்பவர், "நிலமானிய முறை வீழ்ச்சியுற்ற வரலாறும், தற்கால தேசிய சமூகங்கள் (Nations) உருப்பெற்ற வரலாறும் ஒன்றே" என்று கூறுகிறார்.

6. இடைக்கால நகரங்கள்

ரோமானியப் பேரரசு தழைத்தோங்கியிருந்த காலத்தில் மேற்கு ஐரோப்பா முழுவதும் ஆங்காங்கே பல நகரங்கள் இருந்தன. இவை அரசாங்க பீடங்களாகவும், ரோமானியப் பண்பாட்டைப் புகட்டும் கல்விக் கூடங்களாகவும் திகழ்ந்தன. ஆனால் கி. பி. 5ஆம் நூற்றாண்டில் தொடங்கியமிலேச்சர்கள் படையெடுப்பினால் இப்பண்டைய நகரங்கள் யாவும் அழிக்கப்பட்டன. மிலேச்சர்கள் கிராம வாழ்க்கையையும் நாட்டு வாழ்க்கையையும் மட்டும் அறிந்திருந்தமையால், நகரங்களின் சிறப்பை அவர்கள் உணரவில்லை. இருப்பினும் மிலேச்சர்களின் தாக்குதலுக்குப் பிறகு மீண்டும் அமைதி நிலவியபோது, நகரங்கள் மறுபடி ஓவ்வொன்றாகத் தோன்ற ஆரம்பித்தன. இருண்ட கால (Dark Ages) முடிவிலிருந்து ஐரோப்பாவில் தேசிய அரசுகள் தோன்றிய காலம் வரை நிலமானிய முறையோடு நகரங்களும் சிறப்புற்றிருந்தன. இந்த நகரங்களில் சில வாணிகப் பெரு வழிகளிலே அமைந்திருந்தன; சில நகரங்கள் மடங்கள், கோட்டைகள், ஆலயங்கள், சமய நிலையங்கள் இவற்றினருகே அமைந்திருந்தன. மேலும் சில கடலோரங்களிலும், ஆற்றின் கழிமுகங்களிலும் அல்லது ஜீவ நதிகளின் கரைகளிலும் அமைந்திருந்தன. இன்னும் சில அழிந்துபோன பழைய ரோமானிய நகரங்களின் மேல் கட்டப்பட்டன. இந்நகரங்கள் நிலமானிய முறையின் சிதைவிற்குக் காரணமாயிருந்தன என்று முன்பு பார்த்தோம். இவை அரசனுடைய அதிகாரத்தை ஓங்கச் செய்து, பிற்காலத்தில் வரம்பில்லா முடியரசுகள் தோன்றவும் காரணமாயிருந்தன. மேலும், நிலமானிய முறை பரவியிருந்த காலத்திலும் சுதந்திரமுடனிருந்த இந்நகரங்கள், வளர்ச்சியின்றித் தேங்கிக்கிடந்த இடைக் காலத்தில் முற்போக்குக் கொள்கைகளுக்குப் பிறப்பிடங்களாயிருந்தன. அரசாங்கத்தின் வளர்ச்சி தடைபட்டுப் போயிருந்த காலத்தில் இவ்விடைக் கால

நகரங்களே அவ்வளர்ச்சியை மீண்டும் துரிதப்படுத்தின என்று கூறினால் மிகையாகாது. அரசாங்கத்தின் வரலாற்றில் இந்நகரங்கள் சிறப்பிடம் பெறுவதற்கும் இதுவே முக்கிய காரணமாகும்.

தோற்றம்

இருண்ட காலத்தின் முடிவில் ஐரோப்பாவில் மீண்டும் நகரங்கள் தோன்றியதற்கு அடிகோலியவர்கள் அக்காலத்தில் புதிதாக எழுந்த வாணிகர்களும், கைத்தொழிலாளர்களும் ஆவர். விவசாயத்தை ஆதாரமாகக் கொண்டிருந்த இடைக்காலச் சமூகத்தில் இவ்வாணிகரும், தொழிலாளரும் தனித்து நின்றனர். இவர்கள் வாழ்ந்த இடங்களே நாளடைவில் நகரங்களாக மாறின. கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவை வடக்கு நாட்டாரும், ஹங்கேரியரும் தாக்கியபோது இந்நகரங்களைக் காக்க நடுநாயகமான அரசாங்கம் இல்லாமலிருந்ததால், நகர மக்கள் தம்மைத் தாமே காக்கும் வேலையில் ஈடுபட்டனர். நகரப் படைகள் திரட்டப்பட்டன; நகர நிறுவனங்கள் சீரமைக்கப்பட்டன. நகரங்களைச் சுற்றிப் பெருஞ் சுவர்கள் கட்டப்பட்டன. இவையெல்லாம் இடைக்கால நகரச் சமூகங்கள் உருப்பெறப் பெரிதும் துணையாயிருந்தன. இவ்வாறு உருப் பெற்ற நகரங்கள் நிலமானிய முறை உச்ச நிலையை அடைந்தபோது, அம்முறையின் பிணைப்புகளில் சிக்க நேர்ந்தது. அஃதாவது, முதலில் தனிப்பட்ட நகரமக்களும், நாளடைவில் முழு நகரங்களும், அரசனுக்கோ அல்லது நிலமானியப் பிரபுக்களுக்கோ கீழாட்களாக மாறின. இந்நிலையில் நகரங்கள் தம் பிரபுக்களுக்கு நிலமானியக் கட்டணங்கள் செலுத்தவும் மற்ற அலுவல்கள் புரியவும் கடமைப்பட்டிருந்தன. ஆனால் நிலப்பிரபுக்கள் பொருள் உற்பத்தி, வாணிக வளர்ச்சி இவை காரணமாகச் செல்வாக்குடனிருந்த நகரங்களை அளவுக்கு மேலாகச் சுரண்ட ஆரம்பித்தபோது, இந்நகரங்களிடையே வெறுப்புணர்ச்சி தோன்றியது. இது நாளடைவில் நகரங்களுக்கும் நிலமானியப் பிரபுக்களுக்குமிடையே நீடித்த போராட்டங்களை உண்டாக்கியது. கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் இப்போராட்டங்கள் ஐரோப்பா முழுவதும் பரவின. முடிவில் நகரங்களே வெற்றி பெற்றன. அவற்றைப் பிணைத்திருந்த நிலமானியக் கடமைகள் சிறிது சிறிதாக விலக்கப்பட்டன. இந்த விடுதலைக்கு அறிகுறியாக நிலமானியப் பிரபுக்கள் நகரங்களுக்கு உரிமைச் சாசனங்கள் வழங்கினர். இதன் பிறகு அச்சாசனங்களை அடிப்படையாகக் கொண்டு துரிதமாக வளர்ந்த நகரங்கள், விரைவில் ஐரோப்பாவில் ஆங்காங்கே அமைந்த தன்னாட்சி பெற்ற சிறு அரசுகளாகத் திகழ்ந்தன.

நிறுவனம்

இடைக்கால நகர மக்களை வாணிகர், கைத்தொழிலாளர் என்ற இரு கூறுகளாகப் பிரிக்கலாம். நகரங்கள் சீரோங்கியிருந்த காலத்தில் இவ்விரு துறைகளில் ஏதாவதொன்றைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே குடிமை உரிமை அளிக்கப்பட்டிருந்தது. இடைக்கால நகர நிறுவனங்களில் முதன்மையானவை நகர சங்கங்கள் (Guilds). நகரங்களில் வாழ்ந்த இருவகைப்பட்ட குடிமக்களும் தங்களுக்கே சிறப்பான நிறுவனங்களை அமைத்து வாழ்ந்தனர். இந்த நிறுவனங்கள் அவர்களுடைய பொருளாதார வினைகளைப் (Economic Occupation) பொறுத்திருந்தன. வர்த்தகத் துறையைச் சேர்ந்த குடிகள் வாணிகர் சங்கங்களை (Merchant Guilds) ஏற்படுத்திக் கொண்டனர். தொழில் செய்து வந்தவர்கள் தொழிற் சங்கங்களை (Craft Guilds) ஏற்படுத்திக் கொண்டனர். இவற்றில் வாணிகர் சங்கங்களே முதலில் தோன்றின.

வாணிகர் சங்கங்கள் பதினோராம் நூற்றாண்டில் தோன்றின. ஒவ்வொரு நகரத்திலும் வாழ்ந்த வாணிகர் அந்நகரத்தின் வாணிகர் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தனர். இச்சங்கங்களின் முக்கிய நோக்கம் வாணிகம், தொழில் இவ்விரண்டையும் கட்டுப்படுத்தலாம். மேலும் இச்சங்கங்களின் உறுப்பினர்கள் வியாபாரத்தில் தங்களுக்கெனத் தனி உரிமைகளையும் பெற்றிருந்தனர்; உறுப்பினரல்லாத வணிகர்கள் தங்கள் பொருட்களைச் சங்கத்திற்கே விற்கவேண்டும். அவர்கள் சங்கத்திற்குச் சில வரிகளையும் (Tolls) செலுத்தக் கடமைப்பட்டிருந்தனர். மேலும், கம்பளம் (Wool) தானியம் போன்ற சில குறிப்பிட்ட பொருட்களை அவர்கள் உற்பத்தியாளரிடமிருந்து வாங்குதல் கூடாது. இவற்றை வாங்கும் உரிமை உறுப்பினருக்கே உண்டு. இதுபோலவே, இலாபம் கருதிப் பொருட்களை வாங்கி உடனே விற்பது, அல்லது தேக்கி வைப்பது போன்ற உரிமைகளை உறுப்பினர்கள் மட்டுமே பெற்றிருந்தனர். மேலும், அவர்கள் கூட்டுப்பேரம் (Collective Bargaining), விற்பனை முற்றுரிமை (Monopoly) போன்ற சில சலுகைகளைப் பெற்றிருந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் சென்றவிட மெல்லாம் சங்கத்தின் ஆதரவு அவர்களுக்கு இருந்தது.

உற்பத்தித் துறையில் வாணிகர் சங்கங்கள் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருந்தன. உதாரணமாக, உற்பத்திப் பொருள்களின் தரம், விலை, தொழிலாளர்களின் கூலி முதலியவற்றை வாணிகர் சங்கங்கள் தங்கள் மேற்பார்வையாளரைக் கொண்டு கட்டுப்

படுத்தி வந்தன. கட்டு மீறி நடப்பவர்கள் சங்கத்தின் நீதிமன்றங்களில் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

இவையல்லாமல் வாணிகர் சங்கங்கள் சில சமூகப் பணிகளிலும் ஈடுபட்டிருந்தன. இச்சங்கங்கள் நட்புச் சங்கங்களாகவும் (Friendly Societies) திகழ்ந்தன. இம்முறையில் அவை எளியோர், நோயாளிகள், கைம்பெண்கள், அனுதைகள் போன்றவர்களின் துயர் துடைக்க உதவி புரிந்தன. உறுப்பினர்கள் சிறைப் பட்டிருந்தால், அவர்களை மீட்கும் பொறுப்பையும் ஏற்றிருந்தன.

இடைக்கால நகரவாசிகளில் இரண்டாவது வகையைச் சேர்ந்த தொழிலாளிகள் (Craftsmen) வெகுகாலம் வரை வாணிகர் சங்கங்களின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தனர். ஆனால், நாளடைவில் இவர்களும் தனிப்பட்ட தொழிற் சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டனர். சக்கிலியர் சங்கம், உரொட்டித் தொழிலாளர் சங்கம், நெசவாளர் சங்கம், சாயத்தொழிலாளர் சங்கம் என ஐம்பதுக்கு மேலான சங்கங்கள் ஒவ்வொரு நகரத்திலும் இருந்தன. கி. பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் இத்தொழிற் சங்கங்கள், வாணிகர் சங்கங்களுக்குச் சமமாயிருந்ததல்லாமல், நகராட்சியில் முக்கிய இடமும் பெற்றிருந்தன. அவை வாணிகர் சங்கங்களின் அதிகாரத்திலிருந்து விடுதலைபெற்ற பிறகு, உற்பத்திப் பொருள்களின் தரம், விலை, தொழிலாளரின் கூலி முதலியவற்றை ஒழுங்குபடுத்தும் பொறுப்பை ஏற்றன. இதன் பொருட்டு இச்சங்கங்கள் மேற்பார்வையாளரை நியமித்தன. மேலும், தொழிலாளர்களின் பயிற்சியையும் இச்சங்கங்கள் கட்டுப்படுத்தி வந்தன. இவையல்லாமல், வாணிகர் சங்கங்களைப் போலவே, தொழிற்சங்கங்களும் நட்புச் சங்கங்களாகவும் திகழ்ந்து, பல சமூக நலப் பணிகளையும் செய்து வந்தன.

இடைக்கால நகரங்களின் சமூக வாழ்க்கையையும், பொருளாதாரத் தொடர்புகளையும் ஒழுங்குபடுத்த ஏற்பட்ட இச்சங்கங்கள் நகர ஆட்சிக்கும் அதற்கான நிறுவனங்களுக்கும் ஆதாரமாக இருந்தன. 14 ஆம் நூற்றாண்டிற்கு முன் நகர ஆட்சியில் வாணிகர் சங்கங்களே முதலிடம் வகித்தன. ஆனால், தொழிற் சங்கங்களின் எழுச்சிக்குப் பிறகு இவ்விருவகைச் சங்கங்களுக்கு மிடையே ஒரு போராட்டம் ஏற்பட்டது. இப்பிணக்குப் பண்டைய ரோமானிய அரசில் உயர்குடிகளான பெட்ரீஷியருக்கும் (Patricians) தாழ்குடிகளான ப்ளெபியர்களுக்கும் (Plebs) நடந்த போராட்டத்தை யொத்திருந்தது. இச்சண்டை சுமார் இரண்டு நூற்றாண்டுகள் நீடித்திருந்தது. முடிவில் தொழிற் சங்கங்களே வெற்றி பெற்று நகராட்சியைக் கைப்பற்றின. ஐரோப்பிய நகரங்

களின் ஆட்சி முறைகளில் சில வேறுபாடுகள் இருந்தபோதிலும், சில ஒற்றுமைகளும் இருந்தன. இப்பொதுவான இயல்புகளை இங்குக் குறிப்பிடுவோம்.

நகரங்களின் செயல்துறை அதிகாரம் (Executive Power) சங்கத் தலைவர்களடங்கிய ஒரு குழுவினிடமிருந்தது. இக்குழு பிரான்ஸில் ஜுராட்டி (Jurati) அல்லது சிண்டிக்ஸ் (Syndics) என்றும், இத்தாலியில் கான்ஸ்யூல்ஸ் (Consules) என்றும், ஜெர்மனியில் ராத் (Rath) என்றும் அழைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவன் இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் மேயர் (Mayor) என்றும், ஜெர்மனியில் பர்கோமாஸ்டர் (Burgomaster) எனவும் அழைக்கப்பட்டான். செயற்குழுவின் தலைவனே நகரத் தலைவனுமாவான். ஒரு நகரம் மற்ற நகரங்களிடமோ அல்லது அரசனிடமோ கொண்டிருந்த தொடர்புகளில் நகரத் தலைவனே நகரத்தின் பிரதிநிதியாகப் பணியாற்றினன். செயற்குழுவிற்கு அறிவுரை கூறவும் மற்ற உதவிகள் செய்யவும் பல சிறு குழுக்கள் இருந்தன. சில பழமையான நகரங்களில் குடிகள் அனைவரையும் கொண்ட பெருங்கூட்டம் (Mass Meeting) நகராட்சியில் முக்கிய இடம் பெற்றிருந்தது. நகர அலுவலர்கள், குழுக்களின் உறுப்பினர்கள் போன்றவர்களைத் தேர்ந்தெடுத்தல், செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்தல் போன்ற முக்கிய காரியங்களை இக்கூட்டங்கள் கவனித்தன. இத்தகைய மக்கள் கூட்டங்கள் இல்லாத நகரங்களில் நகர அலுவலர்கள் தொழிற் சங்கங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சில நகரங்களில் இந்தப் பொது அலுவலர்கள் மரபுவழி (hereditary) வந்தவர்களாக இருந்தனர். சுருக்கமாகக் கூறினால், தொழிற் சங்கங்களில் முக்கிய இடம் பெற்றிருந்தவர்களெல்லாம் நகராட்சியிலும் சிறப்பிடம் பெற்றிருந்தனர். இப்போது ஐரோப்பாவின் சில முக்கிய நாடுகளிலிருந்த நகரங்களையும் அவற்றின் நிறுவனங்களையும்பற்றிப் பார்ப்போம்.

ஜெர்மனி

பழைய ரோமானிய நாகரிகம் ரைன், டான்யூப் நதிகள் வரை பரவியிருந்தது. இந்நதிகளுக்குக் கிழக்கேயுள்ள நிலப்பரப்பு இடைக்காலத்தின் தொடக்கத்தில்தான் நாகரிகமடைய ஆரம்பித்தது. இதற்கு முக்கிய காரணமாயிருந்தவை திருச்சபையும், நகரங்களுமாகும். வெகுகாலம் வரை இவையிரண்டும் இப்பணியில் ஒத்துழைத்தன. முதலில் திருச்சபையின் துணை கொண்டு பல நகரங்கள் நிறுவப்பட்டன. பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் நிலப் பிரபுக்களின் உதவி கொண்டும் சில நகரங்கள் தோன்றின.

கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் மகா ஆட்டோ (Otto the Great) எனும் அரசனால் ஹங்கேரியர்கள் தோற்கடிக்கப்பட்ட பிறகு ஜெர்மனியில் பல நகரங்கள் தோன்றின. இவையாவும் திருச் சபையின் ஆதரவில் ஏற்பட்டன. ஒவ்வொரு நகரமும் ஒரு மாவட்ட மேற்றிராணியாரின் (Bishop) அதிகாரத்திற்குட்பட் டிருந்தது. ஆனால், நாளடைவில் சமயகுருக்களுக்கும் நகரவாசி களுக்குமிடையே பூசல்கள் ஏற்பட்டன. நான்காம் ஹென்றி (Henry IV) காலத்தில் இந்நகரங்கள் விடுதலை பெற்றன. இதன் பிறகு நகராட்சி முதலில் நகர வாணிகர்களின் பொறுப்பிற்கு மாறியது. இவர்கள் சார்பில் பழைய நிறுவனமான "ஸ்காபினி" (Scabini) என்றழைக்கப்பட்ட நீதிபதிகள் குழு நகரத்தை ஆட்சி செய்து வந்தது. ஆனால் நாளடைவில் "பர்கோமாஸ்டர்" (Burgomaster) எனும் நகரத் தலைவனின் கீழ் நகர அவைகள் (City councils) கூட்டப்பட்டு நிர்வாகத்தை ஏற்றன. இந்த நகர அவையில் முதலில் செல்வத்தினால் சிறந்த உயர்குடியில் பிறந்த வணிகர்களே உறுப்பினராக இருந்தனர். நகரக் குடிகள் அனைவரும் அடங்கிய கூட்டம் சிற்சில சமயங்களில் கூட்டப் பட்டது. அஃதாவது புதிய சட்டங்கள், வரிகள், படையெடுப்புகள், வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்கள் போன்ற முக்கிய காரியங் களுக்கு இசைவு பெறக் குடிகளனைவரும் கூட்டப்பட்டனர். ஆனால் இக்கூட்டங்கள் நகர அவையின் விருப்பத்திற்கிணங்கவே கூட்டப் பட்டதால், நாளடைவில் சிறிது சிறிதாகக் கைவிடப்பட்டன. குறிப்பாக உயர்குடி ஆட்சியானது வர்த்தக வளர்ச்சியின் காரண மாகச் செல்வந்தர்களின் சிறுகுழுவாட்சியாக மாறியபோது இம் மாற்றம் ஏற்பட்டது.

கி. பி. 14ஆம் நூற்றாண்டில் ஜெர்மனிய நகரங்களில் ஒரு முக்கிய மாற்றம் ஏற்பட்டது. அஃதாவது செல்வர்களால் ஆளப் பட்டு வந்த இந்நகரங்கள், தொழிற் சங்கங்களின் எழுச்சியின் காரணமாக மக்களாட்சிகளாக மாறின. இம்மாற்றம் பல்வேறு நகரங்களில் பல்வேறு காலங்களில் ஏற்பட்டது. நிலமானியப் பிரபுக்களின் அதிகாரத்திலிருந்து விடுதலையடைந்த நகரங்களும் இக்காலத்தில் மக்களாட்சிகளாக மாறின. பொதுவாக இக் காலத்தில் நகரங்கள் தொழிற்சங்கங்களைக் கொண்ட கூட்டாட்சி களாகத் திகழ்ந்தன. ஜெர்மானிய நகரங்களின் வளர்ச்சியானது ஏறக்குறைய கிரேக்க நகரங்களின் அரசியல் வளர்ச்சியை யொத் திருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அஃதாவது, முதலில் உயர் குடியாட்சியாக இருந்த நகராட்சி நாளடைவில் செல்வந்தர்களின் சிறுகுழுவாட்சியாக மாறிப், பிறகு மக்களாட்சியாக முதிர்ச்சி பெற்றது.

ஹன்ஸா நகரங்கள்

ஜெர்மானிய நகரங்களில் மற்ற நாட்டு நகரங்களிலில்லாத இயல்பு ஒன்று காணப்பட்டது இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்த நகரங்களுக்கிடையே கூட்டமைப்புகள் (leagues) சில ஏற்பட்டன. இவ்வமைப்புகள் வட ஜெர்மானிய நகரங்களிடையே 12 ஆம் நூற்றாண்டிலிருந்தே ஏற்பட்டிருந்தன. இக்காலத்தில் வழிப்பறிக் கொள்ளைக் கூட்டங்கள், கடற் கொள்ளைக் கூட்டங்கள் இவற்றினால் வாணிபத்திற்குப் பல இன்னல்கள் ஏற்பட்டன. இவ்விடையூறுகளிலிருந்து நகரங்களின் வர்த்தகத்தைக் காக்கவே கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. 13-ஆம் நூற்றாண்டில் லூபெக் (Lubeck), ஹாம்பர்க் (Hamburg) போன்ற நகரங்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட கூட்டமைப்புத்தான் 14 ஆம் நூற்றாண்டில் வலிமைமிக்க ஹன்ஸா கூட்டமைப்பாகத் (Hanseatic League) திகழ்ந்தது. இவ்வமைப்பில் ஏறக்குறைய எண்பதிற்கு மேற்பட்ட வடக்கு ஜெர்மானிய நகரங்கள் இடம் பெற்றன. இந்தக் கூட்டமைப்பு பெரும் படைகளையும் நாவாய்களையும் பெற்று இறைமை அதிகாரம் செலுத்தியது. இவ்வமைப்பு வடக்கு நாடுகள், பால்டிக்கடல், ரைன், வெஸ்ஸர் (Wesser), எல்ப் (Elb), ஓடர் (Oder), விஸ்டுலா (Vistula) போன்ற நதிகள் ஆகிய இடங்களில் நடந்த வாணிகத்தைக் கட்டுப்படுத்தியது. உறுப்பினரின் வாணிகத்தை வளர்க்கும்பொருட்டு ஹன்ஸா அமைப்பு அயல்நாடுகளில் தொழிற்சாலைகள், கோவில்கள், சத்திரங்கள், தளவாடக் கிடங்குகள் (Magazines) முதலியவற்றை நிறுவி வந்தது. ஆகவே, ஹன்ஸா கூட்டமைப்பு விற்பனை முற்றுரிமை (Monopoly) பெற்ற ஒரு பெரிய நிறுவனமாகும். இம்முறையில் அது வடக்கு ஜெர்மானிய நகரங்களின் வாணிகம் முழுவதையும் கட்டுப்படுத்தி வந்தது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

ஆனால் இக்கூட்டமைப்பு வெகுகாலம் நீடித்திருக்கவில்லை. 15 ஆம் நூற்றாண்டில் இவ்வமைப்புச் சிதைவுற்றது. இதற்கு உறுப்பினரிடையே ஒற்றுமையின்மையே முக்கிய காரணமாகும். மேலும், ஸ்காண்டிநேவிய முடியாட்சி வலுப்பெற்றபோது, ஹன்ஸா கூட்டமைப்பு வட கடலிலும், பால்டிக் கடலிலும் பெற்றிருந்த அதிகாரம் பெரிதும் குறைக்கப்பட்டது. இதுவல்லாமல் ஜெர்மானிய வாணிகம் பெருகியிருந்த பல நாடுகளில் சுதேச வாணிகம் தோன்றி வளர்ந்தது. ஹன்ஸா கூட்டமைப்பின் செல்வாக்குக் குறைந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக 15 ஆம் நூற்றாண்டில் மேற்கே புதிய கடல் வழிகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் அட்லாண்டிக் கடல் துறைமுகங்கள் வாணிகத்தில் சிறப்பிடம்

பெற்றதால் பால்டிக், வட கடல் துறைமுகங்கள் நலிந்துபோயின. இது ஹன்ஸா கூட்டமைப்பைப் பெரிதும் பாதித்தது.

இத்தாலி

ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் இத்தாலியில்தான் நகரங்கள் அதிகச் சிறப்பும் வலிமையும் பெற்றிருந்தன. ரோமானியப் பேரரசின் அழிந்துபடாத சில மரபுகள், பேரரசிற்கும் போப்பாண்டவர் ஆட்சிக்கும் (Papacy) நடந்த நீடித்த போராட்டங்கள், இத்தாலியில் வன்மையுள்ள நடு அரசாங்கமின்மை இவையே இத்தாலியில் நகரங்கள் தோன்றி வளர்ந்ததற்கு முக்கிய காரணங்களாகும். குறிப்பாகச் சிலுவைப் போர்களினால் கீழ் நாட்டுடன் வாணிகத் தொடர்பு வளர்ந்தபோது, இத்தாலிய நகரங்கள் மிகவும் வலிமை பெற்றன. இவ்வளர்ச்சியின் காரணமாக இந்நகரங்கள் நிலமானியப் பிரபுக்களைத் தம் அதிகாரத்திற்குட்படுத்திப் பேரரசர்களையும், திருச்சபையையும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் பெற்றிருந்தன. ஆனால், இந்நகரங்களுக்கிடையே அடிக்கடி நடந்த போராட்டங்களும், ஒவ்வொரு நகரத்திலும் சமூகப் பிரிவுகளுக்கிடையே இருந்த பூசல்களும் இந்நகரங்களில் மக்களாட்சியின் முன்னேற்றத்தைத் தடுத்துக் கொடுங்கோலர்களின் எழுச்சிக்குக் காரணமாயிருந்தன.

வெனிஸ் நகரம்

இத்தாலியில் தோன்றிய மிகப் பழைய நகரங்கள் நாட்டின் தென்மேற்கேயுள்ள நேப்பிள்ஸ் (Naples), கேயிட்டா (Gaeta), அமால்ஃபி (Amalfi) முதலியவை. இவை ஆரும் நூற்றாண்டில் லம்பார்டியரின் படையெடுப்பின்போது உரிமை பெற்றன. இவை மற்ற இத்தாலிய நகரங்களைப் போலல்லாமல் கிழக்கு ரோமானியப் பேரரசின் பகுதிகளாக இருந்தன. ஆனால், இந்நகரங்களின் வரலாற்றைப்பற்றிய உண்மைகள் நமக்குக் கிடைத்தில.

கிழக்கு ரோமானியப் பேரரசைப் பெயரளவில் சேர்ந்திருந்த மற்றொரு முக்கிய நகரம் மிகச் சிறப்பு வாய்ந்த வெனிஸ் (Venice) நகரமாகும். இத்தாலியின் வடகிழக்கிலேயுள்ள இந்நகரம் கி. பி. 5 ஆம் நூற்றாண்டிலிருந்து பிந்திய இடைக்காலம் வரை மிலேச்சர்கள் தாக்குதல், நிலமானிய முறை முதலியவற்றால் பாதிக்கப்படாமல் வளர்ந்து வந்தது. கி. பி. 5 ஆம் நூற்றாண்டில் மிலேச்சர்களின் தாக்குதலுக்கு அஞ்சி இத்தாலியின் வடகிழக்கில் வாழ்ந்த மக்கள் ஏட்ரியாட்டிக் கடலின் வட கரையோரத்திலிருந்த சில தீவுகளில் ஓடி ஒளிவது வழக்கமாயிருந்தது. இவ்வாறு பாதுகாப்பிற்காக வந்த மக்களில் சிலர் இத்தீவுகளில் நிரந்தரமாகக் குடியேறினர். இப்படிப்பட்ட மக்களைக்கொண்டுதான் வெனிஸ்

நகரம் உருவாயிற்று. இவ்வாறு உருப்பெற்ற வெனிஸ் நகரம் 18 ஆம் நூற்றாண்டு வரை எவர்க்கும் தலை வணங்காமல் உரிமையோடு வாழ்ந்து வந்தது. கி. பி. 568 முதல் 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை வெனிஸ் நகரத்தில் செல்வரின் சிறுகுழுவாட்சி தோன்றி முழு வளர்ச்சி பெற்றிருந்தது. பிறகு இந்த ஆட்சி 18 ஆம் நூற்றாண்டு வரை நிலைபெற்றிருந்தது. இந்த நீண்ட காலத்தின் தொடக்கத்தில், அஃதாவது கி. பி. 584 வரை வெனிஸ் நகரைச் சேர்ந்த சிறு தீவுகள் ஒவ்வொன்றும் தனித்தனி அரசாங்கத்தைப் பெற்றிருந்தது. இவ்வரசாங்கம் "ட்ரிப்யூன்கள்" (Tribunes) எனப்படும் அதிகாரிகளைக் கொண்டதாயிருந்தது. கி. பி. 584 ஆம் ஆண்டில் வெனிஸ் நகரம் முழுவதுக்கும் ஒரு நடு அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. இந்த அரசாங்கத்தின் உறுப்பினர்கள் "பெரிய ட்ரிப்யூன்கள்" (Great Tribunes) என அழைக்கப்பட்டனர். இவ்வதிகாரிகள் ஒவ்வொரு தீவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கி. பி. 697 இல் நடு அரசாங்கத்தைப் பலப்படுத்தும்பொருட்டு மேலதிகாரிகளுக்குத் தலைவனாக ஒரு கோமகன் (Duke or Doge) தேர்ந்தெடுக்கப்பட்டான். பெரிய ட்ரிப்யூன்கள் அனைவரும் இக் கோமகனின் அதிகாரத்திற்குட்பட்டனர். கோமகனையும், அவன் கீழிருந்த பெரிய ட்ரிப்யூன்களையும் கொண்டிருந்த குழுவே வெனிஸ் நகரத்தை 18 ஆம் நூற்றாண்டு வரை திறமையுடன் ஆண்டு வந்தது. போர், அயல்நாடுகளுடன் ஒப்பந்தங்கள், சமாதானம் போன்ற முக்கிய காரியங்களில் மட்டும் மக்களின் பேரவை தீர்ப்புக் கூறியது.

லம்பார்டிய நகரங்கள் (Cities of Lombardy)

அப்பீனன் மலைத்தொடர்களின் வடக்கே அமைந்திருந்த மிலான், ஜெனேவா, பாவியா (Pavia) போன்ற நகரங்கள் 10 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிறப்பெய்தின. இக்காலத்திற்கு முன்பே கி. பி. 875 முதல் 950 வரை ஐரோப்பாவில் ஏற்பட்டிருந்த குழப்பங்களின் காரணமாக இந்நகரங்கள் தற்காப்புக்கான சில முயற்சிகளில் ஈடுபட்டிருந்தமையால், நகர மக்களிடையே ஒற்றுமை நிலவியிருந்தது. கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் ஹங்கேரியரும், ஸாரஸரும் (Saracens) ஐரோப்பாவின்மீது படையெடுத்து வந்தபோது, லம்பார்டிய நகரங்கள் ஒவ்வொன்றைச் சுற்றியும் பெரிய சுவர்கள் கட்டப்பட்டதால், அவை வலிமை மிக்க கோட்டைகளாகத் திகழ்ந்தன. மேலும், நகர மக்கள் அனைவரும் போர்ப் பயிற்சி பெற்றிருந்தனர். இவ்வாறு வலுப்பெற்றிருந்த நகரங்கள், 11-ஆம் நூற்றாண்டில் ஆட்டோ (Otto) என்பவரின் ஆட்சியில் புனித ரோமானியப் பேரரசு (Holy Roman Empire) மறுமலர்ச்சியடைந்தபோது, திருச்சபையின் ஆதரவில் மேலும்

வளர்ச்சியடைந்தன. திருச்சபைக்கும் புனித ரோமானியப் பேரரசுக்கும் இடையே நிலவிய ஒற்றுமை இந்நகரங்களின் வளர்ச்சிக்கும் பெருந்துணையாக இருந்தது.

11 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் லம்பார்டிய நகரங்கள் நிலமானியப் பிணைப்புகளிலிருந்து முற்றிலும் விடுதலை பெற்றுவிட்டன. இந்த நகரங்களுக்கும் நிலமானியப் பிரபுக்களுக்கும் நடந்த விடுதலைப் போராட்டத்தில் தொழிற்றுறையைச் சேர்ந்த நகரமக்கள் திருச்சபையுடன் ஒத்துழைத்தனர். ஒவ்வொரு நகரமும் ஒரு மேற்றிராணியாரின் தலைமையில் இப்போராட்டத்தை நடத்தியது. ஆனால், விடுதலைக்குப் பிறகு அமைதிக் காலத்தில் தொழிற்றுறையைச் சேர்ந்த நகரமக்கள் திருச்சபையுடன் ஒத்துழைப்பது இயலாத காரியம் என்பது புலப்பட்டது. திருச்சபையின் இலட்சியங்களுக்கும் தொழிற்றுறையோரின் குறிக்கோள்களுக்கும் உள்ள வேறுபாடே இதற்கு முக்கிய காரணமாகும். ஆகவே, தொழிற்றுறையைச் சேர்ந்த நகரமக்கள் திருச்சபைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, முடிவில் லம்பார்டிய நகரங்களுக்கு முழு உரிமை பெற்றுத் தந்தனர். 12 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பேரரசுக்கும் திருச்சபைக்கும் பதவியமர்த்தல் (Investiture) சம்பந்தமாக ஏற்பட்ட பூசலின் காரணமாக நகரங்களின் உரிமைக் கிளர்ச்சிகள் வெற்றி பெற்றன.

கி. பி. 12ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில் லம்பார்டிய நகரங்களின் அரசாங்கங்கள் "கான்ஸல்கள்!" என்றழைக்கப்பட்ட செயல் துறை அதிகாரிகளின் கையிலிருந்தன. இவர்கள் போர்க் காலத்தில் படைத் தலைவர்களாகவும், அமைதிக் காலத்தில் நீதி வழங்குபவர்களாகவும் பணியாற்றி வந்தனர். இந்த அரசாங்கத்தைச் செல்வரின் சிறுகுழுவாட்சி என்று கூறலாம். ஏனெனில், நகரின் சில குடிகளிலிருந்தே கான்ஸல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால், நாளடைவில் இக் குடிகளின் எண்ணிக்கை பெருகவே, கான்ஸல்களின் எண்ணிக்கையும் பெருகிற்று. அரசாங்கத்தில் கான்ஸல்களுக்குத் துணை புரிய ஓர் அறிவுரைக் குழு (Credentia) இருந்தது. இந்தக் குழுவின் உறுப்பினர்கள் கான்ஸல்களால் நகரில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நகரின் அன்றாட நிர்வாகத்தில் இக்குழு கான்ஸல்களுக்கு அறிவுரை கூறி வந்தது. முக்கியமான காரியங்களில் அறிவுரை கூறப் பெருங்குழு (Great Council) என்ற பிறிதொரு நிறுவனம் இருந்தது. இக்குழு பல நகரங்களில் பல்வேறு முறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால், அதன் உறுப்பினர்கள் மக்களால் நேராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை; கான்ஸல்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறுதியாகப் போர், முற்றுகை

போன்ற வெகு முக்கிய நிகழ்ச்சிகளின்போது மட்டும் மக்களை வரும் அடங்கிய பேரவை (Parlamento) கூட்டப்பட்டது. இந்த அரசாங்க நிறுவனங்கள் தவிர "ஆர்ட்டி" (Arti), "மேஸ்டியரி" (Mestieri) என்றழைக்கப்பட்ட தொழிற்சங்கங்களும் இருந்தன.

இவ்வாறு வளர்ச்சியுற்றிருந்த நகர அரசாங்கத்தில் 12 ஆம் நூற்றாண்டின் இடையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. இதற்கு முக்கிய காரணம் இக்காலத்தில் லம்பார்டிய நகரங்களிடையே ஏற்பட்ட கலவரங்களாகும். நகரங்களிடையே ஏற்பட்ட வணிகப் போட்டியினாலும், போப்பாண்டவருக்கும் பேரரசுக்குமிடையே ஏற்பட்ட பூசலில் நகரங்கள் எதிரெதிராக இரு சார்பிலும் சேர்ந்துகொண்டதினாலும், நகரங்களுக்கிடையே பெரும் பிணக்குகள் தோன்றின. முதலில் ஒரு பெரிய நகரத்திற்கும் மற்றொரு சிறிய நகரத்திற்குமிடையே ஏற்பட்ட இப் போராட்டங்கள் நாளடைவில் நகரக் கூட்டமைப்புகள் (Leagues) தோன்றக் காரணமாக இருந்தன. புனித ரோமானியப் பேரரசன் பிரெடரிக் பார்பரோஸா (Frederic Barbarossa) இக்கலவரங்களைக் கட்டுப்படுத்த முயன்றபோது, இவையெல்லாம் கூடி ஒருகூட்டமைப்பை ஏற்படுத்தி அவ்வரசனை எதிர்த்து வெற்றியும் கண்டன. கி. பி. 1183 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கான்ஸ்டன்ஸ் (Constance) ஒப்பந்தத்தின்படி லம்பார்டிய நகரங்கள் அனைத்தும் சட்டபூர்வமான சுதந்திரம் பெற்றன. இதுவரையிலும் நடைமுறையில் அந்நகரங்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவும் இப்போது புனித ரோமானியப் பேரரசனிடமிருந்து ஓர் ஒப்பந்தத்தின் மூலமாகப் பெற்ற சட்டபூர்வமான உரிமைகளாக மாறின.

லம்பார்டிய நகரங்களின் வளர்ச்சியில் இன்னொரு மாற்றம் கி. பி. 1183 க்குப் பிறகு ஏற்பட்டது. ஒவ்வொரு நகரமும் வேறொரு நகரத்தைச் சேர்ந்த வீரன் ஒருவனை நகரின் நிர்வாகத் தலைவனாகத் தேர்ந்தெடுத்ததலே இந்த மாற்றமாகும். இப்புதிய தலைவன் "பொடெஸ்டா" (Podesta) என்றழைக்கப்பட்டான். பிரெடரிக் பார்பரோஸாவின் குறுகிய ஆட்சியின்போது அவ்வரசன் ஒவ்வொரு நகரத்திற்கும் பொடெஸ்டா என்ற ஒரு தலைவனை நியமித்தான். ஆனால், லம்பார்டிய நகரங்கள் பார்பரோஸாவைத் தோற்கடித்த பிறகு, தாங்களாகவே வேற்று நாட்டான் ஒருவனைத் தங்கள் நகரத் தலைவனாக ஏற்படுத்திக்கொண்டன. இந்தப் பழக்கத்திற்கு முக்கிய காரணம் நகரங்களில் வாழ்ந்து வந்த நிலமானியப் பிரபுக்களே. போரில் தோற்ற நிலமானியப் பிரபுக்களை லம்பார்டிய நகரங்கள் தங்கள் எல்லைக்குள்ளே வாழும்படி கட்டாயப்படுத்தின. இவ்வாறு நகரவாசிகளான நிலப் பிரபுக்கள் நகர மக்களிடையே குழப்பங்களைத் தூண்டிவிட்டுத்

தங்கீள் அதிகாரத்தைச் சிறிது சிறிதாக நகரங்களிலும் நிலை நாட்டினர். மேலும், நகரங்களுக்கிடையே சண்டைகள் ஏற்படவும் இவர்கள் காரணமாயிருந்தனர். இவ்வாறு நிலமானியப் பிரபுக் களால் குழப்பங்களுக்குள்ளாயிருந்த லம்பார்டிய நகரங்கள் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டு, வலிமை மிக்க வேற்று நாட்டான் ஒருவனைத் தலைவனாக (Podesta) ஏற்று நகரத்தைச் சீரமைக்கும் பொறுப்பை அவனிடம் விட்டன. ஆனால் நகரின் பொது நிர்வாகம் பழைய நிறுவனங்களாகிய கான்ஸல்கள், அறிவுரைக் குழு, பேரவை ஆகியவற்றிடம் இருந்தது.

பொடெஸ்டா என்ற நகரத் தலைவனுக்கு அறிவுரை கூற ஒரு தனிக் குழு இருந்தது. அவன் நகரத்திற்கும் அதன் சட்டங்களுக் கும் புறம்பாக நடப்பதில்லை யென்று உறுதி கூறினான். இவ் வுறுதி மொழியை மீறி நடக்கும்போதெல்லாம் தண்டப் பணம் செலுத்தக் கடமைப்பட்டிருந்தான். பதவியிலிருந்து விலகிய பிறகு, குறிப்பிட்ட காலம் வரை அவன் நகரிலேயே வாழ வேண்டும். ஏனெனில், பதவியிலிருந்தபோது அவன் செய்த குற்றங்கள் பிறகு கண்டுபிடிக்கப்பட்டால் அதற்காகத் தண்டனை பெறவேண்டும். அவனுடைய உறவினர்கள் யாரும் நகரில் வசித்தல் கூடாது. ஆனால், பொடெஸ்டா என்ற தலைவனை இக் கட்டுப்பாடுகளுக்குள் அடக்கி வைத்தல் நாளடைவில் இயலாத காரியமாயிற்று. ஏனெனில், நகரினுள் நிலைபெற்றிருந்த சமூகப் போராட்டங்களும், நகரங்களுக்கிடையே அடிக்கடி நடந்த கல வரங்களும் பொடெஸ்டாவின் அதிகாரத்தை அதிகரித்தன. ஆகவே, கி. பி. 14 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திற்குள் லம்பார்டிய நகரங்களின் பொடெஸ்டா என்ற தலைவர்கள் கிரேக் கக் கொடுங்கோலர்களை (Tyrannis) யொத்தவர்களாக மாறினர்.

டஸ்கனிய நகரங்கள்: (Cities of Tuscany)

ஃபிளாரென்ஸ்: (Florence)

டஸ்கனிய நகரங்களில் மிகச் சிறப்பு வாய்ந்ததும், அவற்றிற் கெல்லாம் எடுத்துக்காட்டாகவும் இருந்த நகரம் ஃபிளாரென்ஸ் நகரமாகும். இந்நகரம் 12 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் டஸ்கனியக் கோமகள் மெட்டில்டா (Countess Matilda) இறந்த பிறகு சுதந்திரம் பெற்றதென்று கூறலாம். ஏனெனில், மெட்டில்டா உயிரோடிருந்தபோது, அவள் அதிகாரத்திற்குட்பட்டிருந்த நக ரத்தின் ஆட்சிக்குழு இப்போது தன்னுரிமையுடன் அதிகாரம் செலுத்த ஆரம்பித்தது. இந்த ஆட்சிக்குழுவில் ஆண்டுக்கொரு முறை நகரத்தின் ஆறு பிரிவுகளிலிருந்தும், பிரிவுக்கு இருவ ராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு கான்ஸல்கள் உறுப் பினர்களாக இருந்தனர். நிலமானியப் பிரபுக்களும், நகரத்தின்

மற்றப் பெருங்குடிகளுமே கான்ஸல்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். நூறு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினரைக் கொண்ட ஓர் அறிவுரைக் குழு ஆட்சிக்குழுவிற்குத் துணை செய்தது. இந்த அறிவுரைக் குழுவில் பெரும்பாலோர் நகரத்தின் தொழிலாளராகவும், வணிகர்களாகவும் இருந்தனர். இறுதியாக, மக்களனைவரையும் கொண்ட பேரவை (Parlamento) யானது சில முக்கியமான காரியங்களில் தீர்ப்புக் கூறுவதற்காகக் கூட்டப் பட்டது. ஆனால், அக்காலத்தில் அப்பேரவை பெயரளவில் இருந்ததேயொழிய, நகர நிர்வாகத்தில் சிறப்பிடம் பெறவில்லை.

கி. பி. 1129 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரபுக்களுக்கும் தொழிலாளருக்குமிடையே ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாக இந்த அரசாங்க அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. முதலாவதாக, நாட்டில் அமைதியை நிலைநாட்ட மற்ற இத்தாலிய நகரங்களைப் போல் ஒரு பொடெஸ்டா (Podesta) தேர்ந்தெடுக்கப் பட்டான். இரண்டாவதாகக் கி. பி. 1250 இல் மக்களின் படைத் தலைவன் (Capitano-Del-Popolo) ஒருவன் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவன் தலைமையில் மக்கள் படையொன்று திரட்டப்பட்டது. இந்த இரண்டு மாற்றங்களும் ஏற்பட்ட பிறகு நகரின் அரசாங்க அமைப்பு மிகவும் சிக்கலானதாக இருந்தது. அஃதாவது கி. பி. 1267 க்குப் பிறகு நகர அரசாங்கம் மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது. முதலாவது, ஆண்டுக்கொரு முறை தேர்ந்தெடுக்கப் பட்ட பொடெஸ்டா என்ற அயல்நாட்டுப் பிரபு அயல் நாட்டுத் தொடர்புகளில் நகரின் பிரதிநிதியாகவும், நகரப் படையின் தளபதியாகவும், தலைமை நீதிபதியாகவும் இருந்தான். இவனுக்கு அறிவுரை கூற இரண்டு குழுக்கள் இருந்தன. ஒன்றில் 90 உறுப்பினர்களும், மற்றொன்றில் 300 உறுப்பினர்களும் இருந்தனர். இரண்டாவதாக, மக்களின் பிரதிநிதிகள் பன்னிரண்டு பேரைக் (Buoni Uomini) கொண்ட ஒரு குழு நகரின், அன்றாட நிர்வாகத்தைக் கவனித்து வந்தது. இக்குழுவிற்கு அறிவுரை கூற நூறு பேரைக் கொண்ட இன்னோர் அவை இருந்தது. இந்த அவையின் உறுப்பினரை மக்கள் தேர்ந்தெடுத்தனர். மூன்றாவதாக, குவெல்ஃப் (Guelf) நகரமொன்றிலிருந்து ஃபிளாரென்ஸ் நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் படைத்தலைவன் (Capitano Del Popolo), மக்கள் படையின் தலைவனுக இருந்து மக்களுக்குப் பிரபுக்களால் இன்னல்கள் ஏதும் ஏற்படாமல் தடுத்து வந்தான். இத்துறையில் அவனுக்கு அறிவுரை கூற இரண்டு குழுக்கள் இருந்தன.

மேலே கூறப்பட்ட ஐந்து குழுக்களிலும் பெரும்பாலோர் ஆர்ட்டி (Arti) எனப்பட்ட தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளாக

இருந்தனர். ஆகவே இந்த அரசாங்க அமைப்பில் பிரபுக்களின் செல்வாக்கு வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்தது. கி. பி. 1282 இல் நகரின் செயல்துறை அதிகாரம் நகரின் ஆறு பெரும் தொழிற்றுறைகளின் பிரதிநிதிகளடங்கிய ஒரு குழுவினிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பிரதிநிதிகள் இரண்டு மாதங்களுக்கொருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டனர். பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் இப்பிரதிநிதிகள் நகரின் பன்னிரண்டு தொழிற் சங்கங்களின் (Arti) தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிரபுக்கள் செயல்துறை அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது என்ற விதியும் இக்காலத்தில் ஏற்பட்டது. மேலும் இக்காலத்தில் பிரபுக்களால் ஏற்பட்ட சச்சரவுகளைத் தடுக்கும் பொருட்டு, "நீதி ஆணையறிக்கைகள்" வெளியிடப்பட்டன. இவற்றை நிர்வகிப்பதற்காக கான்ஃபலோனியர் (Gonfalonier of Justice) என்ற ஓர் அதிகாரி ஏற்படுத்தப்பட்டார். இவருடைய தலைமையில் நாலாயிரம் மக்களைக் கொண்ட ஒரு படையும் ஏற்படுத்தப்பட்டது. இந்த அதிகாரி ஆண்டுக்கொரு முறை பன்னிரண்டு தொழிற் சங்கங்களின் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். [இந்த அரசாங்க அமைப்பில் மேலும் ஏற்பட்ட சிக்கலான மாறுதல்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமானால் சிட்ஜ்விக் (Sidgwick) எழுதியுள்ள "Development of European Polity" என்ற நூலைப் பார்க்கவும்.]

இவ்வாறு வளர்ச்சியடைந்திருந்த ஃபிளாரென்ஸ் நகரத்தில் 14 ஆம் நூற்றாண்டில் தொழிற்றுறையைச் சேர்ந்தவர்களிடையே இரு பிரிவுகள் ஏற்பட்டன. செல்வந்தர்களான தொழிலதிபர்கள், சிறு தொழிலாளிகள் என்ற இவ்விரு பிரிவினருக்குமிடையே இப்போது முரண்பாடுகள் ஏற்பட்டன. இவை காரணமாகத் தோன்றிய குழப்பங்களிலிருந்து நகரை மீட்பதற்கு நகர நிறுவனங்களால் முடியாமற் போகவே, கி. பி. 1342 இல் ஏதன்ஸின் கோமகனை (Duke of Athens) வால்ட்டர் டி பிரையென் (Walter De Brienne) என்பவரை நகரப் பேரவை (Parlamento) நகரத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. இத்தலைவரின் வீழ்ச்சிக்குப் பிறகு ஏறக்குறைய நூறு ஆண்டுகள் வரை நகரில் பெரும் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டன. இக்குழப்பங்களில் தொழிலதிபர்களும், சிறு தொழிலாளரும் மாறி மாறி அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இறுதியில் 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மெடிசி (Medici) மரபைச் சேர்ந்தவர்கள் மக்களின் ஆதரவைப் பெற்று, ஃபிளாரென்ஸில் முடியாட்சியை ஏற்படுத்தினார்கள். மற்ற இத்தாலிய நகரங்களைப் போலல்லாமல் ஃபிளாரென்ஸில் மக்களாட்சி, அஃதாவது சாதாரணத் தொழிலாளருக்குச் செல்வாக்களித்த ஆட்சி, சிறிது காலமாகிலும் நிலைத்திருந்தது.

அதன் பிறகே வல்லாட்சி (Despotism) ஏற்பட்டது இங்குக் குறிப்பிடத்தக்கது.

மற்ற ஐரோப்பிய நாடுகள்

இங்கிலாந்திலும், பிரான்ஸிலும் இருந்த நகரங்களின் சமூக அமைப்பு மேல் கூறிய நகரங்களைப் போன்றிருந்தது. ஆனால் இந்நாடுகளில் வலிமையுள்ள நடு அரசாங்கம் நிலைத்திருந்ததால், நகரங்கள் தன்னுரிமை பெற்ற அரசுகளாக மாறவில்லை. குறிப்பாக, இங்கிலாந்தில் நார்மானியரது வருகைக்குப் பிறகு நகரங்களின் சுதந்திரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்நகரங்கள் நார்மானியர் அமைத்த அரசாங்க அமைப்பின் பகுதிகளாகவே கருதப்பட்டன. பிரான்ஸின் நடுப் பகுதியிலும் மேற்கிலும் அமைந்திருந்த நகரங்களும் ஆங்கிலேய நகரங்களைப் போலவே நடு அரசாங்கத்தின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தன. ஆனால் வடக்கிலும் தெற்கிலும் இருந்த நகரங்கள் சிறிதளவு சுதந்திரம் பெற்றிருந்தன. தெற்கிலிருந்த நகரங்களின் அரசாங்க நிறுவனங்கள் லம்பார்டிய நகரங்களின் நிறுவனங்களை யொத்திருந்தன. வடக்கிலிருந்த ஏமியன்ஸ் (Amiens), போவே (Beauvais), சோய்சன்ஸ் (Soissons) போன்ற நகரங்கள் வணிகரையும், தொழிலாளரையும் கொண்ட தன்னாட்சி நிறுவனங்களைப் பெற்றிருந்தன. ஆனால், பிரான்ஸ் நாட்டின் நடு அரசாங்கம் வலிமை பெற்ற காலத்தில் இந்நகரங்களெல்லாம் தம் சுதந்திரத்தை இழந்தன. ஸ்பெயின் நாட்டில் கி. பி. 11 ஆம் நூற்றாண்டிலிருந்தே தன்னுரிமை பெற்ற நகரங்கள் தோன்றி வளர்ந்தன. இவற்றின் அரசியல் அமைப்பும் மற்ற இடைக்கால நகரங்களின் அமைப்பைப் போன்றிருந்தது.

இடைக்கால நகரங்களுக்கும் பண்டைக்கால நகரங்களுக்கும் ஒப்புமை

ஏறக்குறையப் பதினான்கு நூற்றாண்டுகளால் பிரிக்கப்பட்டுள்ள பண்டைக்கால நகரங்களையும் இடைக்கால நகரங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சில ஒற்றுமைகளும், சில வேற்றுமைகளும் புலனாகின்றன. இவற்றைச் சற்றே ஊன்றி நோக்குங்கால், மனித வரலாற்றின் இந்தக் குறுகிய காலத்தில் "அரசியல் விலங்கான" மனிதன் எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருந்தான் என்பதும், இடைக்கால மனிதன் பண்டைய மனிதனுக்கு எவ்வகைகளில் கடன்பட்டிருந்தான் என்பதும் தெற்றென விளங்கும். மேலும், சிறு கூறுகளாக அமைக்கப்பட்ட நகர அரசுகளின் வரலாறுகளில் காலப் போக்கினால் பெரும் மாறுதல்கள் யாதும் ஏற்படாததும் விளங்கும். காலத்தில் மாற்றமிருந்தபோதிலும் சூழ்நிலையில் மாற்றமில்லாவிடில், மனிதன் தன் அரசியல் தொடர்பு

களை ஒரே வகையில்தான் நிர்ணயிக்கிறான் என்பது இந்த ஒப்புமையிலிருந்து நன்கு புலனாகும். ஆகவே, இப்போது பண்டைய நகரங்களுக்கும் இடைக்கால நகரங்களுக்கும் உள்ள ஒற்றுமைகளைக் கவனிப்போம்.

ஒற்றுமைகள்

பூர்வீக மிலேச்ச நிலை (Primitive Barbarism) யிலிருந்து கிரேக்க நகர அரசுகள் தோன்றியதைப் போலவே, இருண்ட காலத்தின் முடிவில் ஏற்பட்டிருந்த மிலேச்ச நிலையிலிருந்து இடைக்கால நகரங்கள் தோன்றின. கிரேக்க நகரங்களுக்கு இயற்கையான சில பாதுகாப்புகள் இருந்தன. ஆனால், இடைக்கால நகரங்கள் சுவர்களைப் போன்ற செயற்கைப் பாதுகாப்புகளை ஏற்படுத்திக்கொண்டன. இவ்வாறான பாதுகாப்புகளைப் பெற்றிருந்த இருவகை நகரங்களும் தம் வணிகத்தையும் கைத்தொழிலையும் வளர்த்துச் செல்வப் பெருக்குடன் வாழ்ந்தன.

குறுகிய நிலப்பரப்பில் நெருங்கிய தொடர்புகொண்டு வாழ்ந்ததால், கிரேக்க நகரக் குடிகளைப் போலவே இடைக்கால நகரக் குடிகளிடையேயும் ஆழ்ந்த நாட்டுப் பற்றும், அரசியலில் ஊக்கமும் இருந்ததைக் காணலாம். நகரத்தின் நலனும் தனி மனிதனுடைய நலனும் ஒன்றுக் கருதப்பட்டதே இந்தப் பற்றுக்கும் ஊக்கத்திற்கும் காரணமாயிருந்தது.

கிரேக்க நகரங்களின் வரலாற்றின் முற்காலத்தில் நகரக் குடிகளனைவரும் தம்மிடையே நிலவியிருந்த வேறுபாடுகளை மறந்து ஒன்று கூடிப் பாரசீகர்களை எதிர்த்து வெற்றி கண்டனர். இது போலவே இடைக்கால நகரங்களும் தம் வரலாற்றின் முற்காலத்தில் பிரபுக்கள், எளியோர் என்ற வேறுபாடின்றி ஒன்றுபட்டு நகரை அயலாரிடமிருந்து பாதுகாத்தன. எடுத்துக்காட்டாக, லம்பார்டிய நகரங்கள் ஒன்றுசேர்ந்து பிரெடரிக் பார்பரோஸாவை எதிர்த்துப் பெற்ற வெற்றி கிரேக்க நகரங்கள் பாரசீகரின் மீது கொண்ட வெற்றியை யொத்திருந்தது எனக் கூறலாம்.

கிரேக்க நகரங்களிடையே பிற்காலத்தில் பிளவுகள் ஏற்பட்டு அதன் காரணமாக ஸ்பார்ட்டாவுக்கும் (Sparta) ஏதன்ஸுக்கும் பிலப்பனீசியப்போர் (Pelopponesian War) மூண்டதைப் போலவே, இடைக்கால நகரங்களிடையேயும் பல பிரிவுகளும், பூசல்களும் இருந்தன. உதாரணமாக, இத்தாலியில் லம்பார்டிய நகரங்களுக்கும் ரோமானிய நகரங்களுக்கும் நடந்த நீண்ட போராட்டங்கள் இங்குக் குறிப்பிடத்தக்கவை. மேலும், கிரேக்க நகரங்களில் சமூகப் பிரிவுகளிடையே இருந்த முரண்பாடுகளின் காரணமாக நகரங்களிடையே போர் மூண்டதென்று பார்த்தோம். இப்

போர்களில் ஒரு நகர மக்கள் வேற்று நாட்டாரின் உதவியைத் தேடினர். இதுபோலவே இடைக்கால நகரங்களிலும் செல்வந்தருக்கும் ஏழியோருக்கும் நேர்ந்த சச்சரவுகளின் காரணமாக ஒரு நகர நிகழ்ச்சிகளில் இன்னொரு நகரம் தலையிட வழியேற்பட்டது.

இடைக்கால நகரங்களிலும் பண்டைய நகரங்களைப் போலவே நாகரிகம் தழைத்தோங்கிச் செல்வப் பெருக்கேற்பட்ட போது, மக்களுக்கு ஆடம்பர வாழ்க்கையில் பற்று ஏற்பட்டது. இதன் காரணமாக நகரப் பாதுகாப்பானது கூலிப் படைகளின் (Mercenaries) பொறுப்பில் விடப்பட்டது. மக்களிடையே தன்னலம் ஓங்கி நாட்டுப் பற்றுக் குறைந்தது. ஆகவே நகர அரசுகளுக்கு நாட்டரசுகளினால் இடையூறு நேர்ந்தபோது, நகரங்கள் அதை எதிர்த்து நிற்கும் ஆற்றலின்றி நலிந்து போயின.

இடைக்கால நகரங்களுக்கும் பண்டைய நகரங்களுக்கும் அரசாங்க அமைப்பிலும், அதன் வளர்ச்சியிலும் சில ஒற்றுமைகள் இருந்தன. உதாரணமாக, இவ்விரு வகையான நகரங்களிலும் முதலில் சிறுகுழுவாட்சி நிலவியிருந்தது. மக்களின் பேரவை பெயரளவில் மட்டும் இருந்தது. பண்டைய கிரேக்க நகரங்களிலிருந்த அகோரா (Agora) எனும் நிறுவனம் இவ்வகையில் இடைக்கால மக்களின் சட்டமன்றத்தை (Parliament) யொத்திருந்தது. ஆனால், நாளடைவில் கிரேக்க நகரங்களைப் போலவே இடைக்கால நகரங்களிலும் பிரபுக்களுக்கும், மக்களுக்கும் மாறுபாடு ஏற்பட்டு இறுதியில் மக்களாட்சி நிலவியது. ஆனால், இவ்விரு வகை நகரங்களிலும் மக்களாட்சி விரைவில் சிதைந்து மீண்டும் முடியாட்சி தோன்றியது. இவ்வாறுக, பண்டைக் கால நகரங்களின் அரசாங்க வரலாற்றுக்கும் இடைக்கால நகரங்களின் அரசாங்க வரலாற்றுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமைகள் இருத்தலைக் காண்கிறோம்.

வேறுபாடுகள்

கிரேக்க, ரோமானிய நகரங்களின் குடிகள் நகரைச் சுற்றியிருந்த நாட்டுப்புறத்தில் வாழ்ந்தபோதிலும், அரசியல் தொடர்பு போன்ற காரணங்களினால் நகரத்திற்கு வந்தனர். இவ்வாறு குடிகளனைவரும் நகர வாழ்க்கையில் முழுப்பங்கு கொண்டிருந்தனர். நகர நிர்வாகத்திலும் அவர்கள் எல்லோரும் உரிமை பெற்றிருந்தனர். ஆனால், இடைக்காலத்தில் நகரின் குடிமையுரிமை நகரத்தில் வாழ்ந்து வந்த மக்களுக்கே அளிக்கப்பட்டது. மேலும், நகர வாசிகளுக்கும் நாட்டுப்புறப் பிரபுக்களுக்கும் எப்போதும் சச்சரவுகள் இருந்து வந்தன. பண்டைக் கால நகர அரசு ஒரு விவசாய சமூ

கத்தை ஆதாரமாகக் கொண்டிருந்தது. இச்சமூகத்தில் சிறப் பெய்தியிருந்த நிலப் பிரபுக்கள் சிலரே முதலில் அரசாங்க அதி காரம் பெற்றிருந்தனர். ஆனால் இடைக்கால நகரங்கள் சுற்றிலு மிருந்த விவசாய அல்லது நிலமானிய சமூகத்தினின்று தனித்து நின்றன. நிலமானியப் பிரபுக்களும் பழைய ட்யூட்டானிய வழக் கப்படி நகரங்களிலிருந்து விலகி நாட்டுப்புறங்களில் கோட்டை கள் அமைத்து வாழ்ந்தனர். இடைக்கால நகர சமூகத்தில் வணி கரும் தொழிலாளரும் இருந்தனர். கிரேக்க நகரங்களில் மக்க ளாட்சி நிலவியபோதுகூடத் தொழிலாளர் பெரும்பாலும் அடிமை நிலையிலே இருந்தனர். ஆனால் இடைக்கால நகரங்களில் மக்க ளாட்சிக்கு அடிகோலியவர்கள் தொழிலாளர்கள் ஆவர். மேலும் கிரேக்க நகரங்களில் மக்களாட்சியானது தனிமனிதனுடைய உரி மைகளை நிலைநாட்டியது. இடைக்கால நகரங்களில் அது தொழிற் சங்கங்களின் உரிமையை வலுப்படுத்தியதே தவிர, அத னால் தனிமனிதனுக்கு வெற்றி கிடைத்ததென்று கூற முடியாது.

பழங்கால நகரங்கள் இறைமையுடன் திகழ்ந்த தனியரசுக ளாகும். இடைக்கால நகரங்களோ பெருமளவில் சுதந்திரம் பெற் றிருந்தபோதிலும், பெரிய அரசுகளின் பகுதிகளாகவே இருந்தன. அவை முழுமையான இறைமை பெற்றிருக்கவில்லை.

கிரேக்க நகரங்களிடையே தோன்றிய பூசல்கள் சில ராட்சி, மக்களாட்சி என்ற இவ்விரு வகை எதிரான கோட்பாடுகளால் உண்டானவை. ஆனால், இடைக் காலத் தில் நகரங்களிடையே தோன்றிய சச்சரவுகள் அரசியல் கோட்பாடுகளின் காரணமாக எழாமல், போட்டி மனப் பான்மையின் காரணமாகவே ஏற்பட்டன. மேலும், நகரச் சமூகங்களுக்குள் இரண்டு விதப் பிரிவுகள் இருந்தன. முதலா வது, நிலப் பிரபுக்கள், தொழில் வணிகத் துறைகளைச் சேர்ந்த வர்கள் ஆகியவர்களிடையே இருந்த பிளவு. இரண்டாவது, தொழிலதிபர்களுக்கும் சிறு தொழிலாளிகளுக்குமிடையே இருந்த மூரண்பாடு. இப்பிரிவுகள் கிரேக்க நகரங்களில் இடைக்கால நகரங்களைப் போல் தெளிவாகக் காணப்படவில்லை.

இடைக்கால நகரங்களில், முக்கியமாக இத்தாலிய நகரங்க ளில், மக்களாட்சியில் எல்லா மக்களும் பங்கு பெறவில்லை. சீரமைக்கப்பட்டிருந்த சில தொழிற்றுறைகள் மட்டுமே பங்கு பெற்றன. மேலும், அது கிரேக்க நகரங்களின் மக்களாட்சியைப் போன்று நேர்முகமானதாக இல்லாமல், தொழிலதிபர்களின் சிறு குழுவாட்சியாகவே இருந்தது.

இறுதியாக, கிரேக்கக் கொடுங்கோலர்கள் அரசியலமைப் புக்குட்படாது கோலோச்சினர். ஆனால், இடைக்கால நகரங்

களின் கொடுங்கோலர்கள் சட்டபூர்வமான அரசர்களாகக் கருதப்பட்டனர். கிரேக்கக் கொடுங்கோலர்கள் மக்கள் அரசியல் உணர்வு பெருத காலத்தில் தோன்றினர். ஆனால், இடைக்காலக் கொடுங்கோலர்கள் அரசியல் உணர்வு பெற்றிருந்த தொழில், வணிகச் சங்கங்களின் ஆதரவுடன் அதிகாரம் பெற்றனர். எனவே தான் அவர்கள் அரசியலமைப்புக்கு உட்பட்டவர்களாகக் கருதப் பட்டனர்.

---

7. இடைக்கால பிரதிநிதித்துவ மன்றங்கள்

இடைக்காலத்தின் பிற்பகுதியில், அஃதாவது நிலமானிய முறையின் நலிவுக்கும் வரம்பில்லா முடியாட்சிகளின் எழுச்சிக்கும் இடைப்பட்ட ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகளில், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பிரதிநிதித்துவ மன்றங்கள் தோன்றின. இம் மன்றங்களில் பிரபுக்கள், சமய குருக்கள், நகரங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இருந்தனர். பிரபுக்கள் மட்டும் அடங்கிய மன்றங்களும் இக்காலத்தில் இருந்தன. அவை இடைக் காலத்தின் முற்பகுதியிலிருந்தே கூட்டப்பட்டு வந்தன. எடுத் துக்காட்டாக, அரசனுடைய கீழாட்கள் அடிக்கடி கூட்டப்பட்டன ரென்றும், அவர்கள் அப்போது அவனுக்கு அறிவுரை கூறின ரென்றும் முன்பு பார்த்தோம். பெருங்குடிகளை மட்டும் கொண்ட இம்மன்றங்களில் நகரங்களின் பிரதிநிதிகளும் சேர்க்கப்பட்டது ஒரு முக்கியமான மாற்றமாகும். ஏனெனில் இவ்விரு பகுதியினரை யும் கொண்ட மன்றங்கள் புதியதொரு நிலையை அடைந்தன. அப்போது அவைகள் அரசனது ஆணை தவறாது நடக்கும் நிலை மாறி, அவனைக் கட்டுப்படுத்தும் நிறுவனங்களாக மாறின. ஆகவேதான் சிட்ஜ்விக் (Sidgwick) என்ற ஆசிரியர் பிரதிநிதித் துவ மன்றங்கள் தழைத்தோங்கிய இக்காலத்தை "மன்றங்களின் கட்டுக்கடங்கிய முடியாட்சிக் காலம்" எனக் குறிப்பிடுகிறார்.

நிலமானிய முறையின் காரணமாகப் பிளவுபட்டிருந்த ஐரோப்பிய நாடுகள் இக்காலத்தில் அதனின்று மீண்டு, தேசிய வளர்ச்சி அடைந்து வந்தன. இது பிரதிநிதித்துவ மன்றங்கள் தோன்றியதிலிருந்து நன்கு புலப்படுகின்றது. இம் மன்றங்கள் பல்வேறு நாடுகளில் பல்வேறு காரணங்களால் தோன்றி வளர்ந் தன. சில நாடுகளில், குறிப்பாக இங்கிலாந்திலும், பிரான்ஸிலும் அரசன் தனது பணமுடையைத் தீர்க்க இம் மன்றங்களைக் கூட்டினன். இந்நாடுகளில் அரசன் பெற்றுவந்த நிலமானியப் பணமானது அவனது கூலிப்படைகளுக்குச் சம்பளம் கொடுக்க வும், வேறு செலவுகளைச் செய்யவும் போதாமலிருந்ததால், அதிகப்

பொருள் பெறுவதற்காக அரசன் பிரதிநிதிகளின் மன்றத்தைக் கூட்டினான். ஆகவே, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் பிரதிநிதித்துவ மன்றங்கள், மேலிருந்து அரசனின் முயற்சியால் தோன்றின. ஜெர்மனி போன்ற வேறு சில நாடுகளில் இம் மன்றங்கள், கீழிருந்து மக்களின், சிறப்பாக நகரங்களின், முயற்சியால் எழுந்தன. இந்நாடுகளில் இடைக்காலத்தில் காணப்பட்ட பல்வேறு சங்கங்களே பிற்காலத்தில் பிரதிநிதிகளின் மன்றங்களாக மலர்ந்தன என்று கூறலாம். எவ்வாறு தோன்றியபோதிலும், இம்மன்றங்கள் இடைக்காலத்தின் பிற்பகுதியில் ஐரோப்பாவின் அரசியல் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தன என்று சொன்னால் மிகையாகாது. ஆனால், இங்கிலாந்தைத் தவிர ஏனைய ஐரோப்பிய நாடுகளில் இவைகள் நெடுங் காலம் நிலைத்திருக்கவில்லை. முதலில் அரசனது அதிகாரத்தைக் கட்டுப்படுத்திய இந்நிறுவனங்கள் 16 ஆம் நூற்றாண்டில் வரம்பில்லா முடியாட்சிகள் எழுந்தபோது நலிந்துபோயின. ஆனால், இங்கிலாந்தில் மட்டும் அது தடையின்றி வளர்ந்தது மல்லாமல், தற்காலத்திலும் அந்நாட்டின் அரசியல் அமைப்பின் அணிகலனாக மிளிர்கிறது. அது ட்யூடர் (Tudor) மரபரசர்களின் காலத்தில் சிறிது வலுவிழந்து காணப்பட்டபோதிலும், அவர்களுக்குப் பின்வந்த ஸ்டுவர்ட் (Stuart) மரபினரின் வல்லாட்சியை எதிர்த்து வெற்றியும் கண்டது. இவ்வெற்றியின் அடிப்படையில் தான் ஆங்கில நாட்டின் அரசியல் அமைப்புக்குட்பட்ட அரசாங்கம் (Constitutional Government) நிலைநாட்டப்பட்டுள்ளது.

ஜெர்மனி

பதினான்காம் நூற்றாண்டில் ஹன்ஸா கூட்டமைப்பைச் (Hansa League) சேர்ந்த நகரங்களின் பிரதிநிதிகள் கூடிய மன்றமே ஜெர்மனியில் முதன்முதலில் தோன்றிய பிரதிநிதித்துவ மன்றமாகும். இம்மன்றம் வாணிக வழிகளைப் (Trade Routes) பாதுகாத்தல், உறுப்பினரிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தல், அவர்களுக்கு அயல்நாடுகளில் வாணிக உரிமைகளைப் பெற்றுத் தருதல் போன்ற செயல்களை ஆற்றி வந்தது. 14 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இம்மன்றம் அந்நகரங்களின் உட்சிக்கல்களையும் ஒழுங்குபடுத்தி வந்தது. இடைக்காலத்தின் பிற்பகுதியில் இதுபோன்ற பல பிரதிநிதித்துவ மன்றங்கள் ஜெர்மனியில் தோன்றியிருந்தன. நகரங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட மன்றங்களைத் தவிர வேறுவிதமான மன்றங்களும் இக்காலத்தில் வளர்ச்சி அடைந்திருந்தன. இக்காலத்தில் ஜெர்மனியில் சமூகப் பிரிவுகள் ஒவ்வொன்றும் தம் குறிக்கோள்களையும் உரிமைகளையும் காப்பதற்காகச் சங்கங்கள் அமைத்துக்கொள்வது வழக்க

மாக இருந்தது. எடுத்துக்காட்டாக, கீழ்ப் பிரபுக்கள் (Lesser Nobility), மதக் குருக்கள், வீரர்கள் (Knights), சாதாரண மக்கள் போன்ற சமூகப் பிரிவினர் தமக்கென்று தனிச் சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டனர். இத்தகைய சங்கங்களிலிருந்தே 14ஆம், 15ஆம் நூற்றாண்டுகளில் 'டயட்' (Diet) என்ற தேசிய பிரதிநித்துவ மன்றம் தோன்றி வளர்ந்தது. ஆனால் பிரபுக்கள், மதக்குருக்கள், நகரங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக்கொண்ட இம்மன்றம் நிலமானியப் பிரிவுகளின் ஒருவிதக் கூட்டமைப்பாக இருந்ததேயன்றி, வலிமை மிக்க நடு நிறுவனமாகத் திகழவில்லை. மேலும் 1356 இல் போப்பாண்டவரின் ஆணைப்படி பேரரசைத் தேர்ந்தெடுக்கும் உரிமை 'தேர்வாளர்' (Electors) என்றழைக்கப் பட்ட ஏழு பெரும் பிரபுகளுக்கு வழங்கப்பட்டதால், நாட்டில் வேற்றுமைகள் வளர்ந்து நாடு வலிமை யிழந்தது. இவ்விதச் சூழ்நிலையில் பிரதிநிதித்துவ மன்றம் வளர்ச்சியுறுவது கடின மாக இருந்தது. முப்பதாண்டுப் போருக்குப் (Thirty Years' War 1618 - 48) பிறகு சிற்றரசர்களின் செல்வாக்கு மேலும் வளர்ந்து, நாடு மேலும் வலுவிழந்தபோது, ஜெர்மனியில், இடைக்காலப் பிரதிநிதித்துவ மன்றம் சீர்குலைந்தது.

பிரான்ஸ்

13ஆம் நூற்றாண்டிலே பிரான்ஸில் நிலமானிய முறை நலிவுற்று, அரசனுடைய அதிகாரம் நாடு முழுவதும் நிலவியிருந்தது. ஆகவே, பிரான்ஸில் தோன்றிய "எஸ்டேட்ஸ் - ஜெனரல்" (Estates General) என்ற பிரதிநிதித்துவ மன்றம் அரசனது ஆணைக்கிணங்கக் கூட்டப்பட்டதேயன்றி, அவனததிகாரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் கூட்டப்பெறவில்லை. இம் மன்றம் நெடுங்காலம் வரை பிரபுக்கள், மதக்குருக்கள் ஆகிய இரு பெரும் சமூகப் பிரிவுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மன்றமாக இருந்தது. ஆனால், 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 4-ஆம் ஃபிலிப் என்ற மன்னன் பிந்திய இடைக்காலச் சமூகத்தின் மூன்றாவது பெரும் பிரிவாகிய நகர மக்களின் பிரதிநிதிகளையும் மன்றக் கூட்டத்திற்கு அழைத்தான். ஆகவே, கி. பி. 1302-இல் 4ஆம் ஃபிலிப் கூட்டிய பிரதிநிதித்துவ மன்றம் சமூகத்தின் முப்பெரும் வகுப்புகளாகிய (Three Estates) பிரபுக்கள், மதக்குருக்கள், நகர மக்கள் ஆகியோரின் பிரதிநிதிகளை உறுப்பினராகக் கொண்டிருந்தது. குடியானவர்களைத் தவிர நாட்டில் எல்லாச் சமூக வகுப்புகளும் 'எஸ்டேட்ஸ்-ஜெனரலி'ல் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன என்று கூறலாம். குடியானவர்களின் நலன்களைக் காக்க அவர்களுடைய நிலப்பிரபுக்கள் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர் என்று எண்ணப்பட்டது போலும்.

இவ்வாறு 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பிரான்ஸ் நாட்டு மன்னர்கள் பரந்த அடிப்படையில் பிரதிநிதித்துவ மன்றத்தைக் கூட்டியதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவதாக, போப்பாண்டவர்களுடன் பகைமை கொண்டிருந்த பிரெஞ்சு மன்னர்கள், நாடு முழுவதும் தமது ஆணைக்கடங்கித் தமக்கு ஆதரவளிக்கக் காத்திருந்ததெனப் போப்பாண்டவர்களுக்குக் காட்டுவதற்காகப் பிரதிநிதித்துவ மன்றத்தைக் கூட்டினர். இரண்டாவதாக, இதுவரை அரசன் தனக்குச் சேர வேண்டிய வரிப்பணம் போன்ற வருவாயைத் தன் கீழாட்களிடமிருந்து தனித்தனியாகப் பெற்றுவந்தான், இம்முறையில் பல இக்கட்டுகள் இருந்தன. அரசன் தனக்குப் பொருள் தரக்கூடியவர்களை எல்லாம் குறிப்பிட்ட காலத்தில் ஓரிடத்தில் ஒன்றுகக் கூட்டினால், அவர்களிடமிருந்து பணம் திரட்டுவதும், கடன் கேட்பதும் எளிதாக இருக்குமல்லவா? அதற்காகவே பிரெஞ்சு மன்னர்கள் பிரதிநிதித்துவ மன்றத்தைக் கூட்டினர்கள். மேலும் இக்காலத்தில் பிரெஞ்சு மன்னர்கள் ஒரு பெரிய நாட்டைக் கட்டியாள முயன்று கொண்டிருந்ததாலும், போப்பாட்சியுடன் பொருத வேண்டியிருந்ததாலும் அவர்களுக்குப் பண நெருக்கடி ஏற்பட்டிருந்தது. இந்நெருக்கடியைத் தீர்க்க பிரதிநிதிகளின் மன்றம் பெருந் துணையாக இருந்தது. முக்கியமாக மூன்றும் வகுப்பினராகிய நகர மக்களின் உதவி அரசனுக்குத் தேவையாக இருந்தது.

இவ்வாறு அரசன் தனது பணமுடையைத் தீர்ப்பதற்காகக் கூட்டிய பிரதிநிதி மன்றம் நாளடைவில் அவனது ஆணைக்கே வரம்பிடத் தொடங்கியது. இப்போக்கைச் சில நாடுகளின் பிந்திய இடைக்கால வரலாற்றில் காணலாம். ஆங்கிலப் பிரதிநிதித்துவ மன்றத்தின் வரலாறு இதற்கோர் எடுத்துக்காட்டாகும். பிரான்ஸிலும் 'எஸ்டேட்ஸ் ஜெனரல்' மூன்றும் வகுப்புப் பிரதிநிதிகளால் உந்தப்பட்டு அரசாங்கத்திலும், சட்டம், நிர்வாகம் போன்ற துறைகளிலும் தலையிட முற்பட்டது. குறிப்பாக கி. பி. 1357, 1413 ஆம் ஆண்டுகளில் நாட்டில் குழப்பங்கள் மலிந்திருந்தபோது, பிரதிநிதிகளின் மன்றம் அரசாங்கத்தில் தலையிட்டு மன்னனின் அதிகாரத்தைக் குறைத்தது. ஆனால், பிரெஞ்சு மன்றம் அரசனின் அதிகாரத்தை வரையறுப்பதில் ஆங்கில மன்றத்தைப் போல் வெற்றி பெறவில்லை. இதற்கு முக்கிய காரணம் பிரபுக்களுக்கும் மூன்றும் வகுப்பினராகிய நகர மக்களுக்குமிடையே இருந்த வேறுபாடுகளேயாகும். மன்னன் தனக்குத் தேவையான நிதியில் பெரும் பகுதியை மூன்றும் வகுப்பினரிடமிருந்தே பெற்று வந்தான். மன்னனுக்காக மதக் குருக்கள் வழிபாடுகள் செய்ய

வேண்டும், பிரபுக்கள் படைக்கலம் ஏந்திப் போர் செய்ய வேண்டும், சாதாரண மக்கள் பணவுதவி செய்யவேண்டும் என்பது பிரான்ஸில் அக்காலத்தில் நில்விவந்த கொள்கை. அதன்படி முதலிரு வகுப்புகளும் நிலவரி (Taille) செலுத்த வில்லை. அவ்வரிப் பளு முழுவதும் சாதாரண மக்கள் மேலே விழுந்தது. அவ்வரி தவிர வேறு பல வரிகளையும் அவர்கள் செலுத்தி வந்தனர். வரி செலுத்துவதிலிருந்த இவ்வேறுபாடு களின் காரணமாகச் சமூக வகுப்புகளிடையே பிளவுகள் காணப் பட்டன. ஆகவே, அவை ஒன்று சேர்ந்து அரசனின் அதிகாரத் தைக் குறைக்க முடியாமற் போயிற்று. ஏறக்குறைய ஒரு நூற் றாண்டளவாக மூன்றும் வகுப்பினர் தனித்து நின்று, தம் குறை களைத் தீர்ப்பதற்காக மன்னனுடன் போராடி வந்தனர். இதன் விளைவாக மன்னன் நிலவரியை நிரந்தர வரியாக்கி (Taille Perpetuelle) மூன்று வகுப்பினர் மேலும் விதிக்க இசைந்தான். கி. பி. 1484 இல் பிரதிநிதிகளின் மன்றத்தை ஈராண்டிற்கொரு முறை கூட்டவும் இணங்கினன். ஆனல், பிரதிநிதித்துவ மன்றம் வலிமையற்றிருந்ததால், இவ்விரு ஒப்பந்தங்களும் நடைமுறையில் யாதொரு பயனையும் அளிக்கவில்லை. மன்னன் தனது விருப்பப் படியே வரி விதித்துத் தனக்குத் தேவையான காலத்தில்தான் மன்றத்தைக் கூட்டி வந்தான். சமூக வகுப்புகளிடையே வளர்ந்து வந்த பிணக்குகள் கி. பி. 1614 இல் உச்ச நிலையை அடைந்தன. அவ்வாண்டில் மூன்றும் வகுப்பைச் சேர்ந்த ஒருவன் மூன்று வகுப்புகளையும் மூன்று சகோதரர்களுக்கு ஒப்பிட்டதைக் கேட்ட முதலிரண்டு வகுப்பினரும் வெகுண்டெழுந்து, மூன்றும் வகுப் பிற்குச் சகோதரத்துவம் அளிக்க மறுத்தனர். இதன் பிறகு கி. பி. 1789 ஆம் ஆண்டு வரை எஸ்டேட்ஸ் ஜெனரல் கூட்டப்படவே யில்லை. அவ்வாண்டில் மீண்டும் கூடிய எஸ்டேட்ஸ் ஜெனரலில் எவ்வாறு மூன்றும் வகுப்பு முதலிரு பிரிவுகளையும் தகர்த்தெறிந்த தென இன்னேர் இயலில் பார்ப்போம்.

ஸ்பெயின்

ஸ்பெயின் நாட்டில் "கார்ட்டெஸ்" (Cortes) என்ற பிரதிநிதித் துவ மன்றங்கள் 12 ஆம் நூற்றாண்டிலே தோன்றின. உதாரண மாக, லியோன் (Leon) முடியரசில் கி. பி. 1188 இலிருந்து நகர மக்கள், பிரபுக்கள், சமயக்குருக்கள் ஆகியோரின் பிரதிநிதிகளடங் கிய மன்றம் கூடி வந்தது. சிறிது காலத்திற்குப் பிறகு கேஸ்டில் (Castille) முடியரசிலும் இதேபோல் பிரதிநிதிகளின் மன்றம் தோன்றியது. அரகானில் (Aragon) பிரபுக்கள், நிலச்சுவான்கள், சமயக் குருக்கள், நகர மக்கள் ஆகிய நான்கு சமூக வகுப்புகளின் பிரதிநிதிகளும் கார்ட்டெஸ் மன்றத்தில் கூடினர்கள். கேட்டலோ

னியாவிலும் (Catalonia), வெலன்சியா(Valencia) விலும் பிரதிநிதிகளின் மன்றம் மூன்று பிரிவுகளாக் கொண்டிருந்தது.

ஸ்பெயின் நாட்டுப் பிரதிநிதித்துவ மன்றங்கள் பிரெஞ்சு எஸ்டேட்ஸ் ஜெனரலை விட அதிக ஆற்றல் பெற்றிருந்தன எனக் கூறலாம். 15 ஆம் நூற்றாண்டு வரை அவை முடியரசின் அதிகாரத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி வந்தன. ஆனால் ஸ்பெயினிலும் பிரான்ஸில் இருந்தது போலவே சமூகப் பிரிவுகளிடையே பிணக்குகளும், பூசல்களும் இருந்தபடியால், அரசனின் அதிகாரம் வளர்ந்தது; கார்ட்டெஸ் தன் வலிமையிழந்தது. உதாரணமாக, கேஸ்டிலில் 14 ஆம் நூற்றாண்டில் பிரதிநிதிகளை அனுப்பும் உரிமை பெற்றிருந்த நகரங்களின் எண்ணிக்கையை அரசன் பதினெட்டாகக் குறைத்தான். நகரங்களின்மீது அழுக்காறு கொண்டிருந்த பிரபுக்கள் இம்முயற்சியில் அரசனுக்குப் பெருந்துணை செய்தனர். பிரான்ஸ் நாட்டைப் போலவே ஸ்பெயினிலும் பிரபுக்கள் வரி செலுத்த மறுத்தனர். இவ்வாறு வகுப்புகளிடையே நிலவியிருந்த பிளவுகளைப் பயன்படுத்திக் கொண்டு, அரசன் 16 ஆம் நூற்றாண்டில் வரம்பில்லா முடியாட்சியை எளிதில் நிலைநாட்டினான்.

ஸ்காண்டிநேவிய முடியரசுகள்

ஸ்காண்டிநேவிய முடியரசுகளிலிருந்த பிரதிநிதித்துவ மன்றங்களில் குடியானவர் உட்படச் சமூகத்தின் நான்கு பிரிவுகளின் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக இருந்தனர். சான்றாக, ஸ்வீடனிலிருந்த 'ரிக்ஸ்டாக்' (Riksdag) என்றழைக்கப்பட்ட பிரதிநிதிகளின் மன்றம் பிரபுக்கள், மதக் குருக்கள், நகர மக்கள், குடியானவர்கள் ஆகிய நான்கு பிரிவுகளின் பிரதிநிதிகளும் அடங்கியதாக இருந்தது. ஆனால், இப்பிரதிநிதிகள் ஒரே அவையில் அமராமல் நான்கு தனித்தனி அவைகளாகப் பிரிந்து செயலாற்றினர். ஒவ்வொரு பிரிவும் டால்மன் (Talman) என்ற ஒரு மன்றத் தலைவரின் ஆணைக்கடங்கியிருந்தது. மன்றத் தலைவர் அந்தந்தப் பிரிவினால் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் மதக் குருக்களின் அவைக்கு மட்டும் அப்ஸாலா (Upsala)வின் அதிமேற்றிராணியார் (Archbishop) நிரந்தரமான மன்றத் தலைவராக இருந்தார். சில வேளைகளில் இந்நான்கு அவைகளும் ஒன்று சேர்ந்து ஒரு பெரு மன்றமாகக் கூடும். அப்போது அப்பேரவைக்குப் பிரபுக்களின் மன்றத் தலைவர் தலைமை தாங்குவார். மேலும், நாட்டின் ஆட்சியைக் கவனிக்க நான்கு அவைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்று இருந்தது. இக்குழுவில் ஐம்பது பிரபுக்களும், மற்ற மூன்று அவைகளிலிருந்து அவைக்கு இருபத்தைந்து பேராகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்

களும் உறுப்பினர்களாக இருந்தனர். இக்குழுவிற்கும் பிரபுக்களின் மன்றத் தலைவரே தலைமை தாங்கினர்.

இவ்வாறு ஸ்காண்டிநேவிய முடியரசுகளில் பிரதிநிதிகளின் அவைகள் எல்லாச் சமூகப் பிரிவுகளுக்கும் பிரதிநிதித்துவம் அளித்தபோதிலும், மற்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்தது போலவே அங்கும் வரிப் பளுவினால் ஏற்பட்ட வேறுபாடுகள் சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்தின. இதன் விளைவாகத் தற்காலத்தின் தொடக்கத்தில் வரம்பில்லா முடியரசுகள் தோன்ற வழியேற்பட்டது. உதாரணமாக, டென்மார்க்கில் கி. பி. 1660 இல் அரசன் நகர மக்களுக்கும் பிரபுக்களுக்குமிடையே இருந்து வந்த வேற்றுமைகளை வெறுப்புணர்ச்சியாக மாற்றி, மக்களின் துணை கொண்டு தன் ஆட்சியை நிறுவினன். இதுபோலவே மற்ற ஸ்காண்டிநேவிய நாடுகளிலும் இக்காலத்தில் வரம்பில்லா முடியரசுகள் தோன்றின. இவற்றின் தோற்றத்திற்குப் பிறகு பிரதிநித்துவ மன்றங்கள் நலிவுற்றன.

இங்கிலாந்து

இங்கிலாந்தில் ஸாக்ஸனியர் காலத்திலே அரசனுக்கு ஆட்சி சம்பந்தமாக அறிவுரை கூறவும், துணை செய்யவும் சான்ரோரவை (Witenagemot) ஒன்றிருந்தது. இந்த அவையில் மன்னனால் தெரிந்தெடுக்கப்பட்ட அறிவாற்றல் மிகுந்த பெரியோர்கள் உறுப்பினராக இருந்தார்கள். ஸாக்ஸனிய மன்னர்கள் அவை வரும் சட்டமியற்றல், வரி விதித்தல் போன்ற முக்கிய செயல்களில் இந்த சான்ரோரவையைக் கலந்தாய்ந்த பிறகே முடிவுக்கு வந்தனர். நார்மானிய வெற்றிக்குப் பின் குறிப்பிட்ட காலங்களில் பெரிய அவை (The Great Council) ஒன்று கூட்டப்பட்டது. இந்த அவையில் அரசனுடைய தலைமைக் குத்தகைக் குடிகள் மட்டுமே உறுப்பினர்களாக இருந்தனர். ஆகவே, ஸாக்ஸனியரின் சான்ரோரவையையும். நார்மானியரின் பெரிய அவையையும் பிரதிநிதித்துவ மன்றங்கள் எனக் கூற முடியாது. ஏனெனில், அவை இரண்டும் அரசனால் கூட்டப்பட்டதுமல்லாமல், அவற்றில் சமூகத்தின் எல்லா வகுப்புகளின் பிரதிநிதிகளும் உறுப்பினராக இருக்கவில்லை. ஸாக்ஸானியரின் சான்ரோரவையில் அறிவாற்றல் மிகுந்தவர்களும், நார்மானியரின் பெரிய அவையில் நிலமானியப் பெருமக்களும் உறுப்பினர்களாக இருந்தனர். மற்றச் சமூக வகுப்பினரின் பிரதிநிதிகள் அவற்றில் இடம் பெறவில்லை. நாம் இந்த இயலில் ஆராயும் வகையைச் சேர்ந்த பிரதிநிதித்துவ அவைகள் இங்கிலாந்திலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போலப் பிந்திய இடைக்காலத்தில்தான் தோன்றின.

இங்கிலாந்தில் பிரதிநிதித்துவ மன்றங்கள் அரசனின் பண நெருக்கடியைத் தீர்க்கவே கூட்டப்பட்டன. இரண்டாம் ஹென்றி, ஜான், மூன்றும் ஹென்றி ஆகிய அரசர்கள் கூட்டிய மன்றங்கள் அரசன் விதித்த வரிகளை ஏற்கவோ அல்லது அவன் பணம் திரட்டும் வழிகளை ஆராயவோ கூட்டப்பட்டன. ஆனால், இவ்வரசர்கள் கூட்டிய மன்றங்கள் எல்லா வகுப்புக்களுக்கும் பிரதிநித்துவம் அளித்தன என்று கூற முடியாது. குறிப்பாக நகரங்கள், ஆட்சியுரிமை பெற்ற நகர்கள் (Boroughs) ஆகியவற்றின் பிரதிநிதிகள் அம்மன்றங்களில் சேர்க்கப்படவில்லை. 1265 ஆம் ஆண்டில் சைமன் டி மான்ட்ஃபர்ட் என்பவரே முதன் முதலில் இவற்றின் பிரதிநிதிகளடங்கிய மன்றத்தைக் கூட்டினர். பிறகு முதலாம் எட்வர்டு என்ற மன்னர் பிரதிநிதித்துவ முறையை மேலும் பண்படுத்தினர். இவர் 1295 இல் கூட்டிய மன்றம் "மாதிரிப் பாராளுமன்றம்" (Model Parliament) என அழைக்கப்படுகிறது. ஏனெனில், பிற்காலத்துப் பாராளுமன்றங்கள் இந்த மன்றத்தின் மாதிரியிலே அமைக்கப்பட்டன. முதலாம் எட்வர்டு மன்னர் தமது மாதிரிப் பாராளுமன்றத்திற்குக் கீழ்க்கண்டவர்களை அழைத்தார்: நாட்டின் இரு அதிமேற்றிராணியார்கள், (Archbishops), எல்லா மேற்றிராணியார்கள் (Bishops), பெருமடத் தலைவர்கள் (Greater Abbots), ஏழு கோமான்கள் (Earls), நாற்பத்தேழு பிரபுக்கள் (Barons), சாதாரணக் குருக்களின் பிரதிநிதிகள், ஷயர் (Shire) என்ற ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் இரு வீரர்கள் (Knights), ஒவ்வொரு நகரத்திலிருந்தும் இரு நகரக் குடிகள், ஒவ்வோர் ஆட்சியுரிமை பெற்ற நகரிலிருந்தும் (Borough) இரு குடிகள் ஆகியோர். குருக்களின் பிரதிநிதிகளை அதிமேற்றிராணியார்களும், மேற்றிராணியார்களும் தெரிந்தெடுக்க வேண்டும். வீரர்கள், நகரக் குடிகள் ஆகியோர் அவரவர் தொகுதிகளிலுள் 'ஷெரிப்' என்ற அரசாங்க அதிகாரியின் மேற்பார்வையின்கீழ்த் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதலாம் எட்வர்டு கூட்டிய மாதிரிப் பாராளுமன்றத்தின் சிறப்பியல்பு என்னவென்றால், அது இடைக்காலச் சமூகத்தின் முப்பெரும் வகுப்புகளாகிய மதக் குருக்கள், பிரபுக்கள், சாதாரண மக்கள் ஆகியோரின் பிரதிநிதிகளை உறுப்பினராகக் கொண்டிருந்தது. ஆனால், இவ்வகுப்புகளின் பிரதிநிதிகள் பிரெஞ்சு எஸ்டேட்ஸ் ஜெனரலைப் போல மூன்று பிரிவுகளாக இல்லாமல், இரு பகுதிகளாகப் பிரிந்து தனித்தனியே அமர்ந்து செயலாற்றினர். ஏனெனில் சமயப் பெருமக்களாகிய அதிமேற்றிராணியார்களும், மேற்றிராணியார்களும் தனித்து நிற்க விரும்பாமல், பிரபுக்களோடு சேர்ந்து அமர்ந்தனர். சாதாரண குருக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்கு வர விரும்பாதது இதற்கு ஏதுவாக

இருந்தது. மேலும், நிலத் தொடர்பு கொண்டிருந்த வீரர்கள் நிலப்பிரபுக்களுடன் சேர விரும்பாமல், நகரங்களின் பிரதிநிதி களுடன் சேர்ந்துகொண்டனர். இவ்வாறு இங்கிலாந்தின் பாராளுமன்றம் பிரபுக்கள் சபை (House of Lords), மக்கள் சபை (House of Commons) என இரு பிரிவுகளாகக் கூடும் மரபு நாளடைவில் ஏற்பட்டது.

அரசனுக்கு ஏற்பட்ட பணநெருக்கடியைத் தீர்க்க வழி வகுப் பதற்காகக் கூட்டப்பட்ட பாராளுமன்றம் வேறு வழிகளிலும் பயன் பட்டதுமல்லாமல், பல அடிப்படையான வழக்காறுகள் தோன்றுவ தற்கும் அடிகோலியது. உதாரணமாக, மன்னன் பணச் செய்தி களில் மட்டுமல்லாமல், வேறு சில முக்கிய காரியங்களிலும் பாரா ளு மன்றத்தின் அறிவுரையை நாடினான். மேலும், மன்னனுக்கு ஆலோசனை கூறும் பொருட்டுக் கூடிய இம்மன்றம் மக்க ளின் குறைகளை அவனுக்கு எடுத்துக் கூறும் நிறுவனமா கவும் பயன்பட்டது. வழக்காறுகளை மீறுதல், சாசனங்கள், சட்டங்கள் முதலியவற்றை மறுத்தல், அரசனின் அலுவலர் களின் அநீதி போன்ற குறைகளைப் பாராளுமன்றம் அரசனி டம் எடுத்துக் கூறி முறையிட்டது. அதைக் கேட்ட அரசன் அக் குறைகளைத் தவிர்க்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்தான். "மன்ன னுக்குக் கொடுக்கப்பட்ட பண உதவியானது அவன் மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்குக் கைம்மாறாகும்" என்ற கொள்கை நாளடைவில் உருவானது. 14 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வரி விதிக்கும் உரிமையைப் பாராளுமன்றம் அரசனிடமிருந்து பறித்தது. மேலும், மன்னனுக்குத் தேவைகள் ஏற்படும்போது அவற்றை நிறைவேற்றுவதற்காக மட்டும் பாராளுமன்றம் வரி விதித்ததால், அவன் அம்மன்றத்தை அடிக்கடி கூட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மன்னன் தனக்குத் தேவையான பணத் தைப் பெரும்பாலும் மக்களிடமிருந்து பெற்றதால், பணச்செய்தி களில் மக்கள் சபை முக்கியத்துவம் அடைந்தது. இம்முக்கியத்து வம் 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 4 ஆம் ஹென்றியின் காலத்தில் நிரந்தரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், இது வரை மக்களின் குறைகளை எடுத்துக் கூறி வந்த மக்கள் சபையா னது 6 ஆம் ஹென்றி மன்னன் காலத்தில் அக்குறைகளை நீக்கத் தேவையான சட்டங்களை இயற்றும் பொறுப்பிலும் பங்கு பெற் றது. இவ்வாறாக இங்கிலாந்தில் பாராளுமன்றமானது இரு நூற்றாண்டுகளில் முழுமையான பிரதிநிதித்துவ மன்றமாகச் சிறப் பெய்தியதுமல்லாமல், அரசனின் அதிகாரத்திற்குத் தக்க முறை யில் வரம்பிட்டு, ஆங்கில அரசியல் அமைப்பில் மதிப்பிடமும் பெற் றது. மற்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்தது போலவே இங்கி லாந்திலும் 16 ஆம் நூற்றாண்டில் ஆற்றல் மிக்க ட்யூடர் (Tudor)

அரசர்கள் காலத்தில் பாராளுமன்றம் தனது செல்வாக்கை இழந்த போதிலும், ஸ்டுவர்ட் (Stuart) மன்னர்கள் காலத்தில் அது மீண்டும் எழுச்சியுற்று ஆங்கில அரசை அரசியல் அமைப்புக்குட் பட்ட முடியாட்சியாக மாற்றியது.

ஆங்கிலப் பாராளுமன்றத்தின் வரலாற்றைப் பார்க்கும் போது, அது மற்ற ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதித்துவ மன்றங்களினின்று வேறுபட்டிருப்பது நன்கு புலப்படுகிறது. ஏனைய நாடுகளின் மன்றங்களெல்லாம் 16 ஆம் நூற் றாண்டுக்கு முன்னே நலிந்துபோக, இங்கிலாந்தில் மட்டும் ஏன் அது தழைத்தோங்கியது? அதற்கு முக்கிய காரணம் ஐரோப்பிய சமூகங்களில் இருந்தது போன்ற பிரிவுகள் ஆங்கில நாட்டில் இல்லை. இங்கிலாந்தில் பிரபுக்களுக்கும், சாதாரண மக்களுக்கு மிடையே வேற்றுமைகள் இருந்தபோதிலும், அவை சமூகத்தில் தவிர்க்க முடியாத பெரும் பிளவுகளை ஏற்படுத்தவில்லை. மேலும், ஐரோப்பிய நாட்டுப் பிரபுக்களைப்போல் ஆங்கிலப் பிரபுக்கள் வரி செலுத்த மறுக்கவில்லை. பிரான்ஸில் முதலிரண்டு வகுப்புகளும் உயர் சாதிகளாகக் கருதப்பட்டன. ஆனால், இங்கிலாந்தில் இய்ற் கையாக வளர்ந்த சமூகப் பிரிவுகள் சாதிகளாக மாறவில்லை. ஆகவே, அவற்றிடையே பகையோ, ஆழ்ந்த பிளவோ ஏற்பட வில்லை. இதனால்தான் பாராளுமன்றத்தில் பிரபுக்களும், மக்களும் இணைந்து செயலாற்ற முடிந்தது.

இங்கிலாந்தில் வகுப்புகளிடையே பெரும் பிரிவுகள் ஏற்படா மலிருந்ததற்கு இரண்டு அடிப்படைக் காரணங்களிருந்தன. முத லாவது, இங்கிலாந்து மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்து நில அமைப்பிலே தனித்து நிற்கின்றது. இரண்டாவதாக, நார்மானிய அரசர்கள் வலிமைமிக்க நடு அரசாங்கத்தை ஏற்படுத்தினர்கள். இயற்கையான எல்லைகளால் சூழப்பட்ட இங்கிலாந்தில் மக்க ளிடையே நாட்டுணர்ச்சி வெகு காலத்திற்கு முன்னே தோன்றிச் சமூக ஒற்றுமையைப் பலப்படுத்தியது. இந்தத் தேசிய ஒருமைப் பாட்டின் முன்னால் சமூக வகுப்புகளிடையே இருந்த வேற்றுமை கள் மறைந்து போயின. பிரிட்டிஷ் தீவுகளில் வாழ்ந்தவர்கள் ஆங்கிலேயர்களெனவும், மற்றெல்லோரும் அயல் நாட்டவர் என வும் எண்ணம் வளர்ந்ததால், ஆங்கிலேயருக்குள் இருந்த பாகு பாடுகள் ஆங்கிலச் சமூகத்தைத் துண்டாக்கவில்லை. மேலும் இயற்கை யரண்களால் பாதுகாக்கப்பட்ட இங்கிலாந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளைப்போல வெளித்தாக்குதல்களுக்கு உள்ளாக வில்லை. ஆகவே, போர்ப்பணிக்கு ஈடாக நிலம் பெற்றிருந்த குத்தகைக் குடிகளின் (Military tenants) எண்ணிக்கை மிகவும் குறைந்திருந்தது. மேலும், ஆங்கில அரசர்கள் வெளி நாடுகளில்

நடத்தி வந்த போர்களில் போர்ப்பணியாற்றுவதற்குப் பதிலாக அரசனுக்குக் கடமை மாற்றுப் பணம் (Seutage) செலுத்திவிட்டுப் பலர் நிலம் பெற்று வாழ்ந்து வந்தனர். இவ்வாறு சாதாரண நகர மக்களுக்கும், நாட்டுப்புறங்களில் வாழ்ந்த வீரர்களுக்கும் படைத் தொழில் காரணமாக இருந்த வேற்றுமைகள் மறைந்து போயின. எனவே, பாராளுமன்றத்தில் இவ்விரு பகுதியினருக்கு மிடையே பிணைப்பு ஏற்பட்டு, அதனடிப்படையிலே மக்கள் சபை வளர்ந்தது. இங்குக் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், மற்ற ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டதுபோல இங்கிலாந்தில் நாட்டுப்புறம், நகரம் என்ற வேறுபாட்டினால் சமூகத்தில் பிளவுகள் தோன்றவில்லை. நாட்டுப்புற மக்களில் ஒரு பகுதியினர் நகர மக்களோடு இணைந்தனர். நாட்டுப்புறங்களில் பிரபுக்கள் மட்டுமே தனித்து நின்றனர். ஆயினும் நாட்டுணர்ச்சியானது இவர்களையும் மற்றச் சமூக வகுப்பினரோடு சேர்த்து, ஆங்கில நாட்டில் பலத்த ஒற்றுமையை வளர்த்தது. ஆகவேதான், இவ்வகுப்புகளின் பிரதிநிதிகளடங்கிய பாராளுமன்றம் வெற்றிப் பாதையில் பீடு நடையுடன் செல்ல முடிந்தது.

இந்த வெற்றிக்கு இரண்டாவது காரணம் நார்மானிய அரசர்கள் நிலைநாட்டிய ஆற்றல் மிகு நடு அரசாங்கம் எனப் பார்த்தோம். ஐரோப்பாக் கண்டத்தில் நடு அரசாங்கங்கள் வலுவின்றி இருந்தமையால், சமூக வகுப்புகளிடையே தோன்றிய மாறுபாடுகள் பூசல்களாக முதிர்ந்து பிரதிநிதித்துவ மன்றங்களின் வளர்ச்சியைத் தடுத்தன. ஆனால், இங்கிலாந்து இத்தகைய குறைபாட்டிலிருந்து தப்பும் நற்பேறு பெற்றிருந்தது. 11 ஆம் நூற்றாண்டிலே நார்மானிய மன்னன், வெற்றி வீரன் வில்லியம் (William, the Conqueror), இங்கிலாந்தில் ஒரு பலத்த நடு அரசாங்கத்தை நிறுவினரென்று பார்த்தோம். அவராற்றிய அரும் பணிகளிலொன்று நிலமானிய முறையானது அரசாங்கத்தைச் சிதைக்காத படி தடுத்ததாகும். ஐரோப்பாவில் நிலமானிய முறையின் காரணமாக இறைமை நிலச் சொத்துரிமையுடன் இணைக்கப்பட்டதெனப் பார்த்தோம். இங்கிலாந்திலும் இவ்விதம் நடக்காமல்தடுத்து, இறைமையை அரசனது தனியுடைமையாகச் செய்த பெருமை வெற்றிவீரன் வில்லியத்தைச் சாரும். ஆகவே, இங்கிலாந்தில் நிலப் பிரபுக்கள் ஒருபோதும் அரசாங்க அதிகாரம் செலுத்தவில்லை. மேலும், பொருளாதாரத் தொடர்புகளைச் சார்ந்த செயல்களில் கீழாட்கள் அவரவர் நிலப் பிரபுக்களின் ஆணைக்கடங்கியிருந்த போதிலும், அரசியல் காரியங்களில் மன்னனது ஆணைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற கோட்பாடு "ஸாலிஸ்பரி வாக்குறுதி" (Oath of Salisbury) யின்படி நாட்டில் எல்லோராலும் ஏற்றுக்

கொள்ளப்பட்டிருந்தது. ஆகவே, நிலமானிய முறையினால் ஆட்சி சீர்குலையாமல் காத்து, நடு அரசாங்கத்தைப் பலப்படுத்திய நார்மானியர்கள் நாட்டின் சமூக ஒற்றுமைக்கும் வழி வகுத்தனர் என்று கூறலாம். இவ்வொற்றுமையின் அடிப்படையிலேதான் பாராளுமன்றம் வளர்ந்தோங்கியது.

மேலும், நார்மானிய அரசர்கள் அமைத்த நடு அரசாங்கம் சட்டம், நிர்வாகம், நீதி ஆகிய துறைகளிலெல்லாம் நாடு முழுவதையும் ஓர் அதிகாரத்துக்குட்படுத்தி ஆண்டதால், நாட்டின் பல பகுதிகளிலும் வட்டார அரசாங்கங்கள் (Local Governments) ஏற்பட முடியாமல் இருந்தது. ஆகவே ஒரே வகையான சட்டம், நீதி, செயல்துறை ஆகியவை மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தின. ஐரோப்பிய நாடுகளில் இருந்ததைப் போல இங்கிலாந்தில் தன்னாட்சி பெற்ற நகரங்கள், உரிமை பெற்ற பிரபுக்கள் தம் அதிகாரத்தை நிலைநாட்டாதிருந்ததால், நடுவான பாராளுமன்றத்தின் அதிகாரம் வளர்ச்சியடைந்தது.

ஆங்கிலப் பாராளுமன்றமானது, சிட்ஜ்விக் என்பவர் கூறுவது போல, "வலிமை மிக்க முடியாட்சி, அதற்கிணையான பலமில்லாத பிரபுக்கள், ஒரே இனத்தைச் சேர்ந்த ஒற்றுமையுள்ள மக்கள்" ஆகிய அடிப்படைகளிலே தோன்றி வளர்ந்தது. நார்மானிய மன்னர்கள் தமது முடியாட்சியை நிலையாக நிறுவுவதற்காக பிரபுக்களின் வலிமையைக் குறைத்த போதிலும், மக்களின் ஆதரவைப் பெரிதும் தேடினார்கள். இந்த ஆதரவைப் பெறுவதற்காகப் பாராளுமன்றத்தைக் கூட்டினார்கள். இவ்வாறாக இங்கிலாந்தில் முடியாட்சியும், பாராளுமன்றமும் ஒன்றுபட்ட தொடர்பினால் பிணைக்கப்பட்டு, இணையான பாதையில் ஒருங்கே முன்னேறிக் கொண்டிருந்தன. ஆகவே, நார்மானிய முடியாட்சியும், பாராளுமன்றத்தின் வளர்ச்சியும் ஒன்றிற்கொன்று துணையாக இருந்தன எனக் கூறலாம். ஆற்றலிழந்த பிரபுக்கள் வேறு வழியின்றிப் பாராளுமன்றத்தில் மக்களோடு இணைந்தனர். இதனால் சமூகத்தில் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் ஏற்பட்டன. இந்த ஒற்றுமையின் காரணமாகப் பாராளுமன்றமானது அரசனது அதிகாரத்தைக் குறைக்கும் நிறுவனமாக மாறியது. 14 ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் அஃது இச்சிறப்பை முற்றிலும் பெற்றுவிட்டது. ஆற்றல் மிகுந்த ட்யூடர் முடியாட்சிக் காலத்திலுங்கூடப் பாராளுமன்றம் தனது நிலை குலையாதிருந்தது அதன் வெற்றிக்குச் சிறந்த சான்றாகும். இதே காலத்தில் மற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் பிரதிநிதித்துவ மன்றங்கள் முற்றிலும் சிதைந்து போயின. ஸ்டுவார்ட் மன்னர்கள் காலத்தில் ஆங்கிலப் பாராளுமன்றம் ஆற்றிய அருஞ் செயல்களைப்பற்றி இனிமேல் இயலில் பார்ப்போம்.

இடைக்காலப் பிரதிநிதித்துவ மன்றங்களுக்கும், தற்கால பிரதிநிதித்துவ மன்றங்களுக்கும் ஓர் ஒப்புமை

இடைக்கால மன்றங்கள் ''எஸ்டேட்ஸ்'' என்ற சமூக வகுப்புகளின் பிரதிநிதிகளே உறுப்பினராகக் கொண்டிருந்தன. எனவே அவை நாட்டின் எல்லா மக்களின் பொதுவான விருப்பங்களையும் எடுத்துக்கூறும் நிறுவனமாக இல்லாமல், சமூக வகுப்புகளின் தனிக் கருத்துக்களுக்காக வாதாடும் மன்றங்களாக இருந்தன. இடைக்காலத்தில் பிரபுக்கள், குருக்கள், நிலச் சொந்தக்காரர்கள், வாணிகர், நகர மக்கள் போன்ற வகுப்புகளே பிரதிநிதித்துவத்தின் அடிப்படையாக இருந்தன. ஆனால், தற்காலத்தில் பாராளுமன்றத்தின் பிரதிநிதித்துவம் நிலப்பிரிவு அல்லது தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அதன்படி நாடு பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதியிலும் வாழும் மக்கள் எல்லோரும் சேர்ந்து தம் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். எனவே, தற்காலப் பாராளுமன்றம் உண்மையாகவே ஒரு தேசீய நிறுவனமாகத் திகழ்கிறது. இடைக்கால மன்றங்களோவெனில் சமூகப் பிரிவுகளை அப்படியே எதிரொலித்தன.

இடைக்காலத்தில் ஒவ்வொரு வகுப்பின் பிரதிநிதிகளும் மன்றத்தின் கூட்டத்திற்குத் தனித்தனியே அழைக்கப்பட்டனர். மன்றத்தில் அவர்கள் தமது வகுப்புக்களுக்கேற்பத் தனித்தனியே அமர்ந்தனர். ஆகவே, இடைக்காலப் பிரதிநிதிகளின் மன்றம் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட அவைகளாகப் பிரிந்து செயலாற்றின. ஆனால், தற்காலத்தில் நிலத்தொகுதியின் அடிப்படையில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதால், பாராளுமன்றம் ஒன்று அல்லது இரண்டு அவைகளாக அமர்ந்து பணியாற்றுகிறது. மேலும், இடைக்கால மன்றத்தில் பிரதிநிதிகள் தம் வகுப்புக்காக மட்டும் வாதாட முடியும். ஒவ்வொரு பிரதிநிதியும் தனது வகுப்பின் கருத்துக்களை மட்டும் எடுத்துக்கூற முடியுமே தவிர, தன் சொந்த எண்ணங்களையோ, முடிவுகளையோ வெளியிட முடியாது. ஆனால், தற்காலத்தில் பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒரு தொகுதியிலுள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், நாட்டு மக்கள் அனைவருடைய பிரதிநிதியாகக் கருதப்படுகிறார். ஆகவே, அவர் தமது தொகுதியிலுள்ள மக்களுக்காகவும் அவர்களுடைய தனிப்பட்ட நலனுக்காகவும் மட்டும் வாதாடாமல், நாட்டின் பொதுநலத்திற்காக உழைக்கவேண்டும். அவர் தமது தொகுதியிலுள்ள மக்களின் விருப்பங்களை நாட்டுக்கு எடுத்துக்கூறும் வெறும் கருவியல்லர். தமது அறிவு, அனுபவம், தூரநோக்கு, மனச்சாட்சி முதலியவற்றின் துணை கொண்டு

நாட்டின் நலத்திற்காகச் செயலாற்றவேண்டும். இந்த அடிப்படையான கொள்கையை எட்மண்ட் பர்க் (Edmund Burke) என்ற ஆங்கில அரசியல் வல்லுநர் தம்மைத் தேர்ந்தெடுத்த பிரிஸ்டல் தொகுதியின் வாக்காளர்களுக்கு மிக அழகிய முறையில் கீழ்க்கண்டவாறு எடுத்துக் கூறுகிறார்: "பாராளுமன்றமானது முரணான வகுப்புகளின் பிரதிநிதிகளடங்கிய கூட்டமன்று; அஃது ஒரே குறிக்கோளைக்கொண்ட ஒரே நாட்டின் சட்டமியற்றும் மன்றமாகும். அம்மன்றத்தின் குறிக்கோள் பொது நலத்தை எதிரொளிப்பதாக இருக்கவேண்டும். ஆகவே, அதன் உறுப்பினர்கள் தொகுதிகளின் பிரதிநிதிகளாக இருந்தபோதிலும், பாராளுமன்றத்தின் உறுப்பினரென்ற முறையில் பொதுநலனுக்காக உழைக்கவேண்டும்."

இடைக்காலத்தில் சொத்துரிமை பிரதிநித்துவத்தின் அடிப்படையாக இருந்தது. எந்த வகுப்பைச் சேர்ந்தவனாக இருந்தபோதிலும், சொத்துரிமையற்றவன் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படமுடியாது. ஆனால், தற்காலத்தில் பிரதிநித்துவத்திற்கும் சொத்துரிமைக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. வயது, குற்றச்சாட்டின்மை போன்ற பொது விதிகளைத் தவிர வேறு எவ்விதமான தடைகளும் இல்லை. தற்காலத்தில் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் எல்லோருக்கும் சமமாக வழங்கப்படும் அடிப்படை அரசியல் உரிமையாகக் கருதப்படுகிறது.

இறுதியாக, இடைக்காலப் பிரதிநித்துவ மன்றங்கள் சட்ட ஆக்க மன்றங்களாகத் திகழவில்லை. அவை அரசனுக்குப் பண உதவி யளிப்பதற்காகவே கூடின. அவனுக்கு வேண்டிய பண உதவிக்கு வழி வகுத்த பிறகு, பிரதிநிதிகள் தம் குறைகளை எடுத்துக் கூறினர். சிலவேளை அரசாங்க அலுவலர்களைக் குற்றம் கூறுவார்கள். இவற்றைத் தவிர்ப்பதாக அரசன் வாக்குறுதியளித்ததும், அவர்கள் தம்மில்லங்களுக்குத் திரும்பிச் செல்வார்கள். போக்கு வரவு வசதிகள் அக்காலத்தில் அதிகமில்லாததால் பிரதிநிதிகளின் மன்றம் அடிக்கடி கூட்டப்படவில்லை. தற்காலத்தில் பாராளுமன்றம் நாட்டின் அரசாங்கத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது. அது சட்டப்படியான இறைமையின் (Legal Sovereign) இருப்பிடமாயிருப்பதால், நாட்டுக்குத் தேவையான பொதுச் சட்டங்களை இயற்றுகிறது. மேலும், செயல்துறையையும் கட்டுப்படுத்துகிறது. இவ்வாறாக, மக்களாட்சி நிலவியிருக்கும் இக்காலத்தில் பாராளுமன்றமே அரசாங்கத்தின் நடுவிடமாகப் பொலிவுடன் ஒளிர்கிறது.

நான்காம் பகுதி : தற்கால ஐரோப்பா

1. ஐரோப்பாவில் தேசீய அரசுகளின் எழுச்சி
2. வரம்பில்லா முடியாட்சிகள்
3. பிரெஞ்சுப் புரட்சியும் அதன் விளைவுகளும்
4. 19ஆம் நூற்றாண்டில் மக்களாட்சியின் வளர்ச்சி
5. உலகப் போர்களுக்கிடையே எழுந்த சர்வாதிகார அரசுகள்

1. ஐரோப்பாவில் தேசீய அரசுகளின் எழுச்சி

கிறித்து சகாப்தத்தின் தொடக்கத்தில் ரோமானியர் ஐரோப்பாவின் பெரும் பகுதியில் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டினர். அக்காலத்தில்தான் ஐரோப்பிய சமூகம் முதல் முதலாக ஒரே சட்டம், ஒரே அரசியல் கோட்பாடுகள், ஒரே குடிமை, ஒரே நாகரிகம் போன்ற அடிப்படைகளில் உருவாக்கப்பட்டது. இறைவழிபாட்டிலுங்கூட இக்காலத்தில் ஒருமைப்பாடு இருந்தது. உதாரணமாக, அகஸ்டஸ் போன்ற ரோமானியப் பேரரசர்கள் தம் சிலைகளையே கோவில்களில் வைத்து வணங்கும் வழக்கத்தை மக்களிடையே வளர்த்தனர். இவ்வாறு ரோமானியர்களால் ஏற்படுத்தப்பட்ட ஐரோப்பிய ஒற்றுமை ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு மிலேச்சர்களின் தாக்குதல்களினால் சிறிது பாதிக்கப்பட்டது. லம்பார்டியர்கள், ஃபிராங்குகள், வான்டல்கள், ஸாக்ஸனியர், அலெமானியர்கள் (Alemanni) போன்ற மிலேச்சர்கள் இக்காலத்தில் ரோமானியப் பேரரசின் பல பகுதிகளில் தமது அரசை அமைத்தபோது, ரோமானியச் சட்டத்தையோ, அரசியல் அமைப்பையோ அறியவில்லை; அறியவும் விரும்பவில்லை. இவர்கள் தமது குல வழக்காறுகளின்படி ஆட்சி செலுத்தினர். ஆகவே, ரோமானியர் ஏற்படுத்தியிருந்த ஐரோப்பிய ஒற்றுமை சிதையத் தொடங்கியது. இருந்தபோதிலும், ரோமானிய நாகரிகம் முற்றிலும் மறைந்துவிடவில்லை. ஏனெனில் ரோமானியச் சட்டமும் பண்பாடும் மிக ஆழமாக வேரூன்றியிருந்தன. மேலும், மிலேச்சர்களின் படையெடுப்புக் காலத்திலே வலிமையுற்றிருந்த திருச்சபை இந்த இருண்ட காலத்தில் ஐரோப்பிய நாகரிகம் நலிவுறுமல் பாதுகாத்தது. அது மிலேச்சர்களைக் கிறித்துவர்களாக்கி அவர்களும் அந்நாகரிகத்தின் நற்பயன்களையடைய வழி வகுத்தது. ஆகவே, ரோமானிய நாகரிகத்தினால் ஒற்றுமையடைந்து இருண்ட காலத்தில் சிறிது நலிவுற்றிருந்த ஐரோப்பிய சமூகம் மீண்டும் அக்காலத்தின் இறுதியில் திருச்சபையினால் ஒன்றுக்கப்பட்டது. கரோலிஞ்சிய மன்னனாகிய சார்ல்ஸுக்குப் பிறகு தோன்றிய புனித ரோமானியப் பேரரசும் (Holy Roman Empire), போப்பின் ஆட்சியும் (Papacy) ஐரோப்பிய சமூகத்தின் இந்த மறுமலர்ச்சிக்கு அடையாளங்களாகும். ஆன்மிக காரியங்களில் போப்பாண்டவர் பெற்றிருந்த அதிகாரம் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இடைக்காலத்தின் இறுதியில் திருச்சபையின் செல்வாக்கு ரோமானிய நாகரிகத்தை அறிந்திராத பகுதிகளாகிய ஸ்காண்டிநேவியா, மத்திய ஜெர்மனி, ஹங்கேரி போன்ற இடங்களில் பரவி,

ஐரோப்பா முழுவதையும் ஆட்கொண்டது. எனவே, இடைக் காலத்தில் ஐரோப்பிய சமூகம் ஒரு கிறித்துவப் பொதுநலக் கூட்டாகத் திகழ்ந்தது. ஆனால், இக்காலத்தின் இறுதியில், ரோமானிய நாகரிகம், சமய ஒற்றுமை ஆகிய அடிப்படைகளில் ஒன்றித்திருந்த ஐரோப்பிய சமூகம் தேசிய இனங்களாகப் பிரியத் தொடங்கியது. இந்தத் தேசிய வளர்ச்சியையும் அதனை ஆதார மாகக்கொண்டு எழுந்த அரசுகளையும் இந்த இயலில் கவனிப் போம்.

15ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 19ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தை ஐரோப்பாவின் தேசிய அரசுகளின் எழுச்சிக் காலம் என்று கூறலாம். இக்காலத்தைப்பற்றிக் கூறு முன் தேசியம் என்றால் என்ன, அதன் அடிப்படைகள் யாவை என்பவற்றை அறிந்துகொள்ள வேண்டும். தேசியம் என்பது ஒருவித ஒற்றுமை யுணர்ச்சி. இவ்வித ஒற்றுமை யுணர்ச்சியினால் உந்தப்பெற்று அதனால் ஒன்றுகப் பிணைக்கப்படும் மக்களின் கூட்டமே தேசிய இனம் அல்லது நாட்டினம் (Nationality) எனக் கூறப்படுகிறது. இந்த மக்களின் கூட்டமானது நிறுவனங் களால் மேலும் பிணைக்கப்பட்டுத் தன்னாட்சி பெற்றிருந்தால், அதனைத் தேசிய சமுதாயம் (Nation) என்றழைக்கிறோம். இந்தத் தேசிய சமுதாயம் அரசியல் உரிமை பெற்றுச் சுதந்திரம் அடையும்போது, தேசிய அரசாகிறது (Nation State). ஆகவே தேசியம், தேசிய இனம், தேசிய சமூகம், தேசிய அரசு இவற்றிற் கெல்லாம் ஆதாரம் மக்களிடையே காணப்படும் ஒற்றுமை யுணர்ச்சியே. ஆனால், இவ்வொற்றுமை யுணர்ச்சி பல்வேறு மக்களிடையே பல்வேறு காரணங்களினால் தோன்றுகிறது. இக்காரணங்களை ராம்ஸே மூர் (Ramsay Muir) என்பவர் தமது "தேசியமும் சர்வ தேசியமும்" (Nationalism and Internationalism) என்ற நூலில் நன்கு ஆராய்ந்துள்ளார். இயற்கையான எல்லை களினால் சூழப்பட்ட ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்களிடையே தேசிய உணர்ச்சி எளிதில் தோன்றுகிறது. இங்கி லாந்து, சுவிட்ஸர்லாந்து போன்ற நாடுகளில் தேசிய உணர்ச்சி தோன்றி வளர்ந்ததற்கு இதுவே முக்கிய காரணமாகும். இரண் டாவதாக, தேசிய உணர்ச்சி தோன்ற இனவொற்றுமை (Racial unity)யும் காரணமாக இருக்கலாம். ஜெர்மனியில் தேசியஉணர்ச்சி முதிர்ந்து, ஹிட்லரின் காலத்தில் அது உலகை ஆட்டிவைத்த தற்கு இனவொற்றுமையே காரணமாகும். நிலப்பகுதி அல்லது இனவொற்றுமையினால் ஒன்றுபடாத மக்களிடையே மொழி ஒற்றுமை அல்லது சமய ஒற்றுமை (Unity of Religion)யின் காரணமாகவும் தேசிய உணர்ச்சி பிறக்கலாம். உதாரணமாக, வடக்கு இத்தாலியிலும் தெற்கு இத்தாலியிலும் வாழும் மக்கள்

வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், மஜீனி (Mazzini) எனும் புகழ் பெற்ற இத்தாலியப் பெரியார் அவர்களிடையே மொழி ஒற்றுமையின் மூலமாக தேசிய வுணர்ச்சியைத் தூண்டி வளர்த்தார். ஒரே மொழியைப் பேசும் மக்களிடையே பொதுவான கருத்துக்கள், இலக்கியம், வழக்காறுகள் முதலியவை தோன்றக் கூடும். இவற்றுல் அம்மக்கள் மேலும் பிணைக்கப்படுகிறார்கள். இதுபோலவே சமய வழிபாடுகளினல் ஏற்படும் இணைப்புக்களும் தேசிய உணர்ச்சிக்கு அடிகோலக் கூடும். உதாரணமாக, ஸ்காட் மக்களிடையே இன்றுவரை நிலைத்திருக்கும் தேசிய வுணர்ச்சிக்கு ஜான் நாக்ஸ் (John Knox) என்பவர் தோற்றுவித்த சமய ஒற்றுமையே காரணமெனக் கூறலாம். தற்காலத்தில் மேற்கு ஆசியாவில் தோன்றியுள்ள அராபிய அரசுகளும் மதவொற்றுமையின் அடிப்படையில் தோன்றியவையேயாகும்.

தேசிய உணர்ச்சியின் தோற்றத்திற்கு ஆதாரங்கள் என இதுவரை கூறிய காரணங்கள் இயற்கையாக அமைபவையாகும். இவை தவிர, வரலாற்றுச் சார்புள்ள காரணங்களும் சில உள. வெகு காலமாக ஒரு வலிமை மிக்க நடு அரசாங்கத்திற்குப் பணிந்து வாழும் மக்களிடையே இனம், மொழி முதலியவை காரணமாக வேறுபாடுகள் இருந்தபோதிலும், தேசிய உணர்ச்சி வளர்கின்றது. உதாரணமாக, ஆங்கிலேய மக்களை ஒரு தேசியச் சமூகமாக்கிய சக்திகளுள் நார்மானியரும், அஞ்சவினரும் (Angevins) ஏற்படுத்திய திறனுள்ள அரசியலும், நிர்வாக அமைப்பும் முதன்மையானவையெனக் கூறலாம். இதுபோலவே பிரான்ஸிலும் ஸ்பெயினிலும் ஆற்றல் நிறைந்த அரசர்கள் ஏற்படுத்திய அரசியலமைப்புக்களின் காரணமாகவே அந்நாடுகளில் தேசிய உணர்ச்சி பிறந்தது. 16 ஆம் நூற்றுண்டில் ஐரோப்பாவில் தோன்றிய வரம்பில்லா முடியரசுகள் யாவும் தேசிய வுணர்ச்சியின் வளர்ச்சிக்குப் பெரிதும் அடிகோலின. தேசிய உணர்ச்சிக்கு ஆதாரமாயுள்ள சரித்திரச் சார்புள்ள காரணங்களில் இன்னென்று, பொதுவான மரபுகளைப் (Common traditions) பெற்றிருத்தலாகும். பொதுவான வழக்காறுகள், கடந்த காலத்தில் ஏற்பட்ட இன்னல்கள் அல்லது வெற்றிகள், அவ்வின்னல்களிலிருந்து மக்களை மீட்ட அல்லது அவ்வெற்றிகளுக்கு வழிவகுத்த பெரியார்களின் நினைவு, அந்நினைவினடியாகப் பிறந்த இலக்கியம், அப்பெரியார்கள் எடுத்துக் காட்டிய இலட்சியங்கள் போன்றவை சில மக்களிடையே ஆழ்ந்த தேசிய உணர்ச்சியைத் தோற்றுவிக்கலாம். உதாரணமாக, இந்தியாவில் இன்று நிலைத்துள்ள தேசிய வுணர்ச்சியானது இந்தியர்களுக்கு ஆங்கிலேயராட்சியால் ஏற்பட்ட இடையூறுகளையும், அவற்றிலிருந்து அவர்களை விடு

வித்த காந்தியடிகளின் நினைவையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்று கூறினால் மிகையாகாது. டச்சு (Dutch) மக்களும் சுவிஸ் (Swiss) மக்களும் பெற்றுள்ள தேசிய வுணர்ச்சிக்கு வேற்று நாட்டாரால் அவர்களுக்கு ஏற்பட்ட தீமைகளும், அவற்றை எதிர்த்து நின்றபோது அவர்களிடையே தோன்றிய ஒற்றுமையுமே காரணங்களாகும். எனவே, தேசியம் என்பது மேற் கூறிய காரணங்களில் ஏதாவது ஒன்றினால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவையால் மக்களிடையே தோன்றும் ஓர் உணர்ச்சியாகும். இந்த உணர்ச்சியை ஆதாரமாகக்கொண்டு அமையும் அரசு தேசிய அரசு எனப்படுகிறது.

ஐரோப்பிய தேசிய அரசுகளின் எழுச்சிக்குக் காரணங்கள்

ஏறக்குறையப் பதினைந்து நூற்றாண்டுகளாக ஒன்றுபட்டிருந்த ஐரோப்பிய சமுதாயம் இடைக்காலத்தின் பிற்பகுதியில் தேசியப் பிரிவுகளாகப் பிரிந்ததற்குப் பல காரணங்களைக் கூறலாம். முதலாவதாக, 14 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் இலக்கியத்தில் ஏற்பட்ட மலர்ச்சி தேசிய உணர்ச்சிக்குப் பெரிதும் துணையாக இருந்தது. இடைக்காலத்தில் ஐரோப்பாவில் இலக்கியம், சட்டம் போன்றவை இலத்தீன் அல்லது கிரேக்க மொழியில் எழுதப்பட்டன. ஆனால் 14 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய மக்களின் தாய் மொழிகளாகிய ஆங்கிலம், இத்தாலி, பிரெஞ்சு மொழி போன்றவற்றில் இலக்கியங்கள் தோன்றலாயின. உதாரணமாக, இங்கிலாந்தில் 14 ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் சாஸர் (Chaucer), வில்லியம் லாங்லண்டு (William Langland) போன்ற கவிஞர்கள் ஆங்கில மொழியில் அழகான செய்யுட்களைப் புனைந்தனர். சாஸர் எழுதிய "காண்டர்பரிக் கதைகளும்" (Canterbury Tales), லாங்லண்டு எழுதிய "பியர்ஸ் எனும் உழவன் கண்ட காட்சி" (Vision of Piers, The Plowman)யும் மிகச் சிறப்பு வாய்ந்தவை. மேலும், இக்காலத்தில் விக்லிஃப் (John Wycliffe) என்பவர் புனித விவிலியத்தை (Holy Bible) ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இதே போல் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் நாட்டு மொழியில் இலக்கியம் வளர்ந்து மக்களிடையே மொழிப் பற்றையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தியது. பிரான்ஸில் வடக்கே "ட்ரூவர்ஸ்" (Trouveurs) என்றழைக்கப்பட்ட கவிஞர்களும், தெற்கே "ட்ரூபடோர்ஸ்" (Troubadours) எனப்பட்ட கவிஞர்களும் வரையாது வழங்கும் வள்ளல்களின் கொடைகளைப் பெற்றுப் பிரெஞ்சுமொழியில் அழகான காதற் பாடல்களையும், காவியங்களையும் இயற்றினர். ஃப்ரூவாஸார் (Froissart) என்பவர் உரைநடையில் அவருடைய காலத்தின்

வரலாற்றை எழுதினர். இவ்வாறு இடைக்காலத்தின் பிற்பகுதியில் மலர்ச்சி பெற்ற ஐரோப்பிய மொழிகள் 15 ஆம் நூற்றாண்டில் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டபோது மேலும் வளர்ச்சி யடைந்தன. இந்த வளர்ச்சி 16 ஆம் நூற்றாண்டில் உச்ச நிலையை யடைந்தது. இக்காலத்தில் இத்தாலியில் மக்கியவல்லி (Machiavelli), ஸ்பெயினில் ஸெர்வான்டெஸ் (Cervantes), இங்கி லாந்தில் ஷேக்ஸ்பியர் (Shakespeare) போன்றவர்கள் எழுதிய நூல்களும், இலக்கியங்களும் அந்தந்த நாட்டு மக்களிடையே ஒற் றுமை யுணர்ச்சியைப் பெருக்கின. இடைக்காலத்தில் இலத்தீனும், கிரேக்க மொழியும் இலக்கிய மொழிகளாக இருந்ததால், இலக்கிய அறிவும் இன்பமும் ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்தன. ஆனால் நாட்டு மொழிகளில் இலக்கியம் தோன்றி அச்சிடப்பட்டு எல்லோ ருக்கும் வழங்கப்பட்டபோது, அனைவரும் அவ்வின்பத்திலும் அறி விலும் பங்குபெற்றுப் பொதுவான எண்ணங்கள், கருத்துக்கள், இலட்சியங்கள் முதலியவற்றால் பிணைக்கப்பட்டு ஒற்றுமையடைந் தனர்.

கி. பி. 15 ஆம் நூற்றாண்டில் இடைக்கால ஐரோப்பிய சமூ கத்திற்கு ஆதாரமாக இருந்த சக்திகள் ஒவ்வொன்றாய்ச் சிதைந் தன. நிலமானிய முறை நலிவுற்றது. கொலம்பஸ் என்பவர் புதிய கண்டங்களைக் கண்டுபிடித்தார். கோப்பர்னிக்கஸ் (Coper-nicus) என்பவர் புதிய உலகங்களைக் கண்டுபிடித்தார். இவை யெல்லாம் ஐரோப்பிய மக்களின் சிந்தனைகளை விரிவடையச் செய் தன. எல்லாவற்றிற்கும் மேலாக லூத்தர் என்பவர் போப்பாண் டவரின் அதிகாரத்திற் கெதிராகப் புரட்சி செய்து, ஐரோப்பிய சமூகம் இதுவரை பெற்றிருந்த சமய ஒற்றுமை எனும் அடிப்படை யைத் தகர்த்தெறிந்தார். மாற்றங்கள் நிறைந்த இக்காலத்தில் ஐரோப்பிய மக்களைச் சீரான பாதையில் வழிநடத்திச் செல்லக் கூடிய சக்தி ஒன்றுமில்லாததால், அவர்கள் வலிமை மிக்க அரசர் களின் துணையை நாடினர். இது அரசாங்கத்தின் வரலாற்றில் அடிக்கடி ஏற்படும் ஒரு நிகழ்ச்சியாகும். ஓர் அமைப்புச் சிதைந்து இன்னோர் அமைப்பு நிலைபெறும் காலம்வரை மக்கள் தமக்கு ஆதரவாக வலிமை மிக்க தனிமனிதர்களை நாடிச் செல்கின்றனர். உதாரணமாக, பண்டைய ரோமில் குடியரசு சிதைந்து குழப்பங் கள் நிறைந்திருந்த காலத்தில் மக்கள் ஸீஸர், அகஸ்டஸ் போன்ற போர்ப்படைத் தலைவர்களின் துணையைத் தேடிச் சென்றன ரென்று பார்த்தோம். அதேபோல் மாற்றங்கள் நிறைந்திருந்த பிந்திய இடைக்காலத்திலும் ஐரோப்பாவில் ஆங்காங்கே மக்கள் வலிமை மிக்க அரசர்களைச் சூழ்ந்து தம் வாழ்வைப் பாதுகாக்கத் தலைப்பட்டனர். இவ்வாறு மக்களின் ஆதரவைப் பெற்ற அரசர் களே 16 ஆம் நூற்றாண்டில் வரம்பில்லா முடியரசர்களாகத்

திகழ்ந்தனர். குறிப்பாக இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கல், ஸ்வீடன், டென்மார்க் ஆகிய நாடுகளில் இவ்வித மாற்றம் ஏற்பட்டது. இந்த வரம்பில்லா முடியாட்சிகளின் தோற்றம் ஐரோப்பிய மக்களிடையே எழுந்த தேசிய உணர்ச்சிகளுக்கு ஒரு சிறந்த அறிகுறியாக இருந்ததோடல்லாமல், அவ்வுணர்ச்சிகளை மேலும் பலப்படுத்தியது. வரம்பில்லா முடியரசுகள் அடைந்த வெற்றிகளும், நிலைநாட்டிய அரசாங்க நிறுவனங்களும், அமைப்புக்களும் நாட்டுப்பற்றை வளர்த்தன. எனவே வரம்பில்லா முடியாட்சிகளின் வளர்ச்சி தேசிய உணர்ச்சிப் பெருக்கத்திற்கு முக்கிய காரணமாக இருந்ததெனக் கூறலாம்.

15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்காக் கண்டம் கண்டுபிடிக்கப்பட்டது. கிழக்கேயுள்ள நாடுகளுக்குப் புதிய கடல் வழிகள் திறக்கப்பட்டன. இதன் விளைவாக ஐரோப்பிய நாடுகளிடையே வாணிகம், குடியேற்றம் முதலிய காரணங்களினால் போட்டி தோன்றியது. எனவே, இடைக்காலத்தில் ஒரே கிறித்துவப் பொது நலக்கூட்டின் உறுப்புகளாக இருந்த ஐரோப்பிய நாடுகள் பிரிந்து ஒன்றோடொன்று போட்டியிடத் தொடங்கின. இவற்றின் பயனாகத் தேசியப் போர்ப்படைகளும் கப்பற்படைகளும் தோன்றிப் பல வணிகப் போர்கள் நிகழ்ந்தன. இவையெல்லாம் தேசிய உணர்ச்சியைப் பெரிதும் வலுப்படுத்தின.

கி. பி. 1517 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 31 ஆம் நாள் மார்ட்டின் லூத்தர் என்பவர் ஜெர்மனியில் விட்டன்பர்க் (Witten berg) எனுமிடத்திலிருக்கும் கோவில் வாயிலில் தம் தொண்ணூற்றைந்து கோட்பாடுகளை எழுதி அறிவித்தார். அன்றிலிருந்து அவர் போப்பாண்டவருக்கு எதிராக ஒரு சமயப் புரட்சி இயக்கத்தைத் (Reformation) தொடங்கினர். இந்த இயக்கம் ஐரோப்பிய வரலாற்றில் பல திருப்பங்களை ஏற்படுத்தியது. அவற்றில் ஒன்று அது தேசிய உணர்ச்சிக்கு அளித்த ஊக்கமாகும். ஏனெனில் இதுவரை அரசியல், வணிகம், மொழி ஆகிய அடிப்படைகளில் ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்டிருந்த போட்டிகள் இப்போது சமய வேற்றுமைகளினால் மேலும் அதிகரித்தன. அதன் விளைவாக அவற்றிடையே இருந்த பிளவுகள் விரிவடைந்தன. லூத்தர் தொடங்கிய புரட்சி இயக்கத்திற்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளிடையே கத்தோலிக்க நாடுகள், புரட்டஸ்டாண்டு அல்லது எதிர்ப்புச் சமய நாடுகள் என்ற பாகுபாடுகள் தோன்றலாயின. இவை ஐரோப்பிய நாடுகள் ஏற்கெனவே வேறு காரணங்களினால் பெற்றிருந்த தேசிய உணர்ச்சிகளைப் பலப்படுத்தின. இதுவரை நாம் கூறிய காரணங்கள் கி. பி. 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய தேசிய உணர்ச்சி வளர வழிவகுத்

தன. ஆனால், தேசிய அரசுகளின் எழுச்சிக் காலத்தின் பிற்பகுதி யாகிய 18, 19ஆம் நூற்றாண்டுகளில் தேசிய உணர்ச்சியைப் பலப்படுத்தப் புதியதொரு சக்தி பிறந்தது. அதுவே பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாகத் தோன்றிய உரிமை யுணர்ச்சியாகும். பிரெஞ்சுப் புரட்சிக்கு அடிகோலியவர்கள் தேசிய உணர்ச்சியை நேராகத் தூண்டிவிடாவிடினும், ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் தமது அரசாங்க அமைப்பை நிர்ணயிக்கவும், அரசாங்கத் தலைவர் களைத் தேர்ந்தெடுக்கவும் உரிமை பெற்றிருக்கின்றனர் என்ற புதிய கொள்கையைப் பரப்பியதால், தேசிய உணர்ச்சி புதியதோர் அடிப்படையில் வளர உதவினர். ரூஸோ (Rousseau) என்பவர் தமது "சமுதாய ஒப்பந்தம்" (The Social Contract) என்ற புகழ் வாய்ந்த நூலில் விவரித்திருக்கும் "பொதுநல விருப்பம் (The General Will) என்னும் கருத்து ஐரோப்பிய நாடுகளில் தேசிய உணர்ச்சி பெருகப் புதிய பாதை வகுத்தது. பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு நெப்போலியன் தேசிய உணர்ச்சிகளை மேலும் வளர்த்தார். அவர் ஏற்படுத்திய வார்ஸா பெருங் கோமகளுட்சி (The Grand Duchy of Warsaw) போலந்து மக்களிடையே அவ்வுணர்ச்சி யைப் பரப்பியது. மேலும், அவரின் படையெடுப்புகளினால் இடர்ப்பட்டிருந்த ஐரோப்பிய நாடுகள் பல அவர்மேல் கொண் டிருந்த வெறுப்பின் காரணமாகத் தேசிய உணர்ச்சி பெற்றன. மேற்கூறிய காரணங்களினால் 19ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஐரோப்பிய நாடுகள் யாவும் தேசிய அரசுகளாக உருப்பெற்றன. அவற்றின் வரலாறுகளை இங்கே சுருக்கமாகக் கூறுவோம்.

இங்கிலாந்து

ஐரோப்பிய மக்களுள் முதல் முதலாகத் தேசிய உணர்ச்சி பெற்றவர்கள் ஆங்கிலேயராவர். இனம், மொழி ஆகியவை காரணமாகப் பிரிவுகள் நிறைந்திருந்த இங்கிலாந்து மக்களி டையே 11ஆம் நூற்றாண்டு முதல் தேசிய உணர்ச்சி தோன்றி வளர்ந்ததற்கு இரு காரணங்கள் உண்டு. முதலாவதாக, இங்கி லாந்து மற்ற ஐரோப்பிய நாடுகளினின்று இயற்கையான எல்லை களினால் பிரிந்திருப்பது தேசிய வளர்ச்சிக்குப் பெருந்துணையாக இருந்தது. இரண்டாவதாக, நார்மானியரும் அஞ்சிவினரும் ஏற்படுத்திய வலிமை மிக்க அரசியலமைப்பு மக்களின் வாழ்வைச் சீர்படுத்தி, அவர்களிடையே ஒழுங்கையும் ஒற்றுமையையும் நிலை நாட்டியது. இவை ஆங்கிலேயரின் தேசிய உணர்ச்சிக்கு முக்கிய ஆதாரங்களாகும். நார்மானிய அரசர்கள் நிலைநாட்டிய அரசியல் ஒற்றுமை 13ஆம் நூற்றாண்டில் தேசிய உணர்ச்சியாக மலர்ந்தது. 3ஆம் ஹென்றி காலத்தில் அவ்வரசர் போப்பாண்டவருக்கு அடி பணிந்திருந்ததையும், அவர் வேற்று நாட்டாருடன் கொண்டிருந்த

நட்பையும் எதிர்த்து ஆங்கில மக்களிடையே தோன்றிய வெறுப் புணர்ச்சி அவர்களிடம் வளர்ந்திருந்ததேசிய உணர்ச்சிக்கு முதல் அடையாளமாகும். இவ்வுணர்ச்சி சைமன் டி மாண்ட்ஃபோர்ட் (Simon de Montfort) என்பவரால் மேலும் வளர்க்கப்பட்டதால், பாராளுமன்றம் தோன்ற ஏதுவாக இருந்தது. சைமன் டி மாண்ட் ஃபோர்ட்டுக்குப் பிறகு முதலாம் எட்வர்டு காலத்தில் ஆங்கிலப் பாராளுமன்றம் நிலையாக நிறுவப்பட்டது. இதன் பிறகு ஓழுங் காக வளர்ச்சி பெற்ற பாராளுமன்றம் ஆங்கிலேய மக்களின் தேசிய உணர்ச்சிகளே எதிரொலிக்கும் தேசிய நிறுவனமாகத் திகழ்ந்தது. எனவே, கி. பி. 1295 ஆம் ஆண்டு முதலாம் எட்வர்டு "மாதிரிப் பாராளுமன்றத்தைக்" (Model Parliament) கூட்டிய போது இங்கிலாந்து ஒரு தேசிய அரசாக முழுமை பெற்றதெனக் கூறலாம்.

இவ்வாறு இங்கிலாந்து தேசியம் காரணமாகப் பெற்றிருந்த ஆற்றல் முதலில் வேல்ஸ் (Wales) நாட்டை அடக்கவும், பிறகு ஸ்காட்லாந்துடனும், பிரான்ஸுடனும் நடந்த போர்களிலும் பயன்படுத்தப்பட்டது. வெகு காலமாக வேல்ஸ் இங்கிலாந்திற்கு அடங்கவில்லை. முதலாம் எட்வர்டு மன்னர் தேசிய உணர்ச்சி பெற் றிருந்த இங்கிலாந்து மக்களின் ஆதரவைக்கொண்டு இந்நிலையை மாற்ற எண்ணி வேல்ஸின் மீது படையெடுத்தார். 1282 ஆம் ஆண்டு அவர் வேல்ஸ் நாட்டுத் தலைவனை லெவ்லினைத் (Llewe-lyn III) தோற்கடித்து, தன் முதல் மகனை அந்நாட்டுப் பிரபு வாக்கினர். முதலாம் எட்வர்டு அடைந்த இந்த வெற்றி வேல்ஸ் மக்கள் இங்கிலாந்திடம் கொண்டிருந்த வெறுப்புணர்ச்சியை முற்றிலும் மாற்றவில்லை. இம்மாற்றம் இரண்டு நூற்றாண்டு களுக்குப் பிறகு வேல்ஸ் மரபு வழி வந்தவரான ஹென்றி ட்யூடர் இங்கிலாந்தின் அரியணை ஏறியபோதுதான் ஏற்பட்டது. இதன் பிறகு வேல்ஸ் இங்கிலாந்துடன் இணைந்து நின்றது.

முதலாம் எட்வர்டு காலத்தில் இங்கிலாந்துக்கும் ஸ்காட் லாந்துக்கு மிடையே எழுந்த போர்கள் பல ஆண்டுகள் நீடித் திருந்தன. இதனால் ஸ்காட் மக்களிடையே தேசிய உணர்ச்சி தோன்றியது. ஜான் பேலியல் (John Balliol), சர் வில்லியம் வாலெஸ் (Sir William Wallace), ராபர்ட் ப்ரூஸ் (Robert Bruce) போன்ற வீரர்கள் ஸகாட் மக்களின் உரிமைக்காக இங்கிலாந்தை எதிர்த்துப் போராடினர். கி. பி. 1314 ஆம் ஆண்டு முதலாம் எட்வர்டின் ஆங்கிலப் படை பானக்பர்ன் (Bannockburn) என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டது. இதன் பிறகு ஸ்காட்லாந்து ஒரு தனித் தேசிய அரசாகத் திகழ்ந்தது. ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் வரை ஸ்காட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும்

சண்டைகள் நடந்துகொண்டிருந்தன. இறுதியாக 1603 ஆம் ஆண்டு ஸ்காட் மன்னனை ஆரும் ஜேம்ஸ் முதலாம் ஜேம்ஸ் எனும் பெயருடன் ஆங்கில அரியணை ஏறியபோது இவ்விரு நாடுகளும் ஓரரசாக இணைந்தன. இந்த ஆண்டில்தான் பெரும் பிரிட்டன் (Great Britain) என்றழைக்கப்படும் தேசிய அரசு உருப்பெற்றது.

இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் கி. பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் நூறாண்டுப் போர் (Hundred Years' War) நிகழ்ந்தது. இதனால் அவ்விரு நாடுகளிலும் தேசிய உணர்ச்சி அதிகரித்தது. இப்போரினால் இங்கிலாந்துக்கு ஏற்பட்ட பயன்களை மட்டும் இங்குப் பார்ப்போம். மூன்றாம் எட்வர்டின் அடாத செயலினாலும், மண்ணாசையினாலும் மூண்ட இந்தப் போரில் ஆங்கிலேய மக்கள் மன்னருக்கு முழு ஆதரவளித்தது அவர்கள் அடைந்திருந்த ஒருமைப்பாட்டை நன்கு எடுத்துக் காட்டுகிறது. மேலும், இந்த நீண்டகாலப் போரினால் மன்னனுக்கு ஏற்பட்ட பணமுடையின் காரணமாக தேசிய நிறுவனமாகிய பாராளுமன்றம் மேலும் வலுவடைந்தது. நாட்டின் பல பிரிவுகளின் பிரதிநிதிகளையும் உறுப்பினராகக் கொண்டிருந்த பாராளுமன்றம் அடிக்கடி கூட்டப்பட்டதால், அப்பிரிவுகளிடையே ஒற்றுமை யுணர்ச்சி வளர்ச்சியுற்றது. மேலும், அயல் நாட்டில் நடந்த போர்களில் எல்லாப் பிரிவுகளைச் சேர்ந்த ஆங்கில மக்களும் வேறுபாடின்றிப் போரிட்டனர். எனவே, ஆங்கிலப் படை ஒரு தேசியப் படையாக விளங்கியது. அது கிரெஸி (Crecy), பாய்ட்டியர்ஸ் (Poitiers), அகின்கோர்ட் (Agincourt) ஆகிய இடங்களில் பெற்ற வெற்றி தேசிய உணர்ச்சியையும் பெருமையையும் அதிகரித்தது. இவ்வாறு வேல்ஸ், ஸ்காட்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் தொடுத்த போர்களின் காரணமாக இங்கிலாந்து தான் ஏற்கெனவே பெற்றிருந்த தேசிய நிலை (Nationhood) யில் மேலும் வளர்ந்து, 15 ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஐரோப்பாவின் முதல் தேசிய அரசாக இலங்கியது.

பிரான்ஸ்

பிரான்ஸ் கி. பி. 1180 ஆம் ஆண்டுவரை பல மானியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மேற்குப் பகுதி முழுவதற்கும் ஆங்கிலேய அரசர்கள் பிரபுக்களாக இருந்தனர். கிழக்குப் பகுதியும் தெற்குப் பகுதியும் தனிப்பட்ட கீழாட்களின் கையிலிருந்தன. பாரிஸ் நகரைச் சுற்றிலும் இருந்த நிலப் பரப்பு மட்டுமே பிரெஞ்சு அரசனுடைய நேரான அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தது. கி. பி. 1199 இல் ஆங்கிலேய அரசனை ஜான் அவன் இழைத்த சில குற்றங்களுக்காகப் பரிகாரம் செய்யும்

பொருட்டுப் பிரெஞ்சு அரசவைக்கு அழைக்கப்பட்டான். இந்த அழைப்பை அவன் புறக்கணிக்கவே, பிரெஞ்சு அரசனான ஃபிலிப் அகஸ்டஸ் (Philip Agustus) ஆங்கிலேய அரசன் பிரான்ஸில் பெற்றிருந்த மானியத்தை அவனிடமிருந்து பறித்தான். இந்த நிகழ்ச்சியினால் பிரான்ஸ் நாட்டின் மேற்கேயுள்ள பெரும்பகுதி அரசனுடைய நேரான அதிகாரத்திற்குட்பட்டதுடன் அவனுடைய வருவாயும் அதிகாரமும் அதிகரித்தன. இதன் பிறகு அரசனது செல்வாக்கு விரைவில் பெருகியது. அவனிடம் மக்கள் கொண்டிருந்த மதிப்பு அதிகமாயிற்று. நிலமானியப் பிரபுக்களும் அவனிடம் பற்றுக்கொள்ள முற்பட்டனர். பிரெஞ்சு அரசர்களின் செல்வாக்கு சிலுவைப் போர்களின்போது மேலும் அதிகரித்தது. நிலமானியப் பிரபுக்களின் அதிகாரம் மிகுதியாகக் குறைந்தது. நான்காம் ஃபிலிப் (Philip IV, Philip The Fair) காலத்தில் இந்த செல்வாக்கு உச்சநிலையை அடைந்தது. இந்த அரசர் முதல் முதலாக நகரங்களின் பிரதிநிதிகளை எஸ்டேட்ஸ் ஜெனரல் (Estates General) கூட்டத்திற்கு அழைத்தார். இதனால் அந்த நிறுவனம் சமூகத்தின் எல்லா வகுப்புக்களின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு தேசிய நிறுவனமாக மாறியது.

ஆனால், பிரான்ஸில் இடைக்காலத்தில் இங்கிலாந்தில் நிலவியிருந்ததைப்போல் ஒற்றுமை ஏற்படவில்லை. அரசனுடைய ஆணை வலிமை பெற்றிருந்தபோதிலும், நார்மானிய அரசர்கள் நிறுவியதைப்போன்ற அரசாங்க அமைப்பைப் பிரெஞ்சு அரசர்கள் ஏற்படுத்தவில்லை. ஆகவே, நிலமானியப் பிரபுக்களின் செல்வாக்கு அரசனுடைய அதிகாரத்தைக் குறைத்தது. பிரபுக்களிடையே அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டன. அவர்கள் தமக்குக் கீழிருந்த பண்ணையாட்களைத் துன்புறுத்தினர். பெரும்பான்மையான வரிகளைச் சாதாரண மக்களே செலுத்தி வந்தார்கள். பிரபுக்கள் வரிகொடுக்க மறுத்தனர், அல்லது வரிகளிலிருந்து எப்படியாவது தப்பித்துக் கொண்டனர். மேலும், எஸ்டேட்ஸ் ஜெனரல் எனும் பாராளுமன்றத்தில் பிரபுக்களும் மதக்குருக்களும் மூன்றும் வகுப்பின் பிரதிநிதிகளிடமிருந்து பிரிந்து தனியாக அமர்ந்தனர். ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இருந்தது போல இம்மூன்று பிரிவுகளிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தினால் பிரெஞ்சுப் பாராளுமன்றம் நாட்டின் நிர்வாகத்தில் முக்கியத்துவம் பெறவில்லை. உறுப்பினர்களிடையே ஒற்றுமை இல்லாமலிருந்ததால், மன்னனுடைய அதிகாரம் வரம்பு கடந்து வளர்ந்ததுடன், நாட்டு நிர்வாகமும் சீர்குலைந்து காணப்பட்டது. மேலும், எஸ்டேட்ஸ் ஜெனரல் ஆற்றல் குன்றியிருந்ததால், அதை மன்னன் அடிக்கடி கூட்டவில்லை. எனவே, 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரான்ஸில் ஃபிலிப் அகஸ்டஸ், நான்காம்

பிலிப் போன்ற அரசர்களுடைய முயற்சிகளால் மன்னனுடைய அதிகாரம் ஓங்கியிருந்தபோதிலும், நாடு ஒற்றுமையடையவில்லை. 14, 15ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்துடன் மூண்ட நூறாண்டுப்போரின் போதுதான் நாட்டில் ஒற்றுமை ஏற்பட்டது. ஆங்கிலேய அரசர்கள் தேசிய ஒற்றுமை யடைந்திருந்த தமது குடிகளின் ஆதரவைக் கொண்டு தம் செல்வாக்கைப் பிரான்ஸிலும் நிலைநாட்ட முயன்றபோதுதான் பிரெஞ்சு மக்கள் வெகுண்டெழுந்து ஒற்றுமை யடைந்தனர்.

நூறாண்டுப் போரின் தொடக்கத்தில் பிரான்ஸ் பல தோல்விகளை யடைந்தது. வில்லம்பு தாங்கிய ஆங்கிலேய மக்களின் படையைப் பிரெஞ்சுப் பிரபுக்களின் குதிரைப்படை எதிர்த்து நிற்க முடியவில்லை. கி. பி. 1415ஆம் ஆண்டு அகின்கோர்ட் (Agincourt) என்னுமிடத்தில் நடந்த கடும்போரில் பிரெஞ்சுப் படைகள் முற்றிலும் முறியடிக்கப்பட்டன. இதன்பிறகு கி. பி. 1420இல் ட்ராய்ஸ் (Troyes) என்னுமிடத்தில் நடந்த உடன்படிக்கையின்படி பிரெஞ்சு மன்னனை ஆரும் சர்ல்ஸ் இறந்தபிறகு பிரெஞ்சு அரியணை ஆங்கிலேய அரசனைச் சேரவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இந்த உடன்படிக்கை பிரெஞ்சு மக்களின் தன்மானத்திற்குப் பெரும் இழுக்காகக் கருதப்பட்டது. இத்தருணத்தில் தான் அவர்களுடைய நாட்டுப்பற்றைத் தட்டியெழுப்பப் பிரெஞ்சு நாட்டின் தவப்புதல்வியான ஜோன் ஆப் ஆர்க் (Joan of Arc) தோன்றினாள். ஜோன் ஒரு குடியானப் பெண். இறைவனிடம் பற்று மிகுந்தவள். பிரெஞ்சு அரசர்களும் பெருமக்களும் செய்ய இயலாத அருஞ்செயலை இச்சிறு பெண்மணி ஆற்றினாள். அவள் மக்களின் தேசிய உணர்ச்சியைத் தூண்டிவிட்டாள். போர்ப் படைகளை வீறுகொண்டெழச் செய்தாள். ஆர்லியன்ஸ் நகரில் ஆங்கிலேயர் கோட்டையை வெற்றிகரமாக முற்றுகையிட்டாள். இந்த வீரப் பெண்மணியின் பெருமுயற்சியின் பயனாக இளவரசன் சார்ல்ஸ் ஏழாம் சார்ல்ஸ் எனும் பெயருடன் அரியணையேற முடிந்தது. கி. பி. 1431ஆம் ஆண்டு ஆங்கிலேயர் அந்தப் பெண்மணியைத் தீயிலிட்டுக் கொளுத்தியபோதிலும், அவள் தூண்டிவிட்ட தேசிய உணர்ச்சியெனும் சுடர் மேலும் மேலும் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. அவளுடைய தோற்றத்திற்குப் பிறகு நூறாண்டுப் போரில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. கி. பி, 1453ஆம் ஆண்டு அப்போர் முடிவடைந்தபோது ஆங்கிலேயர் பிரான்ஸில் கலே (Calais) என்னும் இடத்தைத் தவிர மற்ற எல்லாப் பகுதிகளிலிருந்தும் விரட்டப்பட்டனர். இதன் பிறகு 11ஆம் லூயி (1461-1483), 8ஆம் சார்ல்ஸ் (1483-1498) ஆகிய அரசர்கள் காலத்தில் நிலமானியப் பிரபுக்கள் முறியடிக்கப்பட்டு, பர்கண்டி (Burgundy), ப்ராவென்ஸ் (Provence) ஆகிய

பகுதிகள் அரசனது ஆணைக்குள் கொண்டுவரப்பட்டன. எனவே, 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்ஸ் தேசிய நிலையடைந்ததென்று கூறலாம்.

ஸ்பெயினும், போர்த்துக்கலும்

ஐரோப்பாவில் முதல்முதலாகத் தேசிய நிலையடைந்த மக்கள் ஆங்கிலேயரும், ஸ்காட்டுகளும், பிரெஞ்சு மக்களுமாவர். இவர்களுக்குப் பிறகு ஸ்பெயினும், போர்த்துக்கலும் தேசிய அரசுகளாயின. இவ்விரு நாட்டினரும் தேசிய வுணர்ச்சி பெற்றதற்கு முக்கிய காரணம் மூர்களுடன் (Moors) நடந்த நீடித்த போர்களின்போது அவர்களிடையே ஏற்பட்ட ஒற்றுமை யுணர்ச்சியாகும். இந்தச் சண்டைகளின்போது ஸ்பெயினிலும் போர்த்துக்கல்லிலும் தோன்றிய வலிமை மிக்க அரசர்கள் தம் வெற்றிகளினால் இவ்வுணர்ச்சியை மேலும் வளர்த்தனர்.

14ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐபீரியத்(Iberian)தீபகற்பம் போர்த்துக்கல், கேஸ்டில் (Castile), அரகான் (Aragon), க்ரனடா (Granada) என்ற முடியரசுகளாகப் பிரிந்திருந்தது. கி. பி. 1469ஆம் ஆண்டு அரகானின் இளவரசன் ஃபெர்டினண்டுக்கும் (Ferdinand) கேஸ்டிலின் இளவரசி இஸபெல்லாவுக்கும் (Isabella) திருமணம் நடந்தது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அவ்விரு அரசுகளும் ஒன்றுக இணைக்கப்பட்டன. இதனால் ஐபீரியத் தீபகற்பத்தின் பெரும்பகுதி ஸ்பெயின் முடியரசாக மாறியது. ஃபெர்டினண்டும் இஸபெல்லாவும் ஸ்பெயின் அரியணையேறிய பிறகு கி. பி. 1492ஆம் ஆண்டு தெற்கே மூர்கள் அமைத்திருந்த க்ரனடா முடியரசின்மீது படையெடுத்து அவ்வரசைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் பயனாக ஐபீரியத் தீபகற்பத்தில் போர்த்துக்கல் நீங்கலாக மற்ற எல்லாப் பகுதிகளும் ஸ்பெயின் முடியாட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. இதனால் ஸ்பெயின் மக்களிடையே தோன்றிய ஒற்றுமை யுணர்ச்சி இன்னும் வேறு சில காரணங்களினால் வலிமை பெற்று வளர்ந்தது. இவற்றுள் குறிப்பிடத் தக்கவை ஸ்பெயின் மக்களுடைய சமய ஒற்றுமை, கொலம்பஸ் போன்றவர்கள் புதிய உலகைக் கண்டுபிடித்ததினால் ஏற்பட்ட செல்வப் பெருக்கும் பெருமையும், ஐந்தாம் சார்ல்ஸ், இரண்டாம் ஃபிலிப் போன்ற ஸ்பெயின் அரசர்கள் அமைத்த நடு அரசாங்கம், ஸ்பெயின் நாட்டுக் காலாட்படைகள் ஐரோப்பாவில் அடைந்த வெற்றிகள் முதலியவையாகும். இவை காரணமாக ஸ்பெயின் 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் தலைசிறந்த தேசிய அரசுகளில் ஒன்றுகத் திகழ்ந்தது.

போர்த்துக்கல் மக்களிடையே தேசிய உணர்ச்சி எழப் பெருந்துணையாக நின்றது அந்நாட்டுக் கப்பலோட்டிகள் (Navigators)

அடைந்த வெற்றிச் சிறப்பேயாகும். அவர்கள் 15ஆம் நூற்றாண்டில் கடல் வழிகளைக் கண்டுபிடிப்பதில் முன்னணியில் நின்றனர். அவர்களது முயற்சியால் ஆப்பிரிக்காவிலுள்ள கினி (Guinea) யின் செல்வம் போர்த்துக்கலுக்குக் கிடைத்தது. நன்னம்பிக்கை முனையைச் (Cape of Good Hope) சுற்றி இந்தியாவுக்குக் கடல் வழி கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் இந்தியாவில் போர்த்துக்கீசியர் ஆதிக்கம் பரவ வழியும் ஏற்பட்டது. இவையெல்லாம் மக்களின் நாட்டுப்பற்றை வளர்த்துத் தேசிய உணர்ச்சியைத் தூண்டி விட்டன.

டச்சுக் குடியரசு (The Dutch Republic)

ஐரோப்பாவின் வடமேற்கே உள்ள நெதெர்லண்ட்ஸ் (Nètherlands) என்றழைக்கப்படும் தாழ்ந்த நிலப்பரப்பில் வாழ்ந்த தொழிலாற்றல் மிகுந்த டச்சு மக்கள் 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் தேசிய நிலையடைந்தனர். பல சிறு மாநிலங்களில் வாழ்ந்த இம்மக்கள் தேசிய உணர்ச்சிபெற்று ஒற்றுமையடைந்ததற்கு முக்கிய காரணம் அவர்கள் ஸ்பெயின் அரசர்களின் வல்லாட்சியினால் அடைந்த இன்னல்களே. கி. பி. 1519ஆம் ஆண்டு ஐந்தாம் சார்ல்ஸ் ஸ்பெயின் நாட்டரசனானபோது அவ்வரசன் பெற்றிருந்த மரபுரிமையின் பயனாக நெதெர்லண்ட்ஸ் அவனுடைய ஆதிக்கத்திற்குட்பட்டது. ஐந்தாம் சார்ல்ஸும், அவனுக்குப் பிறகு அரியணை யேறிய இரண்டாம் ஃபிலிப்பும் புரட்டஸ்டாண்டு சமயத்தைத் தழுவியிருந்த டச்சு மக்களைத் துன்புறுத்தினர். இதனால் கி. பி. 1566ஆம் ஆண்டு டச்சு மக்களும் பிரபுக்களும் வெகுண்டெழுந்தனர். நாடெங்கும் கிளர்ச்சிகள் தோன்றின. அவற்றை அடக்க இரண்டாம் ஃபிலிப் மன்னன் ஆல்வா கோமகனை (Duke of Alva) ஒரு படையுடன் அனுப்பினான். அக் கோமகன் நெதெர்லண்ட்ஸில் ஒரு பயங்கர ஆட்சியை நிறுவி டச்சு மக்களை மிகக் கடுமையாகத் தண்டித்தான். சமய வேற்றுமையின் காரணமாக ஆயிரக்கணக்கான டச்சு மக்கள் தீயிலிட்டும் தூக்கிலிட்டும் கொல்லப்பட்டனர். வெறுப்புணர்ச்சியினால் ஒன்றுபட்ட டச்சு மக்கள் ஆரஞ்சு நாட்டுச் சிற்றரசர் வில்லியம் (William of Orange) என்பவரின் தலைமையில் ஸ்பெயின் ஆட்சியை எதிர்த்தனர். கி. பி. 1572ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் கடற்படை திரட்டினர். 1579ஆம் ஆண்டு ஏற்பட்ட உட்ரெக்ட் உடன்படிக்கையின்படி (Treaty of Utrecht) நெதர்லண்ட்ஸின் வடக்கே அமைந்திருந்த ஏழு புரட்டஸ்டாண்டு அரசுகளும் ஒரு நாட்டுக் கூட்டு அமைப்பை (Confederation) அமைத்துக் கொண்டன. இதுவே டச்சுக் குடியரசு தோன்றியதற்கு முதற் படியாகும். டச்சு மக்களின் எழுச்சிக்கு ஆதரவளித்த ஆரஞ்சு

வில்லியத்தை ஸ்பெயின் அரசர் கொல்லக் கட்டளையிட்டபோது டச்சு மக்கள் கொதித்தெழுந்து கி. பி. 1581ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் இருபத்தைந்தாம் நாள் "சுதந்திர அறிக்கை" (Declaration of Independence) ஒன்றை வெளியிட்டனர். 1584ஆம் ஆண்டு ஆரஞ்சு சிற்றரசர் வில்லியம் கொல்லப்பட்டார். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அவருடைய மகன் மாரிஸ் (Maurice) என்பவர் தலைமையில் டச்சு மக்கள் ஸ்பெயின் நாட்டுடன் நீண்ட போர் தொடுத்தனர். இங்கிலாந்து டச்சு மக்களுக்குத் துணைபுரிந்தது. இறுதியாக 1609 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தப்படி டச்சு மக்களின் உரிமைகள் நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1648ஆம் ஆண்டில் செய்யப் பட்ட வெஸ்ட்பேலியா உடன்படிக்கைப்படி (Peace of Westphalia) ஸ்பெயின் டச்சு நாட்டின் சுதந்திரத்தை முழுதும் ஏற்றுக் கொண்டது. இவ்வாறு டச்சு மக்கள் ஸ்பெயின் அரசர்களின் வல்லாட்சியை எதிர்த்து வீறுடன் போராடி ஐரோப்பாவில் ஒற்றுமை மிக்க தேசீய சமூகத்தையும் அரசையும் அமைத்துக் கொண்டு சீரும் சிறப்பும் பெற்றனர். பிற்காலத்தில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களின்போதெல்லாம் டச்சு மக்கள் ஒற்றுமை குலையாமல் தமது சுதந்திரத்தைப் பாதுகாத்து இன்று வரை மாண்புடன் இலங்குகின்றனர்.

டென்மார்க்கும் ஸ்விடனும்

பதினைந்தாம் நூற்றாண்டில் தேசீய நிலையடைந்த மற்றிரு அரசு கள் டென்மார்க்கும், ஸ்விடனுமாகும். கால்மார் கூட்டமைப்பைச் (Union of Kalmar) சேர்ந்த இந்நாடுகள் அக்கூட்டமைப்பு கலைக் கப்பட்டபொழுது தனியரசுகளாயின. கி. பி. 1618 இலிருந்து 1648 வரை நடந்த முப்பதாண்டுப் போரின் போது (Thirty Years War) இவ்விரு நாடுகளும் புரட்டஸ்டாண்டு நாடுகளுடன் சேர்ந்துகொண்டு கத்தோலிக்க நாடுகளை எதிர்த்தன. இந்த நீண்ட போரினால் இவ்விரு நாடுகளிலும் மக்களிடையே ஒற்று மையும் தேசீய உணர்ச்சியும் ஏற்பட்டன. குறிப்பாக கஸ்டவஸ் வாஸா (Gustavus Vasa) என்றும் அரசர் ஸ்வீடனை ஆண்டு வந்த காலத்தில் அது போலந்துடன் பொருத வேண்டியிருந்ததால் விரைவில் வலிமை பெற்றது. இதன் விளைவாக கஸ்டவஸ் அடால்ஃபஸ் (Gustavus Adolphus) என்னும் அரசர் காலத்தில் ஸ்வீடன் மாபெரும் வெற்றிகளை அடைந்தது. அவ்வரசர் காலத் தில் பால்டிக் கடலைச் சுற்றியுள்ள பகுதிகள் ஸ்வீடனின் ஆட்சிக் குட்படுத்தப்பட்டன. இது ஸ்வீடன் மக்கள் அடைந்திருந்த ஒற் றுமைக்கும் அவ்வொற்றுமையி னடியாகப் பிறந்த வலிமைக்கும் சிறந்த சான்றாகும்.

ரஷ்யா (Russia)

ரஷ்யாவில் முதல் முதலாக ஒரு முடியரசை நிலைநாட்டிய பெருமை ரூரிக் (Ruric) என்னும் ஸ்காண்டினேவியத் தலைவனைச் சாரும். 9 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் அவன் ஏற்படுத்திய அரசு 13 ஆம் நூற்றாண்டில் மிலேச்சர்களான மங்கோலியர்களின் படையெடுப்பினால் குலைந்தது. இதன் பிறகு சுமார் இரு நூற்றைம்பது ஆண்டுகளாக ரஷ்யாவின் அரசர்கள் மங்கோலியர்களின் அடிமைகளாயிருந்தனர். ஸ்லாவ் (Slav) இனத்தைச் சேர்ந்த ரஷ்ய மக்களின் தேசிய வளர்ச்சி இதனால் வெகுகாலம் தடைப்பட்டது. கி. பி. 1462 ஆம் ஆண்டு பயங்கர ஐவன் (Ivan the Terrible) என்னும் அரசன் அரியணை யேறிய போதுதான் இந்த நிலை மாறியது. அவ்வரசன் ரஷ்ய மக்களை மங்கோலியரின் கொடுங்கோன்மையிலிருந்து மீட்டான். ஆனால், இந்த மாற்றம் ரஷ்ய மக்களிடையே தேசிய வுணர்ச்சியைத் தோற்றுவித்ததென்று கூறமுடியாது. ஏனெனில், அவர்கள் நாகரிகமற்று மிகவும் பிற்போக்கான நிலையிலிருந்தனர். முடியாட்சி மிக்க வலிமையுடைய தாய் இருந்தபோதிலும், மக்கள் அரசரின் அடிமைகளாகவே யிருந்தனர். இடைக்காலத்தின் இறுதியில் ரஷ்யா கல்வி, பண்பாடு ஆகியவற்றில் கிழக்கு நாடுகளை ஒத்திருந்தது.

இவ்வாறு தேங்கிக் கிடந்த ரஷ்யா கி. பி. 1613 இல் ரொமானஃப் (Romanoff) மரபினர் ஆட்சியேற்ற பிறகுதான் முற்போக்கடையத் தொடங்கியது. குறிப்பாக மகா பீட்டர் (Peter the Great) எனும் அரசர் காலத்தில்தான் (1682—1725) ரஷ்யா ஐரோப்பிய நாடுகளிடையே சிறப்பிடம் பெற்று அவற்றிற்கு இணையான உயர்நிலை யடைந்தது. இக்காலத்திலேதான் ரஷ்யா தேசிய நிலையு மடைந்தது.

மங்கோலியரின் துன்புறுத்தல், ரூரிக் மரபைச் சேர்ந்த அரசர்களின் ஆட்சி ஆகிய இவற்றின் பயனாக ஒன்றித்திருந்த ரஷ்ய மக்கள் 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வடக்கே ஸ்வீடன், தெற்கே துருக்கி ஆகிய இவ்விரு அரசுகளின் ஏகாதிபத்திய முயற்சிகளை எதிர்க்க நேர்ந்தபோது, இன்னும் அதிகமாக ஒற்றுமையுணர்ச்சி பெற்றனர். இவ்வுணர்ச்சி மகா பீட்டர் போன்ற வலிமைமிக்க அரசர்களின் வெற்றிகளின் பயனாகத் தேசிய உணர்ச்சியாக மலர்ச்சியுற்றது. எனவே, 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ரஷ்யா தேசிய உணர்ச்சியினால் பிணைக்கப்பட்டு ஐரோப்பிய வரலாற்றில் முக்கிய இடம் வகித்து வருகிறது.

இவ்வாறு 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவின் மேற்குப் பகுதியிலும், வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் தேசிய

அரசுகள் நிலைபெற்றிருந்தன. ஆனால், ஐரோப்பாவின் மத்தியிலும், தெற்கிலும் வாழ்ந்த மக்கள், அதாவது ஜெர்மனி, போலந்து, இத்தாலி, பால்கன் தீபகற்பம், ஆஸ்ட்ரோ—ஹங்கேரியப் பேரரசு ஆகிய நாடுகளில் வாழ்ந்த மக்கள், தேசீய நிலையடையாமல் இருந்தனர். 18 ஆம் நூற்றாண்டில் தேசீய அரசுகளின் வளர்ச்சியில் ஒரு பெருந்தடை ஏற்பட்டிருந்தது. ஏனெனில், இங்கிலாந்தையும் ஹாலந்தையும் தவிர ஏற்கெனவே தேசீய நிலையடைந்திருந்த ஏனைய நாடுகள் எல்லாம் வரம்பில்லா முடியரசர்களால் ஆளப்பட்டு வந்தன. இவ்வரசர்கள் மத்திய ஐரோப்பாவிலும் தேசீய நிலையடையாத மற்ற நாடுகளிலும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். எடுத்துக் காட்டாக, 18 ஆம் நூற்றாண்டில் ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்ட்ரியா ஆகிய நாடுகள் போலந்தை மும்முறை தமக்குள் பங்கிட்டுக் கொண்டன. இதுபோலவே தேசீய நிலையடைந்திராத மற்றப் பகுதிகளிலும், அதுவரை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த எல்லைகள் அக்கால முடியரசர்களின் விருப்பங்களுக்கேற்ப அடிக்கடி மாற்றியமைக்கப்பட்டன. உதாரணமாக, ஜெர்மானிய மக்கள் வாழ்ந்து வந்த லொரெய்ன் (Lorraine) பிரெஞ்சு நாட்டோடு இணைக்கப்பட்டது. சுருங்கக் கூறவேண்டுமானால், 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தேசீய உணர்ச்சி பெற்றிராத பகுதிகள் தேசீய நிலையடைந்திருந்த நாடுகளின் போர்க்களமாக இருந்தன.

கி. பி. 1789 ஆம் ஆண்டு தொடங்கிய பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகுதான் மீண்டும் ஐரோப்பாவில் தேசீய உணர்ச்சி புத்துயிர் பெற்றது. இதற்கு ராம்ஸே மூர் என்னும் ஆசிரியர் மூன்று காரணங்கள் கூறுகிறார். முதலாவதாக, நெப்போலியன் தேசீய உணர்ச்சியின் பேராற்றலை நன்கு உணர்ந்திருந்தார். போலந்து, இத்தாலி போன்ற நாடுகளில் மக்கள் விரும்பிய சில மாற்றங்களை ஏற்படுத்தி அவர்களுடைய ஆதரவைப் பெற்று அவர்களிடையே தேசீய உணர்ச்சியைத் தூண்டிவிட்டார். இது 19 ஆம் நூற்றாண்டில் இந்நாடுகளின் எழுச்சிக்கு அடிகோலியது. இரண்டாவதாகப் பிரெஞ்சுப் புரட்சியும் நெப்போலியனுடைய ஏகாதிபத்தியக் கொள்கையும் ஐரோப்பாவில் 18 ஆம் நூற்றாண்டில் நிலைபெற்றிருந்த அமைப்புகள் அனைத்தையும் சிதைத்தன. இதனால் புதிதாகத் தேசீய அடிப்படையில் அரச அமைப்புக்கள் தோன்ற ஏதுவாயிருந்தது. எடுத்துக்காட்டாக, ஜெர்மனியிலும் இத்தாலியிலும் நிலைபெற்றிருந்த பல சிற்றரசுகளை நெப்போலியன் கலைத்து, இவ்விரு நாடுகளையும் தமது அதிகாரத்திற்குட்படுத்தியதால்தான் பிற்காலத்தில் இவ்விரு நாடுகளிலும் மக்கள் ஒற்றுமை யுணர்ச்சி பெற முடிந்தது. மூன்றாவதாக, நெப்போலியன் தேசீய வளர்ச்சிக்கு நேரிடையாகப் புரிந்த பணியைக் காட்டிலும் அவருடைய

கொடுங்கோன்மையினால் ஐரோப்பிய மக்களிடையே ஏற்பட்ட வெறுப்புணர்ச்சியே அவர்கள் தேசிய உணர்ச்சிபெற முக்கிய காரணமாயிருந்தது. நெப்போலியனது ஆட்சியானது ஐரோப்பாவில் சட்டத்தைச் சீர்படுத்திச் சமூகத்தில் சமத்துவத்தை ஏற்படுத்தியபோதிலும், போர்ப்படைப் பலத்தை ஆதாரமாகக் கொண்டிருந்ததால், மக்களுடைய அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டன.

பிரெஞ்சுப் புரட்சியின் பயனாக ஐரோப்பிய மக்கள் கண்ட முதன்மையான உண்மை தனிமனிதனுடைய அடிப்படை உரிமைகளாகும். இவற்றுள் ஒன்று ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் தங்கள் அரசாங்கத் தலைவர்களைத் தாமே தேர்ந்தெடுத்தல். இந்த அடிப்படை உரிமையை நெப்போலியன் ஐரோப்பிய மக்களிடமிருந்து கவர்ந்தார். இதனால் வெகுண்டெழுந்த மக்கள் தமது உரிமைகளைக் காக்க ஒன்று சேர்ந்தனர். இதன் பயனாக 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் அதுவரை தேசிய நிலையடைந்திராத பகுதிகளில் தேசிய அரசுகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றின. ஆனால் இது நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பிறகு உடனே ஏற்படவில்லை. ஏனெனில், வாட்டர்லூ (Waterloo) சண்டைக்குப் பிறகு 1815 ஆம் ஆண்டு கூடிய வியன்னா மாநாட்டில் (Vienna Conference) மக்களின் தேசிய உணர்ச்சியைச் சற்றும் மதிக்காத முறையில் திட்டங்களும் மாற்றங்களும் வகுக்கப்பட்டன. இதில் பங்கெடுத்துக்கொண்ட மெட்டர்னிக் (Metternich) போன்ற தலைவர்கள் தேசியத்தின் எதிரிகளாயிருந்ததே இதற்குக் காரணமாகும். வியன்னாத் திட்டப்படி வார்ஸா பெருங்கோமகனாட்சி (Grand Duchy of Warsaw) ரஷ்ய முடியரசின் அதிகாரத்திற்குட்படுத்தப்பட்டது. அதுவரை போலந்தைச் சேர்ந்திருந்த போஸென் (Posen), கலீஷியா (Galicia) ஆகிய பகுதிகள் முறையே பிரஷ்யாவுக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் கொடுக்கப்பட்டன. பெல்ஜியம் ஹாலந்துடன் இணைக்கப்பட்டது. இத்தாலி பல சிற்றரசுகளாகப் பிரிக்கப்பட்டு ஆஸ்ட்ரியாவின் ஆட்சிக்குள் அடக்கிவைக்கப்பட்டது. இது போலவே ஜெர்மனியும் முப்பத்தொன்பது தனியரசுகளாகப் பிளவுபட்டது. இவ்வரசுகளுள் பிரஷ்யாவின் நிலப்பரப்பு மிகவும் அதிகமாக இருந்தது. இறுதியாகத் தேசியக் கொள்கைக்கு முற்றிலும் முரணான அடிப்படையில் அமைந்திருந்த ஆஸ்ட்ரியப் பேரரசும், துருக்கிப் பேரரசும் மாற்றமேதுமின்றி விடப்பட்டன. இவ்விரு பேரரசுகளிலும் பல தேசியப் பிரிவுகள் இருந்தமையால், 19 ஆம் நூற்றாண்டில் அவ்விரு அரசுகளிலும் பல சச்சரவுகள் ஏற்பட்டன. எனவே, நெப்போலியனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு தேசிய நிலையடையலாம் என்று எதிர்நோக்கியிருந்த ஐரோப்பிய மக்கள் வியன்னாத் திட்டங்களினால் பெரும்

ஏமாற்றமடைந்தனர். இந்த ஏமாற்றம் 19 ஆம் நூற்றாண்டில் பல போர்களுக்குக் காரணமாக இருந்தது. இறுதியில் மத்திய ஐரோப்பாவிலும் தெற்கு ஐரோப்பாவிலும் பல தேசிய அரசுகள் நிறுவப்பட்டன.

கி. பி. 1820 முதல் 1878 வரை ஐரோப்பாவில் ஏழு தேசிய அரசுகள் தோன்றின. அவற்றில் முக்கியமானவை ஜெர்மனியும், இத்தாலியுமாகும். பெல்ஜியம், ஸெர்பியா (Serbia), ருமேனியா, புல்கேரியா (Bulgaria), கிரீஸ் (Greece) ஆகியவை இக்காலத்தில் தோன்றிய மற்ற தேசிய அரசுகளாகும். வியன்னாத் திட்டங்களினால் ஏமாற்றம் அடைந்திருந்த மேற்கூறிய நாட்டு மக்கள் தேசிய நிலையடையும் முயற்சிகளில் ஈடுபட்டதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இத்தாலி, போலந்து, ஹங்கேரி, ஜெர்மனி போன்ற நாடுகளிலிருந்து விரட்டப்பட்ட தேசியவாதிகள் லண்டனிலும் பாரிஸிலும் சரண்புகுந்து தமது கொள்கைகளைப் பரப்பினர். இத்தகைய தேசியவாதிகளில் தலைசிறந்தவர் மஜினி (Mazzini) எனும் இத்தாலியர். இவர் எல்லா நாடுகளின் தேசிய உரிமைகளுக்காகவும் வாதாடினார். தேசியமென்பது எல்லா நாடுகளுக்கும் பொதுவான குறிக்கோளெனப் புகட்டினர். இரண்டாவதாக, ஜெர்மானியப் பல்கலைக் கழகங்களில் அறிஞர்கள் ட்யூட்டானிய இனத்தைச் சேர்ந்த ஜெர்மானிய மக்களின் இனவுணர்ச்சியைத் தூண்டிவிட்டனர். அவர்கள் ட்யூட்டானிய இனம் மற்றெல்லா இனங்களுக்கும் மேற்பட்டது என்ற கொள்கையைப் பரப்பினர். இதனால் ஜெர்மானிய தேசிய வுணர்ச்சி பிறந்தது. ஆனால், இனவெறி கொண்ட ஜெர்மானிய மக்கள் பிஸ்மார்க் (Bismarck) என்பவர் காலத்தில் மற்ற ஐரோப்பிய நாடுகளை அடக்கியாள முயற்சித்தபோது, இந்நாட்டு மக்களிடம் தேசிய உணர்ச்சி பொங்கி யெழுந்தது. இவ்வாறு 19 ஆம் நூற்றாண்டில் தேசிய நிலையடைந்த நாடுகளின் வரலாற்றை இப்போது பார்ப்போம்.

கிரீஸ் (Greece)

பதினைந்தாம் நூற்றாண்டில் பைஸண்டைன் (Byzantine) பேரரசு வீழ்ச்சியடைந்த பிறகு கிரீஸ் துருக்கிப் பேரரசுக்கு அடிமையாயிற்று. மூன்று நூற்றாண்டுகள் இந்த அடிமை நிலையிலிருந்த கிரேக்க மக்கள் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு தேசிய உணர்ச்சி பெற்றனர். கிரேக்கர்களிடையே தேசிய இயக்கத்தைத் துவக்கி வைத்தவர் கொரெய்ஸ் (Korais) எனும் மொழி வல்லுநராவார். கி. பி. 1821 ஆம் ஆண்டு துருக்கியின் சுல்தான் அல்பேனியாவில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது, கிரேக்க மக்கள் அலெக்ஸாண்டர் இப்ஸிலான்டி

(Alexander Ypsilanti) என்பவரின் தலைமையில் புரட்சி செய்தனர். ஆனால், கிரேக்க மக்கள் எதிர்பார்த்தபடி ரஷ்ய அரசரின் உதவி அவர்களுக்குக் கிடைக்காததால், இந்த எழுச்சி பயன் தரவில்லை. ஆனால், கிரேக்க மக்கள் தம் முயற்சிகளைக் கைவிடவில்லை. மொரியாவைச் சேர்ந்தவர்கள் மூன்று வருட காலம் தொடர்ந்து கலகங்கள் செய்தனர். ஆனால், இந்த முயற்சியிலும் அவர்கள் தோல்வியடைந்தனர். ஏனெனில், துருக்கி சுல்தான் எகிப்து அரசன் மெஹெமெட் அலியின் (Mehemet Ali) துணைகொண்டு மக்களை அடக்க முயன்றார். ஆனால், இந்தக் கூட்டு முயற்சி ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய ஐரோப்பிய அரசுகளின் கவனத்தைக் கவர்ந்தது. முகமதிய அரசுகளால் அடிமைப் படுத்தப்பட்டிருந்த கிரேக்க மக்களை மீட்கும் பொருட்டு இம் மூன்று அரசுகளும் துருக்கியையும் எகிப்தையும் தமது கப்பற் படை கொண்டு தாக்கின. 1827 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இருபதாம் நாள் நவாரினே (Navarino) என்னுமிடத்தில் துருக்கியும் எகிப்தும் முறியடிக்கப்பட்டன. 1829 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பதினான்காம் நாள் ஏட்ரியநோப்பிள் ஒப்பந் தத்தின்படி (Treaty of Adrianople) துருக்கி கிரீஸ் நாட்டிற்குச் சுதந்திரமளித்தது. எனவே, 19 ஆம் நூற்றாண்டில் முதன் முதலாகத் தேசிய நிலையடைந்த அரசு கிரேக்க அரசாகும்.

பெல்ஜியம் (Belgium)

வியன்னாத் திட்டத்தின்படி பெல்ஜியம் ஹாலந்துடன் இணைக் கப்பட்டது. இந்த அமைப்பு பெல்ஜிய மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியது. ஏனெனில், கத்தோலிக்கர்களாகிய பெல்ஜிய மக்கள் புராட்டஸ்டாண்டுகளாகிய ஹாலந்து மக்களுடன் இணைந்து வாழ விரும்பவில்லை. மேலும், அரசியல் செய்திகளில் டச்சு மக்களுக்கு மட்டுமே சிறப்பிடம் அளிக்கப்பட்டதால் பெல்ஜிய மக்கள் வெறுப்படைந்திருந்தனர். ஆகவே, கி. பி. 1830 ஆம் ஆண்டு பிரான்ஸில் பூர்போன் மரபினர் (Bourbons) விரட் டப்பட்டு ஆர்லியன் மரபைச் சேர்ந்த (Orleanist) லூயி ஃபிலிப் (Louis Philippe) பிரெஞ்சு அரியணையில் அமர்த்தப்பட்டபோது, ஐரோப்பாவில் தோன்றிய குழப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு பெல்ஜிய மக்கள் கிளர்ச்சி செய்தனர். 1830 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 600 பெல்ஜிய வீரர்கள் பிரஸல்ஸ் (Brussels) நகரத்தில் தமது நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி உயிர் துறந்தனர். அப்போது பிரான்ஸும், இங்கிலாந்தும் பெல்ஜியத்தின் உரிமையைக் காக்க முன் வந்தன. இவ்விரு நாடுகளும் அரசியல் சூழ்ச்சித் திறத்தைக் (Diplomacy) கையாண்டு பெல்ஜியத்தின் சுதந்திரத்திற்கு வழி வகுத்தன.

குறிப்பாக இங்கிலாந்தின் வெளிநாட்டு அமைச்சரான பாமர்ஸ்டனும் (Palmerston) இங்கிலாந்திலிருந்த பிரெஞ்சுத் தூதரான டாலிரேண்டும் (Tallyrand) இம்முயற்சிகளில் முக்கிய பங்கெடுத்தனர். இவர்களின் முயற்சியின் பயனாக சாக்ஸே-கோபர்க் (Saxe-Coburg) கைச்சேர்ந்த லியோப்பால்டு (Leopold) என்பவர் பெல்ஜியத்தின் அரசரானார். 1839 ஆம் ஆண்டு பெல்ஜியம் ஒரு நடுநிலையான நாடென மற்ற ஐரோப்பிய நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இத்தாலி

தற்கால வரலாற்றில் இத்தாலியின் பெரும் பகுதி நெப்போலியனின் படையெடுப்புக்களின் போதுதான் முதன்முதலாக ஒன்றுக்கப்பட்டது. தெற்கே நேப்பிள்ஸ் முடியரசு நீங்கலாக மற்ற எல்லாப் பகுதிகளும் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நெப்போலியனது ஆட்சிக்குட்பட்டிருந்தன. இவ்வாறு பிரெஞ்சு அரசுடன் இணைக்கப்பட்ட இத்தாலிய நிலப்பரப்பின் ஒரு பகுதிக்கு இத்தாலிய முடியரசென்ற (Kingdom of Italy) பெயரை நெப்போலியன் அளித்தார். இது இத்தாலிய மக்களின் தேசிய உணர்ச்சியைக் கிளறிவிட்டது. மேலும், நெப்போலியன் அவர்களுக்களித்திருந்த சீரியல் உரிமைகள் அவர்களிடையே சுதந்திரதாகத்தை ஏற்படுத்தின ஆனால், இத்தாலிய மக்கள் நெப்போலியனது ஆட்சியின் பயனாக அடைந்திருந்த ஒற்றுமை வியன்னாத் திட்டத்தினால் சிதைக்கப்பட்டது. ஏனெனில், அத்திட்டப்படி இத்தாலி பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டது. லம்பார்டியும் வெனீஷியாவும் (Venetia) ஆஸ்ட்ரியாவுக்குக் கொடுக்கப்பட்டன. ஹாப்ஸ்பர்க்கள் (Hapsburgs) டஸ்கனி, மொடெனா (Modena), பார்மா (Parma) ஆகிய பகுதிகளைப் பெற்றனர். நேப்பிள்ஸும், லூக்காவும் (Luca) பூர்போன்களுக்குக் (Bourbon) கொடுக்கப்பட்டன. போப் பாண்டவர் இத்தாலியின் நடுப் பகுதியை மீண்டும் பெற்றார். ஆனால், இவ்வாறு பல கூறுகளாக்கப்பட்ட இத்தாலிய நாட்டில் நெப்போலியன் தூண்டிவிட்ட தேசிய உணர்ச்சி அழிந்து போகவில்லை. 1848 ஆம் ஆண்டில் மற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளைப் போலவே இத்தாலியிலும் தேசிய உணர்ச்சி புரட்சி வடிவில் தோன்றிப் பல குழப்பங்களை உண்டாக்கியது. ஆனால் இப்புரட்சிகளினால் பயனேதும் ஏற்படவில்லை. நாட்டின் ஒற்றுமையைக் குறிக்கோளாகக் கொண்டிருந்த தலைவர்கள் நாட்டின் அரசாங்கம் எவ்வாறு அமைக்கப்படவேண்டும் என்பதுபற்றி மாறுபட்ட கருத்துக்களை உடையவர்களாயிருந்ததால், அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து நாட்டு ஒற்றுமைக்காக உழைக்க இயலவில்லை. உதாரணமாக மஜினியும், கரிபால்டியும்

குடியாட்சியை விரும்பினர். ஆனால் கியோபெர்ட்டியைப் (Gioberti) போன்ற வேறு சிலர் போப்பாண்டவரைத் தலைமையாகக் கொண்ட கூட்டரசே மேலானதெனக் கருதினர். விக்டர் எம்மானுவேலும் (Victor Emmanuel) அவரின் அமைச்சர் கவூரும் (Cavour) முடியாட்சியை விரும்பினர். முதல் இரண்டு திட்டங்களும் நடைமுறையில் இயலாதவையாக இருந்தன. இத்தாலியில் ஒரு முடியாட்சியை நிறுவ அயல்நாட்டினரின் துணை தேவையெனக் கவூர் கண்டுணர்ந்தார். எனவே, அவர் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் உதவியை நாடினர். இங்கிலாந்து இத்தாலிய ஒற்றுமையில் அக்கறை காட்டியபோதிலும், தன் படையைக் கொடுத்துதவ முன் வரவில்லை. ஆனால், பிரெஞ்சு அரசனை மூன்றாம் நெப்போலியன் கவூருக்குத் துணைபுரிய இசைந்தார். கி. பி. 1859 ஆம் ஆண்டு மூன்றாம் நெப்போலியனையே தலைமையாகக் கொண்ட ஒரு படை ஆஸ்ட்ரியரை மெகென்டா (Magenta), ஸால்ஃபெரினோ (Solferino) என்ற இடங்களில் தோற்கடித்தது. ஆனால், முழு வெற்றியடையுமுன் நெப்போலியன் ஆஸ்ட்ரியருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு போரிலிருந்து விலகினர். இந்தப் போரின் விளைவாக லம்பார்டி விக்டர் எம்மானுவேலின் ஸார்டினிய முடியரசுடன் இணைக்கப்பட்டது. ஆனால், வெனீஷியா ஆஸ்ட்ரியரிடமிருந்து மீட்கப்படவில்லை. இதே சமயத்தில் டஸ்கனி, மொடெனா, பார்மா, ரொமாக்னா (Romagna) ஆகிய பகுதிகள் தாமாகவே ஸார்டினிய முடியரசுடன் இணைந்து கொண்டன. எனவே, ஆஸ்ட்ரியப் போருக்குப் பிறகு விக்டர் எம்மானுவேலின் ஆட்சி இத்தாலியின் பெரும் பகுதியில் நிலை நாட்டப்பட்டது. இதுவே இத்தாலிய ஒற்றுமையின் முதற் படியாகும்.

1860 ஆம் ஆண்டு பூர்போன் அரசர்களால் ஆளப்பட்டு வந்த ஸிஸிலியிலும் நேப்பிள்ஸிலும் மக்கள் இரண்டாம் பிரான்ஸிஸ் (Francis II) எதிர்த்துப் புரட்சி செய்தனர். இந்தப் புரட்சியைப் பயன்படுத்திக்கொண்டு கரிபால்டி அவ்விரு முடியரசுகளையும் கைப்பற்றினர். இதே தருணத்தில் ஸார்டினியப் படைகள் போப்பாண்டவரின் ஆட்சியிலிருந்த அம்பிரியாவையும் (Umbria), மார்ஷையும் (The Marches) கைப்பற்றின. இதன் பிறகு மேற்கூறிய நான்கு பகுதிகளிலும் நடந்த மக்கள் வாக்கெடுப்பில் (Plebiscite) மக்கள் ஸார்டினிய முடியரசுடன் சேரத் தம் விருப்பத்தைத் தெரிவித்தனர். இதனால் வெனீஷியா, ரோம், மற்றும் வடக்கே சில சிறு பகுதிகள் நீங்கலாக மற்றெல்லாப் பகுதிகளும் விக்டர் எம்மானுவேலின் ஆட்சிக்குட்பட்டன. 1866 ஆம் ஆண்டு பிரஷ்யாவிற்கும் ஆஸ்ட்ரியாவிற்கும் பகை மூண்டபோது, விக்டர் எம்மானுவேல் பிஸ்மார்க்கின் துணை

கொண்டு வெனீஷியாவைப் பெற்றார். 1870 ஆண்டு பிரெஞ்சுப் பேரரசு சிதைந்து குடியாட்சி நிறுவப்பட்டபோது, பிரான்ஸின் புதிய தலைவர்கள் ரோம் நகரை இனிப் பாதுகாக்க முடியாதெனக் கூறிவிட்டனர். இத்தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு விக்டர் எம்மானுவேல் 1871ஆம்ஆண்டு ஜூலைத் திங்கள் இரண்டாம் நாள் ரோம் நகரைத் தமது தலைநகர் ஆக்கிக்கொண்டார். இவ்வாறு ரோம் வெகு காலத்திற்குப் பிறகு மீண்டும் இத்தாலிய முடியரசின் தலைநகராயிற்று. இதன் பிறகு போப்பாண்டவரின் உலகியல் சார்ந்த ஆட்சி முடிவடைந்தது.

இவ்வாருக இத்தாலி தேசீய நிலையடைந்தது. அதற்கு விக்டர் எம்மானுவேலும் அவரது அமைச்சர் கவூரும் பெருமளவில் காரணமாயிருந்தபோதிலும், அவர்கள் அடைந்த வெற்றிகள் யாவும் மக்களின் ஒத்துழைப்பினால்தான் கிடைத்தன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மேலும், மக்கள் தலைவரான கரிபால்டியின் முயற்சியும் இத்தாலிய ஒற்றுமைக்கு முதன்மையான காரணங்களில் ஒன்றாகும். எனவே, இத்தாலிய தேசீய இயக்கத்தை மக்களின் இயக்கம் என்று கூறலாம். ஆகவேதான் இத்தாலிய தேசீய அரசு இன்றுவரை ஐரோப்பாவில் தலைசிறந்து விளங்குகிறது.

ஜெர்மனி

வியன்னைத் திட்டத்தின்படி ஜெர்மனி முப்பத்தொன்பது சிறு அரசுகளாகப் பிரிக்கப்பட்டு, ஆஸ்ட்ரியப் பேரரசைத் தலைமையாகக் கொண்ட ஒரு நாட்டுக் கூட்டத்துடன் (Confederation) இணைக்கப்பட்டிருந்தது. ஜெர்மனி இக் கூட்டமைப்பினின்று விடுபட்டு ஒன்றுபட்ட பேரரசாக மாறியது ஐரோப்பிய வரலாற்றில் முக்கியமான நிகழ்ச்சியாகும். ஜெர்மனி ஒன்றுவதற்கு வழி வகுத்தவர் பிரஷ்ய அரசின் அமைச்சரான பிஸ்மார்க் (Bismarck) என்பவராவார். இவர் 1858ஆம் ஆண்டு பதவியேற்றார். ஜெர்மனியை ஹோஹென்ஜோலெர்ன் (Hohenzollern) மரபைச் சேர்ந்த பிரஷ்ய அரசர்களின் ஆட்சிக்குட்படுத்தவேண்டுமென்பதே அவரது குறிக்கோளாயிருந்தது. பிஸ்மார்கின் வருகைக்குமுன் 1848ஆம் ஆண்டு வரை ஜெர்மனியில் பல உரிமைப் போராட்டங்கள் நடந்தன. இவை யாவும் ஜெர்மனியில் மக்களாட்சியையோ அல்லது அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சியையோ நிலைநாட்ட முயன்றன. ஆனால், அவையேதும் பலனளிக்கவில்லை. பிஸ்மார்க் பதவியேற்குமுன் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி 1828இல் பிரஷ்யாவின் முயற்சியினால் வட ஜெர்மானிய அரசுகளிடையே ஏற்படுத்தப்பட்ட சுங்கக் கூட்டமைப்பாகும் (Customs Union). 1836 ஆம் ஆண்டிற்குள் எல்லா

ஜெர்மானிய அரசுகளும் இதில் இடம் பெற்றன. வாணிகத் தொடர்புகளை எளிதாக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட இக் கூட்டமைப்பே ஜெர்மானிய ஒற்றுமையின் முதற்படியெனக் கூறலாம். ஆனால், ஜெர்மனியை அரசியல் அடிப்படையில் ஒன்றுக்கிய பெருமை பிஸ்மார்க்கையே சாரும்.

ஜெர்மனியை ஆஸ்ட்ரியரின் ஆட்சியிலிருந்து விடுவித்து அதனை ஒன்றுபடுத்த, ஆஸ்ட்ரியாவை முறியடிப்பதைத் தவிர வேறு வழியில்லை யென்பதை பிஸ்மார்க் நன்கு உணர்ந்திருந்தார். எனவே, அவர் பதவியேற்ற பிறகு முதன்முதலாகப் பிரஷ்யாவின் படைகளைச் சீர்படுத்தி அதன் வலிமையை அதிகரித்தார். இந்தப் போர்ப்படையின் துணைகொண்டு பிஸ்மார்க் தொடுத்த மூன்று முக்கியமான போர்களின் பயனாகவே ஜெர்மனி பிரஷ்யாவின் தலைமையில் ஒன்றுபட்டது.

இவற்றுள் முதலாவது போர் 1864ஆம் ஆண்டு மூண்ட டேனிஷ் போராகும் (The Danish War). டென்மார்க் முடியரசுக்கும் ஜெர்மனிக்கும் இடையே இருந்த ஷ்லெஸ்விக் ஹால்ஸ்டீன் (Schleswig Holstein) என்ற இரு கோமக்களாட்சிப் பகுதிகளின் மீது ஆட்சி உரிமை காரணமாகத் தோன்றிய இந்தப் போரில் ஆஸ்ட்ரியா பிரஷ்யாவுடன் ஒத்துழைத்தது. இந்தப் போரில் டென்மார்க் முடியரசு தோல்வியடைந்தது. வியன்னா ஒப்பந்தப்படி (Treaty of Vienna) ஷ்லெஸ்விக் ஹால்ஸ்டீனையும் லாவென்பர்க்கையும் (Lauenburg) பிரஷ்யாவிற்கும் ஆஸ்ட்ரியாவிற்கும் கொடுக்க டென்மார்க் இசைந்தது. ஆனால், இவ்வாறு கிடைக்கப்பெற்ற பகுதிகள் யாருக்குச் சேரவேண்டும் என்ற வினா எழுந்தது. பிஸ்மார்க் அப்பகுதிகளை பிரஷ்யாவுடன் இணைக்க முயன்றார். இதனால் ஆஸ்ட்ரியாவிற்கும் பிரஷ்யாவிற்குமிடையே ஒரு பெரும் போர் தொடங்கியது. ஸடோவா அல்லது கோனி கிராட்ஸ் (Sadowa or Konigratz) என்னுமிடத்தில் 1866ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் நடந்த போரில் பிரஷ்யா ஆஸ்ட்ரியாவை முறியடித்தது. பிரேக் ஒப்பந்தப்படி (Peace of Prague), 1815 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட நாட்டுக் கூட்டமானது கலைக்கப்பட்டது. இதனால் ஜெர்மானிய அரசுகள் ஆஸ்ட்ரியாவின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றன. ஷ்லெஸ்விக் ஹால்ஸ்டீன், ஹனோவர், ஹெஸ் (Hesse), நாஸாவ் (Nassau) போன்ற பகுதிகள் பிரஷ்ய முடியரசுடன் இணைக்கப்பட்டன. மேலும் விடுதலை பெற்ற வடக்கு ஜெர்மானிய அரசுகள் பிரஷ்யாவின் தலைமையில் வட ஜெர்மானிய நாட்டுக் கூட்டத்தை(North German Confederation) ஏற்படுத்திக்கொண்டன. அதன்உறுப்பு அரசுகளின் பொதுவான காரியங்களைக் கவனிக்க டயட் (Diet) என்ற ஒரு பாராளுமன்றம்

நிறுவப்பட்டது. பிரஷ்யாவின் அரசர் கூட்டமைப்பின் செயல் துறை அதிகாரியாகவும், படைத்தலைவராகவும் ஏற்படுத்தப் பட்டார். இவ்வாறு வட ஜெர்மனிமுழுவதும் பிரஷ்யாவின் தலைமையில் ஒற்றுமையடைந்தது.

ஆனால், தெற்கு ஜெர்மனியிலிருந்த பவேரியா, பேடென் (Baden), வூர்ட்டெம்பெர்க் (Wurtemberg) போன்ற அரசுகள் பிரஷ்யாவின் தலைமையில் அமைந்திருந்த கூட்டமைப்போடு இணைய விரும்பவில்லை. இவை பிரான்ஸுடன் நட்புக்கொண் டிருந்தன. ஆனால் பிஸ்மார்க் மீண்டும் தமது அரசியல் சூழ்ச்சித் திறத்தைப் பயன்படுத்தி இந்த நட்பை வெறுப்பாக மாற்றினர். இதன் பிறகு ஸ்பெயினின் அரியணைக்காக ஏற்பட்ட பூசலைப் பயன்படுத்திக்கொண்டு அவர் பிரான்ஸுடன் போர் தொடுத்தார். 1870ஆம் ஆண்டு நடந்த கடும்போரில் ஸெடன் (Sedan) என்னுமிடத்தில் பிரஷ்யா மாபெரும் வெற்றியடைந்தது. ஜெர் மானியப் படையடைந்த மகத்தான இவ்வெற்றி தெற்கு ஜெர்மானி யரிடையே ஒற்றுமையுணர்ச்சியை வளர்த்தது. எனவே பிராங்கோ-பிரஷ்யப் (Franco Prussian) போர் முடிவடைவதற்கு முன்னமேயே தெற்கு ஜெர்மானிய அரசுகள் வட ஜெர்மானியக் கூட்டமைப்புடன் இணைந்துகொண்டன. இதனால் வடஜெர்மானிய நாட்டுக் கூட்டமானது ஜெர்மானிய நாட்டுக் கூட்டமாக உருமலர்ச்சியுற்றது. அது 1871 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பதினெட்டாம் நாள் பிரஷ்ய அரசரான வில்லியத்தைப் பேரரசராகக் கொண்ட ஜெர்மானியப் பேரரசானது.

இவ்வாறு பிரஷ்யாவின் பெருமுயற்சியினால் ஜெர்மனி ஒரு தேசிய அரசாக மாறியது. இத்தாலியைப்போல் ஜெர்மனியில் மக்களின் முயற்சியினால் நாடு ஒற்றுமையடைந்ததெனக் கூற முடியாது. பிஸ்மார்க் பிரஷ்யாவின் படை பலத்தைக் கொண்டு ஜெர்மானிய மக்களிடையே ஒற்றுமையைத் திணித்தார் என்று தான் கூறமுடியும். ஆனால், இவ்வாறு தோன்றிய ஒற்றுமை மக்களாட்சியாக முதிராத காரணத்தினால், ஜெர்மானிய ஒற்றுமை யானது மற்ற ஐரோப்பிய நாடுகளுக்குப் பிற்காலத்தில் பெரும் இன்னல் விளைவித்தது.

தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடையே தேசிய எழுச்சி

பதினைந்தாம் நூற்றாண்டில் கிழக்கு ரோமானியப் பேரரசு வீழ்ச்சியடைந்த பிறகு தென் கிழக்கு ஐரோப்பா முழுவதும், குறிப் பாகப் பால்கன் தீபகற்பம் துருக்கியர்களின் கைவசப்பட்டது. மூன்று நூற்றாண்டுகளாகத் துருக்கியர்களின் கொடுங் கோன் மைக்கு அடிமைப்பட்டிருந்த தென்கிழக்கு ஐரோப்பிய மக்கள் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு தேசிய உணர்ச்சி பெற்றனர். இதன்

விளைவாகக் கிரீஸ் ஐரோப்பிய நாடுகளின் துணைகொண்டு 1829 ஆம் ஆண்டு தேசீய நிலையடைந்ததென்று பார்த்தோம். அதே ஆண்டு ஸெர்பியாவும் தேசீய உரிமை பெற்றது. 1856 ஆம் ஆண்டு கிரிமியப் போருக்குப் (Crimean War) பிறகு ருமேனியாவின் சுதந்திரத்தை ஐரோப்பிய அரசுகள் ஏற்றுக்கொண்டன. இதன் பிறகு 1875 ஆம் ஆண்டிலிருந்து புல்கேரியா, பாஸ்னியா (Bosnia), ஹெர்ஸெகோவினு (Herzegovina) ஆகிய நாடுகளில் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. மக்களின் எதிர்ப்பை முறியடிக்கத் துருக்கி பயன்படுத்திய பயங்கர அடக்குமுறைகள் ஐரோப்பாவின் கிறித்துவ அரசர்களின் கவனத்தைக் கவர்ந்தன. துருக்கியைக் கண்டிக்கும் பொருட்டு 1876 ஆம் ஆண்டு கான்ஸ்டான்டிநோப்பிளிலும், 1877 ஆம் ஆண்டு லண்டனிலும் மாநாடுகள் கூட்டப்பட்டன. ஆனால், இம்முயற்சிகள் பயனளிக்காது போனதால் ரஷ்யா படை பலம் கொண்டு துருக்கியின் அதிகாரத்தை அடக்கிக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளை விடுவிக்க முடிவு செய்தது. போரில் வெற்றிகண்ட ரஷ்யா 1878 ஆம் ஆண்டு நடந்த ஸான் ஸ்டெஃபெனே (San Stepheno) ஒப்பந்தப்படி, துருக்கி ஐரோப்பாவில் பெற்றிருந்த அதிகாரத்தைப் பறித்தது. இந்த ஒப்பந்தம் சில மாதங்கள் கழித்து இங்கிலாந்து முதலிய மேற்கு ஐரோப்பிய நாடுகளின் முயற்சியின் பயனாக அதே ஆண்டில் மீண்டும் பெர்லின் ஒப்பந்தமாக (Treaty of Berlin)த் திருப்பி எழுதப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி ஹெர்ஸெகோவினுவும், பாஸ்னியாவும் ஆஸ்ட்ரியாவின் அதிகாரத்திற் குட்படுத்தப்பட்டன. புல்கேரியா முழு உரிமை பெற்றுத் தனியரசானது. ஆனால், அந்நாட்டின் நிலப் பரப்புப் பெருமளவில் குறைக்கப்பட்டது. ஸெர்பியா, மான்டினீக்ரோ (Montenegro), ருமேனியா ஆகிய நாடுகளின் உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. பெஸெரேபியா (Besserabia) ருமேனியாவிலிருந்து பிரிக்கப்பட்டு ரஷ்யாவிற்கு அளிக்கப்பட்டது. மாஸிடோனியா துருக்கியரிடமே விடப்பட்டது.

எனவே, பால்கன் தீபகற்பத்தில் சில தேசீயப் பிரிவுகள் தனியரசுகளாக்கப்பட்ட போதிலும், வேறு சிலவற்றின் தேசீய நிலை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதற்குக் காரணம் ஆஸ்ட்ரியா, ஜெர்மனி, துருக்கி ஆகிய இம்மூன்று நாடுகளும் தென்கிழக்கு ஐரோப்பாவில் தேசீய அரசுகளின் எழுச்சியை விரும்பவில்லை. மேலும், இதுவரை தேசீய எழுச்சிக்குத் துணைபுரிந்த இங்கிலாந்து போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகள், கீழ்நாடுகளில் தாம் பெற்றிருந்த செல்வாக்கை இழக்க விரும்பாததால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தேசீய எழுச்சிக்கு ஆதரவு தரவில்லை.

2. வரம்பில்லா முடியாட்சிகள்

இடைக்காலம் முடிவடைந்த பிறகு ஐரோப்பிய சமூகம் எவ்வாறு தேசிய அரசுகளாக உருப்பெற்றனவென்று சென்ற இயலில் பார்த்தோம். ஐரோப்பாவில் இக்காலத்தில் தோன்றிய அரசுகள் யாவும் வரம்பில்லா முடியாட்சிகளாகவே இருந்தன. இங்கிலாந்தில் முதலில் நார்மானிய அஞ்சிவின் அரசர்களின் ஆட்சியும், பிறகு பதினேரும் நூற்றாண்டில் ட்யூடர்களின் வரம்பில்லா ஆட்சியும் தோன்றின. பிரான்ஸும் இதைப் போலவே முதலில் ஃபிலிப் அகஸ்டஸ், நான்காம் ஃபிலிப், பதினேராம் லூயி, எட்டாம் சார்ல்ஸ் போன்ற அரசர்களாலும், பிற்காலத்தில் பதினான்காம் லூயி என்ற வரம்பில்லா அதிகாரமுடைய அரசனாலும் ஆளப்பட்டு வந்தது. ஸ்பெயின் தேசிய நிலையடைந்தபிறகு ஐந்தாம் சார்ல்ஸ், இரண்டாம் ஃபிலிப் ஆகிய அரசர்களின் வரம்பில்லா ஆட்சிக்குட்பட்டிருந்தது. இதுபோலவே மற்ற எல்லாப் புதிய தேசிய அரசுகளும் இக்காலத்தில் வரம்பில்லா ஆட்சியைப் பெற்றிருந்தன. எனவே, கொலம்பஸ் புதிய உலகைக் கண்டுபிடித்த காலத்திற்கும் பிரெஞ்சுப் புரட்சியின் தொடக்கத்திற்கும் இடைப்பட்ட மூன்று நூற்றாண்டுகளை வரம்பில்லா முடியாட்சிக் காலம் என்றழைக்கலாம். இதே காலத்தில்தான் ஐரோப்பாவின் பெரும்பகுதியில் தேசிய அரசுகள் தோன்றி வளர்ந்தன என்று பார்த்தோம். இந்தத் தேசிய வளர்ச்சி ஐரோப்பிய சமூகத்தில் ஏற்பட்ட பெரிய மாறுதலென்றும், வரம்பில்லா முடியாட்சிகள் ஐரோப்பிய அரசியலில் ஏற்பட்ட ஒரு முக்கிய மாற்றமென்றும் கூறலாம். இவ்விரு மாற்றங்களும் ஒன்றோடொன்று இணைந்தே தோன்றின. அவற்றின் வளர்ச்சியும் அவ்வாறே ஒன்றித்திருந்தது. ஆனால், பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு வரம்பில்லா முடியாட்சிகள் தகர்க்கப்பட்டுத் தேசியம் மட்டும் தனித்து மேலும் வளர்ந்து ஐரோப்பா முழுவதும் பரவியது. எனவே, மேற்கூறிய மூன்று நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் இருவகையான மாற்றங்கள் இணைந்து தோன்றி இணைந்தே வளர்ந்தன. அவற்றில் ஒன்று தேசியம், இன்னொன்று வரம்பில்லா முடியாட்சி. தேசியத்தின் வளர்ச்சியை முந்திய இயலில் பார்த்தோம். இப்போது வரம்பில்லா முடியாட்சிகளின் தோற்றம், தன்மை முதலியவற்றைக் கவனிப்போம்.

தோற்றம்

பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே இடைக்காலச் சமூகத்திற்கு ஆதாரமாக இருந்த பல அடிப்படைகள் ஒவ்வொன்றாக உடைபட்டன. உதாரணமாகக் கொலம்பஸ் புதிய

உலகைக் கண்டுபிடித்தபோது ஐரோப்பாவானது பரந்த உலகின் ஒரு சிறுபகுதியே என்ற உண்மை புலனுயிற்று கோப்பர்னிக்கஸ் (Copernicus) என்பவர் நாம் வாழும் உலகைப் போலப் பல உலகங்கள் உள என்னும் உண்மையைக் கண்டுபிடித்தார். லூத்தர் என்பவர் போப்பாண்டவரின் அதிகாரத்தை எதிர்த்து, இறைவனைப் பற்றிய உண்மைகளைத் தனிமனிதன் தன்னறிவைக் கொண்டே கண்டுணரலாம் என்ற கொள்கையைப் பரப்பினர். இவையும் இதுபோன்ற வேறு சில புதிய கொள்கைகளும் மாற்றங்களும் இக்காலத்தில் தோன்றி, இடைக்காலச் சமூகத்தை அதுவரை பிணைத்திருந்த பிணைப்புக்களை நெகிழச் செய்தன. இதனல் சமூகம் பெருமளவில் நிலைகுலைந்து, தனிமனிதனுடைய வாழ்க்கை நிலை தடுமாற்றமடைந்தது. எனவே, இதுவரை நிலைத்திருந்த சமூக, அரசியல் தொடர்புகள் பயனற்றுப் போயின. ஆனல் அவற்றை மீண்டும் சீரமைக்கும் திறன் மக்களிடம் காணப்படவில்லை. ஆகவே, அத்திறன் பெற்றிருந்த அரசர்களுக்கு மக்கள் அடிபணிந்து வாழத் தொடங்கினர். வரலாற்றில் இது போன்ற நிகழ்ச்சி திரும்பத்திரும்ப நடந்திருப்பதைக் காணலாம். உதாரணமாகப் பண்டைய ரோமானியப் பேரரசில் குடியாட்சி குலைந்து குழப்பங்கள் பரவியிருந்தபோது, மக்கள் தமது சமூக அரசியல் வாழ்க்கையைச் சீரமைக்கும் முழுப் பொறுப்பையும் சீஸர், அகஸ்டஸ் போன்ற திறமைமிக்க தனிமனிதர்களிடம் ஒப்படைத்தனர். இதுபோலவே இடைகாலச் சமூகம் குலைந்து தற்காலச் சமூகம் உருவான காலத்தில் மக்கள் வலிமைமிக்க அரசர்களின் துணையை நாடிச்சென்று அவர்களது ஆட்சி ஓங்க வழி வகுத்தனர். இவ்வாறு மக்களின் பணிவைப் பெற்ற இக்காலத்து அரசர்கள் விரைவில் வரம்பில்லா முடியரசர்களாக மாறினர்கள்.

இடைக்காலத்தின் இறுதியில் தோன்றிய முடியரசர்களின் ஆட்சிக்கு வரம்பிடக்கூடிய ஒரே ஒரு நிறுவனம் அக்காலத்தில் தழைத்திருந்த பிரதிநிதித்துவ மன்றமாகும். ஆனல், இது சமூக வகுப்புக்களிடையே நிலைத்திருந்த பிணக்குகளின் காரணமாக வலிமை மிழந்திருந்தது என்று ஏற்கெனவே கூறியுள்ளோம். எனவே, இது அரசனின் அதிகாரத்தை எதிர்த்து நின்று அதற்கு வரம்பிட இயலவில்லை. வரம்பில்லா முடியாட்சிகளின் எழுச்சிக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

ஐரோப்பிய நாடுகளில் இடைக்காலத்தின் இறுதியில் அரசனுக்கும் பிரதிநிதித்துவ மன்றத்திற்கும் நேர்ந்த போட்டிகளில் அரசன் வெற்றியடைய இன்னெரு காரணமும் இருந்தது. பிரதிநிதிகளின் மன்றம் அரசாங்கத்தின் நடுவிடத்தைப் பெற்றிருந்த தால் ஆட்சிமுறை மிகவும் சிக்கலான முறையாக அமைந்திருந்

தது. ஆனால், வரம்பில்லா அதிகாரம் பெற்ற ஓர் அரசனை மையமாகக் கொண்ட அரசின் அமைப்புச் சிக்கலின்றித் தெளிவுடையதாயிருந்தது. குழப்பங்கள் நிறைந்த காலத்தில் மக்கள் தெளிவுடைய ஆட்சி முறையைத்தான் விரும்புகின்றனர். ஏனெனில், அத்தகைய ஆட்சி முறையே நடைமுறையில் மக்களுடைய இன்னல்களைத் தீர்த்து அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பை அளிக்க வல்லதாயிருக்கிறது. பிரதிநிதித்துவ முறையாவெனில் ஏற்கெனவே நிலவியிருக்கும் குழப்பங்களை அதிகரிக்கக்கூடும். முக்கியமாக இடைக்காலத்தில் முரண்பட்ட கோட்பாடுகளையுடைய சமூக வகுப்புகளின் பிரதிநிதித்துவ மன்றத்தின் ஆட்சியைக் காட்டிலும், வரம்பற்ற அதிகாரங்களைப் பெற்ற ஓரரசனின் ஆட்சி பன்மடங்கு திறன் வாய்ந்ததாயிருந்தது. எனவே, இடைக்காலத்தின் இறுதியில் ஐரோப்பிய நாடுகளில் மக்கள் அத்தகைய ஆட்சி முறைக்கு ஆதரவளித்தனர்.

மேலும், இவ்வாறு மக்களின் ஆதரவைப் பெற்ற வரம்பில்லா முடியாட்சிகள் 16 ஆம் நூற்றாண்டில் தத்துவ அறிஞர் பலருடைய ஆதரவையும் பெற்றன. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட அரசியல் நூல்கள் யாவும் வரம்பில்லா முடியாட்சியின் உட்கொள்கைகளையும் தன்மையையும் எடுத்துக் கூறின. உதாரணமாகப் போதென் (Bodin) என்னும் அறிஞர் 1576 ஆம் ஆண்டு எழுதிய "டி ரிபப்ளிக்கா" (De Republica) என்ற நூலில் இறைமை வரையறுக்க முடியாததென்றும், அது அரசனிடத்தே நிலைபெற்றிருக்கிறதென்றும் கூறினர். சட்டங்களினால் ஆளப்படும் ஒவ்வொரு நாட்டிலும் அச்சட்டங்களை இயற்றுதல், அவற்றைக் கொண்டு மக்களை ஆளுதல் ஆகிய அதிகாரங்களை அரசன் முழுமையாகப் பெற்றிருக்கிறான் என்ற கொள்கையைப் போதென் தமது நூலின் வாயிலாகப் பரப்பினர். இதேபோல் ஹாப்ஸ் (Hobbes) என்னும் ஆங்கிலேய அறிஞர் 17 ஆம் நூற்றாண்டில் வெளியிட்ட "லெவியெதன்" (Leviathan) என்ற நூலும் வரம்பில்லாத முடியாட்சியைத் தத்துவ முறையில் ஆதரித்தது. இவ்வாறு நடைமுறையில் தோன்றி வளர்ந்த ஓர் அரசாங்க முறை அரசியல் அறிஞர்களின் முயற்சியினால் தத்துவ முறையான அடிப்படையையும் பெற்றது.

பதினாறாம் நூற்றாண்டில் முடியாட்சி வளர்ந்ததற்கு வேறொரு காரணம் கிறித்துவ மறையின் கோட்பாடுகளாகும். திருச்சபை எவ்வாறு போப்பாண்டவரின் முடியாட்சியின்கீழ்ச் சீராக அமைக்கப்பட்டிருக்கிறதோ அதேபோல் மக்களின் அரசியல் தொடர்புகளும் முடியாட்சியினால் மட்டும் சீர்ப்படும் என்று அக்காலச் சமயக் குருக்கள் நம்பினர்கள். வையகமெல்லாம் ஓர் இறைவனின்

ஆணைக்கடங்கி யிருப்பதுபோல, ஒரு நாட்டு மக்க ளனைவரும் ஒரே அரசனின் ஆட்சிக்கு உட்பட்டிருத்தலே இயற்கையின் ஒழுங்கு என்றும் அவர்கள் கூறினர்கள். எனவே, முடியாட்சி யானது கிறித்துவ குருக்களின் இலட்சிய அரசாக இருந்தது. இது தான் இடைக்காலத்தில் புனித ரோமானியப் பேரரசு உருப்பெற வழி வகுத்தது. 16 ஆம் நூற்றாண்டிலும் இந்த இலட்சியமே தேசிய முடியாட்சிகள் தோன்றி வலுப்பெற ஒரு காரணமாக இருந்தது. அந்நூற்றாண்டில் கிறித்துவ சமயத்தில் பிளவு ஏற் பட்டபோதிலும், புதிதாகத் தோன்றிய மறுப்புச் சமயமும் (Protestant Religion) முடியாட்சியையே ஆதரித்தது. ஆகவே 16 ஆம் நூற்றாண்டில் முடியாட்சி தழைத்தோங்கியது.

இடைக்காலத்தின் இறுதியில் வரம்பில்லா முடியாட்சிகள் வளர்ச்சியுற்றதற்கு சிட்ஜ்விக் எனும் நூலாசிரியர் பல காரணங் கள் காட்டுகிறார். அவற்றுள் ஒன்று ரோமானியச் சட்டவியல் (Roman Jurisprudence) ஆராய்ச்சியில் ஏற்பட்ட மறுமலர்ச்சி யாகும். இம் மலர்ச்சி 12 ஆம் நூற்றாண்டில் பொலோனா பல்கலைக் கழகத்தில் (University of Bologna) தோன்றியது. ரோமானியப் பேரரசு முடியாட்சியின் கீழிருந்த காலத்தில்தான் ரோமானியச் சட்டவியல் ஓர் அறிவியலாக மாறியது. குறிப்பாக ஜஸ்டினியன் (Justinian) என்னும் பேரரசர் காலத்தில் இம்மாற்றம் ஏற் பட்டது. எனவே, அச்சட்டவியலின் கொள்கைகள் முடியாட்சியை ஆதரித்ததுடன், அரசாங்க அதிகாரங்கள் யாவும் அரசனின் முழு உடைமையாக இருக்கவேண்டுமென்று கூறின. அதன்படி பிரெஞ்சு அரசன் தான் பழைய ரோமானியப் பேரரசர்களின் அதிகாரங்கள் அனைத்தையும் பெற்றிருப்பதாக எண்ணினான். ஜெர்மானிய அரசன் புனித ரோமானியப் பேரரசன் என்று கருதப்பட்டதால் ரோமானியச் சட்டவியலின் கொள்கைகள் ஜெர் மனியில் பரவி வரம்பில்லா முடியாட்சிக்கு வழிவகுத்தன. இவ் வாறே மற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் ரோமானியச் சட்ட வியலறிவு பிரபுக்கள், நகரங்கள், சமய நிறுவனங்கள், பிரதி நிதித்துவ மன்றங்கள் ஆகியவற்றின் அதிகாரத்தைக் குறைத்து மன்னனின் அதிகாரத்தை வரம்பின்றி வளர்த்தது.

வல்லாட்சிகளின் தோற்றத்திற்குக் காரணங்களை ஆராயும் போது அவை எந்தச் சூழ்நிலையில் எழுந்தன என்பதையும் கவனிக்கவேண்டும். ஐரோப்பாவில் தற்காலத்தின் தொடக்கம் மாற்றங்கள் நிறைந்த ஒரு காலமாகும். புதிய நாடுகளின் கண்டு பிடிப்பு, துருக்கியர்களால் ஏற்பட்ட ஆபத்துக்கள், மறுமலர்ச்சி (Renaissance), மறுப்புச் சமய இயக்கம் ஆகியவை தற்கால ஐரோப்பாவை உருவாக்கிய பெரும் மாற்றங்களாகும். இவை

எவ்வாறு வரம்பில்லா முடியாட்சிகளின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தனவென்று பார்ப்போம்.

புதிய உலகமும், கீழ்நாடுகளுக்குப் புதிய கடல்வழிகளும் கொலம்பஸ், கார்ட்டெஸ் (Cortez), பிஸாரோ (Pizarro), வாஸ்கோட காமா போன்ற தனிமனிதர்களின் முயற்சிகளினால் கண்டு பிடிக்கப் பட்டன. ஆயினும், இவை ஐரோப்பிய நாடுகளின் அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. புதிய உலகம் கண்டு பிடிக்கப்பட்டவுடன் தான் வாழும் உலகின் பரந்த தன்மை இடைக்கால மனிதனுக்கு முதல் முதலாகத் தெற்றென விளங்கியது. கீழ் நாடுகளின் செல்வம் அவனுடைய ஆசைகளைத் தூண்டிவிட்டது. இவற்றின் விளைவாக ஐரோப்பாவின் குறுகிய எல்லைகளுக்குள் அதுவரை அடங்கிக் கிடந்த மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. நாட்டுப் புறத்தில் உழவுத்தொழில் செய்துவந்த பலர் திரைகடலோடித் திரவியந் தேடத் துணிந்தனர். பலர் பரம்பரையாகச் செய்து வந்த தொழில்களை விட்டு மாலுமிகளாக மாறி நாவாய்ச் செலவுகளில் ஈடுபட்டனர். இவ்வாறு ஐரோப்பாவிலிருந்து கடல் கடந்து சென்ற மக்கள் புதிய உலகில் நிறுவிய குடியேற்ற நாடுகளை ஆளவேண்டிய புதியதொரு பொறுப்புத் தாய்நாடுகளுக்கு ஏற்பட்டது. மாறிக்கொண்டிருந்த ஐரோப்பிய சமூகங்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்புடன், குடியேற்ற நாடுகளைக் கட்டியாளும் பொறுப்பும் சேரவே, ஐரோப்பிய அரசர்களின் செயல் துறை அதிகாரம் வலுப்பெற்றது. எனவே, புதிய உலகம் கண்டு பிடிக்கப்பட்டதனால் ஐரோப்பாவின் சமூகச் சூழ்நிலையில் ஏற்பட்ட மாறுதல்களுக்குத் தக்கபடி அரசியலிலும் மாற்றங்கள் தோன்றலாயின. இவையே காலப்போக்கில் வரம்பில்லா முடியாட்சிகளாகப் புதிய உருவடைந்தன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பதினைந்தாம் நூற்றாண்டில் நாவாய்ச் செலவுகளினால் விளைந்த மாற்றங்கள் புதிய சூழ்நிலைகளை உண்டாக்கியதுபோல், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இதே காலத்தில் பல மாற்றங்கள் தோன்றின. ஆனால், இவற்றிற்கு முக்கிய காரணம் துருக்கியர்களினால் விளைந்த ஆபத்துக்களாகும். 1453 ஆம் ஆண்டு வரை கிழக்கு ரோமானியப் பேரரசுக்கு உட்பட்டிருந்த கிழக்கு ஐரோப்பாவை அவ்வாண்டில் துருக்கியர்கள் தாக்கினர். இத்தாக்குதலை எதிர்த்து நிற்க நிலமானியப் படைகளினால் இயலவில்லை. எனவே, வெகுவிரைவில் பால்கன் தீபகற்பம், கான்ஸ்டான்டிநோப்பிள், வடக்கு ஆப்பிரிக்கா, இத்தாலி, ஸ்பெயின் போன்ற இடங்களில் துருக்கியர் தமது ஆதிக்கத்தைப் பரப்பினர். ஸெர்பியா, ஹங்கேரி போன்ற நாடுகள் முழுதும் துருக்கியரின் கொடுங்கோன்மைக்குட்பட்டன.

ஆனால் மற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளும் விழித்தெழுந்தன. கிறித்துவ நாடுகளுக்கு ஏற்பட்ட இப்பெரும் இன்னலைத் தீர்க்க நிலமானியப் போர்முறைகளைக் கைவிட்டு அரசனின் தலைமையில் ஒன்றுபட்டுப் போரிடுதலே பயனளிக்கக்கூடியதென்ற உண்மையை அவை உணர்ந்தன. இந்த உண்மையானது ஸ்பெயின் நாடு துருக்கியரை எதிர்த்து லெப்பென்டோ (Lepento) என்ற இடத்தில் அடைந்த வெற்றியினால் நிரூபிக்கப்பட்டது. மேலும் வெடி மருந்தைப் போரில் பயன்படுத்தும் வழக்கம் இக்காலத்தில் ஏற்பட்டதால், போர்ச் செலவுகள் பெருமளவு அதிகரித்தன. இவையாவும் நிலமானியப் படையின் நலிவுக்குக் காரணமாக இருந்ததுடன் ஐரோப்பிய அரசர்களின் அதிகார வளர்ச்சிக்கும் அடிகோலின.

இவ்வாறுக நாவாய்ச் செலவுகளும், துருக்கியரின் ஆதிக்கமும் ஐரோப்பிய சமூகத்திலும், அரசியலிலும் பெரிய மாறுதல்களை ஏற்படுத்தின. இவை தவிர மறுமலர்ச்சியும், மறுப்புச் சமய இயக்கமும் ஏற்கெனவே தோன்றியிருந்த வல்லாட்சிகளை மேலும் வலுப்படுத்தின.

இடைக்காலத்தின் இறுதியில் ஐரோப்பாவில் மறுமலர்ச்சி தோன்றியது. பண்டைய கிரேக்க, ரோமானியப் பண்பாட்டிலும், கலையிலும், இலக்கியத்திலும் ஐரோப்பா நீண்ட காலத்திற்குப் பிறகு காட்டிய புத்துணர்வே மறுமலர்ச்சி யெனப்படுகிறது. மறு பிறப்படைந்த கிரேக்க, ரோமானியப் பண்பாட்டின் இயல்புகளில் நாம் இங்குக் கவனிக்கவேண்டியது பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற பண்டைய தத்துவ அறிஞர்கள் தந்த அரசியலறிவாகும். இப்பேரறிஞர்களின் கருத்துக்கள் இடைக்காலம் முழுவதும் திருச்சபையின் அரசியல் கொள்கைகளினால் மறைக்கப்பட்டிருந்தன. ஆனால், இடைக்காலத்தின் இறுதியில், நாம் ஏற்கெனவே ஆராய்ந்த காரணங்களினால்,திருச்சபையின் செல்வாக்குக் குறைந்தது. இதே காலத்தில் பண்டைய அறிஞர்களின் அரசியல் கோட்பாடுகளை மக்கள் அதிகமாகக் கற்றனர். இக்கல்வி மக்களின் அரசியல் எண்ணங்களை மாற்றியது. இந்த மாற்றங்கள் பல அரசியல் நூல்கள் வடிவில் வெளிப்பட்டன. இந்த நூல்களில், 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1513) இத்தாலிய அறிஞர் மக்கியவெல்லி (Machiavelli) என்பார் எழுதிய "தி பிரின்ஸ்" (The Prince) என்ற நூல் தலை சிறந்தது. கிரேக்க அறிஞர்களைப் போலவே மக்கியவெல்லியும் நிலையான அரசியல் தத்துவங்களைக் கொண்டு தம் காலத்து அரசுகளை ஆராய்ந்து புதுக் கருத்துகளை வெளியிட்டார். அவர் கருத்துப்படி ஒரு நாட்டின் நலனுக்கு இன்றியமையாதது அதன் உரிமையாகும். அவ்வுரிமையைக்

காக்க வலிமை மிக்க அரசன் தேவை. தனிமனிதனின் நலனைக் காட்டிலும் அரசனின் அதிகாரமே முக்கியமானது. ஏனெனில் அவ்வதிகாரத்தைக் கொண்டுதான் நாட்டின் தன்மையை எடை போடமுடியும். எனவே, அரசனின் அதிகாரத்தை வலுப்படுத்தி, அது வளரத் துணை செய்யும் வழிகளை ஆராய்வதே அரசியலின் குறிக்கோளாகும். இந்த வழிகள் நேர்மையானவையாக இருக்க வேண்டிய தேவையில்லை. மன்னனின் ஆணையை உறுதிப்படுத்தும் எவ்வழியும் நல்லதென்பதே மக்கியவெல்லியின் கருத்து. எனவே, அவர் பரப்பிய அரசியல் கொள்கைகளின் சாரம் வரம்பில்லா முடியாட்சியென்று கூறலாம். உள்நாட்டுக் கலகங்களினால் சிதைக்கப்பட்டிருந்த இத்தாலியின் சிற்றரசுகளை ஊக்குவிக்கும் பொருட்டு மக்கியவெல்லி உருவாக்கிய அரசியல் கோட்பாடுகள் ஐரோப்பா முழுவதும் பரவி, யாங்கணும் வல்லாட்சிகளுக்கு ஆதரவளித்தன.

மறுமலர்ச்சியானது இவ்வாறு வரம்பில்லா முடியாட்சிக் கேற்ற புதிய அரசியல் கருத்துக்கள் வளரக் காரணமாக இருந்ததோடல்லாமல், பொதுவாக இடைக்கால நிறுவனங்களிலும் கொள்கைகளிலும் குற்றங்கள் காணும் மனப்பான்மையையும் மக்களிடையே தோற்றுவித்தது. இது இடைக்கால சமூகத்திற்கும் அரசியலுக்கும் ஆதாரமாயிருந்த திருச்சபையின் அதிகாரம், புனித ரோமானியப் பேரரசின் ஆதிக்கம் போன்றவைகளைத் தகர்த்தது. ஆகவே தேசீய அரசர்களின் ஆட்சி வளர வழியேற்பட்டது.

இறுதியாக மறுப்புச் சமய இயக்கத்தினால் வரம்பில்லா முடியாட்சிகள் எவ்வாறு வலுப்பெற்றன என்று பார்ப்போம். இந்த இயக்கம் கத்தோலிக்கத் திருச்சபையை எதிர்த்து லூத்தர்போன்றவர்கள் தொடங்கிய இயக்கமாகும். இது மறுமலர்ச்சியின் விளைவுகளில் ஒன்றாகும். இந்த இயக்கத்தினால் திருச்சபை எவ்வாறு பாதிக்கப்பட்டதென்று நாம் இங்குக் கூறப்போவதில்லை. ஆனால் அவ்வியக்கத்தினால் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை மட்டும் கவனிப்போம். சுருங்கக்கூறின், சமய மறுப்பு இயக்கம் சமய அடிப்படையில் அதுவரை ஒன்றுபட்டிருந்த ஐரோப்பிய சமுதாயத்தைப் பிளவுபடுத்தியது. மேலும், அது ஏற்கெனவே வலுப்பெற்றிருந்த தேசீய அரசர்களின் அதிகாரத்தை அதிகரித்தது. முக்கியமாக ஐரோப்பிய அரசர்கள் திருச்சபையின் அதிகாரத்திலிருந்து விடுபட்டதோடல்லாமல், மதக் காரியங்களிலும் அதிகாரம் பெற்றனர். சமய நிலையங்கள் எல்லா நாடுகளிலும் அரசனின் அதிகாரத்திற்குட்பட்டன. உதாரணமாக, இங்கிலாந்தில் கிறித்துவ சமய நிலையம் ஒரு தேசீய நிறுவனமாக்கப்பட்டு

அரசனின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது. இதேபோல் ஸ்பெயின் போன்ற கத்தோலிக்க நாடுகளிலும் போப்பாண்டவரின் அதிகாரம் குறைந்து, அரசரின் ஆணை வலுப்பெற்றது. ஆனால், நாளடைவில் சமய மறுப்பு இயக்கம் மக்களாட்சிக் கொள்கைகள் வளரக் காரணமாயிருந்தது. இதைப்பற்றிப் பின்னேர் இயலில் பார்ப்போம்.

தன்மை

16 ஆம் நூற்றாண்டில் தோன்றி, 17 ஆம் நூற்றாண்டில் தழைத்தோங்கி, 18 ஆம் நூற்றாண்டில் நலிவுற்ற வரம்பில்லா முடியரசுகளை ஆண்ட மன்னர்கள் இணையற்ற தன்னரசர்களாகத் திகழ்ந்தனர். பிரெஞ்சு அரசரான பதினான்காம் லூயி (Louis XIV) "நானே அரசு" ("L'etat C'est Moi) என்று செருக்குடன் கூறினரென்று அறிகிறோம். அவர் கூற்றில் மிகையேதும் இல்லை. அவரைப் போலவே மற்ற எல்லா ஐரோப்பிய அரசர்களும் கூறியிருந்தால், அவர்கள் கூற்று உண்மையானதாகவே இருந்திருக்கும். எட்டாம் ஹென்றி, பதினான்காம் லூயி, மகா பீட்டர், மகா பிரெடரிக், இரண்டாம் ஜோசஃப் (Joseph II) போன்ற ஐரோப்பிய அரசர்கள் பெற்றிருந்த வரையறையற்ற அதிகாரங்களைப் பதினான்காம் லூயியின் கூற்றுக், கருத்துச் செறிவுடன் எடுத்துக் காட்டுகிறது. அக்காலத்தில் மன்னன் வரம்பற்ற அதிகாரங்களைப் பெற்றிருந்தபோதிலும், அவன்து ஆட்சி கொடுங்கோன்மையாக இல்லாமல் மக்களுக்கு நன்மை பயப்பதாக இருந்தது. எனவே, நாம் இந்த இயலில் ஆராயும் காலம் ஐரோப்பிய வரலாற்றில் "நன்மை பயக்கும் வல்லாட்சிக் காலம் (The Age of Benevolent Despotism) என்று கூறப்படுகிறது. இக்காலத்தில் புகழுடன் விளங்கிய அரசர்கள் தாம் ஆண்ட நாடுகளின் பெருமையைப் பல வழிகளில் ஓங்கச்செய்து, செல்வத்தைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தினர். ட்யூடர்கள் காலத்தில் இங்கிலாந்து அடைந்த சீரும் சிறப்பும், பதினான்காம் லூயி காலத்தில் பிரான்ஸ் பெற்ற புகழும், வரம்பில்லா அரசர்களின் ஆட்சியினால் ஐரோப்பிய அரசுகள் அடைந்த நற்பயன்களை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

பதினாறும் நூற்றாண்டில் ஆண்ட ஐரோப்பிய வல்லரசர்கள் இடைக்கால நிறுவனங்களில் மிகச் சிறந்ததான பிரதிநிதித்துவ மன்றங்களைக் கலைக்கவில்லை. பாராளுமன்றம், எஸ்டேட்ஸ்-ஜெனரல், கார்ட்டெஸ் (Cortes) போன்ற இம்மன்றங்கள் இக் காலத்திலும் கூடிவந்தன. ஆனால், வரம்பற்ற அதிகாரங்களைப் பெற்றிருந்த மன்னனின் முன்னால் அவை ஒடுங்கிக் கிடந்தன. அவை பெயரளவில் மட்டும் சில அதிகாரங்களைப் பெற்றிருந்தன.

ஆனால், 17 ஆம் நூற்றாண்டில் அவற்றை முடியரசர்கள் முற்றிலும் புறக்கணிக்கத் தொடங்கினர். உதாரணமாக, பிரான்ஸில் எஸ்டேட்ஸ் ஜெனரல் 1614 ஆம் ஆண்டிலிருந்து 1789 ஆம் ஆண்டு வரைக் கூட்டப்படவேயில்லை. ஸ்பெயினில் கார்ட்டெஸ் என்னும் மன்றம் இடையிடையே கூட்டப்பட்டபோதிலும், அது இடைக்காலத்தில் பெற்றிருந்த அதிகாரங்களை இழந்தது. இங்கிலாந்தில் மட்டும் 17 ஆம் நூற்றாண்டில் பாராளுமன்றம் ஸ்டுவர்ட் வல்லரசர்களை எதிர்த்து நின்றது. ஆனால், மற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் பிரதிநிதித்துவ மன்றங்கள் நலிவுற்றன.

இவ்வாறு பிரதிநிதித்துவ மன்றங்களைப் புறக்கணித்த வரம்பில்லா முடியரசர்கள் தமது ஆட்சிக்குத் துணையாகச் சில நிறுவனங்களை ஏற்படுத்திக் கொண்டனர். இவற்றில் குறிப்பிடத்தக்கவை அரச அவைகள் (Royal Councils), அரசரின் அலுவலர்கள், நிலையான போர்ப்படை (Standing Army), நன்கு நிரப்பப்பட்ட கருவூலம் ஆகியவையாம்.

வல்லரசர்கள் பல சிற்றவைகளைக் கொண்டு ஆட்சி செலுத்தினர். இந்த அவைகளின் உறுப்பினர்களை அரசரே தெரிந்தெடுத்தார். இவற்றில் முக்கியமானவைகளுக்கு மன்னரே தலைமை தாங்கினர். இங்கிலாந்தில் வடக்கு அவை (Council of the North), வேல்ஸ் அவை (Council of Wales), "விண்மீன் மன்றம்" (The Star Chamber), உயர் ஆணையாளர் நீதிமன்றம் (The Court of High Commission) போன்ற சிறப்பவைகள் ட்யூடர் ஆட்சியின் கருவிகளாகத் திகழ்ந்தன. இதே போல் ஸ்பெயின் நாட்டில் கேஸ்டில் அவை (Council of Castille), இந்திய அவை (Council of the Indies) போன்ற நிறுவனங்கள் மன்னனுக்குத் துணை செய்தன. இவ்வாறே மற்ற எல்லா வரம்பில்லா முடியரசர்களும் சிறப்பு அவைகளையோ அல்லது குழுக்களையோ கொண்டு ஆட்சி செலுத்தினர்.

செயல் துறையிலும், பொதுத்துறை ஆட்சியிலும் அரசன் பயிற்சிபெற்ற அலுவலர்களின் துணை கொண்டு அதிகாரம் செலுத்தினன். பிரான்ஸில் இந்த அலுவலர்கள் இன்டென்டன்ட்ஸ் (Intendants) என்றழைக்கப்பட்டனர். பிரஷ்யாவில் இரண்டாம் பிரெடரிக் மன்னர் தம் கட்டுப்பாட்டுக்கடங்கிய திறமைமிக்க பணித்துறை ஆட்சியை (Bureaucracy) ஏற்படுத்தினர். இதனைச் சேர்ந்த அலுவலர்கள் அரசனுடைய பணியாட்களாகக் கருதப்பட்டதால், அவர்கள் அவனது ஆணையைத் தலைமேற்கொண்டு பணிபுரிந்தனர். இதுபோலவே ஸ்பெயின், ரஷ்யா, ஆஸ்ட்ரியா போன்ற மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் வல்லரசர்கள் வட்டார ஆட்சிகளைக் கலைத்து, ஆட்சித் துறையை ஒருமுகப் படுத்தி

(Centralisation), பொதுத்துறை அலுவலர்களைத் தமது ஆணை யின்கீழ்க் கொண்டு வந்தனர். தற்கால அரசுகளில் சிறப்பிடம் பெற்று விளங்கும் பொதுத்துறைப் பணிக்கு (Civil Service) வரம்பில்லா முடியரசர்களே அடிகோலினர் என்று கூறினால் மிகையாகாது.

வரம்பில்லா முடியரசர்கள் ஏற்படுத்திய நிறுவனங்களில் மிக முக்கியமானது பயிற்சியும் திறனும் பெற்ற போர்ப்படையாகும். அவர்களது வல்லாட்சிக்கு இது இன்றியமையாத ஆதாரமாகத் திகழ்ந்தது. வலிமை மிக்க போர்ப்படையைக் கொண்டுதான் வல்லரசர்கள் தமது ஆதிக்கத்தையும், நாட்டின் பெருமையையும் நிலைநாட்டினர். உள்நாட்டு எதிர்ப்புகளையும் போர்ப்படையைக் கொண்டே அடக்கினர். பிரான்ஸில் பதினான்காம் லூயி திறமை வாய்ந்த தளபதிகளையும் வலிமை மிக்க படையையும் பெற்றிருந்த தால்தான் அயல்நாடுகளின் மீது படையெடுத்து, பிரான்ஸின் செல்வாக்கைப் பெருக்க முடிந்தது. இதேபோல் பிரஷ்யாவிலும் இரண்டாம் பிரெடரிக் மன்னர் நிலையான போர்ப்படையொன்றை நிறுவினர். இது ஐரோப்பாவில் தலைசிறந்ததாகக் கருதப் பட்டது. ஆஸ்ட்ரியாவிலும் மரிய தெரெஸா (Maria Theresa) எனும் அரசி பிரஷ்ய அரசரைப் பின்பற்றி நாட்டில் போர்ப் பயிற்சிக் கூடங்களை ஏற்படுத்தினாள். மேலும் அவள் கட்டாயப் போர்ச் சேவையையும் புகுத்தினாள். அரசாங்கத்தின் மற்றச் செலவுகளைக் குறைத்துப் போர்ப்படை வீரரின் எண்ணிக்கையை அதிகரித்தாள். ரஷ்யாவில் மகா பீட்டர் பழைய நிறுவனமான ஸ்ட்ரெல்ட்ஸி (Streltsi) என்ற படையைக் கலைத்து, நாட்டின் போர்ப் படையைப் புதிய அடிப்படையில் அமைத்தார். அவர் புதுமுறைப் பயிற்சிகளையும் கட்டுப்பாடுகளையும் புகுத்திப் படைகளின் திறமையை வளர்த்தார்.

வரம்பில்லா முடியரசர்கள் காலத்தில் ஐரோப்பிய நாடுகள் செல்வப் பெருக்கடைந்திருந்தன. இது வல்லரசர்களின் வெற்றிக்கு ஓர் அடையாளமாக இருந்ததோடல்லாமல், அவ் வரசர்களின் ஆட்சிக்குப் பிறிதொரு ஆதாரமாகவும் இருந்தது. பொதுவாக இக்காலத்தின் செல்வ வளர்ச்சி அரசர்கள் ஏற்படுத் திய அமைதியினாலும், வாணிகப் பெருக்கு, தொழில் முன்னேற்றம், புதிய உலகின் செல்வம், கீழ்நாடுகளிலிருந்து கொண்டுவரப் பட்ட பொருள் ஆகியவற்றாலும் ஏற்பட்டது. இவை அரசின் கரு வூலத்தை நிரப்பின. இது மன்னனின் ஆணைக்கு உரமளிப்பதா யிருந்தது. பிரான்ஸில் பதினான்காம் லூயி எனும் மன்னர் கோல்பெர் (Colbert) என்ற திறமை மிக்க அமைச்சரின் துணை கொண்டு தொழிலையும், வர்த்தகத்தையும் வளர்த்தார். குடி

யேற்ற நாடுகளை ஏற்படுத்தி, நாட்டின் செல்வப் பெருக்கை அதி கரித்தார். இதேபோல் ட்யூடர் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தில் செல்வநிலை உயர்ந்தது. ஸ்பெயின் நாட்டின் கடற்படையை முறியடித்த பிறகு, இங்கிலாந்து கடல்களின் தலைவியாகத் திகழ்ந் தது. பிரான்ஸிஸ் டிரேக் (Francis Drake), வால்ட்டர் ராலி (Walter Raleigh) போன்ற கடலோடிகள் இங்கிலாந்தின் பெருமையை உயர்த்தினர். ஆகவே ட்யூடர்கள் ஆட்சிக் காலத்தை இங்கிலாந் தின் பொற்காலம் எனக் கூறலாம். இதுபோலவே மற்ற ஏல்லா ஐரோப்பிய நாடுகளும் 17, 18 ஆம் நூற்றுண்டுகளில் வல்லரசர் களின் முயற்சிகளின் பயனாக உயர்நிலை யடைந்தன.

இறுதியாக, வரம்பில்லா முடியரசர்கள் திருச்சபையின் அதிகா ரத்தைப் பெரிதும் குறைத்தனர். இங்கிலாந்தில் 1534 ஆம் ஆண்டு இயற்றப்பெற்ற "மேலாண்மைச் சட்டம்" (The Act of Supremacy) இங்கிலாந்தின் திருச்சபை மீது போப்பாண்டவர் ஆட்சி செலுத்த முடியாதென்றும், ஆங்கில அரசரே அத்திருச்சபையின் தலைவ ரென்றும் முடிவு செய்தது. பதினான்காம் லூயியும் இதுபோலவே போப்பின் அதிகாரத்தைக் குறைத்துப் பிரான்ஸில் திருச்சபை யைத் தம்மாளைக்குள் கொண்டுவந்தார். ஸ்பெயின் நாட்டில் இரண்டாம் ஃபிலிப் சமய காரியங்களிலும் வரம்பற்ற அதிகாரம் பெற்றிருந்தார். நாட்டின் பேராலயங்கள் அவரது அதிகாரத் திற்குட்பட்டிருந்தன. அதிமேற்றிராணியார்களையும், மேற்றி ராணியார்களையும், மடாதிபதிகளையும் அரசரே நியமித்தார். குருக்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பையும் அவரே ஏற்றிருந் தார். போப்பின் ஆணைகள் (Papal Bulls) தம் விருப்பத்திற்கு முரணாக இருந்தால், அவற்றை ஏற்க மறுத்தார். கடும் விசாரணை மன்றத்தின் (The Inquisition) துணைகொண்டு ஏறத்தாழ ஆறுயிரம் பேர்களைக் கொன்றார். இவையெல்லாம் ஸ்பெயின் அரசர்கள் திருச்சபையின் மீது செலுத்திவந்த அடக்குமுறைகளைக் காட்டுகின்றன. ரஷ்யாவில் மகா பீட்டர் சமய நிலையத்தைத் தம் ஆணைக்குட்படுத்துமாறு பழைய மதத் தலைவரை (Patriarch) நீக்கி, அவருக்குப் பதிலாக ஒரு சமய மன்றத்தை (Holy Synod) ஏற்படுத்தினார். அதில் தமக்கு வேண்டியவர்களை உறுப்பினர் களாக நியமித்து அதனைத் தம் கைக் கருவியாக்கிக் கொண்டார். இவ்வாறு மறுப்புச் சமயத்தைச் சேர்ந்த நாடுகளில் மட்டு மல்லாமல், கத்தோலிக்க நாடுகளிலும் சமய நிலையங்களும், திருச் சபையும் வல்லரசர்களின் ஆணைக்குள் அடங்கிக் கிடந்தன. இடைக்காலம் முழுவதும் பெரிதும் செல்வாக்குப் பெற்றிருந்த திருச்சபை இவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டதால், ஐரோப்பிய அரசர்களின் அதிகாரம் வளர வழியேற்பட்டது.

நிலவு

பதினேழும் நூற்றாண்டில் தோன்றி, பதினேழாம் நூற்றாண்டில் சிறப்புடன் திகழ்ந்த வரம்பில்லா முடியாட்சிகள் பதினெட்டாம் நூற்றாண்டில் சரியத் தொடங்கின. இந்த நலிவிற்கு இங்கிலாந்தில் 1688 ஆம் ஆண்டு நடந்த புரட்சி, அமெரிக்க சுதந்திரப் போர், பிரெஞ்சுப் புரட்சி, தொழிற் புரட்சி ஆகியவை முக்கிய காரணங்களாகும். 1688 ஆம் ஆண்டிலிருந்து 1850 ஆம் ஆண்டுக்குள் நிகழ்ந்த இச்சம்பவங்கள் ஐரோப்பிய அரசுகளில் பல அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தின. இவை வரம்பில்லா முடியரசுகளைத் தகர்த்தெறிந்தன. கி. பி. 1688 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நிகழ்ந்த "மாண்புறு புரட்சி" (Glorious Revolution) ஐரோப்பிய வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சியாகும். இப் புரட்சியினால் இங்கிலாந்தில் வரம்பில்லா முடியாட்சி முறியடிக்கப் பட்டுப் பாராளுமன்றத்தின் அதிகாரம் நிலைநாட்டப்பட்டது. ஸ்டூவர்ட் மன்னர்கள் ஆங்கில அரியணையேறிய நாள்முதலே இப் புரட்சிக்கேற்ற சூழ்நிலைகள் இங்கிலாந்தில் ஏற்படத் தொடங்கின. 1603 ஆம் ஆண்டிலிருந்து 1688 ஆம் ஆண்டு வரை இங்கிலாந்தில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. 1649 இல் முதலாம் சார்ல்ஸ் என்னும் அரசன் தூக்கிலிடப்பட்டான். இதன் பிறகு பதினோராண்டுகளாகக் கிராம்வெல் (Cromwell) என்பவர் தலைமையில் குடியாட்சி நிலவியது. இறுதியில், இரண்டாம் ஜேம்ஸ் எனும் அரசர் நாட்டைவிட்டு விரட்டப்பட்டு, அரசியலமைப்புக் குட்பட்ட முடியாட்சி நிறுவப்பட்டது. இப்புதிய அமைப்பின் படி அரசின் தலையான அதிகாரம் பாராளுமன்றத்திற்கு மாற்றப் பட்டது. அரசன் தான் இதுவரை பெற்றிருந்த தனிச் சிறப்புரிமைகளை (Prerogatives) இழந்தான். செயல்துறை அதிகாரங்களைச் செலுத்த "கேபினெட்" (Cabinet) எனப்படும் அமைச்சரவை சிறிது சிறிதாக உருப்பெறத் தொடங்கியது.

இந்த அடிப்படையான மாற்றங்கள் மற்ற ஐரோப்பிய நாட்டு மக்களின் கவனத்தைக் கவர்ந்தன. இங்கிலாந்தில் நிறுவப் பட்ட புதிய அமைப்புக்களை நேரில் கண்டு வியந்த சில ஐரோப்பிய அறிஞர்கள் அவற்றைப்பற்றித் தம் நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறினர்கள். ஆங்கிலேய மக்களின் முற்போக்குக் கொள்கையை அறிந்த ஐரோப்பிய மக்கள் தாம் பெற்றிருந்த வரம்பில்லா முடியாட்சிகளின் மீது வெறுப்புக் கொண்டனர். 1688 ஆம் ஆண்டு நிகழ்ந்த புரட்சியினால் இங்கிலாந்தில் வரம்பில்லா முடியாட்சி குலைக்கப்பட்டுச் செல்வந்தரின் சிறுகுழுவாட்சியே நிறுவப்பட்டதென்றாலும், அந்நிகழ்ச்சியின் விளைவாக ஐரோப்பிய மக்கள் மக்களாட்சியை விரும்பத் தொடங்கினர்.

ஆங்கிலப் புரட்சியினால் ஐரோப்பிய மக்களிடையே ஏற்பட்ட மனமாற்றமானது அமெரிக்கச் சுதந்திரப் போரில் அமெரிக்கக் குடியேற்ற நாட்டு மக்கள் அடைந்த வெற்றியினால் முழுமை பெற்றது. ஆங்கிலப் புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்தில் அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சியே நிறுவப்பட்டது. அதன் உண்மையான தன்மை நாளடைவில்தான் புலப்பட்டது. ஆனால், 1783 ஆம் ஆண்டு அமெரிக்க மக்கள் தாம் போரிலடைந்த வெற்றியின் பயனாக இங்கிலாந்திடமிருந்து முற்றிலும் விடுதலையடைந்து ஒரு குடியரசை அமைத்துக் கொண்டனர். பிற்காலத்தில் ஆப்ரகாம் லிங்கன் என்பவர் குறிப்பிட்டதுபோல, இவ்வரசு "மக்களுடைய, மக்களால், மக்களுக்காக நடத்தப்பட்ட அரசாங்கத்தைப்" பெற்றது (Government of the people, by the people, for the people). இத்தகைய மக்களாட்சி பெற்ற குடியரசு ஒரு பெரும் போரின் விளைவாக நிறுவப்பட்டதால் அதனைப்பற்றிய செய்தி ஐரோப்பா எங்கும் பரவி, மக்களைப் பரபரப்படையச் செய்தது. பிரெஞ்சு நாட்டவரான லாஃபாயெட் (Lafayette) போன்ற ஐரோப்பிய வீரர்கள் அமெரிக்கச் சுதந்திரப் போரில் இங்கிலாந்தை எதிர்த்துப் போர்புரிந்ததால் குடியாட்சியில் பெரும்பற்றுக் கொண்டிருந்தனர். இவர்கள் தாய் நாடு திரும்பியதும் தம்நாட்டு மக்களிடையே குடியாட்சியின் மேல் விருப்பை வளர்த்தனர். எனவே, அமெரிக்காவில் 18 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட குடியரசு ஐரோப்பிய முடியரசுகள் நலிவுறப் பெருமளவில் துணைசெய்தது. ரோமானிய குடியரசின் வீழ்ச்சிக்குப் பிறகு முதன்முதலாக மேற்கு நாடொன்றில் நிறுவப்பட்ட அமெரிக்கக் குடியரசும் அதன் மக்களாட்சிக் கோட்பாடுகளும் ஐரோப்பிய மக்களின் எண்ணங்களை மாற்றியமைத்தன.

இவ்வாறாக, மாண்புறு புரட்சியினால் இங்கிலாந்தில் முடியாட்சி அடைந்த சீர்குலைவும், அமெரிக்காவில் குடியாட்சி முடியாட்சியை எதிர்த்துக் கண்ட வெற்றியும் ஐரோப்பிய மக்களிடையே குடியாட்சித் தாகத்தை ஏற்படுத்தின. மேலும் வால்ட்டேர், ரூஸோ போன்றவர்கள் 18 ஆம் நூற்றாண்டில் எழுதி வெளியிட்ட நூல்கள் வரம்பில்லா முடியரசுகளை எதிர்த்துச் செயலில் ஈடுபடுமாறு மக்களைத் தூண்டின. இவைகளுள் குறிப்பாக ரூஸோ எழுதிய "சமுதாய ஒப்பந்தம்" (The Social Contract) என்ற நூல் இதுவரை வல்லரசர்களின் கொடுங்கோன்மைக்குட்பட்டிருந்த பிரெஞ்சு மக்களை வீறுகொண்டெழச் செய்தது. இவ்வாறு பிரெஞ்சு முடியாட்சியைக் கவிழ்க்கும் பொருட்டு மக்கள் செய்த பெருங் கிளர்ச்சியே பிரெஞ்சுப் புரட்சியெனப்படுகிறது.

பிரெஞ்சுப் புரட்சி தோன்ற முக்கிய காரணமாயிருந்தவர் ரூஸோ என்பவர் ஆவார். இவர் தமது நூலில் மனிதரெல்லோரும் தொடக்கத்தில் சமமாக இருந்தனரென்றும், ஆனால் காலப்போக்கில் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு மக்கள் அடிமை நிலையடைந்தனர் என்றும் கூறினர். இவ்வடிமை நிலையை மாற்றித் தம் உரிமைகளை மீண்டும் பெற மக்கள் ஒரு புதிய சமுதாய ஒப்பந்தத்தைச் செய்ய வேண்டுமெனவும், இதற்காக அரசனின் அதிகாரத்தைத் தகர்த்துப் பொது நல விருப்பத்தின் அடிப்படையில் நடத்தப்படும் ஓர் அரசாங்கத்தை (Government by the General Will) நிறுவவேண்டும் எனவும் ரூஸோ கூறினர். சுருங்கக் கூறின் உரிமை, சமத்துவம், மக்களின் இறைமை ஆகிய இவையே ரூஸோவின் கொள்கைகளின் சாரமாகும்.

இக்கொள்கைகளைக் குறிக்கோளாகக் கொண்டு பிரெஞ்சு மக்கள் நடத்திய பெரும் புரட்சியின் காரணமாகப் பிரான்ஸில் முடியரசு கவிழ்க்கப்பட்டுக், குடியரசு நிறுவப்பட்டது. இதன் பயனாக வெளியிடப்பட்ட அரசியலமைப்பும் (Constitution), உரிமை அறிக்கையும் (Declaration of Rights) ஐரோப்பாவில் 19 ஆம் நூற்றாண்டில் புரட்சிப் புயல்களை எழுப்பின. பிரெஞ்சுப் புரட்சியின் இவ்விளைவுகளைப்பற்றி நாம் அடுத்த இயலில் பார்ப்போம். பிரெஞ்சுப் புரட்சியினால் நேர்ந்த உடனடியான விளைவு என்னவென்றால், பிரான்ஸின் முடியாட்சி குலைக்கப்பட்டது. மற்ற ஐரோப்பிய நாடுகளில் அதன் வலிமை வெகுவாகக் குறைக்கப்பட்டது.

இறுதியாக, வரம்பில்லா முடியாட்சிகளின் சிதைவிற்குத் தொழிற்புரட்சியும் ஒரு காரணமாயிருந்தது. இப்புரட்சி முதலில் இங்கிலாந்தில் தோன்றி, 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய நாடுகளில் பரவியது. இதன் விளைவாகச் சமூகத்தில் புதியதொரு வகுப்புத் தோன்றியது. இதுவே தற்காலச் சமூகத்தில் மிக முக்கிய இடம் வகிக்கும் தொழிலாளர்களின் வகுப்பாகும். இதேபோல் முதலாளிகள் என்ற மற்றொரு வகுப்பும் பிறந்தது. இவ்விரு வகுப்புக்களுக்கும் 18 ஆம் நூற்றாண்டில் அரசியல் உரிமைகள் அளிக்கப்படவில்லை. தொழில் துறையில் ஈடுபட்டிருந்த இவர்களின் எண்ணிக்கை நாளடைவில் பெருகவே, இவர்கள் சமூகத்தில் முக்கிய இடம் பெற்றனர். தம் அரசியல் உரிமைகளுக்காகப் போராடவும் தொடங்கினர். இவர்களுடைய முயற்சிகள் யாவும் குடியாட்சியை வளர்த்தன. தொழில் துறையைச் சேர்ந்தோரின் வலிமை வளர வளர முடியாட்சிகள் நலிவுற்றன.

இவ்வாறு இடைக்காலத்தின் இறுதியிலிருந்து மூன்று நூற்றாண்டுகளாகத் தழைத்திருந்த வரம்பில்லா முடியாட்சிகள் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு வீழ்ச்சியடைந்தன. இதன் பிறகு ஐரோப்பாவில் மக்களாட்சிகள் நிறுவப்பட்டன. ஆனால் ஐரோப்பிய மக்கள் தம்மைத் தாமே ஆளும் திறன் பெறுத காலத்தில் முடியாட்சிகளே அவர்களுக்குப் பாதுகாப்பளித்து அவர்களுடைய சமூக, அரசியல் வாழ்வைச் சீர்படுத்தின.

ஏ. பிரெஞ்சுப் புரட்சியும் அதன் விளைவுகளும்

கி. பி. 1789 ஆம் ஆண்டு ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சியானது அரசாங்கத்தின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கி வைத்தது. கி. மு. 27 ஆம் ஆண்டிலிருந்து கி. பி. 1789 ஆம் ஆண்டுவரை மேற்கு ஐரோப்பாவில் மேலாண்மைக் கொள்கை (Authoritarianism) நிலைபெற்றிருந்தது. இந்த நீண்ட காலத்தில் ஐரோப்பிய மக்கள் ரோமனியப் பேரரசர், மிலேச்ச முடியரசர்கள், க்ரோலிஞ்சிய மன்னர்கள், நிலமானியப் பிரபுக்கள், திருச் சபையின் தலைவர்கள், வரம்பில்லா முடியரசர்கள் ஆகியோரின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தனர். இந்த மேலாண்மை நிலை மதக் கொள்கைகளைப் பொறுத்தவரையில் சமயப் புரட்சி இயக்கத்தினால் (Reformation) குலைக்கப்பட்டது. ஏனெனில், இந்த இயக்கத்தின் விளைவாகப் போப்பாண்டவர் சமய சம்பந்தமான காரியங்களில் பெற்றிருந்த வரம்பற்ற அதிகாரத்தை இழந்தார். ஆனால் 16 ஆம் நூற்றாண்டில் தோன்றிய இந்த இயக்கம் அரசியலில் மேலாண்மையைப் பலப்படுத்தியதேயன்றி, அதனைச் சிதைக்க வில்லை. அது பிரெஞ்சுப் புரட்சியினால்தான் அழிக்கப்பட்டது. சமயப் புரட்சி இயக்கத்தினால் மேலாண்மையில் தோன்றிய தளர்வு பிரெஞ்சுப் புரட்சியினால் முற்றுப்பெற்றதென்று அறிஞர்கள் கூறுவர். கி. பி. 1789 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் பதினான் காம் நாள் பாரிஸ் நகரில் ஒரு பாமரக் கும்பல் பிரெஞ்சு அரசர் களின் கொடுங்கோன்மையின் சின்னமாக விளங்கிய பாஸ்டில் (Bastille) சிறையை உடைத்தெறிந்தது. அந்த நாள் முதல் ஐரோப்பாவில் மேலாண்மை சரிந்து, அரசியலில் அடிப்படை யான மாற்றங்கள் ஏற்பட்டன. இவ்வாறு புதிதாகத் தோன்றிய சகாப்தத்தை ஐரோப்பிய வரலாற்றில் மக்களாட்சிக் காலம் எனக் கூறலாம்.

கி. மு. 27 ஆம் ஆண்டில் அகஸ்டஸ், 'முதல்வன்' என்ற முறையில் ரோமானியப் பேரரசின் தலைவனானபோது, வரலாற்

றின் மேட்டையிலிருந்து மறைந்த மக்கள் பிரெஞ்சுப் புரட்சியின் போதுதான் மீண்டும் அம் மேடையில் தோன்றினர். அதாவது பாமர மக்கள் மீண்டும் அரசாங்க அதிகாரத்தில் பங்குபெறத் தொடங்கினர்கள். பண்டைய கிரீஸிலும் ரோமிலும் மக்களே நேர்முகமாக அரசாட்சி செலுத்தினர். ஆனல், தற்காலத்தில் சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களின் காரணமாக இது நடைபெற முடியாது. எனவே, தற்காலத்தில் மக்களாட்சி என்பது மக்களின் இசைவைப்பெற்று அவர்களின் பிரதிநிதிகள் நடத்தும் ஆட்சியைக் குறிக்கிறது. இத்தகைய ஆட்சி தற்காலத்தில் முதன் முதலாகத் தோன்ற அடிகோலியது, பிரெஞ்சுப் புரட்சியாகும். உரிமை, சமத்துவம், சகோதரத்துவம், மக்களின் இறைமை ஆகிய இவை நான்கும் மக்களாட்சிக்கு அடிப்படையான கோட்பாடுகளாகும். பிரெஞ்சுப் புரட்சி இக்கோட்பாடுகளை ஐரோப்பாவில் பரப்பி அவற்றின் வாயிலாக மக்களாட்சி தோன்றி வளர வழி வகுத்தது. வரம்பில்லா முடியாட்சிகளினல் சீரமைக்கப்பட்டுத் தேசிய நிலையடைந்திருந்த ஐரோப்பிய அரசுகள் பிரெஞ்சுப்புரட்சியினல்மக்களாட்சிபெற்றன. இவ்வாறு ஐரோப்பாவின் வரலாற்றில் அடிப்படையான மாற்றங்களைத் தோற்றுவித்த பிரெஞ்சுப் புரட்சியின் காரணங்களை இப்போது ஆராய்வோம்.

"பழைய ஆட்சி" (Ancien Regime) எனப்பட்ட பிரெஞ்சு அரசாங்கத்தின் சீர்கெட்ட நிலையே பிரெஞ்சுப் புரட்சிக்கு முதன் மையான காரணமாகும், இந்தச் சீர்கேடு பதினன்காம் லூயி காலத்தில்(1661-1715) தொடங்கிப் பதினைந்தாம் லூயி காலத்தில் (1715-1774) மிகத் தாழ்ந்த நிலையை அடைந்திருந்தது. பதி னன்காம் லூயி "நாமே அரசு" என்று கூறி இறுமாப்புக் கொள்ளும் அளவுக்கு அவரது தனிவல்லாட்சி (autocracy) ஓங்கியிருந்தது. அரச அவையின் ஆடம்பரமும் பகட்டும் மக்களிடையே வெறுப்பை உண்டாக்கியது. இதே காலத்தில் ஆங்கில நாட்டு மக்கள் தாம் பெருத உரிமைகளைப் பெற்றிருந்ததைக் கண்டு பிரெஞ்சு மக்கள் லூயியின் வல்லாட்சியைப் பகைத்தனர். இந்த வெறுப்புணர்ச்சியை அவர் அடைந்த தோல்விகள் மேலும் வளர்த்தன. பதினன்காம் லூயி நடத்திய வினன போர்களினலும், பதினைந்தாம் லூயி தொடுத்த ஏழாண்டுப் போரினலும் (The Seven Years War) பிரான்ஸ் நாட்டின் செல்வநிலை சீர்குலைந்தது. இந்தப் பண நெருக்கடியை தவிர்க்கப் பதினைந்தாம் லூயியாலும் அல்லது அவருடைய புதல்வன் பதினருவம் லூயியாலும் இயலவில்லை. பதினருவம் லூயி டர்கோ (Turgot), நெக்கர் (Necker) போன்ற திறமைவாய்ந்த அமைச்சர்களின் துணைகொண்டு பொருள் நிலைமையைச் சீர்

படுத்த முயன்றார். ஆனால், இவ்வமைச்சர்கள் விதிக்க எண்ணிய வரிகளை நாட்டின் பிரபுக்களும் குருக்களும் ஏற்க மறுத்தனர். எனவே, 1614 ஆம் ஆண்டிலிருந்து கூட்டப்படாத எஸ்டேட்ஸ் ஜெனரலைக் கூட்டவேண்டிய தேவை ஏற்பட்டது. இவ்வாறு கூட்டப்பட்ட எஸ்டேட்ஸ் ஜெனரல் மூன்றும் வகுப்பின் (Third Estate) பிரதிநிதிகளின் பிடிவாதத்தினால் தேசிய மன்றமாக (National Assembly) மாறி மன்னனின் ஆணைக்கு வரம்பிட முயன்றபோது பிரெஞ்சுப் புரட்சி தொடங்கியது.

இவ்வாறு தம் போர்ச் செயல்களினால் நாட்டைச் சிக்கல்களுக் குள்ளாக்கிய பிரெஞ்சு மன்னர்கள் தமது ஆடம்பர வாழ்க்கையினாலும் சிற்றின்பப் பற்றினாலும் மக்களின் வெறுப்பை அதிகரித்தனர். குறிப்பாகப் பதினைந்தாம் லூயி தமது கீழான உணர்ச்சிகளுக்கு அடிமையாகும் இயல்புடையவர். சிற்றின்ப வாழ்க்கையில் திளைத்திருந்த அம்மன்னர் பம்படூர் அம்மையார் (Madame de Pompadour), டுபாரி அம்மையார் (Madame Du Barri) போன்ற தம் காதற் பரத்தையரின் சொற்படி அரசாங்கக் காரியங்களை நடத்தி வந்தார். இவை யெல்லாம் மக்களிடையே பெருமளவில் மனக்கசப்பை உண்டுபண்ணின.

பதினாறாம் லூயி நல்ல குணமுள்ளவர். மக்களுடைய துயர் துடைக்கவேண்டு மென்ற எண்ணமுடையவர். பதினைந்தாம் லூயியின் ஆட்சியினால் நாடு அடைந்திருந்த இழிவை நன்குணர்ந்திருந்தார். ஆனால், இந்நிலையை மாற்றியமைப்பதற்கு வேண்டிய மனத்திண்மையும், திறனும் அவரிடம் காணப்படவில்லை. சீர்திருத்தங்களை வெறுத்த பிரபுக்களின் எதிர்ப்பை எதிர்த்து நிற்கப் போதுமான உள்ளத்துணிவும் உரமும் அவருக்குக் கிடையாது. மேலும், அவர் தம் மனைவியான மேரி அந்துவானெத்தின் (Marie Antoinette) கைப்பொம்மையாக இருந்தார். எனவே பிரெஞ்சு அரசர்களின் கொடுங்கோன்மை, புறப்பகட்டு, சிற்றின்ப வாழ்க்கை, அரசாங்கத்தைச் சீரமைக்கும் ஆற்றலின்மை போன்ற இப்பெரும் குறைகள் மக்களின் சீற்றத்தை எழுப்பி அவர்களை அரசனுக் கெதிராகப் புரட்சியில் ஈடுபடச் செய்தன.

பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டபோது பிரெஞ்சு சமூகம் மூன்று வகுப்புக்களாகப் பிளவுபட்டிருந்தது. இவற்றுள் சமயக் குருக்கள் முதல் வகுப்பினரென்றும், பிரபுக்கள் இரண்டாம் வகுப்பின ரென்றும், பாமர மக்கள் மூன்றும் வகுப்பினரென்றும் கருதப்பட்டனர். இம்மூன்று வகுப்புக்களும் இணையாக எண்ணப்படவில்லை. குருக்களும், பிரபுக்களும் வரிப்பளு, அரசியல் உரிமைகள், செயல்துறை அதிகாரம் முதலியவற்றில் சிறப்புரிமைகளைப் (Privileges) பெற்றிருந்தனர். மூன்றும் வகுப்பு முதலிரண்டு

வகுப்புகளிடத் தாழ்ந்ததாகக் கருதப்பட்டது. நாட்டின் நிலங்களில் ஐந்தில் ஒரு பங்கு பிரபுக்கள் கையிலும். மூன்றில் ஒருபகுதி மேற்றிராணியார்கள், மடாதிபதிகள் போன்ற உயர்குருக்கள் கையிலும் இருந்தன. இவ்வாறு நாட்டின் நிலங்களில் ஏறக்குறையப் பாதியைச் சொந்தமாகப் பெற்றிருந்த முதலிரண்டு வகுப்புக்களும் அரசாங்கத்திற்கு யாதொரு வரியையும் செலுத்தவில்லை. பெரும்பான்மையான வரிகளைப் பாமர மக்களே செலுத்த வேண்டியிருந்தது. உயர் சமயக்குருக்கள் உலகியல் வாழ்க்கையில் தலையிடாத்திருந்தனர். இதனால் பிரான்ஸில் கிறித்துவ சமயத்திற்கே இழுக்கேற்பட்டிருந்தது. பிரபுக்கள் தமக்குச் சொந்தமான நிலத்தில் வாழாமல் பாரிஸ், வெர்ஸேல் (Versailles) முதலிய பட்டணங்களில் உண்டு களித்து உல்லாசமாக வாழ்ந்தனர். இவர்களும் வரிப்பளுவை ஏற்க மறுத்தனர். சிறப்புரிமைகளைப் பெற்றிருந்த முதலிரண்டு வகுப்புக்களும் அவற்றிற்கு ஈடாகச் சமூகத்திற்கு யாதொரு பணியும் புரியவில்லை யாதலால், அவை சமூகத்தின் பெருஞ் சுமையாகக் காணப்பட்டன. நிலமானிய உரிமைகளைத்தையும் பெற்றிருந்த பிரபுக்களும் உயர் குருக்களும் அம்முறையின் கடமைகளை மறந்திருந்தனர். "பிரபுக்கள் போரிட்டனர், குருக்கள் இறைவனை வேண்டினர். மக்கள் வரி செலுத்தினர்" என்பது பழைய ஆட்சியின் தன்மையாக இருந்தது. பிரபுக்களின் போர்ச் செயல்களினால் பயனேற்பட்டதா என்பதும், உலகியல் பற்றுடைய குருக்களின் வேண்டுகோளை இறைவன் செவிமடுத்தாரா என்பதும் ஐயத்திற்குரியன. ஆனால், பாமரர் மிகப்பளுவான வரிகளைச் சுமக்கவேண்டியிருந்தது என்பது மட்டும் உண்மை. எனவே, முதலிரண்டு வகுப்புக்களும் பெற்றிருந்த சிறப்புரிமைகளின் காரணமாகச் சமத்துவமும் நீதியும் இறந்தொழிந்தன. இந்த அநீதியைக் கண்டு பிரெஞ்சு மக்கள் வெகுண்டெழுந்ததில் வியப்பொன்றுமில்லை.

"பழைய ஆட்சி"யில் மூன்றும் வகுப்பைச்சேர்ந்த பாமர மக்கள் இருந்த இழிந்த நிலையைச் சற்று நோக்கினால் பிரெஞ்சுப் புரட்சியின் காரணங்கள் தெற்றென விளங்கும். நடுத்தர வகுப்பினர் (Middle class or Bourgeoisie), குடியானவர் என்ற இருபிரிவுகளைக் கொண்டிருந்த இம் மூன்றும் வகுப்பு அரசாங்கத்தாலும் நிலமானியப் பிரபுக்களாலும் பலவகையில் துன்புறுத்தப்பட்டது. மூன்றும் வகுப்பைச் சேர்ந்தவர்களுள் பெரும்பான்மையானவர் குடியானவர்களே. இவர்கள் வெகுகாலமாக அடிமை நிலையிலிருந்து விடுதலையடைந்திருந்தபோதிலும், 18ஆம் நூற்றாண்டில் இன்னும் சில நிலமானியக் கடமைகளினால் பிணைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் தம் வருவாயில் ஏறக்குறைய எண்பது சதவிகிதத்தை அரசாங்கத்திற்கோ அல்லது நிலப்பிரபுகளுக்கோ

வரியாகச் செலுத்தினர். டெயில் என்ற (Taille) சொத்துவரி, கேபெல் (Gabelle) என்ற உப்புவரி, கார்வீ (Corvee) என்ற கட்டாயவேலை முதலியவை பிரெஞ்சுக் குடியானவனைக் கசக்கிப் பிழிந்தன. இவை போதாதென்று அவன் தன் நிலப்பிரபுவிற்குப் பல கடமைகளை ஆற்றவேண்டியிருந்தது. அவன் தானியம் அரைக்க வேண்டுமானால் பிரபுவின் மாவாலையில்தான் அரைக்க வேண்டும். திராட்சைப் பழங்களை அவரது ஆலையில்தான் பிழிந்து சாறுக்கவேண்டும். அப்பம் சுடவேண்டுமானால் அவருடைய அடுப்பில்தான் சுடவேண்டும். இவற்றிற்கெல்லாம் ஈடாகப் பிரபு கேட்ட பணத்தை அவன் கொடுக்கவேண்டும். குடியானவன் தனக்குச் சொந்தமான நிலங்களை விற்றால் அதில் ஒரு பகுதியைத் தன் பிரபுவுக்கு கொடுக்கவேண்டும். அவருடைய இசைவின்றிப் புது நிலங்களை அவன் வாங்க முடியாது. தன் நிலத்தைச் சுற்றி வேலியமைத்துக் கொள்ள அவனுக்கு உரிமை கிடையாது. ஏனெனில், இது பிரபுவின் வேட்டைக்கு இடையூறாக இருக்கலாம். பிரபு ஏழைகளின் நிலத்தில் தம் விருப்பம்போல் வேட்டையாடிக் களிக்கலாம். இதனால் குடியானவர்களின் பயிர்களுக்கு அழிவு ஏற்பட்டால், அவர்கள் யாரிடமும் முறையிட முடியாது. இதுவு மல்லாமல் குடியானவன் தன் பயிர்களை மேய்ந்து அழிக்கும் மிருகங்களை விரட்டக்கூடாது. ஏனெனில், இதுவும் பிரபுவின் வேட்டைக்கு இடைஞ்சலாக இருக்கலாம். மேலும், சில காலங்களில் குடியானவன் தன் நிலங்களைச் சாகுபடி செய்யாமல் விடவேண்டும். ஏனெனில், அப்போதுதான் பறவைகள் தம் விருப்பப்படி அவன் நிலங்களில் கூடுகட்டிப் பிரபுவிற்கு இன்ப மூட்டும். ஆனால், ஏழை உழவன் தன் பசியைத் தீர்த்துக்கொள் வதற்காகக் கூடப் பறவைகளையோ அல்லது விலங்குகளையோ வேட்டையாட முடியாது.

இத்தகைய அநீதிகளைத் தடுக்க அரசாங்கம் முயலவில்லை. அதற்கு மாறாக அரசாங்கமே அநீதியின் சின்னமாக இருந்தது. பிரெஞ்சு அரசரின் கொடுங்கோன்மை பதினைந்தாம் லூயியின் காலத்தில் உச்சநிலை யடைந்திருந்தது. பாமர மனிதனின் உயி ரையும் உடைமையையும் காக்க அரசாங்கம் முன்வரவில்லை. தன் உயிருக்கும் உடைமைக்கும் எப்போது என்ன தீங்கு நேருமோ என்ற அச்சம் அவனை நிழல்போல் எங்கும் தொடர்ந்தது. லெட்டர் டி கேஷெட் (Lettre de Cachet) என்ற ஆணையின்படி எந்த மனிதனும் விசாரணையின்றிச் சிறைப்படுத்தப்படலாம். மன்னன் தனக்கு வேண்டிய பிரபுக்கள் விரும்பியபோதெல்லாம் இந்த ஆணையைப் பிறப்பித்தான். இதனால் எண்ணிறந்த பாமர மக்கள் தாம் செய்த குற்றம் என்னவென்று அறியாமலே சிறைப் படுத்தப்பட்டனர்; பலர் சிறையிலே இறந்தும் போனார்கள்.

இவ்வாறு பிரபுக்களும் குருக்களும் அனுபவித்து வந்த சிறப் புரிமைகளும் பாமர மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளும் நாட்டின் வாணிகத்தையும் விவசாயத்தையும் தொழிலையும் பெரிதும் பாதித்தன. இதனல் பாமர மக்கள் ஏழைகளானர்கள். மக்கள் பசியும் பட்டினியுமாகத் துன்புற்றிருக்க, முதலிரண்டு வகுப்பினர் மட்டும் தம் ஆடம்பர வாழ்க்கையைச் சிறிதும் குறை வில்லாமல் நடத்தினர். மக்கள் தங்கள் இன்னல்களுக்கிடையிலும் வரிகளைச் செலுத்தி வரவேண்டியிருந்தது. இந்த வரிகளை அரசாங்கம் பிரபுக்கள் மூலமாகவே வசூலித்ததால், அவர்கள் இதிலும் இலாபம் அடைந்தார்கள். பிரெஞ்சு அரசாங்கமும், தனிச் சலுகைகளைப் பெற்ற முதலிரண்டு சமூக வகுப்புகளும் பாமர மக்க ளுக்கு இழைத்த கொடுமைகள் இவை போன்று பலவாகும். சுருங்கக்கூறின், பிரான்ஸில் பழைய ஆட்சியில் மனிதன் மனிதனுக்கக் கருதப்படவில்லை. அவனுடைய மனிதத் தன்மைக்கு எதிராகப் பல கொடுமைகள் செய்யப்பட்டன. வெகுகாலமாக இக்கொடுமை களைச் சகித்து வந்த பிரெஞ்சு மக்கள் தருணம் கிடைத்தபோது எரிமலையைப்போலப் பொங்கி யெழுந்து கொடுங்கோலரை அழித் தனர். இதுவே பிரெஞ்சுப் புரட்சியாகும்.

இங்கிலாந்தின் அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் கி. பி. 1783 ஆம் ஆண்டு தம் தாய் நாட்டை எதிர்த்துக் கண்ட வெற்றி ஐரோப்பிய மக்களின் கவனத்தைக் கவர்ந்ததென்றும், அதனல் வரம்பில்லா முடியாட்சிகள் நலிவுற்றனவென்றும் முந்திய இயலில் பார்த்தோம். 1776 ஆம் ஆண்டு முதல் 1783 ஆம் ஆண்டுவரை நடந்த இந்த அமெரிக்கச் சுதந்திரப் போரில் பிரான்ஸ் அமெரிக் கர்களின் சார்பில் போரிட்டது. இவ்வாறு போரிட்ட பிரெஞ்சு வீரர்கள் வெற்றிக்குப் பிறகு தாய்நாடு திரும்பியபோது குடி யாட்சிப் பற்றுடன் வந்தனர். சுதந்திரப் போரின் வெற்றிக்குப் பிறகு அமெரிக்காவில் நிறுவப்பட்ட குடியரசு வல்லரசர்களின் கொடுங்கோன்மைக் குட்பட்டிருந்த ஐரோப்பிய மக்களிடையே புதியதொரு நம்பிக்கையைத் தோற்றுவித்தது. ஐரோப்பாவிலும் அத்தகைய குடியரசுகள் நிறுவப்பட வேண்டுமென்ற பேராவல் பரவத் தொடங்கியது. இந்த ஆவல் முதல் முதலாக பிரான்ஸில் நல்ல கனிகளைக் கொடுத்தது.

நாம் இதுவரை கூறிய காரணங்களில் ஒன்றுகூடப் புரட்சி யானது ஏன் முதன் முதலாகப் பிரான்ஸில் தோன்றவேண்டு மென்று விளக்கவில்லை. மேற்கூறிய காரணங்கள் யாவும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் பொருந்தும். இந்த நாடுகள் யாவும் வல்லாட்சிகளைப் பெற்றிருந்தன. இவற்றிலும் சமூகத்தின் உயர் வகுப்புக்கள் தனிச் சலுகைகளைப் பெற்றிருந்தன. இந்நாடுகளில்

மூன்றும் வகுப்பினர் பிரெஞ்சு மூன்றும் வகுப்பினரைவிடப் பன் மடங்கு துன்புறுத்தப்பட்டனர். இங்கிலாந்திடம் அழுக்காறு கொண்டிருந்த ஸ்பெயின்போன்ற எல்லா ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்க உரிமைப் போரில் குடியேற்ற நாடுகளின் சார்பில் போரிட்டன. புதிய அமெரிக்கக் குடியாட்சியின் கோட்பாடுகள் பிரான்ஸில் மட்டுமின்றி, மற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் பரவின. இவ்வாறிருக்க, வல்லாட்சிக்கெதிராகத் தோன்றிய புரட்சி முதல் முதலாகப் பிரான்ஸில் ஏற்பட்டதேன்? இரண்டாவதாகப் புரட்சி பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் தோன்றிய காரணம் என்ன? "பழைய ஆட்சி" என்ற வல்லாட்சி பதினாறும் நூற்றாண்டிலிருந்தே நிலவி வந்தது. பதினான்காம் லூயியை விடப் பதினாறாம் லூயி அதிகக் கொடுமைகளைச் செய்யவில்லை. துன்புற்றிருந்த பாமர மக்கள் ஏன் இவ்வளவு காலம் காத்திருந்தும் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் புரட்சி செய்தனர்? இந்த வினாக்களுக்கு நாம் இதுவரை ஆராய்ந்த காரணங்கள் விடையளிப்பதில்லை. இவற்றிற்கு விடை காண விழையும் நாம் பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்ஸில் வாழ்ந்த சில தத்துவ அறிஞர்களும் எழுத்தாளர்களும் இக்காலத்தில் பரப்பிய கருத்துக்களை ஆராயவேண்டும். ஏனெனில், இவையே வல்லாட்சிகளின் பிற்போக்கான தன்மையையும், அதன் கொடுமைகளையும் மக்களுக்கு எடுத்துக்காட்டி, அவர்களின் சிந்தனையைக் கிளறின. மேலும், இவை முற்போக்கான சில புதுக் கொள்கைகளை மக்களுக்குப் புகட்டின. இந்தப் புதுக் கொள்கைகளே பிறகு அரசாங்கத்தின் அடிப்படைகளாக விளங்கின. எனவே, அரசாங்கத்தின் வரலாற்றில் இந்தப் பிரெஞ்சு அறிஞர்கள் பரப்பிய கொள்கைகள் சிறப்பிடம் பெறுகின்றன.

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரெஞ்சு மக்களின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பிப் புரட்சிக்கு வழிவகுத்த சீர்திருத்தவாதிகளில் மிகச் சிறப்பு வாய்ந்தவர்கள் மூவராவர். 1694 முதல் 1778 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த வால்ட்டேர் (Voltaire), 1689 முதல் 1755 வரை வாழ்ந்த மான்டெஸ்க்வே (Montesquieu), 1712 முதல் 1778 வரை வாழ்ந்த ரூஸோ (Rousseau) ஆகிய இவர்களே அம்மூன்று சீர்திருத்தவாதிகளாவர்.

இவர்கள் பொதுவாக வரம்பில்லா முடியாட்சியை எதிர்த்தனர். மக்களின் உரிமைகளின் சிறப்பைப் பறைசாற்றினர். ஐரோப்பாவின் இடைக்கால வரலாற்றை இகழ்ந்து, அதன் நிறுவனங்களையும் கோட்பாடுகளையும் தாக்கினர். குறிப்பாகப் போப்பின் ஆதிக்கத்தையும் திருச்சபையின் அதிகாரத்தையும் குற்றங் கூறினர். பேரரசு என்ற கருத்தையே வன்மையாகத் தாக்கினர்.

பண்டைய கிரேக்க, ரோமானியப் பண்பாடுகளைப் பெரிதும் விரும்பினர். ஆங்கில நாட்டு நிறுவனங்களும், நியூட்டன் (Newton) லாக் (Locke) போன்ற அறிஞர்களின் கொள்கைகளும் இவர்களைப் பெருமளவில் ஊக்குவித்தன.

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் நிலவி வந்த புதுக் கருத்துக்களைப் பிரான்ஸில் பரப்பியவர்களுள் தலைசிறந்தவர் வால்ட்டேர் என்னும் திறமைவாய்ந்த பிரெஞ்சு எழுத்தாளராவார். பிரெஞ்சு வல்லாட்சியின் கொடுமைகளை நன்கு அறிந்திருந்த அவர் 1726 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டுகள் இங்கிலாந்தில் வாழ்ந்தார். அங்கு மக்கள் பெற்றிருந்த உரிமைகளையும் பண்பாட்டையும் கண்டு வியந்தார். பேக்கன் (Bacon), லாக், நியூட்டன் போன்ற ஆங்கில அறிஞர்களின் நூற்களைப் பயின்றார். 1733 ஆம் ஆண்டு அவர் வெளியிட்ட நூலொன்றில் ஆங்கில வாழ்க்கையின் நற்பண்புகளைப் பிரெஞ்சு மக்களுக்கு எடுத்துக் கூறினர். குறிப்பாக ஆங்கில மக்கள் சீரியல் தொடர்புகளிலும், அரசியலிலும், சமய காரியங்களிலும் பெற்றிருந்த உரிமைகளைப் புகழ்ந்து கூறினர். "ஓர் ஆங்கிலேயன் இறைவனடி யடையும் பாதையைத் தானே தெரிந்தெடுக்கிறான். அநியாய வரிகள் இங்கிலாந்தில் இல்லை. பிரபுக்களும், குருக்களும் வரிச்சுமையிலிருந்து தப்புவதில்லை. குடியானவர்களும் வெள்ளை அப்பத்தை உண்ணுகின்றனர்; நல்ல உடை உடுத்துகின்றனர். தங்கள் சொத்து அதிகரித்தால் அதிக வரிகள் விதிக்கப்படுமே என்று அவர்கள் அச்சம் கொள்வதில்லை" என்று வால்ட்டேர் ஒரு நூலில் கூறியுள்ளார். இவையெல்லாம் பிரான்ஸில் மூன்றாம் வகுப்பினருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைச் சுட்டிக்காட்டின. நீதி, நேர்மை, சமத்துவம் ஆகியவற்றில் வால்ட்டேர் பேரார்வம் கொண்டிருந்தார். அக்காலச் சமயக் கோட்பாடுகளை அவர் எதிர்த்தார். இறைவனருளினால் வெளியிடப்பட்ட மதத்தில் (Revealed Religion) அவருக்கு நம்பிக்கையில்லை. மக்களுடைய நல்லெண்ணமே போதுமானதென்று அவர் கூறினர். இந்தப் புதுக் கொள்கைகளை அவர் தெளிவான, கருத்துச் செறிந்த விருவிருப்பான நடையில் பிரெஞ்சு மொழியில் வெளியிட்டார். எனவே, அவை பிரெஞ்சு மக்களின் சிந்தனைகளைப் பெரிதும் கவர்ந்தன.

மான்டெஸ்க்வே என்பவர் 1729 ஆம் ஆண்டிலிருந்து இரண்டாண்டுகள் இங்கிலாந்தில் வாழ்ந்தார். இவரும் வால்ட்டேரைப் போலவே ஆங்கிலேயரின் வாழ்க்கையைக் கண்டு வியப்படைந்தார். குறிப்பாக இங்கிலாந்தின் அரசியல் நிறுவனங்களை இவர் ஊன்றிக் கவனித்தார். ஆங்கில மக்கள் பெற்றிருந்த உரிமைகளுக்கு முதற் காரணம் இங்கிலாந்தில் நிலவிய அரசியல்

அமைப்பிற்குட்பட்ட அரசாங்கமே என்ற முடிவுக்கு வந்தார் எனவே, அவர் இத்தகைய அரசாங்கத்தின் தன்மையை ஆராய்ந்து தாம் கண்ட உண்மைகளை "சட்டங்களின் கருப்பொருள்" (The Spirit of Laws) என்ற புகழ் பெற்ற நூலின் வழியாக வெளியிட்டார். இந்த நூலில் மான்டெஸ்க்வே அதிகாரப் பிரிவினையே (Separation of Powers) ஆங்கில அரசாங்கத்தின் சிறப்பியல்பு என்று கூறுகிறார். அதாவது, இங்கிலாந்தில் சட்ட ஆக்கத்துறை, செயல்துறை, நீதித்துறை சார்ந்த மூன்று அதிகாரங்களும் ஒரே அதிகாரியின் கைகளில் குவிந்தில்லாமல், வெவ்வேறான மூன்று அதிகாரிகளிடம் இருக்கின்றன. மேற்கூறிய மூவகை அதிகாரங்களும் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வின்றிச் சம நிலையிலிருக்கின்றன. இதுவே ஆங்கில மக்கள் பெற்றிருக்கும் உரிமைகளின் இரகசியம் என்று மான்டெஸ்க்வே கருதுகிறார். அவருடைய இந்த முடிவு அவர் கண்ட ஆங்கில அரசாங்கத்திற்கோ அல்லது தற்கால ஆங்கில அரசாங்கத்திற்கோ பொருந்தாது. ஆயினும் அவர் எழுதிய நூலானது, ஐரோப்பிய அரசர்களின் ஒருமுகப்பட்ட (Centralised) அரசாங்கமே மக்களின் துன்பங்களுக்கு மூலகாரணம் என்ற எண்ணத்தைப் பரப்பியது. எனவே மான்டெஸ்க்வேயின் கொள்கைகளை ஐரோப்பிய மக்கள் முழு மனதுடன் வரவேற்றனர். முக்கியமாகப் பிரான்ஸில் அவை புதிய எண்ண அலைகளைத் தோற்றுவித்தன. இதன் விளைவாகப் பிரெஞ்சுப் புரட்சியின் போது தீட்டப்பட்ட அரசியலமைப்பில் அதிகாரப் பிரிவினை சிறப்பிடம் பெற்றது. மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமானால் அரசனின் அதிகாரம் கட்டுப்படுத்தப்படவேண்டுமென்ற உண்மை பிரெஞ்சு மக்களின் எண்ணங்களில் வேரூன்றியது.

பிரெஞ்சுப் புரட்சியைப் பொறுத்தவரையில் வால்ட்டேர், மான்டெஸ்க்வே ஆகிய இவ்விருவரின் கருத்துக்களைவிட ரூஸோவின் கருத்துக்கள் முக்கியமானவை. அவர் மற்ற இருவரைப் போலத் தத்துவ அறிஞரோ, பருப்பொருள்வாதியோ (Materialist) அல்லர். ஆனால் அவர் உணர்ச்சி வேகம் மிக்கவர். அவரின் கொள்கைகளுக்கும் பிரெஞ்சுப் புரட்சிக்கும் நேரிடையான தொடர்பு இருந்தது. இக்கொள்கைகள் அவர் எழுதிய "சமூதாய ஒப்பந்தம்" (The Social Contract) என்ற அரிய நூலில் காணப்படுகின்றன. 1762 ஆம் ஆண்டு வெளிப்பட்ட இந்த நூல் படிப்போரின் சிந்தனைகளுக்கு உயிரூட்டும் வகையில் ஆணித்தரமான நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. ரூஸோவின் எண்ணத்தீ இதுவரை இருள் சூழ்ந்திருந்த பிரெஞ்சு நாட்டிற்கே புத்தொளி யளித்ததென்று ஃபிஷர் (H. A. L. Fisher) என்ற

வரலாற்று அறிஞர் கூறுகிறார். ரூஸோ தம் நூலின் வாயிலாக உலகுக் கறிவித்த கொள்கைகளை இப்போது ஆராய்வோம்.

வால்ட்டேரைப் போலவே ரூஸோவும் அவர் காலத்தில் நிலவி யிருந்த சமூக, அரசியல் நிறுவனங்களையும் கோட்பாடுகளையும் வெறுத்தார். அவை மக்களை அடிமைப்படுத்தி யிருப்பதை அவர் கண்டார். "மனிதன் உரிமையுடன் பிறக்கிறான். ஆனால், எங்கும் அவன் கட்டுண்டு கிடக்கிறான். இழந்த உரிமைகளை அவன் மீண்டும் பெற வழி என்ன?" இதுவே ரூஸோ தமது நூலில் எழுப்பும் வினா. இந்த வினாவிற்கு அவர் அளிக்கும் விடை மிகச் சிக்கலானது. அவர் கொள்கைகள் எல்லாவற்றினையும் சேர்த்துப் பார்க்கும்போது, அவருடைய விடை நமக்கு வியப்பைத் தருகிறது. அவர் மனிதன் தன் உரிமைகளைப் பெறத் தான் முன்னிருந்த இயற்கை நிலைக்கே (State of Nature) திரும்பிச் செல்லவேண்டு மென்றார். ஆனால் அவருடைய "சமுதாய ஒப்பந்தம்" என்ற நூலை மட்டும் நோக்குங்கால் இது இயலாதென்பதை அவரே கண்டுணர்ந்தார் என்பது நன்கு விளங்குகிறது. ஏனெனில், இந் நூலில் அவர் அரசும், அரசாங்கமும் விரும்பத்தக்கவையல்ல வென்றும், ஆயினும் அவை நிலைபெற்று விட்டதால், அவற்றினால் மனிதனின் உரிமைகள் பறிக்கப்படாமல் இருக்க அவற்றின் தன் மையை நாம் உணரவேண்டும் என்றும் கூறுகிறார். எனவே, அவர் தமது "சமுதாய ஒப்பந்தம்" என்ற நூலில் அரசு, அரசாங்கம் ஆகிய இவற்றின் தன்மையை ஆராய்கிறார்.

ரூஸோவின் கருத்துப்படி அரசானது ஒரு சமுதாய ஒப்பந்தத் தினால் தோன்றியது. இந்த ஒப்பந்தப்படி ஒவ்வொரு மனிதனும் தன் உரிமைகளையும் தன்னையும் சமுதாயத்திடம் ஒப்படைக்கிறான். இவ்வித ஒப்பந்தத்தினால் உருப்பெறும் சமூகத்தில் அதன் உறுப் பினர்கள் இயற்கை நிலையில் தனித்தனியே பெற்றிருந்த அதிகாரங் களும் உரிமைகளும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு தோன்றிய சமூகம், அதன் செயல்கள் எல்லாம் பொதுநல விருப் பத்தினால் (The General Will) இயங்குகின்றன. இந்தப் பொது நல விருப்பமானது ஒருவரின் விருப்பமோ அல்லது பெரும்பா லோரின் விருப்பமோ அல்லது எல்லோரின் விருப்பமோ (Will of All) அல்ல. அது சமுதாய ஒப்பந்தத்தினால் உயிர் பெற்று இயங்கும் சமூகத்தின் பொதுநல விருப்பமாகும். அதா வது, அது எல்லோருடைய நலனையும் (Interest) அடிப்படையாகக் கொண்ட விருப்பமாகும். எனவே, இத்தகைய பொதுநல விருப்பமே சமூகத்தை ஊக்குவிக்கும் சக்தி வாய்ந்ததாகும். அதுவே சமூகத்தில் இறைமை எனும் தனி அதிகாரம் பெற்றது மாகும். இவ்வாறாக ஒரு சமுதாய ஒப்பந்தத்தினால் நிறுவப்பட்டுப்

பொதுநல விருப்பத்தின் துணை கொண்டு இயங்கும் சமூகமே அரசாகும்.

மக்களின் உரிமை, சமத்துவம், இறைமை ஆகிய மூன்றும் அரசின் முக்கிய குணங்களாகும். ரூஸோ விவரிக்கும் சமுதாய ஒப்பந்தத்தின் பயனாக எழுந்த அரசில் தனிமனிதனுடைய உரிமைகள் பறிபோனதுபோலத் தோன்றினாலும் உண்மையில் அவன் தன் உரிமைகளை இழப்பதில்லை. ஏனெனில், அவன் தனி உரிமைகளை வேறெரு மனிதனிடமோ, அரசாங்கத்திடமோ ஒப்படைப்பதில்லை. ஆனால், அவற்றைச் சமுதாயத்திடம் ஒப்புவிக்கிறான். அச் சமுதாயத்தின் உறுப்பினன் என்ற முறையில் அவன் அதனிடம் கொடுத்த உரிமைகளை மீண்டும் பெறுகிறான். எனவே, சமுதாய ஒப்பந்தத்தினால் அவன் உரிமைகள் அதிகரிக்கின்றனவே யன்றிக் குறைவதில்லை. மேலும், அவன் உரிமைகள் இப்போது சமூகத்தின் பொதுநல விருப்பத்தினால் காக்கப்படுகின்றன.

இரண்டாவதாக, ரூஸோவின் கருத்துப்படி மக்களிடையே சமத்துவம் நிலைபெற்றிருக்கிறது. ஏனெனில், சமுதாய ஒப்பந்தத்தின்படி எல்லோரும் தம் உரிமைகளனைத்தையும் சமூகத்திடம் ஒப்படைக்கின்றனர். எனவே, இயற்கை நிலையில் இருந்த ஏற்றத் தாழ்வுகள் சமுதாய ஒப்பந்தத்திற்குப் பிறகு மறைந்து, மக்களிடையே சமநிலை ஏற்படுகிறது. மேலும் எல்லோரும் பொதுநல விருப்பத்தின் அதிகாரத்திற்குட்பட்டவர்கள் என்ற முறையிலும் சமத்துவம் நிலவுகிறது.

மூன்றாவதாக, ரூஸோவின் அரசு மக்களின் இறைமையை (Sovereignty of the People) அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. சமுதாய ஒப்பந்தத்தினால் மக்களின் உரிமைகளெல்லாம் சமூகத்தின் உடைமைகளாகின்றன. எனவே, சமூகம் வரம்பற்ற அதிகாரம் பெற்றுள்ளது. அதாவது, சமூகம் அல்லது மக்கள் இறைமையின் இருப்பிடம் என ரூஸோ எண்ணுகிறார். இவ்வாறு சமுதாய ஒப்பந்தத்தினால் மக்கள் பெற்ற இறைமை பொதுநல விருப்பத்தின் வாயிலாக இயங்குகிறது. தனிமனிதனின் விருப்பம் எவ்வாறு அவனுடைய நலனை அடிப்படையாகக் கொண்டுள்ளதோ, அதே போலப் பொதுநல விருப்பம் பொது நலனை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எனவே, பொதுநல விருப்பம் தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் நல்ல வழிகாட்டியாகும். அது ஒருபோதும் தவறுகாது.

மேற்கூறிய மூன்று குணங்களையும் பெற்ற அரசில் அரசாங்கம் என்பது பொதுநல விருப்பத்தைச் செயல்படுத்தும் கருவியே யன்றி வேறல்ல. அது இயல்பான உரிமைகளையோ அதிகாரங்களையோ பெறவில்லை. மக்களின் பொது நலனை எதிரொலிக்கும்

பொதுநல விருப்பத்தை நிறைவேற்றுவதே அதன் கடமையாகும். எனவே, அரசாங்கத்தின் உறுப்பினர்களோ மக்களே நியமிக்கின்றனர். அது ஒருவனோ, சிலரையோ, பலரையோ உறுப்பினராகக் கொண்டிருக்கலாம். ஆனால், அதன் ஒரே பணி செயல் துறைப் பணியாகும். சட்டமியற்றுதல் பொதுநல விருப்பத்தின் வேலை; அதாவது மக்களின் அலுவல். அச்சட்டங்களைப் பொதுநல விருப்பத்தின்படி, அதாவது மக்களின் ஆணையின்படி, செயல்படுத்துதல் அரசாங்கத்தின் பணியாகும். எனவே, ரூஸோவின் கருத்துப்படி அதிகாரங்கள் யாவும் மக்களிடமிருந்து பிறக்கின்றன. அரசின் நிறுவனங்கள் அனைத்தும் இந்த அதிகாரங்களுக்கு உட்பட்டவை. ரூஸோவின் இந்த மக்களாட்சிக் கொள்கையே பிரெஞ்சு மக்களை வீறுகொண்டு எழச் செய்தது. வால்ட்டேரும், மான்டெஸ்க்வேயும் மக்களாட்சியை விரும்பினரென்று கூறுவதற்கில்லை. அவர்கள் விரும்பியது நன்மை பயக்கும் அல்லது வரம்பிற்குட்பட்ட முடியாட்சியே. ஆனால், ரூஸோ இறைமை மக்களிடமின்றி வேறு யாரிடமிருந்தாலும் தனிமனிதனின் உரிமையும், சமத்துவமும், நலனும் பாதுகாக்கப்படாதென்கிறார். சுருங்கக் கூறின் 'போலிஸ்'' (Polis) எனப்பட்ட பண்டைய நகர அரசுகள் நலிவடைந்த பிறகு, தற்காலத்தில் முதல் முதலாக அரசியலில் சமுதாயத்தின் அல்லது மக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர் ரூஸோதான் என்று கூறினால் மிகையாகாது. அவர் மக்களுக்குப் புத்துயிரளித்தார். இவ்வாறு புத்துயிர் பெற்ற பிரெஞ்சு மக்கள் தம்மை இதுவரை அடக்கி யாண்ட அதிகாரிகளை அழித்துத் தமக்கே உரிய இறைமையைக் கைப்பற்றினர் இப் பெரும் நிகழ்ச்சியைத்தான் வரலாற்று அறிஞர்கள் பிரெஞ்சுப் புரட்சியென்றழைக்கின்றனர்.

புரட்சியின் விளைவுகள்

பிரெஞ்சுப் புரட்சியின் வரலாற்றை இச்சிறு நூலில் எடுத்துரைக்க இயலாது. ஆனால், அரசாங்கத்தின் வரலாற்றைப் பொறுத்தவரையில் அப்புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளைமட்டும் இங்குக் கூறுவோம். மேலே கூறியதுபோல பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு மக்களாட்சி வேரூன்றித் தளிர்க்கத் தொடங்கியது. சில நாடுகளில் முடியாட்சிபோன்ற பழைய நிறுவனங்கள் அடியோடு மறையவில்லை யென்றாலும், அவற்றில் அடிப்படையான மாற்றங்கள் தோன்றின. பழைய நிறுவனங்களும், அதிகாரங்களும் மக்களின் இசைவுபெற்று இயங்கலாயின. மேலாண்மை நசுக்கப்பட்டு, அது அமர்ந்திருந்த அரியணையில் மக்களின் உரிமைகள் இடம் பெற்றன. உரிமையென்ற முரசொலி எங்கும் ஒலிக்கத் தொடங்கியது. முற்போக்குக் கொள்கை (Liberalism) இப்புதிய

சகாப்தத்தின் அடிப்படையாக அமைந்தது. அரசியலில் மட்டுமின்றி, கலை, இலக்கியம் முதலிய எல்லாத்துறைகளிலும் மேலாண்மையையும் அதன் மரபுகளையும் எதிர்த்து ஓர் இயக்கம் தொடங்கியது.

இரண்டாவதாக, பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாகத் தேசிய உணர்ச்சி ஊக்கம் பெற்றது. மொழி வளர்ச்சி, சமய ஒற்றுமை முதலிய காரணங்களினால் ஏற்கெனவே ஒன்றுபட்டிருந்த ஐரோப்பிய நாடுகளில் பிரெஞ்சுப் புரட்சி தேசிய உணர்ச்சியைத் தூண்டிவிட்டது. புரட்சியின் பயனாகச் சிறப்பெய்திய தனிமனிதனின் உரிமைகளில் ஒன்று அவன் தன் அரசாங்கத்தைத் தானே தெரிந்தெடுக்கும் உரிமையாகும். அஃதாவது, அவன் வேற்று நாட்டாரின் அரசாங்கத்திற்கு அடங்கியிருப்பது அடிமைத்தனம் என்று கருதப்பட்டது. எனவே, மொழி அல்லது சமய அடிப்படையில் ஒன்றுபட்டிருந்த ஐரோப்பியத் தேசிய இனங்கள் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு உரிமை பெற விழைந்தன. தேசிய உரிமை (National Freedom) பெற்றாலன்றி ஒரு நாட்டு மக்கள் தம் மற்ற உரிமைகளைப் பெறமுடியாது என்ற கருத்தைப் பிரெஞ்சுப் புரட்சி பரப்பியது. மேலும், இறைமை மக்களின் உடைமை என்ற கருத்தும் தேசிய உணர்ச்சியைப் பலப்படுத்தியது. எனவே, ஆஸ்ட்ரியா, துருக்கி ஆகிய இவ்விரு ஏகாதிபத்திய அரசுகளின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை யடையும் பொருட்டு ஜெர்மனி, இத்தாலி, தென்கிழக்கு ஐரோப்பா, பால்கன் தீபகற்பம் ஆகிய பகுதிகளில் போராட்டங்கள் தோன்றின. இவற்றை நாம் முன்னேர் இயலில் பார்த்தோம். (''தேசிய அரசுகளின் எழுச்சி'' என்ற இயலைப் பார்க்கவும்.)

பிரெஞ்சுப் புரட்சியினால் ஏற்பட்ட இன்னொரு முக்கிய விளைவு சமத்துவம்பெறும் குறிக்கோளாகும். அது ரூஸோ என்பவரின் தத்துவத்தில் எவ்வாறு புதைந்து கிடக்கிறதென்று ஏற்கெனவே பார்த்தோம். 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் சமத்துவமும், சகோதரத்துவமும் சிறப்பிடம் பெற்றன. அஃதாவது, இடைக்காலத்திலும், ''பழைய அரசிலும்'' சமூகத்தை மூன்று வகுப்புகளாகப் பிரித்திருந்த ஏற்றத்தாழ்வுகள் முற்றிலும் மறைந்தன. முதலிரண்டு வகுப்புகள் பெற்றிருந்த சிறப்புரிமைகள் நீக்கப்பட்டன. ஒவ்வொரு நாட்டிலும் மக்களனைவரும் சட்டத்தின் முன்னால் சமமாகக் கருதப்பட்டனர். பிறப்பு அல்லது சமூகநிலை காரணமாக எவருக்கும் தனிச் சலுகைகள் வழங்கப் பெறவில்லை. ''மனிதரெல்லாம் பிறப்பிலும் வாழ்விலும் தம் உரிமைகளைப் பொறுத்தவரையில் சம நிலையிலிருக்கின்றனர்'' என்பது பிரெஞ்சுப் புரட்சியின் பயனாகத்தோன்றிய அடிப்படைக் கருத்தாகும். இக்

கருத்தே 19 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட அரசியலமைப்புக் களுக்கெல்லாம் ஆதாரமாகத் திகழ்ந்தது. சுருங்கக்கூறின், மனிதனின் மனிதத்தன்மையானது சமூகம், அரசு ஆகிய இவற்றின் அடிப்படைகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு பிரெஞ்சுப் புரட்சியின் பயனாகத் தோன்றிய உரிமை, சமத்துவம், சகோதரத்துவம், மக்களின் இறைமை என்ற கருத்துக்கள் 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் எவ்வாறு வளர்ந்தன, இந்த வளர்ச்சியினால் அரசியலில் தோன்றிய மாற்றங்கள் யாவை என்பனவற்றைப் பற்றி அடுத்த இயலில் விரிவாகப் பார்ப்போம். இந்த இயலில் புரட்சியினால் பிரான்ஸின் அரசியலில் உடனடியாக ஏற்பட்ட மாறுதல்கள் என்னவென்று கவனிப்போம்.

கி. பி. 1789 ஆம் ஆண்டு பதினாறாம் லூயி மன்னர் நாட்டில் ஏற்பட்டிருந்த நிதி நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு, 1614 ஆம் ஆண்டிலிருந்து கூட்டப்படாத எஸ்டேட்ஸ் ஜெனரலைக் கூட்டினார். மரபு முறைப்படி மூன்று சமூக வகுப்புகளின் பிரதி நிதிகளும் தனித்தனியே அமர்ந்து செயல்படுவர் என்று அரசர் எதிர்பார்த்தார். ஆனால், மூன்றாம் வகுப்பின் பிரதிநிதிகள் எஸ் டேட்ஸ் ஜெனரலின் மூன்று கூறுகளும் ஒரே மன்றமாக அமர வேண்டுமென்றனர். இதற்கு மன்னர் இணங்கவில்லையாதலின், 1789 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் பதினேழாம் நாள் மூன்றாம் வகுப்பின் பிரதிநிதிகள் தேசிய மன்றம் (National Assembly) என்ற பெயருடைய ஒரு பாராளுமன்றத்தை ஏற்படுத்திக் கொண் டனர். இந்த மன்றத்தில் உயர் குருக்களைத் தவிர மற்ற எல்லாச் சமயக் குருக்களும், பிற்போக்கடைந்த சில பிரபுக்களும் உறுப் பினராயினர். ஜூன் திங்கள் இருபதாம் நாள் தேசிய மன்றத்தின் உறுப்பினர்கள் நாட்டின் அரசாங்கத்தை மாற்றியமைக்கும் நோக் குடன் ஓர் அரசியலமைப்பைத் தீட்டுவதெனத் தீர்மானித்தனர். மேலும், வரிவிதித்தல்போன்ற அதிகாரங்கள் தேசிய மன்றத்திற்கே கொடுக்கப்படவேண்டுமென்றும் கூறினர். மன்னர் இதற்கு இணங்காமல் சமூகப் பிரிவுகளின் பிரதிநிதிகள் தனித்தனியே அமர வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார். ஆனால், தேசிய மன்றம் இந்த ஆணையை ஏற்க மறுக்கவே, மன்னர் வேறுவழி யின்றித் தேசிய மன்றம் சட்ட பூர்வமானதென்று ஏற்றுக் கொண் டார். இது பிரெஞ்சு அரசாங்கத்தில் அடிப்படையான மாற்றங் களை ஏற்படுத்தியது. மக்களின் நலனை எதிரொலிக்கும் தேசிய மன்றம் சட்டபூர்வமானதென்று ஏற்றுக்கொள்ளப்பட்டது மக்க ளின் இறைமையை ஏற்றுக் கொண்டதற்குச் சமமாகும். ஆகவே அரசனும், அவனைச் சூழ்ந்திருந்த பிரபுக்களும், உயர் குருக்களும்

தாம் பெற்றிருந்த வரம்பற்ற அதிகாரங்களை இழந்தனர். அதாவது, தேசிய மன்றத்தின் எழுச்சியினால் வரம்பில்லா முடியாட்சி அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சியாக மாறிற்று. இரண்டாவதாக, அரசாங்கம் மக்களின் இறைமையின் கருவி என்ற கருத்தும் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏனெனில், தேசிய மன்றத்தின் உறுப்பினர்கள் மக்களிடமிருந்து அரசாங்க உரிமைபெற்று, மக்கள்சார்பில் மக்களுடைய நலனுக்காக அரசாங்கத்தை நடத்துவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களெனக் கருதப்பட்டது. எனவே, தேசிய மன்றம் மக்களிடமிருந்து உரிமை பெறுத அதிகாரிகளின் செயல்களைக் கட்டுப்படுத்த முற்பட்டது. இவ்வாறு மக்களின் பிரதிநிதிகளால் கட்டுப்படுத்தப்பட்ட அரசனும் தேசிய மன்றமும் பொதுநல விருப்பத்தின் இறைமைக்கு உட்பட்ட கருவிகள் என்ற கருத்துத் தோன்றியது. மூன்றுவதாக, தேசிய மன்றத்தின் தோற்றம் மக்களுடைய சமத்துவத்தை நிலைநாட்டியது. பிரெஞ்சு நாட்டின் பிரதிநிதித்துவ மன்றம் ஏற்றத்தாழ்வுள்ள மூன்று கூறுகளாக இருந்த நிலைமாறி ஒரே மன்றமாயிற்று. இந்த மன்றத்தில் மக்களின் இசைவுபெற்ற எல்லோரும் வகுப்பு வேற்பாடின்றி உறுப்பினராயினர். இத்தகைய அடிப்படையில் அமைந்திருந்த தேசிய மன்றமானது நாட்டின் அரசியலமைப்பை மாற்றியமைத்தல், வரிவிதித்தல், மன்னனின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துதல் போன்ற அதிகாரங்களைச் செலுத்தி வந்ததால், இம்மன்றத்தின் தோற்றம் பிரெஞ்சு மக்களிடையே அரசியல் சமத்துவத்தை (Political Equality) ஏற்படுத்தியதென்று கூறலாம்.

இந்தச் சமத்துவம் நாளடைவில் சமூகத் துறையிலும் பரவத் தொடங்கியது. உதாரணமாக, 1789ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் நான்காம் நாளன்று, ''பழைய ஆட்சியில்'' தனிச் சலுகைகள் பெற்றிருந்த பிரபுக்களும், குருக்களும், மாநிலங்களும், நகராட்சிகளும் தாம் பெற்றிருந்த தனிச் சலுகைகளையும் உரிமைகளையும் இழந்தன. மக்களை அழுத்திய பலவான வரிகள் நீக்கப்பட்டன. வேட்டையாடுவதில் பிரபுக்களுக்குச் சிறப்புரிமைகளளித்த சட்டங்கள் அழிக்கப்பட்டன. வரிவிதிப்பதிலும், பொதுப் பணித் துறையிலும் சமத்துவம் நிலைநாட்டப்பட்டது. திருச்சபையின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அதன் நிறுவனங்கள் யாவும் அரசாங்கத்தின் அதிகாரத்திற் குட்படுத்தப்பட்டன. நாடு எண்பத்து மூன்று புதிய மாவட்டங்களாகப் (Departments) பிரிக்கப்பட்டது. இவ்வாறு 1789ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களிலிருந்து 1791ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரை பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. இவை எல்லாவற்றிற்கும் மக்களின் இறைமையே அடிப்படையாக இருந்தது. மன்னர்

ட்யூலெரி (Tuileries)யில் சிறைப்படுத்தப்பட்டார். அவருடைய குடிகளாயிருந்த மக்கள் உரிமை பெற்ற குடிகளாயினர். பிரெஞ்சு மக்கள் உரிமை, சமத்துவம் ஆகிய இவற்றினால் பிணைக்கப்பட்ட ஒரு சகோதரக் கூட்டாகத் (Confraternity) திகழ்ந்தனர். அவர்களின் பொதுநல விருப்பத்தைத் தேசிய மன்றம் எடுத்துரைத்துச் செயல்படுத்தியது. அதன் ஆணையை எதிர்க்கும் ஆற்றல் எவரும் பெறவில்லை. மாநிலங்கள், நகராட்சிகள், சமூக வகுப்புக்கள், வாணிகச் சங்கங்கள், கூட்டுக் கழகங்கள் (Corporation) போன்ற அமைப்புகள் நிலைபெற்றிருந்தன வெனினும், அவை யாவும் மக்களுக்கு அல்லது சமூகத்திற்குக் கீழ்ப்பட்டவையே என்ற கருத்துத் தோன்றியது. சமூகம் என்பது கூறுபடுத்த முடியாத ஓர் அமைப்பாகையால், அதன் உறுப்புக்களின் உரிமைகள் முழுச் சமூகத்தின் இறைமையினின்று எழுந்தவை என்றும், நாட்டின் ஒவ்வொரு மனிதனுக்கும் இச்சமூகத்தின் உறுப்பினன் என்ற முறையில் அதன் இறைமையில் சமபங்கு உண்டு என்றும் கருதப்பட்டது.

மேற்கூறிய கோட்பாடுகளும், மாற்றங்களும் தேசிய மன்றத்தினால் தீட்டப்பட்ட "மனிதனின் உரிமைகளின் அறிக்கை" (Declaration of the Rights of Man) என்ற ஆவணத்திற்கும் (Document), 1791 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசியலமைப்பிற்கும் அடிப்படையாக இருந்தன.

"மனிதனின் உரிமைகளின் அறிக்கை" புரட்சியின் அடிப்படைக் கொள்கைகளை வெளியிட்டது. மேலும், அது ரூஸோவின் "சமுதாய ஒப்பந்தம்" என்ற நூலில் காணப்பட்ட கருத்துக்களை அப்படியே எதிரொலித்தது. இதன்படி மக்களெல்லாம் உரிமையுடன் பிறக்கின்றனர்; உரிமையுடன் வாழ்கின்றனர்; சமத்துவம் அவர்களுடைய பிறப்புரிமையாகும்; நாட்டின் இறைமை மக்களின் உடைமையாகும்; சட்டம் பொதுநல விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆகவே, சட்டமியற்றுவதில் எல்லா மக்களுக்கும் சம உரிமையுண்டு. சட்டத்தின்முன் எல்லாரும் சமம். சட்டத்தை மீறிய காரணத்தைத் தவிர வேறெந்தக் காரணத்தை முன்னிட்டும் தனிமனிதனைச் சிறைப்படுத்துவதோ அல்லது தண்டித்தலோ கூடாது; மனிதனின் உரிமைகள் சட்டபூர்வமான காரணங்களுக்காக மட்டும் குறைக்கப்படலாம். பேச்சுரிமை, எழுத்துரிமை, மதஉரிமை முதலியவை மனிதனின் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாதவை யாகும்.

தேசிய மன்றம் உருவாக்கிய அரசியலமைப்பு 1791 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இதன் பிறகு தேசிய மன்றம் செப்டம்பர்த் திங்கள் பதினான்காம் நாள் மன்னரின் இசைவு பெற்றுக் கலைக்கப்பட்டது. புதிய அரசியலமைப்பு பிரெஞ்சு ஆட்சியை

அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சியாக மாற்றியது. இதன்படி ஒரு சட்ட மன்றம் ஏற்படுத்தப்பட்டது. தேசீய நிறுவனமாகிய இம்மன்றம் இரண்டாண்டுகளுக் கொருமுறை தேர்தல் மூலம் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. பழைய அரசியல் பிரிவுகள் அனைத்தும் அழிக்கப்பட்டு நாடு எண்பத்து மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. நாட்டின் அரசிய லதிகாரத்தைத் தேசீயச் சட்ட மன்றமும் நாற்பதாயிரம் நகராட்சிகளும் பெற்றன; இந்த அரசியலமைப்பை நாம் மேலும் ஆராயவேண்டியதில்லை. ஏனெனில், அது விரைவில் அழிந்து, பிறகு பயங்கர ஆட்சியும், நெப்போலியனுடைய அதிகாரங் குவிந்த வல்லாட்சியும் தோன்றின. 1792ஆம் ஆண்டு செப் டம்பர்த் திங்களில் மன்னர் அரியணையிலிருந்து நீக்கப்பட்டுப் பிரான்ஸ் நாடு ஒரு குடியரசாக மாற்றப்பட்டது. அடுத்த ஆண்டு ஜனவரித் திங்களில் மன்னர் தூக்கிலடப்பட்டார். மார்ச் திங்களில் புரட்சி மன்றமும் (Revolutionary Tribunal), ஏப்ரல் திங்களில் பொதுப் பாதுகாப்புக் குழுவும் (Committee of Public Safety) ஏற்படுத்தப்பட்டன. இவை "பயங்கர ஆட்சியின்" (Reign of Terror) கருவிகளாகும். இந்த ஆட்சியின் போது எண்ணிறந்த மக்கள் உரிமையின் பெயரால் கொல்லப்பட்டனர். இறுதியாகப் பொதுப் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்களிடையே தோன் றிய கருத்து வேற்றுமைகளின் காரணமாகப் பல சிக்கல்கள் ஏற்பட்டு, குழுவின் முக்கிய உறுப்பினரான ரோபெஸ்பியர் என்பவர் கொல்லப்பட்டார். இதன் பிறகு பயங்கர ஆட்சி முடிவடைந்தது.

இந்த நிகழ்ச்சிகள் யாவும் நெப்போலியனின் எழுச்சிக்கு வழி வகுத்தன. என்றாலும் அவை நாளடைவில் ஐரோப்பிய மக்களின் உள்ளங்களில் உரிமை, சமத்துவம், மக்களின் இறைமை என்ற மக்களாட்சிக் கொள்கைகளை ஆழப் பதியவைத்தன. புரட்சிக் காலத்தில் நிலையான அரசியலமைப்புத் தோன்றுததற்குக் காரணம் உறுதியான செயல் துறை அதிகாரம் அமைக்கப்படாமல், எல்லா வற்றையும் சட்டமன்றமே செய்யத் துணிந்ததுதான். அக்காலத் தில் செயலாற்றிய சட்டமன்றங்களி லெல்லாம் முரண்பாடுள்ள பல சிறு பிரிவுகள் இருந்தன. எனவே, அவை நடைமுறையில் வெற்றிகரமாக அரசாங்கத்தை நடத்த இயலவில்லை. ஆகவே படைப்பலம் கொண்டு சிலர் அதிகாரத்தைக் கைப்பற்றிச் சட்ட மன்றத்தைக் கைப்பொம்மையாக ஆட்டி வைத்தனர். ஆனால் அவர்கள் தமது வலிமையை இழந்தபோது, மீண்டும் குழப்பங்கள் தோன்றின. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றமும், உறுதியான செயல்துறை அதிகாரமும் ஒருங்கே இணைந்து,

ஒன்றையொன்று ஆதரித்து ஆட்சி செலுத்தத் தொடங்கியபோது தான், பிரெஞ்சு அரசாங்கம் உண்மையான மக்களாட்சியானது. இந்த நிலை நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பிறகே சிறிது சிறிதாக ஏற்பட்டது. ஆனால், இன்றுவரை பிரெஞ்சு ஆட்சியில் உறுதிநிலை ஏற்பட்டிருக்கிறதா வென்று திட்டமாகக் கூறமுடியாது. ஏனெனில் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு அரசியலமைப்புகள் அடிக்கடி மாற்றப்பட்டன. இந்த மாற்றங்களைப் பற்றியும் பிரெஞ்சுப் புரட்சியினால் மற்ற ஐரோப்பிய நாடுகளில் எவ்வாறு மக்களாட்சி பரவி நிலைபெற்றது என்பதைப் பற்றியும் அடுத்த இயலில் படிப்போம்.

---

4. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மக்களாட்சியின் வளர்ச்சி

பிரெஞ்சுப் புரட்சிக்கும் முதல் உலகப் போருக்கும் இடைப்பட்ட காலத்தை மக்களாட்சிக் காலம் என்று கூறலாம். இக் காலத்தை நாம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதற்பகுதி பிரெஞ்சுப் புரட்சியிலிருந்து கி. பி. 1848ஆம் ஆண்டு வரையுள்ள காலமாகும். இரண்டாம் பகுதி கி. பி. 1848ஆம் ஆண்டிலிருந்து முதல் உலகப்போரின் தொடக்கம் வரையுள்ள காலமாகும். முதல் கூறிய காலத்தில் ஐரோப்பாவில் மக்களாட்சியானது வல்லாட்சியை எதிர்த்துப் போராட்டங்கள் நடத்தியது. இப் போராட்டங்களில் அது சில சமயங்களில் வெற்றியும் சிலசமயங்களில் தோல்வியும் கண்டது. வெற்றியும் தோல்வியும் இவ்வாறு மாறிமாறி ஏற்பட்ட போதிலும், பொதுவாகப் பார்க்கும்போது மக்களாட்சி முன்னேற்றமடைந்தது என்று கூறலாம். ஆனால், அது இக்காலத்தில் நெப்போலியனுடைய ஆதிக்கம், வியன்னைத் திட்டத்தினால் ஏற்பட்ட விளைவுகள், பிற்போக்காளர்களின் (Reactionaries) பிடிவாதம் போன்ற இடையூறுகளை எதிர்த்து நிற்கவேண்டியிருந்தது. ஆகையால், 1848ஆம் ஆண்டுவரை மக்களாட்சி சிறிது சிறிதாகவே முன்னேற முடிந்தது.

1848ஆம் ஆண்டிற்குப் பிறகு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் மக்களாட்சி எதிர்ப்பின்றி விரைந்து வளர்ந்தது. முதல் உலகப் போரின் தொடக்கத்தின் போது அது தடையேதுமின்றி வளர்ந்து உச்ச நிலையை அடைந்திருந்தது.

முதற்காலம் (1789—1848)

1789ஆம் ஆண்டு முதல் 1815ஆம் ஆண்டுவரை பிரான்ஸ் நாடு ஐரோப்பிய வரலாற்றில் நடுவிடத்தைப் பெற்றிருந்தது.

இக்காலத்தில் மக்களாட்சியின் பெயரால் புரட்சியின் தலைவர்கள் பல மாற்றங்களைச் செய்தனர். எனினும் நாம் முந்திய இயலில் குறிப்பிட்டதுபோல மக்களாட்சியும் தனிமனிதனின் உரிமைகளும் நடைமுறையில் நிலைநாட்டப்படவில்லை. இதனால் அதிருப்தி அடைந்த மக்கள் புரட்சித் தலைவர்களை ஏற்க மறுத்து நெப்போலியனைப் பின் தொடர்ந்தனர். 1815ஆம் ஆண்டுவரை நீடித்த நெப்போலியனுடைய ஆட்சி மக்களாட்சிக்கு முற்றிலும் புறம்பானதாயிருந்தது. 1815ஆம் ஆண்டு நெப்போலியனது ஆதிக்கம் குலைந்த பிறகு மக்களாட்சி நிறுவப்பட்டிருக்கலாம். ஆனால் வியன்னைத் திட்டத்தை உருவாக்கிய மெட்டர்நிக் (Metternich) போன்ற தலைவர்கள் மக்களாட்சியில் பற்றுடையவர்களல்லர். அவர்களுடைய திட்டத்தின் விளைவாக ஐரோப்பிய நாடுகளில் பழைய முடியாட்சிகள் புத்துயிர் பெற்றன. ஆகவே 1815ஆம் ஆண்டில் மக்களாட்சி முற்றிலும் நலிவடைந்ததுபோல் தோன்றியது. ஆனால், பிரெஞ்சுப் புரட்சியின் பயனைத் தோன்றிய புதிய கோட்பாடுகள் அவ்வளவு எளிதில் அழிந்துவிடக் கூடியவையல்ல. ஆகவே, எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் வியன்னைத் திட்டங்களை எதிர்த்துப் போராட்டங்கள் தொடங்கப்பட்டன. வியன்னைத் திட்டத்தினால் மக்களாட்சி அடைந்த தோல்வியே அதன்பிற்கால வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தது எனக் கூறலாம்.

இங்கிலாந்து

கி. பி. 1688 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சி நிறுவப்பட்டது. இந்த ஆட்சியில் பாராளுமன்றம் அரசாங்கத்தின் நடுவிடமாகவும் இறைமையின் உறைவிடமாகவும் திகழ்ந்தது. ஆனால், இக்காலத்தில் இங்கிலாந்தில் மக்களாட்சி நிலைபெற்றிருந்ததென்று கூறமுடியாது. ஏனெனில், மக்கள்சபை (House of Commons)யின் உறுப்பினர்களை நாட்டு மக்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கவில்லை. ஐம்பது இலட்சம் ஆங்கிலேயரில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் பேர் தாம் வாக்குரிமை பெற்றிருந்தனர். எனவே, 1688ஆம் ஆண்டிற்குப் பிறகு வெகுகாலம் இங்கிலாந்து செல்வர்களாலேயே ஆளப்பட்டு வந்தது.பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்தில் நிறைவேற்றப்பட்ட சில சட்டங்கள் ஆங்கில ஆட்சியின் பிற்போக்கான தன்மையை மேலும் எடுத்துக் காட்டின. பிறகு இந்த நிலை சிறிது சிறிதாக மாறி மக்களாட்சி நிறுவப்பட்டது. ஆனால், இந்த மாற்றம் மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போல் புரட்சிகளின் பயனைத் தோன்றுமல், ஓழுங்கான சீர்திருத்த இயக்கங்களின் விளைவாகத் தோன்றியது. ஆங்கில அரசாங்கம் மற்ற ஐரோப்பிய அரசாங்கங்

களைப் போல் சீர்திருத்த இயக்கங்களை எதிர்க்கவில்லை. காபெட் (Cobbet) போன்ற சீர்திருத்த வாதிகளின் முற்போக்குக் கொள்கைகளை அரசாங்கம் ஏற்றுச் சட்டமுறைப்படி ஆட்சியமைப்பை மாற்றியமைத்தது. இந்த மாற்றங்கள் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஆங்கில அரசாங்கத்தை மக்களாட்சியாக்கின.

இங்கிலாந்தில் அரசனின் மேலாண்மை 1688 ஆம் ஆண்டோடு நலிவடைந்துவிட்டதால், மக்களாட்சி நிலைபெறுவதற்கு ஒன்றுதான் தேவையாக இருந்தது. அதாவது, பாராளுமன்றத்தில் செல்வர்களின் பிரதிநிதிகள் மட்டும் இருப்பதற்குப் பதிலாக எல்லா மக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்க வேண்டும். இந்தச் சீர்திருத்தம் 1828 ஆம் ஆண்டு தொடங்கி 1928 ஆம் ஆண்டு முற்றுப் பெற்றது. இந்த நீண்ட காலத்தில் பல சட்டங்களின் விளைவாக ஆங்கிலப் பாராளுமன்றத்தின் மக்கள் சபை உண்மையில் பிரதிநிதித்துவ மன்றமாக மாறியது. இந்தச் சீர்திருத்த இயக்கத்தின் முதல்படி 1828 ஆம் ஆண்டு தீட்டப்பட்ட சட்டமாகும். இந்தச் சட்டம் இரண்டாம் சார்ல்ஸ் மன்னர் காலத்தில் நிறைவேற்றப்பட்ட "சோதனை, மாநகராட்சி சட்டத்தை" (Test and Corporation Act) தள்ளுபடி செய்தது. இதனால் ஆங்கிலிக்க சமயத்துக்குரிய (Anglican Church) வழிபாட்டு முறைகளைக் (Rites) கடைப்பிடிக்காத மறுப்புச் சமயத்தாருக்கு இதுவரை மறுக்கப்பட்ட சில உரிமைகள் வழங்கப்பட்டன. அடுத்த ஆண்டு "கத்தோலிக்கர் விடுதலைச் சட்டம்" (Catholic Emancipation Act) இயற்றப்பட்டது. இதனால் கத்தோலிக்கர்களுக்குப் பாராளுமன்றத்தில் உறுப்பினராகும் உரிமையும், சில குறிப்பிட்ட செயல்துறை அதிகாரங்களைத் தவிர மற்ற அதிகாரங்களை வகிக்கும் உரிமையும் வழங்கப்பட்டது. இவ்வாறு இந்த இரண்டு சட்டங்களின் பயனைச், சமய வேற்றுமைகளின் காரணமாக அரசியல் உரிமைகள் வழங்கப்படாத மக்களுக்கு அவ்வுரிமைகள் அளிக்கப்பட்டன. ஆனால், இதனால் ஒரு சிறு பான்மையினரே பயனடைந்தனர். நாட்டின் பெரும்பான்மையான மக்கள் வாக்குரிமை பெறவில்லை. ஆகவே, கத்தோலிக்கரும், இணங்காதாரும் (Dissenters) அரசியலுரிமைகள் பெற்ற பிறகு கூட இங்கிலாந்தில் செல்வரின் ஆட்சியே நிலவி வந்தது. இந்த நிலை 1832 ஆம் ஆண்டிலிருந்து இயற்றப்பட்ட பல சீர்திருத்தச் சட்டங்களின் (Reform Acts) விளைவாக மாறியது. இவற்றில் முதல் சட்டத்தை மட்டும் இப்பகுதியில் பார்ப்போம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பிரதிநிதித்துவ முறையானது பழைய வழக்காறுகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. உதாரணமாகப் பழங்காலத்தில் செல்வப்பெருக்

குடனிருந்து நாளடைவில் அழிந்துவிட்ட நகரங்களுக்கும் பிரதி நிதித்துவம் அளிக்கப்பட்டிருந்தது. மேலும், மன்னர் தம் விருப் பம்போல், தன்னாட்சியுரிமை பெற்ற நகரங்களுக்கு (Borough)ப் பிரதிநிதித்துவம் அளித்து வந்தார். இந்த அதிகாரத்தைப் பயன் படுத்தி ஆங்கில மன்னர்கள் தம்மை ஆதரிப்பவர்களை மக்கள் சபையில் நிரப்பினர்கள். இத்தகைய வழக்காறுகளின் விளைவாக இங்கிலாந்தில் பிரதிநிதித்துவ முறை சீர்கெட்டிருந்தது. பழைய ஸேரம் (Old Sarum) போன்ற பிற்போக்கடைந்த நகரங்கள் இரண்டு பிரதிநிதிகளைப் பெற்றிருக்க, மான்செஸ்டர் (Manchester) போன்ற மக்கள் தொகை மிகுந்த புதிய நகரங்கள் பிரதிநிதித் துவம் பெறவில்லை. இவையெல்லாம் மக்களாட்சிக்கு முற்றிலும் முரணானவை. 1832 ஆம் ஆண்டில் இயற்றப்பெற்ற முதல் சீர் திருத்தச் சட்டம் (First Reform Act) இச்சீர்கேடுகளை நீக்கித் தேர்தல் முறையில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தியது. இதனால் எண்பத்தாறு "அழிந்த நகரங்கள்" (Rotten Boroughs) பிரதிநிதித்துவத்தை இழந்தன. மேலும், இதுவரை பிரதிநிதி களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிராத நகரங்களுக்கு அவ் வுரிமை அளிக்கப்பட்டது. இச்சட்டத்தின் பயனாக வாக்குரிமை பெற்ற மக்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்தது. சொத்துரி மையே இன்னும் வாக்குரிமையின் அடிப்படையாக இருந்த போதிலும், வாக்குரிமையை அடையும் பொருட்டு ஒருவன் பெற்றிருக்கவேண்டிய சொத்தின் அளவு குறைக்கப்பட்டது. இதனால் பலர் வாக்குரிமை பெற்றனர். ஆகவே, மக்கள் சபையின் உறுப்பினரின் எண்ணிக்கையும் அதிகரித்தது. எனவே, இங்கி லாந்தில் மக்களாட்சியை வளர்த்த சட்டங்களுள் 1832 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் மிக முக்கியமானதாகும். அச்சட்டம் ஆங்கில மக்களாட்சியின் "மகா சாசனம்" (Magna Carta of English Democracy) என்பது அறிஞர்களின் கருத்து.

மேற்கூறிய சிறப்பான சட்டங்களைத் தவிர இக்காலத்தில் மக்க ளாட்சிக்கு ஏற்ற வேறு சட்டங்களும் இயற்றப்பட்டன. இவற்றுள் சில சீர்திருத்தப்பட்ட மக்கள் சபையின் முற்போக்குக் கொள் கையை எடுத்துக் காட்டின. 1833 ஆம் ஆண்டு அடிமை ஒழிப் புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதனால் ஏறக்குறைய எட்டு இலட்சம் அடிமைகள் விடுதலை யடைந்தனர். அதே ஆண்டு ஆலைச் சட்டம் (Factory Law) ஒன்று இயற்றப் பெற்றது. இது பிற்காலத்தில் தீட்டப்பட்ட பல ஆலைச் சட்டங்களுக்கு முன்னோடி யாயிருந்தது. இவை தொழிலாளர்களின் பலவிதமான குறைகளை நீக்கி அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தன. 1835 ஆம் ஆண்டு நகராட்சிகள் சீரமைக்கப்பட்டன. இதுவரை நகரங்களை

ஆண்டு வந்த செல்வர்களின் சிறுகுழுக்கள் சிதைக்கப்பட்டு, மக்களாட்சிக்கு வழி வகுக்கப்பட்டது. 1846 ஆம் ஆண்டு "தானியச் சட்டங்கள்" (Corn Laws) நீக்கப்பட்டதால், பெரிய நிலப் பிரபுக்களின் ஆதிக்கம் பெருமளவில் குறைந்தது. இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாக இயற்றப்பட்ட சட்டங்கள் 1848 ஆம் ஆண்டிற்குள் மக்களாட்சிக்குத் தேவையான அடிப்படைகளை அமைத்தன.

பிரான்ஸ்

1815 ஆம் ஆண்டு பூர்போன் மரபைச் சேர்ந்த பதினெட்டாம் லூயி பிரான்ஸின் மன்னரானார். இவர் தம் முன்னோர்களைப் போல இறைமையானது இறைவழித் தோன்றியதென்று கூறாமல், மரபு வழி வந்ததெனக் கூறினார். இவரது கொள்கை "மரபு முறைக் கொள்கை" (Legitimism) என்று கூறப்படுகிறது. மேலும் பிரெஞ்சுப் புரட்சியின் பயனாக மக்களாட்சிக் கொள்கைகள் வலுப் பெற்றிருந்தனவென்று அவர் நன்கு உணர்ந்திருந்ததால், பிரான்ஸில் அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சி நிலவியது. ஆனால் அவருக்குப் பிறகு 1824 ஆம் ஆண்டு பிரெஞ்சு அரியணையேறிய பத்தாம் சார்ல்ஸ் பிற்போக்குக் கொள்கையுடையவர். அவருடைய ஆட்சியில் பதினெட்டாம் லூயியின் மரபு முறைக்கொள்கை மீண்டும் இறைவழிக் கோட்பாடாக மாறியது. அவர் பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்தையும் அழித்துப் "பழைய ஆட்சியை" மீண்டும் நிறுவ எண்ணினார். வரம்பற்ற அதிகாரங்களைப் பெற்றுத் தம் விருப்பப்படி நாட்டை ஆளவேண்டுமென்பதே அவருடைய குறிக்கோளாகும். ஆனால், மக்களின் எண்ணங்களில் ஆழப் பதிந்திருந்த உரிமை யுணர்ச்சியானது மன்னரின் கருத்துக்கள் நிறைவேறவிடாமல் தடுத்தது. 1830 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டன. இவற்றின் விளைவாகப் பத்தாம் சார்ல்ஸ் நாடுகடத்தப்பட்டார். பிரெஞ்சு அரியணை பூர்போன் வம்சத்தின் இன்னொரு கிளையைச் சேர்ந்த லூயி ஃபிலிப்புக்கு அளிக்கப்பட்டது. அரசியலமைப்பு மீண்டும் மொருமுறை சீரமைக்கப்பட்டு அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சி நிறுவப்பட்டது. அரசர் மக்களின் இசைவு பெற்றே ஆட்சி செலுத்துகிறார் என்ற உண்மை புதிய அரசியலமைப்பில் வலியுறுத்தப்பட்டது. இதனால் இறைமை மக்களின் உடைமை என்பதும், அதுவே அரசாங்கத்தின் அடிப்படையென்பதும் தெளிவானது.

மற்ற ஐரோப்பிய நாடுகள்

1830 ஆம் ஆண்டு பிரான்ஸில் ஏற்பட்ட இந்த மாறுதல், மற்ற ஐரோப்பிய நாடுகளில் வியன்னாத் திட்டப்படி நிலைநாட்டப்பட்டிருந்த முடியாட்சிகளைச் சிறிது தாக்கியது. பெல்ஜிய நாட்டு

மக்கள் பிரான்ஸ் நாட்டில் ஏற்பட்டிருந்த குழப்பங்களைப் பயன் படுத்திக்கொண்டு ஹாலந்தின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். 1831 ஆம் ஆண்டு இக்கிளர்ச்சியில் பெல்ஜிய மக்கள் வெற்றி பெற்றனர். இதன் பிறகு அவர்கள் ஸேக்ஸே கோபர்க்கின் கோமகனை (Duke of Saxe Coburg) லியோப் பால்டை (Leopold)த் தம் அரசனாகத் தெரிந்தெடுத்துக்கொண்டு ஓர் அரசியலமைப்பை நிறுவினர். அரசியலமைப்பிற்குட்பட்ட இச்சிறு முடியரசின் சுதந்திரத்தை மற்ற ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக்கொண்டன. இதன் பிறகு பெல்ஜியம் ஒரு நடுநிலைமை நாடாக வாழத் தொடங்கியது. இதுபோலவே 1830 ஆம் ஆண்டு கிரீஸ் நாடு துருக்கியரிடமிருந்து விடுதலையடைந்து, வரம்பிற்குட்பட்ட முடியாட்சியைப் பெற்றது. சுவிட்ஸர்லாந்திலும் நேர்முக மக்களாட்சி (Direct Democracy) மேலும் வளர்ந்தது.

இத்தாலி, ஜெர்மனி, போலந்து ஆகிய நாடுகளில் 1820 ஆம் ஆண்டிற்குப் பிறகு, வியன்னைத் திட்டப்படி நிறுவப்பட்ட முடியர சர்களை எதிர்த்துப் பல கிளர்ச்சிகள் தோன்றின. ஆனால், இவை யெல்லாம் மக்களிடையே ஒற்றுமையில்லாத காரணத்தினாலும் ஆஸ்ட்ரியா, ரஷ்யா, பிரஷ்யா ஆகிய வல்லரசுகளின் ஆதிக்கத்தி னாலும் பயன்படாமற் போயின. உதாரணமாக, 1820 ஆம் ஆண்டு இத்தாலியில் கார்பொனரி (Carbonari) என்ற புரட்சிக் கூட்டம் தொடங்கிய உரிமை இயக்கம் ஆஸ்ட்ரியாவின் படை பலத்தினால் முறியடிக்கப்பட்டது. இதே சமயத்தில் பீட்மான்ட் (Piedmont) முடியரசிலும் முதலாம் விக்டர் எம்மானுவேலை எதிர்த்து மக்கள் புரட்சி செய்தனர். இதன் விளைவாக அம்மன்னர் முடி துறக்க நேர்ந்தது. ஆனால், அவருக்குப் பிறகு அரியணை யேறிய சார்ல்ஸ் ஃபெலிக்ஸ் (Charles Felix) என்பவர் ஆஸ்ட்ரியரின் துணை கொண்டு மக்களுடைய உரிமைப் போராட்டத்தை அடக்கினார். இதன் பிறகு பத்தாண்டுகள் இத்தாலியில் அமைதி நிலவியது. 1830 ஆம் ஆண்டில் மீண்டும் போப்பாண்டவரின் ஆட்சிக்குட் பட்டிருந்த பகுதிகளில் புரட்சி தோன்றியது. ஆனால் இப் புரட்சியும் ஆஸ்ட்ரியப் போர்ப் படையினால் முறியடிக்கப்பட்டது.

வியன்னைத் திட்டப்படி ஜெர்மனி ஆஸ்ட்ரியாவின் தலைமையில் ஓரு நாடுகளின் கூட்டரசாக அமைக்கப்பட்டிருந்த தென்று முன்னால் கூறினோம். 1815 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஐம்பது ஆண்டுகளாக ஜெர்மனியில் குழப்பங்கள் தோன்றிக் கொண்டே யிருந்தன. இவற்றில் நாம் இருவகையான இயக்கங்களைக் காண லாம். முதலாவது, தேசிய இயக்கம் அல்லது ஒற்றுமை இயக்க மாகும். இதனை நாம் முன்னோர் இயலில் விளக்கினோம். இரண் டாவது ஏற்பட்டது முற்போக்கு இயக்கம் (Liberal Movement).

1830ஆம் ஆண்டுப் புரட்சி இதன் முக்கிய நிகழ்ச்சியாகும். இந்த ஆண்டில் வியன்னாத் திட்டத்தின்படி நியமிக்கப்பட்டிருந்த பிற்போக்கான சிற்றரசர்களை எதிர்த்து நாடெங்கும் போராட்டங்கள் தொடங்கின. இவை பாரிஸில் பத்தாம் சார்ல்ஸை எதிர்த்துத் தோன்றிய ஜூலைப் புரட்சியின் (July Revolution) எதிரொலியாகும். இவற்றின் பயனாகப் பல சிறு அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனால், இம்மாற்றங்கள் புரட்சியை அடக்கச் சிற்றரசர்கள் கையாண்ட ஒரு சூழ்ச்சியாகையால் நடைமுறையில் மக்களுக்குப் பயனளிக்கவில்லை.

வியன்னாத் திட்டப்படி போலந்தின் பெரும்பகுதி ரஷ்யாவின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. பிரான்ஸில் 1830ஆம் ஆண்டு தோன்றிய புரட்சியினால் ஊக்கமடைந்த போலந்து மக்கள் ஐரோப்பா வெங்கும் ஏற்பட்டிருந்த குழப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு தாம் இழந்த உரிமைகளை மீண்டும் பெற எண்ணினர். எனவே, அவர்கள் திரண்டெழுந்து ரஷ்யப்படையை எதிர்த்து அதனைத் தமது நாட்டை விட்டு விரட்டினர். ஆனால் 1831இல் ரஷ்ய அரசர் ஒரு பெரும் படைகொண்டு புரட்சியை அடக்கிப் போலந்தை மீண்டும் அடிமைப்படுத்தினர். போலந்து இதுவரை பெற்றிருந்த அரசியலமைப்பு அழிக்கப்பட்டு அந்நாடு ரஷ்யப் பேரரசின் ஒரு மாநில மாக்கப்பட்டது.

ஸ்பெயின் நாட்டில் 1808ஆம் ஆண்டு நெப்போலியன் தன் உடன் பிறந்தவரான ஜோஸப் என்பவரை மன்னராக்கினர். இதனால் மக்கள் வெகுண்டெழுந்து இங்கிலாந்தின் துணையைப் பெற்றுப் போர் தொடுத்தனர். இச்சமயத்தில் ஏற்பட்டிருந்த குழப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு நாட்டில் உரிமை இயக்கங்கள் தலையெடுத்தன. நாடெங்கும் ஜன்டா (Juntas) என்ற பிரதிநிதிகளின் குழுக்கள் தோன்றின. இவற்றிற் கெல்லாம் தலைமையாக நடு ஜன்டா (Junta Central) ஒன்று ஏற்படுத்தப் பட்டது. 1810ஆம் ஆண்டு கார்ட்டெஸ் என்ற தேசீயப் பிரதிநித்துவ மன்றம் கூட்டப்பட்டது. இந்த மன்றம் 1812ஆம் ஆண்டு ஓர் அரசிய லமைப்பை இயற்றியது. இதன்படி ஸ்பெயின் அரசு வரம்பிற்குட்பட்ட முடியாட்சியாக மாறவேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது. மரபு வழிவந்த ஸ்பெயின் மன்னர்களின் ஆட்சியுரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், சட்டமியற்றும் உரிமையை மன்னர் ஒரு சட்ட மன்றத்துடன் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இச் சட்ட மன்றத்தின் உறுப்பினர்களை இருபத்தைந்து வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கவேண்டும். ஆனால் போர் முடிந்த பிறகு ஸ்பெயின் நாட்டின் பழைய அரசரான ஃபெர்டி

னன்ட் (Ferdinand) தன் நாட்டுக்குத் திரும்பியபோது, மக்கள் அவருக்கு ஆரவாரச் சிறப்புடன் வரவேற்பளித்தனர். முற்போக்கு வாதிகளின் (Liberals) செல்வாக்கு மக்களிடையே வெகுவாகப் பரவாததைக் கண்ட அவர் வெலன்ஸியா (Valencia) என்னுமிடத்தில் 1812ஆம் ஆண்டு கார்ட்டெஸ் மன்றம் தீட்டிய அரசியலமைப்பை ஏற்க மறுத்து, முற்போக்குவாதிகளைச் சிறைப் பிடித்தார். இதன் பிறகு அவர் மீண்டும் ஸ்பெயின் நாட்டில் வல்லாட்சியை நிறுவினர். ஆனால் அவருடைய ஆட்சி திறமையற்றதா யிருந்ததால், 1820ஆம் ஆண்டு மக்கள் கிளர்ச்சி செய்தனர். வியன்னாத் திட்டத்தினால் தம் நாட்டிற்கு நேர்ந்த இழுக்கும், அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் இக்காலத்தில் அடைந்த விடுதலையும் ஸ்பெயின் மக்களுடைய வெறுப்பை வளர்த்தன. போர்ப்படையும் மக்களோடு இணைந்து நின்று புரட்சி செய்தது. எனவே 1812ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அரசியலமைப்பு மீண்டும் செயல்படுத்தப்பட்டது. ஆனால் இது பயனளிக்கவில்லை. மூன்று ஆண்டுகளாக நாட்டில் அரசு குலைந்த நிலை ஏற்பட்டிருந்தது. பிறகு ஃபெர்டினன்ட் பிரெஞ்சு மன்னரான பதினெட்டாம் லூயியின் துணைகொண்டு மீண்டும் தமது வல்லாட்சியை நிறுவினர். அவருக்குப் பிறகு அரியணையேறிய இஸபெல்லா அரசியின் காலத்திலும், அவளுடைய மக்களின் ஆட்சியின் போதும் நாட்டில் மீண்டும் குழப்பங்கள் தோன்றின. ஆனால், இக் குழப்பங்களின்போது பிற்போக்காளர்களிடையே ஒற்றுமையில்லாத காரணத்தினால் முற்போக்கு வாதிகள் அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற்று நாட்டில் அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியை நிறுவும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.

இவ்வாறு 1815ஆம் ஆண்டிற்கும் 1848 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பாவில் ஆங்காங்கே புரட்சிகள் தோன்றி வியன்னாத் திட்டப்படி நிறுவப்பட்டிருந்த வல்லாட்சிகளின் வலிமையைக் குறைத்தன. இக் காலத்தில் தொடங்கப்பட்ட முற்போக்கு இயக்கங்கள் முற்றிலும் வெற்றி பெறவில்லையென்றாலும், அவை பிரெஞ்சுப் புரட்சி ஏற்றிவைத்த உரிமை யுணர்ச்சியெனும் சுடர் அணைந்துவிடாமல் பாதுகாத்தன. மக்களுக்கு உரிமைகள் வழங்காத எந்த ஆட்சியும் நிலைத்திருக்க முடியாதென்றஉண்மையை ஐரோப்பிய அரசர்கள் உணர்ந்தனர். முக்கியமாக 1830ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏற்பட்ட புரட்சிகள் இந்த உண்மையை உறுதிப்படுத்தின. மேலும் இதே காலத்தில் ஸ்பெயினும், போர்த்துக்கலும் அமெரிக்காவில் பெற்றிருந்த குடியேற்ற நாடுகளை இழந்தன. இவை யெல்லாம் இக் காலத்தில் ஐரோப்பாவில் மக்களாட்சிக்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தின.

இரண்டாம் காலம் (1848—1914)

1848ஆம் ஆண்டிற்கும் முதல் உலகப் போரின் தொடக்கத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் மக்களாட்சி தழைத்தோங்கியது. இந்த வெற்றியின் காரணமாக உலகின் மற்றப் பகுதிகளிலும் மக்களாட்சிக் கொள்கைகள் பரவின. இதே காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (U. S. A.) உள்நாட்டுப் போரின் விளைவாக அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டு, சமத்துவம் நிலைநாட்டப்பட்டது. இக் காலத்தில் இங்கிலாந்து, ஹாலந்து, பெல்ஜியம் ஆகிய இம்மூன்று நாடுகளில் ஏற்கெனவே மேலாண்மை சிதைக்கப்பட்டிருந்தது. எனவே, இம்மூன்று நாடுகளும் 1848 ஆம் ஆண்டு உரிமையின் பெயரால் தோன்றிய பெரும் புரட்சிகளினால் அதிகமாகப் பாதிக்கப்படாமல், சீரான வழியில் மக்களாட்சியில் முன்னேறின. மற்ற ஐரோப்பிய நாடுகளில் மக்களாட்சியானது புரட்சிகளின் பயனாகவே நிலைநாட்டப்பட்டது. இப்புரட்சிகளில் மிக முக்கியமானவை 1848ஆம் ஆண்டு ஐரோப்பாவில் எழுந்த பெரும் புரட்சிகளாகும். இவை மக்களாட்சியின் வருகையை எல்லோரும் உணரும் வகையில் பறைசாற்றின. இவை ஐரோப்பிய நாடுகளில் ஏற்படுத்திய மாற்றங்களை இப்பகுதியில் பார்ப்போம்.

இங்கிலாந்து

1832ஆம் ஆண்டு இயற்றப்பட்ட முதல் சீர்திருத்தச் சட்டம் நடுத்தர வகுப்பினருக்கு மட்டுமே வாக்குரிமை அளித்தது. தொழிலாளரின் வகுப்புக்கு வாக்குரிமை அளிக்கவில்லை. எனவே இந்த வகுப்பைச் சேர்ந்த மக்கள் வாக்குரிமை வேண்டி ஓர் இயக்கத்தைத் தொடங்கினர். அவர்கள் விரும்பிய சீர்திருத்தங்கள் "மக்களின் சாசனம்" (People's Charter) என்ற ஆவணத்தின் மூலம் வெளியிடப்பட்டதால், அந்த இயக்கம் சாசன இயக்கம் (The Chartist Movement) என்று அழைக்கப்படுகிறது. மறைவான வாக்கெடுப்பும் (Secret Ballot), வயது வந்தோர் வாக்குரிமையும் (Adult Franchise) அவர்களுடைய கோரிக்கைகளில் முக்கியமானவை. தொடக்கத்திலிருந்தே வன்முறையைக் கையாண்டு வந்த இந்த இயக்கம் 1848 ஆம் ஆண்டு ஐரோப்பாவெங்கும் தோன்றிய பெரும் புரட்சிகளினால் உந்தப்பட்டு ஒழுங்கீனமான முறைகளில் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தியது. இது ஒழுங்கையும் சட்டத்தையும் என்றுமே புனிதமாகக் கருதும் ஆங்கில மக்களிடையே சீற்றத்தை எழுப்பியது. எனவே, சாசன இயக்கத்திற்கு ஆதாரமாக இருந்த நிறுவனங்கள் மக்களுடைய ஆதரவை யிழந்தன. இவ்வாறு 1848 ஆம் ஆண்டில் ஐரோப்பிய நாடுகளையெல்லாம் தாக்கிய புரட்சி இங்கிலாந்தில் மிக எளிதில் முறி

யடிக்கப்பட்டது. ஆனல் சாசன இயக்கத்தார் கோரிய சீர்திருத் தங்கள் நாளடைவில் சட்டபூர்வமாகச் செயல்படுத்தப்பட்டன. இவை இங்கிலாந்தில் மக்களாட்சியை வலுப்படுத்தின.

இங்கிலாந்தில் சமயவேற்றுமை காரணமாகச் சிலர் அரசியல் உரிமைகளை இழந்திருந்தனர். கத்தோலிக்கரும், இணங்கா தாரும் ஏற்கெனவே உரிமை வழங்கப் பெற்றிருந்தனர். ஆனல் யூதர்களும் (Jews), அயர்லாந்தைச் சேர்ந்த கத்தோலிக்கரும் அரசி யல் உரிமைகள் பெருமல் இருந்தனர். 1858 ஆம் ஆண்டு இயற் றப்பட்ட யூத நிவாரணச் சட்டம் (Jewish Relief Act) யூதர்களுக்குச் செயல் துறையிலும் பொதுப் பணித்துறையிலும் அதிகாரம் வகிக் கும் உரிமை யளித்தது. 1869 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மற் ருெரு சட்டத்தின்படி அயர்லாந்தின் ஆங்கிலிக்க சபை கலேக்கப் பட்டது. இதனல் கத்தோலிக்கர்களாகிய அயர்லாந்து மக்கள் அச்சபைக்குச் செலுத்தவேண்டிய பத்திலொரு பங்கு வரியும் (Tithe) மற்றக் கட்டணங்களும் இனிச் செலுத்தவேண்டியதில்லே யென்று முடிவு செய்யப்பட்டது. மேற்கூறிய இரு சட்டங்களும் இதுபோன்ற மற்றச் சட்டங்களும் ஆங்கில மக்களிடையே சமய வேற்றுமைகளின் காரணமாக நிலவியிருந்த ஏற்றத்தாழ்வுகளை நீக்கிச் சமத்துவத்தை நிலேநாட்டின.

1832 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட முதல் சீர்திருத்தச் சட்டம் பழைய வழக்காறுகளினல் பிற்போக்கடைந்திருந்த பிரதி நிதித்துவ முறையைச் சீரமைத்ததென்றும், நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு வாக்குரிமை யளித்ததென்றும் பார்த்தோம். 1867 ஆம் ஆண்டிலும் 1884 ஆம் ஆண்டிலும் இயற்றப்பட்ட இரண்டு சீர்திருத்தச் சட்டங்கள் பிரதிநிதித்துவ முறையை மேலும் சீரமைத்து, வாக்குரிமைபெற்ற மக்களின் எண்ணிக் கையை அதிகரித்தன. 1867 ஆம் ஆண்டு தீட்டப்பெற்ற சட்டம் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை அளித்தது. இதனல் இங்கி லாந்தில் வாக்குரிமை பெற்ற மக்களின் எண்ணிக்கை பத்து இலட்சத்திலிருந்து இருபத்தைந்து இலட்சமாக உயர்ந்தது. மேலும் இச்சட்டம் "சாசன இயக்கத்" தாரின் கோரிக்கைகளில் பெரும்பான்மையானவற்றை நிறைவேற்றி வைத்தது. 1884 ஆம் ஆண்டு கிளாட்ஸ்டன் (Gladstone) என்பவர் முதலமைச்சரா யிருக்கும்போது இன்னெரு சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி வாக்குரிமை பெறத் தேவையான சொத்தின் அளவு பெரிதும் குறைக்கப்பட்டதால், நாட்டின் பாமரமக்கள் எல்லோரும் வாக்குரிமை பெற்றனர். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு வாக்குரிமை பெற்ற மக்களின் தொகை ஐம்பது இலட்சமாக உயர்ந்தது. மேலும், இச்சட்டம் உரிமைபெற்ற நகரங்களுக்கும்

(Boroughs), மாவட்டங்களுக்கும் (Counties) வாக்குரிமைத் தகுதி களிலிருந்த வேறுபாடுகளை நீக்கியது. 1832, 1867, 1884 ஆகிய ஆண்டுகளில் இயற்றப்பட்ட சட்டங்களின் பயனாக ஆங்கில நாட்டின் வயது வந்த ஆண்கள் எல்லோரும் வாக்குரிமை பெற்றனரென்று கூறலாம். ஆனால் பெண்களுக்கு அவ்வுரிமை அளிக்கப்படவில்லை. 1918ஆம் ஆண்டில்தான் முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் வாக்குரிமை பெற்றனர். 1928ஆம் ஆண்டு முப்பது வயதுக்குக் குறைந்த வயதுவந்த பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.

மேற்கூறிய சட்டங்களின் விளைவாக மக்கள் சபை உண்மையி லேயே மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றமாக மாறியது. எனினும் மக்களாட்சி முழு வளர்ச்சி பெறவில்லை. ஏனெனில், 1911 ஆம் ஆண்டுவரை பாராளுமன்றத்தின் மேல் சபையான பிரபுக்கள் சபை (House of Lords) மக்கள் சபை நிறை வேற்றும் மசோதாக்களை மறுக்கும் உரிமை பெற்றிருந்தது. மக்களிடமிருந்து ஆட்சியுரிமை பெருத இந்த நிறுவனம் மக்க ளின் பிரதிநிதிகளடங்கிய அவைக்குத் தடையாக இருப்பது மக்க ளாட்சிக்கு முரணானதல்லவா? எனவே, இந்த நிலையானது 1911 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டத்தின் வாயிலாக மாற்றியமைக்கப்பட்டது. இச்சட்டப்படி பிரபுக்கள் சபைக்கு நிதி சம்பந்தமான மசோதாக்களை மறுக்கும் உரிமை கிடையாது; என்றும், மற்ற மசோதாக்களைத் தனது மறுப்பாணை யின் மூலம் இரண்டாண்டு காலத்திற்கு மேல் நிறுத்திவைக்கக் கூடாதென்றும் முடிவு செய்யப்பட்டது. இந்தச் சட்டம் பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் குறைத்து மக்கள் சபையின் உயர்வை உறுதிப்படுத்தியது. 1949 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இன்னொரு பாராளுமன்றச் சட்டம் பிரபுக்கள் சபையின் செல் வாக்கை மேலும் குறைத்தது. இதன்படி பிரபுக்கள் சபையானது சாதாரண மசோதாக்களை ஓராண்டுதான் நிறுத்திவைக்க முடியும்.

இவ்வாறு 1911 ஆம் ஆண்டுக்குப் பிறகு இங்கிலாந்தில் மக்களாட்சி முழு மலர்ச்சி பெற்றதென்று கூறலாம். பிரதிநிதித் துவ முறை செம்மைப்படுத்தப்பட்ட அதே காலத்தில் ஆங்கில மன் னர் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டங்களை மறுக்கக் கூடாதென்ற மரபும் நிலைநாட்டப்பட்டது. ஆன் (Anne) அரசிக் குப் பிறகு எந்த ஆங்கில மன்னரும் தமது மறுப்பாணையைப் பயன்படுத்தாததினால் இந்த நிலை ஏற்பட்டது. மேலும், விக்டோரியா அரசியின் காலத்திலும் அதன் பிறகும் மன்னரின் மதிப்பும் செல்வாக்கும் உயர்ந்து அவரது அதிகாரம் வெகுவாகக்

குறைந்தது. மன்னர் நடுநிலையாக இருக்கவேண்டுமென்ற கொள்கை நாளடைவில் நிலைநாட்டப்பட்டது. இவ்வாறு இங்கிலாந்தில் மக்களாட்சி இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் உறுதியான அடிப்படையில் நிறுவப்பட்டது.

பிரான்ஸ்

1848 ஆம் ஆண்டு முதல் 1914 ஆம் ஆண்டு வரை பிரான்ஸில் முடியாட்சியும், குடியாட்சியும் மாறிமாறித் தோன்றின. 1830 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் லூயி ஃபிலிப் என்பவர் பிரெஞ்சு மன்னராக்கப்பட்டாரென்று பார்த்தோம். அவருடைய ஆட்சிக் காலத்தில் அமைதி நிலவிய போதிலும், மக்களிடையே உரிமையுணர்ச்சி நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வந்தது. இங்கிலாந்தில் 1832 ஆம் ஆண்டு வாக்குரிமை முறையில் மாற்றம் செய்யப்பட்டதைக் கண்ட பிரெஞ்சு மக்கள் தாமும் அத்தகைய உரிமையைப் பெற விழைந்தனர். மக்களின் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்க மறுத்தபோது அவர்கள் சீற்றம் கொண்டனர். 1848 ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் நாடெங்கும் அரசாங்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சிகள் மூண்டன. இதைக் கண்ட லூயி ஃபிலிப் நாட்டைவிட்டு ஓடினார். உடனே புரட்சித் தலைவர்கள் நாட்டில் ஒரு குடியரசை நிறுவினர். இது இரண்டாம் குடியரசு (Second Republic) என்று வழங்கப்படுகிறது. ஒரு புதிய அரசியலமைப்புத் திட்டப்பட்டு வயது வந்த எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. மாவீரன் நெப்போலியனுடைய உறவினரான லூயி நெப்போலியன் போனப்பார்ட் (Louis Napoleon Bonaparte) என்பவர் புதிய குடியரசின் தலைவராகத் (President) தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சி ஐரோப்பாவின் மற்றப் பகுதிகளில் உரிமை இயக்கங்களைப் பெருமளவில் ஊக்குவித்தது. ஆனால் பிரான்ஸில் குடியாட்சி மூன்றாண்டுகளே நிலைத்திருந்தது. ஏனெனில், விரைவில் லூயி நெப்போலியனுக்கும் தேசிய மன்றத்திற்குமிடையே முரண்பாடுகள் தோன்றலாயின. 1852 ஆம் ஆண்டு நெப்போலியன் தேசிய மன்றத்தின் தலைவர்களைச் சிறைப்படுத்தி மக்களின் ஆதரவுடன் மூன்றாம் நெப்போலியன் என்ற பெயருடன் பேரரசரானார். எனவே, இந்த ஆண்டில் குடியரசு மறைந்து பிரெஞ்சுப் பேரரசு தோன்றியது. இதனை இரண்டாம் பேரரசு (Second Empire) என்பர்.

இந்த இரண்டாம் பேரரசு மக்களின் ஆதரவைப் பெற்றிருந்ததென்று கூறலாம். மூன்றாம் நெப்போலியன் மக்களுடைய ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்திருந்தார். எனவே, தியே (Thiers) என்பவர் இரண்டாம் பேரரசை "மக்களாட்சியின் முன் மண்டியிட்ட முடியாட்சி" என்று குறிப்பிடுகிறார்.

ஆனால் மூன்றும் நெப்போலியன் மக்களுடைய ஆதரவைப் பெறப் பல வழிகளைக் கையாண்டபோதிலும், அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க மறுத்தார். நெப்போலியன் தொடுத்த பல போர்களினால் பயனேதும் ஏற்படாததைக் கண்டு வெறுப்படைந்த மக்கள், பிரதிநிதித்துவ முறையை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டனர். மக்களுடைய விருப்பத்தை இனிமேல் மறுக்க இயலாதென்பதை உணர்ந்த பேரரசர் 1870 ஆம் ஆண்டு எட்டுப் பேர்களைக் கொண்ட அமைச்சர் குழுவொன்றை ஏற்படுத்தினர். இந்தக் குழு நேர்முக வாக்கெடுப்பொன்றில் எழுபது இலட்சம் மக்களின் உடன்பாட்டைப் பெற்றது. இவ்வாறு 1870 ஆம் ஆண்டு இரண்டாம் பேரரசு மக்களுக்கு உரிமையளிக்கும் முற்போக்குப் பேரரசு (Liberal Empire) ஆயிற்று. ஆனால் இப்பேரரசு நான்கு மாத காலமே நிலைபெற்றிருந்தது. ஏனெனில், 1870 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மூண்ட பிரெஞ்சுப் பிரஷ்யப் போரில் (Franco Prussian War) மூன்றும் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டுச் சிறையிடப்பட்டார். பிரான்ஸ் போரில் பெருந்தோல்வியடைந்தது. இத்துடன் இரண்டாம் பேரரசும் மறைந்தது.

நெப்போலியனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு பிரான்ஸின் அரசாங்கத்தை நிர்ணயிக்கும் பொருட்டு ஓர் அரசியற் புனைசபை (Constituent Assembly) கூட்டப்பட்டது. இச்சபை பல வாக்குவாதங்களுக்குப் பிறகு ஓர் அரசியலமைப்பை வரைந்தது. இதன்படி பிரான்ஸ் மீண்டும் ஒரு குடியரசாக மாறியது. இக்குடியரசு மூன்றும் குடியரசென வழங்கப்படுகிறது. இது 1875 ஆம் ஆண்டு முதல் 1940 ஆம் ஆண்டு வரை நிலைத்திருந்தது.

இந்த மூன்றும் குடியரசின் அரசியலமைப்பில் இரண்டு அவைகளைக் கொண்ட சட்ட மன்றமும், பொறுப்புள்ள அமைச்சரவையும், ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை சட்ட மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்படும் நாட்டின் தலைவரும் சிறப்பியல்புகளாகும். சட்ட மன்றம் நான்கு ஆண்டுகளுக்கொருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டது. நாட்டின் தலைவர் வலிமையற்றவராக விருந்தார். இரண்டாம் குடியரசின் தலைவரான லூயி நெப்போலியன் தேசிய மன்றத்தை முறியடித்துப் பேரரசனைப்போல மீண்டும் நிகழக் கூடாதென்பதற்காகவே மூன்றும் குடியரசில் தலைவரின் அதிகாரம் குறைக்கப்பட்டிருந்தது. இரண்டாவதாக, செயல்துறை அதிகாரம் பெற்றிருந்த அமைச்சரவை சட்ட மன்றத்தின் இசைவின்றி யாதொன்றும் செய்ய முடியாது. ஆனால் சட்ட மன்றம் பல கட்சிகளாகப் பிரிந்திருந்ததால், அமைச்சரவை தனது திட்டங்களுக்குச் சட்ட மன்றத்தின் இசைவைப் பெறுவது கடினமாயிருந்தது. இதன் காரணமாக அமைச்சரவைகள் அடிக்கடி மாற்றப்பெற்றன.

எனவே, 1875 ஆம் ஆண்டு முதல் 1940 ஆம் ஆண்டு வரை பிரான்ஸில் நிலைத்திருந்த குடியரசின் அரசாங்கம் ஆங்கில அரசாங்கத்தைப் போன்று திறமையுடன் செயலாற்ற முடியவில்லை. இதற்குக் காரணம் மக்களாட்சியன்று; பிரெஞ்சு மக்களின் குணமேயாகும்.

1940 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போரின்போது பிரான்ஸ் நாடானது ஜெர்மனியினால் தோற்கடிக்கப்பட்டதும் மூன்றும் குடியரசு மறைந்தது. போருக்குப் பிறகு 1946 ஆம் ஆண்டு நான்காவது குடியரசு நிறுவப்பட்டது. இது 1958 ஆம் ஆண்டு அரசியல் நிலையின்மையினால் சரிந்தது. அந்நிலையில் தளபதி டிகால் (DeGaulle) தலைமையேற்றுப் பிரான்ஸ் நாட்டை அரசியல் நெருக்கடியிலிருந்து காத்தார். அதன் பிறகு ஐந்தாவது குடியரசு ஏற்படுத்தப்பட்டது. அதன் வெற்றி தலைவர் டிகாலின் அரசியல் வெற்றியைப் பொறுத்திருக்கிறது. இவ்வாறுக மக்களாட்சிக் கொள்கைகளை உலகுக்கே புகட்டிய பிரான்ஸ் இன்று வரை நிலையான அரசாங்கத்தைப் பெறுமலிருக்கின்றது. உரிமையையும் அதிகாரத்தையும் ஒருங்கே இணைத்து, அதனடிப்படையில் ஆட்சியை நிறுவ இயலாமை இதற்குக் காரணம் போலும்.

ஸ்பெயின்

ஏழாம் ஃபெர்டினன்டுக்குப் பிறகு ஸ்பெயினில் அரியணையேறிய இரண்டாம் இஸபெல்லா அரசி 1833 ஆம் ஆண்டு முதல் 1868 ஆம் ஆண்டு வரை ஆட்சி செலுத்தினள். இந்த நீண்ட காலத்தில் பல்வேறு அரசியலமைப்புக்கள் ஆயப்பட்டன. முற்போக்குவாதிகளும் (Liberals) பழமைவாதிகளும் (Conservatives) மாறிமாறிச் செயல்துறை அதிகாரத்தை வகித்தனர். இவ்வாறு ஏற்பட்ட ஒவ்வொரு கட்சிமாற்றத்தின் போதும், பதவிக்கு வந்த கட்சி கார்ட்டெஸ் என்னும் சட்டசபையைத் தன் கொள்கைகளுக்கேற்ப மாற்றியமைத்தது. இதனால் நிலையான அரசாங்கம் ஏற்படுவது கடினமாயிருந்தது. மேலும், நாட்டின் போர்ப்படை அரசியலில் அடிக்கடி தலையிட்டது. இவ்வாறுக அரசியின் திறமையின்மை, கட்சிகளிடையே ஒற்றுமையின்மை, அரசியலில் படையின் தலையீடு ஆகிய இக்காரணங்களினால் இஸபெல்லாவின் ஆட்சிக் காலத்தில் பெயரளவில் அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சி நிலைத்திருந்தபோதிலும், ஸ்பெயின் நாட்டில் உண்மையில் படையின் வல்லாட்சியே (Military Dictatorship) நிலவியது. 1868 ஆம் ஆண்டு இஸபெல்லாவிற்கெதிராக நடந்த கிளர்ச்சிகளில் அவளுடைய படை முறியடிக்கப்பட்டதால் அவள் நாட்டை விட்டோடினள்.

இஸபெல்லாவின் வீழ்ச்சிக்குப் பிறகு எட்டு ஆண்டுகள் நாட்டில் குழப்பங்கள் மிகுந்திருந்தன. 1873 முதல் இரண்டாண்டுகள் ஸ்பெயின் நாட்டில் குடியரசு நிலவியது. ஆனால், மக்கள் அரசியலுணர்வு பெருத காரணத்தினால் அது விரைவில் சிதைந்தது. எனவே, 1874ஆம் ஆண்டு பூர்போன் மரபினர் மீண்டும் ஸ்பெயின் நாட்டின் அரசராஞர்கள். இதன் பிறகு 1923ஆம் ஆண்டுவரை முதலில் பூர்போன் மரபினரும், பிறகு ஸ்பெயின் அரச மரபைச் சேர்ந்தவர்களும் அரசியலமைப்பிற்கு உட்பட்டு ஆட்சி செலுத்தினர். இவ்வரசியலமைப்பு ஆங்கில அரசியலமைப்பை ஒத்திருந்தபோதிலும், நடைமுறையில் அதனின்று வேறுபட்டிருந்தது. இதற்கு முக்கிய காரணம் ஸ்பெயின் மக்களிடையே அரசியல் உணர்வு காணப்படாமையாகும். மேலும், இஸபெல்லா அரசியார் காலத்தில் நிகழ்ந்த சச்சரவுகள் மக்களின் எண்ணங்களில் பிரதிநிதித்துவ முறையின் மீது வெறுப்பை ஏற்படுத்தியிருந்தன. இந்த மனப்பான்மை பல ஆண்டுகளுக்குப் பிறகு பதின்மூன்ரும் அல்ஃபோன்ஸோ (Alfonso XIII) என்னும் மன்னர் காலத்தின்தான் சிறிது மாறியது. 1910ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை அளிக்கப்பட்டது. ஆனால், நாட்டில் மக்களாட்சி திறமையுடன் இயங்குவதற்குத் தேவையான அளவு ஸ்பெயின் மக்களிடையே அரசியலுணர்வு ஏற்படவில்லை. எனவே, பெயரளவில் மக்களாட்சி நிலைபெற்றிருந்த போதிலும், உண்மையில் அரசாங்க அதிகாரம் மன்னரிடமே யிருந்தது. அரசாங்கத்தில் மன்னருக்கு உறுதுணையாக இருந்தவை கத்தோலிக்கத் திருச்சபையும், போர்ப்படையுமாகும். சட்டமன்றம் மன்னரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட போராட்டங்களின் உறைவிடமா யிருந்தது. ஆகவே 1923ஆம் ஆண்டு அல்ஃபோன்ஸோ மன்னர் சட்டமன்றத்தையும் அமைச்சரவையையும் கலைத்துவிட்டுத் தளபதி ப்ரிமோ டி ரிவேரா (General Primo de Rivera) என்பவரின் தலைமையில் படை வல்லாட்சியை நிறுவினர். இந்த மாற்றம் ஏற்படும்வரை ஸ்பெயின் நாட்டில் பெயரளவி லாகிலும் மக்களால் கட்டுப்படுத்தப்பட்ட முடியாட்சி நிலவியது என்று கூறலாம்.

ஜெர்மனி

1848ஆம் ஆண்டு பிரான்ஸில் தோன்றிய புரட்சி ஜெர்மனியிலும் பரவியது. நாடுமுழுவதும் முற்போக்கு வாதிகள் புதிய அரசியலமைப்புக்கள் வேண்டுமெனக் கிளர்ச்சி செய்தனர். ஆஸ்ட்ரியாவில் மெட்டர்நிக் நாட்டை விட்டோடினர். பேரரசர் முதலாம் ஃபெர்டினன்ட் முடிதுறந்தார். அவருக்குப் பதிலாக

பிரான்ஸிஸ் ஜோஸப் என்பவர் பதவியேற்றார். இவர் மக்களுடைய கோரிக்கைகளுக்கிணங்கி ஓர் அரசியலமைப்பை வழங்கினர். இது போலவே பிரஷ்யாவிலும் குழப்பங்கள் தோன்றின. எனவே நான்காம் பிரெடரிக் வில்லியம் என்ற அரசர் மக்களின் விருப்பப் படி அவர்களுக்கு அரசியலமைப்பொன்றை நல்கினர். இது போலவே மற்ற சிற்றரசர்களும் புதிய அரசியலமைப்புக்களை ஏற்படுத்தினர். ஆனால், இவ்வாறு புரட்சிகளின் பயனகத் தோன்றிய அரசியலமைப்புக்கள் நிலைத்திருக்கவில்லை. ஏனெனில், புரட்சிக்குப் பிறகு அமைதி நிலவியபோது, ஜெர்மானிய அரசர் கள் தாம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக மீறினர்கள். எனவே, மிக விரைவில் வல்லாட்சிகள் மீண்டும் தலைதூக்கின. முற்போக்கு இயக்கத்தின் இத்தோல்வி முற்போக்கு வாதிகள் மீண்டும் தலையெடுக்க முடியாமல் செய்துவிட்டது. மேலும், இக்காலத்தில் ஜெர்மானிய நாடுகளை ஓரரசாக ஒன்று படுத்துவது முற்போக்கு இயக்கத்தினால் இயலாது என்பதும் புலனாயிற்று. ஆகவே, இவ்வியக்கம் 1849 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஜெர்மனியில் இறந்துபட்டதென்று கூறலாம். அது மீண்டும் முதல் உலகப் போருக்குப் பிறகுதான் புத்துயிர் பெற்றது. எனவே, 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜெர்மனியில் மக்க ளாட்சி வளர்ச்சிபெறவில்லை. பிஸ்மார்க்கின் இணையற்ற அரசியல் திறத்தினால் பிரஷ்ய மன்னரின் ஆதிக்கமே அங்கு ஆழ வேரூன்றி யிருந்தது. 1871 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பேரரசு ஓர் அரசிய லமைப்பை அடிப்படையாகக் கொண்டிருந்ததெனினும், அது மக்களுடைய உரிமைகளைப் பெரிதெனக் கருதவில்லை. மக்களின் பிரதிநிதிகளாக் கொண்ட சட்ட மன்றம் மன்னருக்கு அறிவுரை கூறும் அதிகாரத்தைப் பெற்றிருந்ததேயன்றி, அவரது ஆணைக்கு வரம்பிடும் ஆற்றலைப் பெறவில்லை. சட்டமன்றத்தின் மேல் சபையான கூட்டாட்சி அவையில் (Federal Council) ஜெர்மானிய அரசர்களின் பிரதிநிதிகள் உறுப்பினராக இருந்தனர். இவர் களுள் பதினேழு பேர்களை பேரரசர் பிரஷ்யாவின் அரசர் என்ற முறையில் நியமித்தார். எனவே, இந்த அவை பேரரசரின் ஆணை களுக்கெல்லாம் இசைந்தது. சட்ட மன்றத்தின் கீழ்சபையாகிய பேரரசு மன்றம் (Imperial Diet) மக்களின் பிரதிநிதிகளை உறுப் பினராகக்கொண்டு சட்டமியற்றும் அதிகாரங்களைப் பெற்றிருந்த போதிலும், அரசியலமைப்பில் காணப்பட்ட வேறு சில விதிகளின் காரணமாக உண்மையில் அதிகாரமற்றிருந்தது. உதாரணமாக, அது இயற்றும் சட்டங்களை மேல்சபை மறுக்கலாம். மேலும் மேல்சபை கீழ்சபையைக் கலைக்கும் அதிகாரம் பெற்றிருந்தது. கீழ்சபை பேரரசரின் ஆணைக்கிணங்காதபோதெல்லாம், அது கலைக்கப்பட்டு புதியதொரு சபை நிறுவப்பட்டது. மேலும், கீழ்

சபை செயல்துறை அதிகாரத்தையும், பொதுப்பணித் துறையையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெறவில்லை. போர், சமாதானம் போன்ற விஷயங்களிலும் கீழ் சபைக்கு அதிகாரம் கிடையாது. செயல்துறை அதிகாரத்தைப் பெற்றிருந்த சான்ஸலர் (Chancellor) என்ற முதலமைச்சர் பேரரசருக்கு மட்டும் கட்டுப்பட்டிருந்தார். இவ்வாறு 1871 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அரசியலமைப்பானது மக்களாட்சியை முகப்பாகக் கொண்டிருந்தபோதிலும், உண்மையில் அது ஒரு தனி வல்லாட்சியாகவே விளங்கியது. இந்த அரசியலமைப்பு முதல் உலகப் போர்வரை நிலைத்திருந்தது. அதற்குப் பிறகு வெய்மார் அரசியலமைப்பு (The Weimar Constitution) ஜெர்மனிக்கு அளிக்கப்பட்டபோதுதான் அந்நாட்டு மக்கள் முதன் முதலாக உண்மையான மக்களாட்சியைப் பெற்றனர். எனவே, 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளும் மக்களாட்சி பெற்றிருக்க, ஜெர்மனி மட்டும் பிரஷ்ய மன்னரின் வல்லாட்சியின்கீழ் இருந்தது.

இத்தாலி

ஜெர்மனி பிரஷ்யாவின் வலிமையினால் ஒற்றுமைப்படுத்தப்பட்டதால், அதன் பிறகு அங்கு நிறுவப்பட்ட ஆட்சியமைப்பு பிரஷ்ய அரசரின் அதிகாரத்தை நடுவிடமாகக் கொண்டிருந்தது. எனவே, அங்கு மக்களாட்சி வளர இயலாமற் போனது. ஆனால், இத்தாலியில் நாம் முன்னர் இயலில் கூறியது போல் மக்களுடைய ஒத்துழைப்பினால் ஒற்றுமை நிலைநாட்டப்பட்டது. 1871 ஆம் ஆண்டு முற்றுப் பெற்ற இத்தாலிய ஒற்றுமையை (Unification of Italy) மக்களின் இயக்கத்தின் பயனென்றே கூற வேண்டும். ஆகவே, ஒற்றுமைக்குப் பிறகு விக்டர் எம்மானுவேல் இத்தாலியின் மன்னரான போதிலும், அவருடைய ஆட்சி மக்களின் இசைவெனும் அடித்தளத்தின்மேல் எழுப்பப்பட்டிருந்தது. அவரது அமைச்சரான கவூர் (Cavour) பிஸ்மார்க் ஜெர்மனியில் கடைப்பிடித்த கொள்கையை மறுத்து, மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தின் துணையுடனே மன்னர் அரசாங்கத்தை நடத்த வேண்டுமெனக் கூறினர். ஆகவே, ஒன்றுபட்ட இத்தாலியில் கவூரின் திட்டப்படி மக்களின் இசைவு பெற்றதும், அரசியலமைப்பிற்குட்பட்டதுமாகிய முடியாட்சி நிறுவப்பட்டது. இது முதல் உலகப்போரின் இறுதிவரை நிலைத்திருந்தது. ஆனால், கவூருக்குப் பிறகு பதவியேற்ற அமைச்சர்களின் திறமையின்மையினாலும் அதிகார வெறியினாலும், இந்த அரசியலமைப்பு நலிவுற்று இறுதியில் முசோலினியின் (Mussolini) எழுச்சிக்கு வழி வகுத்தது. இதைப்பற்றி அடுத்த இயலில் விரிவாகப் பார்ப்போம்.

மற்ற ஐரோப்பிய நாடுகள்

1848 ஆம் ஆண்டுக்குப் பிறகு மத்திய ஐரோப்பாவில் மக்களாட்சிபெற்ற அரசுகளில் மற்றொன்று சுவிட்ஸர்லாந்து. வியன்னாத் திட்டப்படி சுவிட்ஸர்லாந்தின் பகுதிகளாகிய கோட்டங்கள் (Cantons) ஒரு நெகிழும் நாட்டுக் கூட்டமாக (A Loose Confederation) நிறுவப்பட்டிருந்தன. 1848 ஆம் ஆண்டு கத்தோலிக்கக் கோட்டங்கள் இந்த அமைப்பிலிருந்து விலக முயன்ற போது, நாட்டில் குழப்பங்கள் தோன்றின. இறுதியில் ஒரு புதிய அரசியலமைப்பு எழுதப்பட்டு அதன்படி சுவிட்ஸர்லாந்து ஒரு குடியரசானது. இதன் நடு அரசாங்கம் இரு அவைகளைக் கொண்ட ஒரு சட்டமன்றத்தையும், ஏழு உறுப்பினரைக் கொண்ட ஒரு செயற் குழுவையும் சிறப்பியல்புகளாகக் கொண்டிருக்கிறது. இதன் பிறகு சுவிட்ஸர்லாந்தில் மக்களாட்சி தடையேதுமின்றி வளர்ந்து, மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

டென்மார்க்கில் 1849 ஆம் ஆண்டில் பிரதிநிதித்துவ நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. புதிதாகத் தோன்றிய ஸெர்பியா, புல்கேரியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மக்களாட்சியைப் பெற்றன. பழமையான முடியாட்சிகளைப் பெற்றிருந்த ரஷ்யா, துருக்கி போன்ற நாடுகளிலும் கூட மக்களாட்சிக் கொள்கைகள் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டன. 1867 ஆம் ஆண்டு கனடாவும், 1900 ஆம் ஆண்டு ஆஸ்ட்ரேலியாவும் குடியேற்ற உரிமை நாட்டு நிலை (Dominion Status) யடைந்து மக்களாட்சி பெற்றன. இது போலவே தென் அமெரிக்காவிலும் ஆசியாவிலும் சில அரசுகள் மக்களாட்சி பெற்றன.

இவ்வாறு 1848 ஆம் ஆண்டிற்குப் பிறகு மக்களாட்சி விரைவாகப் பரவியது. முதல் உலகப் போரின் தொடக்கத்தின்போது ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும், ஐரோப்பாவிற்கு வெளியே பல நாடுகளிலும் மக்களாட்சி நிலைபெற்றிருந்தது. எல்லா நாடுகளிலும் மக்கள் ஒரே அளவு செல்வாக்குப் பெற்றிருந்தனரென்று கூறமுடியாது. ஜெர்மனியைவிட இங்கிலாந்தில் மக்கள் அதிக அளவு அதிகாரம் பெற்றிருந்தனர். பிரான்ஸில் மக்கள் தமது இறைமையை எவ்வாறு சீராகப் பயன்படுத்துவதென்று உணராமல் இருந்தனர். பெல்ஜியம் போன்ற நாடுகளில் மக்களின் இசைவை அடிப்படையாகக்கொண்டு, அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சி நிலைபெற்றிருந்தது. ரஷ்யா, ஆஸ்ட்ரியா, ஸ்வீடன் போன்ற நாடுகளில் மக்களாட்சியின் நிறுவனங்கள் முடியரசர்களின் வலிமையினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. துருக்கி

யிலும், ஆசியாவிலும் மக்களாட்சி பெயரளவில் மட்டுமே நிலைத் திருந்தது. ஆனால், மக்களாட்சியில் இவ்வித ஏற்றத் தாழ்வுகளும் வேறுபாடுகளும் காணப்பட்டபோதிலும், கொள்கையளவில் அவ் வாட்சி எல்லா நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அரசியல் மேடையின் மீது ரூஸோ கொண்டு வந்த மக்களை இனிப் புறக்கணிப்பது இயலாத காரியமாயிற்று. முதல் உலகப் போருக்குப் பிறகு மக்களாட்சி சற்று நலிவடைந்தபோதிலும், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அது மீண்டும் புத்துயிர் பெற்று, உலகின் பெரும்பான்மையான பகுதிகளில் இன்று நிலை பெற்றிருக்கிறது. இந்த நூற்றாண்டில் நிகழ்ந்த இரண்டு உலகப் போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் மக்களாட்சியின் வளர்ச்சி ஏன் தடைப்பட்டதென்று அடுத்த இயலில் பார்ப்போம்.

---

5. உலகப் போர்களுக்கிடையே எழுந்த சர்வாதிகார அரசுகள்

முதல் உலகப் போருக்கு முன்னால் மக்களாட்சி யாங்கணும் பரவி வளர்ச்சியுற்றதெனச் சென்ற இயலில் பார்த்தோம். நாகரிக மடைந்த நாடுகள் என எண்ணப்பட்ட எல்லா நாடுகளும் பொறுப்புள்ள அமைச்சரவை, பிரதிநிதித்துவ மன்றங்கள், மக்க ளின் வாக்குரிமை போன்ற மக்களாட்சிக் கோட்பாடுகளைப் பெரும் பாலும் ஏற்றுக்கொண்டன. அரசியல் துறையில் நிலவிய முற் போக்குக் கொள்கையானது பொருளாதாரத் துறையிலும் தலை யிடாக் கொள்கையாக (Laissez Faire) எதிரொலித்தது. இப்பொரு ளாதாரக் கொள்கையையேற்றுச் செயல்படுத்திய ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் வாணிகம் தழைத்து, செல்வம் கொழித்தது. ஆயினும், முதலாளித்துவ முறையில் பல குறைகள் காணப்பட்டன. இதன் விளைவாக மக்க ளிடையே செல்வ நிலையில் ஏற்றத் தாழ்வுகள் தோன்றின. முதல் உலகப் போர் முடிந்த பிறகு, உலகிலே ஒரு புறம் வறுமையும் மறு புறம் செழிப்பும் காணப்பட்டது. பல நாடுகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உணவும் உடையுமின்றி வருந்தச், சில நாடு களில் தானியங்கள் தேவைக்கு மிகுதியாக இருக்கின்றன என்ற காரணத்தினால் அழிக்கப்பட்டன. போரினால் நொறுக்கப்பட்ட நாடுகளில் உணவு உற்பத்தி குறைந்து, தொழில் வளங் குன்றி, மக்கள் வறுமையால் வாடினர். இதைக் கண்ட மக்கள் பாரா ளு மன்றம், மக்களாட்சி, தலையிடாக் கொள்கை ஆகியவற்றின்

மேலுள்ள நம்பிக்கை யிழந்தனர். இதன் விளைவாக ஐரோப்பாவில் சர்வாதிகார அரசுகள் (Totalitarian States) தோன்றின.

அ. சர்வாதிகாரக் கொள்கையின் பொருள்

தற்கால அரசியல் நூலில் சர்வாதிகார அரசு எனும் சொல் முற்போக்கு மக்களாட்சிக்கு (Liberal Democracy) எதிர்ப்பதமாகப் பயன்படுத்தப்படுகிறது. சர்வாதிகார அரசானது தனிமனிதனின் வாழ்க்கை முழுவதையும் தனது ஆணைக்குள் அடக்கி வைக்கிறது. மனித வாழ்வின் ஒரு பகுதிகூட அதன் கட்டுப்பாட்டிற்குப் புறம்பானதல்ல. சர்வாதிகாரக் கொள்கையின்படி, வாழ்க்கை தனிமனிதனுக்குச் சொந்தமானதன்று. அது அவனுக்கு அரசினால் கொடுக்கப்பட்ட நம்பகப் பொருள். ஆகவே, அவன் அதை அரசின் பணியிலே பயன்படுத்த வேண்டும். இக்கொள்கைக்குத் தற்காலத்தில் தத்துவ உருக் கொடுத்தவர் ஹெகல் (Hegel) என்ற அரசியல் தத்துவ ஆசிரியராவர். அவரது கருத்தின்படி "அரசானது நிலவுலகில் நிலவும் கடவுள்". அதற்கு எல்லா வல்லமையும், தவறு இயல்பும் உண்டு. முசோலினி கூறியது போல், "அரசிற்குப் புறம்பானது ஒன்றுமில்லை." ஆகவே, சர்வாதிகார நாடுகளில் அரசு வழிபாடு (State Worship) வளர்க்கப்படுகிறது. அங்கு மதம், ஒழுக்கம், கல்வி எல்லாம் அரசின் அதிகாரத்திற்குட்படுகின்றன. சமுதாயத்திற்கும், அரசுக்குமுள்ள வேறுபாடு முற்றிலும் நீக்கப்படுகிறது.

சர்வாதிகாரக் கொள்கை பல்வேறு நாடுகளில் பலவிதமான உருவைப் பெற்றுள்ளது. ரஷ்யாவில் பொது உடைமையாகவும், இத்தாலியில் பாஸிஸக் கொள்கையாகவும், ஜெர்மனியில் நாஜிக் கொள்கையாகவும் உருமாறித் தோன்றியது. ஆனால், இவை ஒரு கோட்பாட்டை ஏற்றுக்கொண்டதனால் பிறந்த இயக்கங்கள் அல்ல. அதற்கு மாறாக, அந்தந்த நாடுகளில் காணப்பட்ட சூழ் நிலைகளுக்கேற்பத் தோன்றிய இந்த இயக்கங்கள் பிறகு ஒரு கொள்கை வடிவைப் பெற்றன. முதல் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட சீர்குலைந்த நிலையே இவற்றின் எழுச்சிக்கு முக்கிய காரணமாகும். இவை முளைத்து வளர்ந்த வரலாற்றைப் பார்க்குமுன், சர்வாதிகார அரசின் இயல்புகளைக் காண்போம்.

முதலாவதாக, சர்வாதிகார அரசில் பகுத்தறிவு பழிக்கப்பட்டு, இயல்புணர்ச்சியும், மனவெழுச்சியும் பாராட்டப்படுகிறது. இறைவனின் திரு உருவில் மனிதன் படைக்கப்பட்டான் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இரண்டாவதாக, சர்வாதிகார அரசில் வல்லாட்சி நிலவுகிறது. அது முற்போக்குக்

கொள்கைக்கும், பாராளுமன்ற முறை அரசாங்கத்திற்கும் முரணானது. அங்கு ஒரு தனிமனிதனுக்கு அல்லது ஒரு தனிக் கட்சிக்கு மேலான அதிகாரம் வழங்கப்படுகிறது. அம் மனிதனுக்கு அல்லது அக்கட்சிக்கு அனைவரும் அடிபணிய வேண்டும். அங்குப் பாராளுமன்ற முறைக்கோ, அல்லது மக்களாட்சிக்கோ இடம் கிடையாது. பாராளுமன்றத்தில் நிகழும் வாதங்கள் வீணானவை என்றும், பயன்தர இயலாதவை என்றும் கருதப்படுகிறது. மக்களாட்சியானது அழிந்துகொண்டிருக்கும் ஓர் இறந்த உடல் என ஒரு பாஸிஸ அதிகாரி கூறினர். ஆகவே, சர்வாதிகாரிகள் நேரடியான செயலில் இறங்குகின்றனர். மூன்றாவதாக, சர்வாதிகார அரசு தனிமனிதனின் உரிமைகளை நசுக்கிச் சவட்டுகிறது. அவற்றைப் பொது உடைமைவாதிகள் முதலாளித்துவத்தின் சின்னம் என்று எள்ளி நகையாடுகின்றனர். ஆகவே, சர்வாதிகார அரசுகளில் எண்ண உரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை போன்ற அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அங்கு அரசியல் எதிர்ப்புக் கிடையாது. அதாவது, ஆளும் கட்சியைத் தவிர வேறு அரசியல் கட்சி எதுவும் கிடையாது. அங்கு ஒரே கட்சி ஆட்சிதான் நிலவுகிறது. நான்காவதாக, சர்வாதிகார நாடுகளில் மக்களிடையே குறுகிய தேசீய உணர்ச்சி தூண்டப்பட்டு, அதனால் பிற நாடுகளைக் கவரும் ஆதிக்க உணர்வு வளர்க்கப்படுகிறது. ஆகவே, இந்நாடுகள் உலக சமாதானத்தை இகழ்ந்து, போர்க் கூச்சலைக் கிளப்பி, உலகை அழிவுப் பாதையிலே இழுத்துச் செல்கின்றன. ஐந்தாவதாக, சர்வாதிகார அரசுகளில் மத உரிமை பறிக்கப்படுகிறது. சிலவேளை அவை மதத்தைத் தம் கைக்கருவியாகவும் பயன்படுத்துகின்றன. A. J. ஸ்பென்டர் (A. J. Spender) கூறுவது போல, "ரஷ்யா மதத்தை அழிக்க முயன்றது; முசோலினி அதன் ஆற்றலைக் குறைக்க முயன்றார்; ஹிட்லர் அதைத் தம் ஆட்சியுடன் சேர்க்க முயற்சி செய்தார்." இறுதியாக, சர்வாதிகாரிகள் பாமரக் கும்பலின் ஆதரவைப் பெற்றே அதிகாரத்தைக் கவர்கின்றனர். முதலில் ஒரு சிலர் சர்வாதிகாரக் கொள்கைகளையும், முறைகளையும் மக்களிடையே பரப்புகின்றனர். பாமர மக்களின் உளப்பாங்கறிந்து, அதற்கேற்ற முறையில் அவர்களை நேரடியான கொடுஞ் செயல்களில் ஈடுபடுத்துகின்றனர். ரஷ்யாவில் பொது உடைமைவாதிகள் உடையும் உணவும் அளிப்பதாக வாக்களித்து மக்களைத் தம்பக்கம் ஈர்த்தனர். ஜெர்மனியிலும், இத்தாலியிலும் சர்வாதிகாரிகள் வெறுப்பு, பழி, குறுகிய நாட்டுப்பற்று முதலிய உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு பாமரர்களைக் கவர்ந்தனர். கீழான உணர்ச்சிகளும், மனவெழுச்சிகளும் எழுப்பப்பட்டதால் பாமரர்கள் கண்மூடித்தனமாகச் சர்வாதிகாரிகளைப் பின்பற்றினர். பயிர்களை அழிக்கப் புறப்படும் வெட்டுக்கிளிகளின் கூட்டம்போல்

அவர்களும் படைக்கலந் தாங்கித் திரண்டெழுந்து புரட்சியை நடத்தினர். இத்தகைய புரட்சிகள் ரஷ்யா, இத்தாலி, ஜெர்மனி போன்ற நாடுகளில் எத்தகைய சர்வாதிகார ஆட்சிகளை நிறுவிய தென்று இப்போது விரிவாகப் பார்ப்போம்.

ஆ. ரஷ்யாவில் பொதுவுடைமை ஆட்சி

ரஷ்யப் புரட்சி

முதல் உலகப்போரின் ஒரு பெரும் விளைவு என்னவென்றால் ஐரோப்பாவின் பெரும் பகுதியில் சமூகக் கட்டுப்பாடு தகர்ந்தது மக்களுக்கு அதிகாரத்தின் மீதுள்ள நம்பிக்கை தளர்ந்தது. சமூக நிலை குலைந்த இக்காலத்தில் போரில் தோற்கடிக்கப்பட்ட நாட்டு மக்கள் தமக்குப் புதிய பாதை காட்டக்கூடிய தலைவர்களைத் தேடினார்கள். முக்கியமாக ரஷ்யாவிலே இந்த அவல நிலை ஏற்பட்டது. அங்கு அரசாங்கம் வலுவிழந்து, சீர்குலைந்து உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தது. அங்குத்தான் புரட்சிக்கேற்ற தக்க சூழ்நிலை உருவாகியிருந்தது. ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளை விட ரஷ்யாவில்தான் அந் நெருக்கடியான நிலையில் ஒரு புரட்சி வீரனும் ஒரு கொள்கையும் விரைவில் தோன்ற முடிந்தது.

ரஷ்யாவின் சீர்கேடான அரசியல், சமூக முறைகளே புரட்சியின் முக்கிய காரணங்களாக இருந்தன. ரஷ்ய மன்னரான ஜார் (Czar) அரசிற்கும், மதத்திற்கும் இணையற்ற தலைவராக இருந்தார். நாடு பகைவரால் சூழப்பட்டிருந்த காலத்தில் இத்தகைய தனியாட்சி நாட்டிற்கு நற்பயனளித்தது. ஆனால், ஐரோப்பிய நாடுகளில் முதலிடம் பெற்ற அரசுகளில் ஒன்றாக ரஷ்யா திகழத் தொடங்கியதும், வல்லாட்சி தேவைப்பட வில்லை. ஆனால், ஜார் தம் அதிகாரங்களில் எதையேனும் கைநெகிழவிட விரும்பவில்லை. இரண்டாம் அலெக்ஸாண்டர் மன்னர் அரசியலமைப்பைச் சீர்படுத்த முயன்றார். ஆனால், அதற்குள் அவர் கொல்லப்பட்டார். அவருக்குப் பின் வந்தவர்கள் பழைய வல்லாட்சி முறையையே பின்பற்றினர்கள். 1905ஆம் ஆண்டு 2ஆம் நிக்கொலாஸ் அரசர் அளித்த அரசியலமைப்பும், அதன் பிறகு செய்யப்பட்ட அரசியல் மாற்றங்களும் வெறும் வெளித் தோற்றங்களாக இருந்தனவேயன்றி, அரசரின் மேலாண்மையைக் குறைக்கவில்லை. அமைச்சர்களும், அரசாங்க அதிகாரிகளும் அரசனுக்கே பணிந்து நடந்தனர். எவரையும் காரணங் காட்டாமல் சிறைப்படுத்தவோ, நாடு கடுத்தவோ அரசருக்கு அதிகாரமிருந்தது. அவர் ரஷ்ய (கிரேக்க) மத சபையின் தலைவராக இருந்ததால், இறைவனின் பிரதிநிதியாகவும் கருதப்பட்டார்.

ரஷ்ய சமூகத்தில் காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகளும் புரட்சிக் கனலை மூட்டின. அரசாங்க அதிகாரிகளும் உயர் குடி மக்களும் அரசரிடமிருந்து தனிச் சலுகைகள் பெற்றிருந்தனர். அவர்கள் தனி உரிமைகள் பெற்றதின் காரணமாக ஏழைக் குடியானவர்களைக் கசக்கிப் பிழிந்து செல்வம் திரட்டினர்கள். உயர்தரக் கல்வி அவர்களின் தனியுடைமையாக இருந்தது. குடியானவர்கள் சமூகத்தில் தாழ்ந்த நிலையைப் பெற்றிருந்ததற்கு அவர்களின் பொருளாதார நிலை ஒரு காரணமாகும். நிலமானிய முறையினின்று விடுதலை பெற்ற பிறகும் அவர்களது நிலை மிகவும் இழிந்ததாகவே இருந்தது. ஏனெனில், ஒவ்வொரு குடியானவனும் தனது நிலத்தைத் திரும்பப் பெறுவதற்கு அதிகப் பணம் கொடுக்க வேண்டி யிருந்ததுமல்லாமல், அவனுக்குக் கிடைத்த நிலமும் மிகச் சிறியதாயிருந்தது. மேலும், போர்களின் காரணமாக வரிப் பளுவும் அதிகரித்துக்கொண்டே போனது. 1906 ஆம் ஆண்டு மீந்து நின்ற எல்லா நில மீட்புத் தொகையையும் (Land redemption payment) அரசாங்கம் தள்ளுபடி செய்தபோதிலும், குடியானவர்களின் நிலை உயரவில்லை.

நாட்டுப் புறங்களிலிருந்தது போலவே நகரங்களிலும் தொழிலாளர்கள் மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்தனர். முதலாளிகள் அவர்களிடம் கடும் வேலை வாங்கிக் குறைந்த கூலி கொடுத்தனர். தம் உரிமைகளைப் பெறுவதற்காக அவர்கள் அமைத்த தொழிற் சங்கங்களுக்கு அரசாங்கம் தடை விதித்தது. ஆகவே மேற்கு ஐரோப்பாவிலிருந்து ரஷ்யாவிற்குள் பரவிக் கொண்டிருந்த புரட்சிக் கருத்துக்கள் இவர்களின் உள்ளங்களிலே கோபத் தீயைக் கொழுந்து விட்டெரியச் செய்தது. லியோ டால்ஸ்டாய், மாக்ஸிம் கார்க்கி போன்ற புரட்சி எழுத்தாளர்கள் ஏழைகளின் இழிந்த நிலையை எடுத்துக்காட்டிப் பழைய எண்ணங்களைத் தகர்த்தெறியும் புதிய எண்ணங்களைப் புகுத்தினர். ஆனால், இவற்றைவிட ரஷ்யப் புரட்சியை ஏற்படுத்திய முக்கியமான கருத்துக்கள் கார்ல் மார்க்ஸ் என்ற ஜெர்மானிய யூதரின் கருத்துக்கள்தாம். அவருடைய "பொதுவுடைமைக் கொள்கை அறிக்கை" (Communist Manifesto) என்ற நூலே ரஷ்யப் புரட்சியின் மறை நூலாக இருந்தது.

இவ்வாறுகப் புரட்சிக்கான சூழ்நிலை உருவாகி வரும்போது 1914ஆம் ஆண்டு முதல் உலகப் போர் தொடங்கியது. அப்போது ரஷ்யர்கள் தம் வேறுபாடுகளை மறந்து மன்னருக்குத் துணையாகப் போரிலிறங்கினர்கள். ஆனால், விரைவில் ஜெர்மனி ரஷ்யப் படைகளைத் திரும்பத் திரும்ப முறியடிக்கவும், ரஷ்யர் உள்ளங்களிலே ஏமாற்றம் கலந்த ஒரு வெறுப்புணர்ச்சி படர்ந்தது. இந் நிலையில் உணவு நெருக்கடியும் ஏற்படவே,

மக்களின் புரட்சிக் குரல் வானைப் பிளந்து ஒலித்தது. அப்போது ரஷ்யநாடு இதுவரை கண்டிராத மாபெரும் கிளர்ச்சி தோன்றியது.

1917 ஆம் ஆண்டு நிகழ்ந்த ரஷ்யப் புரட்சியை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். அதாவது, ஜாரின் ஆட்சியைக் கவிழ்த்ததும், தொழிலாளரின் ஆட்சியை நிலை நாட்டியதுமாக இரு பகுதிகள். 1917 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் நிகழ்ந்த தொழிலாளர் எழுச்சியின் விளைவாக 2ஆம் நிக்கொலாஸ் என்ற ஜார் மன்னர் முடி துறந்தார். புரட்சிக்காரர்களின் வேண்டுகோளின்படி வலப்புறக் கட்சி (Right Wing) யாகிய மென்ஷவிக் (Mensheviks) என்ற சிறுபான்மைக் கட்சியினர் தற்காலிகமான அரசாங்கத்தை அமைத்தனர். ஆனால், இதனால் ஏமாற்ற மடைந்த லெனின் சுவிட்ஸர்லாந்திலிருந்து ரஷ்ய நாடு திரும்பித் தொழிலாளரின் உணர்ச்சிகளைத் தட்டி யெழுப்பி, நவம்பர்த் திங்களில் மற்றொரு புரட்சியை நடத்தினர். இதன் விளைவாக இடப்புறக் கட்சியாகிய போல்ஷவிக் (Bolsheviks) என்ற பெரும்பான்மைக் கட்சி ஆட்சி யேற்றது. லெனினின் தூண்டுதலின்படி ஜெர்மனியுடன் உடனே சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டது. ரஷ்யாவிலிருந்த தனி நிலச்சுவான்களின் நிலங்கள் பறிக்கப்பட்டுக் குடியானவர் களுக்கு வழங்கப்பட்டன. மேலும், சோவியத் என்றழைக்கப்பட்ட தொழிலாளரின் குழுக்களுக்கு உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டது. இவ்வாறுக ரஷ்யா ஒரு "சோவியத் குடியரசாக" மாறியது.

லெனின் ஏற்படுத்திய இப்புதிய ஆட்சிக்கு ஒரு பேராபத்து வந்தது. ரஷ்யா தான் பெற்றிருந்த அயல் நாட்டுக் கடன்களைத் தள்ளுபடி செய்ததும், ஆயிரக்கணக்கான பிரிட்டிஷ், பிரான்ஸ் பங்காளிகள் (Shareholders) வெகுண்டெழுந்து, ரஷ்யப் பிரபுக்கள் நிலச்சுவான்கள், நடுத்தர வகுப்பினர் ஆகியோரின் துணை கொண்டு தம் வெண்படை (White Army) யுடன் அரசாங்கத்திற் கெதிராகக் கிளர்ச்சி செய்தனர். ஆனால் 1920 ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்குள் லெனினுடைய செம்படை (Red Army) வெண் படையை முறியடித்து உள்நாட்டுப் போருக்கு முற்றுப்புள்ளி யிட்டது. வெண்படையின் முதுகெலும்பை முறித்த பெருமை ட்ராட்ஸ்கி (Trotsky) என்ற போர்த் தலைவரைச் சாரும்.

வன்முறையிலே தோன்றிய ரஷ்யப் புரட்சி வன்முறையையே கையாண்டு புரட்சி ஆட்சியை நிலை நாட்டியது. பலத்தினால் ஆட்சியைக் கைப்பற்றிய பொதுவுடைமைக் கட்சியினர் தமது பகை வரை நொறுக்கப் பலத்தைப் பயன்படுத்திப் பயங்கர ஆட்சியை நிலை நாட்டினர். முதலாளிகளையும் நடுத்தர வகுப்பினரையும் நசுக்க அவர்கள் பயங்கரமான அடக்குமுறைகளைக் கையாண்டனர்.

புரட்சியை ஆதரிக்காத எல்லோரும் இரக்கமின்றிச் சுட்டுத்தள்ளப் பட்டனர். ஏறக்குறைய பத்து இலட்சம் பேர் கொல்லப்பட்டதாகக் கருதப்படுகிறது. "செம்பயங்கரம்" (Red Terror) என்றழைக்கப் படும் இவ் வாட்சியானது கொடுமையில் பிரெஞ்சுப் புரட்சியின் போது நிறுவப்பட்ட பயங்கர ஆட்சியையும் விஞ்சியது.

பொதுவுடைமைத் தத்துவம்

பொதுவுடைமைக் கொள்கையானது பிளேட்டோவின் காலத் தைப் போல் பழமையானது. ஆனால், கார்ல் மார்க்ஸ் 1848 ஆம் ஆண்டில் அதற்கு ஒரு தத்துவ உருக் கொடுத்தார். அவரது கருத்துக்களை 'மூலதனம்' (Das Capital), "பொதுவுடைமைக் கொள்கை அறிக்கை" (Communist Manifesto) என்ற நூற்களில் காணலாம். அவர் ஹெகல் (Hegel) என்பார் தரும் வரலாற்று விளக்கத்தைப் பின்பற்றிச் சமூகம் மூன்று நிலைகளைக் கடந்து செல்லுமென்றும், அவை பழங்காலப் பொதுவுடைமை, வரலாற் றுக் காலச் சமூகம் எனப்படும் தற்காலத் தொழில் முறைச் சமூகம், வருங்கால இலட்சியப் பொதுவுடைமை ஆகியவை என்றும் கூறுகிறார். இந்தத் தர்க்க முறையை ஆதாரமாக வைத்துக்கொண்டு தமது தத்துவத்தை வளர்க்கின்றார். மார்க்ஸ் ஒரு பருப்பொருள் வாதி (Materialist). அவர் வரலாற்றுக்கு ஒரு பொருளாதார விளக்கம் தருகிறார். அதன்படி ஒழுக்கம், மதம், பண்பு, கல்வி, நாட்டுப்பற்று முதலியவை மனிதனின் செயல்களைப் பாதிப்பதைவிடப் பொருளாதாரக் காரணங்களே அதிகமாகப் பாதிக்கின்றன. ஒழுக்கம், மதம் போன்ற மற்றவையெல்லாம் பொருளாதார முறையினின்று தோன்றியவையல்லாமல் மனித வாழ்க்கையை நிர்ணயிப்பவையல்ல. இங்கிலாந்தில் தொழிற் புரட்சியினால் சமூகத்தில் ஏற்பட்ட பெரும் மாறுதல்களைக் கண்ட மார்க்ஸ் இந்த அவசர முடிவிற்கு வந்தார்.

பொதுவுடைமைத் தத்துவத்தின் இன்னொரு முக்கிய கொள்கை வகுப்புப் போர் (Class war). அதன்படி பழங்காலத்தி லிருந்தே மனித வரலாற்றில் வகுப்புக்களுக்கிடையே பிணக்கம் ஏற்பட்டு வந்துள்ளது. உதாரணமாக, அடிமைகளுக்கும் தலைவர் களுக்கும், ப்ளெபியருக்கும் பெட்ரீஷியருக்கும், நிலப்பிரபுக் களுக்கும் ஊழியர்களுக்கும் இடையே நிகழ்ந்த சச்சரவுகள் வகுப்புப் போரையே காட்டுகின்றன. அதைப் போல் தற்காலத் தில் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே பிளவு வளர்ந்து வருகிறது. இறுதியில் இது வலுத்துத் தொழிலாளர் கள் முதலாளிகளுக்கெதிராகக் கிளம்பிப் புரட்சி செய்து, தொழிலாளரின் வல்லாட்சியை (Dictatorship of the Proletariat) நிறுவிப் பொதுவுடைமைத் திட்டத்தை நிலைநாட்டுவார்கள்.

அதன் பிறகு வகுப்பற்ற சமூகம் நிலைபெறும். அரசு மறைந்து விடும். இவைதான் கார்ல் மார்க்ஸின் கொள்கைகளின் சுருக்கம். இவற்றை ஆர்வமுடன் பயின்ற லெனின் ரஷ்யாவில் ஒரு பொது வுடைமை அரசை அமைக்க விரும்பினர். இதற்கு முதற்படி முதலாளித்துவ சமூகத்தை அழிப்பது. அதைப் புரட்சியின் மூலம் அடையலாம் என்று லெனின் எண்ணினர். அடுத்தபடியாகத் தொழிலாளரின் வல்லாட்சியை நிலைநாட்டுதல். இதன்படி எல்லா உற்பத்தியையும் நாட்டு உடைமையாக்க (Nationalisation of all means of production) வேண்டும். இறுதியாக, வகுப்புப் பிரிவற்ற, அரசில்லாத சமூகம் நிலை நாட்டப்படுதல். முதலாளித்துவத்தின் இறுதி அடையாளங்களும் அழிக்கப்பட்டபின் தொழிலாளிகளின் அரசு மறைந்துவிடும். மார்க்ஸ் கூறுவதுபோல் "அரசு உதிர்ந்துவிடும்" (The State will wither away). அப்போது அரசியல் அதிகாரம், பணம், கூலி ஒன்றும் இருக்காது. மக்கள் ஒன்றுசேர்ந்து பொது நலத்திற்காக உழைப்பார்கள். ஒவ்வொரு வனும் தனது திறமைக்கேற்ப உழைப்பான். எல்லோரும் தமது தேவைக்கேற்ப ஊதியம் பெறுவார்கள். (From each according to his ability and to all according to their needs.)

இக்கொள்கைகளை எல்லாம் லெனின் நம்பி ஏற்றுக் கொண்ட போதிலும், அவற்றைப் பொருளாதாரத் துறையில் நடைமுறையில் செயலாற்ற முடியவில்லை. ஆகவே, அவற்றைக் கைவிட்டுப் புதிய பொருளாதாரத் திட்டம் (New Economic Policy) ஒன்றைப் பின் பற்றினர். இதன்படி தனியார் துறைக்குத் (Private Sector) தற்காலிகமாகச் சிறிதளவு இடமளிக்கப்பட்டது. இதனால் நாட்டின் பொருளாதார நிலை சீரானது.

1923 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு அறிவிக்கப்பட்டது. இதன்படி ரஷ்யா ஒரு கூட்டாட்சியானது. தொழிற்சாலை, கிராமம், நகரம், மாவட்டம், மாநிலம் ஆகியவற்றிலெல்லாம் சோவியத்துக்கள் ஏற்படுத்தப்பட்டன. 18 வயதுக்கு மேற் பட்ட தொழிலாளரனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. சோவியத்துக்களுக்கெல்லாம் மேலான தலைமை சோவியத்தில் (Supreme Soviet) இருஅவைகள் உண்டு. அது ஆட்சி அதிகாரம் செலுத்தும் அமைச்சரவையை நியமிக்கும். ரஷ்ய அரசாங்கம் வெளித் தோற்றத்திற்கு மக்களாட்சிபோல் காணப்பட்டபோதி லும், உண்மையில் ஒரு கட்சியால் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் அதை ஒரு சர்வாதிகார அரசு எனக் கூறலாம். மேலும், அது கூட்டாட்சியின் அமைப்பைப் பெற்றிருந்தாலும், ஒருமுக ஆட்சி யின் தன்மைகள் அதில் மிகுந்து காணப்படுகின்றன. இதைப் பற்றி இந்நூலின் 6 ஆம் பகுதியில் பார்ப்போம்.

ஸ்டாலின் ஆட்சி

கி. பி. 1924 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் லெனின் இறக்கவும் அவரது பதவிக்கு ஸ்டாலின், ட்ராட்ஸ்கி ஆகிய இருவர் போட்டி யிட்டனர். ஸ்டாலின் பொது உடைமைக் கட்சி யின் பொதுச் செயலாளராக இருந்ததால், கட்சியின் ஆதர வைப் பெற்று தமது பகைவர்களைக் கட்சியிலிருந்து வெளி யேற்றினர். பிறகு ட்ராட்ஸ்கியையும் அவர்களின் நண்பர்களையும் நாடு கடத்தினர். ட்ராட்ஸ்கி பல நாடுகளில் திரிந்து, இறுதியில் மெக்ஸிகோவில் ஒரு கொலையாளியின் கையால் மாண்டார். இவ் வாறாக ஸ்டாலின் 1928 ஆம் ஆண்டு ரஷ்யாவின் சர்வாதிகாரியா னார். இவரது ஆட்சியில் ரஷ்யப் பொது உடைமைத் திட்டத்தில் ஏற்பட்ட மாறுதல்களை இப்போது கவனிப்போம்.

ரஷ்யத் தொழில்முறையின் அடிப்படையான கொள்கை என்ன வென்றால், பொருட்களின் உற்பத்தி, வாணிகம் எல்லாம் அரசாங் கத்தின் பொறுப்பாகும். தனித்த முறையில் தொழில் செய்பவர் கள் பிறரைக் கூலிக்கு அமர்த்தி வேலை வாங்கக் கூடாதாகையால், வெகு சிலரே சுயேச்சையாகத் தொழிலாற்றுகின்றனர். மேலும் சட்டப்படி சுரங்கங்கள் காடுகள், வயல்கள், வீடுகள், நீர்ப்போக்கு கள், ஆலைகள் எல்லாம் அரசாங்கத்துக்குச் சொந்தமானவை. அதாவது, தனிச் சொத்துடைமைக்கு ரஷ்யாவில் இடமில்லை. மேலும் விற்றல், வாங்குதல், வெளிநாட்டு வாணிகம் எல்லாம் அரசாங்கத்தின் பொறுப்பு. அரசாங்கச் சேமிப்பு நிதிகள் தவிர வேறு பொருளகங்கள் (Banks) கிடையா. ஆகவே, நாணய வெளியீட்டைக் கூட்டவும், குறைக்கவும் அரசாங்கத்திற்கு எல்லா வாய்ப்புக்களும் இருக்கின்றன. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவ துடன் கூலியையும் நிர்ணயிப்பது எளிதாகின்றது. தொழிற் சங்கங்கள் ரஷ்யாவிலிருந்தபோதிலும், வேலை நேரத்தைக் குறைக்கவோ அல்லது கூலியை உயர்த்தவோ வேண்டுமென்று கேட்க அவைகளுக்கு உரிமை கிடையாது. இவைதான் உண்மை யிலே தொழிற்சங்கங்களின் முக்கியக் கடமைகள். ஆனால் ரஷ்யா வில் இவை நடு அரசாங்கம் கவனிக்க வேண்டிய வேலைகளாகும். வேலை நிறுத்தமும் ரஷ்யாவில் நடைபெற முடியாது. மக்களாட்சி நிலவும் வேறு முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்கள் ஒரு முதலாளியிடம் வேலை செய்ய விரும்பாவிட்டால் வேறொரு முதலாளியிடம் வேலைக்கமரலாம். ஆனால், ரஷ்யாவில் நாடு முழு வதற்கும் ஒரே முதலாளி. அதுதான் அரசாங்கம். அது கொடுத்த வேலையைத்தான் எவரும் செய்ய வேண்டும். மேலும் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்லவேண்டுமா னால், உள்நாட்டுக் கடவுச் சீட்டு (Internal Passport) பெறவேண்டும்.

ஸ்டாலின் கி.பி. 1928முதல் 1942வரை மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்து அவற்றைச் செயல்படுத்தினர். இவற்றின் விளைவாக நாட்டின் தொழில்வளம் பெருகியது. முதல் ஐந்தாண்டுத் திட்டப்படி பயிர்த்தொழிலிலும் பொதுவுடைமை புகுத்தப்பட்டது. இதற்காகப் பெரிய விவசாயிகளாகிய "குலாக்" (Kulak)களிடமிருந்து நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, கூட்டுடைமைப் பண்ணைகள் (Collective farms) அமைக்கப்பட்டன. அதை எதிர்த்த குலாக்குகள் நூற்றுக்கணக்கில் சுட்டுத் தள்ளப்பட்டனர். நாட்டின் பல பகுதிகளில் விவசாயிகள் கட்டாயமாக இப்பண்ணைகளில் சேர்க்கப்பட்டனர். அங்கு வேலை செய்யும் உறுப்பினர்களுக்கு அவரவர் வேலைக்குத் தக்க அளவில் பங்கு கிடைக்கும். ஆனால், என்ன பயிர் செய்வது, எம்முறையைப் பயன்படுத்துவது, என்ன கூலி கொடுக்க வேண்டும் என்ற விஷயங்களை அரசாங்கமே தீர்மானிக்கும்.

ரஷ்யாவில் 1936 ஆம் ஆண்டு ஒரு புதிய அரசியலமைப்பு புனையப்பட்டது. இதன்படி ரஷ்யா ஒரு கூட்டாட்சியாக அமைந்துள்ளது. கூட்டாட்சிப் பாராளுமன்றமாகிய தலைமை அவையில் (Supreme Council) இரண்டு சபைகள் உள்ளன. ஒன்று நாடு முழுவதிலுமிருந்து பிரதிநிதிகள் கூடும் சபை. மற்றது ஒவ்வொரு தனி மாநிலத்திலிருந்தும் (Republic) பிரதிநிதிகள் கூடும் சபை. அஃதாவது, ஒன்று நாட்டின் ஒற்றுமையையும், மற்றொன்று அதன் பல பிரிவுகளையும் எடுத்துக்காட்டுகிறது. தலைமை அவை மிகப் பெரிதாக இருப்பதால் அது ப்ரெஸீடியம் (Presidium) என்ற நிலையான குழுவொன்றை ஏற்படுத்துகிறது. தலைமை அவை நடு அரசாங்கத்தின் அமைச்சரவையைத் தேர்ந்தெடுக்கிறது. ஆனால், உண்மையில் அமைச்சர்கள் பொதுவுடைமைக் கட்சியினால் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். இந்த அரசியல் அமைப்பு நாட்டில் நிலவ வேண்டிய பொருளாதார அமைப்பையும், பொது உடைமைக் கட்சியின் அரசியல் நிலையையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இதன் பத்தாவது இயலில் குடிகளின் அடிப்படை உரிமைகளைக் கொண்ட நீண்டதொரு பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. தோற்றத்தில் இம்முறை மக்களாட்சிபோலத் தெரிந்தாலும், ஒரே கட்சி மட்டும் ஆட்சி செய்து வருவதால், இதற்கும் ஹிட்லரின் அல்லது முசோலினியின் ஆட்சி முறைக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. ஸ்டாலின் ஆளும்போது அவருக்கு முன்னால் பொதுவுடைமைக் கட்சியும், அரசாங்கமும் மண்டியிட்டுக் கிடந்தன. அவருக்குப் பிறகு மால்ன்கோவ், புல்கானின் ஆகியோர் முதலமைச்சர்கள் ஆனார்கள். ஆனால், கட்சியின் பொதுச் செயலாளரான குருஸ்ஷாவ் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கித்

தாமே நாட்டின் வல்லாட்சியாளரானார். அவர் ஸ்டாலினுடைய முறைகளைத் "தனிமனிதனின் வழிபாடு" (Personality Cult) என வன்மையாகக் கண்டித்து, அவரது பக்குவப்படுத்தப்பட்டுள்ள உடலையும் பொதுக் காட்சியரங்கினின்று எடுத்துத், தனியிடத்தில் புதைக்க ஏற்பாடு செய்து விட்டார். இவ்வாருக வல்லாட்சியாளர்கள் தமது கட்சியினரையும், அரசாங்கத்தையும், நாட்டையுமே அடிமைத்தனத்தில் ஆழ்த்துகின்றனர்.

கார்ல் மார்க்ஸின் தத்துவப்படி எல்லா நாடுகளிலும் முதலாளித்துவம் அழிந்துவிடும். ஆட்சியதிகாரம் தொழிலாளரின் கைக்கு மாறும். ஆகவே தான் "உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்" என்ற போர்க்குரலை மார்க்ஸ் எழுப்பினர். ஆனால் இக்குறிக்கோளை அடைய முடியாதென ரஷ்ய நாட்டுப் பொதுடைமைவாதிகள் நாளடைவில் கண்டனர். 1920 ஆம் ஆண்டு ரஷ்யா தனித்து நின்றது. எல்லா நாடுகளும் அதனுடன் தம் தூதாண்மைத் தொடர்புகளை (Diplomatic Relations) நீக்கிவிட்டன. உள்நாட்டுப் போரினால் அதன் பொருளாதார நிலை மிகவும் சீர்குலைந்தது. பொதுவுடைமையிலிருந்து ரஷ்யாவையாவது காப்பாற்றவேண்டுமென லெனின் பிரிட்டன், ஜெர்மனி, பாரசீகம், ஆப்கானிஸ்தானம், துருக்கி, போலந்து ஆகிய நாடுகளுடன் வாணிக உடன்படிக்கைகள் செய்துகொண்டார். ஸ்டாலின் ஆட்சியேற்றதும், தம் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு முதலாளித்துவ நாடுகளின் உதவி தேவைப்பட்டதால், உலகப்புரட்சியைப்பற்றிய கருத்தைக் கைநெகிழவிட்டார். உலகப் புரட்சி ஒருநாள் வரும்; ஆனால், விரைவில் வருமென எதிர்பார்க்கக் கூடாதென்று வலியுறுத்தினர். குருஸ்ஷாவ் காலத்தில் இக்கருத்து இன்னும் மாற்றமடைந்துள்ளது. இதன்படி பிற நாடுகளில் பொதுவுடைமைக் கட்சியானது புரட்சியில்லாமலே அரசியலமைப்புக்குட்பட்ட முறைப்படி ஆட்சியேற்கலாமென்றும், முதலாளித்துவ நாடுகளும் பொதுவுடைமை நாடுகளும் சமாதானமாக இணைந்து வாழமுடியும் என்றும் நம்பப்படுகிறது. இதிலிருந்து ரஷ்ய வல்லாட்சியாளர்கள் எவ்வாறு பொதுவுடைமைத் தத்துவக் கொள்கைகளைச் சந்தர்ப்பங்களுக்கேற்றவண்ணம் மாற்றிக் கொள்கின்றனரென்று தெரிகிறதல்லவா ?

பொதுவுடைமை ஆட்சியிலே மதத்தின் நிலை என்னவென்று பார்ப்போம். கார்ல் மார்க்ஸின் தத்துவம் பருப்பொருட் கொள்கையை (Materialism) அடிப்படையாகக் கொண்டதாகையால் அதில் இறைவன், ஆன்மா, மறு உலகம், மதம் என்பவற்றிற்கு இடமே கிடையாது. ஆகவேதான் மார்க்ஸும் லெனினும் மதமானது மக்களை மயக்கும் மது என எண்ணினர்கள். இதனால்தான்

பொதுவுடைமை ஆட்சி பரவிய நாடுகளிலெல்லாம் மத உரிமைகள் நசுக்கப்படுகின்றன. 1917ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சியின் பிறகு ரஷ்யாவில் மத நிறுவனங்களின் சொத்துக்களெல்லாம் நாட்டு உடைமையாக்கப்பட்டன. பல கோவில்கள் கழகக் கூடங்களாகவும், பொதுவுடைமைக் கட்சி மன்றங்களாகவும் மாற்றப்பட்டன. மதக்குருக்களும் பலர் பயங்கர ஆட்சியின்போது கொல்லப்பட்டனர் அல்லது நாடு கடத்தப்பட்டனர். பள்ளிக்கூடங்களில் மதக் கல்வி புகட்டக் கூடாதென்று தடுக்கப்பட்டது. மத எதிர்ப்புக் கழகங்களும், நாத்திக சங்கங்களும் நிறுவப்பட்டன. மத நம்பிக்கையற்றவர்களே பொது உடைமைக் கட்சியின் உறுப்பினராக வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது. சமய நிறுவன உறுப்பினரெல்லாம் வாக்குரிமை இழந்தனர். 1936 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின்படி ரஷ்ய மக்கள் மதக் கொள்கைகளை ஏற்று அவற்றை நடைமுறையில் பின்பற்ற உரிமை பெற்றிருந்த போதிலும், அவற்றைப் பகிரங்கமாகப் பரப்ப அவர்களுக்கு உரிமை கிடையாது. ஆனால், மதத்திற் கெதிரான கருத்துக்களை வெளிப்படையாகப் பரப்ப எல்லோருக்கும் உரிமையுண்டு. இவ்வாறாக ஸ்டாலின் ஆட்சியில் ரஷ்யாவில் மத நம்பிக்கையை மக்களின் உள்ளத்திலிருந்து பறிக்க அரசாங்கம் முயன்றது. ஆயினும் ரஷ்ய மக்களின் மதப்பற்று ஆழ வேரூன்றியிருந்ததால், அரசாங்கம் என்ன செய்தும் பயனில்லாமற் போனது. ஆகவே, மக்களில் பெரும்பான்மையோருக்கு விருப்பமானால் கோவில்களைத் திறக்கலாமென்ற சட்டமியற்றப்பட்டது. அதன்படி பல ஆலயங்கள் திறக்கப்பட்டு மத வழிபாடுகளைத் தொடங்கின. மேலும், ரஷ்ய மதசபை மேற்றிராணிமார்களைக் கூட்டி ஒரு தலைவரைத் (Patriarch) தெரிந்தெடுக்க அரசாங்கம் இசைந்தது.

பொதுவுடைமை ஆட்சியால் ரஷ்யாவிற்குப் பல நன்மைகள் விளைந்துள்ளன என்பதை மறுக்க முடியாது. சீர்கேடான நிலையிலிருந்த ரஷ்ய நாடானது கடந்த 45 ஆண்டுகளிலே தொழில் வளம் பெருகி, விஞ்ஞான வளர்ச்சியும் பெற்றிருக்கின்றது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இதனால், பயிற்சி பெற்ற தொழிலாளர்களில் மூன்றிலொரு பகுதியினர் பெண்களாக இருக்கின்றனர். இக்குறுகிய காலத்தில் ரஷ்யா எவ்வளவு முன்னேற்ற மடைந்துள்ளதென்றால், இன்று அது உலக வல்லரசுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. ஆயினும், இவ்வாட்சியினால் ரஷ்ய மக்களுக்கேற்பட்ட தீங்குகள் மிகப்பல. அங்கு மனிதனின் இயற்கை யுரிமையான சொத்துரிமை பறிக்கப்பட்டுள்ளது. சமூக வாழ்வின் அடித்தளமாகிய குடும்ப வாழ்க்கையில் சீர் குலைவு ஏற்பட்டிருக்கிறது.

பொருளாதாரமே முதன்மையானது என்று பொதுவுடைமை கருதுவதால், மனிதனின் இயற்கைப் பண்புகளாகிய ஆன்மீகம், மதம், நல்லொழுக்கம், கலை, அரசியல் முதலியவற்றின் அடிப்படை உரிமைகளெல்லாம் உருவழிக்கப்படுகின்றன. சுருங்கக் கூற வேண்டுமெனில், பொதுவுடைமை நாடுகளில் மனிதன் அரசாங்கத்தின் அடிமையாகிறான்.

இ. இத்தாலியில் சர்வாதிகார அரசு

பாஸிஸப் புரட்சி

உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பாவில் எழுந்த சர்வாதிகார நாடுகளில் இத்தாலியும் ஒன்று. அங்குத் தோன்றிய வல்லாட்சி மனித உரிமைகளை நசுக்குவதிலும், வன்முறையினால் கொள்கையைப் பரப்புவதிலும் ரஷ்யப் பொதுவுடைமை ஆட்சியை ஒத்திருந்தது. மேலும், பொதுவுடைமைக் கொள்கை இத்தாலியிலும் பரவும் என்ற அச்சம் அங்குச் சர்வாதிகார ஆட்சி ஏற்பட ஒரு முக்கிய காரணமாக இருந்தது.

முதல் உலகப் போர் முடிந்ததும் ஐரோப்பாவில் முற்போக்குக் கொள்கையும், மக்களாட்சிக் கொள்கையும் கொஞ்ச காலம் வளர்ந்தோங்கின. வெற்றி பெற்ற நாடுகளும், தோல்வியடைந்த நாடுகளும் போரினால் களைப்புற்றிருந்தன. எங்கும் சமாதானம், மக்களாட்சி, உலக ஒற்றுமை ஆகியவற்றின் மேல் பேராவல் பிறந்தது. ஆனால், வெர்ஸேல் உடன்படிக்கையின்படி பல தேசிய அரசுகள் ஏற்படுத்தப்பட்டதால், வலிமையற்ற பல சிறு அரசுகள் தோன்றின. சர்வதேச சங்கமானது ஐரோப்பாவில் ஓர் உண்மையான கூட்டாட்சியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, வல்லரசுகளின் நலனைக் காக்கும் கருவியாக மாறியது. தோல்வியடைந்த நாடுகளின்மேல் பெரும் இழப்பீடுகள் (Reparations) சுமத்தப்பட்டன. போரின் விளைவாகச் சிதைந்த பொருளாதார நிலையைச் சீர்படுத்தப் பெரு முயற்சிகள் எடுக்கப்படவில்லை. கூட்டுப் பாதுகாப்புக்கு வழி வகுக்கப்பட்டிருந்த போதிலும், அது நடைமுறையில் செயலாற்றப் படவில்லை. இவற்றின் காரணமாக மக்களாட்சியின் மேலிருந்த நம்பிக்கை சரியத் தொடங்கியது. மேலும், உலகப் போர் முடிந்த சில ஆண்டுகளாக பொதுவுடைமைக் கொள்கை ஓர் உலகப் புரட்சியை உருவாக்கும் என்ற பெரிய அச்சம் நிலவி வந்தது. இந்நிலையில்தான் இத்தாலியில் பாஸிஸக் கொள்கையும் (Facism) ஜெர்மனியில் நாஜிக் கொள்கையும் (Nazism) பரவத் தொடங்கின.

"பாஸிஸம்" என்ற சொல் 'கம்புகளின் கட்டு' (Bundle of rods) என்று பொருள்படும். அது "பாஸியோ" (Fascio) என்ற

சொல்லினின்று பிறந்தது. அது கட்டுப்பாடு, ஒற்றுமை, வலிமை ஆகியவற்றைக் குறித்தது. மேலும், அது பழங்கால ரோமானியப் பேரரசில் தலைமை அதிகாரிகள் செல்லும்போது அவர்களுக்கு முன்னால் அவர்களுடைய அதிகாரத்தின் சின்னமாக லிக்டர்களால் (Lictors) தூக்கிச் செல்லப்பட்ட பாஸஸ் (Fasces) என்ற கழிகளைக் குறித்தது. முதன் முதலில் 1919 ஆம் ஆண்டு முசோலினி பாஸிஸக் கட்சியை ஏற்படுத்தினர். அது விரைவில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றுவதற்குப் பல காரணங்களிருந்தன. முதற்காரணம் போருக்குப் பிறகு இத்தாலியின் அரசாங்க அமைப்பு வலிமை குன்றியிருந்தது. ஆகையால், இத்தாலி போரில் வெற்றிபெற்ற போதிலும், பயன்தரக்கூடிய நிலப் பகுதிகள் அதற்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவே, மக்கள் அதிருப்தியடைந்தனர். அது தவிர நாட்டின் பொருளாதார நிலை மிகவும் சீர்கேடாக இருந்தது. வாழ்க்கைச் செலவு (Cost of living) அதிகரித்துக்கொண்டே சென்றது. போக்கு வரவும் வாணிகமும் சீர்குலைந்திருந்தன. உயர்ந்த விலைக்கும் பொருட்கள் கிடைப்பது அரிதாக இருந்தது. விலைகளின் உயர்விற்குத் தக்க படி கூலிகள் அதிகரிக்கவில்லை. ஆகவே, நாடெங்கும் வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்தன. இவற்றையடக்க ஆற்றலின்றி அரசாங்கம் திகைத்து நின்றது. இந்நிலையில்தான் பெனிட்டோ முசோலினி பாஸிஸக் கட்சியை நிறுவினர். அவர் இத்தாலியில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்தி, அதனால் வலிமை மிக்க அரசாங்கத்தை நிறுவ முயன்றார். முற்போக்குக் கொள்கையுடைய மக்களாட்சி இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற செல்வ நாடுகளுக்கு ஏற்றதென்றும், எளிய நாடாகிய இத்தாலிக்கு அது தேவையில்லை என்றும் எண்ணினர். மக்களாட்சி இத்தாலியில் தோல்வியடைந்ததாலும், பாரிஸ் சமாதான மாநாட்டில் பிற ஐரோப்பிய மக்களாட்சிகள் இத்தாலிக் கெதிராகத் திட்ட மிட்டதாலும், இத்தாலிய மக்கள் மக்களாட்சியை வெறுத்தது மல்லாமல் சர்வதேச சங்கத்தின் மேலிருந்த நம்பிக்கையும் இழந்தனர். இவையெல்லாம் முசோலினியின் வெற்றிக்கு அடிகோலின.

இளவயதில் சமதர்மக் கொள்கைகளை (Socialism) ஆதரித்த முசோலினி இத்தாலியின் நிலையைக் கண்டு தமது தீவிர வாதத்தைக் (radicalism) கைவிட்டுச் சமதர்ம வாதிகளை எதிர்த்தார். அவரது கட்சியினர் ஒரே விதமான படை வீரர் உடையணிந்து ரோமானிய வணக்கம் செலுத்தி வந்தனர். அவர்கள் கருஞ்சட்டையினர் (Black Shirts) என அழைக்கப்பட்டனர். சமதர்ம, பொதுவுடைமைக் கொள்கைகளை முசோலினி எதிர்த்ததால் நீதி மன்றங்களும், தொழிலதிபர்களும், பனித்துறையாளரும், படை வீரரும்

அவரை ஆதரித்தனர். 1922ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அவரது கட்சியில் ஏறக்குறைய 100,000 உறுப்பினர்கள் இருந்தனர். அவ்வாண்டு அக்டோபர்த் திங்கள் 28ஆம் நாளன்று பாஸிஸ்ட் கட்சியினர் ரோம் நகருக்குள் அணிவகுத்துச் சென்று அரசாங்கக் கட்டிடங்கள், இருப்புப் பாதை, அஞ்சல், தந்தி அலுவலகங்கள் முதலியவற்றைக் கைப்பற்றினர்கள். மறுநாள் அரசர் முசோலினியை அழைத்து அமைச்சரவையை அமைக்குமாறு வேண்டினர். அக்டோபர் 30ஆம் நாள் முசோலினி ஆட்சியேற்றார். அந்நாளிலிருந்து அவர் வீழ்ச்சியுற்ற 1943 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 24ஆம் நாள் வரை இத்தாலியின் சர்வாதிகாரியாக ஆட்சி செலுத்தி வந்தார். முதலில் அவரமைத்த அமைச்சரவைகளில் பல கட்சியினருக்கும் இடமளிக்கப்பட்டது. ஆனால் 1926 ஆம் ஆண்டுக்குப் பிறகு பாஸிஸ்ட் கட்சியினர் மட்டும் அதில் இடம்பெற்றனர். மற்றக் கட்சிகளெல்லாம் நசுக்கப்பட்டன. பாஸிஸ்ட் கட்சியை எதிர்த்தவர் பலர் கொல்லப்பட்டனர். சிலருக்கு அவர்களின் குற்றத்தைக் கழுவுவதற்கென அதிக அளவு விளக்கெண்ணெய் குடிக்கக் கொடுக்கப்பட்டது. முசோலினி தேர்தல் முறைகளை மாற்றி, மக்கள் பாஸிஸ்ட் கட்சியினரையே தேர்ந்தெடுக்குமாறு செய்தார். பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடைய அமைச்சரவை இப்போது அப்பொறுப்பை உதறித் தள்ளியது. முசோலினி அரசாங்கத்தின் தலைவரானார். அவரது ஆணைகளெல்லாம் சட்டமாகக் கருதப்பட்டன. அவரை மக்கள் 'தலைவர்' (Il Duce) என அழைத்தனர்.

1928ஆம் ஆண்டு பழைய பிரதிநிதிகளின் சபை (Chamber of Deputies) கலைக்கப்பட்டுக் கூட்டுக் கழகப் பாராளுமன்றம் (Corporative Parliament) ஒன்று நிறுவப்பட்டது. 400 உறுப்பினர்களைக் கொண்ட இப்பாராளுமன்றத்தில் நிலப்பகுதிகளுக்கும், மக்கள் தொகைக்கும் தக்கபடி பிரதிநிதித்துவம் அளிக்கப்படாமல், பொருளாதாரப் பிரிவுகளுக்கேற்பப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அவைக்குத் துவக்க உரிமை அதிகாரம் (Power of Initiative) கிடையாது. அரசாங்கத்தின் தலைவர் சமர்ப்பித்த திட்டங்களை மறுக்கவும் அதற்கு உரிமை கிடையாது. ஸெனட் (Senate) என்ற மேல் சபையில் அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்களும், முதலமைச்சரின் அறிவுரையின் மேல் அரசர் நியமித்த உறுப்பினர்களும் இருந்தனர். கீழ் சபை அனுப்பிய மசோதாக்களை ஏற்கவும், மறுக்கவும் ஸெனட்டுக்கு அதிகாரமுண்டு. மாற்றப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட மசோதாக்கள் திரும்பவும் கீழ் சபைக்கு அனுப்பப்படும். பாஸிஸ்ட் கட்சியின் தலைவரே அரசாங்கத்தின் தலைவராவார்.

பாஸிஸக் கோட்பாடு

பாஸிஸ்ட் கட்சியின் போர்க்குரல் மூன்று சொற்களில் அடங்கியிருந்தது. அஃதாவது "நம்பு, கீழ்ப்படி, போராடு" (Credere, Obbedire, Combattere). இவைதான் பாஸிஸ்ட் அரசில் வாழும் குடிகளின் தலையாய கடமைகள். இதுதான் பாஸிஸ்ட் கட்சியின் கோட்பாட்டின் சுருக்கம். அதன் தத்துவம் வெறும் கொள்கையிலன்று, ஆனல் செயலில் அடங்கியிருந்தது. பாஸிஸ்ட்கள் பொது உடைமைவாதிகளைப் போல ஒரு கொள்கையை ஏற்றுக்கொண்டு பிறகு அதை நிறைவேற்றுபவர்களல்லர். அதற்கு மாருக அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி அதன் பிறகு எழும் சிக்கல்களைத் தீர்க்க வழி காண்பார்கள்.

பாஸிஸ்ட்கள் செயலிலும், நாட்டின் ஒற்றுமையிலும் பற்றுக் கொண்டவர்களாதலின், விவாதத்தையோ, பாராளுமன்ற முறையையோ விரும்பவில்லை. அவர்கள் பகுத்தறிவை நம்பவில்லை. மக்களின் உணர்ச்சிகளையே தட்டியெழுப்பினர். அதற்காகப் படையுடைகளையும், அணி வகுப்புகளையும் பயன்படுத்தினர். நாட்டின் தலைவரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதே மக்களின் கடமையென்னப் பாஸிஸ்ட்கள் எண்ணினர்கள். மக்கள் ஆட்சியை அவர்கள் ஏற்காததால், பல அரசியல் கட்சிகள் ஆட்சியில் பங்கு பெறுவதை அவர்கள் விரும்பவில்லை. பாஸிஸ்ட் கட்சி மட்டும் எதிர்ப்பின்றி ஆளவேண்டுமென்பது அவர்களுடைய சித்தாந்தம். அதை எதிர்க்கும் எவரையும் நாட்டில் பகைவராகக் கருதினர்கள்.

தேசியவாதம் பாஸிஸ்ட் கட்சியின் முக்கியமான கொள்கையில் ஒன்ருகும். ஆனல், அவர்களின் தேசியவாதம் மிகக் குறுகிய நோக்கமுடையது. பிற நாடுகளை வென்று அடிமைப்படுத்தும் தன்மையுடையது. இத்தாலியின் மாண்புக்காக அவர்கள் எவ்வழிகளையும் கையாளலாம். பாஸிஸக் கொள்கையில் மக்கியவெல்லியின் கொள்கை புத்துயிர்பெற்றுத் தோன்றியது. இரண்டாம் உலகப் போரின்போது பிரான்ஸ் வலிமை குன்றுவதை அறிந்ததும், இத்தாலி உடனே ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டதிலிருந்து பாஸிஸ்ட்கள் இக்கொள்கையை எவ்வாறு பின்பற்றினர்கள் என்று தெரிகிறது.

பன்னாட்டுக் கொள்கை (Internationalism) பாஸிஸ்ட் கோட்பாட்டிற்கு முரணானது. "உலக அமைதியென்பது ஒரு கோழையின் கனவு" என்று முசோலினி கூறினர். "ஏகாதிபத்தியக் கொள்கை வாழ்க்கையின் நிலையான, மாற்ற முடியாத சட்டம்" என அவர் முழங்கினர். "இத்தாலி விரிவடையவேண்டும் அல்லது அழியவேண்டும்" என்பது அவரது கோட்பாடு. உலக சமாதானத்தில் பாஸிஸ்ட்களுக்கு நம்பிக்கையில்லாததால்

அவர்கள் போரை விரும்பினர்கள். போரே மனித ஆற்றல்கள் எல்லாவற்றையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரமுடியும் எனக் கருதினர்கள்.

பாஸிஸக் கோட்பாடு தனிமனிதனின் சுதந்திரத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தது. மனிதன் அரசுக்காகவே வாழ்கின்ரு னென்றும் அரசாங்கத்திற்குப் பணிவதாலே மனிதன் நிறைவெய்துகின்ரு னென்றும் கூறியது. ஆகவே, பாஸிஸ்ட் தலைவர்கள் மனிதனின் அடிப்படை உரிமைகளைக் காக்கும் மக்களாட்சியை ஏற்க மறுத்தனர்.

பொருளாதாரத் துறையில் பாஸிஸம் ஒரு பெரிய மாற்றத்தை உண்டாக்கியது. அஃதாவது, கூட்டுக் கழக அரசை (Corporative State) அஃது உருவாக்கியது. நாட்டின் உற்பத்தியைப் பெருக்குவ தற்காக முசோலினி விவசாயம், தொழில், நிதி, தொழிலாளர் ஆகிய துறைகளைக் கட்டுப்படுத்தும் ஒரு கூட்டுக் கழக முறையை நிறுவினர். அதன்படி பழைய தொழிற்சங்கங்கள் அழிக்கப்பட்டு, ஒவ்வொரு தொழில் துறையிலும் முதலாளிகளுக்கும், தொழி லாளர்களுக்கும் தனித்தனியாக ஒரு தொழிற்குழு (Syndicate) ஏற்படுத்தப்பட்டது. பாஸிஸ்ட் கட்சி இவற்றிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்துவைத்தது. கீழேயுள்ள குழுக்கள் மாநிலக் கூட்டுக் குழுக்களுக்கும், மாநிலக் கூட்டுக் குழுக்கள் நாட்டின் கூட்டுக் குழுக்களுக்கும் பிரதிநிதிகளை அனுப்பின. மொத்தம் பதின்மூன்று நாட்டின் கூட்டுக் குழுக்கள் இருந்தன. அவை நாட்டின் பொருளாதார வாழ்வை நிர்ணயித்த தேசியக் கூட்டுக் கழக அவைக்குப் (National Council of Corporations) பிரதிநிதி களை அனுப்பின. இந்த அவைக்கு முசோலினியால் நியமிக்கப் பட்ட கூட்டுக் கழக அமைச்சர் தலைமை தாங்கினர். கூட்டுக் கழக முறையினல் வேலை நிறுத்தங்கள் தவிர்க்கப்பட்டு உற்பத்தி பெருகியபோதிலும், உண்மையான கூலிகள் (Real wages) உயர வில்லை. மேலும், இம்முறை போருக்கும் தாக்குதலுக்குமே பயன் படுத்தப்பட்டது.

1929 ஆம் ஆண்டு முசோலினி போப்பாண்டவருடன் ஓர் உடன்படிக்கை செய்தார். இதற்கு லாத்தரன் உடன்படிக்கை (Lateran Treaty) என்பது பெயர். 1870 ஆம் ஆண்டு இத்தாலி ஒன்றுபட்டபோது, போப்பாண்டவர் தம் ஆட்சி நிலங்களை இழந்தார். லாத்தரன் உடன்படிக்கையின்படி முசோலினி 11ஆம் பயஸ் (Pius XI) என்ற போப்பாண்டவரை வத்திக்கான் நாட்டின் (Vatican State) தலைவரென ஒப்புக்கொண்டார். இதற் குப் பதிலாகப் போப்பாண்டவர் ரோமைத் தலைநகராகக் கொண்ட இத்தாலி முடியரசை ஏற்றுக் கொண்டார்.

பதவிக்கு வந்த துவக்கத்தில் முசோலினியும் அவர்தம் கட்சியினரும் நாட்டிற்குப் பல நன்மைகள் செய்தனர். விவசாயமும், தொழிலும் வளர்ந்தன. சதுப்பு நிலங்கள் விளை நிலங்களாக்கப் பட்டன. போக்குவரவு சாதனங்கள் சீர்திருத்தப்பட்டன. ஆனால் பிற்காலத்தில் நாட்டின் பொருளாதார நிலை பிற்போக்கடைந்தது. வாழ்க்கைச் செலவு உயர்ந்தது. வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டை வருத்தியது. ஆகவே, முசோலினி போர் முயற்சிகளில் ஈடுபட்டார். 1935 ஆம் ஆண்டு அபிஸீனியா மீது படையெடுத்து அடுத்த ஆண்டில் அதைக் கைப்பற்றினர். இதனால் இத்தாலிக்கும் சர்வதேச சங்கத்திற்கும் (League of Nations) பிணக்கு ஏற்பட்டது. இரண்டாம் உலகப் போரின் போது முசோலினி ஜெர்மனியின் வல்லாட்சியாளரான ஹிட்லருடன் சேர்ந்து நேச நாடுகளுக்கெதிராகப் போர் செய்தார். இறுதியில் அவரின் படைகள் தோற்கடிக்கப்பட்டு அவரும் வீழ்ச்சியுற்று இறந்தார். அவருடன் பாஸிஸக் கட்சியும் வீழ்ந்தது.

ஈ. ஜெர்மனியில் சர்வாதிகார அரசு

நாஜிப் புரட்சி

முதல் உலகப் போரின் முடிவில் ஜெர்மனி தோல்வியுற்று நொறுங்கிய நாடாகக் காட்சியளித்தது. ஜெர்மானிய மக்கள் தம் படைகள் அடைந்த மாபெரும் தோல்வியைக் கண்டு உள்ளம் நொந்து வருந்திக் கொண்டிருந்தனர். வெர்ஸேல் உடன்படிக்கையானது ஜெர்மனியின் படைப்பலத்தைக் குறைத்து, அது தாங்க முடியாத பளுவான இழப்பீட்டை அதன்மேல் சுமத்தியது. ஜெர்மனி அதைக் கொடுக்க முடியாததால் பிரான்ஸும், பெல்ஜியமும், 1923 ஆம் ஆண்டில் படையெடுத்து ரூர் (Rhur) பகுதியில் தம் முடைய போர்ப்படைகளை நிறுத்தி வைத்தன. மேலும், நேசநாடுகள் ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளையும் பறித்தன. இவை தவிர ஜெர்மனியின் பொருளாதார நிலையும் சீர்குலைந்து காணப்பட்டது. நாணயத்தின் மதிப்பு வெகுவாகக் குறைந்து, பணவீக்கம் (Inflation) ஏற்பட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் உச்ச நிலையை அடைந்தது. இத்துன்ப நிலையில்தான் பொது உடைமையானது ஜெர்மனியை விழுங்கிவிடும் போல் தோன்றியது. இதைத் தவிர்க்கக்கூடிய ஒரே வழி மக்களாட்சி அரசியலமைப்பு எனக் கருதப்பட்டது. இதன் விளைவுதான் வெய்மார் குடியரசு (Weimar Republic). அதன்படி ஜெர்மனிக்கு ஒரு நாட்டின் தலைவரும், முதலமைச்சரும் (Chancellor), பாராளுமன்றத்திற்குப் பொறுப்புள்ள அமைச்சரவையும், இரு சட்டமன்றங்களும், அடிப்படை உரிமைகளைக்கொண்ட நீண்ட பட்டியலும் வழங்கப்பட்டன. ஆயினும், இந்த அரசியலமைப்பை மக்கள் விரும்பவில்லை. ஏனெ

னில், அவர்கள் அதை வெர்ஸேல் உடன்படிக்கையின் விளை வாகவே கருதினர்கள். மக்களின் ஆதரவைப் பெறுத எந்த அர சாங்க முறையும் வெகுநாள் நீடிக்காதல்லவா? ஆகவே, ஜெர் மனியிலும் வெய்மார் குடியரசு பெருந்தோல்வியடைந்தது. 1932 ஆம் ஆண்டில் ஜெர்மனி கொடுக்கவேண்டிய இழப்பீட்டை நேச நாடுகள் தள்ளுபடி செய்தபோதிலும், மக்கள் அவைகளையோ அல்லது குடியரசையோ நம்பவில்லை. இந்தச் சூழ்நிலை நாஜி (Nazi) இயக்கம் வளர்வதற்கு மிகவும் ஏற்றதாக இருந்தது. முத லில் இவ்வியக்கத்தில் 28 உறுப்பினரே இருந்தனர். இதைத் தொடங்கியவர் அன்டன் ட்ரெக்ஸ்லர் (Anton Drexler) என்ற ஓரு கொல்லர். துவக்கத்தில் ஜெர்மனியின் தோல்வியை ஏற்க மறுப்பதைத் தவிர வேறு கொள்கைள் இக்கட்சிக்குக் கிடையாது. 28 உறுப்பினர்களுள் அறுவர் மட்டும் செயலில் ஈடுபட்டனர். ஏழாவது ஆளாக அடால்ப் ஹிட்லர் (Adolf Hitler) என்பவர் சேர்க்கப்பட்டார்.

இந்த இயக்கம் 1919 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டபோது ஜெர்மானியத் தொழிலாளர் கட்சி என்றழைக்கப்பட்டது. ஆனல் அடுத்த ஆண்டு அது தேசீய சமதர்ம ஜெர்மானியத் தொழிலாளர் கட்சி என்றும், பிறகு தேசீய சமதர்மக் கட்சி என்றும் வழங்கப்பட் டது. ஆகவே தேசீயவாதிகளும், சமதர்ம வாதிகளும் இக்கட்சியில் சேர்ந்தனர். கீழ் நடுத்தர வகுப்பாரும், படைவீரர்களும், மாணவர் களும் இந்த இயக்கத்தில் சேர்ந்தபோதிலும், பெரும்பான்மை யான தொழிலதிபர்களும், மேல் நடுத்தர வகுப்பினரும் இதில் சேரவில்லை. இதில் சேர்ந்தவர்கள் அதன் தீவிரக் கொள்கை களுக்காகச் சேராமல், அது ஊட்டிய போராட்ட உணர்ச்சிக் காகவே சேர்ந்தனர். பகையும், பழியும் அதன் அடிப்படைக் கொள்கைகளாகும். ஜெர்மனியின் பகைவர்களையும், பொது உடைமை வாதிகளையும், யூதர்களையும் எதிர்த்துப் போரிடுவதே அதன் நோக்கம்.

1923 ஆம் ஆண்டு வரை நாஜி இயக்கம் மெதுவாகவே பர வியது. பிரெஞ்சுப் படைகள் ரூர் பகுதியின்மேல் படையெடுத்த அதே ஆண்டில் ஹிட்லர் அரசைக் கவிழ்க்கச் செய்த சதியொன் றில் சிறைப்பட்டார். சிறையிலிருக்கும் போதுதான் "எனது போராட்டம்" (Mein Kampf) என்ற நூலை எழுதினர். அதுவே நாஜி இயக்கத்தின் மறை நூலாகியது. இதிலிருந்து நாஜிக் கட்சியின் செல்வாக்கும் பலமும் வளர்ந்துகொண்டே போயின. செல்வந்தரிடையே அதன் செல்வாக்கை வளர்ப்பதற்காக ஹிட்லர் தம் தீவிரக் கொள்கைகளைக் கைவிட்டார். இளைஞர்களின் கவனத்தை ஈர்க்க அணிவகுப்புகளையும், படையுடைகளையும்,

'ஸ்வஸ்திக்கா' என்ற கட்சி அடையாளத்தையும் பயன்படுத்தினர். ஹிட்லரின் சொல்வன்மையும், நாஜிக் கட்சித் தலைவர்களின் விளம்பரத் திறமையும் மக்களின் நாட்டுப்பற்றைத் தூண்டி விட்டன. நாளடைவில் தொழிலதிபர்களும், செல்வந்தர்களும், பணித்துறை ஆட்சியினரும் நாஜிக் கட்சியை ஆதரிக்கத் தலைப் பட்டனர். 1929 ஆம் ஆண்டு ஏற்பட்ட உலக வாணிக மந்தமும் (World depression) அதனால் விளைந்த வேலையில்லாத் திண்டாட் டமும் நாஜி இயக்கத்தை வளர்த்தன. முசோலினியின் பாஸிஸ முறைகளை ஹிட்லர் பின்பற்றியதால், ஜெர்மானிய சட்டமன்றத்தில் நாஜிக் கட்சியின் பலம் அதிகரித்தது. 1932 ஆம் ஆண்டு 400 உறுப்பினர் கொண்ட அவையில் நாஜிக் கட்சியினர் 230 இடங் களைப் பெற்றனர். 1933 ஆம் ஆண்டு நாட்டின் தலைவர் ஹின்டன்பர்க் (President Hindenburg) ஹிட்லரை முதலமைச்ச ராகுமாறு அழைத்தார். ஹிட்லர் அதையேற்றுக் கூட்டு அமைச் சரவை (Coalition Ministry) யொன்றை அமைத்தார்.

முதலமைச்ச ரான ஹிட்லர் சட்டமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்துமாறு நாட்டின் தலைவரைத் தூண்டினர். 1933 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் பொதுத் தேர்தல் நிகழ்ந் தது. அப்போது நாஜிக் கட்சியினர் வெற்றிபெறப் பலவழிகளைக் கையாண்டனர். சட்டமன்றக் கட்டிடத்தில் பற்றிக்கொண்ட தீயைப் பொதுவுடைமை வாதிகளே கொளுத்திவிட்டனரெனப் பொய் விளம்பரம் செய்தனர். அச்சம் தரும் பல கொடுஞ்செயல் களைச் செய்தும், அவர்கள் சட்டமன்றத்தில் 288 இடங்களையே பெற்றனர். ஆகவே, தம் அதிகாரத்தை நிலைநாட்ட ஹிட்லர் வேறுவழிகளைக் கையாண்டார். முதலாவதாக, பொதுவுடைமைக் கட்சியினரைச் சட்டமன்றத்தினின்று வெளியேற்றினர். பிறகு அதிகார உரிமைச் சட்டம் (Act of Authorisation) ஒன்றை இயற்றி முழு அதிகாரத்தையும் பெற்றார். இச்சட்டத்தின்படி பாராளு மன்றத்தைக் கலக்காமலே சட்டமியற்றும் அதிகாரத்தை அமைச்ச ரவை பெற்றது. அமைச்சரவையின் தலைவரென்ற முறையில் ஹிட்லரே நாடு முழுவதற்கும் சட்டமியற்றத் தொடங்கினர். 1934 ஆம் ஆண்டில் ஜெர்மானியக் கூட்டாட்சியின் பகுதிகளாகிய மாநிலங்களின் சட்டமன்றங்கள் அழிக்கப்பட்டன. அதன் பிறகு மாநிலங்களின் பிரதிநிதித்துவ மன்றமாகிய மேல் சபை (Reichsrat) நிரந்தரமாகக் கலைக்கப்பட்டது. இவ்வாறாக ஹிட்லர் ஜெர்மானியக் கூட்டாட்சியை அடையாளம் தெரியாதபடி நொறுக் கினர். 1934 ஆம் ஆண்டு நாட்டின் தலைவர் ஹின்டர்பர்க் இறந் ததும் ஹிட்லர் தாமே அப்பதவியை ஏற்றார். வெய்மார் அரசிய லமைப்பு அழிந்தது. ஹிட்லர் ஜெர்மனியின் சர்வாதிகாரியானார்.

நாஜிக் கோட்பாடு

நாஜிக் கட்சியின் கொள்கைகளே அரசின் அல்லது அரசாங்கத்தின் கோட்பாடு என்று கூறமுடியாது. அது மக்களிடையே பரவியிருந்த உணர்ச்சியி லெழுந்த ஓர் இயக்கம். அதன் கொள்கை முதல் உலகப் போருக்குப் பிறகு ஜெர்மனி இருந்த நிலையையும், குறிப்பாக ஹிட்லரின் உள்ள நிலையையும் காட்டுகிறது. நாஜிக் கொள்கையானது, ஜெர்மானிய மரபின்படி, நாடுதான் எல்லாவற்றிலும் மிக மேலானது எனப் பறையறைந்தது. நாடு இழந்த பெருமையைத் திரும்பப் பெறுவதற்கு நாட்டின் ஒற்றுமை இன்றியமையாததெனக் கண்ட நாஜிகள், அரசை மனித எல்லைக்கு மீறிய நிறுவனமாகக் கருதினர்கள். 'தனிமனிதனின் நலனைவிடப் பொது நலனே மேல்' என்பதே அவர்களது குறிக்கோள். ஹிட்லரின் தத்துவப்படி, தனிமனிதன் மட்டுமேயில்லை; சமூகமே எல்லாம். உரிமைகளை விடக் கடமைகளே முக்கியம். அவர் கருத்தின்படி நாட்டிற்குப் பணி செய்வதிலே ஒருவனின் முழுஉரிமையும் அடங்கியிருக்கிறது. நாஜிக் கட்சிதான் மக்களையும் அரசையும் இணைத்துவைக்கும் சங்கிலி. அரசு நாஜிக் கட்சியின் திட்டங்களைத் தனது இறைமை அதிகாரத்தினால் ஆதரிக்கிறது. நடைமுறையில் அரசே கட்சியாகவும், கட்சியே அரசாகவும் இருந்தது. நாட்டில் நாஜிக் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சியும் இருக்கமுடியாது. ஏனெனில், நாஜிக் கட்சி மட்டும் அரசைப் பலப்படுத்த வல்லது.

நாஜித் தத்துவத்தின்படி சிலரே தலைவராக முடியும். பிறரெல்லாம் அவர்களைப் பின்பற்றவேண்டும். ஹிட்லர் அரசு, அரசாங்கம், படை எல்லாவற்றிற்கும் தலைவர். அவரது சொல்லே சட்டம். அனைவரும் அவரை ஆதரிக்கவேண்டும்; அவருக்கு மறுப்பின்றிப் பணியவேண்டும். அவரது கட்சியினர் போர்ப்படை முறையிலே பயிற்சியளிக்கப்பட்டனர். புயல் படை வீரர் (Storm Troopers) என்றும், பழுப்புச் சட்டையினர் (Brown Shirts) என்றும் அழைக்கப்பட்ட அவரின் படையணி வீரர்கள் நாட்டில் வன்முறை ஆட்சியை ஏற்படுத்தினர்கள். நாட்டு வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நாஜிக் கட்சியினர் நுழைந்து தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினர். வலிமையையும், வல்லந்த முறைகளையும் நம்பிய நாஜிகள், போரை விரும்பியதில் வியப்பொன்றுமில்லை. பகைவரை ஏமாற்றுவதற்காகவே அவர்கள் சமாதானத்தை நாடுவதுபோல நடித்தனர். வலிமை பெற்றதும் போரைத் தொடங்கி அண்மையிலுள்ள நாடுகளைக் கவர்ந்தனர். இவ்வாறுக, தேசிய இயக்கமாகத் தோன்றிய நாஜிக் கட்சி விரைவில் ஏகாதிபத்தியக் கொள்கையைப் பின்பற்றி உலக அமைதிக்கே ஒரு பெரும் இடையூறாக மாறியமைந்தது.

இனவெறியானது நாஜிக் கொள்கைகளில் மிக முக்கிய மானவைகளில் ஒன்றாகும். ஹிட்லர் ஆரிய இனம் என்ற கட்டுக் கதையைப் புனைந்து அதைப் பயன்படுத்தி யூத இனத்தவருக்கு நம்பமுடியாத கொடுமைகளை இழைத்தார். "யூதரே நமது துன்பம்", "ஹிட்லரே நமது மீட்பர்" என நாஜிகள் சொல்லி வந்தார்கள். நாஜிக் கோட்பாட்டின்படி ஜெர்மானியரே தூய ஆரிய இரத்தமுடைய இனத்தவரென்றும், மற்றவர்களெல்லாம் அவர்களுக்குக் கீழானவர்களென்றும் கருதப்பட்டது. கத்தோலிக்க மதமும், மறுப்புச் சமயமும் (Protestantism) அகில உலக மதங் களாகையால், அவற்றை நாஜிகள் ஏற்க மறுத்தனர். இனத் தூய்மையைப் பாதுகாத்து, இனத்தைப் பெருக்குவதற்காக ஜெர்மானியப் பெண்கள் ஏராளமான குழந்தைகளைப் பெற வேண்டும். இதுவே அவர்களின் தலையாய கடமை. ஹிட்லர் கூறியது போல "பெண் கல்வியின் மறுக்கமுடியாத நோக்கம் தாய்மையாகும்". ஆகவே, ஹிட்லரின் அரசாங்கமும் முசோலினி யின் அரசாங்கத்தைப் போல் அதிகக் குழந்தைகளைப் பெறும் பெற்றோர்களுக்குத் தனிச் சலுகைகள் கொடுத்தது. பாஸிஸ அரசாங்கத்தைப் போல் அதுவும் தனிமனிதரின் உரிமைகளை நசுக்கி அழித்தது.

பொருளாதாரத் துறையிலும் நாட்டின் ஒற்றுமையையே நாஜி கள் குறிக்கோளாகக் கொண்டனர். அவர்கள் முதலாளிகளையும், தொழிலாளர்களையும் நாஜிக் கட்சியின் தொழிலாளர் முன்னணி (Labour Front) யில் சேருமாறு கட்டாயப்படுத்தினர்கள். பொரு ளாதார அமைச்சரின் அதிகாரத்தின் கீழிருந்த பொருளாதாரச் சங்கம் (Chamber of Economics) தொழில், வாணிகம், பொருளகங்கள், காப்புறுதி (Insurance), பொதுவசதிகள் (Public utilities), கைத்தொழில்கள் ஆகியவற்றை எல்லாம் கட்டுப்படுத்தி வந்தது. வேலைநிறுத்தம், கதவடைப்பு, (Lock out) ஆகியவை நாஜிக் ஜெர்மனியில் சட்ட முரண்பாடானவை. கூலிகளும், விலைகளும் அங்கு நிலைப்படுத்தப்பட்டன.

தம் கொள்கைகளைப் பரப்புவதற்காக நாஜிகள் பலமுறை களைப் பின்பற்றினர்கள். பேச்சு மேடைகள், பள்ளிக்கூடங்கள், நாடக அரங்குகள், திரைப்படம், வானொலி, செய்தித்தாட்கள், இலக்கியம், துண்டு வெளியீடுகள் முதலியவற்றைப் பயன்படுத்தி னர்கள். கல்வி நிலையங்களெல்லாம் நாஜிக் கட்சியினரை உருவாக்கும் தொழிற்சாலைகளாக்கப்பட்டன. பள்ளியிலிருந்து இல்லம் திரும்பிய குழந்தைகள் தமது பெற்றோரை "ஹிட்லர் வாழ்க" என்று கூறி வணக்கம் செலுத்தினர். ஒவ்வொரு ஜெர்மானியனும் ஒரு நாளைக்கு 50 முதல் 150 தடவைகள் அதே

வாழ்த்துதலைக் கூறவேண்டும். ஒவ்வொரு பாடப் புத்தகத்திலும் "எங்கள் தலைவராகிய அடால்ப் ஹிட்லரே, உம்மை நேசிக்கிறோம்; உமக்காக இறைவனை மன்றாடுகிறோம். உமது பேச்சைக் கேட்க விரும்புகிறோம். உமக்காக உழைக்கிறோம். வாழ்க!" என்ற தொடக்கப் பாடம் உண்டு. இவ்வாறாக நாஜிகள் நாட்டு மக்களிடையே ஹிட்லரின்மேல் கண்மூடித்தனமான பற்றை வளர்த்தனர்.

20 ஆம் நூற்றாண்டில் மனித இனத்துக்கு நேர்ந்த பேராபத்துக்களில் நாஜிக் கொள்கை ஒன்றாகும். இதனால் ஜெர்மனியில் முற்போக்குக் கொள்கைகள் மறைந்து மக்கள் ஒருவித மயக்கமுற்றனர். மிருகத் தன்மையும், பலவந்தமுமே மக்களை ஆட்கொண்டன. அதனால் உலகமே கண்டிராத அவ்வளவு அச்சத்துக்குரிய பெரும்போர் மூண்டு மனித குலத்தைப் பெருந்துயரில் ஆழ்த்தியது. ஆனால், படைமுறையிலும் பலத்திலும் எழுப்பப்பட்ட எந்த நிறுவனமும் நெடுங்காலம் நிற்காது. ஆகவே, நாஜிக் அரசும் விரைவில் வீழ்ந்தது. இரண்டாம் உலகப் போரின் போது உலகையே நடுங்கவைத்த ஹிட்லரும் அவரது கட்சியினரும் 1945 ஆம் ஆண்டு வீழ்ச்சியடைந்தனர். ஜெர்மனி சரணடைந்தது. ஐரோப்பாவும் நாஜிக் கொள்கை நோயினின்று குணமடைந்து விடுதலைபெற்றது.

நாஜிக், பாஸிஸ அரசுகளின் எழுச்சியிலிருந்து உலகம் கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்கள் பல உள. மனிதனின் உணர்ச்சிகளும், மன எழுச்சிகளும், வெறிகளும் கட்டுப்படுத்தப்படவேண்டும். முற்போக்குக் கொள்கைகள் மக்களின் அரசியல் உரிமைகளைக் காக்காவிடில், பாஸிஸம் போன்ற தீங்கு விளையும். மக்களாட்சி வெற்றிபெற வேண்டுமானால் அரசியல் உரிமைகள் மட்டுமல்ல, பொருளாதார நீதியும், சமூக நீதியும் நிலைநாட்டப்படவேண்டும். மேலும், மக்களுக்கு இறைவனின் மேல் ஆழ்ந்த பற்று ஏற்படவேண்டும். அவர்கள் கடவுளை மனித இனத்தின் அன்புத் தந்தை என ஏற்று, அதனால் பிற மனிதரை உடன் பிறந்தவராகக் கருதவேண்டும். மக்களை ஒரு கும்பலாக அல்ல, ஆனால் தனிமனிதர்களாக எண்ணவேண்டும். அப்போதுதான் நாஜி, பாஸிஸக் கொள்கைகள் போன்ற தீய கோட்பாடுகள் தோன்றி மக்களை வருத்தா.

உ. ஸ்பெயினில் தனிவல்லாட்சி

இரு உலகப் போர்களுக்குமிடையில் எழுந்த இன்னொரு வல்லாட்சி ஸ்பெயினில் தளபதி ஃபிராங்கோ (General Franco) ஏற்படுத்திய சர்வாதிகாரமாகும். 1902 முதல் 1931 வரை ஸ்பெயினை

ஆண்ட 13 ஆம் அல்ஃபோன்சோவின் ஆட்சி திறமையற்ற தாகவும், ஊழல் நிறைந்ததாகவுமிருந்தது. ஆகவே மக்கள் அரசாங்கத்தின்மேலிருந்த நம்பிக்கையை இழந்தனர். பொதுவாக முடியாட்சிக்கெதிரான கருத்துக்கள் பரவின.

1931 ஆம் ஆண்டு நடந்த நகரசபைத் தேர்தல்களில் குடியரசுக் கட்சி பெரும் வெற்றி பெற்றது. அமைச்சர்கள் பதவி துறந்தனர். அல்ஃபோன்சோ மன்னரும் 1931 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் நாட்டைவிட்டோடினார். உடனே குடியரசுக் கட்சி முடியரசை ஒழித்துக் குடியரசை நிறுவியது. இவ்வாருக இரத்தம் சிந்தாத புரட்சியொன்று ஸ்பெயினில் நிகழ்ந்தது.

உள்நாட்டுப் போர்

ஸ்பெயினில் குடியாட்சி முறை நெடுங்காலம் நீடிக்கவில்லை. ஏனெனில் முடியரசுவாதிகள், வணிகர்கள், நிலக்கிழார், கத்தோலிக்கர் ஆகியவர்களைக்கொண்ட வலப்புறக் கட்சிகளும். குடியானவர்கள், தொழிலாளர்களைக் கொண்ட இடப்புறக் கட்சிகளும் அதை எதிர்த்தன. தீவிரவாதிகள் அடிப்படை மாற்றங்களைக் கோரிக் கிளர்ச்சி செய்து, கோவில்களையும் மடங்களையும் எரித்தனர். குடியானவர்கள் நிலச் சொந்தக்கார ரிடமிருந்து நிலங்களைப் பறித்தனர். இடப்புறக் கிளர்ச்சிகளை அடக்க வலப்புறக் கட்சிகள் வன்முறையில் இறங்கின. எங்கும் குழப்பமும் அமைதியின்மையும் நிலவின. அரசாங்கம் இவற்றைத் தடுக்கமுடியாமல் வலிமை குன்றியிருந்தது. இந்நிலையில் அரசாங்கத்தைக் கவிழ்க்கப் படைத்துறை அதிகாரிகளின் இரகசிய சங்கம் ஒன்று நிறுவப் பட்டது. அரசாங்கம் குடியரசுக்கெதிரான எல்லாப் படை அதிகாரிகளையும் பதவியினின்று நீக்கியது. அவர்களிலொருவரான தளபதி ஃபிராங்கோ மொராக்கோவிற்குத் தப்பிச் சென்று 1936 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17 ஆம் நாள் புரட்சியைத் துவக்கினார். அந்நிய நாட்டுப் படைகளினுதவியாலும் மொராக்கோப் படைகளின் துணையாலும் மொராக்கோவை வென்றார். விரைவில் புரட்சி ஸ்பெயினுக்குப் பரவியதும், அங்கேயும் படை வீரர் புரட்சியில் கலந்து கொண்டனர். குடியரசுக் கட்சியினர் தலைநகராகிய மாட்ரிட்டை வீரத்துடன் காத்தனர். ஆனால், நாட்டின் வடக்கிலும் தெற்கிலும் கலகக்காரர்கள் வெற்றி பெற்றனர். இதற்குள்ளாக ஃபிராங்கோ மொராக்கோவிலிருந்து ஸ்பெயினுக்குள் நுழைந்து புரட்சிக்காரர்களின் தலைவரானார். புரட்சிக்காரர்கள் தம்மைத் தேசியவாதிகளென்றும், ஃபிராங்கோவை ஸ்பெயின் அரசாங்கத் தலைவரென்றும் பறை சாற்றினர்கள். எவ்வளவு முயன்றும் அவர்களால் மாட்ரிட் நகரைக் கைப்பற்ற முடியவில்லை. ஃபிராங்கோவிற்கு முசோலினியும் ஹிட்லரும், படைவீரரும் படைக்கருவிகளும்

கொடுத்துதவினர்கள். குடியரசுவாதிகள் ரஷ்யாவிடமிருந்து உதவி பெற்றனர். இவ்வாறாக உள்நாட்டுப் போரானது பாஸிஸ, பொது உடைமைக் கோட்பாடுகளுக்கிடையே நிகழும் போராக மாறியது. மாட்ரிட் நகர மக்கள் பசியால் வருந்தவே, குடியரசு வாதிகள் ஃபிராங்கோவிடம் சரணடைந்தனர். 1939 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 29 ஆம் நாளன்று ஃபிராங்கோவின் படைகள் தலைநகருக்குள் நுழைந்தன.

ஊ. ஃபிராங்கோவின் தனிவல்லாட்சி

முசோலினி, ஹிட்லர் இவர்களின் சர்வாதிகார அரசுகளைப் போல ஒரு தனிவல்லாட்சியை ஏற்படுத்துவதே ஃபிராங்கோவின் குறிக்கோள். அவர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்திக் குடியரசு வழிகளையெல்லாம் ஒழிக்கத் தொடங்கினர். ஆயினும், அவரது ஆட்சி உறுதியாக நிலைபெறவில்லை. உள்நாட்டுப் போர் முடிந்ததும் அரசியல் சதிகள் தோன்றலாயின. மேலும், கத்தோலிக்கர்கள் அதிக சலுகைகள் கேட்டனர். நிலக்கிழார்கள் பழைய அரை நிலமானிய முறையைத் திரும்ப நிறுவுமாறு கேட்டனர். வணிகர்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டை வெறுத்தனர். இவ்வாறாக, இரண்டாம் உலகப்போர் தொடங்கும்போது ஸ்பெயினில் நிலைத்த அமைதி நிலவவில்லை. ஃபிராங்கோ "ஸ்பானியக் கொப்பரையை மூடிவிட்டார். ஆனல் உள்ளேயுள்ள பொருட்கள் மேலும் கொந்தளித்துக்கொண்டே யிருந்தன."

எ. துருக்கியில் குடியரசு

கெமாலின் புரட்சி

முதல் உலகப் போரில் ஜெர்மனியுடன் சேர்ந்து போர் செய்ததால் துருக்கி பெரும் கேடு அடைந்தது. அது மற்றத் தோல்வியடைந்த நாடுகளைவிட அதிக நிலப்பகுதிகளை இழந்தது. ஸிரியா, பாலஸ்தீன், ஈராக், அரேபியா ஆகிய பகுதிகளை இழந்ததுமல்லாமல், தனது நிலத்திலே ஸ்மிர்ணு (Smyrna) வையும் பறிகொடுத்தது. தமது ஒரே முக்கியத் துறைமுகமாகிய ஸ்மிர்ணுவில் கிரேக்கர்கள் நுழைந்ததும், துருக்கியர் நாட்டுணர்ச்சியால் உந்தப்பட்டுக், கொதித்தெழுந்தனர். இவ்வெழுச்சியானது காலிப் (Caliph) புக் கெதிராகத் திரும்பியது. ஏனெனில், காலிப்பால் துருக்கி நாட்டை மீட்க முடியவில்லை. துருக்கியர்கள் முஸ்டாபா கெமால் (Mustapha Kemal) என்பவரின் தலைமையில் கிளர்ச்சி செய்தனர். கெமால் சிறந்த போர்வீரர். பல போர்க்களங்களில் வீறுடன் வெற்றி பெற்றவர். முதல் உலகப் போரில் கல்லிப்பொலி (Gallipoli)

எனும் இடத்தில் பிரிட்டிஷ் படையைப் புறங்கண்டவர். அவரது முக்கிய நோக்கம் சுல்தானின் வல்லாட்சியை ஒழித்துத் துருக்கியை ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டுமென்பது.

முதல் உலகப் போருக்குப் பிறகு ஏற்பட்ட செவ்ரஸ் உடன் படிக்கையை (Treaty of Sevres) கெமால் ஏற்றுக் கொள்ளவில்லை. அதை மீறிக் கிரேக்கர்களை விரட்டியடிக்க வேண்டுமென அவர் 6 ஆம் சுல்தான் முகமதுக்கு அறிவுரை கூறினர். ஆனால் சுல்தான் அதை ஏற்காமல் கெமாலை அனட்டோலியா (Anatolia) என்ற இடத்திற்குப் படைகளின் பொதுக் கண்காணிப்பாளராக (Inspector General) அனுப்பினர். கிழக்கு அனட்டோலியாவிற்குச் சென்றதும், படைவீரரை ஒன்று சேர்த்து "மக்கள் கட்சி" (People's party) என்ற தேசீயக் கட்சியை நிறுவி "துருக்கி துருக்கியருக்கே" என்ற போர்க்குரலை விண்ணதிர எழுப்பினர். விரைவில் அக்கட்சி வலுப்பெற்றது. 1919 ஆம் ஆண்டு தேசீயவாதிகளின் பிரதிநிதிகள் அங்காராவில் (Ankara) கூடி ஒரு செயற் குழுவையும், கெமாலை அதன் தலைவராகவும், தேர்ந்தெடுத்தனர். இதைக் கேள்வியுற்று அஞ்சிய சுல்தான் கெமாலை உடனே கான்ஸ்டாண்டிநோப்பிளுக்குத் திரும்பி வருமாறு ஆணை யிட்டார். ஆனால், கெமால் அங்குப் போக மறுத்ததுமல்லாமல், அங்காராவில் ஒரு தேசிய மன்றத்தையும் (National Assembly) கூட்டினர். 1920 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் துருக்கியின் பல பகுதிகளிலுமிருந்து வந்த 350 பிரதிநிதிகள் அனட்டோலியாவின் தலைநகரில் கூடி ஓர் அரசியலமைப்பை வரைந்தார்கள். இந்த மன்றம் கிரேக்கர்களை வெளியேற்றும் அதிகாரத்தை கெமாலுக் களித்தது. அங்காரா இப்போது துருக்கியின் இணையரசாங்கத்தின் இருப்பிடமாகியது.

ஸ்மிர்னாவைக் கைப்பற்றிய கிரேக்கர்கள் மண்ணாசையால் தூண்டப்பட்டு 1920 ஆம் ஆண்டு அனட்டோலியாமீது படை யெடுத்தனர். ஆனால், கெமால் அவர்களைத் தோற்கடித்து, 1922 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 9 ஆம் நாளன்று தமது படையுடன் ஸ்மிர்னாவில் நுழைந்து அங்குள்ள ஐரோப்பியர் குடி யிருப்பைக் கொளுத்தித் தரைமட்டமாக்கினர். 1922ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாளன்று தேசிய மன்றம் சுல்தானின் பதவியை அகற்றியது. சுல்தான் நாட்டை விட்டு வெளியேறினர். அங்காரா அரசாங்கத்தின் பிரதிநிதிகள் கான்ஸ்டாண்டிநோப்பிளின் ஆட்சியை ஏற்றனர். கான்ஸ்டாண்டிநோப்பிள் என்ற பெயர் இஸ்டான்புல் (Istanbul) என மாற்றப்பட்டது. சுல்தானின் உறவின னான அப்துல் மஜீத் காலிப்பாக நியமிக்கப்பட்டார். இப்போது

காலிப்புக்கு மத சம்பந்தமான அதிகாரங்கள் மட்டும் கொடுக்கப் பட்டன. 1923 ஆம் ஆண்டு லெளஸானில் (Lausanne) கூடிய சமா தான மாநாட்டின் முடிவுகளின்படி கான்ஸ்டாண்டிநோப்பிளும், கிழக்குத் திரேசும் (Eastern Thrace) சர்வதேச சங்கத்தின் கட்டுப் பாட்டிலிருந்து விடுபட்டு துருக்கிக்குக் கொடுக்கப்பட்டன. துருக்கி யில் ஐரோப்பியருக்கு வழங்கப்பட்ட தனிச் சலுகைகள் நீக்கப் பட்டன. இவ்வாறு துருக்கி முஸ்டாபா கெமாலின் தலைமையில் குடியரசாகியது.

கெமாலின் வெற்றி தற்கால வரலாற்றின் வியப்புக்குரிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். அவர் கிரேக்கர்கள், நேச நாடுகள், துருக்கி அரசாங்கம் இவற்றை எதிர்த்துப் போரிட்டுத் துருக்கிக்கு விடுதலை பெற்றுத் தந்தார். ஆனால், அவர் சட்ட பூர்வமான ஒரு பதவியைப் பெறவில்லை. முஸ்லிம்கள் அவரை வெற்றித் தளபதி என்று பொருள்படும் காஜி (Kazi) என்ற பெயராலே அழைத் தனர். அரசாங்கத்தின் தன்மையே அவர்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஆகவே, தேசிய மன்றம் துருக்கியை ஒரு குடியர சென்றும், கெமாலை அதன் முதல் தலைவரெனவும் அறிவித்தது. துருக்கி ஓர் எழுதப்பட்ட அரசியலமைப்பைப் பெற்றிருந்த போதிலும், தேசிய மன்றத்திடம் முழு அதிகாரம் இருந்த போதி லும், நடைமுறையில் கெமால் சர்வாதிகாரியாகவே இருந்தார். நாட்டின் தலைவரென்ற முறையில் அவர் அமைச்சரவையையும், முழு அரசாங்கத்தையும் கட்டுப்படுத்தி வந்தார். படைத் தலைவரென்ற முறையில் போர்ப்படை முழுவதையும் தமது அதிகாரத்துக்குள் வைத்திருந்தார். நாட்டில் எதிர்க் கட்சி ஒன்றும் கிடையாது. ஆகவே, கெமால் சர்வாதிகாரியாகவே இருந்தார். ஆயினும், அவரது ஆட்சியானது நன்மைசெய்யும் நல்லாட்சியாக விளங் கியது. கெமால் துருக்கியில் காணப்பட்ட பல அரசியல், சமூக, பொருளாதாரச் சீர்கேடுகளை வன்முறையினால் அறவே அகற்றி, அதை ஐரோப்பிய நாடுகளில் சிறப்புடைய நாடாக மிளிரச் செய்தார். 'ஐரோப்பாவின் நோயாளி' என்றழைக்கப்பட்ட துருக்கியை உரமிக்க நாடாகத் திறம்பட மாற்றினார். எனவே, மக்கள் அவரை "அட்டாடர்க்" அதாவது, 'துருக்கியின் தந்தை' என்றழைத்தனர்.

———

ஐந்தாம் பகுதி :
கூட்டாட்சியும் சர்வதேச நிறுவனங்களும்

1. கூட்டாட்சி முறை
2. சர்வதேச நிறுவனங்கள்

1. கூட்டாட்சி முறை

"நாட்டின் ஒற்றுமையையும் அதிகாரத்தையும் மாநில உரிமைகளோடு இணைக்கும் ஓர் அரசியல் ஏற்பாடே கூட்டாட்சி அரசாகும்" என்று பேராசிரியர் டைஸி (Dicey) கூறுகிறார். கூட்டாட்சியிலே நடு அரசாங்கமும், மாநில அரசாங்கமும் உள்ளன. மாநில அரசாங்கத்திற்கு அரசியல் அமைப்பு அளித்திருக்கும் அதிகாரங்கள் நடு அரசாங்கத்தைச் சார்ந்தவையுமல்ல; நடு அரசாங்கத்தால் மாற்றியமைக்கவும் முடியாதவை. எனவே, நடு அரசாங்கத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையேயுள்ள தொடர்புதான் கூட்டாட்சியை ஓருமுக ஆட்சி (Unitary State) யிலிருந்து வேறுபடுத்துகிறது.

கூட்டாட்சியில் மாநிலங்கள் பொதுநன்மைக்காக இணைந்திருக்கின்றன. மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சில அதிகாரங்கள் நடு அரசாங்கத்தின் அதிகாரத்தை மட்டுப்படுத்துகின்றன. கூட்டாட்சியில் அரசியல் அமைப்புக்கு மேலான அதிகாரம் உண்டு. அதுதான் நடு அரசாங்கத்திற்கும் மாநிலங்களுக்குமுள்ள அதிகார வேறுபாட்டையும், அதிகாரப் பங்கீட்டையும் (Distribution of powers) தீர்மானிக்கிறது. மாநிலச் சட்டமன்றங்களோ, நடு அரசாங்கச் சட்டமன்றமோ அரசியல் அமைப்பை மாற்ற முடியாது. உண்மையான கூட்டாட்சியில் அரசியல் அமைப்பை மாற்றும் முறை தெளிவாகக் கூறப்பட்டிருக்கும். மேலும், அதில் நடு அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் முரண்பாடு ஏற்படும்போது அதைத் தீர்த்துவைக்கும் ஒரு நிறுவனம் உண்டு. பொதுவாக அந்த அலுவலைத் தலைமை நீதிமன்றம் (Supreme Court) செய்துவரும். ஆகவே, முழு வளர்ச்சி பெற்ற கூட்டாட்சியில் நான்கு சிறப்பியல்புகள் உண்டு. அவை, அரசியல் அமைப்பின் தலையாய நிலை (Supremacy of the Constitution), அதிகாரப் பங்கீடு (Division of powers), முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கும் தலைமை நிறுவனம், அரசியல் அமைப்புத் திருத்தம் (Amendment of the Constitution) என்பன.

கூட்டாட்சிக்கு வேண்டிய சூழ்நிலைகள்

பல நாடுகள் சேர்ந்து கூட்டாட்சியை அமைக்க வேண்டுமெனின் அதற்குச் சில சூழ்நிலைகள் தேவை. இணைய விரும்பும் நாடுகள் ஒன்றிற்கொன்று அண்மையில் இருக்கவேண்டும். பொதுவான மொழி, பண்பாடு, மதம் அல்லது ஒற்றுமை உணர்ச்சியை உண்டுபண்ணும் ஏதாவது வேறு பிணைப்புகள் அவற்றி

னிடையே காணப்படவேண்டும். கூடிவாழும் விருப்பமும் இருக்க வேண்டும். கூட்டாட்சியில் அவற்றின் நிலை, பிரதிநிதித்துவம், அரசாங்க அமைப்பு இவையெல்லாம் ஏறக்குறைய சமமாக இருக்க வேண்டும். மக்கள் அரசியல் அறிவு பெற்றவர்களாகவும், இரு வகை அரசாங்கங்களுக்கும் செலுத்தவேண்டிய கடமைகளை உணர்ந்தவர்களாகவும், தலைமை நீதிமன்றத்தின் முடிவுகளை மதித்து ஏற்கும் பண்புள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகக் கூட்டாட்சியிலிருந்து விலகிச் செல்லும் எண்ணமே இருக்கக் கூடாது.

கூட்டாட்சியின் சிக்கல்கள்

1. அதிகாரப் பங்கீடு

கூட்டாட்சியின் சிறப்பியல்புகளில் ஒன்று அதிகாரப் பங்கீடு எனப் பார்த்தோம். அதுவே சில வேளை பல சிக்கல்களுக்குக் காரணமாக இருக்கிறது. கனடா அல்லது இந்தியாவில் காணப் படுவது போல அதிகாரங்கள் நடு அரசாங்கத்திடம் ஒப்புவிக்கப் பட்டிருக்கலாம். அப்படியானால் நடு அரசாங்கத்தின் பலம் அதி கரித்து அது ஒருமுக ஆட்சியின் இயல்புகள் சிலவற்றைப் பெறும். அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்ட்ரேலியா, சுவிட்ஸர்லாந்து, சோவியத் ரஷ்யா போன்ற சில கூட்டாட்சிகளில் நடு அரசாங்கத் தின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு, ஏனைய அதிகாரங்கள் மா நில அரசாங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய கூட் டாட்சிகளில் மாநிலங்கள் அதிகமாகத் தன்னாட்சி பெற்றுள்ளன. ஆகவே, அரசியல் அமைப்பின் கூட்டாட்சித் தன்மை மாநிலங் களின் அதிகாரங்களுக்கு நேர் விகிதத்தில் இருக்கிறது. அதிகாரப் பங்கீடு எவ்விதமாக இருந்தபோதிலும், நடு அரசாங்கம் சில முக் கியமான அதிகாரங்களைப் பெற்றிருக்கவேண்டும். கூட்டாட்சி ஒழுங்காக நடைபெறுவதற்கு இன்றியமையாத பாதுகாப்பு, அயல் நாட்டுச் செய்திகள், வரி ஆகியவையும், ஒற்றுமையை வளப் படுத்துவதற்குத் தேவையான நாணயம் அச்சடித்தல், அஞ்சல் பணி, தனி உரிமை (Patent), பதிப்புரிமை (Copyright) ஆகியவை யும், நாட்டு முன்னேற்றத்திற்கான போக்குவரவு, சுங்கவரி, பொருளகத் தொழில் (Banking) ஆகிய அதிகாரங்களையும் நடு அரசாங்கம் செலுத்திவரும்.

பல துறைகளில் முன்னேற்றமும், வளர்ச்சியும் பெற்றுவரும் தற்கால அரசுகளில் நடு அரசாங்கத்தின் அதிகாரங்களை வலுப் படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற கூட்டாட்சிகளிலே பொது அதிகாரம் (Concurrent Jurisdiction), பொதிந்துள்ள அதிகாரம் (Implied

Powers) என்ற முறைகளால் நடு அரசாங்கத்தின் அதிகாரங்கள் வளர்க்கப்படுகின்றன.

II. அரசியல் அமைப்பைப் பாதுகாக்கும் நிறுவனம்

அரசியல் அமைப்பைப் பாதுகாக்கவல்ல சிறந்த கருவி தலைமை நீதிமன்றமே. அரசியல் அமைப்பை விளக்கிப் பொருள் கூறுவதும், மாநிலமோ அல்லது நடு அரசாங்கமோ தன் ஆட்சி வரம்பை மீறிவிட்டதா என்பதைத் தீர்மானிப்பதும் அதனுடைய பொறுப்பு. இத்தகைய அமைப்புக்கு அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா ஆகிய இரண்டு நாடுகளின் தலைமை நீதிமன்றங்கள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். சுவிட்ஸர்லாந்திலும் ரஷ்யாவிலும் நடு அரசாங்கச் சட்டங்களை அரசியல் அமைப்புக்கு முரணானதெனக் கூறத் தலைமை நீதிமன்றங்களுக்கு அதிகாரம் கிடையாது. ஆகவே அங்கு மாநிலங்களின் உரிமைகளைக் காக்க வல்ல நீதிப் பாதுகாப்பு இல்லையெனக் கூறலாம்.

இது தவிர இன்னொரு பாதுகாப்பும் இருக்கிறது. சுவிட்ஸர்லாந்தில் இருப்பதுபோல மக்கள் தீர்ப்பு (Referendum), துவக்க உரிமை (Initiative) என்ற முறைகளின்படி மக்களுக்குச் சட்ட ஆக்கத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

எல்லாக் கூட்டாட்சியிலும் அரசியல் அமைப்பைச் சாதாரணச் சட்ட மன்றங்களால் மாற்ற முடியாது. அதற்கெனத் தனி முறை வகுக்கப்பட்டிருக்கும். அதில் நடு அரசாங்கத்திற்கும், மாநிலங்களுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும். பொதுவாக இம் மாற்றங்களை முதலில் நடு அரசாங்கம் விரும்பிப் பிறகு அதை மாநிலங்கள் ஏற்கும்.

III. பெரிய மாநிலங்களிலிருந்து சிறிய மாநிலங்களைக் காத்தல்

இதற்கு மூன்று முறைகள் கையாளப்படுகின்றன. முதலாவது நடு அரசாங்கச் சட்டமன்றத்தின் மேல்சபையில் (Second Chamber) எல்லா மாநிலங்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்ட்ரேலியா, சுவிட்ஸர்லாந்து, ரஷ்யா முதலிய நாடுகளில் இம் முறை பின்பற்றப்படுகிறது. இரண்டாவதாக, இந்நான்கு நாடுகளிலும் இருப்பதுபோல, மேல்சபைக்கு ஏறக்குறைய கீழ்சபைக்கு இருப்பது போல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கீழ்சபைக்கு இல்லாத ஓர் உரிமை மேல்சபைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அஃதாவது, நாட்டின் தலைவர் (President) அதிகாரிகளை நியமிப்பதையும், உடன் படிக்கைகள் செய்வதையும் ஏற்றுக் கொள்ளும் உரிமை சாதாரண

மாக ஸெனட்டிற்கு மட்டும் இருக்கிறது. மூன்றுவதாக, ஆஸ்ட்ரேலியாவிலும் சுவிட்ஸர்லாந்திலும் இருப்பதுபோல, அரசியல் அமைப்பின் திருத்தங்கள் மக்களின் பெரும்பான்மை வாக்குகளை மட்டுமல்லாமல், மாநிலங்களின் பெரும்பான்மை வாக்குகளையும் பெறவேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மாநிலங்களில் முக்கால் பகுதியும், இந்தியாவில் சில திருத்தங்களுக்கு மாநிலங்களில் பாதித் தொகையும் இசைந்தால் மட்டும் அரசியல் அமைப்பில் திருத்தங்கள் செய்யமுடியும்.

IV. நடு அரசாங்கத்திற்கும் மாநிலங்களுக்கும் தொடர்பு

மிகச் சிறந்த கூட்டாட்சியில் நடு அரசாங்கமும் மாநிலங்களும் சட்ட ஆக்கம், ஆட்சி முறை, நிதி முதலிய துறைகளில் ஒன்றை யொன்று சாராமல் தனித்தியங்கும். ஆனால், நடைமுறையில் சட்டம், வழக்கங்கள் ஆகியவற்றால் இரண்டிற்கும் பல தொடர்புகள் ஏற்படுகின்றன. அரசியல் அமைப்பின்படி நடு அரசாங்கம் மாநிலங்களின்மேல் சில கட்டுப்பாடுகளை விதிக்கும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அது மாநிலங்களில் குடியரசு அரசியல் அமைப்பைக் காப்பதுடன், வெளிப் படையெடுப்புகளிலிருந்தும், உட்குழப்பங்களிலிருந்தும் அவற்றைப் பாதுகாக்கிறது. கனடாவில் கவர்னர் ஜெனரல் மாநிலங்களின் சட்டங்களைத் தமது மறுப்பாணையால் தள்ளிவிடவும், மாநிலக் கவர்னர்களை நியமிக்கவும் உரிமை பெற்றிருக்கிறார். இந்தியாவில் நடு அரசாங்கம் பலவிதங்களில் மாநிலங்களைக் கட்டுப்படுத்துகிறது. நாட்டின் தலைவரின் பார்வைக்காகக் கவர்னர் மசோதாக்களை ஒதுக்கி வைக்கலாம். மற்ற மாநிலங்களின் பொருட்களின் மேல் வரி விதிப்பதற்கு மாநில அரசாங்கம் நாட்டுத் தலைவரின் இசைவு பெறவேண்டும். மாநில அதிகாரங்களின்மேல் நாட்டின் தலைவருக்கும் பாராளுமன்றத்திற்கும் அதிகாரமுண்டு. மாநிலக் கவர்னர்களை ஏற்படுத்தவும், நீக்கவும் நாட்டுத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. நிதித் துறையிலும் மாநிலங்கள் நடு அரசாங்கத்திற்குப் பணிந்தே இருக்கின்றன.

V. மாநிலங்களுக்குள் தொடர்பு

கூட்டாட்சியில் மாநிலங்களுக்கு இடையே இணக்கம் உண்டாகவும், சில மாநிலங்கள் சேர்ந்து நாட்டுக்கெதிராகச் சதி செய்யாதவாறும் பல முயற்சிகள் செய்யப்படுகின்றன. அவற்றின்படி ஒவ்வொரு மாநிலமும், மற்ற மாநிலங்களின் சட்டங்களையும், நீதி முறையையும் மதிக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலக் குடிகளும் மற்றவைகளின் உரிமைகளில் பங்கு பெறவேண்டும். எல்லா மாநிலங்களுக்கும் சம வணிக உரிமைகள் வழங்கப்படுகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்ட்ரேலியா, சுவிட்ஸர்லாந்து, கனடா ஆகிய நாடுகளில் மாநிலங்களுக்கிடையே தடையில்லா வாணிகம் (Free Trade) நிலவுகிறது. இந்தியாவிலும் அரசியல் அமைப்பின் 301 ஆவது பிரிவு இவ்வுரிமை அளித்தபோதிலும் 302, 303 வது பிரிவுகள் பொது நன்மையைக் கருதிச் சில தடைகளை விதிக்கின்றன. இறுதியாக, மாநிலங்கள் தமக்கிடையே அரசியல் ஒப்பந்தங்களோ, உடன்படிக்கைகளோ செய்து கொள்ளும் உரிமை கிடையாது.

VI. விலகுதல். (Secession)

ஒரு மாநிலம் கூட்டாட்சியிலிருந்து விலகலாமா என்பதுபற்றி ஐயமே கிடையாது. ரஷ்யாவில் மட்டும்தான் இவ்வுரிமை சட்ட பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆயினும், அங்கேயும் நடைமுறையில் இவ்வுரிமை வெறும் கற்பனைதான். 1861-65 இல் அமெரிக்காவிலும், 1848 இல் சுவிட்ஸர்லாந்திலும் நிகழ்ந்த உள் நாட்டுப் போர்கள் மாநிலம் கூட்டு ஆட்சியிலிருந்து விலக முடியா தென்று தெளிவாகக் காட்டின. 1932 இல் மேற்கு ஆஸ்ட்ரேலியா விலகும் உரிமை கேட்டது. ஆனல், அவ்வுரிமை வழங்கப்பட வில்லை. லீக்காக்கின் (Leacock) கருத்துப்படி, அரசியல் அமைப்பை மாற்றும் அதிகாரமுள்ள நிறுவனத்திற்கு விலகும் உரிமை அளிக்கும் அல்லது மறுக்கும் அதிகாரம் இருக்கிறது. ஒரு மாநிலம் கூட்டாட்சியிலிருந்து விலக விரும்பினல், பலத்தாலன்றி வேறு எவ்விதமான அரசியல் அமைப்பு விதிகளாலும் அதைத் தடுத்து நிறுத்தமுடியாது.

கூட்டாட்சியின் நற்பண்புகள்

கூட்டாட்சியினல் அதிலுள்ள பகுதிகளுக்கு விளையும் நலன் கள் மிகப்பல. கூட்டாட்சி ஏற்படுவதால் அண்மையிலுள்ள நாடுகள் ஒன்றோடொன்று போரிடுவதற்குப் பதிலாக ஒன்றுக இணைந்து ஓரளவு தன்னுட்சியுடன் விளங்குகின்றன. கூட்டாட்சி யில் அதிகாரங்கள் நடு அரசாங்கத்திற்கும் மாநிலங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படுவதால், நடு அரசாங்கம் வல்லாட்சி செய்ய முடியாமல் தடுக்கப்படுகிறது. மாநிலங்களிலே தன்னுட்சி நடைபெறுவதால், சட்ட ஆக்கத்திலும் ஆட்சித் துறையிலும் மக்களுக்குப் பயிற்சி ஏற்படுகிறது. ஒரு புதிய பரந்த நாட்டின் முன்னேற்றத்திற்குக் கூட்டாட்சியே சிறந்தது. ஏனெனில், ஒருமுக ஆட்சியில் ஒரு குறிப்பிட்ட முறை நாடு முழுவதிலும் திணிக்கப் படும். மேலும், கூட்டாட்சியில் நடு அரசாங்கத்தின் வேலைகள் குறைக்கப்படுவதால், அது நாட்டின் பொது நலத்திற்கான செயல்களைக் கவனிக்க வழியேற்படுகிறது. இறுதியாக, நெகிழா

அரசியல் அமைப்பின் (Rigid constitution) நல்லியல்புகளான உறுதி, தெளிவு ஆகியவற்றைக் கூட்டாட்சியில் காணலாம்.

கூட்டாட்சியின் குறைகள்

நற்பண்புகள் நிறைந்து காணப்பெறினும், கூட்டாட்சியில் குறைகளும் உள்ளன. பேராசிரியர் டைஸி கூறுவதுபோலக் "கூட்டாட்சியின் அரசியல் அமைப்பு தன் இயற்கையிலே ஆற்றல் குறைந்த ஓர் அரசாங்க முறையாகும்." அது எல்லா மாநிலங்களின் முழு ஆதரவு பெற்ற உரமிக்க ஓர் அயல்நாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்க முடியாது. அதிகாரப் பிரிவும், பங்கீடும், அதன் விளைவான இருவிதத் தனி அரசாங்கங்கள் ஒன்றையொன்று கட்டுப்படுத்தும் முயற்சியும் பிரிவு மனப்பான்மையை வளர்க்கும். அமெரிக்க வரலாறு இதற்குச் சான்றாகும். தொழில், வாணிகம், திருமணம் முதலிய துறைகளிலே நாடு முழுவதற்கும் ஒரேவிதக் கொள்கை தேவையாக இருந்தபோதிலும், கூட்டாட்சியிலே பல்வேறு கொள்கைகள் பின்பற்றப்படும். கூட்டாட்சியில் அரசியல் அமைப்பு நெகிழாததாக இருப்பதால், மக்களிடையே பழமைக் கொள்கைகள் மாறுதலுடன், சமூகப் பொருளாதாரத் துறைகளிலே புதுமை தோன்றுவதில்லை. சட்ட ஆக்கத்திலும், ஆட்சி முறையிலும் இருவிதச் சிக்கல்கள் இருப்பதால் வீணான செலவும், தடங்கலும், காலதாமதமும் ஏற்படுகிறது. மேலும், கூட்டாட்சியிலே வழக்குகளும், நீதி மன்றங்களும் தவிர்க்க முடியாதவையாகிவிடுகின்றன.

கூட்டாட்சியும், நாட்டுக் கூட்டமும்

கூட்டாட்சியின் இயல்புகளைப்பற்றிப் படிக்கும்போது நாட்டுக் கூட்டத்தைப்பற்றியும் (Confederation) பார்ப்பது பொருந்தும். பல நாடுகள் ஒன்று சேர்ந்து பொது நலன்களுக்காக ஓர் அமைப்பை ஏற்படுத்திக்கொள்ளும்போது அது நாட்டுக் கூட்டம் அல்லது நாடுகளின் கூட்டமைப்பு என அழைக்கப்படுகிறது. இதில் நடுநிறுவனத்திற்கு மற்ற அரசாங்கங்களைக் கட்டுப்படுத்தும் உரிமை கிடையாது. இவ்வாறான அமைப்பிற்கு வரலாற்றிலிருந்து பல எடுத்துக் காட்டுக்களைக் கூறலாம். உதாரணமாக 1781 ஆம் ஆண்டிலிருந்து 1789 ஆம் ஆண்டு வரை அமெரிக்காவின் பதின்மூன்று நாடுகளும் இத்தகைய கூட்டமைப்பைத் தமக்குள் ஏற்படுத்தியிருந்தன. 1815 இலிருந்து 1866 வரை 39 ஜெர்மானிய நாடுகள் இணைந்து நிறுவிய அமைப்பும் இவ்வகையைச் சேரும்.

நாடுகளின் கூட்டமைப்புக்கும் கூட்டாட்சிக்கும் பல வேறுபாடுகளுண்டு. கூட்டமைப்பானது பல நாடுகளின் அரசாங்கங்

கள் மூலமாக ஏற்படுவது. அதைப் பன்னாட்டு உடன்படிக்கைக்கு (International-treaty) ஒப்பாகச் சொல்லலாம். அதற்கும் நாட்டு மக்களுக்கும் தொடர்பில்லை. ஆனால், கூட்டாட்சியை நிலை நிறுத்தும் அரசியல் அமைப்பிற்கு மக்களின் இசைவு தேவை. கூட்டமைப்பில் எல்லா உறுப்புக்களுக்கும் இறைமைப் பண்பு உண்டு. ஆனால், கூட்டாட்சியானது இறைமையுள்ள ஒரே நாடாகும். கூட்டமைப்பின் உறுப்புக்கள் கூட்டிலிருந்து விலகிக் கொள்ளலாம். ஆனால், கூட்டாட்சியில் இவ்வுரிமை கிடையாது. அப்படி விலக முயன்றால் அது சட்டத்திற்கு எதிரானதாகவும், புரட்சிகரமானதாகவும் கருதப்படும். கூட்டமைப்பில் உறுப்புக்கள் நடு அரசாங்கத்தை உண்டாக்குகின்றன. அதன் அதிகாரத்தை அழிக்கவோ, குறுக்கவோ, பெருக்கவோ அவற்றிற்கு அதிகாரமுண்டு. ஆனால், கூட்டாட்சியின் நடு அரசாங்கம் அரசியல் அமைப்பினால் உருவானது. அதனுடைய அதிகாரங்கள் திட்டமாக அரசியல் அமைப்பில் கூறப்பட்டிருக்கும். கூட்டாட்சியின் உறுப்புக்கள் நடு அரசாங்கத்தின் அதிகாரத்தை அழிக்கவோ, மாற்றவோ முடியாது; அப்படிச் செய்ய விரும்பினால் அரசியல் அமைப்பின் திருத்த முறைப்படி செய்யவேண்டும். கூட்டமைப்பில் நடு ஆட்சித் துறை, நீதித்துறை நிறுவனங்கள் இல்லை. அது நேராகக் குடிகள்மீது ஆணை செலுத்த முடியாது. உறுப்புக்களின் அரசாங்கங்களின் மூலமாக அதன் தீர்மானங்களைச் செயல்படுத்த முடியும். கூட்டாட்சியில் நடு அரசாங்கம் சட்டங்களை இயற்றி ஆட்சித்துறை, நீதித்துறை நிறுவனங்களின் வாயிலாக அவற்றை நாட்டுமக்கள் அனைவர்மேலும் செலுத்த முடியும். கூட்டமைப்பின் ஓர் உறுப்பு பிற உறுப்புக்களைப் பாதிக்காமல் பிற நாடுகளுடன் உடன்படிக்கை செய்யவும், போர் தொடங்கவும் முடியும். இரண்டு உறுப்புக்களுக்கு இடையே நிகழும் போர் இரு நாடுகளுக்கிடையே நிகழும் போராகக் கருதப்படுமே யொழிய, உள்நாட்டுப் போராக எண்ணப்படாது. மேலும் கூட்டமைப்பில் நடு அரசாங்கத்தின் சட்டங்கள் கூட்டின் உடன்படிக்கைக்கு முரணானதாக இருப்பதாகத் தெரிந்தால், உறுப்புக்கள் அவற்றிற்குக் கீழ்ப்படிய மறுக்கலாம். ஆனால், கூட்டாட்சியில் நடு அரசாங்கச் சட்டம் அரசியல் அமைப்புக்குட்பட்டதா என்பதைத் தலைமை நீதிமன்றம் மட்டும் தீர்மானிக்க முடியும். கூட்டமைப்பில் எந்த உறுப்பையும் அதன் விருப்பத்திற்கு மாறாக நடு அரசாங்கத்திற்குக் கீழ்ப்படியச் செய்ய முடியாது. ஏனெனில், அதற்கு இறைமைப் பண்பு உண்டு.

மேற்கூறிய வேற்றுமைகளிலிருந்து நாட்டுக்கூட்டமானது ஓர் உறுதி குறைந்த அமைப்பென்றும், கூட்டாட்சியானது திண்மையான ஒரு சேர்க்கை யென்றும் தெரிகிறதல்லவா?

அ. கிரேக்கக் கூட்டாட்சி முறை

கூட்டாட்சியானது மனித இனத்தைப் போன்று அவ்வளவு பழமையானது. மிகத் தொன்மையான அரசியல் நிறுவனமாகிய குல ஆட்சிமுறை கிரீஸிலும், ஜெர்மனியிலும் பல கிராமங்கள் சேர்ந்த தளர்ந்த கூட்டாட்சியாகவே இருந்தது. காலப் போக்கில் ஹெல்லனிய இனத்தின் முற்போக்கான பகுதியினர் நகர ஆட்சி முறையை வளர்த்தபோதிலும், நாட்டுப் புறங்களிலே வாழ்ந்து அரசியல் வளர்ச்சியின் கீழ்ப்படியிலே இருந்த பிற்போக்கான பகுதியினர் ஒருவிதமான கூட்டாட்சியை நிறுவினர்கள். அத்தகைய கூட்டாட்சிக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாக ஈட்டோலியக் கூட்டமைப்பும், அக்கேயக் கூட்டமைப்பும் விளங்குகின்றன.

ஈட்டோலியக் கூட்டமைப்பு

ஈட்டோலியர்கள் ஹெல்லனிய இனத்தின் பிற்போக்கான பகுதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பாதுகாப்பரண்களில்லாத கிராமங்களிலே வாழ்ந்து, கடற்கொள்ளையினால் பணம் திரட்டி வந்தனர். முதலில் அவர்கள் இனப்பிரிவுகளை அடிப்படையாகக் கொண்ட பல கோட்டங்கள் (Cantons) சேர்ந்த குலக் கூட்டமைப்புக்களை அமைத்தனர். பிறகு இந்தக் குலக் கூட்டமைப்புக்கள் நகரங்களைக்கொண்ட கூட்டாட்சியாக வளர்ச்சியுற்றன. உடன் படிக்கையின் விளைவாகவும், படையெடுப்பின் காரணமாகவும், பிற ஈட்டோலியக் கூட்டங்களின் கொள்ளையிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காகவும் இந்தக் கூட்டாட்சிகள் ஏற்படுத்தப் பட்டன. ஈட்டோலியக் கூட்டமைப்பு பிற நாடுகளைத் தாக்கி வந்தபோதிலும், அஃது ஒருபோதும் பேரரசுத் தன்மையுடன் விளங்கவில்லை. அதற்கு மாறாகக் கூட்டாட்சி நிறுவனங்களுக்கேற்ற மக்களாட்சியின் அரசியல் அமைப்பைப் பெற்றிருந்தது. கூட்டமைப்பின் தலைவராக ஆண்டுதோறும் ஒரு படைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். போர்க்களத்தில் படைகளை நடத்திச் செல்வது, பேரவைக்குத் தலைமை தாங்குவது, பிற நாடுகளுடன் உடன்படிக்கை செய்யும்போது நாட்டின் பிரதிநிதியாகச் செல்வது முதலியவை தலைவரின் அலுவல்கள். சட்டங்களைத் திருத்தும் அதிகாரம் ஒழுங்காக நியமிக்கப்பட்ட அலுவலர்களைக் கொண்ட குழுவிற்கு வழங்கப்பட்டிருந்தது. அவர்களே அரசாங்கப் பத்திரங்களின் காப்பாளர்களாகவும் இருந்தனர். ஆட்சித்துறை அலுவல்கள் வேறொரு குழுவினால் கவனிக்கப் பட்டன அது படைத் தலைவனின் இசைவின்பேரில் பேரவையைக் கூட்டியது. பலமுறை பேரவையைக் கலக்காமலே நாட்டின் பேரால் செயலாற்றும் அதிகாரமும் அது பெற்றிருந்தது.

அநேகமாக இக்குழு கூட்டாட்சி அவையில் ஒரு பகுதியாக இருந்திருக்கும். கூட்டாட்சி அவையில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு பிரதிநிதி இருந்தார். இது தவிர மக்களின் பேரவை ஒன்றிருந்தது. கூட்டாட்சியிலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் அதில் அமர்ந்து வாக்களிக்கவும் உரிமையுண்டு. வாக்கெடுப்பின் போது எத்தனை ஆட்கள் வாக்களித்தனர் என்று கணக்கிடாது எத்தனை நகரங்கள் வாக்களித்தன என்றே கணக்கிட்டுவந்தார்கள். அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக ஆண்டுக்கொருமுறை பேரவை கூடிற்று. போர், சமாதானம், அரச தூதுவர்களை நியமித்தல் அல்லது வரவேற்றல் போன்ற முக்கியமான காரியங்களுக்காகச் சிறப்புக் கூட்டங்கள் கூட்டப்பட்டன. ஆயினும், இக்கூட்டாட்சியானது நகர அரசுகளைப் போல அவ்வளவு முதிர்ந்த மக்களாட்சியாக வளர்ச்சியடையவில்லை. ஏனெனில், ஏழை மக்கள் தூர வட்டாரங்களிலிருந்து பேரவைக் கூட்டங்களுக்கு வரவியலாததால் உயர்குடி மக்கள் வாக்கெடுப்பைக் கட்டுப்படுத்தி வந்தனர். மேலும் செயல்துறை அதிகாரம் மிகுந்திருந்ததால், பரந்த நிலப் பகுதியில் சிதறிக்கிடந்த மக்கள் அரசாங்கத்தில் நேராகப் பங்கு பெற முடியாமற் போயிற்று.

அக்கேயக் கூட்டமைப்பு

அக்கேயக் கூட்டமைப்பானது ஈட்டோலியக் கூட்டமைப்பைப் போலல்லாமல் நகரங்களைக் கொண்டதாக இருந்தது. ஸ்பார்ட்டாவும் ஏதன்ஸும் ஒன்றோடொன்று போரிட்டுக் கொண்டிருந்த காலத்திலும், பிலப்பொனீசைத் தீப்ஸ் நாட்டின் படைகள் தாக்கி வந்தபோதும் அக்கேயக் கூட்டமைப்பானது மக்களாட்சிப் பாதையில் சுதந்திரத்துடன் விரைந்து சென்று கொண்டே இருந்தது. ஆனால், மாசிடோனியப் படையெடுப்பின் பிறகு அது கலைந்துபோய்விட்டது. பிலிப், அலெக்ஸாண்டர் இவர்களுக்குப் பிறகு வந்தவர்கள் காலத்தில் நிகழ்ந்த போர்களின்போது கிரேக்க நாடானது பல மன்னர்கள் பொருதும் போர்க்களமாக மாறி, அதன் அரசியல் சுதந்திரமும், அரசியல் அமைப்பின் உரிமைகளும் அழிந்துபோகும் நிலையிலிருந்தன. இந்நிலையில் அக்கேயக் கூட்டமைப்புப் புதுப்பிக்கப்பட்டது ஆயினும் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகே கொரிந்த், மெகாரா, எப்பிடாரஸ், மெகலோப்போலிஸ் முதலிய முக்கிய நகரங்கள் கூட்டமைப்பில் சேர்ந்தன. ஆனால், அது ஸ்பார்ட்டாவிற்கெதிராக மாசிடோனியாவின் துணையை நாடியதால், விரைவில் தனது வலுவெல்லாம் இழந்தது. திரும்பவும் அக்கேயா அழிவிலிருந்து உயிர்த்தெழுந்து, ஹெல்லனிய சுதந்திரத்தைக் காப்பதற்காக ஸ்பார்ட்டா, மெஸினி, எலிஸ் ஆகியவற்றைத் தனது அமைப்புக்குள் கொண்டு

வந்தது. ஆனால், அது ரோமானியப் பேரரசை எதிர்த்து நிற்க ஆற்றலின்றி 146ஆம் ஆண்டிற்குப் பிறகு தனது அரசியற் பயனை இழந்தது.

அக்கேயக் கூட்டமைப்பில் கூட்டாட்சியின் தன்மைகள் காணப்பட்டன. அவ்வமைப்பிலுள்ள நாடுகள் உள்நாட்டுச் செயல்களில் தமது இறைமை அதிகாரத்தைத் தம்மிடம் வைத்திருந்தன. ஆனால், வெளிநாட்டுக் காரியங்களில் எல்லா அதிகாரங்களையும் நடு அரசாங்கத்திடம் ஒப்புவித்தன. அரசாங்கச் செலவுக்கான பணத்தை வழங்கும் உரிமை நடு அரசாங்கப் பாராளுமன்றத்திற்கே இருந்தது. ஒவ்வொரு நகரமும் தனக்குக் குறிக்கப்பட்ட எண்ணிக்கையுள்ள போர்வீரர்களை அளித்து வந்தது. கூட்டமைப்பின் குடிகள் தாம் விரும்பிய இடத்தில் குடிமையுரிமை பெறலாம். பன்னாட்டுச் சட்டம் (International Law) சார்ந்த எல்லாச் செயல்களிலும் நடு அரசாங்கத்தின் தீர்ப்பே முடிவானது. எல்லாவற்றிற்கும் மேலாகத் தனது தீர்ப்பை நிறைவேற்றிவைக்க நடு அரசாங்கத்திற்கு முழு அதிகாரம் இருந்தது.

கூட்டமைப்பின் அரசியல் அமைப்பு மக்களாட்சியின் அடிப்படையில் நிறுவப்பட்டிருந்தது. பேரவையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தளபதி அரசாங்கத்தின் தலைவராக விளங்கினார். அவர் பேரவைக்குப் பொறுப்பாளியாக இருந்தார். அவருக்கு உதவி செய்ய ஆண்டுதோறும் தெரிந்தெடுக்கப்பட்ட பத்து அதிகாரிகள் இருந்தனர். அநேகமாக அவர்கள் தளபதியின் அரசியல் கருத்துப்படி நடந்து அவரது அமைச்சர்களாக விளங்கினர்கள். அக்கேயத் தளபதி ஈட்டோலியத் தளபதியைப் போலல்லாமல் கூட்டமைப்பின் தலைவராக இருந்ததுடன் முதல் அமைச்சராகவும் திகழ்ந்தார். போர்க்களத்தில் படைகளை நடத்துவதில் எல்லையற்ற அதிகாரம் பெற்றிருந்தார். அவரே அயல்நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து, பேரவையின் முக்கியமான கட்டளைகளைத் துவக்கி வைத்தார். செயல்துறைக்குத் துணையாக ஓர் அவை இருந்தது. அதில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு வாக்குரிமை இருந்தது. முப்பது வயதிற்கு மேற்பட்ட எல்லாக் குடிகளும் அதன் உறுப்பினராக முடியும். பொதுவாக அது ஆண்டிற்கு இரு முறை கூடிற்று. முதலில் ஈஜியத்திலும், பிறகு கூட்டமைப்பிலுள்ள ஒவ்வொரு நகரத்திலும் முறைப்படி கூடியது. அது ஆண்டுக்கொரு முறை அதிகாரிகளையும், தளபதியையும் தேர்ந்தெடுத்தது. அதுவே அரசாங்கச் செலவுக்கான பணத்தை வழங்கி, முக்கியமான செய்திகளை முடிவு செய்தது. ஆயினும் ஈட்டோலியக் கூட்டமைப்பிலிருந்தது போலவே, இக்கூட்டமைப்பிலும் அரசாங்கமானது உயர்குடியாட்சியின் தன்மை பெற்

நிருந்தது. ஏனெனில், தொலைவிலுள்ள நகரங்களில் வாழ்ந்த ஏழை மக்கள் தம் காலத்தையும் பணத்தையும் செலவழித்துப் பேரவையின் கூட்டங்களுக்கு வர இயலவில்லை. மேலும் கூட்டங்கள் அரிதாகவே கூட்டப்பட்டதாலும், தூதாண்மை, படைத்துறை முதலிய செய்திகளில் அவை அதிக அலுவல்களை ஆற்றிவந்ததாலும் அவையின் அதிகாரமும், தளபதி, அதிகாரிகளின் செல்வாக்கும் அதிகமாக வளர்ந்தன.

ஆ. நெதர்லாந்துகளின் ஐக்கிய மாநிலங்கள்

பத்து பெல்ஜிக் அல்லது தெற்கு மாநிலங்கள் விடுதலைப் போரிலிருந்து விலகி ஸ்பெயின் நாட்டுடன் சமாதானம் செய்துகொண்ட பிறகு, 1579 ஆம் ஆண்டு உட்ரெக்ட் ஐக்கியத்தின்படி உண்டாக்கப்பட்டதே ஐக்கிய மாநிலங்களின் அரசியல் அமைப்பாகும். ஏழு வட மாநிலங்கள் சேர்ந்து ஒரு நாட்டுக் கூட்டத்தை அமைத்துக் கொண்டன. அதன் நடு அரசாங்கத்தின் அதிகாரம் ஸ்டேட்ஸ் ஜெனரல் என்ற பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன் முக்கிய செயல்துறை அதிகாரிகள் படைத்தளபதி (Captain General), கப்பற்படைத் தலைவர் (Admiral General) ஆகியவர்கள். சில காலங்களில் கூட்டமைப்பு முழுவதற்கும் ஒரு மாநிலத் தலைவர் ஏற்படுத்தப்பட்டார். வேறு சில காலங்களில் ஹாலந்து மாநிலத்தின் முக்கிய அதிகாரியே கூட்டமைப்பு முழுவதற்கும் செயல்துறை அதிகாரியாக விளங்கினர். ஆரஞ்சு மரபினைச் சேர்ந்த மாநிலங்கள் பொதுவாகக் கூட்டமைப்பில் பெருஞ் செல்வாக்கைப் பெற்றிருந்தன. நெருக்கடியான காலங்களில் கூட்டமைப்பை வழி நடத்தும் பொறுப்பு அவற்றிற்கே கொடுக்கப் பட்டன.

டச்சு அரசியல் அமைப்பு மிகவும் தளர்ந்திருந்தது. ஏழு மாநிலங்களும் ஒரு முழுமையான பொதுநலக் கூட்டை அமைக்காமல் ஏழு பொதுநலக் கூட்டுக்களைக் கொண்ட ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தியிருந்தன. அவற்றின் பிரதிநிதிகள் எப்போதும் ஹேக் நகரிலே தங்கியிருந்து கூட்டமைப்பு முழுவதையும் சார்ந்த செயல்களைக் கவனித்து வந்தனர். முக்கியமான காரியங்களைப்பற்றி முடிவு செய்யுமுன் அவர்கள் ஒவ்வொருவரும் தமது மாநில அரசாங்கங்களின் இசைவு பெற்ற பிறகே தமது முடிவைத் தெரிவிப்பார்கள். இந்தப் பிரதிநிதிகளைக் கொண்ட நிறுவனமே ஸ்டேட்ஸ் ஜெனரல் என அழைக்கப்பட்டது. ஒவ்வொரு மாநிலமும் ஸ்டேட்ஸ் ஜெனரலுக்குத் தன் விருப்பம் போல் எத்தனை பிரதிநிதிகளையும் அனுப்பலாம். ஆனால் கூட்டாட்சியின் கோட்பாட்டின்படி மாநிலங்களுக்குள் சமத்து

வத்தை நிலைநாட்ட ஒரு மாநிலத்தின் பிரதிநிதிகள் அனைவருக்கும் ஒரு வாக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் 'ஸ்டேட்' என்ற தனிப் பேரவை இருந்தது. மாநிலத்திலுள்ள ஒவ்வொரு நகரமும் தனது அவையிலிருந்து மாநிலப் பேரவைக்குப் பிரதிநிதிகளை அனுப்பியது. மாநிலப் பேரவை ஒவ்வொன்றும் ஸ்டேட்ஸ் ஜெனரலுக்குத் தனது பிரதிநிதிகளை அனுப்பியது. இப்பிரதிநிதிகள் அநேகமாக நகரங்களில் வாழ்ந்த நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் செல்வமும் செல்வாக்கும் உள்ளவர்களாக இருந்தனர். அவர்களுடைய ஆட்சி மான்டெஸ்க்வே (Montesquieu) வரையறுத்துள்ள இலட்சிய உயர் குடியாட்சியை ஒத்திருந்தது. மான்டெஸ்க்வே கூறுகிறார். "உயர் குடியாட்சியானது மக்களாட்சிக்கு எவ்வளவு நெருங்கிவருகிறதோ அவ்வளவுக்கு அது நிறைவு பெறுகின்றது".

இ. சுவிட்ஸர்லாந்து

கூட்டாட்சியின் தோற்றம்

1648 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வெஸ்ட்ஃபேலியா உடன்படிக்கையின்படி, பனிமூடிய மலைகளிடையே இலங்கிய பதின்மூன்று நாடுகளும் ஒன்று சேர்ந்து அமைத்த சுவிஸ் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது நிலையான ஒரு நடு அரசாங்கமில்லாத தளர்ந்த கூட்டு அமைப்பாக இருந்தது. ஒவ்வொரு கோட்டமும் (Canton) ஏறக்குறையத் தன்னாட்சி பெற்றிருந்தது. அவற்றின் பொது நலன்களைச் சார்ந்த காரியங்களைப் பற்றி முடிவு செய்ய அவற்றின் பிரதிநிதிகள் டயட் (Diet) என்றழைக்கப்பட்ட பொது மன்றமாகக் கூடிக் கலந்து பேசி முடிவுக்கு வருவது வழக்கம். இதைத் தவிர வேறு எவ்விதமான நடு நிறுவனமும் கிடையாது. மேலும், பொது மன்றத்தின் முடிவுகள் அவற்றை ஏற்றுக்கொள்ளாத கோட்டங்களைக் கட்டுப்படுத்த முடியாது. பிரெஞ்சுப் புரட்சியின்போது பிரெஞ்சுக்காரர்களால் புகுத்தப்பட்ட நடு அரசாங்கம் சிறிது காலம் சுவிட்ஸர்லாந்தை ஒற்றுமைப்படுத்தியது. 1803 ஆம் ஆண்டு நெப்போலியன் பழைய சுவிஸ் கூட்டமைப்பைப் புதுப்பித்தபோது, கோட்டங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு நடுப் பாராளுமன்றம் ஏற்படுத்தப் பட்டது. 1815 இல் கூடிய வியன்னா மாநாட்டின் பிறகு பழைய தளர்ந்த கூட்டமைப்பு உயிர்ப்பிக்கப்பட்டது. நிலையான நடுப் பாராளுமன்றம் இருந்தபோதிலும், அது வலுவிழந்துவிட்டது. இந்நிலையில்தான் சுவிட்ஸர்லாந்தில் 1874 இல் கத்தோலிக்கக் கோட்டங்களுக்கும் புரோட்டஸ்டாண்டு கோட்டங்களுக்குமிடையே உள்நாட்டுப் போர் தொடங்கியது. இப்போரின்போது சுவிஸ்

மக்கள் தளர்ந்த கூட்டமைப்பின் வலுவின்மையையும், பலமுள்ள கூட்டாட்சியின் தேவையையும் கண்டுணர்ந்தார்கள். இதன் விளைவாக 1848 ஆம் ஆண்டு சுவிஸ் கோட்டங்கள் ஒரு கூட்டாட்சியை அமைத்தன. ஆனால், அந்த அரசியல் அமைப்பின் படி நடு அரசாங்கத்திற்குப் போதுமான அதிகாரம் வழங்கப் படவில்லை. இக்குறையைத் தவிர்க்கத் தோன்றிய இயக்கமானது இறுதியில் 1874 ஆம் ஆண்டில் அரசியல் அமைப்பைத் திருத்து தில் வெற்றி பெற்றது. இந்த அரசியல் அமைப்பே பல திருத் தங்களுடன் இன்னும் சுவிஸ் அரசாங்கத்தின் அடிப்படையாக விளங்குகிறது.

கூட்டாட்சியின் இயல்புகள்

சுவிஸ் கூட்டாட்சியில் பத்தொன்பது முழுக் கோட்டங்களும் ஆறு அரைக் கோட்டங்களும் உள்ளன. இந்த அரைக் கோட் டங்களில் தனி அரசாங்கங்கள் இருந்தபோதிலும், நடு அரசாங்க மன்றத்திற்கு அவை ஒவ்வொன்றும் ஒரு பிரதிநிதியைத்தான் அனுப்ப வேண்டும். முழுக் கோட்டங்கள் இரண்டு பிரதிநிதிகளை அனுப்பலாம்.

நடு அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கு மிடையே அதிகாரத்தைப் பகிர்ந்திருப்பதைப் பொறுத்தவரையில் சுவிஸ் அரசியல் அமைப்பானது அமெரிக்க அரசியல் அமைப்பை ஒத்திருக்கிறது. நடு அரசாங்கத்திற்குத் தனியாகக் கொடுக்கப் பட்டுள்ள அதிகாரங்கள் மட்டும் உண்டு: மீதி அதிகாரங்கள் எல்லாம் கோட்டங்களையே சாரும். கோட்டங்களுக்கு அவற்றின் ஆட்சியைப் பொறுத்தவரையில் முழு அதிகாரம் உண்டு. அவை தமது அரசியல் அமைப்பை வகுத்துக்கொள்ளும் உரிமை பெற்றுள்ளன. ஆனால், இவ்வுரிமைக்கு மூன்று வரையறைகள் உண்டு. முதலாவது, கோட்டத்தின் அரசியல் அமைப்பானது குடியரசு முறை அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டும். இரண் டாவது, கோட்ட அரசியல் அமைப்பு மக்களின் வாக்கால் (Popular Vote) திருத்தியமைக்கப்படக்கூடியதாக இருக்கவேண்டும். மூன்றுவதாக, கூட்டாட்சியின் அரசியல் அமைப்புக்கு முரணாக எந்த அரசியல் அமைப்பும் இருக்கக் கூடாது.

அதிகாரப் பங்கீடு

சட்ட ஆக்க அதிகாரங்களைப் பொறுத்தமட்டில் அதிகாரப் பங்கீடானது அமெரிக்க அரசியல் அமைப்பில் காணப்படுவது போலிருக்கிறது. அயல்நாட்டுத் தொடர்புகள், தூதாண்மை, போர் தொடுத்தல், சமாதானம், உடன்படிக்கை செய்தல், படைத் துறைமுறை, அஞ்சல், இருப்புப் பாதை, தொலைபேசி, தந்தி

அலுவல்கள், நாணயம், பொருளகத் தொழில் (Banking) வாணிகக் கட்டுப்பாடு, சுங்கவரி ஆகியவற்றில் நடு அரசாங்கத்திற்கு முழு அதிகாரம் உண்டு. இவை தவிரத் தொழில் கட்டுப்பாடு, ஈட்டுறுதி (Insurance), பெரிய சாலைகள், செய்தித்தாள்கள், கல்வி ஆகியவற்றில் நடு அரசாங்கம் கோட்ட அரசாங்கங்களோடு பொதுவான அதிகாரம் செலுத்தி வருகிறது. இவற்றைப் பற்றி நடு அரசாங்கம் சட்டங்களியற்றினால் அவை கோட்டச் சட்டங்களைவிட மேம்பட்டவையாகக் கருதப்படும்.

ஆட்சித் துறை அதிகாரங்களைப் பார்த்தால் சுவிஸ் அரசியல் அமைப்பு மற்ற எல்லாக் கூட்டாட்சி அரசியல் அமைப்புக்களிலிருந்தும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. அநேகமாக நடு அரசாங்கச் சட்டங்களைக் கோட்டங்களில் கோட்ட அதிகாரிகளே செயல்படுத்தி வருகின்றனர். மேற்பார்வையிடுவது மட்டும் நடு அரசாங்க அதிகாரிகளின் அலுவலாயிருக்கிறது. அயல் நாட்டுக் காரியங்கள், சுங்கவரி திரட்டுதல், தந்தி, தொலைபேசி, அஞ்சல் அலுவல்கள் முதலியவற்றைச் சார்ந்த நடு அரசாங்கச் சட்டங்களை மட்டும் கூட்டாட்சி அதிகாரிகள் நேரில் செயல் படுத்துவார்கள்.

திருத்தம்

சுவிஸ் அரசியல் அமைப்பு எளிதில் நெகிழாத அரசியல் அமைப்பாகும். ஆனால், திருத்தமுறை அமெரிக்காவிலிருப்பதை விட எளிதானது. பெரும்பான்மையான கோட்டங்களாலும், பெரும்பான்மையான மக்களாலும் துவக்க உரிமை (Initiative), மக்கள் தீர்ப்பு (Referendum) ஆகிய இரு முறைகளால் அரசியலமைப்பைத் திருத்த முடியும்.

ஈ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்பில் கூட்டாட்சி முறையின் சிறப்பியல்கள் அனைத்தும் காணப்படுகின்றன. 1781ஆம் ஆண்டுக்கு முன்னால் பதின்மூன்று குடியேற்ற நாடுகளும் பிரிட்டனின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தன. 1781 இல் அவை ஒன்று சேர்ந்து ஒரு நாட்டுக் கூட்டத்தை (Confederation) ஏற்படுத்திக்கொண்டன. பிறகு 1787 இல் பிலடெல்பியாவில் கூடிய கூட்டத்தில் ஒரு கூட்டாட்சி அரசியல் அமைப்பு எழுதப்பட்டது. அது 1789 இல் பதின்மூன்று நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாட்டுக் கூட்டத்தில் காணப்பட்ட குறைகளெல்லாம் அந்த அரசியல் அமைப்பில் நீக்கப்பட்டன. அக்குறைகளை ஜார்ஜ் வாஷிங்டன்

"கட்டாயப்படுத்தும் அதிகாரம் இல்லாமை" என்று சுருக்கமாகக் கூறுகின்றார். மன்ரோ (Munro)வின் கருத்துப்படி, பலம்பொருந்திய அரசாங்கத்திற்கு இருக்கவேண்டிய நான்கு அதிகாரங்கள் நாட்டுக் கூட்டத்திற்கு இல்லாததால் அது வலுவற்றிருந்தது. அவையாவன: வரி மூலம் வருமானம் பெறுதல், கடன்வாங்குதல், வாணிகத்தை ஒழுங்குபடுத்துதல், பொதுப் பாதுகாப்பிற்காகப் படைகளைத் திரட்டி அவற்றைப் பேணுதல். இந்த நான்கு அதிகாரங்களும் புதிய அரசியல் அமைப்பின்படி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நடு அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்பில் "கூட்டாட்சி" என்ற சொல் காணப்படாவிடினும், அது கூட்டாட்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக இலங்குகிறது. ஸி. எப். ஸ்ட்ராங்கு (C. F. Strong) கூறுவதுபோல, "உலகிலுள்ள கூட்டாட்சி அரசியல் அமைப்புகளிலெல்லாம் முழுமை பெற்றது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்பேயாகும்."

I. அதிகாரப் பங்கீடு

அமெரிக்கக் கூட்டாட்சியை அமைப்பதற்கு முன் பதின்மூன்று நாடுகளும் எல்லாத் துறைகளிலும் இறைமையுரிமைகளைப் பெற்றிருந்தன. கூட்டாட்சியின் அரசியல் அமைப்பை உருவாக்கிய போது அவை இறைமை அதிகாரத்தையும், இதுவரை தமது ஆட்சி வரம்பிற்கு உட்பட்டிருந்த சில அதிகாரங்களையும் நடு அரசாங்கத்திற்கு வழங்கின. மாநிலங்களின் அதிகார உரிமைகளையும் நாட்டின் ஒற்றுமையையும் இணைக்கும் பொறுப்பைப் பிலடெல்பியாக் கூட்டம் நன்குணர்ந்திருந்தது. ஏனெனில் முன்னிருந்த நாட்டுக் கூட்டமானது இச் சிக்கலைத் தீர்த்து வைக்கவில்லை. கூட்டாட்சியின் அரசியல் அமைப்பின்படி மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை உலகிலுள்ள பல கூட்டாட்சிகளில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைவிட அதிகமாகும். ஆனால், தற்காலத்தில் நடு அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் பல செயல்களை ஒன்று சேர்ந்து நடத்தவேண்டியிருப்பதால், நடு அரசாங்கம் பெரும் பொறுப்புக்களையேற்று அதிக ஆட்சி முறை அதிகாரங்களையும் பெற்று வருகிறது.

அரசியல் அமைப்பானது, முதலாவது, நடு அரசாங்கத்தின் அதிகாரங்களை எடுத்துக் கூறுகிறது; இரண்டாவதாக, நடு அரசாங்கம் சில செயல்களைச் செய்வதைத் தடுக்கிறது; மூன்றுவது மாநிலங்கள் சில செயல்கள் செய்வதைத் தடுக்கிறது; நான்காவதாக, எஞ்சிய அதிகாரங்களை (Residuary Powers) மாநிலங்களுக்குக் கொடுக்கிறது. இதனால் நடு அரசாங்கத்தின் உரிமை

களைவிட மாநிலங்களின் உரிமைகள் மேலானவை எனத் தெரிகிறது.

நடு அரசாங்கம் வரிகள், ஆயத்தீர்வை (Excise duties) சுங்கத் தீர்வை (Customs duties) ஆகியவற்றை விதித்து அவற்றை வசூலிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறது. நாட்டின் கடனைத் திருப்பிக் கொடுக்கும் பொறுப்பு நடு அரசாங்கத்தினுடையது. நிதி சம்பந்தமான இத்தகைய அதிகாரங்கள் நாட்டின் பாதுகாப்பையும் பொதுநலனையும் கவனிக்க நடு அரசாங்கத்திற்குத் துணை செய்கின்றன. அயல் நாட்டுச் செய்திகளில் நடு அரசாங்கத்திற்கு இருக்கும் அதிகாரங்கள் போர் தொடுத்தல், உடன்படிக்கைகள் செய்தல், நாட்டின் பேரால் கடன் வாங்குதல், நாட்டின் படைகளைப் பேணுதல் முதலியவை. மாநிலங்களிடையேயுள்ள தொடர்பு சார்ந்த பொதுக்காரியங்களில், பல மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வாணிகத்தை ஒழுங்குபடுத்துதல், எடைகள், அளவைகள் ஆகியவற்றைப்பற்றி ஒரேவிதமான சட்டங்களியற்றுதல், அஞ்சல் அலுவலகங்களை ஏற்படுத்துதல் போன்ற அதிகாரங்கள் நடு அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

அரசியல் அமைப்பானது நடு அரசாங்கம் சில செயல்களைச் செய்வதைத் தடுக்கிறது. மாநிலங்களின் உரிமைகளைக் காக்கவே இந்தத் தடை அதிகாரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. பொது மக்களின் பாதுகாப்புக்குப் பங்கம் நேர்ந்தாலொழிய மற்றக் காலங்களில் ஆளுரிமை காப்புக் கட்டளையை (Writ of Habeas Corpus) விலக்கி வைக்க நடு அரசாங்கத்திற்கு உரிமையில்லை. பேச்சுரிமை, இடம் பெயர்ந்து செல்லும் உரிமை, அமைதியாக ஒன்றுகூடும் உரிமை முதலியவற்றை நடு அரசாங்கம் குறைக்க முடியாது. அது மத சம்பந்தமான சட்டங்களை இயற்றலாகாது. சட்ட முறைப்படியல்லாமல் ஒருவனது உயிர், உரிமை, சொத்து ஆகியவற்றை அதனால் எடுக்க முடியாது.

மாநிலங்களின் அதிகாரங்களுக்கு மேலும் சில தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. உடன்படிக்கை செய்யவோ, கூட்டமைப்பை ஏற்படுத்தவோ மாநிலங்களுக்கு அதிகாரம் இல்லை. அவை நாணயம் அச்சிடவும், இறக்குமதித் தீர்வை விதிக்கவும் முடியாது. போர்க்காலத்தில் படைகள், கப்பல்கள் வைத்துக் கொள்ளலாகாது. மேலும் அவை இனம், நிறம், பால் (Sex) ஆகிய காரணங்களுக்காகத் தனிமனிதரின் வாக்குரிமையை மறுக்கக் கூடாது. அடிமைத்தனத்தை அனுமதிக்கவும் கூடாது.

எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மாநிலங்களின் எல்லைகள் மாறுமல் காப்பது நடு

அரசாங்கத்தின் பொறுப்பாகும். மாநிலத்தின் ஆட்சி எல்லைக்குள் அல்லது இரு மாநிலங்களுக்கிடையில் புதியதொரு மாநிலம் அமைக்கப்படவேண்டுமானால், அதற்கு அந்த மாநிலங்களின் சட்டமன்றங்களின் இணக்கம் தேவை. ஒவ்வொரு மாநிலத்திலும் அரசாங்கம் குடியரசு முறையில் அமைக்கப்படுமாறு நடு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்.

II. அரசியல் அமைப்பின் தலையாய நிலை

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அரசியல் அமைப்பே தலையான சட்டமாகும். இங்கிலாந்தில் பாராளுமன்றம் தலையானதாகையால் அது இயற்றிய சட்டத்தை எந்த நிறுவனமும் அரசியல் அமைப்புக்கு முரணானது என்று கூறமுடியாது. ஆனால் அமெரிக்காவில் சட்டமன்றமாகிய காங்கிரஸ் இயற்றிய சட்டத்தை நீதிப் புனராய்வு (Judicial Review) முறையில் பார்த்து, அது அரசியல் அமைப்புக்கு முரணாக இருந்தால், அதைச் சட்டத்திற்கு மாறுனதெனக் கூறுவதற்கு நீதிமன்றங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. இவ்வாறு அரசியல் அமைப்பின் முதன்மை நிலை நாட்டப்படுவதுடன், நாட்டின் சட்டங்களும் அதற்குப் பொருந்தும் வண்ணம் செய்யப்படுகின்றன. ஹாமில்டன் (Hamilton) கூறுவதுபோல "அரசியல் அமைப்பானது உண்மையில் அடிப்படைச் சட்டமாக இருப்பதுடன், அவ்வாறே கருதப்படவும் வேண்டும்." அதை விளக்கும் பொறுப்பு நீதி மன்றத்தைச் சாரும் ஒரு மாநிலம் ஏற்படுத்திய சட்டம் அரசியல் அமைப்பின் வாசகத்திற்கு மாறுபட்டதாக இருக்குமெனின், அச்சட்டம் நீக்கப்படவேண்டும். இவ்வாறு அரசியல் அமைப்பின் மேலாண்மையானது மக்களின் அரசியல் வாழ்வை ஒழுங்குபடுத்துவதே கூட்டாட்சியின் அடிப்படைக் கொள்கையாகும்.

III. தலைமை நீதிமன்றத்தின் அதிகாரம்

அரசியல் அமைப்பைப் பாதுகாக்கும் பொறுப்பு தலைமை நீதிமன்றத்தினுடையது. சட்ட ஆக்கத்துறை, செயல்துறை, நீதித்துறை ஆகியவற்றிடையே அதிகாரப் பிரிவினை இருப்பதால் தலைமை நீதிமன்றத்திற்கு அதிக அதிகாரம் இருக்கிறது. மேலும், எல்லாக் கூட்டாட்சிகளிலும் சார்பற்ற, நடுநிலையான நீதித் துறை இருப்பது இன்றியமையாததாகும். ஏனெனில் கூட்டாட்சியில் நடு அரசாங்கத்திற்கும் மாநிலங்களுக்கும் சச்சரவுகள் ஏற்படும்போது, அவற்றைத் தீர்க்க நடுநிலையான மேலாண்மையுள்ள நிறுவனம் தேவைப்படுகிறது. மேலும் அமெரிக்காவின் தலைமை நீதிமன்றத்திற்கு அரசியல் அமைப்பின் வாசகங்களை விளக்கிப் பொருள் கூறும் அதிகாரமும் இருக்கிறது.

IV. அரசியல் அமைப்புத் திருத்தம்

அமெரிக்க அரசியல் அமைப்பு நெகிழாத அரசியல் அமைப்பாகும். ஏனெனில், அதைத் திருத்துவதற்கு ஒரு தனி முறை பின்பற்றப்படுகிறது. காங்கிரஸின் கூட்டமர்வில் (Joint Session) இரு மன்றங்களின் மூன்றில் இரண்டு பகுதியினரால் திருத்தம் கொண்டுவரப்படலாம். இதற்கு மாநிலச் சட்ட மன்றங்களில் நான்கில் மூன்று பகுதி அல்லது மாநிலங்களில் நான்கில் மூன்று பகுதியைக் கொண்ட கூட்டம் இணக்கம் தெரிவித்தால் அத்திருத்தம் அரசியல் அமைப்பில் இடம்பெறும். இம்முறையில் நடு அரசாங்கம் திருத்தங்களைக் கொண்டு வருகிறது. மாநிலங்களுக்கும் திருத்தங்களைக் கொண்டு வரும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாநிலங்களின் மூன்றில் இரண்டு பகுதிச் சட்ட மன்றங்கள் காங்கிரஸை நாடித் திருத்தத்தைக் கொண்டு வருவதற்காக ஒரு தனிக் கூட்டத்தைக் கூட்டுமாறு கேட்கலாம். அவ்வாறு கொண்டுவரப்பட்ட திருத்தம் மாநிலச் சட்டமன்றங்களில் நான்கில் மூன்று பகுதியால் அல்லது மாநிலங்களில் நான்கில் மூன்று பகுதிகளைக் கொண்ட மற்றொரு கூட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அரசியல் அமைப்பில் அத்திருத்தம் செய்யப்படும்.

அமெரிக்கக் கூட்டாட்சியில் திருத்தும் முறை கடினமாக இருப்பதால், அரசியல் அமைப்பு மிகவும் அரிதாகவே திருத்தப்படுகிறது. இருபதாவது திருத்தத்தைத் தவிர ஏனைய திருத்தங்களெல்லாம் காங்கிரஸால் கொண்டுவரப்பட்டு மாநிலச் சட்ட மன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. இதுவரை அரசியல் அமைப்பு இருபத்திரண்டு முறை திருத்தப்பட்டுள்ளது. இறுதியாக 1947 இல் செய்யப்பட்ட திருத்தம் இரண்டு தடவை பதவியிலிருந்த நாட்டின் தலைவர் மூன்றும் முறையும் தேர்தலுக்கு நிற்பதைத் தடுத்தது. திருத்தம் இவ்வளவு கடினமாக இருப்பதின் காரணம் என்னவென்றால், மாநிலங்களின் இணக்கத்தின்பேரில் மட்டும்தான் அரசியல் அமைப்பில் மாற்றங்கள் செய்யமுடியும்.

கூட்டாட்சி முறையின் தற்காலப் போக்குகள்

பொதிந்துள்ள அதிகாரக் கோட்பாட்டின் (Doctrine of Implied Powers) காரணமாகக் கடந்த நூறு ஆண்டுகளாக நடு அரசாங்கத்தின் அதிகாரங்கள் வளர்ந்துகொண்டேவந்துள்ளன. சிறப்பாக வரி விதித்தல், கடன் வாங்குதல், வாணிகத்தை ஒழுங்குபடுத்துதல், போர் நடத்துதல் முதலியவற்றில் நடு அரசாங்க அதிகாரம் அதிகரித்திருக்கிறது. மேலும், அமெரிக்க நாடு தொழில் துறையில் பெரு வளர்ச்சியடைந்திருப்பதால் வேலையில்லாமை,

பொது சுகாதாரம், காப்புறுதி (Insurance) முதலிய செய்திகளில் நடு அரசாங்கத்தின் கட்டுப்பாடும், மேற்பார்வையும் அதிகரித்துள்ளன. நடு அரசாங்கம் மாநிலங்களுக்கு உதவி மானியங்கள் (Grants-in-aid) அளித்து வருவதால், நடு அரசாங்கத்திற்கும் மாநிலங்களுக்கும் உள்ள தொடர்புகளில் வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அணு சக்தித் துறையில் அறிவியல் வளர்ச்சி அடைந்திருப்பதால், நாட்டின் பாதுகாப்புத் தொழிலிலும் நடு அரசாங்கம் அதிக அதிகாரங்களைப் பெற்றுவருகிறது. மேலும், பொதுவுடைமைக் கொள்கை உலகில் விரைவாகப் பரவி வருவதாலும், மூன்றாம் உலகப் போர் நிகழும் என்ற அச்சத்தின் காரணமாகவும் ஒன்றுக இணையும் உணர்ச்சி வளர்ந்து வருகிறது.

உ. பொதுநலக்கூட்டில் கூட்டாட்சி முறை
(Federalism in Commonwealth)

பிரிட்டனின் குடியேற்ற நாட்டுக் கொள்கையை (Colonial policy) எதிர்த்துப் போரிட்டதின் விளைவாக அமெரிக்க நாடுகள் பதின்மூன்றும் உரிமை பெற்றுக் கூட்டாட்சியை அமைத்தன. அதன் பிறகு ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாகப் பிரிட்டனின் குடியேற்ற நாட்டுக் கொள்கையில் யாதொரு மாற்றமும் ஏற்படவில்லை ஆனால், நாளடைவில் அக்கொள்கையை மாற்றவேண்டுமென்று பிரிட்டன் கண்டுணர்ந்தது. ஏனெனில், தன்னாட்சி பெறவில்லையெனில் குடியேற்ற நாடுகள் தாய் நாட்டிலிருந்து விலகிவிடும் என்ற அச்சம் தோன்றியது. இதன் காரணமாக அவைகளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பொறுப்புள்ள அரசாங்கம் (Responsible Government) வழங்கப்பட்டது. 1867 இல் கனடா ஓர் அரசியல் அமைப்பைப் பெற்றது.

I. கனடா

பிரிட்டிஷ் பொதுநலக்கூட்டு நாடுகளிலே மிகப் பழமையான குடியேற்ற உரிமைநாடு (Dominion) கனடாவாகும். 1867 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரிட்டிஷ் வடஅமெரிக்கச் சட்டத்தின் அடிப்படையில் கனடாவின் அரசியல் அமைப்பு எழுதப்பட்டது. இதற்கு முன்னால் பிரிட்டிஷ் பாராளுமன்றம் தனிச் சட்டங்கள் மூலமாகக் குடியேற்ற நாட்டின் ஆட்சி முறையை ஒழுங்குபடுத்திக்கொண்டு வந்தது. குடியேற்ற நாடுகளின் கூட்டரசுக்கான இயக்கம் அமெரிக்க உரிமைப் போர் முடிந்த வுடனே தொடங்கியது. அதன் நோக்கம் ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்துவதே. இதை ஆய்ந்து பார்ப்பதற்காகச் சார்ளட் நகரில்

(Charlotte Town) 1867 இல் ஒரு மாநாடு கூடியது. அதில் கூட்டாட்சிக்கான முயற்சியை விரைவுபடுத்துவதென முடிவு செய்யப்பட்டது. இறுதியாக, 1867 இல் பிரிட்டிஷ் வடஅமெரிக்கச் சட்டம் இயற்றப்பட்டு, கனடா ஒரு கூட்டாட்சியாகஉருவாக்கப்பட்டது. கனடாவில் முதலில் கூட்டாட்சி தோன்றியபோது, அதில் நான்கு மாநிலங்களே இருந்தன. இப்போது பத்து மாநிலங்களும், இரு நிலப்பகுதிகளும் (Territories) உள்ளன. கனடாவின் அரசியல் அமைப்பை எழுதியவர்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருப்பது போன்ற கூட்டாட்சித் திட்டத்தை விரும்பியபோதிலும் அமெரிக்க முறையிலிருந்து சிறிது வேறுபட்ட அமைப்பையே முடிவில் உருவாக்கினர்கள். அவர்கள் அரசியல் அமைப்பைத் தீட்டிக் கொண்டிருந்த நாட்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் எல்லாம் அடிமை ஒழிப்பு, மாநிலங்களின் உரிமைகள் ஆகியவற்றின் காரணமாகப் பெரும் உள்நாட்டுப் போரில் மூழ்கி, இரு பிரிவுகளாகப் பிளவுபட்டிருந்தன. ஆகவே, கனடாவின் அரசியல் அமைப்பை வரைந்தவர்கள் இத்தகைய சிக்கலைத் தவிர்த்து மாநிலங்களின் தன்னாட்சியைப் பெரிதும் குறைக்க முயன்றனர்.

அதிகாரப் பங்கீடு

கூட்டாட்சிக் கோட்பாட்டின்படி அதிகாரங்கள் நடு அரசாங்கத்திற்கும் மாநிலங்களுக்குமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மாநிலங்களின் அதிகாரங்கள் அரசியல் அமைப்பில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரங்கள் நடு அரசாங்கத்திடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், மாநிலங்களின் அதிகாரங்கள் மிகுதியாகவே இருக்கின்றன. மாநிலங்கள் தம் அரசியல் அமைப்புக்கூறுத் திருத்தவும், நேர்முகவரி (Direct Tax) விதிக்கவும், குற்றவியல், சீரியல் ஆகிய இரு துறைகளிலும் நீதி வழங்கவும், நகராண்மை அரசாங்கத்தைக் (Municipal Government) கட்டுப்படுத்தவும் அதிகாரம் பெற்றுள்ளன. நடு அரசாங்கத்தின் சில அதிகாரங்கள் அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. உதாரணமாகப் பாதுகாப்பு, நாணயம், வாணிகம், திருமணம், மணவிலக்கு, (Divorce) முதலியவை நடு அரசாங்கத்தின் தனியுரிமைகளாக இருக்கின்றன. இவை தவிர மாநிலங்களும், நடு அரசாங்கமும் சட்டமியற்றக்கூடிய பொது அதிகாரங்களும் உள்ளன.

அரசியல் அமைப்புத் திருத்தம்

1867 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வட அமெரிக்கச் சட்டத்தின்படி, கனடாவின் அரசியல் அமைப்பைத் திருத்தும் உரிமை பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கே இருந்தது. ஆனால்

நாளடைவில் வழக்காறுகள் பல தோன்றிக் கனடா அரசாங்கத்தின் அதிகாரத்தை மிகுத்தன. இவற்றின் விளைவாக மாநிலங்களின் இணக்கத்தின் பேரில் நடு அரசாங்கம் சாதாரண சட்ட ஆக்க முறைப்படி திருத்தங்களைச் செய்யலாம். 1949 இல் அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றும் உரிமை கனடாவின் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது.

அமெரிக்கக் கூட்டாட்சிக்கும் கனடாவின் கூட்டாட்சிக்கும் உள்ள வேறுபாடுகள்

அமெரிக்காவில் நடு அரசாங்கத்திற்குச் சில குறிக்கப்பட்ட அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களிடம் விடப்பட்டிருக்கின்றன. ஆனால், கனடாவில் மாநில அதிகாரங்கள் குறைக்கப்பட்டு எஞ்சிய அதிகாரங்கள் நடு அரசாங்கத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இரண்டாவதாக, கனடாவில் நடு அரசாங்கம் மாநிலத் தலைவர்களை (Lieutenant Governors) நியமிப்பதுடன், மாநிலச் சட்டமன்றங்கள் நிறைவேற்றிய சட்டங்களைத் தடைசெய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது, இத்தகைய அதிகாரங்கள் அமெரிக்காவின் நடு அரசாங்கத்துக்கு இல்லை. மூன்றாவதாகக் கனடாவின் தலைமை நீதிமன்றத்திற்கு அரசியல் அமைப்பை விளக்கிக் கூறும் முழு அதிகாரம் இல்லை. மேலும், தலைமை நீதிமன்றம் மாநிலச் செய்திகளையும், மாநில நீதிமன்றங்கள் கூட்டாட்சி சம்பந்தமான செய்திகளையும் விசாரிக்கும். அமெரிக்காவில் இதற்கு நேர்மாறான முறை பின்பற்றப்படுகிறது.

II. ஆஸ்ட்ரேலியா

1900 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஆஸ்ட்ரேலிய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி நியூஸௌத்வேல்ஸ், விக்டோரியா, தென் ஆஸ்ட்ரேலியா, குயின்ஸ்லாந்து, டாஸ்மேனியா, மேற்கு ஆஸ்ட்ரேலியா ஆகிய ஆறு மாநிலங்களும் ஒரு கூட்டாட்சியாக உருவாக்கப்பட்டன. அதற்குமுன் அவைகள் பொருளாதார, அரசியல் முறைகளில் தனிப்பட்ட கொள்கைகளைப் பின்பற்றி வந்தன. பசிபிக் பெருங்கடலில் ஜெர்மெனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் அதிகாரங்கள் வலுத்துவரவே, மாநிலங்களுக்குள் ஒற்றுமை யுணர்ச்சி வளர்ந்தது. மேலும், அவை எல்லாம் ஒரேவிதமான நிதிக் கொள்கையைப் பின்பற்றுததால், பல இடையூறுகள் விளைந்தன. இவற்றின் காரணமாக மாநிலங்கள் ஒன்று சேர்ந்து கூட்டாட்சியை ஏற்படுத்தின. ஆஸ்ட்ரேலியாவின் அரசியல் அமைப்பில் கூட்டாட்சியின் இயல்புகள் காணப்படுகின்றன. நடு அரசாங்கத்திற்கும், மாநிலங்களுக்கும் இடையே அதிகாரப் பங்கீடு இருப்

பதுடன், அரசியல் அமைப்புக்கு விளக்கம் கூறவல்ல தலைமை நீதி மன்றமும் இருக்கிறது.

அதிகாரப் பங்கீடு

சுவிட்ஸர்லாந்திலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் இருப் பது போலவே ஆஸ்ட்ரேலியாவிலும் அதிகாரப் பங்கீடு செய்யப் பட்டிருக்கிறது. சில அதிகாரங்கள் நடு அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அமைதி, ஒழுங்கு, வாணிகவரி, படை பேணுதல் முதலிய அதிகாரங்கள் நடு அரசாங்கத்தைச் சார்ந் தவை. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களிடம் விடப்பட்டுள்ளன. இவை தவிர நடு அரசாங்கமும், மாநிலங்களும் செலுத்தக்கூடிய பொது அதிகாரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அமெரிக் காவில் இருப்பதுபோல, நடு அரசாங்கமும் மாநிலங்களும் செலுத்தக்கூடாத தடை அதிகாரங்களும் அரசியல் அமைப்பில் காணப்படுகின்றன.

அரசியல் அமைப்புத் திருத்தம்

ஆஸ்ட்ரேலியாவின் அரசியல் அமைப்பானது எளிதில் நெகிழும் தன்மையுடையதன்று. சுவிட்ஸர்லாந்திலிருப்பதுபோல அரசியல் அமைப்பின் திருத்தத்திற்கு மக்கள் தீர்ப்பும் பயன்படு கிறது. திருத்த மசோதாவானது பாராளுமன்றத்தின் இரு சட்ட மன்றங்களிலும் நிறைவேறிய பிறகு மக்கள் தீர்ப்புக்கு விடப் படுகிறது. அது பெரும்பான்மையான வாக்காளர்களாலும் பெரும்பான்மையான மாநிலங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட் டால்தான் அரசியல் அமைப்பில் இடம்பெறும்.

ஆஸ்ட்ரேலியக் கூட்டாட்சிக்கும் கனடாவின் கூட்டாட்சிக்கும் உள்ள வேறுபாடுகள்

முதலாவதாக, ஆஸ்ட்ரேலியாவில் அமெரிக்காவில் இருப்பது போல் எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டி ருக்கின்றன. கனடாவில் அவை நடு அரசாங்கத்திடம் விடப்பட் டுள்ளன. இரண்டாவதாக, ஆஸ்ட்ரேலியாவில் மாநிலங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் நேரான தொடர்பு கொண்டிருக் கின்றன. ஆனால், கனடாவின் மாநிலங்களுக்கு அத்தகைய உரிமை கிடையாது. மூன்றாவதாக, மாநிலத் தலைவர்கள் பிரிட்டிஷ் மன்னரால் நியமிக்கப்படுகின்றார்கள். கனடாவில் அவர்கள் கவர்னர் ஜெனரலால் ஏற்படுத்தப்படுகின்றனர். நான்காவதாக, மாநிலச் சட்டமன்றங்கள் இயற்றிய சட்டங்களைத் தடை செய்ய ஆஸ்ட்ரேலிய நடு அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது. கனடாவின் நடு அரசாங்கத்திற்கு இந்த அதிகாரம் உண்டு.

ஐந்தாவதாக, ஆஸ்ட்ரேலிய மாநிலங்கள் கூட்டாட்சியின் அரசியல் அமைப்புக்குட்பட்ட எவ்விதமான அரசியலமைப்பையும் தெரிந்துகொள்ளலாம். கனடாவில் மாநிலங்களின் அரசியல் அமைப்புகள் பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளன. ஆயினும், அவற்றைத் திருத்துவதற்கு மாநிலங்களுக்கு உரிமையிருக்கிறது. இறுதியாக, கனடாவைப் போலல்லாமல் ஆஸ்ட்ரேலியாவில் தலைமை நீதிமன்றம் அரசியலமைப்பிற்கு விளக்கம் தருவதற்கு முழுஉரிமை பெற்றிருக்கிறது. அரசியல் அமைப்பின்படி ஆங்கில ப்ரிவி கௌன்சிலுக்கு (Privy Council) மேல் வழக்குத் தொடரமுடியுமென் றாலும், அவ்வுரிமையைத் தலைமை நீதிமன்றம் அநேகமாக மறுத்தே வந்திருக்கிறது.

III. இந்தியா

1935 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி இந்தியா ஒரு கூட்டாட்சியாக மாற்றப்பட்டது. எல்லாக் கூட்டாட்சிகளிலும் காணப்படுவதுபோல், ஒரு நடு அரசாங்கமும் பல மாநில அரசாங்கங்களும் அமைக்கப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் குறிக்கப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அரசியல் அமைப்பிற்கு விளக்கம் தரக்கூடிய ஒரு கூட்டாட்சி நீதி மன்றமும் நிறுவப்பட்டது. கூட்டாட்சிக் கோட்பாட்டின்படி மாநிலங்களில் தன்னுட்சி ஏற்படுத்தப்பட்டது. மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை யெல்லாம் மாநிலச் சட்டமன்றங்களுக்குப் பொறுப்புள்ள அமைச்சரவை செயல்படுத்தி வந்தது. ஆனால், இக்கூட்டாட்சி முறை சில காலந்தான் நடைபெற்றது. ஏனெனில், 1937 ஆம் ஆண்டு மாநிலங்களின் ஆட்சியேற்ற காங்கிரஸ் இரண்டாம் உலகப்போர் தொடங்கவும் பதவி துறந்தது. 1950 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26 ஆம் நாள் நடைமுறைக்கு வந்த சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்பு நம் நாட்டை முழு வளர்ச்சிபெற்ற கூட்டாட்சியாக மாற்றியது.

இந்தியாவின் அரசியல் அமைப்பானது கூட்டாட்சி முறையைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய கனடாவின் அரசியல் அமைப்பை ஒத்திருக்கிறது. கனடாவின் அரசியல் அமைப்பு எழுதப்பட்டபோது அமெரிக்காவில் உள்நாட்டுப்போர் நிகழ்ந்துகொண்டிருந்ததால், அதை எழுதியவர்கள் நடு அரசாங்கத்திற்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்தார்களெனப் பார்த்தோம். அதைப் போல் இந்தியாவின் அரசியல் அமைப்பு உருவாகிய காலத்தில் நாட்டிலிருந்த நிலையைப் பார்த்தால், ஒரு வலிமை பொருந்திய நடு அரசாங்கம் தேவை எனப் புலப்பட்டது.

நாடு துண்டாக்கப்பட்டதுடன், பாக்கிஸ்தானிலிருந்து பெரும் இடையூறு ஏற்படும்போல் தோன்றியது.

எல்லைப்புற மாநிலங்கள் இந்திய அரசாங்கத்திற்கெதிராக எழுந்து கிளர்ச்சி செய்து, நாட்டின் பாதுகாப்பிற்கே கேடு விளைவிக்கக் கூடுமென்றும் அஞ்சப்பட்டது. மேலும், கடந்த காலத்தில் நாடு வலிமை குன்றியதற்கு ஒரு முக்கிய காரணம் பலம்பொருந்திய நடு அரசாங்கம் இல்லாததே என வரலாற்று அறிஞர்கள் எடுத்துக் காட்டினர்கள். இக்காரணங்களினல் இந்திய அரசியல் அமைப்பு நடு அரசாங்கத்திற்கு அதிக அதிகாரத்தை வழங்கியது.

அதிகாரப் பங்கீடு

1935 ஆம் ஆண்டுச் சட்டத்திலிருந்ததுபோல இந்திய அரசியல் அமைப்பிலும் அதிகாரங்கள் மூன்று வகையாக வகுக்கப்பட்டுள்ளன. கூட்டரசுப் பட்டியலின்படி (Union List) நாட்டின் பாதுகாப்பு, தரைப்படை, கடற்படை, வானப்படை, அயல் நாட்டுச் செயல்கள், உடன்படிக்கைகள், போர், சமாதானம், குடிமை, அஞ்சல்துறை, நாணயம் முதலிய 97 அதிகாரங்கள் நடு அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாநிலப் பட்டியலின்படி State List) பொது ஒழுங்கு, நீதித்துறை ஆட்சி, சிறை, வட்டார அரசாங்கம், பொது சுகாதாரம், பயிர்த்தொழில், கல்வி போன்ற 66 அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இவைதவிர பொதுப்பட்டியலில் (Concurrent List) குற்றவியல், சீரியல் முறை, திருமணம், மணவிலக்கு, தொழிற்சங்கங்கள், தொழிற்சாலைகள், செய்தித்தாள்கள் முதலிய 47 அதிகாரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சிய அதிகாரங்கள் நடு அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், நெருக்கடியான காலத்தில் நடு அரசாங்கம் நாடு முழுவதற்கும் சட்டமியற்றும் அதிகாரம் பெற்றிருக்கின்றது. இவற்றிலிருந்து நடு அரசாங்கம் அதிக வலிமை பெற்றுள்ளது என்று தெளிவாகத் தெரிகிறது.

தலைமை நீதிமன்றம்

இந்தியாவில் கூட்டாட்சி முறை அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டிருப்பதால், தலைமைநீதிமன்றம் அரசியல் அமைப்பில் பெரும் பங்கு பெற்றுள்ளது. ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரின் கருத்துப்படி, "இந்தியக் கூட்டரசின் தலைமை நீதிமன்றம் உலகின் எப்பகுதியிலுமுள்ள தலைமை நீதிமன்றங்களை விட அதிக அதிகாரங்களைப் பெற்றிருக்கிறது." அது நடு அரசாங்கத்திற்கும், மாநிலங்களுக்கும் இடையே ஏற்படும் பிணக்குகளையும், மாநிலங்களுக்குள் ஏற்படும் சச்சரவுகளையும் தீர்க்கிறது. அடிப்படை

உரிமைகளை நிலைநாட்டுவதற்காக கட்டளைகளை (Writs) வெளியிட லாம். அரசியல் அமைப்பை விளக்கிக் கூறும் அதிகாரம் தலைமை நீதிமன்றத்திற்கு இருக்கிறது. மேலும், நாட்டின் தலைவர் சில முக்கியமான செய்திகளில் தலைமை நீதிமன்றத்தின் அறிவுரையைக் கேட்கலாம்.

அரசியல் அமைப்புத் திருத்தம்

திருத்த மசோதாவானது கூட்டரசுப் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு சட்டமன்றத்திலும், மன்ற உறுப்பினரின் மொத்தத் தொகையில் பெரும்பான்மையினராலும், மன்றத்தில் அமர்ந்து வாக்களிப்போரின் தொகையில் மூன்றில் இரண்டு பகுதி பெரும் பான்மையினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, நாட்டின் தலை வருக்கு அனுப்பப்படும். அவரது இசைவுபெற்ற பிறகே அத் திருத்தம் அரசியல் அமைப்பில் இடம் பெறும். நாட்டுத் தலைவரின் தேர்தல், கூட்டரசு அல்லது மாநிலச் செயல்துறை, சட்ட ஆக்கத்துறை, பாராளுமன்றத்தில் மாநிலங்களின் பிரதி நிதித்துவம், அரசியல் அமைப்புத் திருத்தமுறை ஆகியவை சம்பந்தமான திருத்தங்களுக்கு மாநிலங்களின் எண்ணிக்கையில் அரைப்பகுதியின் இசைவும் தேவை. புதிய மாநிலத்தை உரு வாக்குதல், இருக்கும் மாநிலங்களை மாற்றியமைத்தல், மாநிலங் களில் மேல்சபைகளை அமைத்தல் அல்லது அழித்தல் முதலிய காரியங்கள் சம்பந்தமான மசோதாக்கள் கூட்டரசுப் பாராளு மன்றத்தின் இரண்டு அவைகளாலும் சாதாரணமான பெரும் பான்மை (Simple Majority) வாக்குகளால் நிறைவேற்றப்பட்டால் அவை திருத்தங்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்தியக் கூட்டாட்சியின் தனி இயல்புகள்

இந்தியக் கூட்டாட்சியானது பிற கூட்டாட்சிகளினின்று வேறுபட்டிருக்கிறது. உதாரணமாக சுவிட்ஸர்லாந்திலும், அமெரிக்காவிலும் பல உரிமை பெற்ற உறுப்புகள் ஒன்று சேர்ந்து கூட்டாட்சியை அமைத்தன. ஆனால், இந்தியாவில் கூட்டாட்சிமுறை வேறு வகையில் தோன்றியது. இந்திய அரசியல் அமைப்பின் எல்லைகள் பிற அமைப்புக்களின் எல்லைகளை விட மிகப்பரந்து காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, அமெரிக்காவில் மாநிலங்கள் தமது அரசியல் அமைப்பை வகுத்துக்கொள்ளும் உரிமை பெற்றிருக்கின்றன. ஆனால், இந்தி யாவில் அவ்வாறில்லை. அமெரிக்காவில் மேல்சபையான செனட்டில் (Senate) மாநிலங்களுக்கு இணையான பிரதிநிதித் துவம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தியாவில் இராஜ்ய சபைக்கு மக்கள்தொகை போன்ற சில அடிப்படைகளில் பிரதி

நிதித்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், இராஜ்ய சபையானது மாநிலப் பட்டியலில் குறிக்கப்பட்ட அதிகாரங்களில் சட்டமியற்றுமாறு பாராளுமன்றத்தைக் கேட்பதற்கும் உரிமை பெற்றிருக்கிறது. நெருக்கடிக் காலங்களில் நாட்டின் தலைவர் முழு அதிகாரங்களையும் பெற்றுவிடுவதால், அப்போது உண்மையிலேயே இந்திய அரசாங்கம் ஒருமுக அரசாங்கமாக (Unitary Government) மாறுகிறது. அமெரிக்காவில் கூட்டரசுக்கும் மாநிலங்களுக்குமென இரண்டுவிதமான நீதி மன்றங்கள் இருக்கின்றன. ஆனால், இந்தியாவில் ஒரே வகையான நீதித் துறை ஆட்சி நிலவுகிறது. அமெரிக்காவில் இருப்பதைப் போலல்லாமல் இந்தியாவில் நாடு முழுவதற்கும் ஒரே குடிமைதான் (Citizenship) இருக்கிறது. மேலும், மாநிலத் தலைவர்களை நாட்டின் தலைவரே நியமிக்கிறார். மாநிலச் சட்டங்களைத் தடை செய்வதற்கும் நடு அரசாங்கத்திற்கு உரிமையிருக்கிறது.

மேலே கூறியவற்றின் காரணமாகச் சிலர் இந்தியாவில் கூட்டாட்சிக் கூறுகளைவிட ஒருமுக ஆட்சியின் இயல்புகளே அதிகமாயிருக்கின்றன எனக் கருதுகின்றனர். கூட்டாட்சியின் பண்புகள் பல இருந்தும், ஒருமுக ஆட்சியின் தன்மையும் இருப்பதற்கு இந்திய வரலாற்றிலே காரணம் காணலாம். உரிமை பெறுவதற்கு முன் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இந்தியா வலிமைமிக்க ஒருமுக அரசாங்கத்தின் ஆட்சியில் இருந்து வந்தது. மேலும், பல சக்திகளினால் சிதைக்கப்பட்ட நாடு அரசியல், பொருளாதாரத் துறைகளிலே வலுவிழந்திருந்தது. மதம், மொழி, இனம் இவற்றால் வேறுபட்டிருக்கும் மக்களைக் கொண்ட நமது நாடு ஒற்றுமை குன்றிக் காணப்பட்டது. இத்தனை குறைபாடுகளையுடைய மிகப் பரந்த நாடாகிய இந்தியாவிற்கு அதிக அதிகாரமுடைய நடு அரசாங்கம் தேவையென்று கருதித் தான், அரசியல் அமைப்பை எழுதியவர்கள் வலிமைமிக்க நடு அரசாங்கத்தை உருவாக்கினர்கள். மேலும், நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்க ஆற்றல் மிக்க நடு அரசாங்கம் தேவையென அவர்கள் உணர்ந்தார்கள். ஆகவே, நமது நாட்டின் தேவைகளுக்கும் நிலைமைக்கும் தக்கவாறு ஓர் அரசியல் அமைப்பு தீட்டப்பட்டது.

ஊ. இலத்தீன் அமெரிக்க கூட்டாட்சிகள்

நடு அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவிலுமுள்ள இருபது குடியரசுகளில் மெக்ஸிகோ, அர்ஜென்டினா, பிரேஸில் ஆகிய மூன்றும் கூட்டாட்சி நாடுகளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.

I. பிரேஸில்

1891ஆம் ஆண்டு உருவான பிரேஸில் அரசியல் அமைப்பில் கூட்டாட்சியின் இயல்புகள் காணப்படுகின்றன. நடு அரசாங்கத்தின் அதிகாரங்களும், பொதுஅதிகாரங்களும் அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நடு அரசாங்கத்தின் மேல்சபையாகிய செனட்டில் அமெரிக்காவில் இருப்பதுபோல மாநிலங்களுக்கு இணையான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கின்றது. கீழ்சபையாகிய பிரதிநிதிகளின் அவையில் (Chamber of Deputies) மாநிலங்களுக்கு மக்கள் தொகைக்கு ஏற்றபடி பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தக் கூட்டாட்சிப் பண்புகள் எல்லாவற்றையும் அரசியல் அமைப்புத் திருத்த முறையானது அழித்துவிடுவதுபோல் தோன்றுகிறது. அதன்படி நடு அரசாங்கத்தின் இரு சட்டமன்றங்களும் மூன்றில் இரண்டு பகுதி பெரும்பான்மை வாக்குகளால் தொடர்ச்சியாக இரு ஆண்டுகளில் ஒரு திருத்த மசோதாவை நிறைவேற்றினால், அத் திருத்தம் அரசியல் அமைப்பில் இடம்பெறும். ஆகவே, திருத்தம் சம்பந்தப்பட்ட செயல்களில் மாநில அரசாங்கங்கள் நடு அரசாங்கத்தின் மேலாண்மைக்கு அடங்கியிருக்கின்றன. ஆனால், குடியரசு முறை அரசாங்கத்தையோ அல்லது செனட்டில் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் இணையான பிரதிநிதித்துவத்தையோ அழிக்க முயலும் மசோதாக்களை நடு அரசாங்க மன்றங்கள் வாதத்திற்குக் கொண்டுவரமுடியாது.

பிரேஸிலில் நடைமுறையில் கூட்டாட்சி அமைப்பு சீரிய வகையில் செயல்படவில்லை. அங்கு உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக நடு அரசாங்கம் வலிமையிழக்கக் கூடுமாதலால், கூட்டாட்சியின் இயல்புகள் புறக்கணிக்கப்படுகின்றன. 1934, 1937, 1946 ஆகிய ஆண்டுகளில் புதிய அரசியல் அமைப்புக்கள் தீட்டப்பட்டன. இவை ஒவ்வொன்றிலும் கூட்டாட்சிப் பண்புகள் பெரும்பாலும் கைவிடப்பட்டன.

II. அர்ஜெண்டினா

1853 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அர்ஜெண்டினா அரசியல் அமைப்பானது கூட்டாட்சி முறை அமைப்பாகும். நடு அரசாங்க மேல்சபையின் உறுப்பினர்கள் மாநிலச் சட்டமன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அரசியல் அமைப்புத் திருத்தமானது நடு அரசாங்கச் சட்டமன்றத்தால் தொடங்கப்பட்ட போதிலும், அதற்கென்று அழைக்கப்பட்ட கூட்டத்திலே நிறைவேற்றப்படவேண்டும். மாநில அரசாங்கக் காரியங்களில் நடு

அரசாங்கம் தலையிடுவது வழக்கமாக இருக்கிறது. இது அர்ஜென்டினுவின் அரசியல் முறையின் பெருங்கேடாக இருந்து வருகிறது. பொதுவாக அர்ஜெனடினுவின் அரசாங்கம் அதிகாரம் தளர்ந்த அரசாங்கமாக இருக்கிறதே தவிரக், கூட்டாட்சி யாக இல்லை.

III. மெக்ஸிகோ

மெக்ஸிகோவின் அரசியல் அமைப்பு 1857ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1917 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப் பட்டது. இதில் கூட்டாட்சிப் பண்புகள் பெயரளவில் மட்டும் தான் காணப்படுகின்றன. உண்மையில் மெக்ஸிகோவில் கூட்டாட்சி ஒருபோதும் நிறுவப்பட்டதில்லை.

இலத்தீன் அமெரிக்கக் கூட்டாட்சிகள் வளராமைக்குக் காரணங்கள்

நடு, தென் அமெரிக்க நாடுகளின் வரலாற்றை நோக்குங்கால் ஏன் அவைகளில் கூட்டாட்சி முறை தழைத்து வளரவில்லை எனத் தெரிகிறது. முதலாவதாக, இப்பகுதிகள் சுதந்திரம் பெறுவதற்கு முன் ஒரு பேரரசின் ஆட்சிப் பகுதிகளாக இருந்தனவே தவிர நிலைத்த அரசாங்கமுடைய தனி நாடுகளாகத் திகழவில்லை. இதனால் ஒன்று சேரவேண்டுமென்ற ஆவல் அவற்றிடையே பிறக்கவில்லை. ஆகவே, இக்குடியரசுகளில் கூட்டாட்சி செழித்து வளர முடியவில்லை. இரண்டாவதாக, கூட்டாட்சியை அமைக்க வேண்டுமென்ற விருப்பம் மக்களுக்கு இருந்தபோதிலும், அதைச் செயலாற்ற வேண்டுமென்ற உள்ள உறுதி அவர்களிடம் காணப் படவில்லை. ஆற்றல்மிகு பொதுமக்கள் கருத்தும் (Public Opinion), போதுமான அரசியல் அனுபவமும் இல்லை. அதற்கு மாறுக அறியாமையே யாங்கணும் பரவியிருந்தது. தன்னலக் கும்பல்கள் தம் உட்பகைகளைத் தீர்க்க வல்லந்த முறைகளைப் பயன் படுத்தின. மூன்றுவதாக, அமெரிக்கக் கூட்டாட்சி ஏற்படுத்தப் பட்ட பிறகு, ஏறக்குறைய அதே வடிவத்தில் சுவிட்ஸர்லாந்து, கனடா, ஆஸ்ட்ரேலியா, ஆகிய கூட்டாட்சிகள் அமைக்கப்பட்ட போதிலும், அவை அமெரிக்க முறையைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றவில்லை. ஆனால், இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க முறையை அப்படியே மாற்றமின்றிப் பின்பற்றும் ஆவல் எழுந்தது. தம் அரசியல் சூழ்நிலைகளுக்கேற்ப அரசாங் கத்தை அமைக்காமல், பிறநாட்டு முறையை அப்படியே பின் பற்றியதால் இந்நாடுகளில் கூட்டாட்சியானது ஆழ வேரூன்றுமற் போயிற்று. அரசியல் அறிவும், பயிற்சியும் முதிர்ச்சி பெறுத மக்களிடையே எந்த அரசியல் நிறுவனமும் வளராதென்பது இதிலிருந்து புலனுகிறதல்லவா ?

---

2. சர்வதேச நிறுவனங்கள்

பன்னாட்டு ஒற்றுமையுணர்ச்சி என்பது அண்மையில் உருவானதாக இருந்தபோதிலும், பழங்காலத்திலிருந்தே நாடுகளிடையே ஒருவித ஒழுங்கான தொடர்புகள் நிலவி வந்தன. கருத்துப் பரிமாற்றம், பண்டமாற்றல், மக்கள் போக்குவரவு இவற்றை முறைப்படுத்தச் சில பொதுவான ஒழுங்குகளை நாடுகள் தங்களுக்குள் வகுத்துக்கொண்டன. இவ்வொழுங்குகள் உலகின் பல பகுதிகளில் பலவிதமாக இருந்தன. உதாரணமாக, பண்டைய இந்தியாவில் நாடுகளிடையே அரசியல் தொடர்புகளை நிர்ணயிக்க மண்டலங்களும், மேலரசுரிமையும் (Suzerainty) ஏற்படுத்தப்பட்டிருந்தன. ரோமானியப் பேரரசில் அரசியல் குழப்பங்களைத் தடுக்க ரோமானிய அமைதி நிலவியது. இடைக்கால ஐரோப்பாவில் திருச்சபையும், போப்பாட்சியும், புனிதரோமானியப் பேரரசும் அரசுகளிடையே ஒருவித உலகப் பொது நோக்கை வளர்த்தன. தற்காலத்தின் தொடக்கப் பகுதியில் பன்னாட்டுச் சட்டம் முளைத்துப் பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சியாக மலர்ந்தது. இதுவே 19 ஆம் நூற்றாண்டில் பன்னாட்டு அமைப்புக்கள் தோன்ற வழி வகுத்தது. அப்போது ஐரோப்பாவில் நாடுகள் போரைத் தவிர்த்து அமைதியுடன் வாழ வழி தேடின. இம்முயற்சி 20 ஆம் நூற்றாண்டில் முதிர்ச்சி பெற்றுச் சர்வதேச சங்கமாகவும் (League of Nations), ஐக்கிய நாடுகளின் சங்கமாகவும் (United Nations Organisation), கனிந்தது. பன்னாட்டு ஒற்றுமையுணர்ச்சிதான் இன்றைய உலகை உலக அரசாங்கம் என்ற உயர் குறிக்கோளை நோக்கிக், காந்தம் இரும்பை இழுப்பது போல, விசையுடன் இழுக்கின்றது. இம்முயற்சிகள் ஒவ்வொன்றையும்பற்றி இவ்வியலில் விரிவாகப் பார்ப்போம்.

அ இந்தியாவில் மண்டலங்களும், மேலரசுரிமையும்

பிந்திய வேத காலத்தின் மதமும் பண்பாடும், எவ்வாறு பேரரசனுவது என்ற முறையை ஆரிய அரசனுக்கு எடுத்துக் காட்டின. மன்னர்களுக்கு மன்னனாக விரும்பும் ஒருவன் அசுவமேத யாகம் செய்யவேண்டும் என்றும், பேரரசனாக விழையும் ஒருவன் வாஜபேயா யாகம் செய்யவேண்டு மெனவும் கூறப்பட்டிருந்தது. இதன்படி பேராசைமிக்க அரசனெருவன் எந்நேரத்திலும் போர் தொடுக்கக் கூடுமாதலால், அரசுகளுக்கிடையே நிரந்தரமான தொடர்புகள் இருக்க முடியவில்லை. மேலும் அரசுகளுக்கு இயற்கை எல்லைகள் இல்லாததால், அவற்றுள் வலிமைமிக்க அரசானது அருகிலுள்ள பகுதிகளைக் கைப்பற்ற வழியிருந்தது.

ஆயினும், பேராவல் மிக்க அரசர்கள் கூடுமானவரை தம் படைக்கலங்களைப் பயன்படுத்தக் கூடாதென்றும், நேர்மையற்ற போரைத் தொடங்கும் அரசன் இவ்வுலகில் இழிவடைந்து, மறு உலகில் நரகம் சேர்வான் எனவும் பண்டைய இந்திய அறிஞர்கள் கூறினர்கள். கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்குமிடையே நிகழ்ந்த நீண்டகால சமாதான முயற்சிகளிலிருந்தும், பாண்டவர்கள் ஐந்து கிராமங்களைப் பெற்று வாழ விரும்பினர் என்பதிலிருந்தும் பழங்கால இந்தியாவிலே அவசரமாகப் போர் தொடுக்கப்படவில்லையென நன்கு தெரிகிறது. ஆயினும், போர் நிகழாவண்ணம் முற்றிலும் தடுப்பது இயலாதெனக் கண்ட அரசியல் அறிஞர்கள் போர் தொடங்கும் சந்தர்ப்பங்களைக் குறைக்க முயன்றனர். இதற்காக அவர்கள் நாடுகளிடையே செல்வாக்குச் சம நிலையை (Balance of Power) உண்டு பண்ணக் கூடிய மண்டலக் கொள்கையை ஆதரித்தனர். மண்டலக் கொள்கையின்படி ஒரு நாட்டிற்கு முன்னுலிருக்கும் அடுத்த நாடு பகை நாடாகக் ('அரி') கருதப்படும். இதற்கு எடுத்துக் காட்டாகப் பிரான்ஸையும் ஜெர்மனியையும், போலந்தையும் ரஷ்யாவையும், சீனுவையும் ஜப்பானையும் கூறலாம். மண்டலக் கொள்கையின்படி அடுத்த நாட்டிற்கு அடுத்த நாடு நேச நாடு (மித்திர நாடு) ஆக எண்ணப்படும். இதற்கு உதாரணமாக 1939 ஆம் ஆண்டு ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் ஏற்பட்ட உறவையும், 1937 இல் இங்கிலாந்திற்கும் போலந்துக்குமிடையே உண்டான உடன் படிக்கையையும் கூறலாம். பகைவனுக்கும் (அரி) நண்பனுக்கும் (மித்திர) அடுத்தபடியாக, பகைவனின் நண்பனென்றும் (அரி மித்திர), நண்பனின் நண்பனென்றும் (மித்திர மித்திர), பகைவனுடைய நண்பனின் நண்பனென்றும் (அரி மித்திர மித்திர) பல பாகுபாடுகளை மண்டலக் கொள்கையிலே காண்கிறோம். ஒரு நாட்டிற்கு முன்னுலிருந்த நாடுகளில் மேலே கூறிய ஐந்து வகைகள் கூறப்பட்டுள்ளன.

வெற்றிபெற்ற மன்னனின் நாட்டிற்கும் அதற்குப் பின்னுலிருந்த நாடுகளுக்கும் அதே வகையான தொடர்புகள்தாம் இருந்தன. பின்னுலுள்ள அடுத்த நாட்டரசனுக்குப் 'பின்புறமிருந்து தாக்குபவன்' (பார்ஷ்ணிக்ராஹ) என்றும், அதற்கடுத்த நாட்டரசனுக்குப் 'பின்னுலுள்ள நண்பன்' (அக்ரந்தா) என்றும் பெயர்கள் வழங்கப்பட்டன. பிறகு பின்னுலுள்ள பகைவனின் நண்பனும் (பார்ஷ்ணிக்ராஹஸாரா), பின்னுலுள்ள நண்பனின் நண்பனும் (அக்ரந்தஸாரா) கூறப்படுகின்றனர். ஆகவே, பின்னுலுள்ள அரசர்கள் நால்வகைப்படுவர். இவர்கள் தவிர இத் தொடர்புகளில் கலந்துகொள்ளாத வேறு சில அரசர்களும்

உண்டு. வெற்றி பெற்றவனுடையவும் அவன் பகைவனுடையவும் நாடுகளுக்கு அடுத்திருக்கும் நாட்டையாண்டு. அவர்களுக்கு உதவி செய்யவோ அல்லது அவர்களை எதிர்க்கவோ வல்ல அரசனை 'நடுநிலையோன்' (மத்தியமா) என அழைத்தனர். அதே ஆற்றலையுடைய ஒரு மன்னனது நாடானது வெற்றி பெற்றவன், பகைவன் அல்லது நடுநிலையோனின் நாட்டையடுத்தில்லையென்றால் அவனுக்கு 'உதாஸினு' அதாவது விருப்பு வெறுப்பற்றவன் என்ற பெயர் வழங்கப்பட்டது. இறுதியாக மண்டலத்தின் பன்னிரண்டாவது உறுப்பினர் 'விஜிகேஷு' என்ற அரசராவார்.

மேலே கூறப்பட்ட பன்னிரண்டு மன்னர்களும் சேர்ந்து மண்டலத்தை அமைப்பதாகக் கருதப்பட்டது. ஓர் அரசன் அவர்களுடைய நோக்கங்களையும், போக்குகளையும் கவனித்து எப்போதும் விழிப்பாக இருப்பதால், தனது அரசைக் காத்து அமைதியை நிலைநாட்ட முடியும். மேலும், அதனால் பிற அரசுகளுடன் தக்க நேச உறவுகளை ஏற்படுத்தித் தனது ஆட்சி எல்லையைப் பரப்பவும் இயலும். இதைப்போல்தான் இன்றைய உலகிலே அமெரிக்காவும், ரஷ்யாவும் தமது செல்வாக்கை உலக நாடுகளிடையே பரப்பி வருகின்றன.

வேதகால மதமானது யாகங்களின் வாயிலாகப் படையெடுப்புக்களை ஆதரித்து வந்தபோதிலும், கூடுமானவரை போரையும், படையெடுப்புக்களையும் மனிதத் தன்மைக்கு இயைந்ததாகவே செய்தது. 'தர்ம விஜயம்' செய்யும் அரசன் ஒரு நாட்டை வென்றதும், அந்நாட்டு மன்னன் வெற்றி பெற்றவனின் மேலரசுரிமையை (Suzerainty) ஏற்று அவனுக்குக் கப்பம் கட்ட இசைந்தால் போதும். வெற்றிபெற்ற அரசன் தோல்வியுற்ற நாட்டைத் தனது நாட்டுடன் சேர்க்கவோ, அல்லது அதன் ஆட்சி முறையை மாற்றவோ தேவையில்லை. தோல்வியடைந்த மன்னன் போரில் மடிந்து விட்டால், அல்லது தொடர்ந்து அரசனாக இருக்க விரும்பவில்லையென்றால், தகுதிவாய்ந்த மற்றொருவர் அப்பதவியில் அமர்த்தப்படவேண்டும். வெற்றிபெற்ற அரசன் தோல்வியடைந்த நாட்டைத் தனது நாட்டுடன் சேர்க்கவேண்டிய தேவை ஏற்பட்டால், அவன் அந்நாட்டின் சட்டங்களையும், வழக்கங்களையும் மதித்து, அதன் மக்களை அன்புடன் ஆள வேண்டும். இதற்கு எடுத்துக் காட்டாகப் பாண்டவர்கள் தக்காணத்தையும், ஜாதகர்கள் (Jatakas) பஞ்சாபையும், மௌரியர்கள் இராஜபுதனத்தையும், சமுத்திரகுப்தர் நாக அரசர்களையும் வென்றதைக் கூறலாம். இவ்வாறாக வெற்றிபெற்ற அரசனின் மேலரசுரிமையை ஏற்றுநின்ற பல கீழரசுகள் (Feudatories) தோன்றின.

மேலரசுரிமைக் கொள்கை

பிரிட்டிஷ் ஆட்சியில் இந்திய அரசுகள் பல்வேறு உரிமை களைப் பெற்றிருந்ததுபோல, பழங்கால இந்தியாவிலும் கீழரசுகள் அரசியல் தரத்திலும், அதிகாரங்களிலும் பலவிதமாகப் பிரிக்கப் பட்டிருந்தன. முக்கியமான கீழரசுகளுக்கு அரியணை, சாமரை, பல்லக்கு, யானைகள், ஐந்து இசைக்கருவிகள் முதலியன வைத்துக் கொள்ளும் உரிமையைப் பேரரசு அளித்தது. இந்தக் கீழரசு களின் அரசவைகளில் பேரரசரின் தூதர் தங்கியிருந்து, அவற்றின் நலன்களைக் காத்து, ஆட்சி முறையைக் கண்காணித்து வந்தார். பிரிட்டிஷ் ஆட்சியில் இந்திய அரசுகளில் தங்கியிருந்த நிலவரத் தூதரைப் போல் (Resident) இவரும் அதிகாரம் செலுத்தினர். மேலும், பேரரசுக்கு எதிராகத் தோன்றக்கூடிய பகைமை அல்லது புரட்சியைப்பற்றிய செய்திகளை உடனே அறிவிப்பதற்காகப் பல ஒற்றர்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தனர்.

கீழரசின் தரத்திற்கும், மேலரசின் திறமைக்கும் தக்கபடி கீழரசுகள் கட்டுப்படுத்தப்பட்டன. கீழரசுகள் பேரரசனுக்குச் செலுத்தவேண்டிய கடமைகள் பல இருந்தன. அவைகளில் பொதுவான பணிவு, கீழடங்கிய நிலை, பேரரசனின் அவைக்கு ஊழியர்களை அனுப்புதல், நேரில் சென்று கீழடக்கம் காட்டுதல், ஒழுங்காகக் கப்பம் கட்டுதல், பரிசுகள் அளித்தல், தம் மகளிரைப் பேரரசனுக்கு மணமுடித்து வைத்தல், போர்ப்படை உதவி முதலியவை முக்கியமானவை. பெரிய கீழரசுகள் சிறியவற்றைவிட அதிக உரிமைகள் பெற்றிருந்தன. புரட்சி செய்து தோல்வியுற்ற கீழரசுகள் மிகவும் இழிந்த நிலைக்குத் தாழ்த்தப்பட்டன. இறுதி யாக, நடு அரசாங்கம் வலுவிழந்தபோது, கீழரசுகள் அநேகமாக தன்னுரிமை பெற்றுப் பேரரசை எதிர்த்தன. சிலவேளை மேலரசின் நிலையை அடையவும் முயன்றன.

ஆ. ரோமானிய அமைதி (Pax Romana)

ரோமானியப் பேரரசின் கீழிருந்த நாடுகளில் நிலவிய அமைதி அல்லது போரற்ற நிலையே ரோமானிய அமைதியென அழைக்கப்பட்டது. இது அட்லாண்டிக் முதல் யூப்ரட்டீஸ் வரை ரோமானியப் பேரரசு நிலைநாட்டியிருந்த ஒழுங்கான நீதித்துறை ஆட்சியையும், நிலைத்த சமாதானத்தையும் குறிக்கிறது. அது குடிகளிடையே உறுதியான சமாதானத்தை (Positive Peace) நிலை நாட்டவில்லை. ஆனால், குழப்பங்கள் எழாவண்ணம் தடுத்து வந்தது. ரோமானிய அமைதி என்ற இக்கருத்தானது, ட்யூட்டானியக் குலங்கள் ரோமானியப் பேரரசின் மேற்கு ஐரோப்பியப் பகுதி களின்மேல் படையெடுத்து, அவற்றைத் தமக்குள் கூறுபோட்டுக்

கொண்டபிறகு நெடுங்காலம் நீடித்து நிற்கவில்லை. ஜூலியஸ் ஸீஸர் காலை (Gaul) வென்றதின் விளைவாக ட்யூட்டானியப் படையெடுப்பு தடைப்பட்டதுடன், ரோமும் அதன் பண்டையப் பண்பாடும் ஜெர்மானியக் குலங்களால் நொறுக்கி அழிக்கப்படுவதினின்று காக்கப்பட்டன.

பேரரசன் அகஸ்டஸ் ரோமுக்கு ஐம்பதாண்டு அமைதியையும் நல்லாட்சியையும் நல்கினன். அவன் நிறுவிய பேரரசின் அமைப்பானது பல்லாண்டுகளாக நிலைத்து நிற்குந் தன்மை பெற்றிருந்தது. ஆயினும் முற்கால ட்யூட்டானியச் சட்டத் தொகுப்புகளெல்லாம் தனிமனிதர்கள் போர் செய்வதையும், பழி தீர்த்துக் கொள்வதையும் அடிப்படையாகக் கொண்டிருந்தமையால், அரை நாகரிகமடைந்திருந்த சமூகத்தினரிடையே நிலவியுள்ள பழி தீர்க்கும் இயல்பை அவைகளால் முற்றிலும் அழிக்க முடியவில்லை. ஆகவேதான் பேரரசு சிதைந்ததும், ரோமானிய அமைதியும் மறைந்தது. மகா சார்ல்ஸின் காலத்தில் பேரரசின் மேற்குப் பகுதியில் அக்கருத்து ஓரளவுதான் புதுப்பிக்கப்பட்டது.

ஓழுங்கு, ஒற்றுமை இவ்விரண்டின் மேலும் ரோமானியர் கொண்டிருந்த பற்று மிகவும் ஆழமாக வேரூன்றி இருந்தது. சிதைவு சக்திகள் மலிந்திருந்த இடைக்காலத்திலும் கூட மக்கள் உலக நாடுகளிடையே அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டுமென்ற ஒற்றுமையுணர்ச்சியால் உந்தப்பட்டனர். இக்கருத்தே பிறகு புனித ரோமானியப் பேரரசாக உருப்பெற்றது. ரோமானியரின் இந்த ஒற்றுமையுணர்வே தற்காலத்தில் போரை யொழிப்பதற்காக நிறுவப்பட்டுள்ள சர்வதேச நிறுவனங்களின் அடிப்படையென ஸ்ட்ராங்கு (Strong) என்ற ஆசிரியர் கூறுகிறார்.

இ. இடைக்காலத்தின் உலகப் பொது நோக்கு

மேற்கு ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு ரோமானிய அமைதி குலைந்தபோதிலும், அதன் அடிப்படையில் எழுந்த ஒற்றுமையுணர்ச்சி முற்றிலும் மறைந்து போகவில்லையென்று மேலே கூறினேம். இவ்வொற்றுமை யுணர்ச்சி திருச்சபையின் பெருமுயற்சிகளின் பயனாக இடைக்காலத்தில் உலகப் பொது நோக்காகப் (Cosmopolitanism) புத்துயிர் பெற்று மலர்ந்தது. மிலேச்சர்கள் கிறித்துவர்களாக்கப்பட்டதன் காரணமாக ஐரோப்பாவில் உருவாகியிருந்த கிறித்துவ சமுதாயத்தின் (Christendom) அடிப்படை ஒற்றுமையே இவ்வுலகப் பொது நோக்கின் ஆதாரமாகத் திகழ்ந்தது. பலதரப்பட்ட மிலேச்ச மக்களின் வேறுபட்ட பழக்க வழக்கங்கள், நிலமானிய முறையினால் தோன்றிய ஆட்சி குலைந்த நிலை ஆகிய இவைபோன்ற சக்திகள் நிலவியிருந்த

போதிலும், சமயவொற்றுமையில் பிறந்த உலகப் பொது நோக்கு அவற்றையெல்லாம் எதிர்த்து நிற்கும் திறன் பெற்றிருந்தது.

இடைக்கால ஐரோப்பாவில் நிலைத்திருந்த இந்த ஒருமைப்பாடு இரண்டு வகைகளில் வெளிப்பட்டது. முதலாவதாக, உலகியல் சார்ந்த காரியங்களில் புனித ரோமானியப் பேரரசானது ஐரோப்பிய ஒற்றுமையின் சின்னமாகத் திகழ்ந்தது. கி. பி. 962 ஆம் ஆண்டு ஆட்டோ (Otto) என்ற ஜெர்மானிய அரசன் போப்பாண்டவரால் பேரரசனென்று முடிசூட்டப்பட்டபோது தோன்றிய இப்பேரரசு உண்மையில் ஒரு பேரரசன்று. பேரரசர் தமக்குக் கீழிருந்த நாடுகளின்மீது அரசாங்க உரிமைகள் பெற்றிருக்கவில்லை. ஆயினும் அப்பேரரசு பண்டைய ரோமானியப் பேரரசின் நினைவுச் சின்னமாக விளங்கி, அது ஐரோப்பிய மக்களிடையே நிலைநாட்டிய அமைதியும் ஒற்றுமையுணர்ச்சியும் அழியாமல் பாதுகாத்தது. அது மக்களின் எண்ணங்களில் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்ததென்பது தான்தே(Dante)என்னும் இத்தாலியர் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதிய 'டி மொனார்க்கியா' (De Monarchia) என்ற நூலிலிருந்து நன்கு புலப்படுகிறது. போப்பாண்டவர் பிரெஞ்சு அரசனுடைய அதிகாரத்திற்கும் பணிந்து அவிக்னனில் (Avignon) வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்ட இந்த நூலில் தான்தே மனித இனம் முழுவதும் ஒரே அரசனால் ஒரே சட்டத்தின்கீழ் ஆளப்படுதலே முறையென்கிறார். இத்தகைய ஆட்சியைப் புனித ரோமானியப் பேரரசர் ஒருவரால் மட்டும் செலுத்த முடியும் என்ற கருத்தும் அவரது நூலில் புதைந்து கிடக்கின்றது.

இடைக்கால ஐரோப்பா அடைந்திருந்த ஒற்றுமையை வெளிப்படுத்திய இரண்டாவது சாதனம் அவ்வொற்றுமைக்கு ஆதாரமாயிருந்த திருச்சபையும், போப்பாட்சியுமாகும். திருச்சபையானது ஐரோப்பா முழுவதும் ஒரே மொழியையும், அம்மொழியின் வாயிலாக ஒரே சமயக் கோட்பாடுகளையும் பரப்பி மக்களிடையே நன்னெறி, மதம் ஆகிய துறைகளில் ஒற்றுமையை ஏற்படுத்தியிருந்தது. மேலும், இடைக்காலம் முழுவதும் போப்பாண்டவர்கள் ஐரோப்பிய அரசியலில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்தும் கிறித்துவப் படைகளைத் திரட்டிக் கீழ்நாடுகளில் முகமதியர்களுடன் சிலுவைப் போர்கள் தொடுத்ததிலிருந்து போப்பாண்டவர்களின் சொல்வாக்கு நன்கு புலனாகின்றது. மேலும், இடைக்காலத்தில் ஐரோப்பிய அரசர்கள் தங்களுக்கிடையே தோன்றிய சச்சரவுகளில் போப்பாண்டவரின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டனர். அவர் பெற்றிருந்த இந்தஅதிகாரமே இடைக்கால ஐரோப்பாவின்

அரசியல் ஒற்றுமைக்கு ஆதாரமாகும். இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி மூன்றும் இன்னொசென்ட் (Innocent III) போன்ற போப்பாண்டவர்கள் ஐரோப்பாவில் நீதிநெறி வழுவாத அரசாங்கம் நிலைக்கப் பெரிதும் துணை செய்தனர். நாடுகளிடையே சீரான தொடர்புகள் வளர அவர்கள் பெரிதும் முயன்றனர். ஆகவே, இடைக்காலத்தில் ஐரோப்பாவில் உலகப் பொது நோக்குத் தோன்றி வளரத் திருச்சபையும் போப்பாட்சியும் பெரிதும் உதவின.

ஆனால் 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்த உலகப் பொது நோக்கு மறையத் தொடங்கியது. எனவே, திருச்சபையின் ஆதிக்கமும் குறைந்தது. ராம்ஸே மூர் (Ramsay Muir) என்பவர் இதற்கு மூன்று காரணங்கள் கூறுகிறார். அவையாவன: மறுமலர்ச்சியும் அதன் அரசியல் கொள்கைகளும்; சமயப் புரட்சி இயக்கம் (Reformation); தேசிய உணர்ச்சியின் வளர்ச்சி. மறுமலர்ச்சியின் (Renaissance) பயனாக அரசியலில் தோன்றிய புதிய கருத்துக்கள் மக்கியவெல்லி (Machiavelli) யின் 'இளவரசன்' (The Prince) என்ற நூலில் தெற்றெனக் காணப்படுகின்றன. நன்னெறியைக் கடைப்பிடித்து ஏனைய நாடுகளுடன் ஒற்றுமையுடன் வாழ்வதைவிட, தன் அதிகாரத்தை அதிகரிப்பதைத்தான் ஓர் அரசன் முக்கியமானதாகக் கருதவேண்டும். தன் எண்ணங்களுக்கும் விருப்பத்திற்கும் தன் குடிகளையும் ஏனைய நாடுகளையும் பணியவைப்பதே ஒரு நாட்டு அரசனின் குறிக்கோளாக இருக்கவேண்டும். இதுவே மக்கியவெல்லியின் நூலின் பிழிவாகும். 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய அரசர்கள் இந்தக் கருத்தை விருப்பத்துடன் ஏற்றனர். இதனால் விளைந்த சூழ்நிலையில் ஒற்றுமைக்கு வழியில்லாமல் போனது. இரண்டாவதாக சமயப் புரட்சி இயக்கம் ஐரோப்பாவின் பல பகுதிகளில் போப்பாண்டவரின் அதிகாரத்தைக் குறைத்து அதை அரசர்களுக்கு அளித்தது. இது கிறித்துவ சமுதாயத்தின் அடிப்படை ஒற்றுமையை முற்றிலும் அழித்தது. இவ்வாறு மக்கியவெல்லியும் லூத்தரும் வெவ்வேறு துறைகளில் புதிய கருத்துக்களைப் புகுத்திய போதிலும், அவை அரசியலில் ஒரே பயனை விளைவித்தன. போப்பாண்டவரின் செல்வாக்குக் குறைந்து முடியரசர்களின் அதிகாரம் வளர்ந்தது. இந்த மாற்றம் 14 ஆம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பிய மக்களிடையே வளர்ந்த தேசிய உணர்ச்சியினால் மேலும் வலுவடைந்தது. எனவே, மேற்கூறிய மூன்று காரணங்களின் பயனாகத் தற்காலத்தின் தொடக்கத்தில் ஐரோப்பாவில் ஒற்றுமை மறைந்து வேற்றுமைகள் பிறந்தன. 1494 ஆம் ஆண்டு முதல் 1815 ஆம் ஆண்டு வரை ஐரோப்பாவில் நாடு

களுக்கிடையே வேறுபாடுகளும் முடியரசர்களிடையே பூசல்களும் மலிந்திருந்ததைக் காணலாம். இந்த நிலையில் இடைக்காலத்தின் குறிக்கோளாகிய உலகப் பொது நோக்கு மறைந்ததில் வியப்பொன்றுமில்லை. ஆனால், ஒற்றுமையை வளர்க்கும் முயற்சிகள் முற்றிலும் கைவிடப்படவில்லை. புதிய சூழ்நிலைக்குத் தக்க புதிய வழிகள் ஆராயப்பட்டன. புதிதாகத் தோன்றியிருந்த தேசிய அரசுகளிடையே அடிக்கடி நேர்ந்த சச்சரவுகளை நீதிநெறிப்படி தீர்ப்பதற்கு வழிகள் தேடப்பட்டன. உலகப் பொது நோக்கு மறைந்து பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சி (Internationalism) தோன்றியது. தற்காலத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளில் இது அடைந்த வளர்ச்சியை நாம் இப்போது கவனிப்போம்.

ஈ. 1815 ஆம் ஆண்டுவரை பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சியின் வளர்ச்சி

16 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு மூன்று நூற்றாண்டுகளாக அரசுகளுக்கிடையே சீரானதும் சட்டபூர்வமானதுமான தொடர்புகளை நிலைநாட்டிப், போர்களைத் தவிர்ப்பதே பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சியின் அடிப்படை நோக்கமாக இருந்தது. இந்தக் குறிக்கோளை அடைவதற்காகச் செய்யப்பட்ட முயற்சிகளை நாம் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவது, ஐரோப்பிய அரசுகள் தம் தேசிய உரிமைகளை இழக்காமல் அமைதியுடனும் ஒற்றுமையுடனும் வாழ உதவும் பொது நிறுவனம் அமைத்தல். இரண்டாவது சர்வதேசச் சட்டத்தின் (International Law) வளர்ச்சி. மூன்றாவது, அரசுகளிடையே மூண்ட சச்சரவுகளுக்கு முடிவு காண்பதற்காகக் கூட்டப்பட்ட மாநாடுகள்.

ஐரோப்பிய அரசுகளுக்கெல்லாம் பொதுவான ஓர் அரசியல் நிறுவனம் ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலவாகும். அவற்றில் மூன்றை மட்டும் இங்குக் கூறுவோம். 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரெஞ்சு அரசன் 4 ஆம் ஹென்றியின் (Henry IV) முதலமைச்சரான ஸல்லி கோமகன் (Duke of Sully) வெளியிட்ட திட்டம் இம் முயற்சிகளில் முதன்மையானது. ஏறக்குறைய நூறு ஆண்டுகளாகப் போர்களினால் சீரழிக்கப்பட்டிருந்த ஐரோப்பாவில் மீண்டும் அமைதி நிலவ வேண்டுமானால், ஐரோப்பா முழுவதையும் அடக்கியாள விரும்பிய ஹாப்ஸ்பர்க் மரபை (House of Hapsburgs) அழிக்க வேண்டுமென்பது ஸல்லியின் கருத்து. இதன் பிறகு ஐரோப்பாவை ஆறு பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிலும் அரசுகளிடையே தொடர்புகளை வளர்க்க ஓர் அவையை அமைக்க வேண்டும். ஐரோப்பிய அரசுகள் எல்லாவற்றின் பிரதிநிதிகளை

யும் கொண்ட ஒரு பொதுப் பேரவை (General Assembly) ஆண்டுக் கொருமுறை கூடிப் போரைத் தவிர்க்கும் பொறுப் பேற்றுப் பணியாற்ற வேண்டும். ரஷ்யா, ஆட்டோமன் பேரரசு (Ottoman Empire) ஆகிய இவ்விரு பகுதிகளைத் தவிர ஐரோப்பா வின் மற்ற எல்லாப் பகுதிகளும் இத்திட்டத்தினுல் பயனடைய வேண்டும். துருக்கியரை முறியடிப்பதைத் தவிர வேறு எக் காரணத்தினுலும் போர் தோன்ற அனுமதியளிக்கக்கூடாது. இதுவே ஸல்லி கோமகனின் பெருந்திட்டமாகும். ஆனுல், 17ஆம் நூற்றுண்டில் நிலவிய சூழ்நிலையில் இத்திட்டமும் பயனளிக்க வில்லை. எனினும் நாடுகளின் சுதந்திரத்தையும், பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சியையும் ஒன்றுக இணைத்து அமைதியை நிலை நாட்ட முதல் முதலாக முயன்ற பெருமை ஸல்லி கோமகனைச் சாரும்.

ஸல்லி கோமகனின் முயற்சி தோல்வியடைந்த பிறகு ஏறக் குறைய நூறு ஆண்டுகளாக ஐரோப்பாவில் தொடர்ந்து பல போர்கள் நிகழ்ந்தன. 18ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் 14ஆம் லூயியின் மண்ணுசையினுல் பல போர்கள் மூண்டன. இச் சண்டைகள், புதிதாக எழுந்த தேசிய அரசுகள் இனி எந்தப் பேரர சிற்கும் அடிபணியா என்ற உண்மையைத் தெளிவாகக் காட்டின. ஆயினும், அவை நாடுகளிடையே ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டப் பன்னாட்டு நிறுவனமொன்று தேவையென்பதையும் எடுத்துக்காட்டின. எனவே 18ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் உட்ரெக்ட் மாநாட்டில் (Congress of Utrecht) (1713) முக்கியப் பங்கேற்றுச் செயலாற்றிய அபே ஸெயின்ட் பியெர் (Abbe de St. Pierre) என்ற பிரெஞ்சு அறிஞர் ஒரு திட்டத்தை வெளியிட்டார். இத்திட்டம் பிற்காலத்தில் லீப்நிஜ் (Leibniz), வால்ட்டேர், ரூஸோ போன்ற சிந்தனையாளர்களின் எண்ணங்களைப் பெரிதும் கவர்ந்தது. மேலும், அது நெப்போலியனுக்குப் பிறகு ஐரோப்பா வைச் சீரமைக்கத் துணிந்த அரசியல் தலைவர்களுக்குத் துணையாக வும், வழிகாட்டியாகவும் இருந்தது.

ஐரோப்பாவில் சமூக ஒருமைப்பாடு உண்டாவதற்கு ஏற்ற ஒற்றுமையுணர்ச்சி இருந்ததென்பது ஸெயின்ட் பியெரின் கருத்து. இந்த ஒற்றுமை போர்களினுல் அழியாமல் இருக்க வேண்டுமானுல் அரசுகளுக்கிடையே சட்டப் பூர்வமான தொடர்புகள் நிலையாக அமைக்கப்படவேண்டும். இதனைக் குறிக்கோளாகக் கொண்டு அபே பியெர் ஒரு முற்போக்கான திட்டத்தைத் தீட்டினர். அதன்படி ஐரோப்பிய அரசர்கள் எல்லோரும் அமைதியை நிலைநாட்டுவதற் காக நிரந்தரமான ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். இதைச் செயல்படுத்த நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட நிரந் தரமான ஒரு பேரவையை ஏற்படுத்த வேண்டும். இது உறுப்பு

அரசுகளுக்கிடையே நேரும் பிணக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கும். அதன் தீர்ப்பை ஏற்க மறுக்கும் அரசுடன் மற்ற அரசுகள் எல்லாம் தம் தொடர்புகளைத் துண்டித்து, தேவையானால் போர்ப் படையைப் பயன்படுத்தி அதைத் தண்டிக்கவேண்டும். உறுப்பு அரசு ஒவ்வொன்றும் மற்ற நாடுகளின்மீது படையெடுத்துத் தமது எல்லைகளைப் பரப்பிக்கொள்ளும் எண்ணத்தை அறவே கைவிட வேண்டும். கூட்டமைப்பு ஏற்படுத்தும்போது ஒவ்வோர் உறுப்பு நாடும் பிற உறுப்பு நாட்டின் எல்லைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவே ஸெயிட்ன் பியெரின் திட்டத்தின் சுருக்கமாகும்.

ஆனால் 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய அரசுகள் இத் திட்டத்தை ஏற்க மறுத்தன. மேலும், அக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளின் எல்லைகள் முடிவாக ஏற்றுக்கொள்ளப்படவில்லையாதலால், ஸெயின்ட் பியெரின் திட்டத்தினால் பயன் எதுவும் விளையவில்லை. அவர் 1713ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகள் செய்துகொண்ட உடன்படிக்கைகளை நிரந்தரமானவையாகக் கருதினார். ஆனால், அவ்வுடன்படிக்கைகள் மக்களின் நாட்டு உணர்ச்சிகளை மதிக்கவில்லையாதலால், அவை ஏற்படுத்திய எல்லைகள் விரைவில் மாற்றப்பட்டன. எனவே, மிக உயர்ந்த நோக்குடன் தீட்டப்பட்ட ஸெயின்ட் பியெரின் திட்டம் நடைமுறையில் பயன் அளிக்கவில்லை. எனினும், பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சியின் சிறப்பையும், ஐரோப்பிய அமைதிக்கு அதன் தேவையையும் எடுத்துக்காட்டியது. அது ஐரோப்பாவில் ஒரு பொதுவான அரசியல் நிறுவனம் ஏற்பட ஊக்கமளித்தது. அதனால் ஐரோப்பாவின் தலைசிறந்த அரசியல் வல்லுநர்களும் தத்துவ அறிஞர்களும் பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சியை ஆராயத் தொடங்கினர். 1795ஆம் ஆண்டு கான்ட் (Kant) என்னும் அறிஞர் 'நிரந்தர அமைதியை நோக்கி' (Towards Lasting Peace) என்ற நூலை எழுதி வெளியிட்டார். மாவீரன் நெப்போலியனும் பிரான்ஸின் தலைமையில் ஒரு பன்னாட்டு அமைப்பை நிறுவ விரும்பியதாக ஸெயின்ட் ஹெலினா தீவில் ஒரு நண்பரிடம் கூறினான். இவையாவும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களும், அறிஞர்களும் பன்னாட்டு ஒற்றுமையுணர்ச்சியில் கொண்டிருந்த நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், மேற்கூறிய திட்டங்கள் நடைமுறையில் பயனளிக்கவில்லை. ஏனெனில், அவை யாவும் அக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே இருந்த தொடர்புகள் நிலையானவையென்று கருதின. ஆனால், உண்மையில் முடியரசர்களின் மண்ணாசையும், தேசிய இனங்களின் சுதந்திரத் தாகமும் இத்தொடர்புகளையும் அவற்றிற்கு ஆதாரமாக இருந்த எல்லைகளையும் நாளடைவில் மாற்றியமைத்தன. சுருங்கக் கூறின், ஐரோப்பாவின் தற்காலத் தேசிய

அமைப்பு முற்றிலும் உருப்பெறுவதற்குமுன் மேற்கூறிய திட்டங்கள் தீட்டப்பட்டதால், அவை வெற்றியடைய இயலவில்லை. தேசிய உணர்ச்சி முழு வெற்றியடைந்த பிறகே, பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சியினால் பயன் விளைந்தது. இவ்வுண்மை நாம் பின் கூறுவனவற்றிலிருந்து நன்கு புலப்படும்.

19ஆம் நூற்றாண்டிற்கு முந்திய மூன்று நூற்றாண்டுகளில் பன்னாட்டுச் சட்டம் உருவாகிப் பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சியின் வளர்ச்சிக்குத் துணை செய்தது. இடைக்காலத்தின் இறுதியில் போப்பாண்டவரின் அதிகாரம் வலுக்குறைந்த பிறகு, ஐரோப்பிய நாடுகளுக்கிடையே நிலவியிருந்த தொடர்புகள் நெகிழத் தொடங்கின. 16,17 ஆம் நூற்றாண்டுகளில் ஒவ்வொரு நாடும் தன் விருப்பப்படி ஒப்பந்தங்களை மீறவும் அண்டை நாடுகளுடன் போர் தொடுக்கவும் முற்பட்டது. இதனால் முப்பதாண்டுப் போர் என்னும் பெரும் போர் மூண்டு ஐரோப்பாவை அலைக்கழித்தது. இவற்றைக் கண்டு வருந்திய அறிஞர்கள் சிலர் நாடுகளின் தொடர்புகளை நீதி நெறிப்படி சீர்படுத்தும் கோட்பாடுகளை ஆராயத் தொடங்கினர். இவ் வாராய்ச்சிகளின் பயனைத் தொகுக்கப்பட்ட விதிகளையே நாம் பன்னாட்டுச் சட்டம் அல்லது சர்வதேசச் சட்டமென்கிறோம். இந்தச் சட்டம் உருவாகி வளர முக்கியமாக அடிகோலியவர் ஹ்யூகோ க்ரோஷியஸ் (Hugo Grotius) என்ற அறிஞர். டச்சு நாட்டைச் சேர்ந்த இவர் 1625ஆம் ஆண்டு வெளியிட்ட ஒரு நூலே சர்வதேசச் சட்டத்தின் ஆதாரமாகக் கருதப்படுகிறது. அவரைத் தொடர்ந்து 17,18ஆம் நூற்றாண்டுகளில் அறிஞர்கள் பலர் சர்வதேசச் சட்டத்தின் வளர்ச்சிக்குத் துணை புரிந்தனர். இவர்களுள் புஃபென்டார்ஃப் (Puffendorf), லீப்நிஜ், வுல்ஃப் (Wolff), பிங்கெர்ஷோக் (Bynkershoek), வாட்டல் (Vattel) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

மேற்கூறிய அறிஞர்கள் வளர்த்த சர்வதேசச் சட்டத்திற்கு மூன்று ஆதாரங்கள் இருந்தன. முதலாவது, ரோமானியச் சட்ட நிபுணர்கள் செம்மைப் படுத்திய 'யுஸ் ஜென்ஸியம்' (Jus Gentium) என்ற நாடுகளின் சட்டம் (Law of Nations). இரண்டாவது, வெகு காலமாக ஐரோப்பிய நாடுகளின் தொடர்புகளில் காணப்பட்ட சில மரபுகள். மூன்றாவது, அரசுகளுக்கு இடையே நாளடைவில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள். இவற்றில் காணப்பட்ட சில பொதுவான கருத்துக்களின் தொகுப்பே சர்வதேசச் சட்டமாகும். க்ரோஷியஸின் கருத்துப்படி, எல்லா அரசுகளும் தமக்கிடையே உள்ள தொடர்புகளைப் பொறுத்தவரையில் இயற்கை நிலையில் (State of Nature) இருப்பதால், அவை யாவும்

இணையானவை. ஆகவே, எந்த ஓர் அரசும் தனது எல்லைக்கு அப்பால் தனிச் சலுகைகளையோ, தனி அதிகாரங்களையோ செலுத்துவது சர்வதேசச் சட்டத்திற்கு முரணானது. இதுவே சர்வதேசச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கையாகும். தூதர்கள், போர்க் கைதிகள் ஆகியோரை நடத்தும் வகை, நாடுகளுக்கிடையே வாணிகத்தை வளர்ப்பதற்கான விதிகள் ஆகிய இவை இடைக்கால வழக்காறுகளிலிருந்து தொகுக்கப்பட்டுச் சர்வதேசச் சட்டத்தின் பகுதிகளாக இணைக்கப்பட்டன. இறுதியாக 17,18 ஆம் நூற்றாண்டுகளின் ஒப்பந்தங்களில் காணப்பட்ட சில பொதுவான கருத்துக்களை லீப்நிஜ் என்ற தத்துவ அறிஞர் தமது நூலில் (Codex Juris Gentium Diplomaticus) தொகுத்து எழுதினர்.

இவ்வாறு 17,18 ஆம் நூற்றாண்டுகளில் தனிமனிதர்களின் முயற்சிகளின் பயனாக வளர்ந்த சர்வதேசச் சட்டம் எல்லா நாடுகளுக்கும் பொதுவானதும், ஐரோப்பிய மக்களின் வழக்காறுகளிலிருந்து தொகுக்கப்பட்டதுமாயிருந்ததால், அதனை ஐரோப்பிய நாடுகள் எல்லாம் ஏற்றுக்கொண்டன. அதில் காணப்பட்ட கருத்துக்கள் ஐரோப்பிய சட்ட மன்றங்களில் செயல்படுத்தப்பட்டன. எனவே, சர்வதேசச் சட்டமானது பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சி வளரப் பெரிதும் துணை புரிந்தது. ஆனால், அச்சட்டத்தில் சில குறைகளும் இருந்தன. முதலாவதாக, அது சட்ட மன்றங்களினால் இயற்றப்படாமல் தனிமனிதர்களால் நூல்வடிவில் இயற்றப்பட்டதால், காலப் போக்கிற்கேற்ப அதனை மாற்றியமைப்பது கடினமாயிருந்தது. இரண்டாவதாக, சர்வதேசச் சட்டத்தில் காணப்பட்ட கோட்பாடுகளைப்பற்றிக் கருத்து வேறுபாடுகள் அடிக்கடி தோன்றின. இவற்றை ஆய்ந்து தீர்ப்பளிக்கும் அதிகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றும் கிடையாது. இது பதினெட்டாம் நூற்றாண்டில் பன்னாட்டு ஒற்றுமையுணர்ச்சி வளர ஒரு பெருந் தடையாக இருந்தது.

தற்காலத்தில் முதல் மூன்று நூற்றாண்டுகளில் பன்னாட்டு ஒற்றுமையுணர்ச்சியின் வளர்ச்சிக்கு உதவிய மூன்றாவது சாதனம் அக்காலத்தில் ஒவ்வொரு போரின் இறுதியிலும் கூட்டப்பட்ட பன்னாட்டு மாநாடுகளாகும். இவை தற்கால அரசுகளின் வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. பண்டைய உலகிலும், இடைக்கால வரலாற்றிலும் நாம் இத்தகைய மாநாடுகளைக் காண்பதில்லை. தற்காலத்தின் தொடக்கத்தில் அடிக்கடி ஏற்பட்ட போர்களின் விளைவாகக் கூட்டப்பட்ட இந்த மாநாடுகளில் சில பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சியின் வளர்ச்சிக்கு அடிகோலின. இவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை முப்பதாண்டுப் போரின் இறுதியில் 1648 ஆம் ஆண்டு கூட்டப்பட்ட வெஸ்ட்பேலியா மாநாடும்

(Congress of Westphalia), 1713 ஆம் ஆண்டு கூட்டப்பட்ட உட்ரெக்ட் மாநாடும் ஆகும். இந்த இரு மாநாடுகளிலும் ஏறக்குறைய எல்லா ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கெடுத்துக் கொண்டதால், அவற்றை ஐரோப்பாவின் பாராளுமன்றங்களெனக் கூறலாம். இந்த மாநாடுகள் போரை நிறுத்தியதுடன் வேறு பல பொதுவான காரியங்களையும் கவனித்தன. நிரந்தரமான அமைதியை நிலைநாட்டும் வழிகளை அவை ஆராய்ந்தன. எனவே, இம் மாநாடுகள் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றவிருந்த ஐரோப்பிய ஐக்கியத்தின் (Concert of Europe) முன்னோடிகளாகத் திகழ்ந்தன.

உ. 19-ம் நூற்றாண்டில் பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சி

19 ஆம் நூற்றாண்டில் பல சமாதானத் திட்டங்கள் உருவாகின. ஷூமென் (Schuman) கூறுவதுபோல "பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பன்னாட்டு நிறுவனத் திட்டங்களின் எண்ணிக்கை பலவகையாகப் பெருகின. நெப்போலியனது போரினாலும், முதல் உலகப் போரினாலும் எவ்வளவு ஏராளமான சமாதானத் திட்டங்கள் தோன்றினவென்றால், அவற்றை வரிசைப் படுத்தி எழுதினாலே பல பக்கங்களாகும்". ஆகவே, அந்நூற்றாண்டின் முக்கியமான திட்டங்களையே இங்குக் கூறுவோம்.

1814 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் செயின்ட் சைமன் (Saint Simon) என்பவர் வெளியிட்ட திட்டத்தின்படி ஐரோப்பா முழுவதற்கும் ஒரு பொதுப் பாராளுமன்றம் நிறுவப்படவேண்டும். அதற்குப் பன்னாட்டுப் பிணக்குகளைத் தீர்த்து வைக்கவும், ஐரோப்பிய நலன் சார்ந்த விஷயங்களை ஆய்ந்து பார்க்கவும் அதிகாரம் உண்டு. ஐரோப்பாவைப் போலவே, அமெரிக்காவிலும் பல சமாதானத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. வில்லியம் லாட் (William Ladd) என்பவர் அமெரிக்கச் சமாதான சங்கம் (American Peace Society) ஒன்றை நிறுவி, 1840 ஆம் ஆண்டு ஒரு பெரிய திட்டத்தைத் தீட்டினார். அதன்படி நாகரிகமடைந்த எல்லா நாடுகளிலிருந்தும் தூதுவர்கள் கூடி, சமாதானத்தை நிலைநாட்டுவதுடன், நடுத் தீர்ப்புச் செய்ய ஒரு பொது நீதி மன்றத்தையும் நிறுவவேண்டும். இவ்விரு திட்டங்கள் தவிர, ஜே (Jay) என்பவர் கூறிய இன்னொரு திட்டமும் சமாதானத்தை நிலைநாட்ட முயன்றது. அதன்படி நாடுகள் வன்முறையைப் பின்பற்றுவதில்லை என்றும், தமக்கிடையே ஏற்படும் வேறுபாடுகளை நடுத்தீர்ப்பு மூலம் தீர்ப்பதென்றும் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். இன்னும் ப்ளன்ட்ஷ்லி (Bluntschli), லாரிமர் (Lorimer) போன்றவர்களும் 19 ஆம் நூற்றாண்டில் சமாதானத் திட்டங்களை வகுத்தனர்.

19 ஆம் நூற்றாண்டில் உருவான மேற்கூறிய கொள்கைகள் அந்நூற்றாண்டில் பல பன்னாட்டு நிறுவன அமைப்புகள் தோன்ற வழி வகுத்தன. அவைகளில் முதன்மையானது 1815 ஆம் ஆண்டில் கூடிய வியன்னா மாநாடாகும். தற்கால ஐரோப்பிய வரலாற்றிலே அதற்கு முன்னால் அவ்வளவு ஏராளமான அரசர்களும், புகழ்பெற்ற அரச தூதர்களும் ஓர் இடத்தில் கூடியதில்லை. வியன்னாவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் முடிவுகளைப்பற்றி இங்கு நாம் குறிப்பிடப் போவதில்லை. ஆயினும், அங்கு முடிவு செய்யப்பட்ட சமூக, பொருளாதார விஷயங்கள் சர்வதேச நிறுவன அமைப்பைப் பொறுத்தவரையில் முக்கியமானவை. அம் மாநாட்டில் பிரிட்டனும், பிரான்ஸும் ஒன்று சேர்ந்து அடிமை வாணிபத்தை ஒழிக்குமாறு எல்லா நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தன. மேலும், பலநாட்டு ஆறுகளில் கப்பல் போக்கு வரத்தைப்பற்றியும் மாநாடு தீர்மானம் செய்தது.

வியன்னா ஒப்பந்தத்தின் பிறகு ஐரோப்பிய ஐக்கியம் (Concert of Europe) ஏற்பட்டது. அது சமாதான உடன்படிக்கையைப் பாதுகாப்பதற்காக ஐரோப்பிய வல்லரசுகள் செய்த ஒரு கூட்டுற வாகும். தூயஉறவு (Holy Alliance), நால்வர் உறவு (Quadruple Alliance) என்ற இரு திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. தூய உறவு என்பது முதலாம் அலெக்ஸாண்டர் என்ற ஜார் தீட்டிய வெறும் கனவுத் திட்டம். நால்வர் உறவுதான் சமாதானத்தை நிலைநாட்டச் செய்யப்பட்ட பயனுறுதியுள்ள திட்டம்.

தூய உறவை ஓர் உடன்படிக்கை என்று கூறமுடியாது. அது ரஷ்ய மன்னரால் துவக்கப்பட்டுப் பிரஷ்யா, ஆஸ்ட்ரியா ஆகிய நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேச உறவு. அந்த உறவில் எல்லா நாடுகளும் சேரலாம். அவையெல்லாம் ஒன்று சேர்ந்து ஐரோப்பாவில் அமைதியை நிலைநாட்டும். இவ்வுறவு கிறித்துவ மதத்தின் கோட்பாடுகளாகிய நீதி, பிறர் அன்பு, சமாதானம் ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவப்பட்டது. ஆயினும் அதனால் யாதோர் அரசியல் பயனும் ஏற்படவில்லை. ஜாரைத் தவிர வேறு எவரும் அதில் நம்பிக்கை கொள்ளவில்லை. அவர் மேலுள்ள மதிப்பின் காரணமாகத்தான் மற்றவர்கள் அதில் கையெழுத்திட்டனர். ஆயினும், தூய உறவுதான் ஷூமன் கூறுவதுபோல, ஐரோப்பிய வரலாற்றில் காணப்படும் முதல் உண்மையான பன்னாட்டு நிறுவன அமைப்பு. அஃது அரைகுறை யான, நிறைவுறுத, நிலையற்ற நிறுவனமாக இருந்தபோதிலும், உண்மையிலே நிறுவப்பட்ட ஒரு பன்னாட்டு நிறுவனமாகும்.

ஆஸ்ட்ரியா, ரஷ்யா, பிரஷ்யா, பிரிட்டன் ஆகிய நான்கு நாடுகளும் 1815 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் தமக்குள்

நால்வர் உறவென்ற ஒரு கூட்டுறவை ஏற்படுத்திக் கொண்டன. சமாதான உடன்படிக்கையைப் பாதுகாப்பதும், பிரான்ஸ் திரும்பப் போரைத் தொடங்காதவாறு தடுப்பதும், பொது நலன் களைப்பற்றிக் கலந்தாய்வதும் நால்வர் உறவின் நோக்களாகும். இதிலிருந்தே பன்னாட்டு உறவில் கலந்தாயும் காலம் தொடங் கிற்று எனக் கூறலாம்.

நால்வர் உறவு சிலகாலம் நன்முக நடைபெற்று வந்தது. 1818 ஆம் ஆண்டு ஐ-லா-ஷாப்பெல் (Aix-La-Chapelle) எனு மிடத்தில் கூடிய நால்வர் மாநாட்டில் பிரான்ஸும் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டது. ஆனால், 1818 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளில் முற்போக்கு வாதிகள் புரட்சியைத் தொடங்கினர்கள். ஆகவே, அதை அடக்குவதே நால்வர் உறவின் முக்கிய வேலையாக இருந்தது. இதற்கு இங்கிலாந்து இணங்க வில்லை. உள்நாட்டுப் புரட்சியில் தலையிடுவதில்லையென அது தீர்மானித்தது. ஆனால் ஆஸ்ட்ரியாவும், ரஷ்யாவும் புரட்சிகளை அடக்க வேண்டுமென வற்புறுத்தின. ஆகவே, பிரிட்டன் நால்வர் உறவிலிருந்து வெளியேறியது. 1820, 1821, 1822 ஆம் ஆண்டு களில் நேச நாடுகள் மீண்டும் கூடின. 1822 ஆம் ஆண்டு கூடிய வெரோனு மாநாடு (Congress of Verona) தான் நால்வர் உறவு தொடங்கிய முறையின்படி ஐந்து பெரும் நாடுகள் கலந்து பேசிய இறுதிக் கூட்டம். அதன் பிறகு அம்முறை கைவிடப்பட்டது.

ஐரோப்பிய ஐக்கியம்தான் வரலாற்றிலே முதன் முதலில் செய்யப்பட்ட பன்னாட்டுச் செயலாய்வு. பெருந்தலைவர்கள் ஒன்று கூடிப் பொது நலன்களைப்பற்றிக் கலந்தாய்ந்தது மிக அரிய செயலாகும். ஆனால், அவர்களுக்குள்ளே பொதுநலத்தை விடத் தன்னலம் அதிகமாக இருந்ததால், ஒருமைப்பாடு ஏற்பட வழி யில்லாது போயிற்று. இங்கிலாந்து பிற வல்லாட்சிகளோடு சேர்ந்து முற்போக்குக் கொள்கைகளை நசுக்க விரும்பவில்லை. மேலும், சிறு நாடுகள் இந்த உறவில் இடம் பெறவில்லை. ஆகவே 1820 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஐரோப்பிய ஐக்கியமானது அரசர் களின் தொழிற் சங்கமாகவும், வல்லாட்சியைப் பாதுகாக்கும் ஒரு சதிக்கும்பலாகவும் மாறியது. கிரிமியப் போரினால் அது சீர்குலைக் கப்பட்டபோதிலும், 1856 இல் பாரிஸிலும், 1878 இல் பெர்லின் மாநாட்டிலும் உயிர்பெற்று எழுந்தது. ஆயினும், நாடுகள் ஒன்றை யொன்று நம்பாத காரணத்தினாலும், தன்னலத்தினாலும் அது விரைவில் சிதைந்து போயிற்று.

சர்வதேசச் சட்டம், சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியைப்பற்றிப் படிக்கும்போது, 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் செய்யப்பட்ட பிற முயற்சிகளையும் பார்க்கவேண்

டும். முதலாவதாக, 1856 ஆம் ஆண்டு கிரிமியப் போருக்குப் பிறகு கூடிய பாரிஸ் மாநாடு சர்வதேசச் சட்டத்தின் வளர்ச்சிக்கு பெரும் துணை செய்தது. அது போர்க் காலத்தில் பின்பற்றப்பட வேண்டிய கடல் சட்டத்தை வரையறுத்தது. மேலும், அது போர்க் காலத்தில் நடுநிலை நாடுகளின் கடல் வாணிக உரிமைகளைப் பாதுகாத்தது. எந்த நாடும் பிறநாட்டின் மீது போர் தொடங்குவதற்கு முன், தமக்கிடையிலுள்ள சச்சரவுகளை மூன்றாவது நாடொன்றின் துணையினால் சமாதானமாகத் தீர்த்துக்கொள்ள முயலவேண்டுமென்று பாரிஸ் மாநாடு அறிவுரை கூறியது. இரண்டாவதாக, 1864-65 இல் கூடிய ஜெனீவா மாநாட்டில், போர் நடக்கும்போது கையாள வேண்டிய சில இரக்க விதிகள் (Humane Regulations) நிர்ணயிக்கப்பட்டன. இதைவிட முக்கியமானது 2 ஆம் நிக்கொலாஸ் என்ற ஜாரின் தூண்டுதலால் கூடிய ஹேக் (The Hague) மாநாடாகும். 1898 ஆம் ஆண்டில் ஜார் படைக்கலக் குறைப்பைப்பற்றி (Disarmament) கலந்தாய எல்லா வல்லரசுகளும் ஹேக் எனுமிடத்தில் ஒரு சமாதான மாநாடு கூட்ட வேண்டுமெனச் சுற்றறிக்கை விடுத்தார். 1899 ஆம் ஆண்டும், 1907 ஆம் ஆண்டும் இரு மாநாடுகள் ஹேகில் கூடிய போதிலும், வல்லரசுகள் யாதொரு முடிவிற்கும் வரவில்லை. ஆயினும் அம்மாநாடுகள் சில பயன்தரும் செயல்களைச் செய்தன. அவை ஒரு நிலையான நடுத்தீர்ப்பு மன்றத்தை நிறுவின. மேலும் அவை தோற்கடிக்கப்பட்ட நாடுகளிலுள்ள மக்கள், போர்க் கைதிகள் ஆகியோரை எவ்வாறு நடத்தவேண்டும் என்பது போன்ற காரியங்களுக்கு விதிகளை ஏற்படுத்தின. நாடுகள் சமாதானச் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றும், தம் மாறுபாடுகளை அமைதியான முறையில் தீர்க்க முயல வேண்டுமென்றும், அதற்கு நடுத் தீர்ப்பைப் பயன்படுத்தலாமென்றும் அம்மாநாடுகள் வற்புறுத்தின.

அரசியல் துறை தவிர, வேறு துறைகளிலும் 19 ஆம் நூற்றாண்டில் பன்னாட்டு உறவுகளும் ஒருமைப்பாடும் தோன்றின. இருப்புப்பாதையினால் பன்னாட்டு உறவு வளர்ந்தது. அஞ்சல், தந்தி, இருப்புப்பாதை, மீன் பிடிக்கும் தொழில், வாணிகம், போக்குவரவு, பதிப்புரிமை ஆகிய துறைகளிலெல்லாம் சர்வதேச நிறுவன அமைப்புகள் தோன்றின. அத்தகைய நிலையங்கள் தோன்றியதால், அரசியல் துறையிலும் ஒரு சர்வதேச நிறுவனம் தோன்ற வழியேற்பட்டது. இவ்வாறு தோன்றிய நிறுவனம் தான் முதல் உலகப் போருக்குப் பிறகு பிறந்த சர்வதேச சங்கம் (League of Nations). அதன் தோற்றம், வளர்ச்சி, தேய்வு, அழிவு ஆகியவைப்பற்றி இப்போது பார்ப்போம்.

ஊ. சர்வதேச சங்கம்

கி. பி. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் பன்னாட்டுத் தொடர்புகள் மிக அடிக்கடி ஏற்பட்டன எனப் பார்த்தோம். கிரிமியப் போருக்குப் பிறகு 1856 ஆம் ஆண்டு கூடிய பாரிஸ் மாநாடானது நாடுகள் தமக்குள் ஏற்படும் சச்சரவுகளைச் சமாதானமான முறையில் தீர்க்க வேறொரு மூன்றாவது நாட்டை நாட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தது. பிறகு படைக்கலக் குறைப்பைப் (Disarmament) பற்றி விவாதிக்க 1898 இலும், 1907 இலும் இரு மாநாடுகள் ஹேக் (The Hague) எனுமிடத்தில் கூடின. முதல் மாநாடு ஜார் 2 ஆம் நிக்கொலாஸின் முயற்சியாலும், இரண்டாவது மாநாடு அமெரிக்க நாட்டுத் தலைவர் தியடோர் ரூஸ்வெல்ட்டின் தூண்டுதலாலும் கூட்டப்பட்டன. ஆயினும், அவைகளில் நாடுகளுக்கிடையே ஓர் உடன்பாடு ஏற்படவில்லை. இதைக் கண்ட தியடோர் ரூஸ்வெல்ட் சமாதான சங்கம் ஒன்றை நிறுவி அதன் வழியாக உலக அமைதியைக் காப்பதுடன், சமாதானத்தைக் குலைக்க முயலும் நாடுகளைப் பலத்தினால் அடக்கவும் எண்ணினார். இவ்வெண்ணத்தைச் செயல்படுத்தி, நிறுவன வடிவில் உருவாக்கியவர் அவருக்குப் பின் அமெரிக்க நாட்டின் தலைவரான உட்ரோ வில்சன் எனும் பெரியாராவர். அவரது பெரும் முயற்சியினால்தான் முதல் உலகப் போருக்குப் பிறகு கூடிய பாரிஸ் சமாதான மாநாடு சர்வதேச சங்க அமைப்பை ஏற்றுக் கொண்டு, அதைச் சமாதான உடன்படிக்கையின் முக்கியப் பகுதியாக ஒப்புக்கொண்டது.

நோக்கங்கள்

போரை ஒழித்து, அகில உலக அமைதியையும், பாதுகாப்பையும் வளர்ப்பதே சர்வதேச சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். சங்கத்தின் உறுப்பினரான நாடுகள் தமக்குள் ஏற்படும் பிணக்குகளைச் சங்கத்தின் முன் கொண்டுவருவதற்கு முன்னால் போரில் இறங்குவதில்லை என வாக்குறுதியளித்தன. இவ்வாக்கை மீறிய நாட்டைத் தண்டிக்கச் சங்கம் பல வழிகளைக் கையாளலாம். வாணிபத் தொடர்புகளைத் துணித்துப் பண உதவியை நிறுத்தி, தேவையானால் கடற்படை, தரைப்படை, வானப்படை முதலியவற்றைப் பயன்படுத்தி அந்நாட்டைச் சங்க முடிவுகளை ஏற்குமாறு கட்டாயப்படுத்தலாம். இது தவிரப் பொது சுகாதாரம், பண உதவி, செய்திப் போக்குவரத்துத் தொடர்பு, சமூகச் சிக்கல்கள் முதலியவற்றிலும் சங்கம் அக்கறை செலுத்தியது. சமூக, அன்புப்பணி சார்ந்த அலுவல்களில் சங்கம் மாபெரும் வெற்றி பெற்றபோதிலும், அதன் தலையாய நோக்கமாகிய அமைதியைக் காப்பதில் முற்றிலும் தோல்வியடைந்தது.

உறுப்பினர்கள்

சங்கம் தொடங்கும்போது நாற்பத்திரண்டு உறுப்பினர்களிருந்தபோதிலும், சில ஆண்டுகளில் உறுப்பினரின் எண்ணிக்கை ஐம்பதிற்கு மேல் அதிகரித்தது. சங்கமானது உட்ரோ வில்சனின் முயற்சியால் நிலை நாட்டப்பட்ட போதிலும், அமெரிக்க செனட் அதை ஏற்க மறுத்ததால், அமெரிக்க நாடு அதன் உறுப்பாக முடியவில்லை. முதல் உலகப் போரில் தோற்கடிக்கப்பட்ட நாடுகளும், பொது உடைமை நாடாகிய ரஷ்யாவும் முதலில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் 1926 ஆம் ஆண்டு ஜெர்மனியும், 1934 ஆம் ஆண்டு ரஷ்யாவும் சங்கத்தில் இடம் பெற்றன.

நிறுவன அமைப்பு

சர்வதேச சங்கத்தின் நிறுவனமானது பேரவை, அவை, செயலகம் என அமைக்கப்பட்டிருந்தது. எல்லா உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் அடங்கிய நிறுவனம்தான் பேரவை. அது ஓவ்வோர் ஆண்டும் கூடும். ஓவ்வோர் உறுப்பு நாட்டிற்கும் ஒரு வாக்கு உண்டு. ஓர் உறுப்பு நாடு மூன்று பிரதிநிதிகளைப் பேரவைக்கு அனுப்பலாம். அவர்கள் அவரவர் நாட்டின் அரசாங்கங்களால் தெரிந்தெடுக்கப்படுவர். பேரவையின் அலுவல்கள் பொதுவானவை. அது புதிய உறுப்பினரை 2/3 பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கும். அவையின் ஒன்பது நிரந்தர உறுப்பினர்களுள் மூவரை அது ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கும். சர்வதேச நீதி மன்றத்தின் நீதிபதிகளையும் பேரவைதான் தேர்ந்தெடுப்பது. உலக அமைதியைச் சார்ந்த செயல்களைப் பற்றி விவாதிப்பதும், வரவு செலவுக் கணக்கை ஆய்ந்து ஏற்றலும், அவையின் வேலையைப் பொதுவாகக் கண்காணிப்பதும் பேரவையின் பிற அலுவல்கள். அது மிகவும் பெரிய நிறுவனமாக இருந்ததால், விரைவாகச் செயலாற்ற முடியவில்லை. அதை விடச் சிறிய நிறுவனமான அவைதான் முக்கியமான வேலைகளைச் செய்து வந்தது.

அவை பொதுவாக ஆண்டிற்கு மூன்று தடவை கூடும். அதில் நிரந்தர உறுப்பினர்களும், நிரந்தரமில்லாத உறுப்பினர்களும், சிறப்பான உறுப்பினர்களும் இருந்தனர். பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகிய வல்லரசுகள் நிரந்தர உறுப்பினர்கள். நிரந்தரமில்லாத உறுப்பினர்கள் சிறிய அரசுகளால் ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எல்லா அரசியல் பூசல்களையும் தீர்த்து வைக்கும் செயலை அந்த அவை ஆற்றி வந்தது.

பேரவை, அவை இவற்றின் வேலைகளைச் செய்ய நிரந்தரமான செயலகம் ஒன்றிருந்தது. எழுநூறுக்கு மேற்பட்ட அதன்

அலுவலர்கள் பல நாடுகளிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்டனர். அதன் தலைவர் பொதுச் செயலாளர் (Secretary-General). அவர் அவையினால் நியமிக்கப்பட்ட போதிலும், அவரது நியமனத்தைப் பேரவையும் ஏற்க வேண்டும். பொதுச் செயலாளருக்குக் கீழ்ப் பல செயலாளர்களும், கணக்கர்களும், மொழி பெயர்ப்பாளர்களும், நூல் நிலையத்தோரும் இருந்தனர். சங்கத்தின் கொள்கை முறையை உருவாக்குவதில் பொதுச் செயலாளருக்கும் பங்குண்டு.

நாடுகளிடையே தோன்றும் பிணக்குகளை விசாரித்துத் தீர்த்து வைக்க ஹேக் எனுமிடத்தில் ஒரு நிரந்தரமான சர்வதேச நீதிமன்றம் நிறுவப்பட்டிருந்தது. மன்றத்தில் பதினெரு நீதிபதிகளும், நான்கு துணை நீதிபதிகளும் இருந்தனர். ஒரு வழக்கை விசாரிக்கக் குறைந்தது ஒன்பது நீதிபதிகள் தேவை. நாடுகள் அதன்முன் கொண்டுவந்த எல்லா வழக்குகளையும் நீதிமன்றம் விசாரித்து வந்தது. 1920க்கும் 1939க்கும் இடையில் ஏறக் குறைய நூறு வழக்குகள் நீதிமன்றத்தின்முன் தீர்ப்புக்கு வந்தன. வழக்குகளில் தீர்ப்பளிப்பதைத் தவிர, பேரவையும் அவையும் தன்முன் சமர்ப்பித்த சட்ட சம்பந்தமான செய்திகளில் எல்லாம் நீதிமன்றம் தனது அறிவுரைக் கருத்துக்களைக் கூற உரிமை பெற்றிருந்தது.

பிற்போக்கான நாடுகளில் தொழிலாளரின் நிலையை முன்னேற்றச் சர்வதேசத் தொழில் நிறுவனம் (I. L. O.) அமைக்கப்பட்டது. அதற்கென்று ஒரு சர்வதேசத் தொழில் அலுவலகம் இருந்தது. நிறுவனத்திற்கு ஒவ்வொரு நாடும் நான்கு பிரதிநிதிகளை அனுப்பின. அவர்களில் இருவர் அரசாங்கப் பிரதிநிதி, ஒருவர் முதலாளிகள் பிரதிநிதி, ஒருவர் தொழிலாளர் பிரதிநிதியாகப் பகுக்கப்பட்டிருந்தனர். சர்வதேசத் தொழில் நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உலக முழுவதும் ஒரேவிதமான தொழிற் சட்டங்கள் ஏற்பட வேண்டும் என்பதே.

சங்கத்தின் அருஞ்செயல்கள்

சமூக, பொருளாதாரத் துறைகளிலே சர்வதேச சங்கம் பெருந் தொண்டாற்றியது. அது சிறுபான்மைக் குழுவின் (Minority Commission) துணைகொண்டு நாடுகளில் சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை நீக்கி, அவர்களின் உரிமைகளைக் காத்தது. நாட்டினம் (Nationality), நாட்டெல்லைக்குட்பட்ட கடற் பகுதிகள் (Territorial Waters) முதலிய சிக்கல்களையும் தீர்த்து வைத்தது. ஆஸ்ட்ரியா, ஹங்கேரி, கிரீஸ், புல்கேரியா போன்ற நாடுகளில் பொருளாதாரச் சீர்கேடுகள் ஏற்

பட்டபோது, சங்கத்தின் உதவியால் அவற்றிற்குச் சர்வதேசக் கடன் கொடுக்கப்பட்டது. நிலம், நீர் வழிப் போக்குவரத்தின் வசதிகளையும் சங்கம் வளர்த்தது. சங்கத்தின் சுகாதார நிறுவனம் நச்சுக் காய்ச்சல் (Typhoid), வாந்திபேதி, அம்மைநோய் முதலிய கொள்ளை நோய்களைப் போக்குவதில் அரும்பணியாற்றியது. மேலும், அது நோய்கள் பரவும் விவரங்களைச் சேகரித்து அதைப் பற்றிய ஆராய்ச்சியிலும் ஈடுபட்டது. சங்கத்தின் அறிவுத்துறைக் கூட்டுறவுக் குழு (Committee on Intellectual Co-operation) கல்வி முன்னேற்றத்திற்கும், அறிஞர்களும் விஞ்ஞானிகளும் அடிக்கடி கூடுவதற்கும் வழி வகுத்தது. போர்க் கைதிகளுக்கும், அகதி களுக்கும் சங்கம் செய்த உதவி அளவிடற்கரியது. முதல் உலகப் போருக்குப் பிறகு டாக்டர் நான்ஸென் (Dr. Nansen) என்பவரின் முயற்சியினால் சங்கம் ஏறக்குறைய ஐந்து இலட்சம் போர்க் கைதி களை அவர்கள் சொந்த நாட்டிற்கு அனுப்பியது. அடிமை வாணி கம், கட்டாய வேலை, பெண் வியாபாரம் முதலியவற்றை ஒழித்து, அபின் போன்ற மயக்க மருந்துகளின் விற்பனையையும் கட்டுப் படுத்தியது. சர்வதேசத் தொழில் நிறுவனம் தொழிலாளரின் நிலைமையைச் செம்மையாக்கிப் பல நாடுகளில் நாளொன்றுக்கு எட்டு மணி நேர வேலையையும், ஒரு வாரத்திற்கு நாற்பத்தெட்டு மணி நேர வேலையையும் செயல்முறைக்குக் கொண்டு வந்தது. இறுதியாகச், சர்வதேச சங்கம் செய்த மற்றோர் அரிய செயல் ஆட்சியுரிமை முறை ((Mandate System) யைத் தொடங்கி வைத்த தாகும். அதனால் ஜெர்மனி, ஆட்டோமன் பேரரசு ஆகியவற்றின் குடியேற்ற நாடுகள் சில ஆட்சியுரிமை பெற்ற நாடுகளுக்கு "நாகரிகத்தின் புனிதப் பொறுப்பாக" வழங்கப்பட்டன.

சங்கத்தின் தோல்வி

இத்தகைய அரும்பணிகளாற்றிய சர்வதேச சங்கம் அரசியல் துறையிலே பெருந் தோல்வியடைந்தது. அது சிறு நாடுகளிடையே ஏற்பட்ட பிணக்குகளைத் தீர்த்துவைத்தது. 1925ஆம் ஆண்டில் கிரேக்க புல்கேரிய எல்லைத் தகராறு வெற்றி கரமாக முடிந்தது. ஆனால் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற பெரிய அரசுகளைக் கட்டுப்படுத்தச் சங்கத்தினால் முடியவில்லை. 1931ஆம் ஆண்டு ஜப்பான் மஞ்சூரியாவின் மீது படையெடுத்து அதைக் கைப்பற்றியது. சீனாவின் வேண்டுகோளின் மேல் சர்வ தேச சங்கம் தலையிட்டுக் குறிப்பிட்ட காலத்திற்குள் ஜப்பான் தனது படைகளை வெளியேற்ற வேண்டுமென ஆணையிட்டது. ஆனால், ஜப்பான் கீழ்ப்படிய மறுத்துச் சங்கத்தினின்று வெளி யேறியது. சர்வதேச சங்கத்தின் மற்றொரு பெருந் தோல்வி இத்தாலிய அபிஸீனியப் போராகும். 1935ஆம் ஆண்டு இத்தாலி

அபிஸீனியாவின் மேல் படையெடுத்ததும் சங்கம் அதைக் கண்டித்தது. பிறகு அதிக தயக்கத்தின் பேரில் இத்தாலியின் மேல் பொருளாதாரத் தடைகளை (Economic Sanctions) விதித்தது. ஆனால், எண்ணெய் அனுப்புவதை மட்டும் தடுக்கவில்லை. முசோலினியைப் போல ஹிட்லரும் சர்வதேச சங்கத்தை எதிர்த்துப் பிற நாடுகளைத் தாக்கினர். அவர் ஆஸ்ட்ரியா, செக்கோஸ்லவாக்கியா ஆகிய நாடுகளைத் தாக்கியபோது, சங்கம் வலுவிழந்து, செயலிழந்து நின்றது. போரைத் தடுப்பதில் தோல்வியடைந்ததைப் போல் படைக்கலக் குறைப்பிலும் (Disarmament) சங்கம் தோல்வியே கண்டது. 1932ஆம் ஆண்டில் ஜெனீவாவில் கூடிய படைக் குறைப்பு மாநாடு ஒருவித வெற்றியும் பெறவில்லை. அம்மாநாட்டில் ரஷ்யா முழுப் படைக்குறைப்பை (Complete disarmament) ஆதரித்தது. ஆயினும், நாடுகள் தமக்கிடையேயுள்ள சச்சரவுகளை அமைதியான முறையில் தீர்க்க விரும்பாதபோது, முழுப்படைக் குறைப்பினால் யாதொரு பயனும் நிகழா தாதலின், அத்திட்டத்தை மற்ற நாடுகள் ஏற்கவில்லை.

சர்வதேச சங்கம் அமைதியை நிலைநாட்ட முடியாமற் போனதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, சங்கம் தொட்டுங்கும்போதே உட்ரோ வில்சனைத் தவிரப் பிற அரசியல் தலைவர்கள் அதில் ஆர்வம் காட்டவில்லை. அதற்காகவே அவர் அதைச் சமாதான உடன்படிக்கையோடு இணைத்தார். ஆனால், இது சங்கத்திற்குப் பெருந் தீங்கை விளைவித்தது. ஏனெனில், சமாதான உடன்படிக்கை தோல்வியடைந்த நாடுகளை நசுக்கியதால், அவை அவ்வுடன்படிக்கையையும், அதனோடு சேர்ந்த சர்வதேச சங்கத்தையும் வெறுத்தன. இரண்டாவதாகச், சங்கமானது அகில உலக சமாதானம் எனும் உயர் குறிக்கோளின் அடிப்படையிலே எழுப்பப்பட்டது. நாட்டுணர்ச்சியும், நாட்டுப் பகையும் பலமாக இருக்கும் வரையில், அக்குறிக்கோளை அடைவது எளிதன்று. உலகப் போரில் வெற்றிபெற்ற நாடுகள் தந்நலங் காக்க முயன்றன. தோல்வியுற்ற நாடுகள் வெறுப்புடன் பொருமிக் கொண்டிருந்தன. இந்நிலையில் நாடுகளிடையே அமைதியை நிலைநாட்டச் சங்கம் செய்த முயற்சிகள் பயனளிக்காததில் வியப்பொன்றுமில்லை. மூன்றுவதாக, முக்கியமான நாடாகிய அமெரிக்கா சங்கத்தில் சேரவில்லை. ரஷ்யா 1934ஆம் ஆண்டில்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அநேக உறுப்பு நாடுகள் சிறிய நாடுகளாகவே இருந்தன. சங்கத்தில் செல்வாக்குள்ள நாடுகள் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் போன்ற வல்லரசுகளாக இருந்ததால், ஜெர்மனி சங்கத்தைப் போர்க்கால நேச நாட்டு உடன்படிக்கையாகவே கருதியது. 1934இல் ஜப்பானும், 1936இல் இத்தாலியும் சங்கத்தை விட்டு வெளியேறியதும், அது ஆங்கில பிரெஞ்சு உடன்படிக்கையின்

சின்னமாகக் காட்சியளித்தது. நான்காவதாகத், தடைகளை விதிப்பதில் சங்க நாடுகள் ஆர்வம் காட்டவில்லை. தந்நலங் காரணமாக அவை தடைகளைக் குறை மனத்துடனே அரை குறையாக விதித்தன. ஐந்தாவதாகச், சங்க உறுப்பு நாடுகளெல்லாம் முழு இறைமையுள்ள தனி நாடுகளாக இருந்தன. ஆகவே, அந்நாடுகள் சங்க அவையின் பெரும்பான்மையான உறுப்பினரின் முடிவுகளை ஏற்க மறுத்தன. மேலும், அவையின் முக்கியமான தீர்மானங்கள் எல்லோராலும் ஒரே மனதாக நிறைவேற்றப்பட வேண்டுமாதலின், சங்கம் விரைவுடன் செயலாற்ற முடியாமற் போனது. இறுதியாக, உறுப்பு நாடுகள் தமது வாக்குறுதியை மீறியதால், சங்கம் வலிமை குன்றிச் செயலிழந்தது. பெரிய அரசுகள் சிறிய அரசுகளைத் தயக்கமின்றி விழுங்கின. அதைத் தடுக்கச் சர்வதேச சங்கத்திற்கு ஆற்றலில்லை. ஆகவேதான், 1936ஆம் ஆண்டிலே "சங்கம் மடிந்து விட்டது" என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டது.

இத்தகைய இரங்கத்தக்க தோல்விகளை யடைந்தபோதிலும், சர்வதேச சங்கமானது மனித இனம் பெற்ற மாபெரும் நன்மை என்று சொல்லவேண்டும். ஏனெனில், போரைத் தடுப்பதற்காக உலக நாடுகளிடையே ஓர் இணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக 19ஆம் நூற்றாண்டிலே செய்யப்பட்ட முயற்சிகளின் நற்கனிதான் சர்வதேச சங்கம். அது வல்லரசுகள் மட்டும் தந்நலத்திற்காகக் கூடும் ஒரு நிறுவனமாக இராமல், உலக நாடுகளின் குரல் ஒலிக்கும் உயர் மன்றமாகவும் திகழ்ந்தது. அது ஒரு உலகக் கழகமாக அல்லது நாடுகளின் சங்கமாக விளங்கியது. உலகின் பல பகுதிகளிலுமுள்ள நாடுகள் ஒன்றுக அமர்ந்து தமக்குப் பொதுவான பொருள்களை ஆய்ந்து முடிவு செய்யும் ஒரு உலகப் பாராளுமன்றமாக இருந்ததெனக் கூறலாம். அதுவே இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகளின் சங்கத்திற்கு (U. N. O.) அடிப்படையாகவும் பயன்பட்டது.

எ. ஐக்கிய நாடுகளின் சங்கம்

தோற்றம்

சர்வதேச சங்கம் இரண்டாம் உலகப் போரைத் தடுக்கத் தவறியதால், வருங்காலத்தில் சர்வதேச நிறுவன அமைப்பு, கூட்டுப் பாதுகாப்பு (Collective Security) முதலிய முயற்சிகளைக் கைவிடுவதா அல்லது புதிய அடிப்படையில் அவற்றைத் திருத்தியமைப்பதா என்ற கேள்வி எழுந்தது. அரசியல் வல்லுநர் பலர் வரையறுக்கப்பட்ட அதிகாரமுடைய சர்வதேச நிறுவனமானது நாடுகளிடையே தொடர்புகளை வளர்த்து அமைதியை நிலை நாட்டும் எனக் கருதினர்கள். ஆனால், இதற்கு வல்லரசுகளின் ஆதரவும், அவற்றிடையே இணக்கமும் தேவையென எண்ணி

னர்கள். 1941ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் வெளியிடப்பட்ட அட்லாண்டிக் சாசனத்தில் அமெரிக்க நாட்டின் தலைவர் ரூஸ்வெல்ட்டும், இங்கிலாந்தின் முதலமைச்சர் சர்ச்சிலும், "பரந்த நிலையான பொதுப் பாதுகாப்பு முறையொன்று அமைக்கப்பட வேண்டும்; அதனால் எல்லா நாடுகளும் தம் எல்லைகளுக்குள் பாதுகாப்புடன் வாழும்" என வலியுறுத்தினர்கள். அச்சு நாடுகளை எதிர்த்துப் போரிட்ட எல்லா நேச நாடுகளும் இக்கொள்கைகளை ஏற்றுக்கொண்டு 1942ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளன்று "ஐக்கிய நாடுகளின் அறிக்கை"யில் கையெழுத்திட்டன. அடுத்த ஆண்டு பிரிட்டன், சீனா, ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் அயல்நாட்டு அமைச்சர்கள் மாஸ்கோவில் ஒன்றுகூடி அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்துவதற்காக ஒரு பொதுவான சர்வதேச நிறுவனம் அமைக்கப்படவேண்டும் எனவும், அமைதியை விழையும் நாடுகளெல்லாம் அதில் உறுப்புக்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும், அதில் எல்லா நாடுகளுக்கும் சமநிலை வழங்கப்பட வேண்டும் என்றும் அறிக்கையிட்டார்கள். 1944ஆம் ஆண்டு நான்கு வல்லரசுகளின் பிரதிநிதிகளும் வாஷிங்டனில் கூடி டம்பார்ட்டன் ஓக்ஸ் திட்டம் (Dumbarton Oaks proposals) ஒன்றை ஏற்றுக்கொண்டார்கள். அதன்படி சர்வதேச சங்கத்தைப் புதுப்பிப்பதைவிட, அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவதற்கும், அதற்கேற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் ஒரு புதிய சர்வதேச நிறுவனத்தை அமைக்க வேண்டுமென முடிவு செய்தனர். ஆயினும், இதைப் பற்றி இவர்களிடையே கருத்து வேற்றுமைகளிருந்ததால், அதைத் தீர்க்க 1945ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்களில் தலைவர் ரூஸ்வெல்ட்டும், முதலமைச்சர் சர்ச்சிலும், தளபதி ஸ்டாலினும் யால்ட்டாவில் கூடினர்கள். இந்த யால்ட்டா மாநாட்டில், புதிய நிறுவனத்திற்கான சாசனத்தைத் தீட்டுவதற்காக ஸான்பிரான்ஸிஸ்கோவில் ஒரு மாநாடு கூட்ட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. 1945ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25ஆம் நாளன்று 46 அரசாங்கங்களின் பிரதிநிதிகள் ஸான்பிரான்ஸிஸ்கோவில் கூடினர்கள். இரண்டு திங்கள்களாக ஆய்ந்து ஆய்ந்து இறுதியில் அனைவரும் ஐக்கிய நாடுகளின் நிறுவனத்தை அமைப்பதற்கான சாசனத்தை ஒரே மனத்துடன் ஏற்றுக்கொண்டனர். 1946ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 10ஆம் நாளன்று ஐக்கிய நாடுகளின் பொது அவையின் முதற் கூட்டம் கூட்டப்பட்டது.

நோக்கங்கள்

ஐக்கிய நாடுகளின் சங்கத்தின் நான்கு அடிப்படை நோக்கங்கள் அதன் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலாவது

பூசல்களைச் சமாதானமான முறையிலும், கூட்டு முயற்சியாலும் தீர்த்து உலகில் அமைதியையும், பாதுகாப்பையும் நிலை நாட்டுதல். இரண்டாவது, நாடுகளிடையே நட்பு உறவுகளை வளர்த்து அமைதியை உறுதிப்படுத்துதல். மூன்றுவது, உலக நாடுகளின் பொருளாதார, சமூக, பண்பாட்டு, அன்புப்பணி சார்ந்த சிக்கல்களைத் தீர்ப்பதிலும், அடிப்படை உரிமைகளைக் காப்பதிலும் நாடுகளிடையே ஒத்துழைப்பை வளர்த்தல். நான்காவது, நாடுகளின் நடவடிக்கைகளை ஒருமைப்படுத்தும் ஒரு நடு நிறுவனமாகச் செயலாற்றல்.

நிறுவன அமைப்பு

ஐக்கிய நாடுகளின் சங்கத்தில் ஆறு முக்கிய உறுப்புக்கள் உள்ளன. அவை (1) பொதுப் பேரவை (General assembly) (2) பாதுகாப்பு அவை (Security Council) (3) பொருளாதார சமூக அவை (Economic and Social Council) (4) பொறுப்பாண்மை அவை (Trusteeship Council) (5) சர்வதேச நீதி மன்றம் (International Court of Justice) (6) சர்வதேசச் செயலகம் (International Secretariat) எனப்படும்.

I. பொதுப் பேரவை

சங்க உறுப்புக்களாகவிருக்கும் நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட பொதுப் பேரவை ஆண்டுக்கொரு முறை கூடும். உலக அமைதியைச் சார்ந்த எப்பொருள் பற்றியும் வாதம் செய்யவும், படைக் குறைப்பு, உலக நாடுகளின் ஒத்துழைப்பு முதலியவற்றைப் பற்றி உறுப்பு நாடுகளுக்கு அறிவுரை கூறவும் அதற்கு உரிமையுண்டு. அது பாதுகாப்பு அவையின் இசைவின் பேரில் பொதுச் செயலாளரை (Secretary General) நியமிக்கிறது. பொதுப் பேரவைக்கு வாதம் செய்வதற்கு மட்டும் உரிமை இருக்கிறதே தவிரச் சட்டமியற்றும் அதிகாரம் கிடையாது.

II. பாதுகாப்பு அவை

இதன் பதினொரு உறுப்பினர்களுள் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், 'தேசீய' சீனு ஆகிய ஐம்பெரு நாடுகளும் நிரந்தர உறுப்பினர்கள். ஏனைய ஆறு உறுப்பினர்கள் இரண்டாண்டிற்கு ஒருமுறை பொதுப் பேரவையால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவையின் செயல்முறை சார்ந்த விஷயங்களில் குறைந்தது ஏழு உறுப்பினரின் வாக்குகளும், மற்ற எல்லா விஷயங்களிலும் ஐம்பெரும் நாடுகளின் வாக்குகளும் மற்றிரு உறுப்பினரின் வாக்குகளும் தேவை. இவ்வாருக நிரந்தர உறுப்பினருக்கு மறுப்பாணை (Veto) உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு அவை பூசல்களை ஆராய்ந்து, அதைச் சமாதான மாகத் தீர்க்கும் வழியைக் கூறும். சமாதான முறிவு அல்லது தாக்குதல் ஏற்பட்டால் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நாட்ட அவை தக்க நடவடிக்கைகளை எடுக்கும். அதற்காகச் செய்திப் போக்குவரத்தைத் தடுக்கவும், பொருளாதார, தூதாண் மைத் தொடர்புகளைத் துணிக்கவும், தேவையானால் தரை, கடல், வானப் படைகளால் தாக்கவும் அவைக்கு அதிகாரம் இருக்கிறது.

III. பொருளாதார சமூக அவை

இதன் 18 உறுப்பினர்களும் பொதுப் பேரவையால் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர். இதன் முக்கிய நோக்கம் உலக நாடுகளின் பொருளாதார, சமூக, சுகாதாரச் செயல்களைக் கவனித்துக் கல்வி, பண்பாடு சம்பந்தமான முயற்சிகளில் அவற்றிடையே ஒத் துழைப்பை வளர்ப்பது. மக்களின் அறியாமையை அழித்து அவர்கள் நடுவில் நீதி, உரிமை, அமைதி ஆகிய நல்லெண்ணங் களை விதைக்க இந்த அவை முயற்சி செய்கிறது. அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வேலையில்லாத நெருக்கடியைக் குறைப்பதற்காக உழைத்து வருகிறது. மக்கள் தொகை, மகளிரின் நிலை, மயக்க மருந்து, போக்குவரவு, மனித உரிமைகள் போன்ற ஒவ்வொரு காரியத்தையும் கவனிக்கத் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆசியா, தூரக்கிழக்குப் பொருளாதாரக் குழு (ECAFE), ஐரோப்பிய பொருளாதாரக் குழு (ECE), இலத்தீன் அமெரிக்க பொருளாதாரக் குழு (ECLA) ஆகிய இம் மூன்றும் இந்த அவையினால் தனிப் பகுதிகளுக்கென ஏற்படுத்தப் பட்டுள்ள சிறப்புக் குழுக்களாகும்.

IV. பொறுப்பாண்மை அவை (Trusteeship Council)

ஐக்கிய நாடுகளின் சங்கத்தின் பொறுப்பில் விடப்பட்ட தன்னுட்சி பெறுத நிலப் பகுதிகளில் வாழும் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக நலன்களைக் காத்து வருவது பொறுப் பாண்மை அவையின் வேலையாகும். இரண்டாம் உலகப் போருக்கு முன்னிருந்த ஆட்சியுரிமை முறை (Mandate System) யிலிருந்து பொறுப்பாண்மை வேறுபட்டிருக்கிறது. தமது பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள நிலப் பகுதியில் வாழும் மக்களின் பொருளாதார, சமூக, கல்வி நலன்களைப் பேணித் தன்னுட்சி முறையை அவர்களிடையே வளர்ப்பது தமது புனித பொறுப் பென பொறுப்பாண்மை அவையின் உறுப்பினர் ஏற்றுக்கொள் கின்றனர். இந்நிலப்பகுதிகளைப் பற்றிய அறிக்கைகளை அவர்கள் பொதுச் செயலாளருக்கு அனுப்புகிறார்கள். அவ் வறிக்கைகள் பொதுப் பேரவையில் வாதத்திற்குக் கொண்டு வரப்படும்.

V. சர்வதேச நீதி மன்றம்

இதன் இருப்பிடம் ஹாலந்திலுள்ள ஹேக் (The Hague) எனும் இடம். 15 நீதிபதிகளைக் கொண்ட இந்த நிறுவனத்திற்கு ஐக்கிய நாடுகளின் சங்க உறுப்பினர்கள் கொண்டுவந்த எல்லா வழக்குகளிலும் அதிகாரம் உண்டு. இந்த நீதி மன்றத்தின் அதிகாரத்தை உறுப்பினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது. சட்ட சம்பந்தமான செயல்களில் பொதுப் பேரவை, பாதுகாப்பு அவை போன்ற நிறுவனங்கள் நீதி மன்றத்தின் அறிவுரையை நாடலாம்.

VI. சர்வதேசச் செயலகம்

ஐக்கிய நாடுகளின் சங்கத்தின் எல்லா ஆட்சித்துறை அலுவல்களையும் பொதுச் செயலாளரின் மேற்பார்வையில் சர்வதேசச் செயலகம் ஆற்றி வருகிறது. பாதுகாப்பு அவையின் இசைவின் பேரில் பொதுப் பேரவை பொதுச் செயலாளரை நியமிக்கிறது. இவர்தாம் சங்கத்தின் முக்கியமான ஆட்சித்துறை அலுவலர். மூன்றாண்டுகள் பதவியிலிருப்பார். இவர் பாதுகாப்பு அவையின் நிலையான உறுப்பினரின் நம்பிக்கைக்குரியவராக இருத்தல் வேண்டும். பொதுப் பேரவை, பாதுகாப்பு அவை, பொருளாதார சமூக அவை, பொறுப்பாண்மை அவை இவற்றின் கூட்டங்களில் இவர் கலந்துகொள்வார். சங்கத்தின் பணியைப் பற்றிய ஆண்டறிக்கையைப் பொதுப் பேரவையின் முன் சமர்ப்பிப்பார். இப் பதவியை மூவர் ஒன்றுக ஏற்கவேண்டும் என்ற 'ட்ராய்க்கா (Troika) திட்டம்' ஒன்றை ரஷ்யா அண்மையில் கொண்டு வந்தது. ஆனால், அதை மற்ற நிலையான உறுப்பினர்கள் ஏற்க வில்லை.

இந்த ஆறு நிறுவனங்களைத் தவிர வேறு பல தனிச் செயல்களில் ஈடுபட்டுள்ள நிலையங்களும் இருக்கின்றன. அரசாங்கங்களுக்கிடையே ஏற்கெனவே ஏற்பட்ட ஒப்பந்தங்களால் நிறுவப்பட்ட இவை ஐக்கிய நாடுகளின் சங்கத்தினால் இணைக்கப்படுகின்றன. சர்வதேசத் தொழில் நிறுவனம் (I. L. O.), உணவு, பயிர்த் தொழில் நிறுவனம் (F. A. O.), ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் (U. N. E. S. C. O.), சர்வதேசச் செலாவணி நிதி (I. M. F.), உலகப் பொருளகம் (World Bank), முதலியவை இவற்றுள் முக்கியமானவை. இவை தவிர ஐக்கிய நாடுகளின் சங்கத்தின் முயற்சியால் நிறுவப்பட்ட வேறு சில தனிச் செயல் நிலையங்களும் உள்ளன. அவற்றுள் உலகச் சுகாதார நிறுவனம் (W. H. O.), சர்வதேச அகதி நிறுவனம் (I. R. O), சர்வதேசக் குழந்தைகளின் அவசர நிதி (I. C. E. F.) ஆகியவை முக்கியமானவை.

ஐக்கிய நாடுகளின் சங்கத்தின் அருஞ் செயல்கள்

சங்கத்தில் பல குறைபாடுகள் காணப்பட்டபோதிலும், குறுகிய காலத்திலே அது அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளிலே அரும்பணிகளை ஆற்றியிருக்கின்றது. அதன் வெற்றி உறுப்பினரிடையே இருக்கும் ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும் பொறுத்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சங்கம் சில இடங்களிலே தோன்றிய போர்களை அவ்விடங்களிலே நிறுத்தி, வேறிடங்களுக்குப் பரவாது பலமுறை தடுத்திருக்கின்றது. 1946 ஆம் ஆண்டின் தொடக்கத்திலே ரஷ்யப் படைகள் ஈரானுள் நுழைந்ததும், ஈரான் அச் செய்தியைப் பாதுகாப்பு அவையின் வாதத்திற்குக் கொண்டு வரவே, ரஷ்யா தனது படைகளை ஈரானிலிருந்து வெளியேற்றியது. சீரியா, லெபனன் ஆகிய நாடுகளிலிருந்து பிரிட்டனும் பிரான்ஸும் தமது படைகளை வெளியேற்றியதற்கும் பாதுகாப்பு அவையின் கண்டனமே காரணமாகும். 1947 ஆம் ஆண்டு இந்தோனீஷியாவுக்கும் நெதர்லாந்திற்கும் இடையே போர் மூண்டதும், ஐக்கிய நாடுகளின் சங்கம் தலையிட்டு அமைதியை நிலைநாட்டுவதற்காக ஒரு மாநாட்டைக் கூட்டியது. அதன் விளைவாக இந்தோனீஷியா முழுச் சுதந்திரம் பெற்று, 1950 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் சங்கத்தின் உறுப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் இனப் பிரிவினை சங்கத்தின் பார்வைக்குப் பலமுறை கொண்டு வரப்பட்டது. ஆனால், அதைத் தீர்க்கச் சங்கம் முயற்சியெடுத்த போதெல்லாம், அது தனது உள்நாட்டுச் செய்தியெனவும், அதில் தலையிடச் சங்கத்திற்கு உரிமை கிடையாதென்றும் தென் ஆப்பிரிக்க அரசாங்கம் கூறிவிட்டது. மேலும், குடியேற்ற நாட்டுக் கொள்கையை ஆதரிக்கும் பல மேற்கு நாடுகள் தென் ஆப்பிரிக்காவிற்கு எதிராக முயற்சியெடுக்க விரும்பாததால், அச்சிக்கல் இன்னும் தீர்க்கப்படவில்லை. 1947 ஆம் ஆண்டு பாலஸ்தீன் பிரச்சினை சங்கத்தின் முன் கொண்டு வரப்பட்டது. பாலஸ்தீனின் பிரிவினை சம்பந்தமாக அராபியர்களுக்கும் யூதர்களுக்குமிடையே குழப்பங்கள் தொடங்கவும், கவுண்ட் பெர்நதத் என்ற நடுவரை சங்கம் பாலஸ்தீனுக்கு அனுப்பியது. ஆனால், அவர் ஒரு திட்டத்தைத் தயாரித்துச் சங்கத்திற்கு அனுப்புவதற்குள் அநியாயமாகக் கொல்லப்பட்டார். அவருக்குப் பிறகு நடுவராகப் பணியாற்றிய டாக்டர் ரால்ஃப் புஞ்ச் (Dr. Ralph Bunche) என்பவரின் பெரும் முயற்சியால் இஸ்ராயேலுக்கும் எகிப்து, லெபனன், ட்ரான்ஸ் ஜார்டன் ஆகிய நாடுகளுக்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆயினும், இரு பிரிவுகளுக்குமிடையேயுள்ள

பகை மனப்பான்மை இன்னும் மாறவில்லை. கொரியாவில் போரை நிறுத்த ஐக்கிய நாடுகளின் சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி முக முக்கியமானது. 1950 ஆம் ஆண்டு வட கொரியாவின் படைகள் தென் கொரியாவினுள் நுழைந்ததும், பாதுகாப்பு அவை யானது தென் கொரியாவைக் காக்கத் தக்க உதவி செய்யுமாறு உறுப்பு நாடுகளைக் கேட்டது. அமெரிக்கா படையுதவி அளிக்கவே, அதனுதவியால் வட கொரியப் படையெடுப்பு முறியடிக்கப்பட்டது. பிறகு ஐக்கிய நாடுகளின் சங்கம் ஏற்படுத்திய குழுவின் முயற்சி யால் 1953 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் நாளன்று போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. ஆயினும், இன்றும் கொரியா ஒரே நாடாக உருவாக்கப்படவில்லை. ஐக்கிய நாடுகளின் சங்கம் தீர்க்க முயன்ற மற்றொரு பெரும் சிக்கல் காஷ்மீர் பிரச்சினையாகும். இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையே காஷ்மீர் தகராறு தொடங்கவும், சங்கம் அதைத் தீர்க்க ஓர் குழுவை ஏற்படுத்தியது. இக்குழுவின் முயற்சியால் இரு நாடுகளும் போர் நிறுத்த உடன் படிக்கை செய்தன. படைகளை வெளியேற்றுவதற்கும், காஷ்மீரின் எதிர்காலத்தைப்பற்றிப் பொதுமக்களின் கருத்தை வாக்குரிமை வழியாக அறிவதற்கும் தளபதி நிமிட்ஸ் (Admiral Nimitz), ஸர் டிக்ஸன் (Sir Dixon), டாக்டர் க்ரஹாம் (Dr. Graham), திரு ஜாரிங் (Mr. Jarring) ஆகியோரைச் சங்கம் நியமித்தது. ஆயினும், இச் செயல்களில் இரு நாடுகளுக்கிடையே நிலவும் கருத்து வேற்றுமை களின் காரணமாக இச்சிக்கலைச் சங்கம் தீர்க்க முடியவில்லை. அண்மையில் காங்கோவில் உள்நாட்டுப் போர் தொடங்கும் நிலையிலிருந்தபோது, ஐக்கிய நாடுகளின் சங்கம் தனது உறுப்பு நாடுகளின் படையுதவியால் அங்கு அமைதியை நிலைநாட்ட முயன்றது. ஆயினும், நாட்டின் முதலமைச்சரான பாட்ரீஸ் லுமும்பாவின் கொலையைத் தடுக்க முடியவில்லை. காங்கோவின் ஒரு பகுதியாகிய கட்டாங்கா பிரிந்து செல்வதற்காகப் படை திரட்டி வருவதைக் கண்ட சங்கம் காங்கோவின் சிக்கலை நேரில் ஆய்ந்து முடிவு காணப் பொதுச்செயலாளரான திரு. ஹாமர்ஷீல்ட் என்ப வரை அங்கு அனுப்பியது. ஆனால், தம் முயற்சிகளினிடையே அவர் கொல்லப்பட்டார். வல்லரசுகள் காங்கோ பிரச்சினையைத் தமது நலனுக்காகப் பயன்படுத்தி வருவதாலும், கட்டாங்காவைப் பிரிய விடாமல் தடுப்பதற்குப் பாதுகாப்பு அவை எடுக்கும் முயற்சி களைச் சில நாடுகள் ஆதரிக்காததாலும், இச் சிக்கலைத் தீர்க்க முடியாமல் சங்கம் திகைத்து நிற்கிறது.

மேற்கூறிய நிகழ்ச்சிகள் தவிர இந்தோ சீனப் போர், 1948 ஆம் ஆண்டில் எழுந்த பெர்லின் தகராறு, சூயஸ் கால்வாய் பிரச்சினை, ட்யூனீசியா பிரச்சினை, அல்ஜீரியா உரிமைக் கிளர்ச்சி,

திபெத்தின் மேல் சீனத் தாக்குதல், ஹங்கேரியில் ரஷ்யாவின் அடக்குமுறை போன்ற பல விஷயங்களிலும் ஐக்கிய நாடுகளின் சங்கம் பெரும் பங்கெடுத்து அவற்றிற்கு நல்ல முடிவுகாண முயன்றிருக்கிறது. ஆயினும், தென் ஆப்பிரிக்காவின் இனப் பிரிவுக் கொள்கை, படைக்கலக் குறைப்பு (Disarmament), அணுக் குண்டு சோதனை முதலிய காரியங்களில் சங்கம் ஒன்றும் செய்ய முடியாமலிருப்பது வருந்தத்தக்கதே.

ஐக்கிய நாடுகளின் சங்கம் அரசியல் துறையில் பெற்ற வெற்றிகளைவிடப் பொருளாதாரத் துறையில் பெற்ற வெற்றிகள் பெருஞ் சிறப்பு வாய்ந்தவை எனலாம். பொதுப் பேரவையின் விருப்பப்படி பொருளாதாரச் சமூக அவையானது, ஐரோப்பியப் பொருளாதாரக் குழு, ஆசியா தூரக் கிழக்குப் பொருளாதாரக் குழு, இலத்தீன் அமெரிக்கப் பொருளாதாரக் குழு என்று ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் தனிக் குழுக்களை அமைத்துள்ளது. அவை அப்பகுதிகளிலுள்ள நாடுகளின் ஒத்துழைப்பினால் அவற்றின் பொருளாதார நிலையைச் சீர்திருத்த முயல்கின்றன. உலகப் பொருளகம் (World Bank) பொருளாதார முன்னேற்றமடையாத நாடுகளுக்கு நெடுங்காலக் கடன் கொடுத்து அவற்றின் வளர்ச்சிக்கு வழி வகுத்து வருகிறது. இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு இது தாராளமாகக் கடன் கொடுத்திருக்கிறது. சர்வதேசச் செலாவணி நிதியினால் நாணய மாற்று (Exchange) வசதிகள் அதிகரித்து, நாடுகளுக்கிடையே வாணிகம் வளர்ச்சியுற்று, அவற்றின் உற்பத்தித்திறமும் பெருகிவருகின்றது. தொழில்துறை உதவி நிறுவனங்கள் தொழில்துறை நுட்பங்களைக் கற்றுக் கொடுக்கப் பல முறைகளைக் கையாண்டு வருகின்றன. உணவு, பயிர்த்தொழில் நிறுவனம் சதுப்பு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதிலும், பயிர்த்தொழிலைத் தற்கால முறைகளில் திருத்துவதிலும், மீன் வளர்த்தல், கால்நடை நோய்களைக் குணமாக்குதல் போன்ற துறைகளிலும் அருந் தொண்டாற்றி வருகிறது.

சமூகத் துறையில் ஐக்கிய நாடுகளின் சங்கம் செய்துள்ள பணிகளும் குறிப்பிடத்தக்கவை. 1948ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாள் பொதுப் பேரவை மனித உரிமைகளின் அறிக்கை யொன்றை ஏற்றுக்கொண்டது. அதன்படி, மனிதனின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் காக்கப்பட வேண்டும். சிறுபான்மையினரின் உரிமைகள், தொழிற்சங்க உரிமைகள், அடிமைத்தனம், கட்டாய வேலை, மகளிர் நிலை போன்ற செய்திகளில் சங்கம் அரிய முயற்சிகளை எடுத்திருக்கிறது. உலகச் சுகாதார நிறுவனமானது மலேரியா நோயை ஒழிப்பதிலும், காச நோயைக் குணமாக்க

பி. ஸி. ஜி. (B. C. G.) மருந்தை வழங்குவதிலும், கொசு முதலிய தீய பூச்சிகளைக் கொல்வதற்காக டி. டி. டி. (D. D. T.) கொடுப்பதிலும், மற்றும் வேறு பல பயன்தரத் தக்க மருந்துகளை அளிப்பதிலும் பெரும் சேவை செய்து வருகிறது. ஐக்கிய நாடுகளின் சர்வதேசக் குழந்தைகளின் அவசர நிதி சிறுவரின் உடல் நலனைக் காக்க மருந்து வகைகளைக் கொடுப்பதற்கு மட்டுமல்லாமல், அவர்களுடைய சுகாதாரத்தையும், உணவு ஊட்டத்தையும் கவனிப்பதற்கும் பயன்படுகிறது. நிலநடுக்கம், வெள்ளம், பஞ்சம், எரிமலை இவற்றால் வாடும் சிறார்களுக்கு உதவியளிப்பதிலும் இது பணியாற்றி வருகிறது. சர்வதேசத் தொழில் நிறுவனம் தொழிலாளரின் நலன்களைப் பல வழிகளில் பாதுகாத்து வருகிறது. ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனமானது அறியாமையை ஒழித்தல், அறிவு வளர்ச்சிக்கான நூல்களை வழங்குதல், பண்பாட்டுத் தொடர்பை வளர்த்தல் முதலிய உதவிகளைச் செய்து வருகிறது. இவ்வாறாக ஐக்கிய நாடுகளின் சங்கமானது பல துறைகளில் மனித இனத்துக்கு அரும்பெரும் பணிகளைச் செய்து வருகிறது.

குறைகள்

ஐக்கிய நாடுகளின் சங்கம் உலகில் நிரந்தர அமைதியை நிலைநாட்ட முடியாமலிருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. வல்லரசுகள் தமக்கிடையே நிலவும் கருத்து வேற்றுமைகளின் காரணமாகச் சங்கத்திலும் பிளவுகளை உண்டாக்கி, அதன் முயற்சிகளைத் தோற்கடித்து வருகின்றன. நாடுகள் தமக்கிடையே தோன்றும் பூசல்களைச் சங்கத்தின் வழியாகத் தீர்க்காமல் தாமாகவே சங்கத்திற்கு வெளியிலே தீர்க்க முயல்கின்றன. பாதுகாப்பு அவையின் நிரந்தர உறுப்பினர்கள் மறுப்பாணையைப் பயன்படுத்திக் கூட்டுப் பாதுகாப்பு முறை வளர்வதையும், புதிய நாடுகள் சங்கத்தின் உறுப்பினர்களாக ஏற்கப்படுவதையும் தடுத்து வருகின்றனர். மேலும், அமைதியைக் குலைக்கும் நாட்டைக் கட்டுப்படுத்துவதற்குப் பலமுள்ள படை சங்கத்திற்குக் கிடையாது. உறுப்பினர்களின் படைகளையே சங்கம் நம்பவேண்டியிருக்கிறது. இவற்றின் காரணமாக ஐக்கிய நாடுகளின் சங்கம் இன்று பல மிழந்து காணப்படுகிறது. வல்லரசுகள் சங்கத்துடன் ஒத்துழையாததினால், குடியேற்ற நாட்டுக் கொள்கையையும், படைக்கல அதிகரிப்பையும், அணுக்குண்டு சோதனைகளையும் சங்கம் தடுக்க முடியவில்லை. உலகம் முழுவதும் நிரந்தர அமைதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் இந்நாளில், எல்லா நாட்டு அரசாங்கங்களும் ஐக்கிய நாடுகளின் சங்கத்துடன் ஒத்துழைக்குமானால், அதன் முயற்சிகள் முழு வெற்றி பெற்று உலக மக்கள் போரின் பெருங்

கேடுகளிலிருந்து காக்கப்படுவார்கள். அப்போது ஆங்கிலக் கவிஞன் ஆல்ஃபிரட் டென்னிசன் கற்பனை செய்ததுபோல், போர்ப் பறைகள் முழங்கமாட்டா; போர்க் கொடிகள் சுருட்டி வைக்கப் படும். மனித இனத்தின் பாராளுமன்றமும், உலகக் கூட்டாட்சியும் தோன்றும்.

ஏ. உலக அரசாங்கம்

உலக அரசாங்கம் ஒன்றை அமைப்பதைப்பற்றிப் பல காலமாக மனிதர்கள் எண்ணி வந்திருக்கின்றனர். தேசீய அரசுகளை அழித்து உலக அரசாங்கத்தை நிறுவ வேண்டுமென்று பேரரசர்களும், வெற்றி வீரர்களும் நினைத்ததுண்டு. தேசீய உரிமைகளையும், மரபுகளையும் மதித்தவர்கள் உலகக் கூட்டாட்சியைப்பற்றிக் கனவு கண்டு வந்தனர். 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலக் கவிஞன் ஆல்ஃபிரட் டென்னிசன் என்பார் "மனிதனின் பாராளுமன்றத்தையும்", "உலகக் கூட்டாட்சி"யையும் கற்பனையில் கண்டார். எச். ஜி. வெல்ஸ் (H. G. Wells) என்ற ஆங்கில எழுத்தாளரும் உலக அரசைப் பற்றி எழுதியிருக்கின்றார். உலக நிறுவனத்தின் தேவையைப்பற்றி உட்ரோ வில்சன் விடுத்த வேண்டுகோளும், சர்வதேச சங்கத்தின் தோல்வியும் மக்கள் உலக அரசாங்கத்தைப்பற்றி நினைக்குமாறு தூண்டின. 1939 ஆம் ஆண்டு கிளாரன்ஸ் ஸ்ட்ரெய்ட் (Clarence Streit) என்ற அமெரிக்க எழுத்தாளர் வெளியிட்ட "ஐக்கியம் இப்பொழுது" என்ற நூலில் அமெரிக்க முறையில் ஓர் உலகக் கூட்டாட்சியை நிறுவ வேண்டுமென்று விளக்கினர். இப்போது ஐக்கிய நாடுகளின் சங்கம் வல்லரசுகளின் கருத்து வேற்றுமைகளினால் வலுவிழந்து காணப்படுவதால், உலகில் நிரந்தரமாக அமைதியை நிலைநாட்டுவதற்கு உலக அரசாங்கமே ஒரே வழி எனப் பலர் எண்ணுகிறார்கள்.

உலக அரசாங்கத்தை நிறுவ வேண்டுமென்பவர்கள் கீழ்க் கண்ட காரணங்களைக் கூறுகிறார்கள். முதலாவதாக, அணுக் குண்டுப் போரினால் மனித இனம் அழிவதைத் தடுக்க வேண்டுமென்றால், அதற்கெனத் தனி முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இரண்டாவது, உலகம் முழு இறைமையுள்ள பல நாடுகளாகப் பிரிந்து, அவை ஒவ்வொன்றும் தம் படைப் பலத்தை அதிகரித்து, யாரை எப்போது தாக்கலாம் என்று முயற்சி செய்து கொண்டிருக்கும்வரை உலகப் போரைத் தடுக்க முடியாது. மூன்றாவது, சமாதானத்தை விரும்பும் மக்களாட்சி நாடுகள் ஒன்றாக இணையவில்லையென்றால், அவை சர்வாதிகார நாடுகளின் தாக்குதல்களிலிருந்து தப்ப முடியாது. நான்காவது, வல்லரசுகளிடையே

எழக்கூடிய போரைத் தடுக்கப் போதுமான ஆற்றல் ஐக்கிய நாடுகளின் சங்கத்திற்கில்லை. ஐந்தாவது, உலகக் கூட்டாட்சியினால் மட்டும் இன்னொர் உலகப் போர் நிகழ்வதைத் தடுக்க முடியும்.

உலகக் கூட்டாட்சியை எதிர்ப்பவர்கள் கீழ்க்கண்ட காரணங்களைக் காட்டுகிறார்கள். முதலாவது, உலக அரசாங்கம் நாடுகளின் சுதந்திரத்தையும், இறைமையையும், மக்களின் உரிமைகளையும் குறைக்கும். இரண்டாவது, ஒரு தனி நிறுவனம் உலகப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க முடியாது. மூன்றாவது, மக்களின் ஆதரவைப் பெற்ற நன்முயற்சிகளைச் செய்து முடிக்க நீண்டகாலம் தேவை. நான்காவது, தக்க பாதுகாப்புகள் செய்யப்படவில்லையென்றால், உலக அரசாங்கம் சர்வாதிகார ஆட்சியாக மாறிவிடும். ஐந்தாவது, ஐக்கிய நாடுகளின் சங்கத்தினால் என்னவெல்லாம் செய்ய முடியுமோ, அவ்வளவும் செய்து பார்க்கப்படவில்லை. நாடுகள், முக்கியமாக வல்லரசுகள் நினைத்தால், சங்கம் பல அருஞ்செயல்களைச் செய்ய முடியும். ஆறாவது, வல்லரசுகளிலொன்றைத் தள்ளிவிட்டு அமைக்கப்படும் எந்த நிறுவனமும் நிலையாக நிற்க முடியாது. இதனால் அணுக்குண்டுப் போரும் நிகழ வழியேற்படும். ஏழாவது, உலக அரசாங்கத்தின் மீது கொண்டுள்ள அளவுக்கு மிஞ்சிய நம்பிக்கையானது மக்களைச் சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளை எடுக்காதவாறு தடுக்கக்கூடும்.

உலக அரசாங்கம் ஓழுங்காக இயங்க வேண்டுமானால் மக்களிடையே உலக சமூக உணர்ச்சி (Consciousness of World Community) தோன்ற வேண்டும். இன்றைய உலகிலே அத்தகைய விழிப்பு இன்னும் ஏற்படவில்லை. வல்லரசுகள் குடியேற்ற நாட்டுக் கொள்கையைக் கைவிட மறுக்கின்றன. இனப் பிரிவினையை வளர்க்கின்றன; மனித உரிமையையும், தனிமனிதனின் பெருமையையும் மதிப்பதில்லை. பிற்போக்கான நாடுகளில் வாழும் மக்களைச் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளிலே முன்னேற்றுவதற்கும் அவை தயங்குகின்றன. அப்படி உதவினாலும் தந்நலங் கருதியே செய்கின்றன. ஆகவே, உலக நாடுகளிடையே ''நாம்'' என்ற ஒற்றுமையுணர்ச்சி இன்னும் எழவில்லை. அத்தகைய உணர்ச்சி தோன்றுவதற்கு முன் உலக அரசாங்கம் ஏற்படுத்தப்படுமானால், வெகு விரைவில் அது மக்களை அடக்கி வருத்தும் கருவியாகவே மாறும். அதை நடத்தும் மனிதரும் ஐக்கிய நாடுகளின் சங்கத்தை நடத்துபவர்களைப் போலவே இருப்பார்கள். ஆகவே, உலக அரசாங்கம் அமைக்கப்படுவதற்கு உலக சமூக உணர்ச்சி இன்றியமையாதது எனத் திட்டமாகக் கூறலாம்.

உலக அரசாங்கத்தை உருவாக்குவதற்கு இரு வழிகள் உள்ளன. முதலாவது, பொதுச் சுகாதாரம், போக்குவரவு சார்ந்த சர்வதேச நிறுவனங்களை வளரச் செய்து, அவற்றின் ஒத்துழைப்பால் உலக அரசாங்கம் ஏற்பட வழி வகுக்கலாம். அவை நாளடைவில் செயல்துறை, சட்ட ஆக்கத்துறை அதிகாரங்களை உடைய சர்வதேச நிறுவனங்களை அமைப்பதற்கு அடிகோலும். இரண்டாவதாக, ஒரே அரசியல் கருத்துக்களைக் கொண்ட நாடுகள் தமக்குள் ஒரு மேலான கூட்டாட்சியை (Super federation) அமைப்பதன் மூலமாக உலக அரசாங்கம் ஏற்பட முயற்சி செய்யலாம். இவ்விரண்டு வழிகளில் முதல் வழியே தற்காலச் சூழ்நிலையில் சிறந்ததெனத் தெரிகிறது. நடைமுறையில் இரண்டாவது வழி மூலமாக உலக அரசாங்கத்தைத் தற்போது அமைக்க முடியாது. ஏனெனில், அத்தகைய அரசாங்கம் நிலையான அடிப்படையில் அமைக்கப்பெற வேண்டுமானால், நாடுகளிடையே பொதுவான நோக்கங்களும், குறிக்கோள்களும் நிலவவேண்டும். ஆனால், இப்போது உலகிலுள்ள எந்தப் பெரிய நாடும் தனது தேசிய ஆட்சியைக் குறுக்கி, உலக அரசாங்கத்தை அமைக்க விரும்பவில்லை. நாடுகளிடையே காணப்படும் முரண்பாடுகளும் பகை மனப்பான்மையும் மறைந்த பிறகுதான் உலக ஒற்றுமைக்கான சூழ்நிலை ஏற்படும். மேலும், தனி நாடுகளின் சுதந்திரத்திலே புதைந்து கிடக்கும் உணர்ச்சிகளும், கருத்துக்களும் எளிதில் மாறு. ஆகவே, முதல் வழியின் வாயிலாக உலக அரசாங்கத்தை அமைப்பது தற்கால உலகில் எளிதெனப் புலப்படுகிறது. ஏற்கெனவே ஐக்கிய நாடுகளின் சங்கம் இத்திசையில் சென்று கொண்டிருக்கிறது. அதிலே குறைகள் காணப்பட்டபோதிலும், அது உலக நிகழ்ச்சிகளை வாதாடும் பொதுமன்றமாகவும், அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டும் நிறுவனமாகவும், நாடுகளிடையே ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் வளர்க்கும் செயற்கருவியாகவும், பொருளாதாரத் துறையில் பிற்போக்கான நாடுகளை முன்னேற்றும் அமைப்பாகவும் துலங்குகிறது. உலக அரசாங்கத்திற்கு அடிப்படையான கருத்து ஒற்றுமை ஏற்கெனவே ஐக்கிய நாடுகளின் சங்கத்தில் வளர்ந்து வருகிறது. சங்கத்தின் அவைகளில் அதிகமான ஆசிய ஆப்பிரிக்கா நாடுகள் இடம் பெறுகின்றன. மேலும், சங்கத்தின் சாசனம் எளிதில் நெகிழக் கூடியதாக இருக்கிறது. சூழ்நிலைகளுக்கும், நெருக்கடிகளுக்கும் ஏற்பச் சங்கத்தின் மேலாண்மையும் வளர்ந்து வருகிறது. ஐக்கிய நாடுகளின் சங்கமானது சர்வதேச சங்கத்தைப் போலல்லாமல் வரவர அதிக அதிகாரமுடைய நிறுவனமாக மலர்ந்து கொண்டு வருகிறது. இதுவே உலக அரசாங்கத்தின் தொடக்கமெனலாம். ஆகவே, உலக அரசாங்கத்தை ஏற்படுத்த முயல்

பவர்கள் ஐக்கிய நாடுகளின் சங்கத்தைப் பலப்படுத்த வேண்டும். உலகம் போரினின்று விடுதலே பெற்றுச் செழிப்பான எதிர் காலத்தை நோக்கி விரைந்து செல்ல வேண்டுமெனில், உலகக் கூட்டாட்சியின் அரசியல் அமைப்பை ஏற்பது மட்டும் போதாது. மனித இனம் முழுவதும் ஒரே குடும்பம் என்ற எண்ணம் தோன்ற வேண்டும். மக்கள் எல்லோரும் இணையாகக் கருதப்பட வேண்டும். அவர்கள் ஒரேவிதமாக நடத்தப்பட வேண்டும். நீதியின் அடிப்படையில் எழும் உலக சமூக உணர்ச்சி நாடுகளி லெல்லாம் பரவவேண்டும். புறநானூற்றுச் செய்யுளில் காணப் படும் "யாதுமூரே, யாவருங் கேளிர்" என்ற நல்லெண்ணம் உலக மக்களின் உள்ளங்களிலே மலரவேண்டும்.

ஆறும் பகுதி: நமது கால அரசு

1. ரஷ்யாவில் மக்களாட்சியின் அதிகாரக் குவிப்பு
2. மக்களின் ஜனநாயகம்
3. பொதுநல அரசு

நமது கால அரசு (Contemporary State)

1914ஆம் ஆண்டுவரை உலகின் பல பகுதிகளில் மக்களாட்சிக் கொள்கைகளும் நிறுவனங்களும் பெருகி வளர்ந்து வந்தன. ஆனால், மக்களாட்சியைக் காப்பதற்காகத் தொடங்கப்பட்ட முதல் உலகப் போரானது வல்லாட்சி வளர வழி வகுத்தது. ரஷ்யா, ஜெர்மனி, இத்தாலி முதலிய நாடுகளில் சர்வாதிகார அரசுகள் தோன்றி மக்களின் அரசியல் உரிமைகளைப் பறித்தன என முன்பு ஓர் இயலில் பார்த்தோம். இந்நாடுகள் ஒவ்வொன்றிலும் ஒரு கட்சியே தனி வல்லாட்சி நடத்தி வந்தது. முக்கியமாக ரஷ்யாவில் பொது உடைமைக் கட்சியானது அரசின் வாழ்க்கையிலே முதன்மையான இடம் பெற்றுள்ளது. அதுதான் அரசாங்கம் முழுவதையும் கட்டுப்படுத்தி வருகிறது. ரஷ்ய அரசியல் அமைப்பானது புறத் தோற்றத்திற்கு மக்களாட்சியைப் போல் காணப்பட்டபோதிலும், உண்மையிலே அதிகாரமெல்லாம் பொது உடைமைக் கட்சியிடமே குவிக்கப்பட்டுள்ளன. அது கூட்டாட்சியின் அமைப்பைப் பெற்றிருந்தாலும், ஒருமுக ஆட்சியின் இயல்புகள் அதில் மலிந்து காணப்படுகின்றன. இதைத்தான் மக்களாட்சியின் அதிகாரக் குவிப்பு (Democratic Centralisation) என்கிறோம். ரஷ்யாவின் மாதிரியைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ள சீன அரசாங்கத்திலும் அதிகாரக் குவிப்பைக் (Centralisation) காணலாம். அது "மக்களின் ஜனநாயகம்" என அழைக்கப்பட்டபோதிலும், உண்மையில் அங்கு ஒரு கட்சியின் தனி வல்லாட்சியே நடைபெறுகிறது. ஆகவே, நமது காலத்தில் தோன்றிய பல வல்லாட்சிகள் மக்களாட்சி முகமூடியுடன் காட்சியளிக்கின்றன.

பொருளாதாரத் துறையிலும் நமது கால அரசுகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. தலையிடாக் கொள்கையை (Laissez faire) அரசுகள் விடுத்து, பொருளாதாரத் துறையைக் கட்டுப்படுத்தி வருகின்றன. பொது உடைமை நாடுகளில் பொருள் உற்பத்தி, வாணிகம் எல்லாவற்றையும் அரசாங்கமே நடத்தி வருகிறது. ஜனநாயக நாடுகளில் பொருளாதாரத் திட்டத்தின் (Economic Planning) மூலம் நடு அரசாங்கம் நாட்டின் பொருளாதார நிலையைக் கட்டுப்படுத்துகிறது. மக்கள் எல்லோரின் நலனுக்காக நாட்டின் உற்பத்தி வளம் பெருக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது. தலையிடா அரசுகள் (Laissez faire States) நாட்டின் பாதுகாப்பையும், உள்நாட்டு அமைதியையும் கவனித்து மற்றவற்றையெல்லாம் தனிமனிதனின் முயற்சிக்கு விட்டு விடுகின்றன. பொது உடைமை அரசுகள் எல்லாவற்றையும்

தாமெடுத்து நடத்தித் தனிமனிதனை அரசாங்க அடிமையாக்கி விடுகின்றன. இவ்விரண்டு வித அரசுகளின் தீமைகளையும் களைந்து, தனிமனிதனுக்கு உரிமையளித்து, தற்கால வாழ்வின் தவிர்க்க முடியாத தற்செயலான இடர்களினின்று அவனைப் பாதுகாக்கும் அரசைத்தான் நாம் இப்போது பொதுநல அரசு (Welfare State) என்கிறோம். இவை ஒவ்வொன்றையும்பற்றி இப்போது ஆராய்வோம்.

---

1. ரஷ்யாவில் மக்களாட்சியின் அதிகாரக் குவிப்பு

மக்களாட்சியின் அதிகாரக் குவிப்பில் மக்களாட்சியின் பண்புகளும், ஒருமுகப்படுத்தப்பட்ட ஆட்சியின் தன்மையும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகச் சில மக்களாட்சியின் இயல்புகளைக் கூறலாம். ஆட்சியின் ஒவ்வொரு படியிலும், மக்களால் நேராக அல்லது வேறு விதமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு எல்லா அதிகாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் தம்மைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களுக்குப் (Electorate) பொறுப்புள்ளவையாதலால், அவற்றிற்குக் குறிப்பிட்ட காலங்களில் ஆட்சி விவரங்களைப்பற்றி அறிவிக்கவேண்டும். அவற்றுல் பதவியிலிருந்து நீக்கவும் படலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் தனக்குப் பொறுப்புள்ள ஒரு செயல்துறைக் குழுவினைத் தேர்ந்தெடுக்கும். அந் நிறுவனங்களிலும், செயல்துறைக் குழுக்களிலும் பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கேற்பச் சிறுபான்மையினர் நடக்கின்றனர். இவ்வாறு மக்களாட்சிக் குணங்கள் இருப்பதுபோல், மக்களாட்சியின் அதிகாரக் குவிப்பில் ஒருமுக ஆட்சியின் இயல்புகளும் உள்ளன. உதாரணமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா நிறுவனங்களும் அவற்றின் செயல்துறைக் குழுக்களும் படிமரபாக அமைக்கப்பட்டிருக்கின்றன. உயர் படியிலுள்ள நிறுவனங்களின் தீர்மானங்களைக் கீழுள்ள நிறுவனங்கள் ஏற்கவேண்டும். இதைப் போலவே செயற்குழுக்களும் தமக்கு மேலுள்ள செயற்குழுக்களின் முடிவுகளை ஏற்பதோடு, முதன் முதலில் அவற்றிற்கே பொறுப்புள்ளவையாக இருக்கின்றன.

மக்களாட்சியின் அதிகாரக் குவிப்புக் கொள்கையின்படி மக்களாட்சியின் இயல்புகளைவிட அதிகாரக் குவிப்பின் தன்மைகளே முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. ஏனெனில், இம்முறையில் அதிகாரம் கீழிருந்து வருவதற்குப் பதிலாக மேலிருந்து வழங்கப்படுகிறது. அஃதாவது, கீழுள்ள நிறுவனங்கள் மேல்படியிலுள்ள நிறுவனங்களிடமிருந்து அதிகாரத்தைப் பெற்று, அவற்

நிற்கே பொறுப்புள்ளவையாக இருக்கின்றன. இத்தகைய மக்களாட்சியின் அதிகாரக் குவிப்பே சோவியத் ரஷ்யாவின் அரசாங்க நிறுவனங்களிலும், கட்சி அமைப்பிலும் காணப்படுகின்றது.

மக்களாட்சியின் கூறுகள்

ரஷ்ய அரசியல் அமைப்பின்படி, தொழிலாளர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சோவியத்துக்கள் என்ற அவைகளே நாட்டின் அரசியல் அடிப்படையாகும். அவற்றில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள நகர, நாட்டுப்புறத் தொழிலாளர்களுக்கு எல்லா அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. மார்க்ஸின் கருத்துப்படி மேல்நாட்டிலுள்ள பாராளுமன்ற மக்களாட்சியானது உண்மையான மக்களாட்சியன்று. அது முதலாளித்துவத்தின் அரசியல் கருவியாகும். அதில் தொழிலாளர்களுக்கு அரசியல் அதிகாரம் அளிக்கப்படுவதில்லை. அங்கு அதிகாரப் பிரிவினையின் (Separation of Powers) காரணமாகச் செயல்துறையானது அதிகார வர்க்கத்தின் கைக்கருவியாகவும், பாராளுமன்றம் வெறும் பேச்சு மன்றமாகவும், நீதித் துறைத் தொழிலாளர்களுக்கு அநீதியிழைக்கும் நிறுவனமாகவும் செயலாற்றுகின்றன. ஆகவே, மார்க்ஸின் எண்ணப்படி உண்மையான மக்களாட்சியில் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களுக்கே எல்லா அதிகாரங்களும் கொடுக்கப்படவேண்டும். இக்கருத்தை லெனின் தடையின்றி ஏற்றுக் கொண்டார். அவரைப் பின்பற்றி ஸ்டாலினும் அதைத் தமது அரசியல் அமைப்பில் இணைத்தார்.

ரஷ்யாவில் பலவித சோவியத்துக்கள் உள்ளன. ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு சோவியத் இருக்கிறது. ஒவ்வொரு தேசிய மாவட்டத்திற்கும், ஆட்சியுரிமை பெற்ற பகுதிக்கும் (Autonomous Region), ஆட்சியுரிமை பெற்ற குடியரசுக்கும் (Autonomous Republic), கூட்டாட்சிக் குடியரசுக்கும் (Union Republic) ஒவ்வொரு சோவியத் உண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக நாடு முழுவதுக்கும் பொதுவான ஒரு தலைமை சோவியத்தும் (Supreme Soviet) இருக்கிறது. ஒவ்வொரு சோவியத்தும் அதன் நில எல்லைக்குள் முழு அதிகாரம் செலுத்துகிறது. அப்பகுதியில் வாழும் குடிகள் எல்லோரும் சோவியத்தின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஒவ்வொரு சோவியத்தும் தனக்குப் பொறுப்புள்ள ஒரு செயல்துறைக் குழுவைத் தேர்ந்தெடுக்கும். சோவியத்துக்களில் எல்லாத் தீர்மானங்களும் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படுகின்றன. அரசியல் அமைப்பின் திருத்தங்கள் மட்டும் 2/3 பகுதி பெரும்பான்மை வாக்குகளால் தலைமை சோவியத்தில் நிறைவேற்றப்படும்.

அதிகாரக் குவிப்பின் கூறுகள்

ரஷ்யாவில் எல்லா சோவியத்துக்களும் படிமுறையாக அமைக்கப்படுகின்றன. நாட்டின் தலைமை சோவியத்துக்குக் கீழுள்ள ஒவ்வொரு சோவியத்தும் தனக்கு மேலுள்ள சோவியத்துக்குப் பணிந்து நடக்கிறது. மேலும், தனது செயல்துறைக் குழுவைத் தேர்ந்தெடுக்கும்போது, அதற்கு மேலுள்ள செயல்துறைக் குழுவின் இசைவு பெற்றே தேர்ந்தெடுக்கிறது. செயல்துறைக்குழு தனக்கு மேலுள்ள செயல்துறைக் குழுவின் முடிவுகளுக்கும் ஆணைகளுக்கும் பணிகிறது. இம்முறையின்படி ஆட்சியுரிமை பெற்ற குடியரசின் சோவியத்தானது கூட்டாட்சிக் குடியரசின் தலைமை சோவியத்துக்குப் பணிந்து நடக்கிறது. கூட்டாட்சிக் குடியரசின் தலைமை சோவியத் ரஷ்யாவின் தலைமை சோவியத்திற்குக் கீழடங்கி இருக்கும்.

நடு அரசாங்கத்திற்கும் மாநிலங்களுக்கும் (கூட்டாட்சிக் குடியரசுகளுக்கும்) உள்ள தொடர்புகள்

I அதிகாரப் பங்கீடு

ஏனைய கூட்டாட்சிகளைப் போலல்லாமல் ரஷ்யாவில் நடு அரசாங்கத்திற்கு மிக அதிகமான அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு விடப்பட்டுள்ளன. பொது அதிகாரங்கள் (Concurrent Powers) கிடையாது.

II சட்ட ஆக்கத்துறை அதிகாரங்கள்

அரசியல் அமைப்பின்படி கூட்டாட்சிக் குடியரசுகள் ரஷ்யாவின் தலைமை சோவியத்திற்குக் கீழடங்கியிருப்பதும் தவிர, அதனிடமிருந்தே தம் அதிகாரங்களைப் பெறுகின்றன. பிற கூட்டாட்சிகளில் பொது அதிகாரம் சம்பந்தமாக நடு அரசாங்கத்திற்கும் மாநிலங்களுக்கும் சச்சரவு ஏற்படும்போதுதான் நடு அரசாங்கத்தின் சட்டம் மேம்படும். மற்றக் காரியங்களில் பிணக்குகள் ஏற்பட்டால், தலைமை நீதிமன்றம் போன்ற மேலான நிறுவனங்கள் அவற்றைத் தீர்த்து வைக்கும். ஆனால், ரஷ்யாவில் எல்லாச் சச்சரவுகளிலும் நடு அரசாங்கச் சட்டமே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆகவே, மாநிலங்களின் அதிகாரங்கள் எல்லாம் நடு அரசாங்கத்தால் வழங்கப்பட்டவையாகும்.

ரஷ்யாவில் அரசியலமைப்பைத் திருத்தும் அதிகாரம் நடு அரசாங்கத்திற்கு மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. அரசியல் அமைப்பை முழுவதும் மாற்றித் தன்னுடைய அதிகாரங்களைப்

பெருக்கி, அதனால் மாநிலங்களின் அதிகாரங்களைக் குறைக்கவும் நடு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

III பொருளாதார அதிகாரங்கள்

நாட்டின் பொருளாதாரத் திட்டங்கள், சுரங்கங்கள், நீர் நிலைகள், காடுகள், நில உரிமை (Land Tenure), தொழிற் சட்டங்கள், அயல்நாட்டு வாணிகம், அரசாங்க விற்பனை முற்றுரிமை, பொருளகங்கள் (Banks), பணம், நாணயமுறை, பயிர்த் தொழில், ஆலைத் தொழில், போக்குவரத்து முதலிய செயல்களை நடு அரசாங்கமே தீர்மானிக்கும். தமது பொருளாதாரத் திட்டத்தைப்பற்றித் தீர்மானம் செய்வதில்கூட கூட்டாட்சிக் குடியரசுகள் நடு அரசாங்கத்தின் இசைவைப் பெறவேண்டும். மேலும், ரஷ்யாவில் பொது உடைமை ஆட்சி நடைபெறுவதால் பொருளாதாரத் திட்டம் நாட்டு வாழ்க்கை முழுவதையும் கட்டுப் படுத்துகிறது. நடு அரசாங்கத்தின் அமைச்சர்களில் பெரும் பாலோர் பொருளாதார வாழ்க்கை சம்பந்தமான பல்வேறு அலுவல்களைக் கவனிக்கின்றனர். ஆகவே, மாநில அரசாங்கங்களில் தலையிடுவதற்கு நடு அரசாங்கத்திற்கு ஏராளமான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

நிதி சம்பந்தமான அதிகாரங்கள்

எல்லா நிதி அதிகாரங்களும் நடு அரசாங்கத்தைச் சார்ந்தவை. நாட்டின் வரவு செலவுத் திட்டத்தை ஏற்பதும், கடன் வாங்குதலும் கொடுத்தலும், கூட்டாட்சிக் குடியரசுகளின் வரி வருமானங்களைத் தீர்மானிப்பதும் நடு அரசாங்கத்தின் வேலைகள். ரஷ்ய அரசியல் அமைப்பின்படி மாநிலங்கள் தமது வரவு செலவுத் திட்டத்தை ஏற்கும் அதிகாரம் பெற்றுள்ளன. ஆனால், இது உண்மையில் அவை தமது பணத்தேவைகளை நாட்டின் தலைமை சோவியத்துக்கு அறிவிக்கும் அதிகாரமேயன்றி வேறில்லை.

அயல்நாட்டுச் செய்திகள்

அயல்நாட்டுச் செய்திகளும், பாதுகாப்பும் நடு அரசாங்கத்தின் பொறுப்பாகும். 1944ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்புத் திருத்தத்தின்படி அயல்நாடுகளுடன் நேராகத் தொடர்பு கொள்ளும் அதிகாரம் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டது. ஆயினும், அரசியல் அமைப்பின் 14ஆம் பிரிவின்படி அயல்நாட்டுக் காரியங்கள், போர், சமாதானம் முதலியவற்றில் நடு அரசாங்கத்திற்கு முழு அதிகாரம் இருக்கிறது. மேலும் மாநிலங்களுக்கும் அயல் நாடுகளுக்கும் உள்ள தொடர்புகளை ஒழுங்குபடுத்துவதற்கும் நடு அரசாங்கத்திற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

செயல்துறை அதிகாரங்கள்

மாநிலங்களிலுள்ள அமைச்சரவைகள் (Council of Ministers) மாநில எல்லைக்குள் அரசாங்கத்தின் மேலான செயல்துறை நிறுவனங்களாக இருந்தபோதிலும், தமது மாநிலத் தலைமை சோவியத்துக்கு மட்டுமல்லாமல், ரஷ்யாவின் பிரிஸீடியத்திற்கும் (Presidium) நடு அரசாங்க அமைச்சரவைக்கும் பொறுப்புள்ளவை யாக இருக்கின்றன. ஆகவேதான், மாநில அமைச்சர்களை வழி நடத்தும் 22 அமைச்சர்கள் நடு அரசாங்க அமைச்சரவையில் இருக்கின்றனர்.

நீதித்துறை அதிகாரங்கள்

நீதி முறைகள் அனைத்தையும் ஒழுங்குபடுத்தும் பொறுப்பு நடு அரசாங்கத்தினுடையது. ரஷ்யாவின் தலைமை சோவியத் தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை நீதித்துறை அதிகாரி (Procurator General) நாட்டின் நீதித்துறை ஆட்சிமுறை முழு வதையும் மேற்பார்வையிடுவார். அவர் மாநிலங்களிலுள்ள நீதி மன்றங்களையும், நீதித்துறை அதிகாரிகளையும் கட்டுப்படுத்தி, அவர்களெல்லாம் பொது உடைமைக் கட்சியை ஆதரிக்குமாறு கவனித்துக் கொள்வார். கூட்டாட்சி சம்பந்தமான சில வழக்கு களை விசாரிக்க மாநில நீதி மன்றங்களுக்கு உரிமை இருந்த போதிலும், ரஷ்யாவின் தலைமை நீதி மன்றமே நாட்டின் உயர்ந்த மேல்வழக்கு நீதிமன்றமாக (Court of appeal) இருக்கிறது.

அரசியல் அமைப்பின் நிலை

ஏனைய கூட்டாட்சிகளில் அரசியல் அமைப்பிற்கு உயர்ந்த நிலை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ரஷ்யாவின் அரசியல் அமைப்பிற்கு அந்நிலை அளிக்கப்படவில்லை. மாநில அரசாங்கங் களின் அதிகாரங்கள் நடு அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாகவே கருதப்படுகின்றன. நடு அரசாங்கச் சட்டங்களுக்கும் மாநில அரசாங்கச் சட்டங்களுக்கும் முரண்பாடு ஏற்படுமானால், நடு அரசாங்கச் சட்டங்களே மேம்படும். மாநிலங்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு மட்டும் தலைமை நீதி மன்றத்திற்கு உரிமையுண்டே தவிர, அவற்றிற்கும் நடு அரசாங் கத்திற்கும் ஏற்படும் சச்சரவுகளைத் தீர்க்க அதற்கு அதிகாரம் கிடையாது. மேலும், ரஷ்யாவின் பிரிஸீடியமும் நடு அரசாங்க அமைச்சரவையும் மாநில அமைச்சர்களின் முடிவுகளையும், கட்டளை களையும் தள்ளுபடி செய்யலாம்.

அரசியல் அமைப்பில் திருத்தம்

ரஷ்யாவின் தலைமை சோவியத்துக்கு மட்டும் அரசியல் அமைப்பைத் திருத்தும் அதிகாரம் இருக்கிறது. திருத்த மசோதா

வானது சோவியத்தின் ஒவ்வோர் அவையிலும் மூன்றில் இரண்டு பகுதி பெரும்பான்மை வாக்குகளைப் பெறவேண்டும். ஆனல், இது ஒரு பெருந்தடையன்று. ஏனெனில், சோவியத்தின் உறுப்பினர்கள் எல்லோரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாத லால் வெகு எளிதில் தேவையான வாக்குகளைப் பெறமுடியும்.

மேற்கூறிய காரணங்களினல், ரஷ்யாவின் அரசியல் அமைப்பில் கூட்டாட்சிப் பண்புகளைவிட ஒருமுக ஆட்சியின் இயல்புகளே அதிகமாக இருக்கின்றன எனத் திட்டமாகக் கூறலாம். ரஷ்யாவில் மாநிலங்களுக்கு ஒருவிதமான தன்னுட்சி வழங்கப்பட்டிருந்தபோதிலும், அதிகாரக் குவிப்பின் காரணமாக நடு அரசாங்கம் அவைகளைவிட அதிக அரசியல் வலிமையுடைய தாக இருக்கிறது. லெனினின் கருத்துப்படி, கூட்டாட்சியானது பல நாட்டினங்களை ஒருமுகப்பட்ட சோவியத் அரசாக ஒன்று சேர்ப் பதற்கு ஒரு படியாகப் பயன்படுகிறது. இந்த இணைப்பை இன்னும் உறுதிப்படுத்துவது பொது உடைமைக் கட்சியாகும். ரஷ்யாவில் கட்சித் தலைவர்களே நாட்டின் தலைவர்களாக இருக் கின்றனர். எல்லா அரசாங்க நிறுவனங்களும், தொழிற்சங்கம் போன்ற பிற பெரிய நிறுவன அமைப்புகளும் கட்சியின் தலைமை யையும், ஆணைகளையும் எல்லாச் செயல்களிலும் ஏற்க வேண்டும். தொழிலாளரின் ஆட்சியென்பது உண்மையில் பொது உடைமைக் கட்சியின் ஆட்சியே ஆகும். ஆகவேதான், கட்சியின் செயலாளர் பிற அரசாங்க அதிகாரிகளைவிட அதிகமான செல்வாக்கு உடைய வராக இருக்கிறார். கட்சித் தலைவர்களே நாட்டின் வழியும், ஒளியும், உண்மையுமாக இருக்கின்றனர்.

---

2. மக்களின் ஜனநாயகம் (People's Democracy)

இரண்டாவது உலகப் போரில் ஜப்பான் தோற்கடிக்கப் பட்டதும் சீனப் பொது உடைமை வாதிகள் ரஷ்யரின் துணை கொண்டு சியாங்-கே-ஷேக்கின் அரசாங்கத்தைக் கவிழ்க்கப் புரட்சியைத் தொடங்கினர். 1945 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் அவர்கள் தேர்ச்சி பெற்ற பொது உடைமைத் தலைவ ராகிய மா-சே-துங் (Mao-Tse-tung) என்பவரின் தலைமையின் கீழ் சியாங்-கே-ஷேக்கின் படைகளைத் தாக்கினர்கள். இந்த உள் நாட்டுப் போரில் பொது உடைமைப் படைகள் வெற்றிபெறவே 1949 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் சியாங் பதவி துறந்து ஃபோர்மோஸா (Formosa) தீவுக்கு ஓடிப்போனர். அதன்பிறகு சீனவில் பொது உடைமை ஆட்சி நிறுவப்பட்டது.

அ. அரசின் அமைப்பு

1954 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சீனாவின் மக்கள் குடியரசின் (People's Republic of China) அரசியல் அமைப்பானது சீனப் பொது உடைமைக் கட்சியின் திட்டத்தையும் நோக்கங்களையும் தெளிவாகக் காட்டுகிறது. அதன் முன்னுரையில் சீன மக்கள் பொது உடைமைக் கட்சியினால் வழி நடத்தப்படுவார்களென்றும், நாட்டில் சுரண்டலும் வறுமையும் ஒழிக்கப்பட்டுப் பொது உடைமை ஆட்சி நிறுவப்படுமென்றும் கூறப்பட்டுள்ளன. சீன அரசியல் அமைப்பானது எழுதப்பட்ட, எளிதில் நெகிழாத அமைப்பாகும். அதன் திருத்தங்கள் நாட்டின் சட்டமன்றத்தின் எல்லா உறுப்பினரின் 2/3 பெரும்பான்மை வாக்குகளினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

நாடு முழுவதற்கும் பொதுவான சட்டமன்றத்திற்குத் தேசீய மக்கள் பொது மன்றம் (The National People's Congress) எனப் பெயர். இதன் உறுப்பினர்களை மாநிலங்கள், ஆட்சியுரிமை பெற்ற பகுதிகள் (Autonomous regions), நடு அரசாங்கத்தின் கீழுள்ள நகரசபைகள், படையினர், வெளிநாடுகளில் வாழும் சீனர்கள் தேர்ந்தெடுப்பார்கள். இதன் பதவிக்காலம் நான்கு ஆண்டுகள். இதன் அதிகாரங்கள் மிகப் பல. சட்டமியற்றுதல், அரசியல் அமைப்பில் திருத்தம் செய்தல், அரசின் முக்கிய அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல், நீக்கல், போர், சமாதானம், நாட்டின் பொருளாதாரத் திட்டம் ஆகியவற்றைத் தீர்மானித்தல், நாட்டின் வரவு செலவுத் திட்டத்தை ஏற்றல் முதலியவை தேசீய மக்கள் பொதுமன்றத்தின் முக்கிய அதிகாரங்களாகும். அரசியல் அமைப்பின் 27 ஆவது பிரிவின்படி இம்மன்றம் தேவையான "எல்லாப் பிற அலுவல்களையும், அதிகாரங்களையும்" நடத்தலாம். இதன் முடிவுகளை அரசியல் அமைப்புக்கு முரணானது எனக் கூற எந்த நீதிமன்றத்திற்கும் அதிகாரம் கிடையாது. இது சட்ட ஆக்கத் துறையில் முழு உரிமை பெற்றிருப்பதுடன், ஆட்சித் துறையிலும் தலையிட அதிகாரம் பெற்றிருக்கிறது. இதைக் கட்டுப்படுத்தக்கூடிய அரசியல் தடைகள் எவையும் கிடையா. சீனாவில் அதிகாரப் பிரிவினை இல்லாததால், இம்மன்றமே மூன்று வித அதிகாரங்களையும் பெற்றுள்ளது என்று கூறலாம்.

தேசீய மக்கள் பொது மன்றம் மிகப் பெரிய அவையாக இருப்பதால், அதன் வேலையைச் செய்வதற்கு ரஷ்யாவில் உள்ள பிரிஸீடியத்தைப்போல் ஒரு நிலையான குழு (Standing Committee) அமைக்கப்பட்டிருக்கிறது. இக் குழுவானது பொது மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன் மேற்பார்வையின் கீழிருந்த போதிலும், இஃது ஒரு முக்கிய நிறுவனமாகும். இது பொது

மன்றத்தின் நிலையான நிறுவனம். பொது மன்றத்தைக் கூட்டுதல், சட்டங்களுக்கு விளக்கம் தருதல், கட்டளைகளை நிறைவேற்றல் முதலியவை இதன் முக்கிய அலுவல்கள். மேலும், அயல் நாடுகளுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளை ஏற்பதற்கும் அல்லது தள்ளுவதற்கும் இதற்கு அதிகாரமுண்டு.

மக்கள் குடியரசின் தலைவர் (Chairman) நான்கு ஆண்டுகள் பதவியிலிருப்பார். அவரைப் பொது மன்றம் தேர்ந்தெடுக்கும். அவருக்கு முடிபுரிமையுள்ள அதிகாரங்கள் (Discretionary Powers) இல்லை. பொதுமன்றத்தின் சட்டங்களையும், கட்டளைகளையும் வெளிப்படுத்துதலே அவரது அலுவல்.

நாட்டின் மிக உயர்ந்த ஆட்சித்துறை நிறுவனமாக விளங்குவது அரசு அவை ((State Council). இது நடு மக்கள் அரசாங்கம் (The Central People's Government) என அழைக்கப்படுகிறது. இதில் முதலமைச்சர், துணை முதலமைச்சர், அமைச்சர்கள், பொதுச் செயலாளர் ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இது பல அமைச்சர்களின் அலுவல்களையும் வட்டார மக்கள் அவைகளின் (Local People's Councils) வேலைகளையும் ஒருமுகப்படுத்தி மேற்பார்வை செய்கிறது. இது தன் திட்டங்களைப் பொது மன்றத்தின்முன், அல்லது நிலையான குழுவின் முன் சமர்ப்பிக்கிறது. இது பொது மன்றத்திற்கு அல்லது நிலையான குழுவிற்குப் பொறுப்புள்ளதாக இருக்கிறது.

நடு அரசாங்கத்திற்குக்கீழ்ப் பலதரப்பட்ட வட்டார ஆட்சி நிறுவனங்கள் இருக்கின்றன. அவை வட்டார மக்கள் பொது மன்றங்கள் (Local People's Congresses), வட்டார மக்கள் அவைகள் (Local People's Councils) என அழைக்கப்படுகின்றன. வட்டார மக்கள் அவையானது, வட்டார மக்கள் பொது மன்றத்தின் செயல்துறை நிறுவனமாகும். அதன் உறுப்பினர்கள் மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்கும் அம்மன்றத்திற்கு அதிகாரமுண்டு. எல்லாவற்றிற்கும் கீழ்ப்படியிலுள்ள வட்டார மக்கள் பொது மன்றத்திற்கு மட்டும் நேர்முகத் தேர்தல் (Direct Election) நடைபெறுகிறது. மற்ற நிறுவனங்களின் உறுப்பினரெல்லாம் அடுத்த கீழ்ப்படியிலுள்ள வட்டார மக்கள் பொதுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேசீயப் பொதுமன்றத்திற்குக் கூட நேர்முகத் தேர்தல் நடைபெறுவதில்லை. இந்த அரசியல் நிறுவனங்களெல்லாம் மக்களாட்சியின் அதிகாரக் குவிப்புக் கொள்கையின்படி செயலாற்றுகின்றன. மேல்படியிலுள்ள மன்றங்களும், அவைகளும் தமக்குக் கீழ் அடுத்தபடியிலுள்ள மன்றங்களையும், அவைகளையும் கட்டுப்படுத்துவதுடன், அவற்றின் முடிவுகளையும்,

ஆணைகளையும் திருத்தவும், தள்ளவும் உரிமை பெற்றுள்ளன. மேலும், நாடு முழுவதிலுமுள்ள எல்லா வட்டார மக்கள் அவைகளும் அரசு அவையின் (State Council) ஒருமுகப்பட்ட தலைமையின்கீழ்ச் செயலாற்றுகின்றன.

நீதித்துறையிலும் அதிகாரக் குவிப்புக் கொள்கை பின்பற்றப்படுகிறது. தலைமை மக்கள் நீதிமன்றம் (Supreme People's Court), வட்டார மக்கள் நீதிமன்றம் (Local People's Court), விசேஷ மக்கள் நீதிமன்றம் (Special People's Court) ஆகிய பலதரமான நீதிமன்றங்கள் இருக்கின்றன. மேல் படியிலுள்ள நீதிமன்றங்கள் அவற்றிற்குக்கீழ் அடுத்த படியிலுள்ள நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தி வருகின்றன. தலைமை மக்கள் நீதி மன்றம் எல்லாக் கீழ் நீதிமன்றங்களின் வேலைகளையும் மேற்பார்வையிடுகிறது. நீதி செலுத்துவதில் மக்கள் நீதிமன்றங்கள் சட்டத்திற்கு மட்டும் கட்டுப்பட்டுத் தனித்தியங்கியபோதிலும், அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு படியிலும் அதற்கிணையான படியிலுள்ள மக்கள் பொது மன்றத்திற்குப் பொறுப்புள்ளவையாக இருக்கின்றன. மேலும், ஒவ்வொரு நீதிமன்றத்தின் தலைவரும் அதே படியிலுள்ள மக்கள் பொது மன்றத்தினால் நான்கு ஆண்டுகளுக்கொரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

சீன அரசியல் அமைப்பில் பல அடிப்படை உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பேச்சுரிமை, எழுத்துரிமை, கூடும் உரிமை, ஆளுரிமை, கல்விபெறும் உரிமை, வேலைசெய்யும் உரிமை, மூதுமை, நோய்க் காலங்களில் உதவிபெறும் உரிமை முதலியன அதில் காணப்படுகின்றன. ஆனால், ஆட்சியின் அடிப்படைக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் எதிர்ப்பவர்களுக்கும், உயர்தலைவர்களின் செயல்களில் குறை காண்பவர்களுக்கும் இவ்வுரிமைகள் இல்லை. அரசியல் அமைப்பானது பல அடிப்படைக் கடமைகளையும் குறிப்பிடுகிறது. அரசியல் அமைப்பிற்கும் சட்டத்திற்கும் பணிதல், பொதுச் சொத்துக்களைக் காத்தல், வரி செலுத்துதல், நாட்டைப் பாதுகாத்தல், போர்க் காலத்தில் படைத் துறைப் பணியாற்றல் முதலியவை குடிகளின் முக்கியமான அடிப்படைக் கடமைகளாகும்.

ஆ. பொதுவுடைமைக் கட்சி

ரஷ்யாவிலிருப்பது போலவே, சீனாவிலும் பொது உடைமைக் கட்சி மார்க்ஸ், லெனின் ஆகியோரின் கொள்கைகளைப் பின்பற்றி வந்தபோதிலும், அவற்றை மறுக்க முடியாத கோட்பாடாகக் கருதுவதில்லை. அதற்குப் பதிலாக அவற்றை ஒரு வழிகாட்டியாக எண்ணுகிறது. ஆகவேதான், பொது உடைமைச் சமுதாயத்தை

உடனே ஏற்படுத்தாமல், படிப்படியாக ஏற்படுத்தச் சீனு முயன்று வருகிறது. எனவே, அரசியல் அமைப்பானது குடியானவர்கள் நிலத்தைச் சொந்தமாக வைத்திருப்பதற்கும், முதலாளிகள் பொது உடைமை சமுதாயம் உருவாகும்வரை உற்பத்தி சாதனங்களைச் சொந்தமாக வைத்திருக்கவும் உரிமை அளிக்கிறது.

சீனப் பொது உடைமைக் கட்சி நாட்டின் அரசியல் நிறுவனங்கள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி வருகிறது. அதன் கோட்பாடுகளையே அரசாங்கம் பின்பற்றுகிறது. அதில் கொள்கையை உருவாக்கும் நிறுவனமும் (Politbureau), நிலையான குழுவும் (Standing Committee), நடுக்குழுவும் (Central Committee) இருக்கின்றன. பொது உடைமைக் கட்சி தவிர வேறு சில கட்சிகளும் சீனுவில் இருக்கின்றன. ஆனால், அவை பொது உடைமைக் கட்சிக்குப் பணிந்து அதன்வழி நடந்தால்தான் உயிர் வாழ முடியும்.

இ. ரஷ்ய, சீன அரசாங்கங்களின் ஒப்புமை

சீனுவின் தேசிய மக்கள் பொது மன்றம் ரஷ்யாவின் தலைமை சோவியத்தையும், நிலையான குழு பிரிஸீடியத்தையும், அரசு அவை அமைச்சரவையையும் பொதுவாக ஒத்திருக்கின்றது எனக் கூறலாம். அரசியல் நிறுவன அமைப்பில் இத்தகைய ஒற்றுமைகள் இருந்தபோதிலும், செயல் முறையில் வேற்றுமைகளும் காணப்படுகின்றன. சீனுவில் மக்கள் குடியரசின் தலைவர் தேசிய மக்கள் பொது மன்றத்தின் முடிவுகளுக்கேற்ப அலுவலாற்றிய போதிலும், அவர் பெயரளவில் மட்டுமல்லாமல் உண்மையிலும் நாட்டின் தலைவராக விளங்குகிறார். ரஷ்யாவில் பிரிஸீடியத்தின் தலைவர் பெயரளவில் மட்டுமே தலைவராகக் கருதப்படுகிறார். அங்கு அமைச்சரவையின் தலைவரே அரசாங்கத் தலைவராகக் காணப்படுகிறார். ஆனால், சீனுவில் முதலமைச்சர் அதிகச் செயல்துறை அதிகாரம் பெற்றிருந்தபோதிலும், ரஷ்ய முதலமைச்சரைப்போல தலைமைநிலை பெறுவதில்லை.

ஈ. சீனுவில் மக்களாட்சியின் அதிகாரக் குவிப்பு

சீன அரசானது மக்களின் ஜனநாயகம் என்று அழைக்கப்படுகிறது. ஜனநாயகத்தின் சில இயல்புகள் அதில் காணப்படுகின்றன. உதாரணமாகப் பொது மன்றங்களிலுள்ள பிரதிநிதிகள் அவற்றிற்கு இணையான படியிலுள்ள அவைகளின் செயல்களுக்கு விளக்கம் கேட்டால், அவைகள் அதற்குத் தக்க பதிலளிக்கவேண்டும். ஏதாவதோர் அரசியல் நிறுவனம் சட்டத்தை மீறினால் அல்லது கடமை தவறினால், குடிகள் அதைப்

பற்றிச் சொல் அல்லது எழுத்து வாயிலாக முறையீடு செய்யலாம். அரசாங்க அலுவலில் ஏற்படும் குறைகளைக் காட்டி அவற்றைத் தவிர்க்கும் வழிகளைப் பொதுக் கூட்டங்கள் அல்லது பத்திரிகைகளின் மூலமாக அறிவிக்கலாம். உண்மையில் இவ்வுரிமைகளெல்லாம் ஏட்டில் காணப்படுகின்றனவே யன்றி, நடைமுறையில் பயன்படுவதில்லை. ஏனெனில், சீனா ஒரு வல்லாட்சியாக இருக்கிறது. பிற ஜனநாயக நாடுகளைப்போல சீனாவும் குடிகளுக்கு வாக்குரிமை வழங்கியபோதிலும், அது வரையறுக்கப்பட்ட வாக்குரிமையாகவே இருக்கிறது. ஏனெனில் அங்கு வயது வந்த எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்கப்படவில்லை. 18 வயதுக்கு மேற்பட்ட மக்களில் பெரும்பான்மையோருக்கு வாக்குரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. வாக்குரிமை வழங்கப்படாத வயது வந்தவர்களும் சீனாவில் இருக்கின்றனர். மேலும், அங்கு மறைவான வாக்கெடுப்பும் (Secret ballot), நேர்முகத் தேர்தலும் (Direct election) இல்லை. எல்லாவற்றிற்கும் கீழ்ப்படியிலுள்ள வட்டார மக்கள் பொது மன்றத்திற்கு மட்டும் நேர்முகத் தேர்தல் நடைபெறுகிறது. மற்ற நிறுவனங்களின் உறுப்பினரெல்லாம் அவற்றிற்குக் கீழ் அடுத்த படியிலுள்ள நிறுவனங்களின் உறுப்பினரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேசீய மக்கள் பொது மன்றத்திற்குக்கூட நேர்முகத் தேர்தல் நடைபெறுவதில்லை.

ஜனநாயகத்தின் பண்புகள் சில சீன அரசில் காணப்பட்ட போதிலும், அதை முற்றிலும் மலர்ந்த மக்களாட்சியாகக் கருத முடியாது. ஏனெனில், அதில் அதிகாரக் குவிப்பின் குணங்கள் மலிந்து காணப்படுகின்றன. உதாரணமாகத் தேசீய மக்கள் பொது மன்றம் மாநில மக்கள் பொது மன்றங்களையும், மாநில மன்றங்கள் மாவட்ட மன்றங்களையும், மாவட்ட மன்றங்கள் நகர மன்றங்களையும் மேற்பார்வையிட்டுக் கட்டுப்படுத்துகின்றன. இவ்வாறுக, எல்லா மக்கள் பொது மன்றங்களுக்கும் தேசீய மக்கள் பொது மன்றம் வழிகாட்டுகிறது. மேலும், தேசீய மன்றம் அரசு அவையைக் கட்டுப்படுத்துவதின் வாயிலாக ஆட்சித் துறையை ஒருமுகப்படுத்துகிறது. அஃது அரசு அவையின் மூலமாக எல்லாப் படிகளிலுமுள்ள அவைகளைக் கட்டுப்படுத்துகிறது. இந்த வட்டார அவைகள் அவற்றிற்கிணையான படிகளிலுள்ள வட்டாரப் பொது மன்றங்களுக்குப் பொறுப்புள்ளவையாக இருப்பதுமல்லாமல், அவற்றிற்கு மேல் அடுத்த படியிலுள்ள அவைகளின் அதிகாரத்திற்கு அடங்கியுமிருக்கின்றன. மேலும், அவை அரசு அவையின் ஒருமுகப்படுத்தும் அதிகாரத்துக்கும் கட்டுப்பட்டுள்ளன. இவ்வாறுக, அரசு அவை முதல்

எல்லாவற்றிற்கும் கீழான வட்டார அவை வரை எல்லா ஆட்சித் துறை நிறுவனங்களும் தேசீய மக்கள் பொது மன்றத்தினுல் மேற்பார்வையிடப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுகின்றன. தேசீய மக்கள் பொது மன்றமே அரசாங்க அமைப்பு முழுவதையும் மிகத் திறமையுடன் இயக்கி வருகின்றது.

சீனுவிலும் ரஷ்யாவைப்போல் எல்லா அதிகாரங்களும் பொது உடைமைக் கட்சியிடமிருப்பதால், அங்கும், அதிகாரக் குவிப்பைக் காண்கிறோம். எல்லா அரசாங்க நிறுவனங்களையும் பொது உடைமைக் கட்சியே கட்டுப்படுத்தி வருகிறது. நாட்டு வாழ்க்கை யின் முக்கியமான துறைகளெல்லாம் கட்சியின் கையில் அடங்கி, மூடங்கிக் கிடக்கின்றன. கட்சியின் வல்லாட்சியின் காரணமாக மனிதரின் அடிப்படை உரிமைகளான பேச்சுரிமை, எழுத்துரிமை, மத உரிமை, கருத்துரிமை போன்றவையெல்லாம் நடை முறையிலே நசுக்கப்படுகின்றன. கட்சித் தலைவர்களையும், அவர் களின் கொள்கைகளையும் எவரும் வெளிப்படையாக எதிர்க்க முடியாது. இவ்வாறு அதிகாரக் குவிப்பும், கட்சியின் தனி யாதிக்கமும் ஒன்றுசேர்ந்த அரசு ஒரு சர்வாதிகாரியின் ஆட்சிக் குட்படும்போது, அதை எவ்வாறு மக்களாட்சி என்றழைப்பது? அதன் வல்லாட்சியாளர் இறைவனுகவே கருதப்படுவார். சீன வல்லாட்சியாளரான மா-சே-துங் என்பவரைப்பற்றி பீக்கிங் நகராண்மை மக்கள் அரசாங்க ஏடு ஒன்று கூறுகிறது: "முன் னுல் நாம், எல்லா வல்லமையுள்ளவரெனக் கருதப்பட்ட குவான் குங் (Kuan Kung) என்ற கடவுளை வணங்கி வந்தோம். அவரு டைய எல்லா வல்லமையும் எங்கே? நாம் இப்போது யாரை வணங்குவோம்? தலைவர் மா-சே-துங்கையே நாம் வழிபட வேண்டும்." சீனுவில் மக்களாட்சிக்கு இடமில்லை என்பதைக் காட்டுவதற்காகத்தான் அரசியல் அமைப்பானது சீனுவின் மக்கள் குடியரசை "மக்களின் ஜனநாயக வல்லாட்சி" (People's Democratic Dictatorship) என அழைக்கின்றது போலும்!

---

3. பொதுநல அரசு (Welfare State)

மக்களின் நலனை வளர்ப்பது அரசின் நோக்கமாகும். ஆகவே, ஒவ்வோர் அரசையும் பொதுநல அரசெனக் கூறலாம். ஆனுல், இப்போது அரசியல் நூலில் சேர்க்கப்பட்டிருக்கும் "பொதுநல அரசு" என்ற சொற்றொடரானது இந்தப் பரந்த பொருளில் பயன்படுத்தப்படுவதில்லை. அது சமூக நலனைச் சில குறிப்பிட்ட வழிகளில் முன்னேற்ற முயலும் அரசைக் குறிப்பிடு கிறது. இந்த அரசு மக்களை, குறிப்பாகத் தொழிலாளர்களை, அவர்

களுடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பொதுவான இடையூறு களிலிருந்து காக்க முயல்கிறது. இந்த இடையூறுகளை நோய், எதிர் பாரா இடர் (Accident), வேலையின்மை (Unemployment), முதுமை, சாவு எனப் பகுக்கலாம். இவை நிகழும்போது அவற்றால் வருந்து பவர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு இன்னல் விளைகின்றது. இவற்றிலிருந்து அவர்களுக்குப் பாது காப்பு அளிப்பதற்காகப் பொதுநல ஈட்டுறுதித் (Social Insurance) திட்டம் வகுக்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி உடல் நல ஈட்டுறுதி (Health Insurance), எதிர்பாரா இடர் ஈட்டுறுதி (Accident Insurance), வேலையின்மை ஈட்டுறுதி (Unemployment Insurance), முதுமை உதவிச் சம்பளம் (Old age Pension), விதவை உதவிச் சம்பளம் (Widow's Pension), குழந்தைகள் படி (Children's Allowance) முதலியவை வழங்கப்படுகின்றன. இத்தகைய பொது நலப் பாதுகாப்பு (Social Security) அளித்தலே பொதுநல அரசின் முக்கிய வேலையாகும். பெவரிட்ஜ் பிரபு (Lord Beveridge) கூறுவது போலப் பொதுநலஅரசைச் சமூகப் பணியாற்றும் அரசெனக் கூறலாம். பொதுநல ஈட்டுறுதி அளிப்பதுதான் அதன் தனிப்பட்ட அலுவல். ஆயினும், இது தவிர அது மக்களுக்கு நிலையான வருவாயும், வாழ்க்கைக்குத் தேவையான பிற நலன்களும் கிடைப்பதற்கு வேறு வழிகளையும் வகுக்கலாம். உதாரணமாக, வேலை நிறைவுத் (Full employment) திட்டம். வருமான ஏற்றத் தாழ்வுகளைக் (Inequalities of income) குறைத் தல் முதலியவற்றை மேற்கொள்ளலாம்.

பொதுவாக நோய், வேலையின்மை, முதுமை ஆகிய இம் மூன்றிலும் பொதுநல அரசு குடிகளுக்குப் பண உதவி செய்கிறது. ஆயினும், இம்மூன்றும் தவிர வேறு காரணங்களினால் மிகக் குறைந்த வாழ்க்கைத் தரத்தைக்கூடப் பெற வழியில்லாதவர்களும் உண்டு. ஆகவே, அவர்களுக்கும் அரசாங்கம் உதவுகிறது. இதைத்தான் "தேசிய உதவி" (National assistance) என்கிறோம். இந்நான்கு விதமான பண உதவிகள் தவிர, வேறு சில நேரான பணிகளையும் அரசாங்கம் ஆற்றுகிறது. அவைகளில் முக்கிய மானது உடல் நலப்பணி. இதன்படி நாட்டிலுள்ள அனைவரும் இலவச மருத்துவ உதவி பெறலாம். மருத்துவர்களுக்கும், மருத்துவ மனைகளுக்கும் அரசாங்கம் பண உதவி செய்கிறது. குடிகள் ஒவ்வொருவரும் அவர்களிடமிருந்து தமது தேவைக்குத் தக்கபடி மருத்துவ உதவி பெறுகின்றனர்.

இறுதியாகப் பொதுநல அரசு குழந்தைகளின் நலத்தையும் கண்காணிக்கிறது. குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி அளிக்கப் படுவதால், அதிகக் குழந்தைகளையுடைய பெற்றோர் அவர்

களுடைய படிப்புச் செலவுகளுக்குப் பணம் கொடுக்கமுடியாது. ஆகவே, அரசாங்கம் தன்னுடைய கல்வி நிலையங்களில் அவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கிறது. மேலும், பொதுவாக அதிகக் குழந்தைகளிருக்கும் குடும்பங்கள் எளியவையாக இருப்பதால், குழந்தைகளின் எண்ணிக்கைக்குத் தக்கபடி அரசாங்கம் பெற்றோர்களுக்குப் பண உதவி செய்கிறது.

பொதுநல அரசானது தலையிடா அரசினின்றும், பொதுவுடைமை அரசினின்றும் வேறுபட்டதாகும். தலையிடா அரசில் தனிமனிதனுக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றைத் தவருகப் பயன்படுத்துவதினின்றும், தற்காலத் தொழிற்சமூகத்தின் இன்னல்களிலிருந்தும் அவன் காக்கப்படவில்லை. பொதுவுடைமை அரசில் தனிமனிதனின் தேவைகள் நிறைவேற்றப்பட்டபோதிலும், அவனுடைய அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுகின்றன. ஆனால், பொதுநல அரசு இவ்விரண்டு அரசுகளினுல் விளையும் தீமைகளைத் தவிர்க்கிறது. அது தனிமனிதனின் உரிமைகளைக் காப்பதுடன், தற்கால வாழ்க்கையின் தடுக்க முடியாத இடுக்கண்களிலிருந்தும் அவனைப் பாதுகாக்கிறது.

நியூஜீலந்து, ஆஸ்ட்ரேலியா, இன்னும் சில ஐரோப்பிய நாடுகளிலும் பொதுநல அரசு நிறுவப்பட்டிருந்தபோதிலும், அதற்குச் சிறந்த முன்மாதிரியாக இலங்குவது இங்கிலாந்து. அங்கு நிலவும் பொதுநல அரசானது மெதுவாகத் தோன்றிப் படிப்படியாக வளர்ந்தது. தொழிற் புரட்சியினுல் (Industrial Revolution) விளைந்த கேடுகளை விலக்க 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பல ஆலைச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அதனுல் ஆலைத் தொழிலாளரின் வாழ்க்கை நிலை உயர்ந்தது. வேலை செய்து கொண்டிருக்கும் வேளையில் தொழிலாளருக்கு எதிர்பாரா இடர் ஏற்பட்டால் அவர்களுக்குத் தக்க இழப்பீடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 1900ஆம் ஆண்டுக்குப் பிறகு முதுமை உதவிச் சம்பளம், உடல்நல ஈட்டுறுதி, வேலையின்மை ஈட்டுறுதி ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்தப் பல்வேறு ஈட்டுறுதி முறைகளெல்லாம் ஒன்றுக இணைக்கப்பட்டு ஒரு பொதுநலப் பாதுகாப்புத் திட்டமாக பெவரிட்ஜ் திட்டத்தில் (Beveridge Plan) வெளியிடப்பட்டது. இத்திட்டத்தில் இரு முக்கிய இயல்புகளைக் காணலாம். முதலாவது, இதனுல் தொழிலாளர்கள் மட்டுமல்ல, நாட்டு மக்கள் எல்லோரும் பயன் பெறுகின்றனர். இரண்டாவது, பிறப்பு முதல் இறப்பு வரை ஏற்படக்கூடிய எல்லா இன்னல்களிலும் இது பாதுகாப்பளிக்கிறது. 1946ஆம் ஆண்டு இத் திட்டத்தை ஏற்றுக் கொண்டதிலிருந்து பிரிட்டன் பொதுநல அரசாக மாறியதெனக் கூறலாம்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக இங்கிலாந்தில் பொதுநல அரசு நிலவியதிலிருந்து அதனுல் எழக் கூடிய சில கெடுதல்கள் இப்போது நன்கு புலனுகின்றன. முதலாவது, பொதுநலத் திட்டத்தினுல் அரசாங்கத்திற்கு மிக அதிகமான செலவு ஏற்படு கிறது. அதற்கென அது பளுவான வரிகளை விதிக்க வேண்டி யிருக்கிறது. சிலவேளை பணவீக்கத்தையும் (Inflation) பயன் படுத்துகிறது. இரண்டாவதாக, மக்கள் முயற்சி செய்து உழைத்து, அதனுல் தம்மைக் காப்பதற்குப் பதிலாக எல்லா வற்றிற்கும் அரசாங்கத்தையே சார்ந்து வாழும் இயல்பைப் பெறு கின்றனர். மேலும், இன்னல்களில் அரசாங்கம் உதவுமாதலின், அவர்கள் விண்செலவு செய்யத் தலைப்படுகின்றனர். மூன்றுவ தாகப் பொதுநல அரசில் அரசாங்கத்தின் அலுவல்கள் பல துறைகளில் பெருகுவதால், அதன் விளைவாகத் தனிமனிதனின் உரிமைகள் குறைக்கப்படலாம். பொதுநல அரசில் இக்குறைகள் காணப்படுவதால், அது தோல்வியடைந்துவிட்டது என்று எண்ணக்கூடாது. அதனுல் நாம் படிக்கவேண்டிய பாடம் ஒன்று இருக்கிறதென அறியவேண்டும். அஃதாவது, பொதுநல அரசை அமைக்கும்போது விரைவின்றிப் படிப்படியாக நிறுவவேண்டும். அப்போதுதான் அது ஆழ வேரூன்றி, அகல விரிந்து, இன் சுவைக் கனிகளைத் தரும்.

நமது இந்திய நாடும் பொது நல அரசைத் தன் குறிக் கோளாகக் கொண்டு அதை யடைய முயன்று வருகிறது. இந்திய அரசியல் அமைப்பின் 4ஆவது பகுதியில் கொடுக்கப் பட்டுள்ள நெறிசெய் நியதிகள் (Directive Principles) அக்குறிக் கோளை நன்கு காட்டுகின்றன. அவற்றின்படி, இந்திய அரசானது சமூக, பொருளாதார, அரசியல் நீதியின் அடிப்படையில் எழுந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க முயலவேண்டும். எல்லோருக்கும் பிழைப்புக்குப் போதுமான வழி வகுக்கவேண்டும். நாட்டின் செல்வத்தையும் வருமானத்தையும் நியாயமான முறையில் பங்கீடு செய்யவேண்டும். ஓரேவிதமான வேலைக்கு ஓரேவிதமான ஊதியம் அளிக்கவேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்களை அமைத்து, அவை தன்னாட்சி செலுத்த அவற்றிற்கு அதிகாரம் வழங்கவேண்டும். நோய், முதுமை, வேலையின்மை முதலிய இடுக்கண்களில் குடிகளுக்குப் பண உதவி செய்யவேண்டும். பெண்களுக்குப் பேறுகாலத் துயருதவி (Maternity relief) அளிக்கவேண்டும். தொழிலாளர்களின் நலனைக் காக்க ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களுக்கு வாழ்க்கைக்குப் போதிய கூலி (Living wage) கிடைக்க வழி வகுக்கவேண்டும். எல்லாக் குழந்தை களுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும். பிற

போக்கடைந்துள்ள சமூகங்களின் கல்வி, பொருளாதார நலன்களைக் காக்கவேண்டும். முக்கியமாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட குலத்தவர் ஆகியோரின் நலன்களைக் காத்து, அவர்களைச் சமூக அநீதியிலிருந்தும் சுரண்டலிலிருந்தும் பாதுகாக்கவேண்டும்.

மேலே கூறிய குறிக்கோள் நெறிகள், இந்திய அரசியல் அமைப்பானது தீட்டும் பொதுநல அரசின் இலட்சியத்தைக் காட்டுகின்றன. அவ்வுயர் குறிக்கோளையடைய இந்திய அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது. அதன் விளைவுதான் ஐந்தாண்டுத் திட்டங்கள். அவை நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி செய்கின்றன. மேலும், அவை பல சீர்திருத்த முறைகளின் மூலமாக ஏற்றத் தாழ்வுகளை அகற்றிச் சமூக நீதியை நிலை நாட்ட முயல்கின்றன. ஐந்தாண்டுத் திட்டங்களில் சமூகப் பணிகள் சிறப்பிடம் பெற்றுள்ளன. அவைகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் தாழ்த்தப்பட்ட குலத்தோருக்கும் தனி வாய்ப்புகளும், பாதுகாப்புகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும், நோய், வேலையின்மை, பேறுகாலம் முதலிய இன்னல்களில் குறைவான அளவில் பொதுநல ஈட்டுறுதியும் (Social Insurance) அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறுக இந்திய நாடு பொதுநல அரசை அமைக்க முயன்று வருகிறது.

இப்பெரு முயற்சியில் ஈடுபட்டுள்ள நம் நாடானது பொதுநல அரசினால் பிரிட்டனில் விளைந்த குறைபாடுகளைக் கவனித்துப் பார்த்து, அவற்றைத் தடுக்க முயற்சி செய்யவேண்டும். முக்கியமாகப் பண வீக்கம் ஏற்படாவண்ணம் விழிப்பாக இருக்க வேண்டும். ஏனெனில், பொருளாதாரத் துறையில் பிற்போக்கடைந்த நாடுகளில் பொதுநல அரசை விரைவில் நிறுவ முயன்றால், அதனால் ஏற்படும் பண நெருக்கடி பெருங்கேட்டை விளைவிக்கும். ஆகவே, பொருளாதார நிலைக்கும், பண நிலைக்கும் ஏற்பத் திட்டம்மிட்டுப் படிப்படியாக முன்னேறினால், நமது இந்தியத் திருநாடும் பொதுநல அரசெனும் எழில் பூக்கும் பொழிலாக மிளிரமுடியும்.

கலைச்சொல் அகராதி

(தமிழ்—ஆங்கிலம்)

அதிகாரக் குவிப்பு - Centralisation
அதிகாரப் பங்கீடு - Distribution of powers
அதிகாரப் பிரிவினை - Separation of powers
அமைச்சரவை - Cabinet
அமைதிக் காவலர் - Justice of peace
அரசாங்கம் - Government
அரசியலமைப்பு - Constitution
அரசியலமைப்புத் தடைகள் - Constitutional checks
அரசியலமைப்புத் திருத்தம் - Amendment of the constitution
அரசியல் உணர்வு - Political consciousness
அரசியல் ஒற்றுமை - Political unity
அரசியல் கடமை-Political obligation
அரசியல் கோட்பாடு - Political thought
அரசியல் தந்திரம், அரசியல் சூழ்ச்சித்திறம் - Diplomacy
அரசியல் பணிவு - Political obedience
அரசியற் புனை சபை-Constituent Assembly
அரசு - State
அவசரச் சட்டம் - Ordinance
அவை - Council
ஆட்சி குலைந்த நிலை - Anarchy
ஆட்சித்துறை - Administration
ஆட்சியுரிமை முறை - Mandate system
ஆயத் தீர்வை - Excise duties
ஆளுரிமைக் காப்புக் கட்டளை - Writ of Habeas Corpus
இடைக்காலம் - The Middle Ages
இடைக்கால மன்னர் - Inter Rex
இணங்காதார் - The Dissenters
இணை குடும்பம் - Joint Family
இணையதிகாரக் கொள்கை-Theory of Parallelism
இயற்கை நிலை - State of Nature
இருண்ட காலம்-The Dark Ages
இறைமை - Sovereignty
இறையிலி நிலம் - Tax free land
இறைவழி உரிமை - Divine Right
ஈட்டுறுதி (அல்லது காப்புறுதி) - Insurance
உடல்நல ஈட்டுறுதி-Health Insurance
உதவி மானியங்கள் - Grants-in-aid
உயர்குடியாட்சி - Aristocracy
உயர்நீதி மன்றம் - High Court
உலகப் பொதுநோக்கு - Cosmopolitanism
உலகியல் சார்ந்த - Secular
உள்ளது சிறத்தல் அல்லது உருமலர்ச்சி - Evolution
எஞ்சிய அதிகாரங்கள்- Residuary powers
எதிர்பாரா இடர் ஈட்டுறுதி - Accident Insurance
ஐக்கிய நாடுகளின் சங்கம் - The United Nations Organisation
ஐரோப்பிய ஐக்கியம் - Concert of Europe
ஒருமுக அரசு - Unitary state
கடமை மாற்றுப் பணம் - Scutage
கடவுச் சீட்டு - Passport
கடுந்தேர்வு முறை - Trial by Ordeal
கடும் விசாரணை மன்றம் - The Inquisition
கணிப்பாளர் - Assessor
கலப்பு அரசியலமைப்பு - Mixed constitution
காவல் துறையினர் - Police
கீழரசுகள் - Feudatory states

கீழாள் - Vassal
குடிக்கணக்கு - Census
குடிப்பெயர்ச்சி - Migration
குடிமை - Citizenship
குடியரசு - Republic
குடியேற்ற உரிமை நாடு - Dominion
குடியேற்ற உரிமை நாட்டுநிலை - Dominion Status
குடியேற்ற நாடு - Colony
குத்தகைக் குடி - Tenant
குலம் - Tribe
குற்றவியல் - Criminal
குற்றவியல் சட்டம் - Criminal law
கூட்டமர்வு - Joint Session
கூட்டரசுப் பட்டியல் - Federal or Union list
கூட்டாட்சி - Federation
கூட்டு அமைச்சரவை - Coalition cabinet
கூட்டுக் கழக அரசு-Corporative state
கூட்டுக் கழகப் பாராளுமன்றம் - Corporative Parliament
கூட்டுக் குடும்பம் - Clan
கூட்டுடைமைப் பண்ணை - Collective farm
கூட்டுப் பாதுகாப்பு - Collective security
கொடுங்கோலன் - Tyrant
கொடுங்கோன்மை - Tyranny
கோட்டம் - Canton
கோமான் - Earl
சட்ட ஆக்கம் - Legislation
சட்ட இயல் - Jurisprudence
சட்டம் - Law
சட்ட மன்றம் - Legislature
சமதர்மக் கொள்கை - Socialism
சமயச் சார்புள்ள அரசு - Theocratic State
சமயப் பிளவு - Schism
சமயப்புரட்சி இயக்கம்-Reformation
சமுதாய ஒப்பந்தம் - Social contract
சர்வதேச சங்கம் - League of Nations
சர்வதேசத் தொழில் நிறுவனம் - International Labour Organisation
சர்வாதிகார அரசு - Totalitarian State
சாசன இயக்கம் - The Chartist Movement
சான்று நடுவர்கள் அல்லது தீர்ப்புச் சான்றாளர்கள் - Jurymen
சிறப்புரிமைகள் - Privileges
சிறுகுழுவாட்சி (செல்வரின் சிறு குழுவாட்சி) - Oligarchy
சீரியல் - Civil
சீரியல் சட்டம் - Civil Law
சுங்கத் தீர்வை - Customs duties
சுழற்சி மாற்றங்கள் - Cyclical changes
சுற்றுப்பயண நீதிபதிகள் - Itinerant judges
செயலகம் - Secretariat
செயல் துறை - Executive
செல்வாக்குச் சமநிலை - Balance of power
தடையில்லா வாணிகம் - Free Trade
தணிக்கை நிறுவனம் - Censorate
தந்தைவழி முறைக் குடும்பம் - Patriarchal family
தர்மம் - Dharma
தலைமை நீதிமன்றம் - Supreme Court
தலையிடா அரசு - Laissez-faire State
தலையிடாக் கொள்கை - Laissez-faire Policy
தன்னரசு அல்லது தனிவல்லாட்சி - Autocracy
தன்னுரிமை - Autonomy
தனிச் சிறப்புரிமை - Prerogative
தனிமனிதனின் வழிபாடு - Personality Cult
தனியார் துறை - Private Sector
திருச்சபை - Catholic Church
திருச்சபை விதிகள்-Canon Laws
திருத்தம் - Amendment
தீர்ப்புச் சான்றாளர் - Juror
தீர்ப்புச் சான்றாளர் குழு - Jury
தீவிரவாதம் - Radicalism

துவக்க உரிமை - Initiative
துறை - Department
தூதாண்மைத் தொடர்புகள் - Diplomatic relations
தூய உறவு - Holy Alliance
தேசிய அரசு - Nation State
தேசிய இனம் அல்லது நாட்டினம் - Nationality
தேசியஉதவி-National assistance
தேசிய சமுதாயம - Nation
தேசிய நிலை - Nationhood
தேசியம், தேசியவாதம், தேசியக் கொள்கை - Nationalism
தேர்தல் - Election
தொழில்புரட்சி - Industrial Revolution
தொழில் முறைப் பகுப்பு-Division of Labour
தொழிலாளரின் வல்லாட்சி - Dictatorship of the Proletariat
தொழிற் குழு - Syndicate
நகர அரசு - City State
நகராண்மை அரசாங்கம் - Municipal Government
நடு அரசாங்கம்-Central Government
நடுவர் தீர்ப்பு அல்லது நடுத் தீர்ப்பு - Arbitration
நாட்டரசு - Country State
நாட்டினம் அல்லது தேசிய இனம் - Nationality
நாட்டின் தலைவர் - President
நாட்டுக் கூட்டம் அல்லது நாடுகளின் கூட்டமைப்பு - Confederation, Confederacy
நாட்டுப்படை - National Militia
நாட்டெல்லைக்குட்பட்ட கடற் பகுதிகள் - Territorial waters
நாடு - Country
நால்வர் உறவு - Quadruple Alliance
நில உடைமைக் கணிப்பேடு - Domesday Book
நில உரிமை - Land tenure
நில ஊழியர் - Serf
நிலப் பிரபுக்கள் - Barons
நிலமானிய முறை - Feudalism
நிலவரத் தூதர் - Resident
நிலையான குழு - Standing Committee
நிலையான படை - Standing army
நீதி - Justice
நீதிப் புனராய்வு-Judicial Review
நீதிமன்றம் - Law court
நெகிழா அரசியலமைப்பு - Rigid Constitution
நெகிழும் அரசியல் அமைப்பு - Flexible Constitution
நெறிசெய் நியதிகள் - Directive Principles
நேர்முகத் தேர்தல் - Direct election
நேர்முக மக்களாட்சி - Direct Democracy
நேர்முக வரி - Direct Tax
படிமரபு - Hierarchy
படைக்கலக் குறைப்பு அல்லது படைக்குறைப்பு - Disarmament
படையாட்சிச் சட்டம் - Martial Law
படையின் வல்லாட்சி - Military Dictatorship
பண்ணையாட்கள் - Villeins
பணவீக்கம் - Inflation
பணித்துறையாட்சி, பணித்துறைக் குழு - Bureaucracy
பதிப்புரிமை - Copyright
பருப்பொருட் கொள்கை - Materialism
பருப்பொருள்வாதி - Materialist
பழமை வாதிகள் - Conservatives
பழிதீர்க்கும் பகை - Blood Feud
பன்னாட்டு உடன்படிக்கை - International Treaty
பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சி - Internationalism
பன்னாட்டுச் சட்டம் அல்லது சர்வதேசச் சட்டம் - International Law
பற்றுறுதிமொழி - Oath of fealty
பாதுகாப்பு அவை - Security Council
பாளையம் - Cantonment
பிரதிநிதித்துவ மன்றம் - Representative Assembly

பிரபுக்கள் சபை-House of Lords
பிற்போக்கு வாதிகள் - Reactionaries
பேரரசன் - Emperor
பேரரசு - Empire
பேரவை அல்லது மன்றம் - Assembly
பேறுகாலத் துயருதவி-Maternity Relief
பொதிந்துள்ள அதிகாரம் - Implied Powers
பொது அதிகாரம் - Concurrent Jurisdiction
பொதுச் செயலாளர் - Secretary-General
பொதுத்துறை அலுவலமைப்பு - Civil Service
பொதுநல அரசு - Welfare State
பொதுநல ஈட்டுறுதி - Social Insurance
பொதுநலக் கூட்டு - Commonwealth
பொதுநலப் பாதுகாப்பு - Social Security
பொதுநல விருப்பம் - General Will
பொதுநீதி - Common Law
பொதுப்பட்டியல் - Concurrent List
பொதுப்பணி - Public Works
பொதுப் பேரவை - General Assembly
பொதுமக்கள் கருத்து - Public Opinion
பொதுமக்களின் விருப்பாற்றல் - Common Will
பொதுவசதிகள் - Public Utilities
பொருளகத் தொழில் - Banking
பொருளகம் - Bank
பொருளாதாரத் தடைகள் - Economic Sanctions
பொறுப்பாண்மை அவை - Trusteeship Council
பொறுப்புள்ள அரசாங்கம் - Responsible Government
மக்கள் சபை - House of Commons
மக்கள் தீர்ப்பு - Referendum
மக்கள் வாக்கெடுப்பு - Plebiscite
மக்களாட்சி அல்லது ஜனநாயகம்- Democracy
மக்களாட்சியின் அதிகாரக் குவிப்பு - Democratic Centralism
மக்களின் ஜனநாயகம் - People's Democracy
மக்களின் ஜனநாயக வல்லாட்சி - People's Democratic Dictatorship
மடத் தலைவர் - Abbot
மடாலய முறை-Monastic System
மரபுமுறைக் கொள்கை - Legitimism
மரபுரிமை - Inheritance
மரபு வழக்கான சட்டம் - Traditional Law
மறுப்பாணை - Veto
மறுப்பு சமயம் அல்லது எதிர்ப்புச் சமயம் - Protestantism
மறுப்புச் சமயத்தார் - Protestants
மறைவான வாக்கெடுப்பு - Secret Ballot
மன்றத் தலைவர் - Speaker
மன்றம் அல்லது பேரவை - Assembly
மாண்புறு புரட்சி - The Glorious Revolution
மாநிலப் பட்டியல் - Provincial or State List
மாநிலம் - Province or State in a federation
முடிபுரிமையுள்ள அதிகாரங்கள் - Discretionary Powers
முடியரசு - Monarchy
முதல்வராட்சி - Principate
முதற் குடிமகன் - First Citizen
முதுமை உதவிச் சம்பளம் - Old Age Pension
முற்போக்குக் கொள்கை - Liberalism
முற்போக்கு மக்களாட்சி - Liberal Democracy
முற்போக்குவாதிகள் - Liberals
மூவாட்சி - Triumvirate

மூன்றும் வகுப்பினர் - Third Estate
மூன்று வகுப்பினர்-Three Estates
மேல் வழக்கு நீதிமன்றம் - Court of appeal
மேலரசுரிமை - Suzerainty
மேலான சட்டம் - Supreme Law
மேற்றிராணியார் - Bishop
வகுப்புகள் - Estates
வகுப்புகளிடையே போராட்டம் - Struggle between the Orders
வகுப்புப் போர் - Class War
வட்டார அரசாங்கம் - Local Government
வரம்பில்லா அரசு - Absolute State
வரம்பில்லா முடியரசு - Absolute Monarchy
வரம்பின்மை - Absolutism
வரிவருமானம் - Revenue
வருமான ஏற்றத்தாழ்வு - Inequality of income
வல்லாட்சி - Despotism, Dictatorship
வல்லாட்சியாளர் - Despot, Dictator
வழக்கம் - Custom
வழக்காறு - Convention
வாக்காளர்கள் - Voters, the Electorate
வாணிக மந்தம் - Depression
வாழ்க்கைக்குப் போதிய கூலி - Living Wage
விதவை உதவிச் சம்பளம் - Widow's Pension
விற்பனை முற்றுரிமை-Monopoly
வீரன் - Knight
வேலை நிறைவு-Full employment
வேலையின்மை ஈட்டுறுதி - Unemployment Insurance
ஜனநாயகம் அல்லது மக்களாட்சி-Democracy

கலைச்சொல் அகராதி

(ஆங்கிலம்—தமிழ்)

Abbot - மடத்தலைவர்
Absolute Monarchy- வரம்பில்லா முடியரசு
Absolute State - வரம்பில்லா அரசு
Absolutism - வரம்பின்மை
Accident Insurance - எதிர்பாரா இடர் ஈட்டுறுதி
Administration - ஆட்சித்துறை
Amendment - திருத்தம்
Amendment of the Constitution- அரசியல் அமைப்புத் திருத்தம்
Anarchy - ஆட்சி குலைந்த நிலை
Arbitration - நடுவர் தீர்ப்பு அல்லது நடுத் தீர்ப்பு
Aristocracy - உயர்குடியாட்சி
Assembly - பேரவை, மன்றம்
Assessor - கணிப்பாளர்
Autocracy - தன்னரசு, தனி வல்லாட்சி
Autonomy - தன்னுட்சி
Balance of Power - செல்வாக்குச் சமநிலை
Bank - பொருளகம்
Banking - பொருளகத் தொழில்
Baron - நிலப் பிரபு
Bishop - மேற்றிராணியார்
Blood Feud - பழிதீர்க்கும் பகை
Bureaucracy - பணித்துறை யாட்சி, பணித்துறைக் குழு
Cabinet - அமைச்சரவை
Canon Laws-திருச்சபை விதிகள்
Canton - கோட்டம்
Cantonment - பாளையம்
Catholic Church - திருச்சபை
Census - குடிக்கணக்கு
Censorate - தணிக்கை நிறுவனம்
Central Government - நடு அரசாங்கம்
Centralisation-அதிகாரக் குவிப்பு
Citizenship - குடிமை
City-State - நகர அரசு
Civil - சீரியல்
Civil Law - சீரியல் சட்டம்
Civil Service - பொதுத்துறை அலுவல் அமைப்பு
Clan - கூட்டுக் குடும்பம்
Class War - வகுப்புப் போர்
Coalition Cabinet - கூட்டு அமைச்சரவை
Collective farm - கூட்டுடைமைப் பண்ணை
Collective Security - கூட்டுப் பாதுகாப்பு
Colony - குடியேற்ற நாடு
Common Law - பொது நீதி
Commonwealth - பொதுநலக் கூட்டு
Common will - பொதுமக்களின் விருப்பாற்றல்
Concert of Europe - ஐரோப்பிய ஐக்கியம்
Concurrent Jurisdiction - பொது அதிகாரம்
Concurrent List - பொதுப் பட்டியல்
Confederation - நாட்டுக் கூட்டம் அல்லது நாடுகளின் கூட்டமைப்பு
Conservatives - பழமை வாதிகள்
Constituent Assembly - அரசியற் புனைசபை
Constitution - அரசியலமைப்பு
Convention - வழக்காறு
Copyright - பதிப்புரிமை
Corporative Parliament-கூட்டுக் கழகப் பாராளுமன்றம்
Corporative State - கூட்டுக் கழக அரசு
Cosmopolitanism-உலகப் பொது நோக்கு
Council - அவை
Country - நாடு
Country State - நாட்டரசு
Court of Appeal - மேல் வழக்கு நீதிமன்றம்

Criminal - குற்றவியல்
Criminal Law - குற்றவியல் சட்டம்
Custom - வழக்கம்
Customs duties - சுங்கத் தீர்வை
Cyclical Changes - சுழற்சி மாற்றங்கள்
Dark Ages - இருண்ட காலம்
Democracy - மக்களாட்சி, ஜனநாயகம்
Democratic Centralism - மக்களாட்சியின் அதிகாரக் குவிப்பு
Department - துறை
Depression - வாணிக மந்தம்
Despot (Dictator) - வல்லாட்சியாளர்
Despotism (Dictatorship) - வல்லாட்சி
Dharma - தர்மம்
Dictatorship of the Proletariat - தொழிலாளரின் வல்லாட்சி
Diplomacy - அரசியல் சூழ்ச்சித் திறம், அரசியல் தந்திரம்
Diplomatic relations - தூதாண்மைத் தொடர்புகள்
Direct democracy - நேர்முக மக்களாட்சி
Direct Election - நேர்முகத் தேர்தல்
Directive Principles - நெறி செய் நியதிகள்
Direct Tax - நேர்முக வரி
Disarmament - படைக்கலக் குறைப்பு, படைக் குறைப்பு
Discretionary powers முடிபுரிமையுள்ள அதிகாரங்கள்
Dissenters - இணங்காதார்
Distribution of Powers - அதிகாரப் பங்கீடு
Divine Right - இறைவழி உரிமை
Division of Labour - தொழில் முறைப் பகுப்பு
Domesday Book-நில உடைமைக் கணிப்பேடு
Dominion - குடியேற்ற உரிமை நாடு
Dominion Status - குடியேற்ற உரிமை நாட்டு நிலை
Earl - கோமான்
Economic Sanctions - பொருளாதாரத் தடைகள்
Election - தேர்தல்
Electorate (Voters) - வாக்காளர்
Emperor - பேரரசர்
Empire - பேரரசு
Estates - வகுப்புகள்
Evolution - உள்ளது சிறத்தல், உருமலர்ச்சி
Excise duties - ஆயத்தீர்வை
Executive - செயல் துறை
Federal (Union) List - கூட்டரசுப் பட்டியல்
Federation - கூட்டாட்சி
Feudalism - நிலமானிய முறை
Feudatory States - கீழரசுகள்
First Citizen - முதற் குடிமகன்
Flexible Constitution - நெகிழும் அரசியல் அமைப்பு
Free Trade - தடையில்லா வாணிகம்
Full employment - வேலை நிறைவு
General Assembly - பொதுப் பேரவை
General Will - பொதுநல விருப்பம்
Glorious Revolution - மாண்புறு புரட்சி
Government - அரசாங்கம்
Grants-in-aid - உதவி மானியங்கள்
Health Insurance - உடல்நல ஈட்டுறுதி
Hierarchy - படி மரபு
High court - உயர்நீதி மன்றம்
Holy Alliance - தூய உறவு
House of Commons-மக்கள் சபை
House of Lords - பிரபுக்கள் சபை
Implied Powers - பொதிந்துள்ள அதிகாரங்கள்
Industrial Revolution - தொழில் புரட்சி
Inequality of income - வருமான ஏற்றத்தாழ்வு
Inflation - பணவீக்கம்
Inheritance - மரபுரிமை
Initiative - துவக்க உரிமை

Inquisition - கடும் விசாரணை மன்றம்
Insurance - ஈட்டுறுதி (அல்லது காப்புறுதி)
Internationalism - பன்னாட்டுக் கொள்கை, பன்னாட்டு ஒற்றுமை யுணர்ச்சி
International Labour Organisation - சர்வதேச தொழில் நிறுவனம்
International law - பன்னாட்டுச் சட்டம், சர்வதேசச் சட்டம்
International Treaty - பன்னாட்டு (அல்லது சர்வதேச) உடன்படிக்கை
Inter Rex - இடைக்கால மன்னன்
Itinerant Judges - சுற்றுப்பயண நீதிபதிகள்
Joint family - இணைகுடும்பம்
Joint session - கூட்டமர்வு
Judicial Review-நீதிப் புனராய்வு
Jurisprudence - சட்டவியல்
Juror - தீர்ப்புச் சான்றாளர்
Jury - தீர்ப்புச் சான்றாளர் குழு
Jurymen-தீர்ப்புச் சான்றாளர்கள், சான்று நடுவர்கள்
Justice - நீதி
Justice of Peace - அமைதிக் காவலர்
Knight - வீரன்
Laissez faire policy - தலையிடாக் கொள்கை
Laissez faire State - தலையிடா அரசு
Land Tenure - நில உரிமை
Law - சட்டம்
Law court - நீதிமன்றம்
League of Nations - சர்வதேச சங்கம்
Legislation - சட்ட ஆக்கம், சட்டமியற்றல்
Legislature - சட்ட மன்றம்
Legitimism - மரபுமுறைக் கொள்கை
Liberal Democracy-முற்போக்கு மக்களாட்சி
Liberalism - முற்போக்குக் கொள்கை
Liberals - முற்போக்குவாதிகள்
Living wage - வாழ்க்கைக்குப் போதிய கூலி
Local Government - வட்டார அரசாங்கம்
Mandate system - ஆட்சியுரிமை முறை
Martial law-படையாட்சிச் சட்டம்
Materialism - பருப்பொருட் கொள்கை
Materialist - பருப்பொருள் வாதி
Maternity Relief - பேறுகாலத் துயருதவி
Middle Ages - இடைக்காலம்
Migration - குடிப்பெயர்ச்சி
Military Dictatorship - படையின் வல்லாட்சி
Mixed Constitution - கலப்பு அரசியலமைப்பு
Monarchy - முடியரசு
Monastic system - மடாலய முறை
Monopoly - விற்பனை முற்றுரிமை
Municipal Government - நகராண்மை அரசாங்கம்
Nation - தேசீய சமுதாயம்
National Assistanee - தேசீய உதவி
Nationalism - தேசீயம், தேசீயக் கொள்கை, தேசீய உணர்ச்சி
Nationality - தேசீய இனம், நாட்டினம்
National Militia - நாட்டுப் படை
Nationhood - தேசீய நிலை
Nation State - தேசீய அரசு
Oath of fealty - பற்றுறுதி மொழி
Old age pension - முதுமை உதவிச் சம்பளம்
Oligarchy - (செல்வரின்) சிறு குழுவாட்சி
Ordinance - அவசரச் சட்டம்
Passport - கடவுச் சீட்டு
Patriarchal Family - தந்தைவழி முறைக் குடும்பம்
People's Democracy - மக்களின் ஜனநாயகம்
People's Democratic Dictatorship - மக்களின் ஜனநாயக வல்லாட்சி

Personality Cult - தனிமனிதனின் வழிபாடு
Plebiscite - மக்கள் வாக்கெடுப்பு
Police - காவல் துறையினர்
Political checks - அரசியலமைப்புத் தடைகள்
Political consciousness - அரசியல் உணர்வு
Political obedience - அரசியல் பணிவு
Political obligation - அரசியல் கடமை
Political thought - அரசியல் கோட்பாடு
Political unity - அரசியல் ஒற்றுமை
Prerogative - தனிச் சிறப்புரிமை
President - நாட்டின் தலைவர்
Principate - முதல்வராட்சி
Private Sector - தனியார் துறை
Privilege - சிறப்புரிமை
Protestantism - மறுப்பு சமயம், எதிர்ப்பு சமயம்
Protestants - மறுப்புச் சமயத்தார்
Province (or State) - மாநிலம்
Provincial (or State) List - மாநிலப் பட்டியல்
Public Opinion - பொதுமக்கள் கருத்து
Public Utilities - பொது வசதிகள்
Public Works - பொதுப்பணி
Quadruple Alliance - நால்வர் உறவு
Radicalism - தீவிர வாதம்
Reactionaries - பிற்போக்குவாதிகள்
Referendum - மக்கள் தீர்ப்பு
Reformation - சமயப் புரட்சி இயக்கம்
Representative Assembly - பிரதிநிதித்துவ மன்றம்
Republic - குடியரசு
Resident - நிலவரத் தூதர்
Residuary Powers - எஞ்சிய அதிகாரங்கள்
Responsible Government - பொறுப்புள்ள அரசாங்கம்
Revenue - வரி வருமானம்
Rigid Constitution - நெகிழா அரசியலமைப்பு
Schism - சமயப் பிளவு
Scutage - கடமை மாற்றுப் பணம்
Secretariat - செயலகம்
Secretary General - பொதுச் செயலாளர்
Secret Ballot - மறைவான வாக்கெடுப்பு
Secular - உலகியல் சார்ந்த
Security Council - பாதுகாப்பு அவை
Separation of Powers - அதிகாரப் பிரிவினை
Serf - நில ஊழியர்
Social Contract - சமுதாய ஒப்பந்தம்
Social Insurance - பொதுநல ஈட்டுறுதி
Socialism - சமதர்மக் கொள்கை
Social Security - பொதுநலப் பாதுகாப்பு
Sovereignty - இறைமை
Speaker - மன்றத் தலைவர்
Standing army - நிலையான படை
Standing Committee - நிலையான குழு
State - அரசு
State (or Provincial) List - மாநிலப் பட்டியல்
State of Nature - இயற்கை நிலை
Struggle between the Orders - வகுப்புகளிடையே போராட்டம்
Supreme Court - தலைமை நீதி மன்றம்
Supreme Law - மேலான சட்டம்
Suzerainty - மேலரசுரிமை
Syndicate - தொழிற் குழு
Tax free land - இறையிலி நிலம்
Tenant - குத்தகைக் குடி
Territorial Waters - நாட்டெல்லைக் குட்பட்ட கடற்பகுதிகள்
Theocratic State - சமயச் சார்புள்ள அரசு
Theory of Parallelism - இணையதிகாரக் கொள்கை
Three Estates - மூன்று வகுப்பினர்

Totalitarian State - சர்வாதிகார அரசு
Traditional law - மரபு வழக்கான சட்டம்
Trial by Ordeal - கடுந் தேர்வு முறை
Tribe - குலம்
Triumvirate - மூவாட்சி
Trusteeship Council - பொறுப்பாண்மை அவை
Tyranny - கொடுங்கோன்மை
Tyrant - கொடுங்கோலன்
Unemployment Insurance-வேலையின்மை ஈட்டுறுதி
Union List - கூட்டரசுப் பட்டியல்
Unitary State - ஒருமுக அரசு
United Nations Organisation - ஐக்கிய நாடுகளின் சங்கம்
Vassal - கீழாள்
Veto - மறுப்பாணை
Villeins - பண்ணையாட்கள்
Welfare State - பொதுநல அரசு
Widow's Pension - விதவை உதவிச் சம்பளம்
Writ of Habeas Corpus - ஆளுரிமைக் காப்புக் கட்டளை

பொருளகரவரிசை

(எண்: பக்க எண்)

அக்கேயக் கூட்டமைப்பு 300, 301
இடைக்கால நகரங்கள்
தோற்றம் 158
நிறுவனங்கள் 159 161
ஐரோப்பிய நாடுகளின் நகரங்கள் 161-171
பண்டைய நகரங்களுடன் ஒப்புமை 171-175
இத்தாலி,
ஒற்றுமை இயக்கம் 209-211, 262
இந்திய ஐரோப்பியக் குலம் 28-33
ஈட்டோலியக் கூட்டமைப்பு 299-300
உலக அரசாங்கம் 320, 350
உலக சமூக உணர்ச்சி 351
உலக அரசாங்கம் வளரும் வழிகள் 352
உலக அரசாங்கமும் ஐ. நா. ச. வும் 352
உலகப் பொது நோக்கு 324-327
எகிப்துப் பேரரசு 14-19
எஸ்டேட்ஸ் ஜெனரல் 177, 179, 182, 199, 222, 231, 242
ஏதன்ஸ்,
அரசியலமைப்பு 50-55
ஐக்கிய நாடுகளின் சங்கம்,
தோற்றம் 341, 42
நோக்கங்கள் 342, 343
நிறுவன அமைப்பு 343-345
அருஞ் செயல்கள் 346-349
குறைகள் 349, 350
ஐரோப்பிய ஐக்கியம் 333, 334
ஃபாஹியன் 110, 111
ஃபிராங்குகள் 127, 130, 131
ஃபிராங்கோ 286-288
கரிபால்டி 209, 210
கரோலிஞ்சிய அரசு 132-135
கலூர் 209, 210, 211
காத்துக்கள் 126-128
விஸிகாத்துக்கள் 127, 129
கிரீஸ் நகர அரசுகள் 33-36
முடியரசு 37-41
உயர்குடியாட்சி 41-43
சிறுகுழுவாட்சி 43-45
கொடுங்கோன்மை 45-47
மக்களாட்சி 47, 48
சுழற்சி மாற்றங்கள் 48, 49
குப்த ஆட்சி 109-114
கூட்டாட்சிகள்,
சுவிட்ஸர்லாந்து 303 305
அமெரிக்க ஐக்கிய நாடுகள் 305-310
கனடா 310-312
ஆஸ்ட்ரேலியா 312-314
இந்தியா 314-317
இலத்தீன் அமெரிக்கக் கூட்டாட்சிகள் 317-319
கூட்டாட்சி முறை,
சிக்கல்கள் 293-296
நற்பண்புகள் 296, 297
குறைகள் 297
கூட்டுக்கழக அரசு 280
கூட்டுடைமைப் பண்ணைகள் 273
கெமால் முஸ்டாபா 288-290
கௌடில்யர் 100, 102, 103, 107, 108
சமயப் புரட்சி இயக்கம் 195, 196
வல்லாட்சி 221, 222
பிரெஞ்சுப் புரட்சி 229
உலகப் பொது நோக்கு 326
சர்வதேச சங்கம் 281, 320, 335, 336
நோக்கம் 336
நிறுவன அமைப்பு 337, 338
அருஞ்செயல்கள் 338, 339
தோல்வி 339, 340
தோல்வியின் காரணங்கள் 340, 341
சர்வதேச சட்டம் 327, 330, 331, 335
சர்வாதிகாரக் கொள்கை 265-267
சாசன இயக்கம் 254, 255
சார்லமேன் (மகா சார்ல்ஸ்) 132, 144

சீனப் பேரரசு 23-26
சுழற்சி மாற்றங்கள்,
கிரீஸ் 48, 49
சேரர் 115
சோழர்,
வரலாறு 115
ஆட்சிமுறை 117-124
தந்தை வழிமுறைக் குடும்பம் 3-4, 6-13
தர்மம் 99-101
தலையிடா அரசு 356
தலையிடாக் கொள்கை 264, 356
தனிமனிதனின் வழிபாடு 274
தாந்தே 75, 325
திருச்சபை,
இடைக்காலத்தில்
அதிகாரம் 143-145
திருச்சபையும் வரம்பில்லா முடியரசும் 225
தூய உறவு 333
தேசிய அரசு,
எழுச்சி 193-196
ஐரோப்பிய தேசிய அரசுகள் 196-214
தேசிய இனம் 191
தேசிய உணர்ச்சி,
காரணங்கள் 191-193
உலகப் பொது நோக்கு 326
தேசியச் சமுதாயம் 191
தொழிற் புரட்சி 228
நகர அரசுகள்,
கிரீஸ் 33-36
நலிவு 71-75
நாட்டுக் கூட்டம் 297, 298
நார்மானிய ஆட்சி 136-143
நால்வர் உறவு 333, 334
நாஜிக் கோட்பாடு 284, 285
நாஜிப் புரட்சி 281-283
நிலமானிய முறை,
தோற்றம் 148, 149
தன்மை 149-153
நற்பயன்கள் 153, 154
தீமைகள் 154, 155
சிதைவு 155-157
நீதிப் புனராய்வு
அமெரிக்கா 308
இந்தியா 316
ஆஸ்ட்ரேலியா 313
நூருண்டுப் போர் 198, 200
படைக்கலக் குறைப்பு 335, 336, 340, 349
பண்டைய இந்தியா,
அரசின் தோற்றம் 92
அரசின் இயல்புகள் 93-97
அரச பதவி 97-99
பல்லவர்,
வரலாறு 116
ஆட்சிமுறை 116, 117
பன்னாட்டு ஒற்றுமையுணர்ச்சி 320
1815 வரை 327-332
19 ஆம் நூற்றாண்டில் 332-335
பன்னாட்டு மாநாடுகள்,
1815 வரை 331, 332
19ஆம் நூற்றாண்டில் 333-34, 335
பாண்டியர், 115, 116
பாராளுமன்றம், இங்கிலாந்து,
இருசபைகளின் பிரிவு 183
வளர்ச்சி 181-184
வளர்ச்சியின் காரணங்கள் 184 186
சீர்திருத்தம் 247-250, 254-256
பாலிஸ்க் கோட்பாடு 279
பாலிஸ்ப் புரட்சி 276-278
பிரதிநிதித்துவ மன்றங்கள், இடைக்காலம்.
ஜெர்மனி 176, 177
பிரான்ஸ் 177-179
ஸ்பெயின 179, 180
ஸ்காண்டிநேவியா 180, 181
இங்கிலாந்து 181-186
தற்கால மன்றங்களுடன் ஒப்புமை 187, 188
பிஸ்மார்க் 210, 211, 212, 213, 261
பொதுநல அரசு 357
அலுவல்கள் 369-370
இங்கிலாந்து 370-371
இந்தியா 371-372
பொதுவுடைமைக் கொள்கை 270, 271, 274
போப்பாட்சி,
இடைக்காலம் 145, 190, 325, 326
உலகப் பொது நோக்கு 325, 326
'போலிஸ்' (Polis) 34

மக்களாட்சியின் அதிகாரக் குவிப்பு 356
ரஷ்யா 357-63
சீனு 365-68
மக்களின் ஜனநாயகம், அரசியல் அமைப்பு 363-365
பொதுவுடைமைக் கட்சி 365, 366
மக்கியவெல்லி 220, 221, 326
மடாலயமுறை 145. 146
மண்டலக் கொள்கை 321-323
மரபுமுறைக் கொள்கை
மறுமலர்ச்சி 193, 218, 220, 326
மஜீனி 209, 210
மாண்புறு புரட்சி 226, 228
மாதிரிப் பாராளுமன்றம் 182, 197
மான்டெஸ்க்வே 236, 237
முற்போக்கு இயக்கம் 251
மெகஸ்தனிஸ் 102, 107, 109, 115
மெசபொடேமியா 19-23
மெரோவிஞ்சிய அரசு 131, 132
மேலரசுரிமைக் கொள்கை 323
மௌரிய ஆட்சி 101-109
ரஷ்யா,
அரசியலமைப்பு (1936) 273
மத உரிமை 274-75
ரூஸோ 92, 196, 227, 228, 235 237-40, 264
ரோமானிய அமைதி 323-324
ரோமானியச் சட்டம் 88, 90
ரோமானியப் பேரரசு
வளர்ச்சி 75, 76
மாநிலங்களின் ஆட்சி 77-79
முதல்வராட்சி 79-83
அரசாங்கம் 83-85
வீழ்ச்சி 85
ரோம்,
முடியரசு 60-63
வகுப்புகளிடையே போராட்டம் 63-65
குடியரசு 65 71
லாத்தரன் உடன்படிக்கை (1929) 280
லூத்தர், மார்ட்டின் 195, 196
வால்ட்டேர் 236
வான்டல்கள் 127, 129, 130
வியன்னு மாநாடு 333
ஸ்பார்ட்டா,
அரசியலமைப்பு 56-59
ஜெர்மனி,
ஒற்றுமை இயக்கம் 211-213
ஜோன் ஆப் ஆர்க் 200

பிழை திருத்தம்

பிழை	பக்கம்	வரி	திருத்தம்
1. இருந்தன	11	10	இருந்தது
2. குடியரசு	36	37	முடியரசு
3. ஸைஸ்பாஸ்	40	18	லெஸ்பாஸ்
4. Sepation ofar	95	35	Separation of
5. மெரோலிஞ்சிய	125	3	மெரோவிஞ்சிய
6. Seutage	185	2	Scutage
7. நாஜிக் ஜெர்மனி	285	29	நாஜி ஜெர்மனி
8. நாஜிக் அரசு	286 286	15 21	நாஜி அரசு



7-80.